மறைமலையடிகளார்

வரலாற்று மாட்சி

ஆசிரியர் :

திருக்குறள் பீடம்

தவத்திரு அழகரடிகள்

மறைமலையடிகளார் வரலாற்று மாட்சி

**
**

ஆசிரியர் :

திருக்குறள் பீடம்

தவத்திரு அழகரடிகள்

**
**

திருநெல்வேலி, தென்னிந்திய

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,

1/140, பிரகாசம் சாலை, சென்னை-1.

1977

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS
PUBLISHING SOCIETY, TINNEVELLY, LIMITED.

கிளைகள் :

91, கீழைத் தேர்த்தெரு, திருநெல்வேலி-627 006.
50/51, மேலமாசி வீதி, மதுரை-625 001.
22/819, ரங்கே கவுடர் வீதி, கோயமுத்தூர்-641 001.
28, நகர் உயர்பள்ளிச் சாலை, கும்பகோணம்-612 001.
24, நந்திகோயில் தெரு, திருச்சி-620 002.

கழக வெளியீடு : ககஉஅ

முதற் பதிப்பு : சனவரி 1977

MARAIMALAI ADIGALAAR
VARALAATRU MAATTCHI

அப்பர் அச்சகம், சென்னை-600 001. (1/-

பதிப்புரை

பெருமை மிக்க சான்றோர்களின் அறிவுரைகள் மட்டு மன்றி அவர்களுடைய மாட்சிமிக்க வரலாறுகளும் மக்கள் கடைப்பிடித்தொழுகத் தக்க விழுப்பம் வாய்ந்தனவாகும். அத் தகைய சிறப்பு வாய்ந்த வரலாறுகளும் பல்லாற்றானும் அவர்க ளுடன் நெருங்கிப் பழகிய அணுக்கமுடைய அறிஞர்களால் வரையப்படுமாயின் அவை தனிப்பெருஞ் சிறப்புடையனவாய்த் திகழும் என்பது ஒருதலை.

சென்ற நூற்றாண்டின் இறுதியில் தோன்றி இந்த நூற்றாண்டின் இணையற்ற புலமை நிறைந்த நலமிகு திருவின ராய் மாநிலம் போற்றும் மாண்புறு தலைவராய்ச் சான்றாண் மைக்கு எடுத்துக்காட்டாய், வாழ்ந்த மும்மொழிச் செம்மல் ஆசிரியர் **மறைத்திரு மறைமலையடிகளார்** தம் பெருவாழ்வு தமிழ் நாட்டவர்மட்டுமன்றி உலகமக்கள் யாவரும் அறிந்து மேற் கொண்டொழுகத்தக்க ஒண்மை வாய்ந்ததாகும்.

அடிகளின் மாணாக்கர்கள் பலருள்ளும் தலைசிறந்த மேன்மை உடையவர் இந்நாள் மாம்பாக்கம் குருகுலத்தில் திருக்குறள்பீடத் தலைவராய் விளங்கிச் சிவநெறிக்கும் செந் தமிழுக்கும் தொண்டு புரிந்துவரும் **தவத்திரு அழகரடிகளார்** ஆவர். நுண்ணறிவு வாய்ந்த இப் பெருமகனார் தம் இளமைப் பருவந்தொட்டு அடிகளாரின் வாழ்நாள் எல்லை யளவும் அடிகளார்க்கு அணுக்கத் தொண்டராகப் பழகியும் அறிவுநூல் பயின்றும் அடிகளாரின் கொள்கைகளைக் கடைப் பிடித்தும் தவ ஒழுக்கம் மேற்கொண்டும் வாழ்ந்து வருகின் றார்கள். அடிகளாரின் பரிந்துரையால் சிலகாலம் இவர்கள்

கழகப் புலவராய்ப் பணியாற்றினார்கள். கழகப்பணி இவர்கள் புலமைத் திறம் வெளிப்படுதற்கு வாயிலாக அமைந்தது.

அறிஞர் சான்சனுடைய சிறப்புமிகு வரலாற்றை அவரொடு நெருங்கிப் பழகிய பாசுவல் என்பவர் திறம்பட எழுதியவாறு போல அடிகளாரின் வரலாற்றுச் சிறப்புகளை எழுதுதற்கு மிகவும் தகுதி வாய்ந்தவர் தவத்திரு. அழகரடிகளே ஆவர். இவர்கள், தோற்றச் சிறப்பு, ஆசிரியத்திறம், சான்றாண்மை, இயல்புநலம், உயரிய நோக்கம், இனிமைச் சுவை, கலைக்கவின், ஆராய்ச்சித்திறம், மறுப்பழகு, எழுத்துநடை, சீர்திருத்தம், வரலாற்றுத் தலைமை ஆகிய பன்னிரு வகையாய்ப் பாகுபடுத்தி அடிகளாரின் வரலாற்று மாட்சிகளைப் பாங்குற எழுதியுள்ள திறம் பெரிதும் பாராட்டற்பாலதாகும். அப் பெருமகனார்க்குக் கழகத்தின் நன்றி உரியதாகும்.

கழகத்தின் ககூ௩அ ஆம் வெளியீடாகிய இந் நூல் மறைத்திரு மறைமலையடிகளாரின் நூற்றாண்டுப் பெரு விழாவில் வெளியிடப்பெறுகின்றது. தனிச்சிறப்பு வாய்ந்த இந் நூலைப் பொது நூலகங்களும், கல்விச் சாலைகளும், பொதுப் பணி மன்றங்களும், ஆசிரியப் பெருமக்களும், மாணாக்கர்களும் மற்றும் தமிழ்ப் பெருமக்கள் யாவரும் வாங்கிப் படித்துப் பயனுறுமாறு வேண்டிக் கொள்ளுகின்றோம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

முன்னுரை

சிவச் செயலாலும் தமிழ்மக்கள் நற்பேற்றாலும் மறைத்திரு மறைமலையடிகளார் தமிழகத்தில் தோன்றினார்கள். அவர்கள் வரலாறு மாட்சிமைப்பட்ட வகைகள், இந்நூலில் விளக்கப்பட்டிருக்கின்றன. அதனால், 'மறைமலையடிகளார் வரலாற்று மாட்சி' என்று நூலின் தலைப்பு அமைந்தது.

பிறவியில் வருவோர் எல்லார்க்கும், பிறப்பின் நிகழ்ச்சிகளாக வரலாறுகள் உண்டு. குழந்தையாகத் தோன்றுவது, பெற்றோர் உடன்பிறந்தார் இன்னார் என்பது, பொருள் சேர்த்து எளிதாக வாழ்ந்து வரும் உலகியல் முறைகள், மறைவு முதலியன யார்க்கு இல்லை? அவற்றைத் தெரிவித்தல் வரலாறு ஆகாது. அவை எல்லார்க்கும் பொது. பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்; சிறப்புகள் எவையேனும் வாழ்க்கையில் அமையுமானால், அத் தனிச் சிறப்புகளே 'வரலாறு' என்று குறிப்பதற்கு வாய்ப்புடையவை! இயற்கையாக அமையும் பிறவி நிகழ்ச்சிகளில், வாழ்க்கை செய்கையாக அங்ஙனம் மாட்சிகள் நிகழ்வதானால், எழுதுவதற்கும் அவை சிறப்பாக உதவும்.

பிறப்பு நாள் போற்றுவதைத் தமிழகம் மேற்கொள்வதில்லை. இறக்கும் வரையில் வாழ்க்கையில் அமையும் சிறப்புகளை நினைந்து, அம் மறைவு நாளைக் கொண்டாடுவதே வழக்கம். திருநாட்களாக அவை போற்றப்படுகின்றன. விழாக்கள், 'திருநாள்' என்னும் பெயரில் வழங்கி வருதலையும் இங்கு நினைவுகூரலாம்.

பிறப்பு நாள் கொண்டாடுவதில், இயற்கையாக அமையும் முகிப் பொருத்தம் தவிரப், பிறந்தபின் வாழ்க்கையில் அமையும்

சிறப்புச் செய்கைகள் சேர்வதற்கு இடமில்லை; பிறவியில் அமையும் இயற்கைகள் முற்பிறவியின் செய்கைகள்; இப் பிறவியின் நிகழ்ச்சி களுக்கு அவற்றை அடிப்படை எனலாம். மற்று, இப் பிறவிச் செய்கைகள் வேறு.

அச் சிறப்புக்களே விழாக்களுக்குத் தேவை; முற் பிறவி யுண் மைகளை ஒத்துக்கொள்ளாதவர்களும் இப் பிறவியில் வேறு தனிச் செய்கைகள் இல்லை என்பவர்களும் போன்றுரே, பிறப்பு நாள் கொண்டாடுவர். மற்றவர், மாட்சிகள் சேர்ந்துவரும் மறைவுத் திருநாட்களையே கொண்டாடி மகிழ்வர்; இதில் பிறப்பு பெருமையும் அடங்கிவருகின்றது.

ஆசிரியர் மறைமலையடிகள், தமக்கு இயற்கையாய் அமைந்த பிறவி அடிப்படைகளின்மேல், செயற்கையாகவும் இம்மையில் மாட்சி செய்து கொண்டார்கள். பிறவிகள் மாட்சிமைப்பட வேண்டும் என்று விரும்புவோர், அதற்குச் செய்ய வேண்டுவது ஒன்றுண்டு. அது, மற்றவர் பிறவிகளை மாட்சிமை செய்தலே!

உலகியலில் அது புரட்சியாய்த் தெரிகிறது. எங்கும் பரவும் வகையில் இயக்கமாகவும் மலர்கிறது. அடிகளார் அவ்வாறு புரட்சிகளும் இயக்கங்களும் புரிந்து, தமது வரலாற்றையும் மாட்சிமை செய்துகொண்டார்கள்!

தங்கலமின்றிப் பிறர்க்குப் பாடுபடுவதில் இருவகைகள் உண்டு; தம்மை ஓம்பிக்கொள்ளாமலே தம்மை முற்றிலும் வருத்திக்கொள் வோர் ஒரு வகையார்; இவர்கள், தம் வாழ்க்கைக் கடமைகளிற் கருத்தில்லாதவர்கள்; தம்மையும் ஓம்பிக்கொள்ளுதல் வேண்டும்; திருக்குறள் கருத்துப்படி அஃது ஐவகைக் கடமைகளுள் ஒன்று கடமைகளை மறப்பவர்கள் அவா அற்றவராகார்.

அடிகளாரின் வாழ்க்கை மாட்சிமைக்குத் துணையாக, 'உடல்' 'உள்ளம்' 'உயிர்' 'அருள்' 'சேவை' என்னும் ஐவகையிலும்

அவர்கள் மாண்பு செய்துகொண்ட வகையும், அதற்காக இயற்கையைப் பயன்படுத்திக்கொண்ட திறமும், அதில் உயர்ந்த நோக்கம் எதுவோ அதைமட்டும் மேற்கொண்ட நலமும், எதிலும் இனிமைச் சுவையைப் பெருக்கிக்கொண்ட மேன்மையும், அதற்குக் காரணமான கல்வி, கலைச் சிறப்புகள், ஆராய்ச்சித் திறங்கள், மறுப்பழுகுகள், எழுத்து நடைகள், சீர்திருத்தங்கள் ஆகிய புலமையொழுங்குகள் மேம்பட்டுச் சிறந்தமையும், இதில் விளக்கப்பட்டிருக்கின்றன. வரலாற்றை இங்ஙனம் மாட்சிமை செய்துகொண்ட அடிகளாரின் தனிச்சிறப்புகளே இந்நூலில் வருகின்றன. ஒவ்வொன்றிலும் அடிகளாரின் உயிர்த் திறம் ஓங்கி நிற்கிறது. புலமை என்பது அவ்வுயிர்த்திறமே! சான்றுக்காக, அவர்கள் எழுத்துக்கள், பேச்சுக்கள், வாழ்க்கை நடைமுறைகள் போல்வனவும் அங்கங்கும் எடுத்துக் காட்டப்படுகின்றன.

ஆசிரியர் மறைமலையடிகளார், தமிழகத்திற் பிறவி எடுத்தது ஓரியக்கத்துக்காகவே என்று தெரிகிறது. உறங்கிக் கிடந்த தமிழ் மக்களை விழிக்கச் செய்து, தமிழ் நலம் ஓம்பும் தனித்தமிழ் இயக்கத்தில் நாட்டை ஈடுபடுத்தினார்கள். வாழ்நாள் முழுதும் அந்த உயர் நோக்கத்திலேயே தாமும் ஈடுபட்டிருந்தார்கள். தமிழகமும் விழிப்படைந்து, எழுத்துக்களும் பேச்சுக்களும் தமிழாகவே வழங்கி வந்தன, வருகின்றன. அடிகளார் எல்லா வகைகளிலும் வழிகாட்டியாக விளங்கினார்கள். தமிழ்மொழிக்கு அவர்களால் விளைந்த ஆக்கம் எல்லா மொழிகளின் நலங்களுக்கும் உரியவை! அவர்கள் நோக்கமும் இயக்கமும் இந்திய ஒருமைபபாட்டுக்கே, சிறப்பான, முறையான, உண்மையான, வித்துக்களாய் விளங்குகின்றன!

இந்நூல், பன்னிரு கட்டுரைகளாகச் 'செந்தமிழ்ச் செல்வி'யின் ஐம்பதாவது சிலம்பில், அதன் பொன்விழா நினைவாகவும் அடிகளார் நூற்றாண்டு விழா நினைவாகவும் வெளிவந்தன. இப்போது,

நூலாகவும் வெளிவருகின்றது. 'செல்வி'யில் வெளிவந்தபோது, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக ஆட்சியாளர் தாமரைத் திரு. வ. சுப்பையா பிள்ளை அவர்கள் அவ்வப்போதும் ஊக்கப்படுத்தி வந்த செயற்றிறனும், தூய அன்பர் சிலர் பாராட்டுகள் மொழிந்த மகிழ்ச்சிப் பரிவுரைகளும் நெஞ்சை விட்டு ஒருபோதும் நீங்கா. அடிகளார் வரலாற்றையும், அவர்கள் தம் வாழ்க்கையிற் செய்து வந்த மாண்புகளையும், அவற்றால் தமிழ்க்கு விளைந்த நலங்களையும், இந்நூலில் ஓரளவு விளக்கியிருத்தலால், உலக மக்களுக்கு இது நாளும் பயன்படக்கூடும் என்று தோன்றுகிறது! இந்தியாவிலும் உலகிலும் அடிகளின் வரலாறும் இயக்கமும் திருவருளால் நெடுகப் பரவி வருக!

குருகுலம், மதுராந்தகம்,
20—1—1977.

அழகரடிகள்.

உள்ளுறை


மாணிக்கவாசகர்
சிவன்
சக்தி

மறைமலையடிகளார் வரலாற்று மாட்சி

க. சிவச் செயல்

தொண்ட நாடு:

தொண்டர் திகழ்வது தொண்ட நாடு; தொண்டர் குலம் தொண்டக்குலம் எனப்படுவதும் உண்டு. அருளாளர் இராமலிங்க அடிகளார், 'தொண்ட நாடு என்னும் பெயரே பொருத்தமுடையது; தொண்டை நாடு என்பது பொருந்தாது' என்று விளக்கினார். தவமூதாட்டியாரான ஔவையார், 'சான்றோரை உடையது தொண்ட நாடு' என்று தெரிவித்தார். சான்றோர் தொண்டுகளை விளக்கித் 'திருத்தொண்டர் புராணம்' என்று ஒரு பெருங்காப்பியமே இயற்றியருளிய சேக்கிழார் பெருமானும், வாழ்க்கைத் தொண்டுகளைத் தெளிவித்து மாபெரும் உலகப் பொதுமறை வழங்கிய திருவள்ளுவரும் தொண்ட நாட்டினரே! தமிழ் நாடு அரசின் ஆட்சிப் பீடம் அமைந்ததும் கடற்கரை யழகு மிக்கதுமாகிய சென்னை மாநகரம் தொண்ட நாட்டிலேதான் மிளிர்கின்றது. 'பாலாறு' முதலிய நீர் நிலைகளையும் அவை பாய்ந்து வளஞ்சுரக்கும் வயல்களையும் உடைய 'தெண்ணீர் வயல் தொண்ட நாடு' இத்தகையது!

திருக்கழுக்குன்றம்:

இத் தொண்ட நாட்டின் சிறப்புத்தலம் திருக்கழுக்குன்றம்! அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்மறைப் பொருளை அன்பர்களுக்கு நினைவூட்டும் 'நால்வேத மலை' இங்கே உள்ளது. ஆதலின் இது மலைத் தலமுமாகும்; மலையை வலம் வர அகன்ற

மலைச் சாலையும் மலையைச் சுற்றித் தனியாக உண்டு. உச்சியில் சிவபெருமான் திருக்கோயில் திகழ்கிறது. அன்றாடம் உச்சிப் போதில் இரண்டு கழுகுகள் இன்றும் வந்து வந்து உணவருந்திச் செல்லும் தெய்வப் பெருமை நிகழ்ந்து வருகிறது.

இது, மாணிக்கவாசகர், உலகம் உய்யும்பொருட்டு இறைவன் திருவடிகளை வைத்துக், 'குருபீடம்' அமைத்த திருவடித் தலம்!

"இலங்குகின்றநின் சேவடிகள் இரண்டும் வைப்பிடம் இன்றியே
கலங்கினேன் கலங்காமலேவந்து காட்டினாய்கழுக் குன்றிலே"

என்பது அப் பெருமான் திருவாய்மலர்ந்தருளிய திருவாசகம்!

சிவபெருமானுக்கு மலையுச்சியில் அமைந்த திருக்கோயில் திருக்கழுக்குன்றத்தைத் தவிரத் தமிழகத்தில் வேறெங்குமில்லை; மற்ற இடங்களிலெல்லாம் மலைத் தலங்கள் என்பவை மலைச் சரிவில் அமைந்தவை. இந்தியப் பெருமலையாகிய பனிபடு நெடுவரையில் 'திருக்கயிலாயம்' ஒன்றும், இத் திருக்கழுக்குன்றமுந்தாம் உச்சித் தலங்கள்!

"கயிலாயத் துச்சி யுள்ளான்"

"கழுக்குன்றத் துச்சியாய கடவுளே"

என்பார் அப்பரடிகள்! 'திருக்கயிலாயம்' 'திருக்கழுக்குன்றம்' என்னும் இவ்விரண்டினுள் 'வேதமலை' என்னும் சிறப்புக் குரியது திருக்கழுக்குன்றமே! தனிப் பெருமைக்குரிய முதல்வனைப் போலவே, இத் தலம், தமிழ்த் தொண்டு நாட்டில், தனிச் சிறப்புக் குரியதாக இலங்குகின்றது!

இது, காட்சிக்கினிய இயற்கைத் தலம்! 'உமைப் பிராட்டியாரைக் காதலிக்கும் சிவபெருமான் மற்றோரிடத்தையும் காதலிக்கின்றானென்றால் அது திருக்கழுக்குன்றமே' என்று திருஞானசம்பந்தர் கருதுகிறார்.

"பெண்மகள் தன்னொடு ஒருபாகம் காதல்செய்தான்,
காதல் செய்கோயில் கழுக்குன்றே"

என்பது அவர் அருளிச்செயல்.

"கண்ணுதலான் காதல்செய் கோயில் கழுக்குன்றை
நண்ணியசீர் ஞானசம் பந்தன் தமிழ்மாலை
பண்ணியலிபாற் பாடிய பத்தும் இவைவல்லார்
புண்ணியராய் விண்ணவ ரோடும் புகுவாரே"

என்பது அவர் திருக்கடைக் காப்பு! இத் திருப்பதிகத்தின் ஒவ்வொரு பாடலிலும் பெருமான் இத் தலத்தைக் காதலிக்கின்றான் என்னும் குறிப்பு வருகின்றது!

ஆதலால்,

"சென்று சென்று தொழுமின்"

என்பது நம்பியாரூரரின் திருக்கழுக்குன்றப் பாடல்!

சமய குரவர் நால்வர் பதிகங்களையும் உடையது திருக்கழுக்குன்றம்! தொண்ட நாட்டில் நால்வர் பாடலும் பெற்ற தலம் வேறு இல்லை.

இத்தகைய பெருஞ் சிறப்புகளுக்குரிய மலைத் தலத்தில், மலைச்சாலைக்கு அப்புறமாக மலையை நோக்கி ஊரும் பேட்டைகளும் எனக் குடியிருப்புகள் கடைகள் அலுவலகங்கள் முதலியன நெடுங்காலமாக அமைந்திருக்கின்றன; ஆனால், இப்போது சில ஆண்டுகளாக மலையின் உட்புறத்திலேயே குடியிருப்புகள் கடைகள் நூலகம் முதலியன காணப்படுகின்றன.

தொண்ட நாடும் தமிழகமும் இந்தியாவும் திருக்கழுக்குன்றத்தை 'ஆண்டவன் தலம்' எனவும், இயற்கையான அமைதிக்குரிய 'நோன்புத் தலம்' எனவும், நோய் நீக்கும் 'மருந்துத் தலம்' எனவும் மதித்து வருகின்றன. திருக்கழுக்குன்றமும், வாரணாசி, காஞ்சி, திருச்சி, காசி முதலியன போல ஒரு பெருநகர வாணிகத் தலமாய்க் கருதப்பட்டு விடுமானால், அந்நிலைமை நாட்டவர் உள்ளத்தைப் பெரிதும் மாறுபடுத்திவிடக் கூடும்; உரியோர் கருத்திருத்துதல் நன்று.

அடிகள் பிறப்பு :

திருக்கழுக்குன்றத்தில் விளங்கும் சிவபெருமான் திருப்பெயர் 'வேதாசலம்' என்பது! ஆசிரியர் மறைமலையடிக

ளாருக்கும் 'வேதாசலம்' என்றே பெயர் அமைந்தது! காரணம், சொக்கநாத பிள்ளை சின்னம்மையார் என்னும் அவர் பெற்றோர், திருக்கழுக்குன்றம் வந்து ஒரு மண்டலம் பாடு கிடந்து அடிகளாரைத் தமது முதுமைப் பருவத்திற் பெற்றெடுத்தனர் என்ப. அவர் ஊர் சோழவள நாட்டின் நாகபட்டினத்தைச் சேர்ந்த காடம்பாடி; கடற்கரை ஓரத்தில் நெய்தற்சோலை அமைந்த சிறிய ஊர்; நாகபட்டினத்திலும் அவர்க்கு ஓர் இல்லம் உண்டு; அவ் வில்லத்தில் 15-7-1876 இல் அடிகளார் தோன்றினர்.

தவத் தோன்றலர் :

ஆண்டவன் அருள்வெளியில் எத்தனையோ வகைகளில் உயிர்கள் உள்ளன; பெறுவான் தவத்துக்கேற்றபடி இறைவன் அவ்வுயிர்களுள் ஒன்றை அவர்கள் வயிற்றில் புகுவிக்கிறான். "தம் தம் வினையான் வரும்" என்பது பொதுமறை! வளரும் குழந்தைகளின் எதிர்காலச் செய்திகளுக்குப் பெற்றோர் தவங்களும் காரணமாகின்றன. சமய குரவர் திருஞானசம்பந்தரை, அவர் தந்தையார் தவம் செய்து வேண்டியே பெற்றார் என்று சேக்கிழார் கூறுகின்றார்.

"மனையறத்தில் இன்பமுறு மகப்பெறுவான் விரும்புவார்
அனையநிலை தலைநின்றே ஆடியசே வடிக்கமலம்
வினைவுறமுன் பரசமயம் நிராகரித்து நீறாக்கும்
புனைமணிப்பூண் காதலனைப் பெறப்போற்றும் தவம்புரிந்தார்"

என்பது திருத்தொண்டர் புராணம் (திருஞானசம். 19.)

ஆசிரியர் மறைமலையடிகளார் தோற்றம் இங்ஙனம் இறைவன் படைப்பு! அவர் புரட்சிகளுக்கும், அருஞ்செயல்களுக்கும், திருத்தங்களுக்குமெல்லாம் திருக்கழுக்குன்றம வேதமலைப் பெருமானது அருள்நோக்கமே மூலமாயிற்று. கடவுள் திருவிளையாடல் அடிகளின் வாழ்க்கை நிகழ்ச்சிகளாயின; தன்னிகரற்ற கடவுள், அடிகளாருக்குத் தன்னிகரற்ற தனித்தமிழ் வல்லமையை வழங்கியருளினன். எல்லா எதிர்ப்புகளும் பின்னடைந்து தமிழகத்துக்கு உய்வு அமைந்தது!

அப்பர் திருத்தாண்டகம் ஒன்று:

"அப்பன்நீ அம்மைநீ ஐயனுநீ
அன்புடைய மாமனும் மாமியுநீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொருளுநீ
ஒருகுலமும் சுற்றமும் ஓரூருநீ
துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்றுவாய்நீ
துணையாய் என்நெஞ்சம் துறப்பிப்பாய்நீ
இப்பொன்நீ இம்மணிநீ இம்முத்துநீ
இறைவன்நீ ஏறூர்ந்த செல்வன் நீயே"

இதன் ஒவ்வொரு சொல்லும் அது தெரிவிக்கும் கருததும் ஆழ்ந்து சிந்தித்தற்குரியன; வாழ்க்கையில் நேரும் அமைப்புகளெல்லாம் இத் திருத்தாண்டகத்தில் முறையே எடுத்துக் காட்டப்படுகின்றன.

மறைமலையடிகளுக்கு இவ்வுலகத்தில் அமைந்த தந்தையாரும் தாயாரும் ஒப்புடைய மனைவியாரும் செல்வமும் இனமும் சுற்றமும் ஊருமெல்லாம் இறைவன் வழங்கிய நன்கொடைகளாயிருக்கின்றன. அவர் துய்த்த 'தாய் மொழி' 'சிவ சமயம்' 'தமிழ் நாடு' முதலிய உலக நிலைகளும் அவற்றைத் துய்ப்பதற்குச் செலுத்தப்படுங் கருவிகளா யமைந்த 'உடலமைப்பு' 'குரலினிமை' 'மனநலம்' 'நூல் நிலையம்' 'மாளிகை வளம்' முதலிய அனைத்தும் இயற்கையில் அமைந்தன. இறைவன் உதவிகள் துணையாய் உடனிருந்து உணர்வைத் தனது நெறியூடு செலுத்தி இறைவனே எல்லாம் கண்காணித்துக் கொண்டான்.

அந் நன்னெறியாகிய இறைபணியில் முயல்வதொன்றே அடிகளின் செயலாய் இருந்திருக்கிறது; இயற்கைநெறிக்கு மாறாக முயற்சிகள் சென்றிருந்தால் வாழ்க்கை சிறந்திருக்காது; உயிர்களுக்கு முயற்சியென்பது, இயற்கைப் போக்கின் நெறி தெரிந்து இறைவனோடு ஒத்துழைப்பதே!

தந்தை சொக்கநாதபிள்ளை யென்பவர் சைவ வேளாளர்; சுற்றம், அடிகளுக்கு அமைந்த உறவுகள்; ஊர், நாகபட்டினம்; தாய் மொழி, தமிழ்; சமயம், சைவம்; தோன்றிய இயற்கை நெறி

இவையென்றால், அடிகளின் இனம் உறவு ஊர் மொழி சமயம் முதலியவற்றை வரலாற்றில், வளர்ச்சியில், மாற்றிக்கொள்ள முடியுமா? இளமையில் அடிகளார் ஊற்றம் பெறுவதற்கு இவையெல்லாம் எவ்வளவு துணையாய் உதவியிருக்கின்றன! உதவிய நன்றியைத்தான் மறப்பது பொருந்துமா?

"என்செய லாவது யாதொன்று மில்லை"

எனவும்,

"உன்செயலே என்று உணரப்பெற்றேன்"

எனவும் வந்த பட்டினத்தடிகளின் வாக்கில் (பொது, 22) எவ்வளவு உண்மை ததும்புகின்றது!

உயர்ந்தோர் முன்னேற்றம் :

வாழ்க்கையில் நேர்ந்து வருவனவற்றைப் பயன்கொள்வதிலும், அந் நெறியே சிந்தனையைச் சிறப்பாக்கிக்கொள்வதிலுந்தாம் உயர்ந்தோர் முன்னேற்றமெல்லாம் ஓங்கிக் காணப்படுகின்றன. ஆதலால், எந்தச் சாதி சமயம் ஊர் உறவு முதலியவற்றையும் இகழ்தல் இயல்பாகாது.

"மாட்சியிற்
பெரியோரை வியத்தலும் இலமே,
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே" (புறநா-192)

நலமும், உயர்வும் அவரவர் சிறப்புச் செயல்களிலேதாம் உள்ளன. வளர்ச்சி யாவதும் உண்மைத் தொண்டும் இது!

தோன்றிய உடம்பு எத்தகையதாயினும் அதனையே அவரவரும் சிறப்பாக்கிக் கொள்வது போலத், தோன்றிய மொழி சமயம் இனம் இடம் முதலியவற்றையும் அவரவரும் பயன்கொண்டு உயர்த்திக்கொள்வதுதான் நாகரிக வாழ்க்கையாகும்;

"நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே!"

என்னும் புறநானூற்று வீர மொழிகள் (187) எவ்வளவு உண்மையாகவும் இயற்கையாகவும் வீறுற்றிருக்கின்றன !

மனம் போன போக்கெல்லாம் மாற்றிக்கொள்வதில் ஓர் ஆண்மையுமில்லை; வீரமுமில்லை! 'நல்லாண்மை' என்பது ஒருவற்குத் தான் பிறந்த இல் ஆண்மை ஆக்கிக் கொளல்.

இம் மறைமொழியில் (1026), 'தான் பிறந்த' என்னும் அடைமொழி கருதுதற்குரியது; இதை மாற்ற இயலுமா? மறுக்கத் தான் கூடுமா?

'வேளாளர் நாகரிகம்' என ஒரு நூலமைப்பும், எதனையும் இகழாத 'பொதுநிலைக் கழகம்' என ஒரு செயல் நிறுவனமும் அடிகளார் வாழ்க்கையில் பின்பு அமைந்தமை எவ்வளவு இயற்கையாயிருக்கின்றன! எவ்வெவற்றை எவ்வெவ்வாறு பயன்கொள்ள வேண்டும் என்பன அடிகளுக்குமுன் எளிதாகவே பிரிந்து நெறிப்பட்டன; சிறந்தன; உறுதியாய்க் கடைப்பிடிக்கப் பட்டன; 'துணையாய் என் நெஞ்சம் துறப்பிப்பாய்நீ' என்று கருதிக்கொண்டு, அடிகளார் இயலுள்ளம் நீர்வழி மிதவையாய், இயற்கை நெறியூடு இணையற்ற விசையுடன் பாய்ந்து சென்றது! அடிகளார் மலர்ந்து விளங்கினர்.

அடிகளார் தோன்றியது ஒரு தனிப் பணிக்கு; தந்தையார் வழியில் அலுவலிற் செல்வதற்கன்று; 8 அகவை நடந்துகொண்டிருந்தபோதே 1884 இல் இவர் தந்தையார் காலமாய்விட்டார். இது, மேலும், இவர் தனியுரிமைப் போக்குக்கும் இயற்கை மலர்ச்சிக்கும் இடந்தந்து விட்டது. இறைவன் கண்காணிப்பில் இவர் சிறப்புகள் பெருகிவந்தன.

அ. தமிழ் வழி

தமிழும் சைவமும் :

இம் மண்ணுலகின் இயற்கை மொழியாகிய தமிழும், தமிழ் நெறியாகிய சிவசமயமும் இறைவன் இவர்க்குத் தேர்ந்தளித்தவை. இவர்க்கு இயல்பாக எழுந்த தமிழ் சைவ உணர்வெழுச்சிக்கினி

லிருந்தே இவ்வுண்மையைத் தெளியலாம்; 'தமிழ்' 'சைவம்' என்னும் இரண்டும் இருகண்கள் போன்றவை; இரண்டும் அம்மை யப்பர் கோலம்; தோற்றத்தில் கண்கள் இரண்டானாலும் நோக்கத்தில் ஒன்றுதல்போலத் தமிழும் தமிழ் நெறியாகிய சைவ மும் ஒன்றே! நாகை உயர்நிலைப் பள்ளியிற் படித்துக் கொண்டிருந்த பள்ளிப் படிப்பு நின்றுவிட்டது. அஃது ஆங்கிலப் பள்ளியாதலின், ஆங்கில அறிவு நன்றாகவே அமைந்திருந்தது. தமது முயற்சியினால் தமிழ்மொழிப் புலமையோடு ஆங்கிலம் சமக்கிருதம் இரண்டிலும் அடிகள் வல்லமை பெற்றார்; தமது 16வது அகவையில் தொடங்கிய ஊன்றிய தமிழ்ப் பயிற்சி, 21 ஆம் அகவைக்குள், சிறந்த கல்லூரி மாணவர்க்கும் தமிழறிவும் தமிழ்ச் சுவையும் பதிக்கும் வகையில் ஓங்கியது. திருவனந்தை சுந்தரம் பிள்ளை 1895 இல் இவர்க்குக் கொடுத்த தகுதிச் சீட்டாலும் இதனை அறியலாம்; அதில் அவர் கூறியது:

"இவர் ஒரு சிறந்த தமிழாசிரியராவாரென்று நாம் உறுதி யாக நம்புகின்றோம்.....................கல்லூரிகளில் தமிழ் கற்பிக்கப் போதுமான அளவு இலக்கண இலக்கியத்திற் சிறந்த தேர்ச்சிபெற் றவரா யிருக்கின்றார்..................மேல்நாட்டு முறைப்படி தமிழ் நூல்களை வரலாற்றுச் சான்றுடன் ஆராயவும் எழுதவும் வல்லுந ராவார் என்பது எம்முடைய சிறந்த எண்ணம்."

நாகை நாராயணசாமி பிள்ளை என்னும் இயற்றமிழாசிரிய ரிடம் இவர் தமிழ் கற்றார்; சென்னைச் சோமசுந்தர நாயகர் என்னும் சித்தாந்த ஆசிரியரிடம் சைவசித்தாந்தம் பயின்றார். இவை இவர் இளமை நெறிகளை எடுத்துக்காட்டுகின்றன.

தமிழாசிரியர் தொடர்பால் அறிவியலாசிரியர் திருவனந்தை சுந்தரம் பிள்ளையுடன் நேயமும், சித்தாந்த ஆசிரியர் தொடர்பால் அறமன்றத் தலைவர் சிற்றூர் நல்லசாமி பிள்ளையுடன் பழக்கமும் வாய்த்தன; அலுவலிலுள்ள பெருமக்கள் பலர் தொடர்பிலும் இவர் பழக நேர்ந்தது. அறிவியலும் மெய்யறமும் இவர் வாழ்க்கை யிலும் விளங்கின.

சுந்தரம் பிள்ளைக்குச் செய்யுட் கடிதம் எழுதியும் நாகையில் 'இந்து மதாபிமான சங்கம்' நிறுவியும் தமிழ் சமயச் செயல்முறைத்

தொண்டுகளை இவர் நிகழ்த்தினர். பேச்சளவிலன்றி இங்ஙனம் செயலிலும் இவர் உணர்வு சென்றது. இவருடைய இளமைத் துடிப்பும் எழுச்சியும் இவற்ருல் விளக்கமாகும்.

உண்மைத் திறம் :

கல்வி இவர்க்கு ஆழமாகவும் அகலமாகவும் சென்றது. அதனல் சங்கத் தமிழ் நூல்களில் உள்ளம் இழுப்புண்டு போயிற்று; பிற்கால நூல்களில் அவ்வளவாக உள்ளம் பிணிப்புறவில்லை. அங்ஙனமே சைவ சித்தாந்தத்திலும் இவர் ஊக்கமாய்ச் சென்றிருக் கிருர். காரணம், உண்மைத் திறம் என்னும் இயற்கைத் திறம் அவ் விரண்டிலும் செழித்து நிற்பதுதான்.

மேலும், பழந்தமிழின் சொற்பொருட்சுவையும் இவரை மிகவும் ஆட்கொண்டிருக்கிறது; 'கற்பனை' யென்பது இச் சுவைத் திறந் தான்; உண்மையை மறைப்பதன்று; சித்தாந்தத்தின் நடைமுறை யழகுகளிலும் இவருள்ளம் பறிபோயிருக்கிறது. அதுதான் அதற்குச் சுவை; இதனல் இனிமைத் திறம் என்னும் சுவைத் திறமும் வளர்ந்தது. உண்மையும் இனிமையும் விரவிய இவ் வெழுச்சியினல், மாருய் நிற்கும் செயல்களில் உள்ளம் ஈடுபட வில்லை; எதிர்ப்பாகவே இருந்திருக்கிறது. செயலுள்ளம் உள்ளவ ரானதனல் மறுத்து நிலைநாட்டும் திறம் நாளுக்கு நாள் வளர்ந்தது.

நினைவு சொல் செயல்களில் இளமையிலிருந்தே மெய் வேறு பொய் வேருக எல்லாம் பிரிந்து தெரிந்தன.

> "மெய்வழி பொய்வழி வேறுவேருக
> விரிந்து விளங்கிடவோ"
>
> (சோமசுந்தரக் காஞ்சி, கையறு நிலை.)

என்பது அடிகளாரே தம் இளமையில் வெளியிட்ட வாக்கு! பொய் எனத் தோன்றியவற்றை எதிர்த்து மறுப்பதும் மெய்யெனத் தெரிந்தவற்றைத் தழுவி விளக்குவதும் இவர் வழக்கமாயிற்று; இவ் வியல்பு எதனலும் தடை படுவதுமில்லை; இவ் வகையில் யார்க்கும் இவர் அஞ்சுவதுமில்லை. இதற்கேற்ற பழக்கத்தில் இவர் நெடுகப் பழகிவந்திருக்கிருர்.

1. மொழியில்

இச் சிறப்பினால் இவர்க்கு உணர்ச்சியும் எழுச்சியும் மிகுந்து இம் முறைமைக்கேற்றபடி ஆண்மை விறிய எதிரற்ற செய்யுள் நடை உரை நடைகள் கைவந்தன; மறுக்கும் உணர்ச்சியினால் தமிழ் நடை மிகவும் வீறுற்றது.

பொருளியல்புகளை உண்மை முறையில் விளக்குதலும், மாறு களை எதிர்த்துத் தாக்குதலுமான தமிழ் நடை யுடையவர்கள் இவர்க்கு முன்னால் யார் யார் இருந்தார்களோ அவர்கள் நூல்க ளெல்லாம் இவர்க்கு இனித்தன; நக்கீரர் முதலிய பழைய உரை யாசிரியர் உரைநடைகளில் இவர் மிகத் திளைத்தாடினார். பிற்காலச் சிவஞான முனிவரர் நடையிலும் நெடுக விளையாடி மகிழ்ந்தார். இச் சான்றோர் நடைகள் கைவந்தன; சோமசுந்தர நாயகரின் தருக்க நெறிகளும் மறுப்பு வகைகளும் ஒன்றின; எழுத்து பேச்சு இரண்டி லும் இவ் வியல்பு கிளர்ந்தது.

2. ஆராய்ச்சியில்

அடிகளின் கிளர்ச்சியிலும் எழுச்சியிலும் தமிழக முழுதும் பெரும்பகுதி அப்போதே ஈடுபட்டுவிட்டது; கல்லூரிப் படிப் புடையவர்களிற் பெரும்பாலார் இவர் வயம்; பகுத்தறிவு மிக்க வர்கள், ஆராயும் பான்மையுடையவர்கள், இளைஞர்கள், புதுமை களைக் கண்டு மகிழ்கிறவர்கள், செயல் துடிப்புடையவர்கள் இவரைச் சார்ந்து நின்றனர். எப்போதும் இவர்க்குப் பொய் மெய்களைப் பிரித்துரைக்கும் போர்க் கோலந்தான்! 'சச்சன பத்திரிகை' மறுப்பு, 'முதற்குறள் வாத நிராகரணம்' (1898), 'சோமசுந்தரக் காஞ்சி யாக்கம்' முதலிய மறுப்புரைகள் கொண்டு இளமையிலேயே இவர்க் கமைந்துவிட்ட எதிர்ப்புத் துடிப்புகளை இனிதறியலாம்.

3. திருக்குறளில்

தமிழ்மறையாகிய திருக்குறளில் அடிகளுக்கு அப்போதே மிக்க ஈடுபாடுண்டானதற்குக் காரணம், அந்த நூல், உலக வாழ்க் கையின் பொய் மெய்களை ஆராய்ச்சியோடு பிரித்து விளக்கி ஞான வொளி வீசினமையே. இயல்பாகவே சொற் பொருட்சுவைகளிலும் கலை நலங்களிலும் நயங்களிலும் ஈர்ப்புண்டிருந்த அடிகளின்

உள்ளம் திருக்குறட் சுவைத்திறத்திலும் கலைக் குறிப்பிலும் நூல் நயங்களிலும் உணர்ச்சி கொண்டது வியப்பன்று!

திருக்குறட் சிறப்புப் பாயிரத்தில்,

"பொய்ப்பால பொய்யேயாய்ப் போயின, பொய் யல்லாத
மெய்ப்பால மெய்யாய் விளங்கினவே—முப்பாலில்
தெய்வத் திருவள் ளுவர்செப் பியகுறளால்
வையத்து வாழ்வார் மனத்து"

என்பதும் ஒன்று; திருக்குறளைப் பற்றி அவைக்களங்களில் அடிகளார் விரிவுரை நிகழ்த்துங் காலங்களில் பெரும்பாலும் இச் செய்யுள் அவர்கள் வாக்கில் வெளிப்படும்.

நால்வகை மாட்சி :

அடிகளுக்குக் கைவந்த செய்யுள் உரை நடைகளிலெல்லாம் இயல்பு நலம், சுவைத் திறம், மறுபபுணர்வுகள், கலைச் சிறப்புகள் மிகுந்திருத்தலைக் காணலாம். இளமையில் நேர்ந்த இச் சிறப்புக்கு வகைக் கொன்றாக இங்கே எடுத்துக் காட்டுவது பொருந்தும்.

1. இயல்பு நலம்

அடிகள் தம் இளமையிற் செய்த நூல்களுள், 'சாகுந்தல நாடகம்' என்னும் சமக்கிருத மொழிபெயர்ப்பு நூலும் ஒன்று; சமக்கிருத பண்டிதர் பலரும் வியப்படையுமாறு புலமை செறிய மொழி பெயர்த்த இந் நாடக நூலில், உணர்ச்சி மிக்க இடங்களிற் சில பாட்டுகளும் அடிகளால் இயற்றப்பட்டிருக்கின்றன.

"விழுநறவு வேண்டிவிரி மாவிணரிற் பருகிச்
செழுமுளரி யிடைவறிது சேருமிள வண்டே!
செழுமுளரி யிடைஇருந்து திகழ்மாவை நீஓர்
பொழுதுமறந் துறைகுவது பொருந்துமோ உரையாய்"

இச் செய்யுளில் 'இயல்பு நலம்' ஆற்றொழுக்காய்ச் சிறந்திருக்கிறது; சீர்களுக்காகச் சொற்கள் பெரும்பாலும் பிரிக்கப்படவில்லை. சீர்ப் பிரிப்பின் வழியே சொற் பிரிப்புத், தனித் தனிச் சொற்களாய்ச் சென்றிருக்கிறது.

அக் காலச் சான்றோர் சிந்தனையில் இவையெல்லாம் முதன்மை பெறுதலில்லையாயினும் அடிகளுக்கு இளமையிலேயே வாய்த்த செய்யுள் நடை ஆற்றொழுக்கான இயல்பு நலத்திலும் சிறந்ததாய் இருக்கிறது என்பது இங்கே கருதுதற்குரியது !

2. சுவைத் திறம்

சொற்சுவை பொருட்சுவை இனிமைகளுக்குக் கடல் போல் ஆழமும் பயனும் மிகுந்துள்ள சிலவற்றில் ஒரு செய்யுள் :

"இனியார் எனக்கிங் கினியார் இயைந்தார்
முனியார் முனிந்து மொழியார்—பனிமொழியாய் !
புள்ளோன் றிவர்ந்து புகலொழாற்றித் தந்நகர்க்கு
நள்ளிருட்கட் சென்றார் நமர்."

அடிகளார் தம் இளமையில் 23ஆம் அகவையிற் செய்த 'திருவொற்றி முருகர் மும்மணிக்கோவை'யில் இச் செய்யுள் வருகின்றது. வெண்டளையால் அமைந்த இவ் வெண்பாவிலும் சீர்களால் சொல் முறிப்பு ஏற்படவில்லை. அதோடு இவ் வாக்கில் தமிழின் இனிமை சொற்சுவை பொருட்சுவைகளால் விஞ்சி நிற்கிறது !

முதல் வரியில், 'இனிமேல் யார் எனக்கு இங்கு இனியவர்' என் னுங் கருத்தில் 'இனியார் இனியார்' என வரும் சொற்சுவையும் பொருட்சுவையும், அதன்பின், இரண்டாவது நான்காவது வரி களில் முனிதலாகிய மன வேறுபாடும் முனிந்து சொல்லுதலாகிய சொல் வேறுபாடும் இல்லாதவர் நள்ளிருளிற் சென்ற செயல் வேறுபாடு கொண்டார் என நினைவு சொல் செயல்களைப் பற்றிவரும் நயமும் புலப்படும் ; மூன்றாவது வரியில், 'புள்ளொன்றிவர்ந்து' என் றதனால், அவர் சென்ற விரைவும் தெரிந்தது ; 'நவில்தொறும் நூல்நயம்' இச் செய்யுளில் வரிதோறும் சொல்தோறும் விளங்கு கின்றது ; இங்ஙனம் அடிகளின் செய்யுட்சுவை பல.

3. மறுப்புணர்வு

மறுப்புத் திறத்துக்கும் ஓர் எடுத்துக்காட்டு: சித்தாந்த ஆசிரியர் சோமசுந்தர நாயகர் மறைவின்போது அடிகளார் உள்ளம் உருகிச் சங்ககாலத் தமிழ்க் கருத்தில் காஞ்சிப்பாக்கள் சில

இயற்றினர்; அவற்றிற் குற்றங்காணப் புகுந்தார்க்குக் 'காஞ்சியாக்கம்' என அடிகளார் ஒரு மறுப்பும் வெளிப்படுத்தினர்; இது நடந்தது அவர்க்கு 25 ஆம் அகவையில் (1901) முற்பகுதியில்); உடன் மாணவராகிய சில அளவையர் சிங்காரவேல் முதலியார் இவ் வெளியீட்டின் அச்சுச் செலவுக்கு ஓரளவு பொருளுதவி செய்தார் என்றுந் தெரிகிறது; இதனால் இதன்முதன்மை உணரப்படும். இம் மறுப்பு நூல் உரைநடையில் இயன்றது.

"........இங்ஙனங் காட்டிய நுண்பொருட் பரப்பெல்லாம், நுண்ணிதாக ஆழ்ந்தறிய வல்லார்க்கு இனிது விளங்கா நிற்பவும், அவற்று ளொன்றுதானு மறிந்தெடுத்தெழுதும் நுண்ணறிவாற்றல் நும்பா லொருசிறிதுமின்று யொழியவும், நீர் தனையு மறியாது உம்மை மருட்டிய அறியாமையினையே யறிவென மயங்கக் கொண்டிறுமாந்து களித்து........மறுத்த போலியுரை, தொல்லாசிரியர் இலக்கண நூற்கும் இலக்கிய நூற்குமெல்லாங் குற்றங் கற்பித்தலின் அம் மறுப்பி னிழுக்கமும் நுமது போலி யளவையுணர்வின் பெற்றியும் இனி எல்லாரு முணர்ந்து நகைப்பரென விடுக்க."

"......சிவபெருமான் றிருவருள் வழிநின் றொழுகாது தற்பெருமையா னறிவு மருண்டு செருக்கிப் பொறாமை கொண்டு திரிகுவார் யாராயினுமென்? திருவருட் பெருந்துணை கொண்டொழுகும் யாம் அவரையும் அவர் போலி மறுப்பினையும் ஒரு பொருட் படுத்துவாமல்ல மென்றொழிக."

"......பிறரவரை எங்ஙனம் பாராட்டினும் பாராட்டுக; அவரவர்க்குரிய மதிப்புப் பற்றி அவரவரைப் பாராட்டுவாமல்லது, வேறு கூறக் கடமைப்பட்டிலம்."

4. கலைச் சிறப்பு

மற்றொரு சிறப்பும் அடிகளின் உள்ளத்தில் அப்போதே எழுந்து விளங்கியது. அதுதான் கலையுணர்வு! உண்மையும் இனிமையும் ஒன்று சேர்ந்தால் கலைகள் தோன்றும். அடிகளார் இயலுள்ளம் இவ் விரண்டாலும் நிரம்பியது! பல தலையான கலைகள் அரும்பின.

'நாடகத் தமிழ்' என்பது பற்றி ஓர் இனிய கலை விரிவுரை, திருவனந்தபுரம் அரசர் கல்லூரியில் 12–9–1896 இல் 20-வது அகவையிலேயே நடந்தது. கல்லூரியின் அறிவியற் பேராசிரியர் அவைத் தலைவர்; அவரும் அவையினரும், 'இவ்வளவு இளம் பருவத்திலேயே கலையுணர்வு நன்கமைந்திருக்கிறதே' என்று போற்றிப் பாராட்டினர்!

21 ஆம் அகவையில், 'சித்தாந்த தீபிகை' என்னும் திங்களிதழ் இவர் எழுத்துக்களோடு வெளியிடப்பட்டது.

இக் கலைத் திறங்கள், இவர் வாழ்க்கையில், 'சாகுந்தல நாடகம்,' 'சாகுந்தல நாடக ஆராய்ச்சி' 'மக்கள் நூறுண்டுயிர் வாழ்க்கை' 'மரணத்தின்பின் மனிதர் நிலை' 'அறிதுயில்' 'மனக்கவர்ச்சி' 'தொலைவிலுணர்தல்,' முதலிய கலை நூல்களும், பல தலையான மறுப்புக் கலைகளும் 'Oriental Mystic Myna' 'The Ocean of Wisdom' 'ஐந்தெழுத்து மறை' 'யோகம்' 'அச்சுக் கலை' 'நூலகக் கலை' முதலியனவும், 'தமிழ்ச் சொல்லுற்பத்தி' 'மெய்ந்நல விளக்கம்' முதலிய கலையெழுத்துகளும் தோன்றக் காரணமாயின.

ஆ. வாழ்க்கை வகை

அலுவற் பணி :

சோமசுந்தர நாயகர் கூட்டுறவால் அடிகள் தம் 21 ஆம் ஆண்டில் சென்னைப் பக்கம் வர நேர்ந்தது. அவ்வளவு இளம் பருவத்திலேயே சோதனைகளில் புலமைத் திறம் வெளிப்பட்டு, 9—3—1898–லிருந்து அடிகள் கிறித்துவக் கல்லூரியின் தமிழ்ப் பேராசிரியரானார்.

கல்லூரியில் 'முல்லைப்பாட்டு' 'பட்டினப் பாலை' முதலிய சங்க நூற் பாடங்கள் நடந்தன. இவர் கற்பித்தலில் மாணவர் பலர் கவர்ச்சி யுற்றனர்; இவர் உரை முறைகள், பழைய உரையாசிரியராகிய நச்சினார்க்கினியர் முறைகளுக்கு வேறாய்ப் புதுத்திறமாய் ஆற்றொழுக்காய் இயல்பு நெறியில் மெய்ம்மை கூடி இருந்தன; அப்போது அடிகட்கு அகவை 30; ஏறுபோலும் பீடுநடை மிக்க சிறந்த கட்டிளமைப் பருவம்! மாணவர் சிலர் தம்முட் கூடிப்

பொருளுதவி புரிந்து, 'முல்லைப்பாட் டாராய்ச்சியுரை'; 'பட்டினப் பாலை ஆராய்ச்சியுரை'கள் அச்சிட்டு வெளிவந்தன;

இவை யிரண்டும் சிறந்த இலக்கியச் செல்வங்கள்! பழந் தமிழ்ப் பாட்டின் இயல்புகள் சுவை நயங்கள் எல்லாம் இனிது விளக்குவன.

தனித் தொண்டு :

13 ஆண்டுகள் கிறித்துவக் கல்லூரியிற் பேராசிரியராய் இருந்த அடிகளார், கல்லூரியில் தமிழ்க்கு முதன்மை தளர்ந்த காலத்தில், தாய்மொழித் தமிழ்க்கும் இடையூறு என்னும் உணர்ச்சி மேலிட்டு 10—4—1911இல் அதனை விடுத்தார். இயற்கை நெறிப்படி தம் உரிமையில் வாழ்நாள் செலுத்த விரும்பினர். எல்லாம் வல்ல முழுமுதற் கடவுள் ஒருவருக்கே தொண்டு பூண வேண்டுமென்று உறுதி செய்துகொண்டார்;

கடவுளின் இயற்கைத் தமிழையும், தமிழ் நெறியாகிய சிவ சமயத்தையும் பரவச் செய்ய அடிகள் திட்டம் வகுத்தார். சென்னைக்கு அருகில் தம்மை யாட்கொண்ட இத் தொண்ட நாட்டிலேயே இயற்கை நலம் நிரம்பிய பல்லாவரத்தைத் தேர்ந்து, தம் தொண்டுகளைத் தொடங்க முற்பட்டார்.

1—5—1911இல் பல்லாவரம் வாழ்க்கையை அடிகள் மேற்கொள்ள நேர்ந்தது. பொதுநிலைக் கழகம் நிறுவினர்; காவியாடை உடுத்துத் துறவுக்கோலம் பூண்டார்; நிறுவனத்துக்கு ஒரு மாளிகை அமைத்தார்; தனி அச்சகம் வைத்தார்; 'அறிவுக் கடல்' என்னும் இதழைத் தொடங்கி அதன் வாயிலாகப் பல தமிழ் நூல்களை வெளிப்படுத்தினர்; இடையிடையே தமிழகத்திலும் இலங்கையிலும் உலவி இனிய சொற்பொழிவுகள் நிகழ்த்தினர்.

ஒரு நிலையான நெறியில் அதுமுதல் இவர்க்குப் பெருந்தண் வாழ்க்கை செயலுருக்கொண்டது! சிறந்த தமிழ் வீரர்! அக் காலத்தில், இச் செயல்கள் எல்லார்க்கும் எளிதில் அமையக் கூடியன அல்ல.

விரிவுரை நிகழ்ச்சிகள்

அடிகளாரின் இந் நற்செய்ல்களுக்குத் திருவரங்கம் பிள்ளை என்னுந் தொண்டுவல்லாரின் நற்றுணை கிடைத்தது; அடிகளாரின் விரிவுரைகளுக்கு மேன்மேலும் வகைசெய்து திருவரங்கனார் அங்கங்கும் வருவித்து ஆவனவெல்லாம் செய்தும் செய்வித்தும் மகிழ்ந்தார்; மாதந்தோறும் ஆண்டுதோறும் பகுதித் தொகையாகவும் மொத்த நன்கொடையாகவும் காணிக்கைகள் திரட்டி அனுப்பி வந்தார்; நூல்களை இதழ்களை விலைப்படுத்தி உதவினார்.

இலங்கையிலும் தமிழகத்திலும் நடந்த அடிகளாரின் சொற்பொழிவுகள், காந்தம்போல் மக்களை ஈர்த்தன. அடிகளார்க்குச் செல்வக் கொழிப்புப் பெருகியது. அடிகளார் தோற்றமும், அழகும் இளமையும் குயில்போன்ற குரலினிமையும் தமிழும் நடையும் ஆராய்ச்சியும் தொண்டும ஆங்கில சமக்கிருத அறிவும் எங்குங் கவர்ச்சி மிகுத்தன.

மனை வாழ்க்கை :

அடிகள் குடும்பம் பெரியது; மனை வாழ்க்கைக்குரியவராகச் சவுந்தரவல்லி அம்மையார் வாய்த்தார்; உழைப்புமிக்கவர்; அடிகளார் தொண்டுக்குத் தம்மை அவர் ஒப்படைத்துக்கொண்டார். திருஞானசம்பந்தம், மாணிக்கவாசகம், திருநாவுக்கரசு, சுந்தரமூர்த்தி எனச் சமயகுரவர் நால்வர் பெயராலும் அழைக்கப்பெற்ற ஆண்மக்கள் நால்வரும், நீலாம்பிகை, திரிபுரசுந்தரி என உமைப்பிராட்டியார் பெயரால் அமைந்த பெண்மக்கள் இருவரும் அடிகளுக்குத் தோன்றினர். திருநாவுக்கரசு என்னும் புதல்வரும், நீலாம்பிகை என்னும் புதல்வியாரும் புலமை வாய்ந்தவர்கள். திருவரங்கனார் நீலாம்பிகையைக் காதலித்து மணங்கூடினார்; திரிபுர சுந்தரியைக் குஞ்சிதபாதம் என்னும் புலவர் மணந்து கொண்டார். அவர்களுக்கும் புதல்வர்களுக்கும் மக்கட் செல்வங்கள் உண்டு.

இங்ஙனம் மனைவாழ்க்கையில் பலரைக் காக்கும் பொறுப்பில் விளங்கினாலும், அடிகளாருடைய தமிழ்த்தொண்டும் சிவத்

தொண்டும் இறுதிவரையில் இடையறாமல் நிகழ்ந்து வந்தன; அடிகளாரின் உறுதியுள்ளமே இதற்குக் காரணம்!

வருவாயிற் பெரும்பகுதியை அறிவுநூல்கள் வாங்குவதிலும் புதிய நூல்கள் எழுதுவதிலும் அவற்றை அச்சிட்டுப் பதிப்பதிலும் செலவு செய்ய அடிகள் தயங்குவதில்லை; குடும்பச் செலவுகள் அதற்கேற்றபடி நடந்துவந்தன. இறைவனது படைப்பின் நோக்கமே எங்கிலியிலும் இனிது நிறைவேறி வருதல் இயல்பாயிற்று.

இ. இயக்க எழுச்சி

தனித்தமிழ் :

தனக்குவமை இல்லாதான், தனக்குவமையில்லாத தனித் தமிழை இவர்க்கு அமைத்துதவினான்; 'தமிழ்' என்னும் சொல்லே, 'தனித்தது' என்னும் பொருளுடையது; 'தமி' அதன் பகுதி; 'ழ்' என்னும் சிறப்பெழுத்தை ஏற்றுத் 'தமிழ்' என்னுஞ் சொல் வீறி எழுந்தது; 'தமி' என்னும் பெயர் சிவத்தையும் குறிக்கும்; அப் பெருமானும் தனித்தவர் "தான் தனியன் காணேடி" என்பது திருவாசகம்; சிவஞான போதத்தில் "தமியருள்" (5-ஆம் நூற்பா) என இச் சொல் இக் கருத்தில் வருகின்றது. சிவநெறியைத் தன்னுட் கொண்டது தமிழ்! சொல்லே தனித்த தென்னுங் கருத்தில் வருதலின், 'தனித் தமிழ் இயக்கம்' புதுவதன்று; தொன்று தொட்டதே!

இத் தனித் தமிழ் உணர்வு அடிகளார்க்கு இளமையிலேயே உள்ளொளிச் சிறப்பாய் ஓங்கியது. புலமைப் புதல்வி நீலாம்பிகையாருடன் 1916இல் ஒரு நாள் தமது மாளிகைத் தோட்டத்தில் உலவி வரும்போது,

"பெற்ற தாய்தனை மகமறந் தாலும்,
பிள்ளை யைப்பெறுந் தாய்மறந் தாலும்,
உற்ற தேகத்தை உயிர்மறந் தாலும்,
உயிரை மேவிய உடல்மறந் தாலும்,

கற்ற நெஞ்சகம் கல்மறந் தாலும்,
கண்கள் நின்றிமைப் பதுமறந் தாலும்
நற்ற வத்தவ ருள்ளிருந் தோங்கும்
நமச்சி வாயத்தை நான்மற வேனே''

என்னும் திருவருட்பாவை அடிகளார் பொருளுணர்ச்சியுடன் சுவையூறிப் பாடிவந்தார்; பாடி வந்தவர் உடனே பாட்டை நிறுத்திவிட்டு,

"என்ன நீலா ! இப் பாடலிலுள்ள 'தேகம்' என்னும் சமக்கிருதச் சொல், 'யாக்கை' என்னுந் தனித் தமிழ்ச் சொல்லாக அமைந்திருந்தால் பாடலின் தமிழ்ச்சுவை இன்னும் எவ்வளவு சிறப்பாயிருக்கும்; இப் பாடலில், மற்றச் சொற்க ளெல்லாம் தனித்தமிழ்ச் சொற்களாகவே வந்திருக்கின்றன; அவை எவ்வளவு இன்சுவையாயுள்ளன !''

என்று சுவை யுணர்வோடு கேட்க, நீலாம்பிகையார்,

"அப்படியானால், இனி நாம் தனித் தமிழிலேயே பேசியும் எழுதியும் வர உறுதி கொள்வோம்"

என்று ஆர்வம் பொங்கக் கூறினாராம்.

தனித் தமிழ் இயக்கம் :

அதுமுதல் தனித் தமிழிற் பேசுவதும் எழுதுவதும் அடிக ளாரிடம் கால் கொண்டு விட்டனவென்று தெரிகிறது.

மாளிகைத் தோட்டத்தில் அறிவறிந்த புதல்வியாருடன் நிகழ்ந்த இந் நிகழ்ச்சி, தனித்தமிழ் இயக்கத்துக்கு ஒரு பெருந் தூண்டுகோலாய் உதவியது !

இயக்கம் வீறியது ! வருவார் போவார் மாணவரிடமெல்லாம் தமிழே நிலவியது ! சொற்பொழிவுகள் பாடங்கள் நூலெழுத் துக்கள் எல்லாம் தனித்தமிழ் ஆயின. முன் பதிப்புக்களில் அயல் மொழிகள் கலந்துவிட்ட அடிகளின் செந்தமிழ் நூல்களெல்லாம் மறு பதிப்புக்களில் தூய தமிழ்ச் சொற்கள் பெய்து திருத்திப் பதிப்பிக்கப்பட்டன. வரவரத் தமிழகம் முழுதும் இவ் வியக்கம்

பரவியது! எழுத்தாளரெல்லாம் பெரும்பாலும் தனித் தமிழ் நடையிலேயே இதழும் நூல்களும் எழுதத் தொடங்கினர்; தமிழ் நடை தமிழாகத்தானே இருக்க வேண்டும்;

இவ் வியக்கம் இவ்வளவோடு நிற்கவில்லை; தமிழ்மொழியின் பழைமை இயல்பு, தமிழகத்தின் தொன்மை, தன்மை, தமிழ்மக்களின் குடிமை, குடிமைச் செய்கைகளின் ஆராய்ச்சிகளும்;

உலக மக்களில் தமிழரென்பவர் யார்? அவர்கள் நாகரிகம் யாது? மற்றவரோடு தமிழரின் தொடர்புகள் எப்படி? தமிழ் நூல்களின் அருமைகள் பெருமைகள் என்ன? தமிழ்ச் சொற்களின் பெருக்கம், அவற்றின் சொற்பொருளாராய்ச்சிகள், தமிழ் அகர வரிசை என்பனவும்;

தமிழின் கலைகள், கலைகளின் முடிமணியாகிய சமயம், சைவ சித்தாந்தத்தின் மாட்சி, உலக முழுவதும் அதன் ஆராய்ச்சிகள், பல்கலைக் கழகங்களில் அதற்கு இடம், தமிழ் நெறிக் கடவுளாகும் சிவபிரான் வணக்கம், திருக்கோயில்களின் அமைப்பு, கோயில்களின் வழிபாட்டு முறைமை, விழாக்கள், திருமுறை ஆராய்ச்சிகள், தமிழ் மந்திரங்கள், தமிழர் சடங்குகள் என்பனவும்;

தமிழாசிரியர் பெருக்கம், தமிழ்மொழிக்கு உரிமை, மக்கட் பெயர், இல்லப்பெயர், தெருப்பெயர், ஊர்ப்பெயர், தலப்பெயர், தொடர்வண்டி நிலையங்களின் பெயர், மாநிலப் பெயர் மாற்றம், தனியார் அலுவலகங்கள், அரசு அலுவலகங்கள், பள்ளி கல்லூரி களில் தமிழுக்கு ஆக்கம், முதன்மை, அயல்மொழித்தடை, தமிழ் அரசு ஆட்சி, பாண்டிய சோழ, சேரப் பல்லவப் பெயர் விளக்கம் பழந்தமிழர் என்னும் வகுப்பினரின் உயர்வு, ஏழை எளியவர்களுக்கு வாழ்க்கை நலம் என்பனவும்,

பிறப்பால் உயர்வு தாழ்வு பாராட்டாமை, திருக்குறள் தமிழ் மறை என்பதைப் போற்றிக் கொள்ளல், அது உலகப் பொதுமறை எனச் சிறந்து பல நன்மொழிகளிலும் மொழி பெயர்ப்பு நடத்தல், மொழிவாரி மாகாணப் பிரிவினை, உலகத் தமிழ் மாநாடுகள் முதலி யனவும் நாளும் நிகழ்ந்துவரக் காண்கின்றோம்.

மூலகாரணம் :

இவ்வளவுக்கும் இக் காலத்தின் மூலகாரணம் ஆசிரியர் மறைமலையடிகளார். நன்றி மறவாமல், 'மறைமலையடிகளார் திருவுருவச் சிலை' 'மறைமலையடிகளார் பாலம்' என்பன எடுத்தும் தொடுத்தும் நாடு மகிழ்கிறது; சென்னையை யடுத்து வேறொரு பெருநகரமும் 'மறைமலை நகர்' என உருவாகி வருகிறது. அவர் தோற்றம் எவ்வளவு அருஞ்செயல்களுக்கு உரியதாய் விட்டது! திருக்கழுக் குன்றத்து வேதமலைப் பெருமான், ஆசிரியர் மறைமலையடிகளாரைப் படைத்து இயக்கி, எவ்வளவு மாறுதல்களுக்கும் புதுமைகளுக்கும் புரட்சிகளுக்கும் இடமாக்கி விட்டார்!

இயக்க வரலாறு :

1. வித்து

இத் தனித்தமிழ் இயக்கத்துக்கு முதல் முதல் வித்திட்டவர் இன்னதென்று காலம் கணிக்க முடியாத தொன்மைத் தமிழ்மறையின் குரவர் திருவள்ளுவர்! அவர் தமது மறைநூல் திருக்குறள் முழுதும் தனித் தமிழில் யாத்ததோடு,

> "ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்
> இழிந்த பிறப்பாய் விடும்"

என்பது (133) முதலிய தமிழறங்கள் பலவும் தெருட்டி ஆதரித் தணைத்தும் மாறுபட்டோரை எதிர்த்து முழங்கியும் தாய் தமிழ்ப் பணிபுரிந்து உலகை உய்வித்தார். தொல்காப்பியம் சங்கநூல் என்னும் இவ்விலக்கண இலக்கியங்களால் தனித்தமிழ் இயக்க விதை நன்கு முளைத்தது.

2. முளை

தொல்காப்பியம் ஒப்பற்ற சங்க இலக்கண நூல்; ஐந்திலக்கணங் களும் எளிய நூற்பாக்களால் அளவாய் உரைப்பது; ஆசிரியர் தொல்காப்பியனார் 5500 ஆண்டுகளுக்கு முன் இயற்றியது. அத் தகைய பழைய நூலில்,

"கற்பெனப் படுவது கரணமொடு புணரக்
கொளற்குரி மரபின் கிழவன், கிழத்தியைக்
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக், கொள் வதுவே''

"பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப'' (கற்பியல், 114.)

என்பது முதலிய நூற்பாக்கள் இயற்றித் தமக்குப் பன்னெடுங் காலம் முன்னரே, வாழ்க்கை நிகழ்ச்சிகள் பலவும், பொய்யும் வழுவும் நேராமல் நிகழ்ந்து வந்த உண்மையை, 'என்ப' என்றொரு சொல் இட்டு முன்னோர் உரை தழுவித் தமிழர் வாழ்க்கையறத்தை வெளிப்படுத்துதவினார்.

தலைச் சங்க காலத்துக்கும் அதற்கு முன்னும் இயற்றிய தமிழ்ப் பாக்கள் பலவும் சங்க இலக்கியங்களாகப் பின்பு பாகு படுத்தப்பட்டன. அவற்றுள் வரலாற்றுக்குப் பெரிது உதவும் புறநானூறும் ஒன்று; தெற்கே 'பஃறுளி' யாறு கடல்கொள்ளப் படுமுன் பாடிய பாடல்கள் சில அதில் உள்ளன; பாண்டியன் முதுகுடுமிப் பெருவழுதியைப் பாடிய நெட்டிமையார் பாடலில் (9),

"அறத்தாறு நுவலும் பூட்கை மறத்தின்"

என்று அவ்வரசனது அறமுறைக் கொள்கை கூறப்பட்டிருக்கிறது.

ஒரு பாடலில் (34),

"நிலம்புடை பெயர்வ தாயினும் ஒருவன்
செய்தி கொன்றோர்க்கு உய்திஇல் என அறம்பாடிற்று''

எனவும் வருகின்றது. இதன் பழைய உரை 'அறம்' என்பதை 'அறநூல்' என்று கூறுகின்றது; தமிழில் 'திருக்குறள்' ஒன்று தான் பழைய அறநூலாய் இருக்கின்றது.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்''

என்பதும் ஒரு பாடல் (192).

இங்ஙனம், தமிழறங் கூறும் பாடல்கள் பல சங்க இலக்கியங் களில் உள்ளன; எல்லாம் தூய அறம் காத்து நாட்டை வாழ்வித் திருக்கின்றன.

3. கிளறிக் களை களைதல்

நக்கீரர் முதலிய பழைய உரையாசிரியரின் தீந்தமிழுரைகள், முளையைச் சுற்றி நன்கு கிளறிவைத்தன.

இடையில் வந்த திருமுறை யாசிரியராகிய சமயகுரவர் நால்வரும், மெய்கண்ட ஆசிரியர் நால்வரும், தூய தமிழ் நெறியாகிய சிவசமயத்தை நன்கு வடித்திறக்கித் தெளித்து விளக்கி அதனை மூசி மொய்த்து அழித்துவிடப் படர்ந்த களைகளை நீக்கியுதவினர்.

"பிறப்பிறப் பில்லாத கடவுள் ஒருவர் உண்டு; அவரை எல்லா நற்கருத்துக்களையும் ஒருங்கே உடைய 'சிவம்' என்னும் பெயரால் அழைப்பதே ஏற்றது; ஏனையோரெல்லாம் அதிதேவர், தேவர், தேவதைகள், மக்கள், சிற்றுயிர்கள் என உயிரினங்களே; கடவுளை அறிந்து வழிபடுதலே கற்றறிவின் பயன்" என்றும்,

கடவுள் அம்மையப்பராய் மாது பிரியாமல், விளங்குவோர்; கடவுளே, படைப்பு காப்பு அழிப்பு மறைப்பு அருளல் செய்பவர்; ஆதலால், வாழ்க்கைக்குத் தேவையான அனைத்தும் அவர் மூலமே பெற்றுக் கொள்ளலாம்; வழிபடுவோர்க் கேற்றபடி, வழிபாட்டுக் கெளியவராய்த் திருவுருக் கொண்டு எழுந்தருளி அறிவுறுத்திவரும் திருக்கோலங்கள் உடையவர்; ஊன் பயிலாத வேள்வித் தீயில் முனைத்து விளங்கும் அருளொளியர்; சிவஞானிகள், சிவவேடங்கள், சிவத் திருமேனிகள் அவர் விளங்கும் மற்ற இடங்கள்; என்றும் விளக்கினர்.

எங்கே வணங்கினாலும் முழுமுதற் சிவத்தையே பாடிப் பரவுவர்; அம்மை, பிள்ளையார், முருகர் முதலிய அவர் திருக்கோலங் களைக்கூடத் தனித்தெடுத்துப் பாடாத நாவினராய்த் தமது நடையினால் வாழ்ந்து காட்டித் தமிழ் நெறி ஓம்பி அப் பெருமக்கள் ஏனையவற்றையெல்லாம் களைந்தொதுக்கினர்!

பிற்காலச் சிவஞான முனிவரும், தம் உரைகளில் தக்க மறுப்பு முறைகளையெல்லாம் பின்பற்றி, வேண்டாத கல், மண், பார், புல் முதலியவற்றை அப்புறப்படுத்தித் தூய்தாக்கினர்.

தொல்காப்பியம் சங்கநூல் என்னும் இவ்விலக்கண இலக்கியங் களால் தனித்தமிழ் இயக்க விதை நன்கு முளைத்தது.

4. பாசனம்

சென்ற நூற்றாண்டின் முற்பகுதியில் (1823—1874) தமிழகத்தின் அருட்பெருமானாக விளங்கிய இராமலிங்க அடிகள் கனிவுடன் நீர் வார்த்து உதவினார். முளை செடியாயிற்று. அவர் திருவருட்பாவில்,

"இலைக்குள நீர் தழைத்ததனில் இடங்கருற அழைத்ததன்வாய்
தலைக்குதலை மதலையுயிர் தழைப்பஅழைத் தருளியநின்
கலைக்கும்வட கலையின்முதற் கலைக்கும்உறு கணக்குஉயர்பொன்
மலைக்கும்அணு விலைக்கும்உரு வன்றெண்டப் பெருந்தகையே"

என்பது முதலிய புரட்சிப் பாடல்கள் வருகின்றன.

பாடல் மட்டுமன்றி அவர் செய்த சோதிவழிபாடு, அருட் பெருஞ் சோதிமுழக்கம், சோதிகோயில், வடலூர் என்னுந் தனித் தலம், சமரச மார்க்கம், சீவ காருணியம், தருமச்சாலை முதலிய அருஞ்செயல்களெல்லாம் தனித் தமிழ்ச் சுவையொடுபட்டு மிகவும் புரட்சியானவை; இப் புரட்சிகளில் ஆசிரியர் மறைமலையடிகளார்க்கு இணக்கம் பெருகியது! 'அருட்பா மருட்பா' போரில் ஊக்கமாய்க் கலந்துகொண்டார். திருவள்ளுவர் இராமலிங்க அடிகளாரின் அடி யொற்றிப் பல்லாவரத்திலும் 'பொதுநிலைக் கழகம்' அமைத்தார். தனித்தமிழ் ஆராய்ச்சிகள் மிகுந்தன; இயக்கம் அருளுரங் கொண்டது!

5. வேலி

பின்னர்த், திருவனந்தபுரம் அரசர் கல்லூரிப் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை 'மனோன்மணீயம்' என்னும் தமது அழகிய நாடக நூற் பாடல்களால் செடிக்குச் சிறப்பாக வேலியிட்டுக் காத்தார்.

"பல்லுயிரும் பலஉலகும் படைத்தளித்துத் துடைக்கினும்ஓர்
எல்லையறு பரம்பொருள்முன் இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையா ளமும்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்
ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே"

என்பது அவர் பாடல்; தமிழகத்தில் செடி செழிப்புக் கண்டது! சிதையாதாயிற்று!

மறைமலையடிகள் சுந்தரம்பிள்ளையோடு நேரிற் பழகி அவர் பாடற்கருத்தில் உள்ளந்தோய்ந்து முறுகியெழுந்தார்.

6. உரம்

தனித்தமிழென்னுங் கருத்தில் தமிழ் தோன்றிய காலம் தொன்மையானது.

"முதுமொழி நீ அநாதி"

என்பது மெய்ப்பொருட் பேராசியர் சுந்தரம்பிள்ளை வாக்கு!

தமிழ் மறையாகிய 'திருக்குறள்' முதல் 'மனோன்மணீயம்' என்னும் தமிழ் நாடகநூல் வரையில் (1896), இங்ஙனமெல்லாம் எழுந்த தனித் தமிழியக்கம், இவ்விருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலுங்கூட, இலைமறை காயாகவே இருந்து வந்திருக்கிறது.

இயக்கச் செடிக்குப் போதிய உரம் இடுவாரில்லை; செடி வதங்கிய நிலையில் இருந்தது;

ஆசிரியர் மறைமலையடிகளார் ஒருவர் இத் துறையில் உணர்ச்சி மிக்கவராய்ப் போதிய புலமையாற்றலுடன், வீறி எழுந்தார். திருவருள் அடிகள் மூலம் பெரும் புரட்சியுண்டாக்கக் காத்திருந்தது போலும்!

தமிழ் நூல்கள் சமக்கிருத நூல்கள் பெரும்பாலானவற்றிற்கும் அடிகள் காலம் வகுத்துக் கொண்டார்; அதனால் முன்பின் சொல் வழக்குகள் நூல் வழக்குகள் எல்லாம் பிரிந்து தெரிந்தன; மொழியாராய்ச்சி, சொல்லாராய்ச்சி, பொருளாராய்ச்சிகளில் மிக விரிவாகச் சென்றார்; இவ்வாராய்ச்சிக் கடலில் ஊக்கமாய் இறங்கிக் குடைந்து குடைந்து தாராளமாய் நீந்தி அளாவினர். பரந்த இவ்வாராய்ச்சி முடிபுகளெல்லாம் இயக்கத்துக்கு எருவாய் உதவின; பல வேறு எருக்களைச் செடிக்கு இட்டுஇட்டு அதனை மிக நன்றாக அடிகள் இயக்கி வளரவிட்டார்;

தனித் தமிழ் இயக்கத்தை வளர்த்தவர்களில் மறைமலையடிகள் என்னும் இப் பெருமானே விரிவாக ஈடுபட்டு **உரங்கள்** பல கண்டவர். ஒன்றிலிருந்து ஒன்றாக நாடெங்கும் பல செடிகளைப்

பெருக்கித் தழைப்பித்து மரமாக்கிப் பலவகையான மணங்கமழ் மலரும் இன்சுவைப் பழமும் உண்டாகச் செய்து அனைவர்க்கும் வழங்கினார். இயக்கம் பம்பிப் படர்ந்தது.

இடையே அரசியல் தலைவர் பலர், உரிமையோடு சுற்றிப் பாதுகாவல் பணிபுரிந்தனர்; அரசிய லியக்கம் நாட்டுமக்களை நன்கு எழுப்பியது. அடிகளார் ஆராய்ச்சி முடிவுகள் தியாகராச செட்டியார், ஈ. வே. ரா. இராசாசி, காமராசு, பாரதியார், பக்த வச்சலம், செட்டி நாட்டரசர், அண்ணாத்துரை, நாவலர், கலைஞர், பேராசிரியர் முதலிய பலர்க்கும் வழிகாட்டியாய் இருந்தன.

7. நிழல்

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகமும் அதன் ஆட்சித் தலைவர் சுப்பையா பிள்ளையும் அடிகள் வழிநின்று பெருந் தொண்டாற்றி உலகமெல்லாம் இயக்க நிழலைப் பரவச் செய்து வருவதால், இயக்கம் எங்கும் வேரோடி வளர்ந்து விளங்கிப் பயன் மிகுத்து வருகிறது.

ஈ. ஆசிரியத் திரு

என் நற்பேறு :

அடிகளார் தமிழகத்தின் தலைவரானார்; தமிழகத்தின் புலவர் பெருமக்களெல்லாம் இவர் திறத்தில் ஈடுபடுதலையே மேம்பாடாகக் கண்டனர்; எல்லாப் பேரவைகளும் அடிகளார் தலைமையை விரும்பிப் பெற்றுச் செயலுற்றன, சிறந்தன. திரு. வி. க. போற்றிப் பாராட்டியது போல் 'அடிகளே தென்னாடு, தென்னாடே அடிகள்' என்னும்படி நிலைமை விளங்கியது, ஓங்கியது !

அடிகளுக்கு வயது 44 ஆயிற்று. புலமை, செயல், நடை, செல்வாக்கு அனைத்தும் இந்நிலையிற் கனிந்து நின்றன. தக்க பணிகளில், சாறு ததும்பிய கனிந்த தமிழுருவில், அடிகள் மும்முரமாய் ஈடுபட்டு வந்தார். எங்கும் அவர் பேச்சும் புகழும் மேலோங்கின !

கனிந்து தீஞ்சாறு சுடர் வீசிய அப் பருவத்தில் ஒரு சிறந்த நன்னாள் ! (1921, பிப்ரவரி)

அக்காலத்தில் பல்லாவரத்தை அடுத்த சைதாப்பேட்டையில், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் 'குப்புசாமி என்னும் அன்பரொருவர் பயின்றுகொண்டிருந்தார். அடிகளாரைப் பற்றி அவர் ஆர்வமாய்ப் பேசுவார்; அவர் ஊர் வாலாசாபாத்து.

ஒருநாள் அவர் மிகக் கிளர்ச்சியாயிருந்தார். 'சென்னை இராயப்பேட்டையிலுள்ள பாலசுப்பிரமணிய பத்த சன சபைக்கு அதன் ஆண்டு விழாத் தலைவராக ஆசிரியர் மறைமலையடிகளார் வரப் போகிறார்; அடிகளார் மிகப் பெரிய படிப்பாளி; ஆங்கிலமும் சமக்கிருதமும் வல்லவர்; ஆராய்ச்சி மிக்கவர்: காட்சிக்கு அழகாக இருப்பார்; குரல் குயில்போல் இனிதாக இருக்கும்; பல்லாவரத்தில் மாளிகையும் பெரிய நூல் நிலையமும் பெருவாழ்வும் நாகரிகமும் உடையவர்; உடலை நன்றாக ஓம்பக் கூடியவர்; பெருந் தலைவர்; அவர் வாய்மலர்ந்து அருளும் அருளுரைகளை இன்றும் நாளையும் செவிவாயாக மாந்தலாம்; தமிழகத்தின் அறிஞர் பலரும் அடிகள் தலைமையிற் பேசப் போகிறார்கள்! பேரவையில் தக்கவர்களை யெல்லாம் பார்க்கலாம்' என்று சொல்லிச் சொல்லித் துடித்துக் கொண்டிருந்தார். நேரம் நெருங்க நெருங்க அவர் மிகக் கிளர்ச்சியாய்த் தோற்றினார்.

அங்கு உடன் பயின்றுகொண்டிருந்த யான், இம் மாட்சிகளில் உந்தப் பெற்றேன். ஏதோ எனக்குள் ஒரு பெருங் கிளர்ச்சி விசை கொண்டது. எனக்கு அப்போது வயது 16; (1920ஆம் ஆண்டு)

இராயப்பேட்டைச் சபைக்கு அன்பர் குப்புசாமியோடு கூடவே சென்றேன். அடிகளார் பேரவையில் நின்றபடி ஓங்கார வடிவு காட்டி எதிர்முகத்தில் விரிவுரை செய்துகொண்டிருந்தார்; என்னென்பேன்! இன்னதென்று சொல்ல வொண்ணாப் பேருணர்ச்சியுடன் அடிகள் காட்சியை நேரிற்காணும் பேறு பெற்றேன்.

உ. ஆசிரியர் மாணவர்

பேரவையின் உள்ளே நான் எப்படிச் சென்றேன், அங்கே எப்படி அமர்ந்தேன் என்பனவெல்லாம் நான் அறியாதவை; என்னை மறந்தேன் என்பதே முற்றிலும் உண்மை.

குப்புசாமியும் நானும் சிறிது தொலைவில் எதிரில் அமர்ந்து கொண்டிருந்தோம்; அடிகளார் வாய் மலர்ந்த மெய்ப்பொருளை நாங்கள் ஆர்வமாய்க் கேட்டு வந்தோம்; நான் அக் கருத்துக்களில் அப்படியே ஆழ்ந்துவிட்டேன்; அடிகளார் சொன்னவற்றிற் சில:

முதல் விரிவுரை :

" 'ஓம்' என்பது தமிழ்ச் சொல்; தமிழ்மொழி என்பது உலகத்தின் இயற்கை மொழி; மக்கள் மொழி! மக்கள் காது களைப் பாருங்கள்; மேலே பெரிய வட்டம்; கீழே சிறிய வட்டம்; இடையே வளைவுகள் உள்ளன. 'ஓ' வடிவும் அப்படியே உள்ளது!

" 'ஓ' என்பது செவியிற் சேரவேண்டிய ஒலி; சொல்லும் வாயைவிடக் கேட்கும் செவி உயர்ந்தது; வாய் இடைப்பட்டது தானே; 'ஓ' என்று ஒலிக்கும் வாயின் வடிவை நோக்கி 'O' என்று ஆங்கிலேயர் எழுதிக் கொண்டனர்; அது உயர்ந்ததாகுமா? சமக்கிருத மொழிக்கு நாகரி எழுத்தாளர், இயற்கைக்கு வேருன செயற்கையாய், மேலே சிறிய வட்டமும் கீழே பெரிய வட்டமு மாய்த் தலை கீழாய் எழுதியிருக்கிருர்கள். வாய் இடைப்பட்ட தாலுலும் ஏதோ ஒரு வகையில் ஆங்கிலத்தில் இயற்கையாய் அமைந்திருக்கிறது! நாகரியில் அப்படிக் கூட இல்லை. உயர்ந்த செவியின் வடிவை உள்ளபடியே இயற்கை தோன்ற எழுதி யிருக்கும் தமிழ், ஆங்கிலத்தைவிடச் சமக்கிருதத்தைவிட எவ்வளவு சிறந்தது பாருங்கள்!

"திருஞானசம்பந்தப் பெருமான் அதனால் 'தமிழ்' என்னுந் தகரத்தோடு 'ஓ' என்னும் ஓங்காரத்தையும் சேர்த்துத் 'தோ'

என்னும் முதலெழுத்தில் தம் திருப்பதிகத்தைத் தொடங்கினர். அவ் வடிவுக்குக் காரணமா யிருக்கும் காதுகளையும், ஓங்காரத்தின் விரிவாகிய செவ்விய மெய்ப்பொருள்களைக் கேட்டலரல் 'செவி' என்னும் பெயராற் சிறப்பித்தார். அப்படிச் செவ்விய பொருளைக் கேட்டலால் அதற்கொரு பூணும் அணிந்து, 'தோடுடைய செவி' எனத் திருவாய்மலர்ந்தார்.

"மக்கள் வடிவமே பெரும்பாலும் சிவத்தின் வடிவமாய்த் தோற்றியது; துரிதமாகக் கேட்கும் அருளுணர்வை நினைந்து இடப்பாகக் காதைக் குறித்துத் 'தோடு' என்னும் அம்மையின் அணி சிறப்பிக்கப்பட்டது. செவ்விய அறிவுரைகள் கேட்டலையே 'காது குத்துதல்' என்ப; 'பூண்' அணிதலும் இதனல் நேர்ந்தது!

"அதோடு, 'ஓ' என்று ஒலியிட்டுக் கொண்டிருப்பதை எவ் வளவு நேரம் நீள முழக்கிக்கொண் டிருக்க முடியும்? 'ம்' என்று உதடு மூடி முடிக்கவேண்டும்; அவ் வகையில் 'ஓ' என்னும் முதலெழுத்தோடு 'ம்' என்னும் இறுதி எழுத்தும் சேர்ந்து 'ஓம்' என்னும் இயற்கைத் தமிழ்ச் சொல், இயற்கைகளின் மொழியாக எழுந்தது!

"'ஓ' என்று தொடங்கியதற்கும் 'ம்' என்று முடிப்பதற்கும் இடையே எல்லா மெய்ப்பொருள்களும், ஆலம் பழத்து விதைகளைப் போல, அத்திபபழத்து வித்துக்களைப் போல, அடர்த்தியாய் அடங்கியிருக்க வேண்டும். அதனலேதான் நம் திருமுறைகள் முழுதும் 'ஓம்' என்பதனுள் அடக்கம் என்று தெரிவதற்காக, முதல் திருமுறையின் முதல் பதிகத்தின் முதல் பாட்டின் முதல் சொல்லின் முதல் எழுத்து 'ஓ' எனத் தொடங்கப்பட்டது; பன்னிரண்டாவது கடைசித் திருமுறையாகிய பெரிய புராணத்தின் கடைசிப் பாட்டின் கடைசிச் சொல்லின் கடைசி எழுத்து ம்' என்று முடிந்திருக்கிறது!

"வேறு வேறு காலத்தில் வேறு வேறு ஆசிரியர்களாற் பாடிய இத் திருமுறைகள் இங்ஙனம் தம்முள் ஒற்றுமை கொண்டு தொடக்கமும் முடிவும் ஒரு சொல்லாய் அமைந்திருப்பது எவ்வளவு தெய்வச் செயல், பாருங்கள்! இத் திருமுறை வாக்குகளை ஒரே தெய்வ வாக்கு என்றுதானே சொல்ல வேண்டும்! ஆசிரியர் பலர்

வாக்குகளாகக் காணப்பட்டாலும், உண்மையில் அவர்கள் வழியாக ஒரு தெய்வ உணர்வே உந்தியிருக்க வேண்டும். எண்ணிப் பாருங்கள், அன்பர்களே, எண்ணிப் பாருங்கள்! (ஆரவாரம்)

"இந்த அமைப்பைத் 'தற்செயல் நேர்வு' என்று சிலர் கருதக் கூடும்; 'தற்செயல்' என்பதற்கு என்ன பொருள் என்பது அவர்களுக்குத் தெரிவதில்லை. 'தன்' என்பது இறைவன்; நம் 'சிவ ஞானபோதம்' இக் கருத்தை அறிவிக்கும் (பாயிரம்); 'தற்செயல்' என்பது இறைவன் செயல்!

"இது மட்டுமா? 'ஓ' என்னும் வடிவில் தொடக்கத்தில் மேலே ஒரு வட்டமும் முடிவில் கீழே நுனி வளைந்த ஒரு நீட்டமும் இருத்தல் எல்லார்க்கும் தெரியும். நீட்டத்தின் நுனி வளைவைத் தான் கீழே சிறிய வட்டம் என்று முன்பு கருதினேம். வட்டமும் நீட்டமுமான இவ் விரு வடிவுகள் சாத்திரத்தில் 'விந்து' 'நாதம்' எனப்படுகின்றன. இவ் விரண்டுங் கூடியதே 'பொருள்' எனப்படும். உலகப் பொருள்களை உற்றுப் பாருங்கள்! எல்லாம் வட்டமும் நீட்டமும் தம்முள் அமைந்திருப்பது தெரியும்.

"விதைகள் இலைகள் மலர்கள் பழங்கள் முதலியனவும், கை கால் தலை உடல் முதலியனவும், மின்னல் கதிர் பிறை முதலியனவும், மலை ஆறு குளம் கிணறு முதலியனவும் இங்கே எண்ணிப் பார்க்கலாம். வட்ட வடிவே மிகுதியாகத் தோற்றும் நாரத்தம் பழம், இலந்தைப் பழம், கொடி முந்திரிப் பழம் முதலியவற்றின் காம்புகளை நோக்கினால் நீட்டம் விளங்கிவிடும்; பலா மா வாழைப் பழங்களிலும் பிறவற்றிலுமாகப் பெரும்பாலனவற்றில் நீட்டமும் விரிந்து நன்றாய்த் தெரிகிறது. வட்டமே என்றாலும் உருண்டையே என்றாலும் அது நீட்டக் கோட்டினால் அமைந்திருப்பது யாருக்குத் தெரியாது?

"வட்ட நீட்டங்களின் சேர்க்கையாகிய 'ஓ' வடிவு, இயற்கையான வடிவே என்பது இவைகளாலெல்லாம் இனிது விளங்கும். இவ்வொலி வடிவு பிள்ளையார்; அதன் ஒளி முருகன்; அதனால் பிள்ளையார் முதற்பிள்ளை; முருகன் இளையனார்; எல்லாம் ஆண்டவன் தோற்றம்; அதனால் ஆண்டவனுக்குப் பிள்ளைகள்

எனப்பட்டனர். மூலமான மாயையிலும் அதன் பிரிவுகளான 'நாத' 'விந்துக்'களிலும் ஆண்டவன் திருவருள் நின்று நிறைந்து இயங்குவதனால் அங்ஙனமெல்லாம் உருவகம் செய்யப்பட்டன!

"இன்னொன்று பாருங்கள்; பலவேறு மக்கள் தத்தம் தாய் மொழிகளில் கூட்டமாய்ப் பேசும்போது, கவனித்தால் ஓர் உண்மை காணலாம். தொலைவிலிருப்பவர்களுக்கு மொத்தமாய் அது 'ஓ' என்றே கேட்கிறது. என்ன இப்படி 'ஓ' என்று இரைகிறார்களே, என்றும் நாம் சொல்லுகிறோம். இதிலிருந்து என்ன தெரிகிறது?

"'ஓ' என்று கேட்கும் மொத்த ஒலியின் உள்ளே அவரவர் தாய்மொழிகளாகிய பல்வேறு மொழிகளும் அவற்றின் விரிவுகளும் அடங்கியிருக்கின்றன என்பதை அறியலாமன்றோ!

"அன்பர்களே உலகத்தின் எல்லா மொழிகளுக்கும் தாயாய் விளங்கும் மூல ஒலி 'ஓம்' என்பதும், தமிழ் வடிவாய்த் திகழும் 'ஓம்' தமிழ்ச் சொல், உலகத்தின் எல்லா மொழிகளுக்கும் மூலமொழி முதல்மொழி இயற்கைமொழி என்பதும் எளிதில் புலப்படுகின்றன!

"'ஓம்' என்பது தமிழ்தான் என்பதற்கு வேறு ஒரு குறிப்பும் உள்ளது. 'ஒ' 'ஓ' என்னும் குறில் ஒலி, நெடில் ஒலி இரண்டும் தமிழில் உள்ளன; சமக்கிருதத்தில் 'ஓ' என்னும் நெடில் ஒலி மட்டும் உள்ளது; இது இயற்கையாகாது; ஏனென்றால், குறில் தோன்றித்தானே நெடில் தோன்ற வேண்டும்!"

இவ்வளவில் அடிகள் இருக்கையில் அமர்ந்துகொண்டார்; பேரவையும் சிறிது அசைந்தது; அருகில் இருந்தவர், அடிகளுக்குச் சிறிது பானகப் பால், பருக அளித்தார். ஓதுவார் சிலர், திருமுறை இன்னிசை ஓதினர்; பெரும்பாலோர் திருமுறையும் இன்னிசையும் கேட்டு உருகினர்; அடிகள் சற்று இளைப்பாறித் திரும்பவும் எழுந்து நின்று இனிய கீச்சுக் குரலில், மற்றுஞ் சில உண்மைகளை விரித்துரைக்கத் தொடங்கினர்; பேரவையும் அமைதி கொண்டது.

"திருமறை ஓதுவோர் முதலில் ஆண்டவனையும் அவன் முதல் ஒலியையும் நினைந்து 'ஓம்' என்று சொல்ல வேண்டும்: கடைசியிலும் சொல்ல வேண்டும்' இது பொது மரபு!

"திருமுறைகளில் முதல் சொல்லிலும் கடைசிச் சொல்லிலும் 'ஓம்' கலந்துவிட்டதனால் அதற்கு ஈடாகவும், அம்பலக் கருத்துத் தெரியும்படியும் 'திருச்சிற்றம்பலம்' என்று சொல்வது சிறப்பு மரபாயிற்று. அதை இப்போது திருமுறை ஓதியவர் மூலம் கேட்டோம்.

"'ஓம்' என்பது எல்லாச் சமயத்துக்கும் பொது; திருச்சிற்றம்பலம் என்பது சிவ சமயத்துக்கே சிறப்பு! இரண்டும் ஒன்றே என்பதற்காகத் தான், 'திருச்சிற்றம்பலம்' என்னும் ஞான வெளி 'ஓம்' வடிவில் அமைந்திருக்கிறது; 'திருச்சிற்றம்பலம்' என்பதில், விளக்கமும் சிறப்பும் உள்ளன!

"அன்பர்களே, 'தமிழ்' என்பதும் 'ஓம்' என்றே கொள்ளப்படும். அச் சொல்லில் உள்ள 'தமி' என்னும் பகுதியில் அ, இ என்னும் உயிரெழுத்துக்கள் உள்ளன. 'ஓ' என்பதில் அ, உ என்னும் இரண்டெழுத்துக்கள் காணப்படும். 'இ' என்னும் இடை உயிர் மறைவாயிருக்கிறது; 'இ' இல்லாமல் 'உ' உண்டாக வழியில்லை; 'இ' எழுந்தபின 'உ' உண்டாகாமற் போவதும் இயல்பாகாது; சிலர் 'தமிழு' என்று ஒலிப்பதற்கும் இது காரணம். சிற்றம்பலத்தின் சொற்பிரிப்பான 'சிறு அம்பலம்' என்பதிலும் அ, இ, உ மூன்றும் இருப்பதைக் காணலாம். ஆதலால் 'ஓ'காரமும் அ, இ, உ மூன்றும் உடையதென்றே கொள்ளப்படும். இதனால், 'தமிழ்' என்பதும் 'ஓ' என்பதும் ஒன்றே ஆயின.

"அருள் வெளியாகிய ஞான அம்பலத்தில், திருச்சிற்றம்பலத்தில், இயங்குவதே சிவத்தின் ஆடலியக்கமாதலின், 'தமிழ்மொழி' அந்த ஆடலியக்கத்தின் இயற்கை யொலியாய்த் திகழ்கிறது! திருச்சிலம்பொலியாய்ப் பொலிகின்றது!

"திருக்குறள் தமிழ்மறை யாதலால் அதன் முதலெழுத்தும் கடைசியெழுத்தும், தமிழ்மொழியின் முதல் எழுத்தாகிய 'அகரமும்' கடைசி எழுத்தாகிய 'னகரமு'மாக அமைந்திருக்கின்றன! இங்ஙனம் தமிழால் அமைந்தன வாயினும், திருக்குறள் என்னுந் தமிழ்மறை 'ஓம்' என்பதன் விளக்கமே; 'திருச்சிற்றம்பலம்' என்பதன் தெளிவே; திருமுறைகள் சிறப்பு மறையாதலின், 'ஓம்' வடிவை

முதலிலும் கடைசியிலுமாக உள்ளடங்கிய வெளிப்படையாய்க் கிளந்தன!

எனது நிலை:

குப்புசாமியும் நானும் அன்றிரவே சைதைக்குத் திரும்பி விட்டோம்; வழியிடைச் சற்றேறக்குறைய ஆறுகல் தொலைவு; நடந்துதான் வந்தோம்; அக் காலத்தில் பேருந்து இல்லை. நடந்து வந்தபோது நான் உள்ளந் தோய்ந்து பேசவில்லை; என் உள்ளத் தடம் முழுதும் அடிகளார் பேச்சும் கருத்தும் நிரம்பித் துளும்பிய படியே இருந்தன;

சைதைக்கு வந்ததும் உணவு உண்டு அவரவர் படுக்கைக் குச் சென்றோம்; அலுப்பில் குப்புசாமி உடனே உறங்கிவிட்டார்; நான் விளக்கொளியில் அமர்ந்து அடிகளார் பேச்சை அப்படியே குறித்து வைத்தேன். 55 ஆண்டு கழித்து இப்போது அது பயன் படுகின்றது. பின்பு, படுத்துக்கொண்டேன்; இமைகள் மூடியிருந் தனவே தவிர, உறக்கம் வரவில்லை; அடிகளார் பேச்சொலி 'கணீர்' என்று கேட்பதுபோலிருந்தது. பேச்சின் இனிமையிலும் கருத் தாழத்திலும் தமிழ் நலத்திலுமே என் உள்ளம் மிதந்தது; சுற்றிச் சுற்றி வந்தது!

எப்பொழுது உறக்கம் வந்ததோ தெரியாது; பொழுது விடிந் தது; உன்மத்தம் பிடித்ததுபோல் இருந்தேன்; ஒன்றும் நாட வில்லை; வழக்கம்போற் கடமைகள் நடந்தன; பகலுணவு உண்ட தும், 'சுந்தரம்! என்ன இப்படி இருக்கின்றாய்; நேரமாயிற்றே; இன்றும் இராயப்பேட்டையில் அடிகளார் பேச்சுண்டு; புறப்பட லாமா?' என்றார் குப்புசாமி! காத்திருந்ததுபோல் உடனே புறப் பட்டு விட்டேன். அன்று ஞாயிற்றுக்கிழமை!

வழிநெடுக எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணியது மனம்; 'சிறியேனாகிய எனக்கு அடிகளார் ஆசிரியராக வாய்ப்பாரா? எவ் வளவு பெரியவர் அவர்! அவர் உள்ளத்தில் எவ்வளவு நுட்பமான உண்மைகளெல்லாம் பொதிந்திருக்கின்றன! எளியேன் எங்கே, மாட்சி சிறந்த அப் பெரியார் எங்கே!

"திண்ணைப் பள்ளிக்கூடங்களில் 'ஓம் அரி நம' என்று பாடம் தொடங்கும்; அடிகளார், முதல் காட்சியிலேயே எதிர் முகத்தில் 'ஓம்' உண்மைகளை விளக்கியிருப்பதனால் ஒருகால் ஆசிரியர் மாணவ ராவதற்கு இந்த வாய்ப்பு ஓர் இயற்கை நேர்வாக இருக்கலாமோ? ஒன்றும் அறியாச் சிறியேற்கும் அத்தகைய பெருநலம் கூடி வருமோ!"

பேரவையை அணுகியதும், சற்று முன்னால் தள்ளி நானும் அன்பரும் அமர்ந்துகொண்டோம். தலைமையுரை சிறிதாயிருந்தது; திரு.வி.க. முதலிய அறிஞர்கள் பேசியதைச் செவிமடுத்தோம். அடிகளார் முடிவுரை விரிவாய்ப் படர்ந்தது. சமக்கிருதத்திலிருந்தும் ஆங்கிலத்திலிருந்தும், அடிகள் வழக்கம்போல், மேற்கோள்கள், நூலாசிரியர் பெயர்கள், நூல்கள் முதலியனவும் இடையிடையே எடுத்துக் காட்டினார்கள். 'சைவ சமயத்தின் மாண்புகள்' விளக்கியுரைக்கப்பட்டன; அவற்றில் ஒரு குறிப்பு.

இரண்டாவது விரிவுரை:

"இன்ப உணர்ச்சி எல்லா உயிர்க்கும் உண்டு; அதனை அடையவே அவை முயல்கின்றன; மாணிக்கவாசகர், முற்றின்பமுடைய சிவத்தைச் சேர்ந்து அதனை அடையவேண்டும் என்று தெரிவிக்கிறார். அவர் திருவாசகத்தைப் பாருங்கள்.

'தினைத்தனை யுள்ளதோர் பூவினில் தேன்உண்ணாதே
நினைத்தொறும் காண்டொறும் பேசுந்தொறும் எப்போதும்
அனைத்தெலும்பு உள்நெக ஆனந்தத் தேன்சொரியும்
குனிப்புடை யானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ!'

"கடவுள் இன்பம் எத்தகையதென்பதையும் அவர், 'மறவா நினையா அளவிலா மாளா இன்ப மாகடல்' என்று அருளிச் செய்வார். காரணம், அவன் 'நன்றுடையவன், தீயதில்லாதவன்;' அதனால் எந்நாளும் இன்பமே யன்றித் துன்பம் சிறிதும் இல்லாதவனாயிருக்கிறான்.

"அத்தகைய பேரின்பத்தைத் தனக்கு இயல்பாகக் கொண்டிருக்கும் கடவுளை அந்த இன்பப் பெயரால் அழைப்பதுதானே சிறப்பு! 'சிவன்' என்னும் பெயர் அங்ஙனம் பேரின்பப் பொருள் உடையது!

"மற்றைச் சமயங்களெல்லாம் இறைவனை வேறுவேறு பெயர்களாலும் வேறு வேறு மந்திரங்களாலும் அழைக்கின்றன! சைவ சமயம் ஒன்றுதான், மங்களமான இன்பப் பெயரை ஆண்டவனுக்கு இட்டுத், தனது மூலமந்திரமாகிய திருவைந்தெழுத்திலும் 'சிவம்' என்னும் பெயரை உடையதாயிருக்கிறது!

"கடவுள் வேறு பல வல்லமைகளை உடையவனாயிருந்தாலும், அவற்றாலெல்லாம் பெயரிட்டு அழைப்பதனால் நமக்கு ஆவதென்ன? முடிவாக நமக்கு வேண்டுவது இன்பந்தானே!

"தமிழின் அகப்பொருளாயிருப்பதை 'இன்பம்' என்பர். அகத்துக்கு அகமாய் உயிருக்கு உயிராய், மேன்மேல் இன்பமாய் விளங்குவது சிவம்! சிவசமயத்தின் மாட்சி எவ்வளவு சிறந்தது பாருங்கள்!"

அடிகளின் தனித்திறம் :

இரவே இருவரும் சைதை சேர்ந்தோம். ஆங்கில நாட்டுப் பேச்சுவல்ல பெரும்புலவர் Johnson ஐ விடத் தோற்றத்திலும் கண்ணியத்திலும் தலைமையுரையிலும் இராயப்பேட்டைப் பேரவையில் அடிகள் சிறந்தவராய்த் தோற்றினர். பெருமக்கள் குழாத்தில் ஒரு தனித் திறத்துடன், வான ஞாயிறே வழுக்கி விழுந்ததுபோல அடிகள் திகழொளிவீசி நின்றருளினர். Johnson புகழ்பேசும் Boswell ஐப் போலவாவது அடியேன் வளரமுடியுமா என்று நினைத்துக்கொண்டேன். அப்போது அவ்விருவரையும் பற்றி நான் கேள்விப்பட்டிருந்தேன்.

நாள் கழியக் கழிய அடிகளாரைப் பல்லாவரம் சென்று காண உள்ளம் முறுகி முறுகி எழுந்தது. எப்போதும் அடிகள் நினைவாகவே நான் இருந்துவந்தேன்.

ஓவியமும் புன்மையும் :

பயிற்சிப் பள்ளியின் பாடங்கள் எனக்கு அவ்வளவாகப் பொருளில்லை; நான் அவற்றில் முதல் மதிப்பெண் பெறுவதே வழக்கம். என் தகுதிப் பதிவேட்டில் எல்லாம் Good Good என்றே குறித்

திருக்கும்; ஒப்புக்கு எங்காவது ஒன்று V. Fair குறிக்கப்படும். என் விடைத் தாள்களையும் பெரும்பாலும் பார்ப்பதில்லை. அவ்வளவு நம்பிக்கை!

வருகைப் பதிவேட்டிலும் மதிப்பெண் பதிவேட்டிலும் இரண்டாவதாக இருந்தவர் அச்சிறுபாக்கம் இராசமாணிக்கம் என்பவர். அச்சிறுபாக்கம் திருஞானசம்பந்தர் பாடல் பெற்ற தலம். நான் அடிக்கடி அக் கோவிலுக்குச் செல்வேன்; அப்படியே இராசமாணிக்கம் வீட்டுக்கும் போவதுண்டு. அவர், நண்பர் முறையில் அணுக்கமானார்; பிற்காலத்தில் அவர் சென்னைக் கொண்டித்தோப்பில் 'சமரச சுத்த சன்மார்க்க சங்க'த்தின் தலைவராயிருந்து 'அருட்பா'ப் பதிப்பிட்டுப் பின் காலமாய் விட்டார்.

இராசமாணிக்கம் எப்போதும் ஓவியக் கலையே நாட்டமாயிருப்பார்; அதில், அவர் வருவாய் தேடிவந்தார். புனையா ஓவியத்தில் அவர் உயர்நிலைத் தேர்வு பெற்றிருந்தார். நான் எப்போதும் அடிகள் நினைவில் தமிழ் நூல்களே நாட்டமாயிருப்பேன். இராசமாணிக்கம், தாம் தமிழ் பயிலாமைபற்றி ஏதோ காரணம் கூறுவார். அவர் தொடர்பால் நான் ஓவியக் கலையிலும் முன்பே ஓரளவு பயின்று, புனையா ஓவியம் இடைநிலைத் தேர்வும் (Out Line Drawing Intermediate), அளவியல் ஓவியம் இடைநிலைத் தேர்வும் (Geometry Drawing Intermediate) கற்பனை ஓவியம் தொடக்க நிலைத் தேர்வும் என இரண்டில் முதல் வகுப்பிலும், (Design Drawing Elementary), வண்ண ஓவியம் தொடக்க நிலைத் தேர்வும் (Painting Drawing Elementary) என இரண்டில் இரண்டாவது வகுப்பிலும் தேர்ந்து ஒரு தொகுப்புத் தகுதித்தாளும் (Group Certificate) அரசிற் பெற்றிருந்தேன். பயிற்சி முடிந்து நான் சூளைம்பேட்டில் இருந்தபோது வண்ண வண்ண ஓவியங்களாற் சுற்றிலும் கரை கட்டி, வண்ணச் செய்யுட்களால் அடிகளுக்குக் கடிதம் எழுதுவதுண்டு; இளமைத் துடுக்குக்குச் சில வேளைகளில் கண் ஏது?

சைதையில் ஒவ்வொரு நாளும் அடிகளார் நூல்களை ஆராக் காதலுடன் பயின்றுவரும்போது, 'முல்லைப் பாட்டு' 'பட்டினப் பாலை' ஆராய்ச்சியுரைகள் எனக்கு மிகவும் இனிப்பாயிருந்தன.

அவற்றை அடிக்கடி படிப்பேன்; அவற்றில் 'ஓவியக் கலை' 'புலமைக் கலை' என்னும் இரண்டில் புலமைக் கலையே சிறந்தது என அடிகள் எடுத்துக் காட்டியிருந்தார். அதனால் தமிழ்ப் புலமைத் திறத்தையே நான் மேன்மேலும் பெருக்கி வந்தேன்.

பல்லாவரம் சென்றேன் :

1920ஆம் ஆண்டின் இறுதியில் ஒரு நாள், 'பல்லாவரம் செல்வதே சரி' என்று ஒரு துணிச்சல் எழுந்தது; பிற்பகல் 4 மணி இருக்கும்; பல்லாவரத்தில் அடிகளார் மாளிகைத் தோட்டத்தில் மெல்ல நுழைந்தேன்.

நல்ல காலம் போலும்! அடிகளார் தமது மாளிகையின் முன் தாழ்வாரத்தில் கட்டைச் சுவர்மேல் எதிர்முகமாகத் தனியாய் அமர்ந்திருந்தார். ஏதோ ஓய்வாகப் படித்துக்கொண்டிருந்தார். அத்தகைய அமர்த்தலான நிலையை இறுதிவரையில் அவர்கள் வாழ்க்கையில் நான் பார்த்ததே இல்லை; அடியேற்கென்றே ஒரு நாள் மட்டும் அவ்வாறு அமர்ந்திருந்தார்கள் போலும்!

அடிமேல் அடிவைத்துத் தாழ்வாரத்திற் சென்று நின்றேன்; அடிகளையே உற்றுநோக்கிக்கொண் டிருந்தேன்; உள்ளம் 'திக்' 'திக்' என்று அடித்துக்கொண்டது. திருப்பெருந்துறையிற் குருந்தமர நீழலில் வீற்றிருந்த குருதேவரை, மாணிக்கவாசகப் பெருமான் கண்டுகொண்ட முதல் நிலையில், அவர் இப்படித்தான் உள்ளம் நிலைகொள்ளாமல் தத்தளித்திருப்பாரோ!

'யார்?' என்று ஒரு கீச்சொலி அடிகளிடமிருந்து எழுந்தது. அடிகள் குரலினிமையை முன்பே கேட்டிருத்தலின், அவ்வினிமையில் ஓரளவு மகிழ்ந்து திளைத்தேன். கையுறையாக எடுத்துச்சென்ற நாரத்தம் பழம் இரண்டைச் சுவர்மேல் திருவடிக்கருகில் வைத்துத் தரையில் இருந்தமிதியடிகளையுஞ் சேர்த்துக் கீழ் விழுந்து வணங்கிக் கொண்டேன். அத் திருவடியின் இணைகளே நாளும் எனக்கு வழிபடு பொருளாயின.

எங்கிருந்து வருகிறாய்?'

'சைதாப்பேட்டையிலிருந்து' என்று திக்கித் திக்கிச் சொன்னேன்.

'என்ன செய்தி?'

"இராயப்பேட்டைப் பேரவையில் பார்த்தேன்; 'ஓங்கார விளக்கம்' கேட்டேன், இரண்டாம் நாளும் 'சைவ சமய மாட்சி' கேட்டேன்; தமிழும் சைவமும் பயில விருப்பம் பெருகிவிட்டது' என்று விட்டு விட்டுச் சொல்லி ஏதோ ஒரு சுமையை இறக்கி வைத்ததுபோல உணர்ந்தேன்; உடம்பு வியர்த்தது.

'பெயர் என்ன?'

'பாலசுந்தரம்; சைதையில் ஆசிரியர் பயிற்சியில் இருக்கிறேன்; கிழமையில் இருமுறை வரக்கூடும்.'

'இதுவரையில் என்னென்ன படித்திருக்கிறாய்?'

எனக்கு ஓரளவு துணிவு உண்டாயிற்று; என்றாலும், எங்கே ஏதாவது கேள்விகள் கேட்டு விடுவார்களோ என்று அச்சமும் எழுந்தது; இனிமேல் என்ன செய்ய முடியும்? எப்படியிருந்தாலும் சொல்லித்தானே ஆகவேண்டும்?

"மதுராந்தகத்தில் பள்ளித் தமிழாசிரியர் குமரகுரு செட்டியார்; அவரிடம் பதினெண் கீழ்க்கணக்குகள் ஒவ்வோரளவு படித்ததுண்டு; வீட்டில் நானே பெரும்பாலும் படித்துக்கொண்டேன்; சென்னையில் மயிலை சிவ. முத்துக்குமாரசாமி முதலியாரிடம் இரண்டு மாதங்கள் 'திருமுருகாற்றுப்படை'யில் ஒரு பகுதி படித்து வந்தேன்; அடிகளைப் பார்த்ததுமுதல் வேறு நினைவு ஓடவில்லை; அடிகள் நூல்களையே பார்த்து வருகிறேன்.'

'இலக்கணப் பயிற்சி?"

'தனியாக எதுவும் பாடங்கேட்டதில்லை.'

'ஆங்கிலம்?'

'சில தொடர்கள் தெரியும்.'

'உணவு எப்படி?'

"சைதையில் உணவகத்தில் உண்கிறேன்; பயிற்சிக்குச் சிறு ஊதியம் உண்டு; தந்தையார் ஊர்க் கணக்கர்; அவரால் என்னை இங்கே சேர்க்கமட்டும் முடிந்தது; அடிகளைக் காணும் நற்பேறும் அவரால் கிடைத்ததென்றுதான் சொல்லவேண்டும்; தாயார் மாணிக்கம்மாள்; இருவரும் சிவநேயர்கள்; திருக்கழுக்குன்றத்து இறைவரையே வழுத்துவார்கள்; எந்நேரமும் என் தந்தையார் 'வேதகிரி நாதா', 'வேதகிரி நாதா' என்றே சொல்லிக்கொண்டிருப்பார். எனக்குத் தமக்கை ஒருவரும் தம்பி ஒருவரும் தங்கை ஒருவரும் உண்டு. மரக்கறியே உண்டு பழக்கம்."

'பயிற்சிப் பாடங்களில் தேர்ச்சிபெற வேண்டாமா? இங்கும் வந்து கொண்டிருந்தால் எப்படி ?'

'அவை எளிமையாயிருக்கின்றன; வகுப்பிற் கேட்பதே போதும்.'

'ஒரு திங்கட்கிழமை மாலையில் வா; நன்னூல் தொடங்கலாம்.'

எனக்கு உள்ளூர ஒரே மகிழ்ச்சி; தலை கால் தெரியவில்லை; முடவனுக்குக் கொம்புத்தேன் கிடைத்தால், வறியவனுக்குப் பெரும் புதையல் அகப்பட்டால், குருடனுக்குத் திடுமெனப் பார்வை தெரிந்தால், காட்டில் வழிதெரியாமல் அலைகின்றவனுக்கு ஒருவர் எதிர்ப்பட்டு வழிகாட்டினால், கடலில் கரை காணாமல் தத்தளிப்பவனுக்கு ஒரு மரக்கலம் அருகிலுற்றால் எப்படி யிருக்கும்! திகைப்புடன் சிறிது பொழுது அங்கேயே நின்றுகொண்டிருந்தேன்.

இதற்குள் உள்ளேயிருந்து அம்மையார் வந்தார்கள்.

'யார் சாமி ?'

"பாடங் கேட்கவேண்டுமாம்; சைதையிலிருப்பதனால் கிழமை தோறும் வரமுடியுமாம்; சைவப் பிள்ளை; அடக்கமிருக்கிறது; அறிவும் இருக்கிறது; எளிய குடும்பம்; 'உரைகோளாளன்' என்று நன்னூலில் சொல்லுவார்கள்; அந்த வகையில் அமையலாம்; நம் திருக்கழுக்குன்றத்துப் பெருமானே தெய்வமாம்."

என் உருகிய தோற்றத்தைக் கண்டு அம்மையார்,

'நன்னூல் படிப்பியா? நிலையா இருப்பியா?' என்று பேரன்பு பெருகக் கேட்டார்கள். ஒன்றும் சொல்ல வாய் எழவில்லை; ஊமைபோல் அடிகளைப் பார்த்தேன்.

இருவரும்,

'பால் ஏதாவது வேண்டுமா?' என்று கேட்டு என்னை ஒரு வகையாக அந் நினைவிலிருந்து எழுப்பினர்; கொண்டு வந்த பின், அம்மை அடிகளின் 'அருளமுது' எனக் கருதிச் சிறிது பருகினேன்.

அம்மையப்பராகிய அவர்கள் திருமுன் ஐந்துமணிவரையில் இருந்துவிட்டு விடை பெற்றுக்கொண்டேன்.

சைதை வந்ததும் நடந்தனவெல்லாம் அன்பர் குப்புசாமியிடமும் நண்பர் இராசமாணிக்கத்திடமும் ஆராமையாய்ச் சொன்னேன்; 'பரவாயில்லையே' என்று பாராட்டினார்கள்; 'என்னிடம் ஒரு பேச்சு சொல்லக்கூடாதா? நானும் வந்திருப்பேனே' என்று குப்புசாமி குறைப்பட்டார். இராயப் பேட்டையில் அவர் அடிகளாரைக் காட்டியுதவிய தனிப்பேருதவியை, அப்பரடிகளுக்குத் திருவாய்மூரில் ஆண்டவனது அருளுருவைத் திருஞான சம்பந்தர் காட்டியருளிய தனிப் பேருதவிக்கு ஒப்பாகவே நாளும் நினைந்து நெஞ்சம் நெகிழ்ந்து வருகின்றேன்.

மறுவாரமே திங்கட்கிழமை ஒரு விடுமுறை வந்தது; பல்லாவரம் சென்று அடிகளை வணங்கி, 'நன்னூல்' பாடங் கேட்கத் தொடங்கி விட்டேன். என் வாழ்க்கை மலரத் தொடங்கியது.

பயின்ற நூல்கள் :

'நளவெண்பா'வை நீயே படித்துவா; ஐயங்கள் இருந்தால் கேட்டுக்கொள்'

என்று அடிகள் கூறினார்கள்; எனக்கு ஐயம் எதுவும் அப்போது தோன்றவில்லை; நளவெண்பாவின் சொற்சுவை பொருட் சுவைகளில் நன்கு திளைத்தேன்; செய்யுட் சிறப்புகளைப்பற்றி அடி-

களுடன் அவ்வப்போதும் உரையாடி மகிழ்வேன்; மேன்மேலும் நலங் காண்பேன்; அடிகள்பால் எழுந்த அன்பு, எனக்கு எல்லாம் விளக்கஞ் செய்துகொண்டிருந்தது!

'நன்னூல்' படிப்பதற்குள் 'நளவெண்பா' 'நைடதம்' 'பெரிய புராணம்' 'திருவிளையாடல்' முடித்தேன்; 'சிலப்பதிகாரம் படிக்கலாம்' என்றார்கள்; அடிகள் தெரிவித்தபடி, சென்னைச் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்துக்குச் சென்று ஒரு நூல் விலைக்கு வாங்கினேன்; அங்கேதான் எப்போதும் எல்லாப் பதிப்புக்களும் தட்டாமற் கிடைக்கும். அடிகளாரிடம் கொடுத்து வணங்கி அவர்கள் ஆசிகூறப் பெற்றுக்கொண்டேன்.

சைதைப் பயிற்சி முடிந்தது; என் ஊர் அருகில் எண்டத்தூர் நகரில் சில மாதம் ஆசிரியராயிருந்து, பின்பு சூணம்பேடு குறுநில மன்னர் அருணசல முதலியார் அழைப்பின்மேல் அவ்வூர் சென்று அவர் உயர்தொடக்கப் பள்ளியில் தலைமை யாசிரியராய் அமர்ந்தேன்; அந்த ஊர் என் ஊர்க்கு 16-கல் தொலைவில் இருக்கிறது;

சூணம்பேடு அருணசல முதலியார் செங்கை மாவட்டத்தில் 40-ஊர்களுக்குமேல் அப்போது உரிமை பெற்று விளங்கிய பெருநிலக்கிழார்; குருகுலத்துக்கு வந்திருக்கிறார்; குருகுலம் பற்றி அடிக்கடி உசாவுவார்; மதுரை பி. டி. இராசன், சேயூர் வி. கே. இராமசாமி முதலியார் முதலியோர்க்கு உறவினர்.

இலக்கணத்தில் தொல்காப்பியமும் இலக்கியத்தில் சிலப்பதிகாரமும் உரையுடன் பயிற்சிக்கு எடுத்துக்கொண்டேன்; வரிவிடாமற் பயின்றேன்; தொல்காப்பியம் முடிவதற்குள் சங்க இலக்கியங்கள் பலவும் பயில நேர்ந்தது.

விடுமுறைக் காலங்கள் :

அதுமுதல் விடுமுறைக் காலங்களிற் பல்லாவரம் சென்று வருவது வழக்கமாயிற்று. கிழமைதோறும் அடிகளைக் கண்டு வணங்கிக்கொண்டிருந்த எனக்கு, இப்போது இரண்டு மூன்று திங்களுக்கொருமுறை பார்ப்பதென்பது மிகப் பெரிய இடையீடாய் இருந்தது. மூன்று நான்கு நாள் தொடர்ந்து 'அரசு விடுமுறை'

'நன்னாள் விடுமுறை'கள் கிடைத்தாலும், பல்லாவரம் சென்று வருவேன். அடிகளைப் பார்க்காத நாளெல்லாம் எனக்குப் பிறவாத நாளாகவே தோன்றும். என் மனநிலையோடு "பேசாத நாளெல்லாம் பிறவா நாளே" என்று ஓதிய அப்பர் மன நிலையையும் ஒப்ப வைத்து எண்ணிப் பார்த்தால், சிறிதும் வேறுபாடு தோன்றாது!

கூனம்பேட்டில் இருந்தபோது, அதற்கு அருகில் இருக்கும் மரக்காணத்திற்கு நான் அடிக்கடி சென்று வருவதுண்டு. சிங்காரவேல் முதலியார் என்னும் குறுநில மன்னர் ஒருவர் அங்கிருந்தார். அவர் இளவல் கணபதி முதலியார்; இருவரும் சிவநேயச் செல்வர்கள்; சோமசுந்தர நாயகர் அக் குடும்பத்திற் சில நாட்கள் தங்கியிருக்கிறார்; நாயகர் நூல்களும் அடிகளார் நூல்களும் அங்கு இருக்கும்; தமிழ் சைவக் காதலால் எனக்கும் அக் குடும்பத்துக்கும் தொடர்பு உண்டாயிற்று; நெருங்கிய பழக்கமும் ஏற்பட்டது. மூத்தவர் இல்லத்தில் தங்குவது வழக்கம்; நள்ளிரவு 1-மணி வரையிற்கூடச் 'சித்தாந்தம்' பற்றியும் 'தமிழ்மொழி' பற்றியும் நாங்கள் பேசிக்கொண்டிருப்போம். அடிகளார் நூல்களை எழுத்தெண்ணிப் படித்துக்கொண்டிருப்போம்.

சிங்காரவேல் முதலியார் எஞ்ஞான்றும் திருநீறு அணிந்து பொற் சங்கிலி பின்னிய சிவமணி பூண்டு சிவப்பொலிவுடன் பொன் மேனி வாய்ந்தவராய்ப் பார்க்க அழகாயிருப்பார். சிவபூசைச் செல்வர்! நாயன்மார் திருநாட்களைக் கொண்டாடுவார்; தம் ஊரவராகிய தேசிகர் ஒருவரை வருவித்து, நாயனாராகவே அவரைக் கருதி வலம்வந்து வீழ்ந்து வணங்கித் திருநீறு பெற்றுக் கொள்வார்; தாம் குறுநில மன்னர் என்னும் நினைவு இந் நேரங்களில் இவர்க்கு இருப்பதில்லை.

கணபதி முதலியார் கருமை பூத்த அழகியர்; இவரும் திருநீற்றுக் கோலமும் சிவமணி மாலையும் அணிந்து சைவக் கோலத்தில் விளங்குவார்; இவரிடம் சிறந்த நூல்நிலையம் இருந்தது; அதற்காகத் தனி இல்லம் அமைத்திருந்தார்; நூல்களின் பக்கங்களில் தாம் படித்து வந்ததன் அடையாளமாகக் கோடுகளும் குறிப்புக்களும் இட்டு வைப்பார்; கொடையாளி; சொல் மாறாதவர் பாம்பனடிகளிடம் பேரன்பு வாய்ந்தவர்; உப்பளங்கள் உடையவர்

மூத்தவர் சித்தாந்தச் செல்வரென்றால், இவர் சிவநெறிச் செல்வ ராவர்.

சிங்காரவேல் முதலியார்க்கு இடைக்கழி நாட்டில் சில ஊர்கள் சொந்தமாயிருந்தன. அங்கே தென்னை பனை மா பலா வாழை முந்திரி முதலிய மரங்கள் தோப்புகள் தோட்டங்கள் மிகுதி; நான் விடுமுறையிற் பல்லாவரம் செல்லும்போதெல்லாம் அடிகளுக்குப் பயன்படும்படி, முதலியார், மிகச் சிறந்த பெரிய பலாப் பழங்கள் வருவித்துக் கொடுப்பார்; நான் ஆராமையாய் எடுத்துச் செல்வேன்; பலா நுணா மரங்களில் மிதியடிகளும் செய்து எடுத்துக்கொள்வ துண்டு.

செங்கற்பட்டு மாவட்டத்தில் மதுராந்தகம் வட்டத்தில் அதன் தென்கிழக்குக் கோடியில் நாளும் 'நாடு' என்னும் பெயரில் வழங்கி வருவது இடைக்கழி நாடு; இடையே கழியை யுடைய நாடு இது!

கடற்கரையோரத்தில் மணல் வெளிகளும், சோலைகளும் சூழ்ந்து நிறைந்த அழகான நெய்தல் நிலம்; இந்த நாடு 24-ஊர்கள் சேர்ந்தது; அவற்றுள் 'நல்லூர்' என்று ஓர் ஊர் உண்டு. இவ்வூர், சூணம்பேடு அருணாசல முதலியார் ஆட்சிக்கு உரியதாயிருந்தது; சங்கப் புலவராகிய நத்தத்தனார் இந் நல்லூரில் இருந்தவர்; மதுராந்தகம் வட்டத்தில் இவர் ஒருவரே சங்ககாலச் சான்றோர்; பத்துப் பாட்டில் ஓய்மானாட்டு நல்லியக் கோடன்மேற் பாடியதாக வரும் 'சிறுபாணாற்றுப் படை' இவர் இயற்றியதே. குருகுலம் இவர்க்கு இங்கே ஒருசிறு கோயிலமைத்துச் சிலையெழுப்பியிருக் கிறது. தமிழகத்தின் முன்னை முதலமைச்சர் பக்தவச்சலம் அவர்கள் இக் கோயிலின் திறப்புவிழாவுக்குத் தலைமை ஏற்றுச் சிறப்பித்தார்கள். ஆண்டுதோறும் தமிழ்ப் புலவர்கள் இங்கே ஒருங்கு கூடித் தமிழ் விழாவும் இலக்கிய ஆராய்ச்சிகளும் நிகழக் குருகுலம் ஏற்பாடு செய்திருக்கிறது.

தனிப் பெருங் காதல் :

பல்லாவரத்திற்குச் செல்லுங் காலங்களில், என் பெரிய தாயார் இல்லத்தில் நான் உணவு கொள்வது வழக்கம்; அவர்கள்

வைணவர்கள்; அவ்வுணர்ச்சி மிகுதியால் சைவர்களாகிய எங்களோடு அவ்வளவாகத் தொடர்பு வைத்துக் கொள்வதில்லை. இவ் வேறுபாடுகளிலெல்லாம் நான் கருத்திருத்துவதில்லை;

அடிகளார் தொடர்பு ஒன்றே எனக்கு உயிர்; வேறு எதுவும் உயர்வாகத் தோற்றுவதில்லை; பெரிய செல்வர்கள் பெரிய கல்வி யாளர்கள் யாரைப் பார்க்க நேர்ந்தாலும், பெரிய முயற்சிகள் பெரிய பதவிகள் தொழில்கள் நிகழ்ச்சிகள் எவையே யாயினும், எல்லாரை யும்விட எல்லாவற்றையும்விட, அடிகள் சேர்க்கையே எனக்குப் பெரி தாகத் தோற்றும்; 'அடிகளார் மாணவன்' என்பது இணையற்ற பெரிய நிலை என்று அப் பேறு கருதிச் செம்மாந்து செம்மாந்து மகிழ்வேன்.

"கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு, குடிகெடினும்
நள்ளேன் நினதடியாரொ டல்லால், நரகம்புகினும்
எள்ளேன் நின்திருவருளாலே இருக்கப்பெறின், இறைவா
உள்ளேன் பிறதெய்வம் உன்னையல்லால் எங்கள் உத்தமனே!"

என்னுந் திருவாசகத்தின் கருத்து எதுவோ, அதுவே எனது நிலை!

"ஊரும் சதமல்ல, உற்றார் சதமல்ல உற்றுப்பெற்ற
பேரும் சதமல்ல, பெண்டிர் சதமல்ல, பிள்ளைகளும்
சீரும் சதமல்ல, செல்வம் சதமல்ல தேசத்திலே
யாரும் சதமல்ல நின்தாள் சதம்கச்சி யேகம்பனே"

என்னும் பட்டினத்தார் பேருணர்வும் (திருவேகம்ப மாலை, 12) என் உணர்வும் ஒன்றே!

அடிகள்மாட்டுச் செய்யும் அன்பொன்றே எனக்கு உயிர்ப்பு! அன்றும் இன்றும் ஒரே நிலைதான்! இதுவே, தமிழ்க் காதல், சிவநெறிக் காதல், பொதுமறைக் காதல், பொதுநிலைக் காதல், குருகுலக் காதல், கழுகுபதிக் காதல்! எல்லாம் ஒரே தெய்வக் காதலாக எனக்கு அமைந்துவிட்டன! வேறு உணர்ச்சி யொன்றும் எனக்கு எப்போதும் ஏற்பட்டதில்லை. இவ்வுலகில் என்னை ஆட்கொண்டு வாழ்வித்துவரும் எல்லாம் வல்ல முழு முதற்சிவம், இங்ஙனமெல்லாம் துலங்கி வருகின்றது!

அடிகள் இன்று இவ்வுலகில் இல்லை; 15-9-1950இல் மறைந்து விட்டார்கள்; ஆயினும், எனக்கு அவர்கள் காதல் ஒன்றே அருள் ஒளியாய் நாளும் வட்டமிட்டுக் கொண்டிருக்கிறது. திருக்கழுக்குன்றத்தில், திருவருட் குறிப்புப்படி, மாணிக்கவாசகப் பெருமானால் குருபீடமாக வைக்கப்பட்ட முழுமுதற் சிவத்தின் திருவடிகளே எனக்கு இவ்வுலகில், ஆசிரிய அடிகளாய்த் திருவுருக்கொண்டு எழுந்தருளினமையால், முதலில் வெள்ளியாற் செய்து திருவடிகளை வழிபட்டு வந்தேன்; பின்பு அவற்றை வேதாசலம் என்னும் திருக்கழுக்குன்றப் பெம்மான் திருப் பெயரையே உடைய சென்னைத் 'தொண்டர்மணி' வேதாசல செட்டியார் என்பவர் தாமே முன்வந்து, பொன்னாற் செய்து வழங்கினார்;

என்ன வியப்பு! அடிகள் பெயரும் 'வேதாசலம்', திருவடிகள் தந்து வழிபாடு செய்க என்றவர் பெயரும் வேதா சலம்! திருக்கழுக்குன்றத்துப் பெருமானால் தோன்றியவர் அடிகள், அத் தலம் குருபீடத் திருவடித் தலமாதலின், அடி யேற்கும், அது குருவை அமைத்தருளியது! என் பெற்றோர்க்கு வேதமலைப் பெருமானே இறைவன்; அவர் தவம் பலித்தது!

தென்னாட்டிற் பாடல் பெற்ற தலங்களிலெல்லாம் அத் திரு வடிகள் வழிபடப்பட்டு வந்தன. அருவத்துக்குத் திருச்சிற்றம்பல வெளியும், அருவுருவத்துக்குச் சிவலிங்கத் திருமேனியும், உருவத் துக்கு இத் திருவடியிணையும் என் வழிபாட்டுக்கு நாளும் உரியவா யிருக்கின்றன. ஆசிரியரடிகளிடம் ஒருநாள், நான் அவர் வழி பாட்டறையிற் சென்று திருநோக்கம் பெற்றுக்கொண்டேன்.

1920ஆம் ஆண்டில் என் 15வது வயதில் ஏற்பட்ட தமிழ் நெறிக் காதலால் என் வாழ்வு நாளும் தளிர்த்து வருகிறது. 1936ஆம் ஆண்டு வரையில், அஃதாவது என் 32ஆம் வயது வரையில் 16 ஆண்டுகள் அடிகளிடம் தொடர்பாகத் தமிழ் பயிலும் பேறு கிடைத்தது; என் வாழ்க்கையில் இது இரண்டாம் பகுதி; முதல் 16 ஆண்டுகள் என் பெற்றோர்பாற் பழகிய பகுதி! அடுத்த 16 ஆண்டுகள் அடிகள் நூல்களிலும், நூல் நடைகளிலும் கருத்துக்களிலும் இயக்கங்களிலும் திளைத்து விளையாடிய மூன்றும்

பகுதி; அதற்கும் அடுத்த 16 ஆண்டுகள் அடிகள் நெறி தழுவிக் குருகுலம் அமைத்துச். 'சமய விசேட நிருவாண ஆசாரியாபி டேகம்' நடந்து குருகுலத் திருமடத்தில் திருக்குறள் பீடம் ஏறித் திருக்குறட் செங்கோல் ஏற்றுக்கொண்ட நான்காம் பகுதி! எனக்கு இப்போது வயது 72; இந்த ஐந்தாம் பகுதி நாளும் அருளில் திளைத்திருக்கும் இன்ப அமைதிப் பகுதி!

இவையெல்லாவற்றுக்கும் மூலமாய், மிகச் சிறந்த ஊற்ற மாய், என் வாழ்க்கையில் அமைந்தது, அடிகளார்மாட்டு இயற்கை யாக எழுந்த தனிப் பெருந் தெய்வத் தமிழ் நெறிக் காதலே யாகும்! இக் காதலால், வாழ்க்கை, மணங் கூடியது; மணமற்ற வெற்றரும்பு, நாற்புறமும் புலமை நறுமணங் கமழ்ந்து, நூலெழுத் துக்களும் விரிவுரைகளுமாகிய செந்தேனும் ஒழுக்கிற்று. எழுத் துக்குச் சென்னைச் சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகமும், பேச் சுக்குச் சென்னைச் சிவனடியார் திருக்கூட்டமும், அமைதிக்குக் குருகுலத் திருக்குறள் பீடமும் ஆதரவாயிருந்து உதவி வருகின்றன!

அன்புப் படிப்பு :

ஆசிரியர் மாணவர் படிப்பு என்பது, ஆசிரியரிடம் மாணவர் கொள்ளும் அன்பு என்பதே எனது தெளிந்த முடிபு.

ஆசிரியர் பாடம் சொல்லும் முறையிலோ, மாணவர் படித்துக்கொள்ளும் திறத்திலோ, புலமை அமைவது ஒரு பங்கானால், ஆசிரியர் மாணவரிடையே எழுகின்ற உண்மை யன்பே புலமையைப் பல மடங்கு நிறைத்துவிடும் பெற்றியதாய் இருக்கிறது; ஒரு கோடி எடுத்துக் காட்டினால், ஒரு சொல் நிறுத்துச் சொன்னால் போதும், அன்பிருந்தால் ஒன்றுக்குப் பத்தாக எல்லாம் தாமே உள்ளொளியாய் விளங்கிவரும்.

'ஒருமொழியே பலமொழிக்கும் இடங்கொடுக்கும், அந்த
ஒருமொழியே மலஒழிக்கும் ஒழிக்கும், என மொழிந்த
குருமொழியே மலையிலக்கு; மற்றைமொழி யெல்லாம்
கோடின்றி வட்டாடல் கொள்வதொக்கும் கண்டாய்;"
—(தாயுமான. கிளைவொன்று, உ)

ஒருவரே ஆசிரியர் :

ஒரு பிறப்புக்குப் பெற்ரோர் ஒருவரே அமைவது இயல்பு! அப்படியே எனக்கு ஆசிரியரும் ஒருவர்! ஆசிரியர் என்று என் உள்ளத்தில் எழுந்த உணர்ச்சிக்கு அடிகள் ஒருவரே உரியவரானர். திருக்கோவையார் போன்ற அகப்பொருள் நூல்களில் ஒருவனே தோழன்; ஆயத்தார் பலர் இருப்பினும் ஒருத்தியே தோழி!

> "உயிர்ஒன்று உளமும் ஒன்று ஒன்றே சிறப்பு இவட்கு என்னொடு என்னப்
> பயில்கின்ற சென்று செவியுற நீள்படைக் கண்கள் விண்வாய்ச்
> செயிர்ஒன்று முப்புரம் செற்றவன் தில்லைச்சிற் றம்பலத்துப்
> பயில்கின்ற கூத்தன் அருளென லாகும் பணிமொழிக்கே."

அம்பலவன் அருளே இவ்வாறு அமைவது. இதனை அருளிச் செய்த மாணிக்கவாசகர்க்கும் ஒருவரே குரு!

சிலர்க்கு நூலுக்கோர் ஆசிரியர் இருப்பர்; அந் நூலைப் பாடஞ் சொல்வதில் அவரே வல்லவர் என்பது காரணம்! எனக்கு அப்படி யெல்லாம் இல்லை; எல்லா வகையான நூல்களிலும் தெளிவுபெற அடிகள் ஒருவரே வல்லவராய்ச் சுடர்வீசி விளங்கினர்.

சிலர்க்குப் போதகாசிரியர் வேறு; அவர் நூலாசிரியராய் அமைவது அருமை; உரையாசிரியராய் ஓங்குவது இன்னும் அருமை; பதிப்பாசிரியர் இதழாசிரியர் விரிவுரையாசிரியராய் விளங்குவது அதனினும் அருமை! மேலும், சமயாசிரியர் ஞானசிரியர் முதலிய நிலைகளிலெல்லாம் திகழ்வதென்றால் அஃது எத்துணை அருமை! எனக்கு எல்லா ஆசிரியருமாக அடிகளே அமைந்துவிட்டார்கள்!

ஆசிரிய நிலைகள் மட்டும் இங்ஙனமல்ல; மாணவ நிலைகளும் பலவகை; கல்லூரி மாணவர், தனிமையிற் பயிலும் மாணவர், ஐயங்கேட்கும் மாணவர், ஆராய்ச்சி மாணவர், கொள்கை மாணவர், தவம் பழகு மாணவர், நட்பாடு மாணவர், மதிப்புக் கருது மாணவர், பின்பற்று மாணவர், பொதுநிலை மாணவர், பணிவிடை மாணவர், தொண்டு மாணவர் என நிலைகள் பல. அடிகளுக்குத் தமிழக முழுதும் தமிழ் வழங்கு நாடுகளிலெல்லாம் இந் நிலைகளுக்

குரிய மாணவர்கள் எத்தனையோ பலர் வாய்த்திருந்தனர். இருக்கின்றனர்! இவ்வெல்லா வகையான மாணவ நிலைகளும் நான் ஒருங்கே உடையவனானேன்.

'கல்லூரி மாணவர்' என்னும் நிலை மட்டும் எனக்கு வாய்க்கவில்லை; அடிகள் கல்லூரியிலிருந்து விலகியபோது (10-4-1911) சரியாக எனக்கு வயது 7; நான் பிறந்தது 10-4-1904 இல்! கல்லூரி நூல்களான "முல்லைப்பாட்டு" "பட்டினப்பாலை" ஆராய்ச்சியுரைகளை அழுந்திப் பயின்ற காரணத்தால் அவ்வகைப் பேற்றையும் நான் ஒருவகையில் பெற்றுக்கொண்டேன்.

அடிகளே ஒருகால் மலைக்கொழுந்து பிள்ளை என்னும் என் உறவினரிடம் எனக்குத் தெரியாமல் என்னைப் பற்றிப் பேசியபோது, என் திறனறிவு கல்லூரிக் கல்விக்குச் சளைத்ததன்று! அது இயற்கையானது! என்று சொன்னதை அவர் பலரிடமும் பலகாலும் சொல்லி இன்புற்று வந்தார்.

தமிழிலும் இசையிலும் மிகக் கூரிய நுட்ப ஆராய்ச்சிகள் செய்த கு. கோதண்டபாணிபிள்ளை B.A., ஒருகால் பல்லாவரம் போந்து அடிகளாரைக் கண்டு அளவளாவிய போதும் அடிகள் இவ்வியல்பைப் புலப்படுத்தினார்.

ஆதலின், அடியேன் கல்லூரி மாணவப் பேற்றையும் ஓரளவு பெற்றவன் எனலாம்.

ஆசிரியர் திறத்தில் எனக்குள்ள அன்புக்கு ஓர் அடையாளம் கூறவேண்டுமானால், ஒன்று சொல்லலாம்.

"எழுதுங்கால் கோல்காணாக் கண்ணேபோல் கொண்கன்
பழிகாணேன் கண்ட விடத்து"

என்பது.

"எனக்கும் உனக்கும் இசைந்த பொருத்தம்
என்ன பொருத்தமோ
இந்தப் பொருத்தம் உலகில் பிறருக்கு
எய்தும் பொருத்தமோ!"

என்னும் இராமலிங்க அடிகளின் திருவருட்பா அடிகளே அடிக்கடி என் நினைவுக்கு வருகின்றன.

மாணவர் பன்னிருவர் :

இனி, எனக்கு 27 ஆவது அகவை நடந்துகொண்டிருந்தபோது, அதற்கு முன்பே மெய்கண்ட நூல் 14ம் ஓரளவு பயின்றிருந்தே னாயினும் அடிகளிடம் ‘சிவஞானபோதம்’ பாடம் கேட்டுக்கொண்ட போதுதான், ஏதோ ஒரு தனி உலகத்தில் நிலவுவதுபோல் உள்ளம் களிதுளும்பியது. ஆலந்தூர் சோமசுந்தர முதலியார் முதலிய பதினொருவர் என்னுடன் அமர்ந்து சிவஞானபோத மெய்ப் பொருளைப் பாடம் கேட்டனர். அப்போது சித்தாந்த நூல் மாணவர் என்னுடன் பன்னிருவர்! சிவஞானபோதம பன்னிரண்டு நூற்பாக்கள் ; நாங்களும் பன்னிருவர் !

மாணவர் பன்னிருவர் என்பது, அடிகளுக்கு ஒரு பெரிய நோக்கத்தை எழுப்பியது. ‘தொல்காப்பியனாருடன் ஒரு சாலை மாணவராகப் பனம்பாரனார் முதலியோர் பயின்றனர் எனவும், தொல்காப்பியருடன் சேர்த்து அம் மாணவர் பன்னிருவராய் விளங்கினர் எனவுங் கூறுப. அங்ஙனம் ‘இக் காலத்திலும் பன்னிரு மாணவர்க்காவது உண்டி உடை உறையுள் கொடுத்துத் தமிழும் தமிழ்நெறியும் நாளும் கற்பிப்பதற்கு நிலையான அமைப்பு இன்றி யமையாதது’ என்று தெரிவித்தார்கள். அடிகள் திருவுள்ளத் தெழுந்த அக் கருத்து நிறைவேறும் வகையில், ‘குருகுலம்’ இப் போது நடந்து வருகிறது; குருகுலத்தில் ‘புலவர் கல்லூரி’யும் இருக்கிறது! அவர்களுக்குத் தனி உணவகமும் உண்டு.

பாட முறை :

அடிகளார் பாடம் சொல்லுவது விரிவாய் இராது; இன்றி யமையாத இடங்களில் மட்டும் சுருக்கமாகச் சிறப்புரை கூறுவார். அதுவே பளிச்சென்று நூற்பா முழுவதையும் விளக்கி விடும் பேரொளியாய் இருக்கும். அடிகள், இலக்கணக் குறிப்புக்களும் தொட்டுக் காட்டுவார்.

சிவஞான முனிவர் சிற்றுரை பேருரைகள் முதன்மையாகக் கொள்ளப்படும்; மற்றவர் உரைகளும் இடையிடையே வரும்;

முதலில் கருத்துரை, அதன்பின் முன் பின் நூற்பாக்களின் தொடர்ச்சி, பொழிப்புரை, பதவுரைச் சிக்கல் தீர்வு, இலக்கணக்

குறிப்பு, தருக்கத் திறம், தமிழ் மொழியின் ஆற்றல், மற்ற மொழிகளுடன் ஒப்புமை, சைவ சித்தாந்தச் சிறப்பு, உலக சமயங்களின் ஒற்றுமை வேற்றுமை, முற்கால பிற்கால தற்கால அறிஞர் சிலரின் ஆழ்ந்த ஆராய்ச்சிகள், ஆராய்ச்சியின்மைகள், பலவும் தெரிவிக்கப்படும்.

ஆலந்தூர் சோமசுந்தரர் தக்க அறிஞர்; பாடங் கேட்டவர் பன்னிருவரில் மூத்தவர். பலர்க்கும் ஊக்கந் தந்து அழைத்து வருவார்; எப்போதும் அவரைச் சூழ்ந்து ஒரு தமிழாராய்ச்சிக் குழு இருக்கும்; பிற்காலத்தில் 1932–34-ல் அவருடன் அக் குழுவினர், 'சிலப்பதிகாரம்' 'மணிமேகலை' முதலிய பழைய செந்தமிழ்க் காப்பியங்களை என்னிடம் பாடங்கேட்டுக் கொண்டனர்; தொல்காப்பிய ஆராய்ச்சிகள் பற்றிச் சோமசுந்தரர் அடிக்கடி என்னை உசாவியபடி இருப்பார். தெரிந்ததைச் சொல்லி வருவேன்.

என்னிடம் பாடங்கேட்ட அவர் குழுவினருள் ஒருவர் சி. என். சிங்காரவேல் முதலியார் எம்.ஏ. என்பவர்; இப்போது அவர் சைவ சித்தாந்த மகாசமாசத்தின் தலைவராய்த் திகழ்கிறார். மற்றொருவர் திருஞானசம்பந்தம் எம்.ஏ. அவர் இப்போது அஞ்சல் அலுவலகத் தலைவருள் ஒருவராய் விளங்குகிறார்.

சிவஞானபோத பாடத்தில் அடிகள் ஆராய்ச்சிகளை அவரே மேன்மேலுங் கிளறிவிடுவார்; கிழமைதோறும் பாடங்கேட்டு வருவதில், இரண்டு திங்களுக்கு ஒரு நூற்பா முடிவதே அருமை; நூற்பா விரைவில் முடிவதைப் பற்றி எங்களுக்கும் எண்ணமில்லை; ஆராய்ச்சிகளெல்லாம் பெருகக் கிடைக்கவேண்டுமென்பதே எங்கள் வேட்கை! அடிகளார்க்கும் அக் கருத்துண்டு; செய்வன திருந்தச் செய்வதே அவர்கள் இயல்பு!

இலக்கியப் பாடம் கேட்கும்போது, அன்றும் முன்பும் படித்த இலக்கணக் குறிப்புக்களைப் பொருத்திப் பார்க்க வைத்து இலக்கண அமைதிகளைத் தெளிவிப்பார். இலக்கணம் படிக்கும்போதும் இலக்கியங்களை இயைத்துக் காட்டுவார்.

கேள்விகள் கேட்டுச் சிக்கல் தீர்ந்தால்தான் மேற்பாடம் நடைபெறும்; இன்றேல் அன்று பாடம் கண்டிப்பாய் நடைபெறாது;

அடிகள் மிகவுங் கண்டிப்பானவர்; அதிலும் பாடமுகத்திற் சொல்லவேண்டுவதே யில்லை; தூய்மையும் அவர்களெதிரில் மிக இன்றியமையாதது.

'சிவஞானபோத' மாணவர் பன்னிருவரில் ஏதோ காரணத்தால் ஒருவர் வரத் தவறினாலும் அன்று பாடம் நிறுத்தப்பட்டு விடும்; வேறு காரணங்களிருந்தாலும் நிறுத்தும்போது இன்சொல் கூறியே நிறுத்துவார்; மாணவர் பல இடங்களிலிருந்தும் வருபவராயினும் வழிவந்த பயணத் துயரம் அவர்கட்குத் தோன்றாது. அடிகளைப் பார்த்துக்கொண்டிருப்பதே அவர்கள் உள்ளத்துக்குப் பேரமைதி! பேரினிமை!

மேலும் அடிகள், சிவஞானபோத மாணவர்களென்றால், ஒளி வடிவினராகவே மதித்து அவர்கள் வரவில் ஒரு தனி மகிழ்ச்சி கொள்வார்; பெருக அன்பு பாராட்டுவார்: 'ஒண் புதல்வர்'களாகவே கருதுவார்: பானகம் பருகக் கொடுப்பார்; 'உடையார்முன் ஏக்கற்றார்'போல முதலில் மாணவர் வருவர்; பின்பு, தாயன்பில் திளைப்பதுபோல உள்ளுருகி இன்புறுவர்; பாடங்களிற் கண்டிப்பாயிருந்தாலும், கடைசியில் கற்றாவைக் கன்று பிரியமாட்டாமைபோல மாணவர் ஒவ்வொருவர் உள்ளமும் இருக்கும்; அவர்கள் ஆராமையிலிருந்து யான் இதனை அறிந்துகொள்வேன்; பாடம் நடைபெறாமல் தடைப்படுங் காலங்களில், பாடநேரம் வரையில், தமிழ்த் தொண்டு சிவத் தொண்டுகள், தமிழகத் தொண்டுகள் பலவும் பேசப்படும். பாடம் நடைபெற்றாலும் நடைபெறாவிட்டாலும், மாணவர்க்கு ஆக்கந்தான்! தெரிந்துகொண்ட அளவு திட்டப்பட்ட பின்பே மேற் கருத்துக்களைக் கூறுவார்.

ஒரு பாடலுக்கு ஒருநாள் பாடம் கேட்டாற்போதும்; ஒரு முறை விளக்கம் சொன்னால், அது பல நூல்களுக்கு உதவுவதாயிருக்கும்.

மொத்தத்தில் பாடம், பெரும்பாலும் அரை மணிநேரமே நிகழும்; மிகுதியானால் ஒரு மணி நேரத்துக்குமேல் போகாது; அதில் அடிகளார் வாய்மொழி கால்மணி நேரந்தான் கேட்கும். மாணவர், தாமே மற்றவைகளைச் சிந்தித்துக் கொள்ளவேண்டும். பாட நேரத்திற் பெரும் பகுதி மாணவர்க்குச் சிந்தனை யுழைப்புத் தருவதே

அடிகள் திறம்! அடிகள் இயற்றிய நூல்கள் பலவற்றிலும் இத் திறம் மிகுதி; கட்டுரைகளில், 'சிந்தனைக் கட்டுரைகள்' என்பதும் அவர் நூல்களுள் ஒன்று.

கட்டுரைத் திருத்தம் :

கட்டுரைகள் திருத்துவதும் இங்ஙனமே; அடிகள் சில வரிகளே திருத்திக் காட்டுவார். ஒவ்வொரு சொல்லும் பெய்யும் இடத்துக்குத் தேவைதானு என்று கவனிப்பார்; உணர்ச்சிகளையும் கருத்துக்களையும் மிகுத்துரைப்பதைப் பொதுவாக அவர் விரும்ப மாட்டார்; அளவாக இருக்கவேண்டும் என்றே அறிவுறுத்துவார். மேற்கோள்கள் மிகப் பழையனவாய் இருக்க வேண்டும்.

தமிழின் பழைமையிலும் சொற்பொருட் சுவையிலும் அடி கட்குக் கருத்து மிகுதி; சங்கத் தமிழ்த் தொடர்களென்ருல், அவற் றின் இயற்கை வெளிப்பாட்டையும் தமிழ் அழகையும் பாராட்டிப் பொன்போற் பெய்து வர இசைவார். சந்திகள் சேர்த்துக் கூட்டி எழுதுவதிற் சுவை காண்பார்; தமிழின் சிறப்பெழுத்துக்களாகிய ழ, ற, ன போன்றவை மிகுந்து வரவேண்டும் என்றும் அவை விரவி வரவேண்டும் என்றும், உரிய இடங்களில் ஆய்த எழுத்தை நழுவ விடக் கூடாது என்றும், 'ஃ' என்னும் அவ்வெழுத்தின் இன்றி யமையாமையை முன்னோர் மறவாமற் பயன்படுத்தி வந்தனர் என்றும், அத்தகைய இடங்கள் 'அஃறிணை' என்பதிற்போல இன் னின்னவை என்றும் அடிகள் திருத்திக் காட்டுவார்.

புலமைக்குரிய மாணவர், இவற்றிற் கருத்திருத்திஞல் மட்டுமே, தமிழைச் சுவைப்பவராவார் எனவும், தமிழ்றிஞர் வேறு, தமிழின் திறமறிந்து அதன் சுவையில் திளைப்பவர் வேறு எனவும் தெளிவிப்பார்.

தமிழ் மரபும், பழைய மரபும், இலக்கண அமைதிகளும் கட்டாயம் காத்துவர வேண்டும் என்பதும் அவர் கருத்து; தமிழ்ச் சுவை என்பது அவ் வகையில் துளும்பி நிற்கின்றதென்று கூறி, அச் சிறப்பிற் சிறிது நேரம் அடிகள் தேங்கி யின்புறுவதும் வழக்கம்.

செய்வினை செயப்பாட்டு வினைகளில் செய்வினையாய் வரும் எழுத்தே இயல்பானது என்றும், 'படு' 'பெறு' என்னும் விகுதிகள் துணைவினைகள் போன்றவற்றை இடம்தெரிந்து இயைக்கவேண்டும் என்றும், அடிகள் கருதுவார். 'புத்தகம்' என்பது அஃறிணையாதலால் 'கட்டப்படும்' என்று 'படு' விகுதி சேர்க்கலாம்; 'கட்டப்பெறும் என்பது பிழை' எனக் காட்டுவார்; உயர்திணைக்கானால் 'அவர் பாராட்டப்பெற்றார்' என எழுதலாம்; ஏனென்றால், பெறும் தகுதி உயர்திணைக்கே உண்டு. வருமொழி, உயிரெழுத்தோடு தொடங்கினால் 'ஓர்' எனவும், மெய்யெழுத்தோடு வந்தால் 'ஒரு' எனவும் எண் பெயர் இடவேண்டும் எனவும், உயர்திணையாயின் அதனை அடுத்தும் அஃறிணையாயின் முன்னும் இடலாம் எனவும் திருத்துவார். 'தன்' 'தான்' முதலிய சாரியைகளின் இன்றியமையாமைகளிலும் பொருத்தங்களிலும் அடிகளார் மிகவும் நோக்குடையவர்.

தொல்காப்பியர், 'இடைச் சொல்' 'உரிச்சொற்'களுக்குத் தனி இயல் படைத்தும், 'எச்சவியல்' எனத் தனி இயல் வகுத்தும் காட்டும் குறிப்புக்களைத் தழுவினால், தமிழ்ச் சுவை விஞ்சித் தோன்றும் எனவும், தமிழ் சுவைப்படும் முறைகளே இலக்கண நூல்களிற் காட்டப்படுகின்றன எனவும், ஆராமையோடு கூறி உருகுவார்.

தமிழ் வண்ணமே அடிகள் உள்ளம்; அவர் நெஞ்சைத் திறந்து நோக்கினால், தன்டமிழ் நங்கையே பேரெழிற் கோலத்துடன் எடுப்பாய் இளமை வீறித் திகழ்தலைக் காணலாம். அடிகள் தமிழ், நறுஞ்சுவைத் தமிழ்! 'தமிழ்க் கடல்' எனவும், 'தமிழ் மலை' எனவும் போற்றிப் பாராட்டுதலில் மட்டும் அடிகளார் தமிழ்த் திறங்கள் அடங்கிவிடா; தொகுப்பின் எஞ்சுமே தவிர நிறைவு பெறா; அடிகள் கருத்துக்களைப் பின்பற்றியும் அவர்கள் தமிழிற் கருத்திருத்தியும் இணங்கி அவையேயாய் இரண்டறக் கலந்து பணிபுரிதலாலேதான் ஓரளவு நிறைவு பெறக்கூடும்.

தமிழ் நான்மறைக் காலம், முச்சங்க காலம், காப்பியக் காலம், சமய காலம், புராண காலம், கலப்புக் காலம், பிற்காலம், இக்காலம் என எக்காலத்துச் சிறப்புக்களும் ஒருங்கு உருவெடுத்துத் தம் நேரின்றி விளங்கிய உலகத் தனிப் பெரும் பேராசிரியக் குரவர் அடிகளார்!

தொல்லாசிரியர் நல்லாணைகளைத், தம் ஆராய்ச்சிப் புதுமைகளால் வழுவிவிடாமற், கடைப்பிடிப்பதே அடிகட்குப் பிடிப்பு!

இங்கு இச் சுவை முறைகளை யெல்லாம் தொகுத்தெழுதுவது இன்றியமையாததேயாயினும், இக் கட்டுரை மிகவும் விரிந்து விடுமேயென்றுந் தோன்றுகின்றது.

எழுதும் எழுத்துக்களையும் அடிகள் திருத்துவதுண்டு; 'ர' என்பதைக் கால் வாங்கி 'ர' என்று எழுதியிருந்தால், அச்சில் அப்படியிருக்கிறதா என்று பார்க்கச் செய்வார். கையெழுத்து அச்சுக் கோப்பதற்கு ஏற்றபடி தனித்தனியாக எழுதவேண்டும் என்று தெளிவிப்பார். சில வரிகள் ஒருநாள் திருத்திக் காட்டினாலும், எப்போதைக்கும் அவையே உதவும்.

திருவடிக் காணிக்கை :

கட்டுரைகள் திருத்தும் அழகில் ஊறிவந்தபோது, ஆசிரியர் இயற்றிய செய்யுள் நூல் ஒன்றுக்கு அவர்கள் உவக்குமாறு ஓர் உரை எழுதி அடிகளுக்குத் திருவடிக் காணிக்கையாக வைத்து வணங்கிக்கொள்ள வேண்டும் என்று எனக்குள் ஓர் எண்ணம் எழுந்தது. அடிகளிடம் கல்வி பயின்றதன் அடையாளமாக அஃது அமைய வேண்டுமென்றும், அடிகள் எந்த அகவையில் அதனை யாத்தார்களோ அதே அகவையில் உரையும் எழுதவேண்டும் என்றும் அதற்கேற்ற புலமையை அதற்குள் பெறவேண்டும் என்றும், உள்ளம் எழுச்சிகொண்டது; அடிகளார் என்னிடம் வேறு காணிக்கையொன்றும் எப்போதும் விரும்பியதில்லை.

அடிகளிடம் கருத்தைப் புலப்படுத்தினேன்; 'திருவொற்றி முருகர் மும்மணிக் கோவை'யைக் கொடுத்து இதற்கு உரை வகுக்கலாமே என்றார்கள். பாடம் கேட்டேன்; நினைவுக் குறிப்பன்றி வேறு குறிப்பு வைத்துக் கொள்ளவில்லை. எழுதும்போது புலமையில் தெளிவுமட்டும் இருந்தது; தூய நினைவாதலின், திருவருள் என் விருப்பத்தை நிறைவேற்றி வைத்தது; 21 இல் தொடங்கி என் 23ஆம் அகவைக்குள் உரை முடிக்கும் பேறு பெற்றேன்! அடிகளுக்கு அவ்வுண்மையைத் தெரிவித்தேனுயினும், விரைவில் அதனை அடிகளிடம் சேர்த்துவிட உள்ளம் இடந்தரவில்லை. உரையில்

இரண்டோரிடங்கள் சில மேற்கோள்களைப் பார்த்தெழுதும் பொருட்டு, ஏறக்குறைய இருபது வரிகளுக்கு விளக்கம் எழுதாமல் விடப்பட்டிருந்தது. அடிகளே கேட்டபோது, 1932 இல் என் 28 ஆம் அகவையில் அப்படியே கொடுத்து விட்டேன். விடுபட்ட பகுதிகளைக் கவனித்து எழுத அப்போதும் வாய்ப்பில்லாமற் போயிற்று. அச்சிட்ட காலங்களில் நான் என் ஊர்ப்பக்கத்தில் இருக்க நேர்ந்தது; இறுதியில், 'சொற்பொருட் குறிப்புக்கள்' ஏறத் தாழ 50-பக்க அளவுக்கு மட்டும் பல்லாவரம் சென்று எழுதிக் கொடுத்துத் திரும்பினேன்.

நூல் முழுதும் ஆசிரியரடிகளே தம்முடைய பல பணிகளி னிடையே மிக்க உழைப்பெடுத்துப் பெரும் பொருட்செலவில் திருத்திப் பதித்து வெளியிட்டபின், பார்க்க மகிழ்ச்சியாகவும், 'பதிப்புக்குப் பயன்படாமற் போனேமே' என்று உருக்கமாகவும் இருந்தது; 'என்ன ஆகுமோ' என்று அஞ்சியிருந்த எனக்கு, நூற்றுக்குத் தொண்ணூறு பங்குக்குமேல் என் உரைக் கூறுகள் ஆசிரியரால் ஒப்புதல் பெற்றிருந்தமை, எனக்குப் பெரிய ஆறுத லும் மன நிறைவும் அளித்தது. 'உரை கோளாளன்' என்று ஆசிரியர் எளியேனை வகை பிரித்து ஏற்றுக்கொண்டதற்கு, என் கடமை ஏதோ ஒரு வகையில் அமைந்தமை, நான் பெற்ற பெறற் கரும் பேறே என நாளும் எண்ணிவருகின்றேன்.

நூற் காணிக்கை என்பது இங்கே பெரிதன்று; நல்லிசைப் பெரும் புலமை மிக்க ஆசிரியப் பெருமானது நூலொன்றுக்கு ஒன்றுக்கும் பற்றாத இவ்வெளிய மாணவன் உரையென்று ஏதோ ஒன்று குழறிக் குதப்பி அதை ஆசிரியரே ஏற்குமாறு செய்து கொண்ட நற்பேறுதான், நினைத்தொறுங் காண்டொறும் பேசுந் தொறும் எப்போதும் அனைத்தெலும்பும் உள்நெகுவதாயிருக் கின்றது!

இனிமை நட்டும்:

1927 ஆம் ஆண்டின் இறுதியில், என் 24 வது அகவையில் சென்னைச் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தில் கழகப் புலவ ராய் அமர நேர்ந்தது; பல்லாவரம் அடிக்கடி போகவும் அடிக

ளாரைக் காணவும் வாய்ப்புப் பெருகியது! அதனால் எனக் குண்டான மகிழ்ச்சிக்கு அளவேயில்லை.

விடுமுறைகளிற் பல்லாவரம் சென்ற காலங்களிலும், அப்போதும், இரவு $9\frac{1}{2}$ மணிக்கெல்லாம் நான் படுத்துக்கொள்ள வேண்டுமென்று அடிகள் சொல்வார்கள். நள்ளிருள் 1-மணிக்கு அடிகளே இசைபாடி எழுப்புவார்கள். அரைமணி நேரம் அல்லது முக்கால் மணி நேரம் தாழ்வாரத்தில் உலாவிக் கொண்டே, 'திருச்சிற்றம்பலக் கோவையார்' செய்யுட்களை, அந்த அமைதியான நேரத்தில், தமது குயிலனைய இனிய குரலில், இசை மிழற்றிப் பாடி, அதன்பின் சந்தி பிரித்து விளக்கமும் உள்ளுறையும் நயங்களும் சொல்லுவார்கள்; திருச்சிற்றம்பலக் கோவையாரை ஒவ்வொரு நாளும் நள்ளிருட் காலத்திலேதான் நான் பாடங் கேட்டுக்கொண்டேன்.

அடிகள் கட்டளைப்படி, நீலாம்பிகையார்க்கும் திருநாவுக்கும் சில வேளைகளில் நான் பாடம் சொல்வதும் உண்டு.

ஏறக்குறைய 50 ஆண்டுகளுக்குமுன் நான் சென்னைச் சைவ சித்தாந்தக் கழகத் தமிழாசிரியராய்ப் பல்லாவரத்துக்கு அண்மையிற் செல்லும் பெரும்பேறு பெற்றேன். அப்போது நான் இருந்த ஊரின் பெயர் பெரும்பேறு! அங்கே அலுவலில் இருந்தேன். அவ்வூர், மதுராந்தகம் வட்டத்தில் திருச்சி செல்லும் பெருஞ்சாலை ஓரத்தில் அருணகிரியார் திருப்புகழ் பெற்ற ஒரு மலைத்தலம்; அருகில், திருஞானசம்பந்தர் பாடல் பெற்ற அச்சிறுபாக்கம் உள்ளது.

மலையின் தாழ்வரையில் இருந்துகொண்டு அவ்வப்போதும் முருகப் பெருமானைத் தொழுதுகொண்டிருந்த பெரும்பேறு, பின்பு, 'முருகர் மும்மணிக் கோவை'க்கு ஒரு விரிந்த உரையெழுதும் பெரும்பேறும், அடிகளுக்கு அருகிற் செல்லும் பெரும்பேறும் இனிதளித்தது!

பண்டைத் தமிழ் வளமும் சுவையும் ஒருங்குபொதுளத் 'தொல்காப்பியப் பொருளிலக்கணம் விரவிய சங்கநூல் போன்றதே இது' என்று அக் காலத்தில் தமிழகத்தில் விளங்கிய பெரும்

புலவர் பலரும் பாராட்டும் வகையில் திருவொற்றிமுருகர்மேல் அடிகள் யாத்த ஓர் அரிய செய்யுள் நூலுக்கு அடிகளே உளங் கொளுமாறு ஓர் உரை வகுத்த நற்செயலை, ஏனை நூல்கள் எழுதியதை யெல்லாம்விடப் பெரும்பேறு என்றே கருதுகின்றேன்.

'பெரும்பேறு' ஊரில் நான் அலுவலில் இருந்தபோது அடிகள் சென்னை அலுவலுக்கு வருமாறு ஒரு கடிதம மிக மகிழ்ச்சியோடு எழுதியிருந்தார்கள்.

முருகப் பெருமான் திருக்கோயிலை வலம் வந்து வணங்கிக் கொண்டு, இருந்த அரசு அலுவலை உதறிவிட்டுப் பேருணர்ச்சி யுடன் கழகத் தமிழ்ப் புலவர் அலுவலை ஏற்கும் பெரும்பேறு பெற்றேன்.

'பெரும்பேறு' தலத்தை மறத்தல் கூடுமோ? ஆண்டவன் திருமுன்னிலையில் தூங்கா விளக்கொன்று அங்கே நினைவுக்காக நிறுத்தப்பட்டுள்ளது.

அடிகளிடம் பாடம் கேட்கும் நாட்கள், இன்ப உலகில் இருப்பதுபோல் இருக்கும்; நேரம், பாடம் படிப்பதுபோல் இராது; ஏதோ இன்ப உரையாடல் போலவே இனிமைதட்டும்; புலமை யுலகம் முழுதும் அப்போது அங்கே வந்து அடிப்படும். எனக்கு 16 ஆண்டுகள் இம் முறையில் இன்பமாய்க் கழிந்தன.

௯. நாகரிகச் சான்றோர்

'நாகரிகம்' என்பதற்கு 'விளக்கம்' என்பது சொற் பொருள்; 'தெளிவு' என்பது கருத்து.

'சான்றோர்' என்பதற்கு 'நிறைந்தோர்' என்பது பொருள்.

சிலர் 'உடற் பயிற்சி' 'தொழில்' முதலியன நிறைந்தவராகவும், 'கல்வி' 'கலை' முதலியன நிறைந்தவராகவும், 'தீது' 'நன்று' என்னும் பாகுபாடுகள் தெரிந்து நீதிகள் நிறைந்தவராகவும், 'பொதுமை' 'உயிரிரக்கம்' முதலியன நிறைந்தவராகவும், 'தூய்மை' 'புதுமை' நிறைந்தவராகவும் இருக்கலாம்.

எல்லாம் நிறைந்தவரையே 'சான்றோர்' என்பதும் 'நாகரிகச் சான்றோர்' என்பதும் பெரும்பான்மை வழக்கம். சங்கச் சான்றோர் அத்தகைய மாட்சியாளர்!

மாந்தர் பொதுமக்களிற் சிறந்தவராக இருந்தால், உடலில் நிறைவு உடையவர்களாகவும், கொஞ்சம் மேற்பட்டால் மனத்தில் கல்வி கலை நிறைந்தவராகவும் இருப்பர்;

உடற்பயிற்சி என்பது தொழில்களால் நடப்பதா யிருந்தால் உடம்பும் தெளிவாயிருக்கும்; தொழில்கள் மூலம் ஆக்கமும் உண்டாகும்; சிறுவர் சிறுமியர்கூட, வெறும் உடற்பயிற்சி செய்வதை விடத் தொழிற் பயிற்சி செய்து வருதலே உடற் பயிற்சிக்கும் சிறந்தது.

மனத்தை நிறைவு செய்ய வேண்டுமானால் கல்வியோடு கலைகளும் நிறைந்தவராக இருக்க வேண்டும். கல்வியிற் கலைகளை அடக்கி,

"வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்"

என்பார் ஔவையார். ஆயினும், கல்வியை மொழிக்கல்வி எனப் பிரித்தும் மொழிக்கல்வியின் மூலமாகக் கற்கும் பல தலையான கலைகளைக் கலைக்கல்வி என வகை பிரித்தும்,

"............செந்தமிழும் நாப்பழக்கம்
வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்"

என்று அவர் தெளிவிப்பார்.

ஐம்பொறிகளோடு கூடிய உடல் என்பது 'பரு உடல்'; அந்தப் பொறிகளை ஆட்சி செய்யும் தலைமை வாய்ந்தது மனம்; அஃது உடலின் நுட்பமாதலின் மனத்தை 'நுண்ணுடல்' என்றும் கூறுவதுண்டு; இங்ஙனம் இருவகை உடல்கள் மக்களுக்கு அமைந்துள்ளன. உடலில் தொழிற் பயிற்சி நிறைந்து செல்வப் பொருளும், மனத்தில் கலைப் பயிற்சி நிறைந்து கல்விச் செல்வமும் ஆக இருவகைச் செல்வங்களையும் மக்கள் பெறுகின்றனர்.

இனி 'அருட்செல்வம்' என்பதொன்றும் இவற்றின் வேருகச் சொல்லப்படுகிறது. அது விளையும் இடனும் கருதிக் கொள்ள வேண்டும்.

அதனை நுகர்பவர் யார்? மக்களே. அவர்களைத்தாம் உயிர்கள் என்று சொல்லுவது வழக்கம்!

உயிரில் நிறைவது என்பது உயிர்த்திறம்! அது நிறையும் போது உயிர் பக்குவம் பெற்று அருட்செல்வம் மேன்மேலும் நிறைவதற்கு வாய்ப்பு ஏற்படும்.

'எனது உடல்' என்றலின், 'எனது மனம்' என்றலின், 'நான்' என்பது வேறு, இந்தப் 'பருஉடல்' 'நுண்உடல்' என்னும் இருவகை உடல்களும் வேறு என்பது தெளிவாகத் தெரியும். நான் என்னும் உயிரைத்தான் 'மக்கள்' என்றும் மற்ற 'சிற்றுயிர்' என்றும் சொல்லிக்கொள்கிறோம்.

பழக்கத்தில் பார்க்கும்போது அத்தகைய உயிர் மிகவும் சிற்றறிவு உயிராகத் தெரிகிறது. ஏனென்றால், அதற்குத் தெரியாதவை மாட்டாதவை எத்தனையோ உள்ளன; மேலும் அது, தனக்கென்று ஒரு வலிவு உடையதாகவும் இல்லை; இப்படிப் பட்டதற்கு ஒரு வலிவான சார்பு தேவையாயிருக்கிறது. இது கொண்டே, ஒரு வலிவான பேரறிவுப் பொருள் உலகத்தில் வேறு இருக்கவேண்டும் என்றுந் தெளியப்படுகிறது.

உயிரில் ஏதாவது தெளிவு (விளக்கம்) வேண்டுமென்றால், இந்தப் பேரறிவுப் பொருளின் துணை இன்றியமையாததா யிருக்கிறது. வேறு வாயில் இல்லை. உடலின் சேர்க்கையால் உயிர் பெறுவதென்பது ஓரளவு அறிவு நிலையே (ஒவ்வொன்றாய்க் குறித்தறியும் சுட்டறிவே); போதிய விளக்க மன்று. அந்தப் பேரறிவுப் பொருளை, அஃது எல்லாம் கடந்ததாய் இருத்தலின், அதனைத் தெளிவுமிக்க முன்னோர் 'கடவுள்' என்று தெளிந்து, பெயரிட்டு, வேண்டி வரலானார்கள். வேண்டினால் ஆக்கம் விரைவில் கிடைக்கும்.

வேண்டி வருவது அவரவர்கள் தேவைக்குத்தான். தேவை யில்லா விட்டால் வேண்ட மாட்டார்கள். கடவுளுக்குத் தேவை யென்பது யாதுமில்லை; தம் பொருட்டு எவையும் அம்மையப்பர் நாடுவதில்லை; ஏதாவது நாடுவதாயிருந்தால் உயிர்களுக்காகத் தான் நாடுவதாயிருக்கும்; அப்படிப் பார்த்தால்,

1. உடலுக்குத் தேவை, தொழிற் பயிற்சிகள்;

2. மனத்துக்குத் தேவை, கல்வி கலைப் பயிற்சிகள்;

3. உயிருக்குத் தேவை, ஒழுங்கு ஒழுக்கங்கள்;

4. அருளுக்குத் தேவை, எல்லா உயிர்களின் பொதுமை, உயிரிரக்கம் முதலிய உயிரின் பக்குவ நிலைகள்;

5. கடவுளுக்குத் தேவை, உயிரின் தூய்மை, புதுமை முதலிய நலன்கள்!

இத் தேவைகளில், உடல் நலமாய் இருக்கவேண்டுமானால் தொழிற் பயிற்சிகள் இன்றியமையாதன; மனம் செழுமையாய் இருக்க வேண்டுமானால், கல்வி கலை நலன்கள் முதன்மையானவை.

'உடல்' 'மனம்' என்னும் இருவகை உடல் நலன்களும் இங்ஙனம் புறத்திலிருந்து உயிருக்கு ஊற்றந் தரும்; அங்ஙனமே திருவருள் கடவுள் என்னும் இறை நலன்களும் அகத்திலிருந்து உயிருக்கு மாட்சிமை ஊட்டும். உயிர் சிறப்பாய் வளர வேண்டுமானால் 'ஒழுங்கு' 'ஒழுக்கங்கள்' என்னும் நீதி மிக்க உயிர்த்திறம் இன்றி யமையாதது; இவ்வுயிர்த் திறம் ஓங்கினால், அம்மையின் இரக்கமும்

அப்பனின் தூய்மையும் அவ் வுயிர்த்திறத்தில் ஏறும்; இவ் விரண்டும் அம்மையப்பர் இயல்புகள்!

முன்னும் பின்னுமாக இவை இரண்டிரண்டும் உதவுவதற்கு உயிர் தன்னிலையில் திறம் பெற்றிருக்க வேண்டும். அந்தத் திறந் தான் 'ஒழுங்கு' என்னும் நீதித் திறனும், 'ஒழுக்கம்' என்னும் நன்மைத் திறங்களுமாகும்; இவையிரண்டும் அறங்களே!

இவற்றில், மக்களிற் பெரும்பாலோர் அறிபவை, தொழிற் பயிற்சி, கலவிப் பயிற்சி என்பன மட்டுமே. ஒழுங்கு ஒழுக்கங்களில் அவ்வளவாகக் கருத்து வைப்பதில்லை; இதனால் தொழிற் பயிற்சி கல்விப் பயிற்சிகளும் பொருத்தமாக வாய்ப்பதில்லை; உயிர்த் திறத் துக்கு மேற்பட்ட அம்மையப்பர் இயல்புகளாகிய நிலைகள் இரண்டும் அடியோடு வாய்ப்பதேயில்லை.

இவற்றிலும், மனப் பயிற்சியில் கலை நலன்களும் உயிர்ப் பயிற்சியில் ஒழுக்க நலன்களும் பெரும்பாலும் மக்கள் அறியார்; உடற்பயிற்சியிற் கூடப் பொருள் அவாக் காரணமாக, அளவுக்கு மேற்பட்ட தொழிற் பயிற்சிகளை நாளெல்லாம் மேற்கொள்வதே வழக்கமாக இருக்கிறது.

ஆசிரியர் மறைமலையடிகளின் வரலாறு மாட்சிமைப் படுவதே இந்த உயிர்த்திற நிலையிலிருந்துதான்; அதாவது, ஒழுங்கு ஒழுக்கப் பயிற்சிகளிலிருந்துதாம்! இவை அனைவரும் அறிந்தவை!

மேனாட்டுப் பெருமக்களாகிய சேக்குவீயர், மில்டன், சான்சன் முதலிய பேரறிஞர்களின் வரலாறுகள் இன்னும் மாட்சிமை உண் டாக எழுதப்பட வேண்டும் என்பது என் கருத்து. அறிஞர் பலரால் பதிப்பிக்கப்பட்டுப் பல பதிப்புக்கள் வெளிவந்து, உலக மெல்லாம் பரவி யுள்ளனவேயானாலும், அவற்றைக் கொண்டே மலைத்து விடுவதற்கில்லை; நூல் வகையிலும் அப்பெருமக்கள் திறத் திலும் இன்னும் எவ்வளவோ வேண்டியுள்ளன என்றுதான் தோன்றுகிறது. பெரும்பாலும் அவர்கள் ஆற்றல்களெல்லாம் (Talents) 'உடல்நிலை' 'மனநிலை' என்னும் இருவகைச் சிறப்புகளைப் பொறுத்தன; உயிர்நிலையில், ஒரு சிறு பகுதியே கைவந்தவை எனலாம்.

உயிர்நிலையிலும், 'திருவருள்' 'கடவுள்' என்னும் இறை நிலையிலும் மேம்பட்ட பெரியோர்களாகிய 'ஏசு' 'முகமது' போன்றோர் வரலாறுகளின் மாட்சிமை அவர்களுக்கு ஏற்குமா? 'ஏசு' 'முகமது' முதலிய பெரியோர்களின் வரலாறுகள் மாட்சிமையாக உள்ளன வேனும் அவற்றிலும், மேம்பாடுகள் தேவையுள்ளன. பிரித்துக் குறிக்கத்தக்க பகுதிகளும் இன்னும் இருக்கின்றன; திருக்குறளில் வரும் புலால் மறுப்பு, ஆண் பெண் அறங்கள் முதலியன சில அவர்கள்பால் இல்லை. காலத்துக்கும் இடத்துக்கும் ஏற்றபடி அறங்கள் குறிக்கப்பட வேண்டும் என்னுங் கட்டாயம் அருளாற்றல் மிக்க பெருமக்களுக்குத் தேவையில்லை; தெய்வத் திருக்குறளிலும், நால்வர் திருமுறைகளிலும் அம் முறைமை மேற்கொள்ளப் படவில்லை.

நமது நாட்டில் பெரிய புராண வரலாறுகள் மாட்சிமையாக எழுதப்பட்டுள்ளன; ஆயினும், விளக்கித் தெளிவுபடுத்தவேண்டிய கருத்துக்கள் அவற்றிலும் உள்ளன. நாயன்மார் சிலர்க்கு யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர் இவ் வகையிற் செய்திருக்கும் தொண்டு பின்பற்றுதற்குரியது; வரலாற்று முறையிலும், அது மாட்சிமைப்படும் வகையிலும், பெரிய புராண வரலாறுகள் செய்யுள் நுட்பங்களுடன் வெளி வருதல் இன்றியமையாதது!

இராமலிங்க அடிகளார் முன்னோர் நிலைகளைத் தெளிவுபடுத்துவதில் கூடிய வரையில் தமது நோக்கத்தை ஊக்கமாய்ச் செலுத்தியிருக்கிறார்கள். உடல் மன நுகர்வுகளை 'உலகத் திளைப்பு' என (உலகாநுபவம்) ஒரு பகுதியாகவும், அம்மையப்பர் நுகர்வுகளை அருள் திளைப்பு (அருளநுபவம்), சிவத் திளைப்பு (சிவவநுபவம்), என இரு வகைகளாகவும், முன்னும் பின்னுமாக இவ் விருவகைகளையும் நுகரும் உயிர் நுகர்வுகளை உயிர்த் திளைப்பு (உயிரநுபவம்) என ஒரு பகுதியாகவும், பிரித்துத் தெளிவு படுத்தியவர் அப் பெருமானே! அவருக்கு முன் அப்படி யாரும் பிரித்து விளக்கியவர்கள் இல்லை.

ஆசிரியர் மறைமலையடிகளார் வாழ்க்கை முறையும் அது மாட்சிமைப்பட்ட வகையும் இத் தனிச் சிறப்புகளுடையவை. பெரிய

புராண அடியார்களுடன் சேர்த்து ஒருங்கு மதித்துப் போற்றிக் கொள்ளத் தக்க அருமைப்பாடுடையவை! அடிகளார் வரலாறு, சுந்தரர் வரலாறு போன்றது.

சுந்தரர் அழகு செய்துகொள்வதை ஒரு பயிற்சி முறையாகக் கொண்டிருந்தார்; அழகுகலை பயில்வதற்குச் சிலப்பதிகாரத்து மாதவிக்கு ஏழாண்டுகள் பிடித்தனவென்று சிலப்பதிகாரம் கூறும்:

"ஆடலும் பாடலும் அழகும் என்றிக்
கூறிய மூன்றின் ஒன்று குறைபடாமல்
ஏழு ஆண்டு இயற்றி"

என்பது இளங்கோவடிகள் பொன்மொழி! இளங்கோவடிகள் தாம் அடிகளாயிருந்தும், அழகுகலை முதலியவற்றையும் கோவலனது கலை யுள்ளத்தையும் அவர் நினைவுகூர்ந்து மொழிந்தமையும், அது முதலிய சிலவற்றை அவர் குற்றமாகக் கொள்ளாமையும் நினைவு கூர்தற்குரியன.

சுந்தரர் காலத்து 'விறன்மிண்டர்' 'கலிக்காமர்' முதலியோரைப்போல் மறைமலையடிகளார் காலத்தும் கருத்து வேறுபட்ட நல்லன்பர் சிலர் விளங்கினர்; இறைவனுக்கு மெய்ம்மை தெரியுமாதலின், எல்லாரையும் அவர் இனிது உய்வித்தருளினர். அதனை மக்கள் நுணுகி அறிந்து கொள்வது அவரவர் வாழ்க்கைச் சிறப்புக்கு மிகவும் உதவியாய் இருக்கும்.

'வரலாறு' என்பது எல்லார்க்கும் உண்டு; ஆனால், அதனை மாட்சிமை செய்து கொள்வது சிலர்க்கே அமைகின்றது; அவரே சான்றோர்! ஆசிரியரடிகளார் எந்தப் பயிற்சியையும் திட்டமிட்டும் அளவறிந்தும் அன்றாடப் பழக்கமாகப் புறம் அகம் இரு பக்கமும் ஒழுங்காகப் பயின்று வருவார்; அதனால் நாகரிக நலன்கள் எல்லாத் துறைகளிலும் நிறைந்து விரிவந்தன; வரலாறும் மாட்சிமைப்பட்டது.

இதுவரையிற் கூறியவை, நாகரிகச் 'சான்றோர்' என்னும் இப் பகுதிக்கு முன்னுரையே; இனிப் பிரிவுகளைப் பார்ப்போம்.

அ. உடலில் நாகரிகம்

இயற்கையாகவே அடிகளார் நீண்டு உயர்ந்த, மெல்லிய வாழைத் தண்டு போன்ற. அழகிய நல்லுடல் படைத்தவர்; நிறம், செந்தாமரை நிறமாக இருக்கும். பெண்மை உடல் என்றே சொல்லி விடலாம்; குரலும், குயில்போல் இசைக்குங் கீச்சுக்குரல்; பேசும் நிலேயே, இசைமிழற்றிப் பாடும் நிலேயை உண்டாக்கி இனிமை மிகுக்கும். மோகனம், பைரவி, தோடி முதலிய சில பண்களும் அவர்களுக்குத் தெரியும். அவைக்களங்களில் நின்று, விரிவுரை ஆற்றும்போது. திருமுறைப் பாடல்களேப் பண்களோடு தாம் பாடுவார்கள். அப்போதும், இருக்கையில் அமர்ந்திருக்கும் போதும், படிக்கும்போதும், எழுதும்போதும் அவர்கள் கோலத்தைப் பார்த்துக் கொண்டே இருக்கலாம் போலத் தோன்றும.

அடியேன் தொடர்பு கொண்டதிலிருந்து, நான் கண்டவை, திருநீறும், பொற்சங்கிலி பின்னிய கழுத்துச் சிவமணியும், வெளிறிய சிவப்பமைந்த அழகான காவி ஆடைகளுந்தாம். இந்த எளிய திருக்கோலம் சிவநிலேக் கோலமாய் அவருடைய அழகை எப்போதும் மிகுத்துக்கொண் டிருந்தது. "Beauty lies in simplicity" என்னும் உண்மையை, நான் மிக நன்ருக இவர்கள் திறத்திற் கண்டு மகிழ்ந்திருக்கிறேன்.

எனக்கு இருபது அகவை ஆனபோது நான் சூளும் பேட்டில் அலுவலில் இருந்தேன். எனக்குப் பாடம் கேட்கும் மாணவர் சிலர் அமைந்தனர். விரிவுரை கேட்கும் அன்பர்களும் பலர் அமைந்தார்கள். பாடம் கேட்கும் மாணவர்களில் தட்டார் ஒருவர் சுப்பிரமணிய ஆச்சாரியார் என்பவர்; சூளும்பேடு குறுநில மன்னரின் உவளக மகளிர்க்கு வேலேப்பாடான அணிகலன்கள் இழைத்துத் தரும் கைத்திறன் படைத்தவர். அவர்தாம் எனக்கு அடிகளார் திருவடிகளே வெள்ளியிற் செய்து தந்தவர். அவை மிகக் கவர்ச்சியாய் இருந்தன. அவர், அன்பு காரணமாக எனக்குக் காதணிகள், கையணிகள், பொற்சங்கிலிகள, பெயர் பொறித்த பொன் மோதிரங்கள் முதலியன ஒவ்வொன்ருக அரிய வேலேப்பாடுகளுடனும் ஆவலுடனும் அவர் விலேயின்றிச் செய்து வழங்கினர்.

மாணவர் அன்பை அடிகளார்க்குப் புலப்படுத்தவோ, அணிகலன்களின் அமைப்பை அடிகளார்க்கு விளக்கவோ அடியேனுக்கு எப்போதும் எண்ணம் எழுந்ததில்லை. பல்லாவரம் போகும்போது ஒருமுறை இவற்றை இயல்பாக அணிந்துகொண்டு செல்ல நேர்ந்தது. திருமணம் ஆகாத நேரமாதலால் என் பெற்றோரும் இதற்குத் தடை செய்யவில்லை.

அடிகளார் முதல் நாள் இதைப் பார்த்துவிட்டு இரண்டாம் நாள், 'மாணாக்கற்கு இவை மிகை' என்றார்கள்.

அடிகளார் உள்ளம், அதிலும் என்பொருட்டுக் குறைபடக் கூடாது என்பதே என் எண்ணம். அப்போதே எல்லாவற்றையும் கழற்றி அடிகளார் திருவடிகளின்முன் வைத்து விட்டேன். 'பெற்றோரைக் கேட்டுச் செய்' என்றார்கள்; முற்றும் கழற்றி விட்டமையால், அன்றுமுதல் இன்றுவரை எவ்வகையான அணிகலன்களையும், வசதியிருந்தும், அணிந்துகொள்ளவில்லை. "முப்பதாம் ஆண்டு அளவில் மூன்று அற்று ஒரு பொருளைத் தப்பாமல்" பிடித்தல் வேண்டுமென்று முன்னோர் அருளிச் செய்தபடி, இயல்பாகவே மிக நீண்டு வளர்ந்திருந்த என் கருங்குழல் முடிக் கற்றையை, என் முப்பதாம் ஆண்டில் நறுக்கிக் கொண்டேன். அன்று முதல் மேலாடை கீழாடை என இரண்டு வெண் துண்டுகள் தவிரச் சட்டை முதலிய எதுவுங்கூட அணிந்து கொண்டதில்லை; எளிமைத் திறம் என்னையும் ஆட்கொண்டது.

அக் காலங்களில் மிகவும் நெருக்கம் கொண்டிருந்த பேராசிரியர் கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் சென்னையிலும் திருநெல்வேலியிலும் என் நிலைமையைக் கண்டு பாராட்டியதும் உண்டு.

அடிகளார் நாள்தோறும் இருமுறை நீராடும் நாகரிகச் செவ்வியர்; அவ்வப்போதும் நன்கு துவைத்துலர்ந்த காவி ஆடைகளையே அணிந்துகொள்வார்கள். உடலின் வெளிப்புறம் போலவே உட்புறமும் அன்றாடம் தூய்மை செய்து கொள்ளும் அறுதியான தீர்மானம் கொண்டு இறுதிவரை செயற்படுத்தி வந்தார்கள்.

கிழமைக்கு இருமுறை, 'பசும்பால்' 'எலுமிச்சம் பழச்சாறு' 'வாதுமைப் பருப்பு' 'கசகசா' 'வெள்ளை மிளகு' சேர்த்து மை போல் அரைத்த ஒரு வகையான 'கல்பம்' என்னும குழம்பு காய்ச்சி உச்சந் தலையில் மெல்லத் தேய்த்துக்கொண்டு இளஞ்சூடான வெந்நீரில் அடிகளார் தலை முழுகுவதுண்டு. பல்லாவரத்தில் தங்கியபோது ஒரு கால் நானும் அதைத் தேய்த்துக் கொள்ள விரும்பினேன். ஆனால், அடிகளார் அப்போது இடந்தரவில்லை. பிற்காலத்திலேதான் அதனைக் கையாண்டு தேய்த்து நலம் பெருக்கிக் கொள்ள நேர்ந்தது.

வழிபாட்டறையில் ஒளி பெருக்கும் இருப்புச் சட்டியும் அத னடியில் முக்கோண இருப்புக் கோலும் வைத்து அவற்றின் முன் சிறிது நேரம் புறநினைவில் இருந்து, பின்பு அக வழிபாடு செய்து, அதன்பின் திருவருள் ஒளியையும், அதற்குப்பின் புதுமைச் சிவ ஒளியையும் தேனித்துக்கொண்டிருந்து நினைவு விட்டபின், ஏறத்தாழ ஒரு மணி அளவில் அறையிலிருந்து அடிகளார் வெளி வருவார்கள். அருமையான ஊதுவத்தி மணம் அவர்கள் உடலி லும சூழலிலும் இடைவிடாமல் மணங்கமழும்.

சுவர்களில் 'இரவிவர்மர்' எழுதிய, அழகிய முழு முதற் கடவுளின தோற்றங்களையும், வாயிற்படியின் உயரத்தில் அமைத்த முழுமுதற் திருவுருவங்களையும் தலைமேல் இரு கை கூப்பி, இசை பொருந்திய திருமுறைப் பாடல்களை அழகாகப் பாடி வணங்கிய படியாய் வலம் வந்து, அதன்மேல் காலை பதினொரு மணியளவிலும் அப்படியே இரவில் பதினொரு மணியளவிலும் ஏதேனும் கஞ்சியும், உலர்த்திப் பக்குவப்படுத்தப்பட்ட பேரீச்சம் பழம் முதலியன சிலவும் உட்கொள்ள அமர்வார்கள்.

ஒருகால், தமக்குக் காவியாடை செலவில்லாமலும் இருக்கின்ற தென்று அவற்றின் எளிமையை எடுத்துச் சொன்னதோடு 'சுவாமி உருத்திரகோட்டீசர்', 'சுவாமி விபுலானந்தர்' முதலியோரையும் ஒப்புமைப்படுத்திச் சிறப்பித்தார்கள். செந்நெறி நிற்கும் சிவநெறி யாளர்க்கு அவர்தம் அகம் சிவத்தைப் பற்றிநிற்கும் புற அடை யாளமாக இச் செங்காவி யாடை, மற்றப் பொதுமக்களி லிருந்தும் பல மதத்தவர்களிலிருந்தும் பிரித்துச் சிறப்பிக்கின்ற தெனறும் தெரிவித்தார்கள். சிவபெருமானையே முழுமுதலாகத்

தெளிந்து வணங்காதவர்களும், தாம் 'சகல'ராயிருந்தும் குருமாரை அம் முழுமுதல் உருவமாகக் கருதாமல் குருமாரைத் தவிர வேறு கடவுளே இல்லை என்பவர்களும், தாமே கடவுள் என்பவர்களு மெல்லாம், இப்போது சிவநெறிக் கொள்கை யுடையவர்களைப் போலக் காவியாடை உடுத்துக்கொள்வது அவர்கள் கொள்கை களுக்கே மாறு என்றும், புறத்துறவுக்கே காவியாடை ஓர் அடை யாளமாய்விட்டது என்றும், கொள்கையைப் பற்றியும் அகத் துறவைப் பற்றியும் கருத்து மழுங்கிவிட்டதே என்றும் அடிகளார் கூறுவார்கள். எனது புல்லிய நிலைமையை அறிந்தும், 'இள வழகனுக்கும் துறவுள்ளம் இருக்கிறது' என்று பாராட்டுவதுண்டு.

அச்சுத் தொழிலில் எல்லா வகைகளிலும் அடிகளார்க்குத் தொழிற்பயிற்சி இருந்தது. அன்றாடம் சிறிது நேரம் புத்தகங் களுக்கு அட்டை போடுதல், தூசு தட்டுதல், விளக்குத் துடைத்தல் முதலிய கைப்பயிற்சிகளிலும் ஒழுங்குமுறை தவறாமல் செய்து வருவார்கள்.

சென்னைக்கும், தமிழகத்தின் நகர்களுக்கும், பாடல் பெற்ற தலங்களுக்கும் அவ்வப்போதும் அடிகளார் சென்று வருவார்கள். விசையோடு வரும் நீரோட்டங்களில் எதிர்நிலையில் இருந்து, அலை களால் உந்தப்பெற்றுக், குளிர்ந்த நீரில் தாராளமாய் நீந்தித் தலை முழுகுவார்கள். திருக்கோயில்களை வலம் வந்து கீழ் வீழ்ந்து வணங்குவதற்கு நாணமாட்டார்கள்.

தஞ்சாவூருக்கு ஒருமுறை அடிகளோடு சென்றிருந்தபோது நான் மட்டும் திருவையாற்றுக்குச் சென்று திரும்பினேன்; உடல் சிறிது காய்ச்சல்போல் இருந்தது. ஆடிமாதம் காவிரியில் புதுப் புனல் பொங்கிப் பொங்கி வந்தது. படித்துறையில் இறங்கிச் சிறிது நீர் மட்டும் எடுத்துத் தலையில் தெளித்துக் கொண்டு ஆண்டவனை வழிபட்டுத் திரும்பினேன். போய்வந்த செய்தியை அடிகளார் கேட்டார்கள்; சொன்னேன்; திட்டினார்கள்; 'காவிரியில் புதுப் புனல் ஆடுவது எல்லார்க்கும் வழக்கமாய் இருக்க, நீ அதனை இழந்து விட்டாயே; நின் காய்ச்சலெல்லாம் ஒழிந்திருக்குமே; கிடைத்தற்கரிய ஒரு நற்பேறு கை நழுவி விட்டதே, அதுவும் திருவையாற்றுக் காவிரி மிகச் சிறந்த இடமாயிற்றே' என்று

சொல்லிச் சொல்லி வருந்தினார்கள். நீர் விளையாடுதலில் அத்தகைய பேரார்வம் அவர்களுக்கு உண்டு.

த. வே. உமாமகேசனார், காய்ச்சலுக்கு ஏதோ மருந்து வாங்கித் தந்ததாக நினைவு!

செய்யும் பயிற்சிகளை அழுகையில்லாமல் மகிழ்ச்சியோடு செய்ய வேண்டுமென்றும் அடிக்கடி அறிவுறுத்துவார்கள்.

கருக்கல் நேரங்களில் தம்முள் இருள் கலக்காதபடி ஒளி வீச்சிற் கூடியிருந்து, ஒளி நினைவோடு உடல் விளக்கம் செய்து கொள்வது நாளும் அடிகளுக்கு வழக்கம்; அதனாலேயே நள்ளிருள் வரையில் ஒவ்வொரு நாளும் உறங்காமல் கண் விழித்திருந்து, இருள் கலந்து ஒளி கூடிவருகின்ற பின்னிரவில் மட்டும் சில மணி நேரம் உறங்குவதும், சூரிய ஒளி விடியலில் நன்றாய்ச் சுடர் வீசிய பின்பு ஒளி நினைவோடு விழித்தெழுவதும், ஒளிப் பொருளாகிய கண்ணாடி, உயர்ந்த படங்கள், முதலியவற்றைக் காண்பதும், அவர்கள் முறைமையாய் இருந்தன. அதனால் அவர்கள் மேனி நிறத்தால் மட்டுமன்றி, மின்னல் வீச்சுப் பளபள வென்று எழுந்து மேனி மினுமினு வென்று, சூழச் சுடர் வீசிக்கொண் டிருக்கும்; உள்ளம் ஒளி வண்ணமாகவே விளங்கிக்கொண் டிருக்கும்.

காலையில் எழுந்ததும் தம் திருவடிகளை வெண்ணிறச் சோடுகளில் நுழைத்துக் கொண்டு வெளிவந்து, மிதியடிகள் பூண்டு தமது மாளிகைத் தோட்டத்தில் சுற்றிச் சுற்றி உலாவி வருவார்கள். காலையில் மட்டுமன்றி மாலையிலும், 'பொதுநிலைக் கழக மாளிகை' ஏரி ஓரம் அமைந்திருந்தமையால் அதன் அருகிலும், மிதியடிகளுடன் உலாவி வருவார்கள்; அவர்கள் உரிமையை யாரும் கட்டுப்படுத்துதல் கூடாது; அவர்கள் நோக்கங்களைப் பிறர் எளிதில் புரிந்து கொள்ளுதல் இயலாது.

அக் காலங்களிற்கூட அழகாக நடப்பதை ஒரு பயிற்சியாகக் கொண்டு மறவாமல் பயின்றுவருவார்கள்.

எனக்குத் தம்பி ஒருவர் இருந்தார். அவர்க்கு இயற்கையறிவு மிகுதி; 'வேதாசலம்' என்னும் பிள்ளைப் பெயரை அடிகளார் சார்பால் 'மறைமலை' என்று மாற்றிக் கொண்டார். அடிகளார் நடப்

பதைப் போலவே அழகாக நடந்து காட்டி எல்லாரையும் களிப்பிப்பார். கள்ளம் கவடற்ற அவர் உள்ளத்தை அடிகளார் பெரிதும் விரும்புவதுண்டு!

ஒருகால் (2-4-1922) சென்னைக் கோவிந்தப்ப நாயக்கன் தெருவில் 'சவுந்தரிய மால்' மாளிகை மேடையில் 'பதி பசுபாசம்' பற்றி அடிகளார் பேச்சொன்று நிகழ்ந்தது. மேடைக்குச் செல்லும் படிக்கட்டுகள் அகலம் குறைந்தவை; அந்த இடுக்கு வழியில் ஏறிச் செல்லும் போதும் அடிகளார் தம் நடையழகுப் பயிற்சியைக் கைவிடவில்லை இது சிறிய நிகழ்ச்சியே யானாலும் அடிகளாரின் 'கவின் கலைப்' பயிற்சியை எல்லார்க்கும் எடுத்துக் காட்டுவதாயிருத்தலின், இங்கே எடுத்துக்கூற வேண்டுவது இன்றியமையாததாயிற்று; தரையில் அவர்கள் பாதம் எப்போதும் படுவதில்லை; இஃது அவர்கள் மின்னாற்றலை மிகுதிப்படுத்திக் கொண்டிருந்தது.

புத்தகங்களைக் கையாளும் முறையில் அவர்கள் மிக்க ஒழுங்குடையவர்கள்; கண்ட இடங்களில் நூல்கள் இறைந்து கிடக்கும் படி சோம்பராக இருக்கமாட்டார்கள். மெய்வருத்தம் பாராமல், அவ்வப்போதும் எழுந்து சென்று, தாமே அவற்றை ஒழுங்குபடுத்துவார்கள். இஃது ஓர் உடற்பயிற்சியாய் எப்போதும் சிறப்புடன் நடந்து வந்தது; எந்த நேரத்திற் பார்த்தாலும அவர்கள் நூல்நிலையம், புத்தகங்கள் கொலு வைத்ததுபோல் அடுக்கடுக்காய்க் காட்சி நல்கும்.

அவர்கள் உண்பது பகலில் ஒருவேளை உணவுதான்; ஆயினும் அது, பலவகை உய்வனவுகளுடன் (Vitamins) நிரம்பியிருக்கும். 'தேங்காய்ப் பால்' 'உருளைக் கிழங்கு' 'பசு நெய்' முதலியவற்றிற்கும், சாறு ஒழுகும் 'பலாச் சுளை' 'நாரத்தைச் சுளை' 'மல்கோவா' 'பீத்தர்' 'மலைப்பழம்' 'வித்துக் குறைந்த கொடி முந்திரி' முதலியவற்றிற்கும், 'வாதுமைப் பருப்பு' 'முந்திரிப் பருப்பு' 'பூக்கோசு' 'இலைக்கோசு' 'பச்சைப் பட்டாணி' 'மஞ்சள் முள்ளங்கி' நன்கு பழுத்த 'எலுமிச்சம் பழம்' 'தக்காளிப் பழம்' முதலியவற்றிற்கும் குறைவிராது.

ஒவ்வொரு நாளும் கையலம்பும்போது நெய்ப் பசை நீங்கும் பொருட்டு ஒரு தட்டில் 'சீயக்காயத் தூளும்' 'மைசூர்ச் சந்தனக் கட்டியும்' இளஞ்சூடாக வெந்நீர் நிரப்பிய பெரிய நீர்ச்செம்பும், வெளியில் ஆயத்தமாய் இருக்கும்.

ஆவிக் குளிபல், தொட்டிக் குளிபலும் அன்றுடம் இரு வேளையும் 'நீர் ஏற்றி' கொண்டு குடற்கழுவலும் உண்டு.

ஒருநாள் நான் இக் குடற்கழுவல் பற்றி வினவினேன்; இது மிகத் தொல்லையான செயற்கை முறையாய் இருக்கிறதே என்று கேட்டேன்; அதற்கு அவர்கள், 'ஒரு நாளைக்குப் பல வேளை உண்பதும், அதன் பொருட்டு நாளெல்லாம் ஓயாமல் பொருள் திரட்டுவதும் செயற்கையா, இயற்கையா' என்று கேட்டார்கள்.

அவர்களாகவே ஒருநாள், 'என் முறைகள் ஆங்கில நன் முறைகள்; இவை பழைய தமிழ் முறையே; ஆங்கில முறையும் தமிழ் முறையும் பெரும்பாலும் ஒத்தவை; கருவிகள் மட்டும் வேறு வேறு; பழைய தமிழ் முறையில் அன்றுடம் சில பச்சிலைகளைச் சித்தர்கள் உண்பதுண்டு. நகரங்களில் அவை கிடைப்பது அரிதாகி விட்டன' என்று சொன்னார்கள்.

ஆ. மனத்தில் நாகரிகம்

பருஉடலில் நாகரிகமாய் விளங்கியது போலவே நுண்ணுடலாகிய மனத்திலும், 'கல்வி' 'கலை' முதலிய பயிற்சிகளால் நாகரிகத்தை அடிகளார் அன்றுடம் நிரப்பி வந்தார்கள்.

இன்னின்ன நூல் இன்னின்ன நாளில் படிப்பது என்று ஓர் ஒழுங்கை அடிகளார் அமைத்துக்கொண்டு அந்த திட்டவணைப் படியே ஒவ்வொரு நாள் மாலையிலும் 6-30 மணியிலிருந்து :) மணி வரை கலைகள் பயின்று வருவார்கள்;

இந்த மனப்பயிற்சி இறுதி வரையில் நடந்துகொண்டிருந்தது, அவர்கள் நாட்குறிப்பில் 'இன்று படிக்கப்பட்டது' என்னும் குறிப்பு கடைசிவரையில் எழுதப்பட்டிருந்தது.

கொசுக்கள் தொல்லை இருந்தாலும் ஒரு கையால் விசிறிக் கொண்டே, விடாமல் படிப்பார்கள்.

தாழ்வாரத்தில் நின்றுகொண்டு நான் இக் காட்சியைப் பார்த்து, மிகவும் இரக்கப்படுவேன்.

"சாந்துணையும் கல்லாதவாறு என்"

என்று திருவள்ளுவர் கூறிய பொய்யா மொழியை, அடிகளார் இந்த அகவையிலும் எவ்வளவு அக்கறையாகக் கடைப்பிடிக்கிறார்கள் என்று வியப்பேன்;

கொசுத் தொல்லையில், இவ்வளவு கடின நிலையிலும் அடிகளார் கல்வி பயின்று, அரிய எழுத்திலும் இனிய பேச்சிலும் ஆராய்ச்சியோடு உண்மைகளைத் தழுவி அறம் உரைக்கிறார்களே, இந்த அருமையைத் தமிழகமும், தலைவர் என்போரும், அரசும், சரியானபடி இன்னும் அறிந்துகொள்ளவில்லையே என்று எண்ணுவேன்; பொருள் தேடுவதற்காகமட்டும் அடிகளார் கலை பயில்வதானால் எவ்வளவு வளமாக வாழலாம்; 'உண்மை கடைப்பிடிப்பது' 'அறமே உரைப்பது' என்பதில் எவ்வளவு பொருள் இழப்புகள் உண்டு என்பதைச் சற்றேனும் தமிழகம் எண்ணிப் பார்க்கவில்லையே; தமிழகத்தில் யார் யார் உண்மைக் கலைஞர்? தமிழுக்கும் அறத்துக்கும் தொண்டு செய்வோர் யார்? என்பதைத் தமிழகமே அறியாமல் இருப்பது எவ்வளவு இரங்கத்தக்கது! எவ்வளவு மானக் கேடு? தமிழகத்தில் பொருள் மிகுதியாய்ப் படைத்த பெருஞ் செல்வர்கள்கூடப் பாராமுகமாய் இருக்கிறார்களே, பலவேறு வகையான சூழ்ச்சிகளில் சிக்குண்டு பொருள்களை வீணுக்கு வாரி இறைக்கிறார்களே தவிர, நேர்மைக்கும் உண்மைக்கும் உதவ முன்வரவில்லையே!

"தாளாற்றித் தந்த பொருள் எல்லாம் தக்கார்க்" கல்லவா வேளாண்மை செய்ய வேண்டும் என்று திருவள்ளுவர் விளக்க வேண்டிய கட்டாயம் நேர்ந்துவிட்டது என்றெல்லாம் எண்ணிக் கொண் டிருப்பேன்.

பெருஞ்செல்வர் சிலர் இல்லத்தில், அண்டாக்களைப் போன்ற பெரிய பாண்டங்கள்கூட வெள்ளியிற் செய்து உருண்டுகொண் டிருக்க, இந்த எளிய காவியாடை அடிகள் இங்ஙனம் கொசுத் தொல்லையிலுங் கலைபயின்று அறம் உரைக்கிறார்களே என்றும் தோன்றும்.

இத்தகைய எண்ணங்களால் உள்ளம் கதுவப்பட்டுச், சில வேளைகளில் நான் கண்ணீர் பெருக்கி நிற்பதும் உண்டு.

அடிகளார் திடுமென்று என்னை அழைப்பார்கள்; அலறிப் புடைத்துக்கொண்டு, நினைவு கலைந்து, அடிகளார் திருமுன் எய்துவேன்.

என்னை நோக்கி, 'அழுதுகொண் டிருந்தாயா' என்று கேட்பார்கள்; அமரும்படி சொல்வார்கள்.

பெரும்பாலும் அடிகளார் திருமுன் பாடவேளைகளிற்கூட நான் அமர்வதில்லை.

திருத்தவத்துறை (லால்குடி) என்னும் தலத்தைச் சார்ந்த சரவண முதலியார் என்னும் பெரியபுராணப் புலவர், அடியேன் எப்போதும் நின்றுகொண்டிருப்பதைப் பார்த்து, என்னை அழைக்கும்போதெல்லாம் 'நின்ற திருக்கோலம்' எங்கே என்பார்கள். அடிகளார், புன்னகை கொண்டு, 'என்ன சொன்னலும் இளவழகன் கேட்பதில்லை' என்று கூறுவார்கள்.

அடிகள் மேன்மேலும் வற்புறுத்தியதனல் கண்களைத் துடைத்துக்கொண்டு, கையற்று, இருக்கையில் சிறிது அமர்வேன். முள்ளிருக்கையில் இருப்பதுபோலத்தான் அது தோன்றும்; நின்றுகொண்டே அடிகள் நூல்களை எப்போதும் பயின்றுகொண்டிருப்பதே என் வழக்கம்;

'ஆங்கில அறிஞர்கள் எவ்வளவு உயர்வான கருத்துக்களை எவ்வளவு உயர்வான நுட்பங்களில் எடுத்து எழுதுகிறார்கள் தெரியுமா?' என்று அவற்றை அடியேன் அறியுமாறு விளக்கிச் சொல்லி மகிழ்வார்கள்.

'நூல்கள் எழுதுவது எனக்கு அவ்வளவு விருப்பமாக இல்லை; தமிழ்நாட்டின் விழிப்புக்காகவே எழுதவேண்டியிருக்கிறது; உயர்ந்த நூல்களைப் படிப்பதும் பயில்வதுமே எனக்கு மிக்க ஆராமையாய் இருக்கிறது' என்று விம்மிதத்தோடு சொல்வார்கள். ஆங்கில நூல்களைப் படித்துக் காட்டுவார்கள்; அடிகளிடம் ஆங்கில நூல்களின் நுட்பங்களும் அமைதிகளும் சில, அவ்வாறு அறிந்துகொள்ள நேர்ந்தது; சாக்கிருதத்தை இங்ஙனம் அவர்கள்

படித்துக் காட்டுவதில்லை; சில கற்பனைச் சுவைகளை மட்டும் தனியாக எடுத்துக் கூறுவார்கள்.

விடுமுறைக் காலங்களில் என் ஊரிலிருந்து நான் பல்லாவரம் சென்று வந்த பயணங்கள் பலப்பல; தொடர்வண்டி பெரும்பாலும் மாலை 7 மணிக்குத்தான் பல்லாவரம் நிலையம் சேர்வது வழக்கம்; அடிகளார் மாளிகையுள் நான் நுழையும்போது அவர்கள் படித்துக் கொண்டிருக்கும் கோலமே ஒவ்வொரு தடவையும் என் காட்சிக்குப் படும். ஒரு தடவை கூட அது பொய்த்தது இல்லை.

விடுமுறை அல்லாத காலங்களில் நான் சூளைமேட்டில் இருக்கும்போது குறுநில மன்னரின் மூன்று தலைமுறைகளாக ஒட்டக்கூத்தரைப் போலத் தொடர்பாக அலுவலில் இருந்து வந்தவர் மலைக்கொழுந்து பிள்ளை என்பவர்; மிக்க நம்பிக்கைக் குரியவர்.

முதல் தலைமுறையின் மிட்டாதார் முத்துக்குமாரசாமி முதலியார், யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலரின் சைவ பால பாடங்களிலும் இலக்கணங்களிலும் விருப்பம் வைத்து அழகிய பள்ளிக் கூடம் ஒன்றைத் தொடங்கினர்; தக்க பெரும்புலவர்கட்குத் தேர்வுத் தாள்கள் அனுப்பி முதற்றகுதியில் வரும் மாணவர்க்கு அரிய பரிசுகள் வழங்குவார். அவர் சிறந்த கலை மன்னர்; பெருநில மன்னரைப்போலவே பெருவாழ்வு வாழ்ந்தவர். அவர் காலத்தில் அப் பக்கம் முழுதும் சைவமும் தமிழும் மணங் கமழ்ந்து வந்தன. அடிகளார் காலம் அதுவாயிருந்திருந்தால் தக்க உதவிகள் பெற்றிருப்பார்!

அவர் பள்ளி, உயர் தொடக்கப் பள்ளியாக முன்னேறி விளங்கியபோதுதான், அவர் மைந்தர் அருணாசல முதலியாரால் நான் அப் பள்ளிக்கு வரவழைக்கப்பட்டேன். அருணாசல முதலியார் தக்க பொருளாளர்; தந்தையார் காலத்தில் 10 ஊர்களுக்குச் சொந்தமாயிருந்த மிட்டா, மைந்தர் காலத்தில் 40 ஊர்களுக்கு மேல் உரிமையுடையதாயிற்று. மைந்தர் அலுவலகத்திலும் மலைக்கொழுந்து பிள்ளை மதிப்புடன் விளங்கினர்; அமைச்சராயிருந்து உதவினர்.

அன்றுடம், அவர், அலுவலகத்திலிருந்து மாலை 7½ மணிக்குத்தான் தம் இல்லம் செல்வார். என் இல்லத்தைத்

தாண்டியே அவர் இல்லம் இருந்தது; தெரு அறையில் நான், சங்க இலக்கியங்களிலும் தொல்காப்பிய இலக்கணத்திலும் ஆழ்ந்து மூழ்கியிருந்த காலம்; எல்லாம் அடிகளால் நேர்ந்த பழக்கம்; மலைக்கொழுந்து பிள்ளை, ஒரு நாள் விடாமல் அந் நேரத்தில் நான் படித்துக்கொண்டிருக்குங் காட்சியைக் கண்டு கொண்டே செல்வார்; எல்லாரிடத்திலும் மிட்டாதாரரிடத்திலும் இதனைச் சொல்லிச் சொல்லி மகிழ்வார். அருணசல முதலியார் கடைசி காலத்தில், பாடம் ஒன்றுக்கு 100 வெள்ளி கொடுத்துத், திருமந்திரத்திற் சில பகுதிகளை என்னிடம் பாடங் கேட்டுக் கொண்டார். அவர் தந்தையாருக்கு அவர் ஒரே பிள்ளை; ஆனல், அவருக்குப் பிள்ளைகள் மூவர்; பிள்ளைகள் இருப்பதனுல், தம் செலவுக்குரிய பாகத்திலிருந்து மட்டும் திருமந்திரப் பாடத்துக்கு மிகுதியாகக் கொடுக்க முடியவில்லையே என்று வருந்துவார்; கோடைக் காலத்தில் நான் வெயிலில் அலையாதபடி, இருக்கும் இடத்துக்கே பெருந்துவை வருவித்துக் கொடுப்பார். சென்னைக் கீழ்ப்பாக்கம் மாளிகையை விட்டுச் சில காலம் அடையாற்று மாளிகையில் அவர் இருந்தபோது, அடிக்கடி என்னை வர வழைத்துக் கொள்வார்.

அடிகளார் மனப்பயிற்சி எப்போதும் மிக உயர்ந்த கலை நூற் பயிற்சிகளாகவே இருக்கும்; உலகத்திலேயே சிறந்த மேதைகள் எழுதிய அரிய கலைநூல்களையே அடிகளார் எப் போதும் பயன்படுத்துவார். அவர்கள் கலைப் பசிக்கு அவை எல்லாம சற்றும் போதமாட்டா; ஒருவர் முகத்துக்காக அவர்கள் கலை பயில்வதில்லை.

அறிந்தவரையில் அவ்வப்போதும் எல்லாக் கலைகளையும் செயற்படுத்திப் பார்ப்பார்; அவர் பழக்கம் அது!

இக் காலத்தில் அறிவியற் கலைகள் (Sciences) மிகு மலைப்பாக எண்ணப்படுகின்றன. அவை மக்களுக்குப் பயன்படு கலை களாக (Arts) மாறிப், பலவகைத் தொழில்களாக (Industries) திகழ்ந்து வருகின்றன. அவை உளப் பயிற்சியிற் சிறந்து திகழும்போது 'இசை' 'ஓவியம்' 'கவிதை' முதலிய கவின் கலைகளாக (Fire Arts) ஒங்குகின்றன. அடிகளார் இக் கவின் கலைகளில் மிக வல்லுநர்!

உலகம் முழுவதிலும் உள்ள கவிதைகளோடு நனிபழகி, நம் பழந்தமிழ்க் கவிதைகளையும் ஒப்பிட்டுப் பார்த்து, அறநிலை வழுவாத அழகொளியோடு திகழும் நம் சங்ககாலத் தமிழின் மாட்சிமையைப் பிழிந்தெடுத்து, அவ்வப்போதும் மாணுக்கர்க்கு வடித்துரைப்பார்; அதைத் தேனென்று சொல்லுவேனே! தேன் பாகென்றுதான் சொல்லுவேனே! இன்னதென்று சொல்ல உவமை ஒன்றும் இல்லையே;

உலகத்தின் மேதைகளெல்லாம் பெரும்பாலும் 'மனப் பயிற்சி' என்னும் கல்வி கலைப் பயிற்சியினாலேயே பாராட்டப் பெறுவர்; சிறந்த உலக வரலாறுகளெல்லாம் பெரும்பாலும் இம் முறையையே, அது உயர்ந்ததாதலின், பின்பற்றுகின்றன. அடிகளார் நிலை, இந்த அளவைகளுக்கெல்லாம் அப்பாற்பட்டது; நுணுகிப் பழகுவோருக்குத்தான் அருமைகள் தெரியும்; அருகில் இருப்பதால் மட்டும் அறிந்துகொள்ள இயலாது.

அடிகள் ஏதோ ஒரு தனித்தமிழ்ப் பணி கருதித் தமிழகத்தில், அருள் நழுவலாகத் தப்பிப் பிறந்துவிட்டார்கள்; சேற்றில் பிறந்ததனால் செந்தாமரைக்கு என்ன இழுக்கு? தமிழகம், கொழுந்தோடிய அவர்கள் கலைச் செழுமையைக் கடைப் பிடித்துக் கொண்டால் போதும்!

சங்கத்தமிழ் நூல்களில் முடிவான சில மெய்ப்பொருள்கள் வடிக்கப்பட்டிருக்கின்றன; முடிந்த கருத்து மன்பதைக்குப் பயன்படுதலே; முடிமணி போன்ற அந்த அறப்பேரழகை யார் அறிவார்?

"நயனில சொல்லினும் சொல்லுக, சான்றோர்
பயனில சொல்லாமை நன்று"

என்னும் பொய்யாச் செம்மொழி, எத்தகைய பேருணர்ச்சியில் எழுந்து திகழவேண்டும் என்பதைக் காண்மின்கள்!

தமிழ்ச் சுவை என்பதை, இப் பொய்யா மறையை ஒட்டி, அடிகள் எவ்வளவு முத்தமிழ்ச் சுவையாய் உணர்ந்திருக்கிறார்கள் தெரியுமா? அறத் தமிழாகிய இயற்றமிழ், அன்புத் தமிழாகிய கவின்கலை இசைத் தமிழாய், அது கொழுந்தோடிய நிலையில்

கடவுட் டிறன் பொதிந்து நாடகத் தமிழ்ச் சுவையாய் ஓங்கி யிருப்பதை உணர்ந்த முத்தமிழ்ச் சுவை நெஞ்சமன்றோ அடிகள் நெஞ்சம்!

'சேக்குவீயர்' என்னதான் உயிர்த்திறன் தோயப் பலப் பல நாடகக் கவிதைகள் இயற்றினாலும், 'மிலிடன்' போன்ற பேராசிரியர்கள் எவ்வளவுதான் உயர்ந்த நல்லிசைக் கவிதைகள் இசைத்தெழுதினாலும் உலகத்தில் ஆங்கிலம் போன்ற எம் மொழியும் 'முவ்வாங்கிலம்' முதலிய முச்சுவைப் பெயர்களைப் பெருமைக்குக், கொழுந்தோடிய சுவைக் காரணம் ஏதோ இருக்கவே வேண்டும்! ஆங்கிலம் முதலியன அழகு மொழிகளே யாயினும், அவிநயச் சுவை, மெய்ப்பாட்டியல், தெய்வ நலம் முதலியன அவற்றிற்கு ஏது? நாடக மெய்ப்பாடுகள் பற்றி அவற்றில் இலக்கணங்களும் இலக்கணப்படி இலக்கியங்களுமாக நூல்கள் உண்டா? அல்லது இலக்கியங்களின்படி இலக்கணங் களாவது உண்டா? அடிகளார், முத்தமிழ் வழியில் அதனை நன்கறிவார்கள்; அறிந்துணர்ந்து மகிழ்ந்ததன் அடையாளம், வாழ்க்கையில் கடைசியாக அவர்கள் எழுதிய 'அம்பிகாபதி அமராவதி' நாடகம்!' இது, இம் முத்தமிழ்ச் சுவையின் களஞ்சியக் குவியல் அன்றோ? சாகுந்தல நாடக ஆராய்ச்சி போல இந் நாடகத்துக்கும் ஒரு திறனாய்வு வெளியீடு உரை விளக்கத்துடன் வெளியிடுதல் இன்றியமையாதது.

அடிகளாரின் வரலாறு எங்ஙனமெல்லாம் மாட்சிமைப் படுகிறது என்பது, தமிழகமட்டுமன்றி உலகமெலாம் பரவும் வகையில் அமையும் நாளே, உலகத்தின் தனித்தமிழ்ச் சிறப்பு நாளாகும். சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் அடிகளார் வரலாற்றைக் கையடக்கமாக உலகமெங்கும் பரவச் செய்யும் கடமை உடையது! பொதுமறைப் பதிப்புகள்போல் அது பெருகுதல் வேண்டும்; அந் நிலையில், உலக மேதைகளின் மெய் வரலாறுகளெல்லாம் வெறும் விண்மீன்களாக ஒளி உமிழ்ந்து சூழ, அவற்றின் நடுவண் அடிகளார் மாண்பு, மாபெரும் தண்ணமிழ்து நிலவாய்ச் சுடர் வீசித் திகழும். அதற்கு உரிய காரிய காரணங் களுடன், மேல் கட்டுரைகளிலும் விளக்கங்கள் வரும்.

இ. உயிரில் நாகரிகம்

உயிரில் நாகரிகம் நிறைதல் என்பதை அடிகளார் வகைபிரித்து கனிபயினறு சான்றாண்மை நிறைந்தவர்கள் !

உயிரில் நாகரிகம் நிறைதலைத் 'திறம் நிறைதல்' என்ப. அது இரு வகைப்படும்; ஒன்று: உயிரின் இயல்பு மேம்படுதல்; மற்றொன்று: மேம்பட்ட அவ்வியல்பில் நலங்கள் நிறைதல்; முன்னதை 'ஒழுங்கு' என்றும், பின்னதை 'ஒழுக்கம்' என்றும் சொல்வதுண்டு.

'ஒழுங்கு' என்பது திருவள்ளுவர் தம் பொதுமறையில் கூறிய ஒழுங்குடைமையாகும்; ஒழுங்குடைமை பின ஒழுக்கம் எனப்படும்; அந்த அதிகாரமும், அந்த அதிகாரத்திற்கு அப்பாற்பட்டனவாய் வரும் அறங்களெல்லாமும் ஒழுக்கங்களாகும்.

'உயிர்த் திறம்! என்பது "தீது ஒரீஇ நன்றின்பால் உய்க்"கும் 'நீதித் திறன்' என்னும் அறிவுத் திறன்; உயிரின் அறிவு சிற்றறிவு; ஆதலால், அது எவ்வளவுதான் மலம் நீங்கி விளக்கமானாலும் அஃது ஓரளவு வரம்புடையதே; விளங்கினால், தன் எல்லை வரையிலேதான் விளங்கும்; அதற்கு மேல் விளங்குவது அதன் இயல்பாகாது. அவ் வரம்பு வெவ்வேறு வகையாய் இருக்கும்; உயிரின் பரவல் கடவுட் பரவலைப் போன்றதன்று; எங்கும் நிறைந்த கடவுட் பரபபில், (வியாபகம்) அது விரவியிருக்கிறது (வியாப்பியம்).

உயிரின் திறம் எனப்பட்ட இவ்வறிவியல்பு, புறம் வந்தால், ஆராய்ச்சி வண்ணமாகி மனம் என்னும் கண்ணாடியில் அதன் உருத் தோன்றும்; பருவுடல் நுண்ணுடல், இரண்டையும் ஆட்கொள்ளும்; இவை சிறப்புற்றால், 'ஊன் உருக்கம்' எனப்படும்; 'ஊன் என்னும் பருவுடலும், நுண்ணுடலும் சிறப்புற்றது' என்பது கருத்து.

அகம் நோக்கினால், 'அன்பு' 'இரக்கம்' (சீவகாருணியம்) என்று மிளிரும்.

'அன்பு' என்பது, தேடும் பொருளெல்லாம் 'தமக்கன்று' எனத் தெளிந்து, தாராளமாய்த் தக்கார் பொருட்டுச் செலவழித்துக் கொண்டிருக்குங் குணம்; 'அன்று' என்பதும் 'அன்பு' என்பதும்

ஓரே சொற்பகுதியை உடையன; 'அற்பு' 'அற்புதம்' என்பனவும் 'அன்பு' என்பதன் திரிபுகளே; பிறர்க்காகப் பொருள் தேடும் வகையில், அதற்காகத் தன் உடம்பையும் சூழலையும் காத்துக் கொள்ளும் தன்னலம், ஒரு சிறிது மட்டும் இந்த அன்புக்கு உண்டு. 'உயிரிரக்கம்' என்னும் அருளுடைமையின் நிலையில் அத் தன்னலமும் இல்லை.

உயிரின் அறிவுநிலை பழக்காய் போன்றது; அது, அன்பாக உயர்ந்து பழமாகவும் அருளில் இணங்கிக் கனிந்து கனியாகவும் ஒளி கொள்ளும்; இதற்கு ஆண்டவன் ஆற்றலாகிய திருவருள், உயிரின் ஆற்றலாகிய, விளங்கிய அறிவுக்குப், பதிஞானப் பார்வை தந்து துணை செய்ய வேண்டும்.

உயிரின் அறிவில் இங்ஙனம் இறை திருவருள் இறங்கி ஒளி கொள்ளுதலையே 'உள்ளொளி பெருக்குதல்' என்று முன்னோர் குறிப்பிடுவர். 'ஊனினை (பருவுடல் நுண்ணுடல்களை) உருக்கி, உள்ளொளி பெருக்குதல்' (உயிர்த்திறம் மிகுத்தல்) என்பர் பெரியோர்; உயிர்த்திறனாகிய அறிவுக்காய், திருவருள் ஒளிப்பதிவால் அன்பாகிய பின்பு அருளுமாதலைக்,

"காயெலாம் கனியெனக் கனிவிக்கும் ஒருபெருங் கருணையமுதே"

என்றருளுவார் வள்ளலார்.

"அன்புருவம் பெற்றதன்பின் அருளுருவம் அடைந்து நீ
இன்புருவம் ஆயினையே எழில்வாதவூ ரிறையே!"

என்னுந் திருவருட்பாவும் நினைவு கூர்தற்குரியது.

உயிரறிவாகிய ஆராய்ச்சி நீதித்திறன், அன்பு இரக்கம் என்னும் பழமும் கனியுமாய் ஒளிபெறுதல் என்க.

ஆசிரியர் மறைமலையடிகளார், ஒளித் திறனாகிய அறிவு நிலையில் தமக்குரிய எல்லை வரையில் பெருக்கிக் கொள்ளுதலையும் அன்பு அருள் என்னும் உள்ளொளி மிகுத்தலையும் வாழ்க்கையிற் பயின்று பயின்று, உயிரிலும், நாகரிகம் உடையவரானார்கள்; திருவள்ளுவர் இவ்வுண்மை தேற்றி,

"ஒழுக்கம் விழுப்பம் தரலான், ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்'

என்று ஒழுங்கு ஒழுக்கங்களை உயிரின் திறங்களாக வகுத்து, வழி காட்டி யருளினர். 'மறை நூல்' என்னும் திருக்குறள், உயிரினுண்மைகளை எவ்வளவு சிறப்பாக எடுத்துக் காட்டி உய்விக்கிறது என்பதை இது கொண்டு அறிந்துகொளளலாம்.

உயிரின் அறிவுநிலை, அன்பு அருளாய் உள்மடங்கி உயர்ந்து நுணுகி விளங்கி ஒளிகொள்ளுதலே மனிதர்க்கு மாண்பு. பொது மக்களின் இன்றியமையாத திருத்தங்களுக்காக மட்டுமே ஒரோவொருகால் சான்றோர்க்கு அது, புறம் வரும்.

இனி, அடிகளின் வாழ்க்கையில் இவ் உயிர்ப் பயிற்சிக்கு இரண்டொரு சான்றுகள் எடுத்துக்காட்டுதலும் வேண்டும்.

1911இல் அடிகளார் – கடவுள் ஒருவருக்கே தொண்டு பூண்பது என்று உறுதி எடுத்துக்கொண்டுவிட்டார். செல்வர்கள் யாரிடமும் பின்னிரந்து நிற்பதில்லை. தம் அருமை யறிந்து எவரேனும் உதவுவாரானல் அளவுடன் ஏற்றுக் கொள்வார். தம் பெருமைக்காக எவரேனும் ஏதும் உதவ முன் வந்தால், அதனைக் கண்ணெடுத்தும் பாரார். ஒருகால் சேயூர்பக்கத்தை சேர்ந்த செல்வரொருவர் தமக்குரிய தம் பெருமை தோன்ற ஆரவாரத்துடன் நன் கொடைப் பொருள் முந்நூறு வெள்ளி அளிக்க முன் வந்தார். அடிகளுக்கு அது தேவையான நேரந்தான். ஆயினும், அதனை அவர் எடுத்துக்கொள்ளவில்லை; திருப்பி விட்டார். வந்தவர் தம் ஆரவாரத்தைக் குறைத்துக்கொண்டு மிகுதியும் வேண்டிக்கொண்டமையால், அடிகளார் தம் செலவுக்குத் தேவையான இருபத்தைந்து வெள்ளிமட்டும் எடுத்துக் கொண்டு மற்றதை அவரிடமே வழங்கிவிட்டார்.

செல்வர் பின் செல்லாத மானமுடைய்வர் அடிகளார். பேரூர் சாந்தலிங்க மடத்தின் ஆண்டுவிழா ஒன்றிற்குச் சென்றிருந்த போது, கல்லூரி மாணவராய்க் கோவையிற் பெருஞ் செல்வராய் ஆலை முதலாளியாய் விளங்கிய ஒருவர், தாம் நேரில்வந்து அழையாமல், தம் இல்லம் போதருமாறு அடிகளுக்கு வண்டியனுப்பி வைத்தார். அடிகள் செல்லவில்லை. பல்லாவரம் திரும்பியபின் மிகவும்

ஏழையான அன்பரொருவர் அங்கப்பரிடம், அன்பும் அருளும் கூர்ந்து அவரில்லம் சென்று, பலர் நன்கொடைகளால் அவர் அமைத்த சிறு திருக்கோயிலின் குடமுழுக்கிலுங் கலந்துகொண்டார்.

உயிரின் அறிவுநிலை, அன்பு அருள் நிலைப் பயிற்சிகளின் வாழ்க்கை நிகழ்ச்சிகளாகத் திருவருள் சேர்க்கையே ஒழுகலாருகக் கொண்ட அடிகளார், இங்ஙனம் நடந்துகொண்ட நிலைகள் பலப்பல.

ஈ. அருள்நிலையில் நாகரிகம்

மனிதற்கு 'மாந்தன்' என்றொரு சிறப்புப் பெயருண்டு. மனம் படைத்தவர் 'மனிதர்' 'மானவர்' எனப்படுவர். 'மன் 'மான்' என்பன மனம் என்னும் சொல்லின் பகுதிகள்; இப் பகுதியின் அடியாக 'மன்பதை' என்னுந் தமிழ்ச் சொல் முதலியனவும் வரும். ஆனால், அப் பெயர்களைவிட 'மாந்தன்' என்னும் பெயர் சிறந்தது. 'துய்ப் பவன் என்பது அதன் பொருள். 'மாந்து'தல் துய்த்தலாகும்.

'உயிர்' என்னும் சொல்லும் அக் கருத்து உடையதே. உய்தல் உயிர்த்தலாகும். 'முத்திதனில் மூன்று முதலும்' என்னும் மெய் கண்ட நூற் பாடலில் 'துய்த்தல் அணு' என்னும் உயிரினியல்பு (மாந்துதலாகிய துய்த்தலியல்பு) கூறப்படுகிறது. 'மன்' என்பதி லுள்ள றன்னகரம் தங்கரமாகத் திரிந்தது; 'மந்திரம்' என்பதிலும் இத் திரிபைக் காணலாம்.

இங்ஙனம் அறிவறிந்து நுகரும் மாந்தர், ஒரு பக்கம் 'பருவுடல்' 'நுண்ணுடல்'களையும், மற்றொரு பக்கம் 'திருவருள்' 'கடவுள்நிலை' என்பவற்றையும் மாந்துந் தன்மை யுடையர். உயிரின் அறிவுநிலை, அன்பும் அருளுமாய்ப் பழுத்துக் கனிவடைந்தபின், எய்தும் அரிய பேறுகள் இவை!

திருவருள் நிலைக்கும் கடவுள் நிலைக்கும் தம்பொருட்டுத் தேவைகள் எவையுமில்லை யாயினும், உயிர்களின் பொருட்டு உயிர் களின் இயல்பில், 'பொதுமை' என்னும் ஒளி விளக்கமும் 'புதுமை' என்னும் புத்தின்ப நுகர்வும் நிறைப்பது இன்றியமையாத தாயிற்று.

இவ்விரண்டும் முறையே அம்மையப்பர் என்னும் ஆண் பெண் இயல்புடையன. இவை யிரண்டையும் முறையே திருவருளும் சிவமும் விளக்கும்.

"மல நீங்கிய துணையானே சுகப்பிரபை' மாத்திரையே விளங்குவதன்றி, அதீத நிலைக்கண்ணதாகிய 'சிவத்துவ விளக்கம்' எனபபடும் 'பரமசுகம்' தோன்றாமை"

எனவும்,

"இருள் நீக்கத்தில் ஒளி விளக்கம் போலப், பசுத்துவ நீக்கத்தில் அருள் விளக்க' மாத்திரை உடன் நிகழ்வதன்றி, ஆநந்த விளக்கம் உடன் நிகழாமை"

எனவும்,

"அருள் விளக்கத்"திற்கும் 'ஆநந்த விளக்கத்'திற்கும் தம்முள் வேறுபாடு"

எனவும் சிவஞானபோத மாபாடியம், (நூற்பா 11) விளக்கும்.

அறிவுநிலை என்று எடுத்துக்கொண்டால், ஆண் பெண் பாகுபாடுகள் எல்லா உயிர்களிலும் இயல்பாகக் காணப்படுகின்றன. 'உயிர்கள் அறிவுடையன; அறிவுடையன எல்லாம் ஆண் பெண் அமைப்புடையன' என்பது காட்சியில் தெளிவாயிருக்கிறது. அகத்துக் கேற்றபடியே புறம் அமைதலின், உயிரிலேயே ஆண் பெண் அமைப்பு இல்லை யென்றால் உடம்பிலும் அமைய வாய்ப்பில்லை. அறிவுடைய உயிர்ப்பொருள் ஒவ்வொன்றும் இதனால் தம்மில் ஆண் பெண் அமைப்புடையன என்று துணிய வேண்டியிருக்கிறது.

சிலர், நுண்ணுடம்பில் ஆண் பெண் அமைப்பே யன்றி, உயிரில் இல்லை என்பர்; சிவஞான முனிவர் தமது சிவஞான சித்தியார் உரையில் (1 : 89)

"சத்தியும் சிவமும் எனத் தன்னுள்ளே இருவேறு வகைப்பட்ட தன்மைகள் வைத்தலானன்றே பலவேறு வகைப் பட்ட உயிர் வடிவங்கள் அனைத்தும் குறியானும குணத் தானும் ஆண் பெண் என" என்றது, நினைவு கூர்க.

பட்டினத்தடிகள் போன்றோர், தாமே தந்தையாகவும் தாயாகவும் இருந்ததாகக் கூறுவது, அன்னையை மட்டும் இழந்த மகவுக்குத் தந்தையே தாயுமாய் இருந்து உதவிய செய்தியை ஒக்கும்.

பிறப்பில் ஆணாயிருப்பது பெண்ணாகவும் பெண்ணாயிருப்பது ஆணாகவும இடையே மாறிவிடும் செய்திகள் கேட்கப்படுகின்றன; அவையெல்லாம் அலியாகவும் பேடியாகவும் பிறந்தவை.

புராணங்கள் இதிகாசங்கள் முதலியவற்றில் முற்பிறப்பில் ஆணாயிருந்து இப் பிறப்பிலும் ஆணாகப் பிறப்பதையே சொல்லுகின்றன; பெண்ணாயிருந்தது பெண்ணாகப் பிறப்பதையே கேட்கிறோம்.

பிறந்த பிறப்பில் உயிர் பெண்ணாயிருப்பது, பொய்மையாய் ஆண்கோலம் பூண்டால், தவநிலையினர் அவ் வுண்மையைத் தெரிந்துகொள்கின்றனர்; தமது தவத்தின் ஆற்றலால், அவ்வாறே மாற்றியுங் காட்டுகின்றனர்.

ஓராவிற்கு இருகோடு முளைத்து இரண்டும் ஒன்றையொன்று நோக்கிக்கொண் டிருப்பதும், ஒரு காகத்தின் இரு கண்களுக்கு ஒரு மணியே ஊடாடி இருகண் பார்வையும் ஒரு பார்வையா யிருந்து வருவதும் காட்சியில் தெரிகின்றது.

பருவுடல் நுண்ணுடல் என்னும் இரண்டும் எப்படி உடல் என்று பெயர் பெறுகின்றனவோ, அப்படியே திருவருள் நிலையும் சிவ அருள் நிலையும் ஒரு பொருளாகவே ஒரு கடவுளாகவே எண்ணப்படுமாயினும், தம்மில் வேறு வேறியல்பும் உடையன.

"தோலும் துகிலும் குழையுஞ் சுருள்தோடும்
பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்
சூலமுந் தொக்க வளையும் உடைத் தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய் கோத்தும்பீ"

எனத் திருவாசகமும்,

"தாழ்சடையும் நீண்முடியும் சக்கரமும் ஒண்மழுவும்
சூழரவும் பொன்னாணும் தோன்றுமால்—சூழும்
திரண்டருவி பாயும் திருமலைமேல் எந்தைக்கு
இரண்டுருவும் ஒன்றாய் இசைந்து"

என்று திருநாலாயிரமும் இவ்வுண்மையினை விளக்கி உரைத்தன. எல்லாம் வல்ல முழுமுதற் கடவுள் மாதொருபாகனாய் (அர்த்தநா

ரீசராய்) அம்மையப்பராய் விளங்கும் இவ்வழகை எல்லா உயிர்ப் பொருள்களிலும் நேரிற் காண்கின்றோம்.

"சத்தியும் சிவமு மாய தன்மைஇவ் வுலக மெல்லாம்
ஒத்தொவ்வா ஆணும் பெண்ணும் உயர்குண குணியு மாகி
வைத்தனன் அவளால் வந்த ஆக்கம்இவ் வாழ்க்கை யெல்லாம்
இத்தையும் அறியார் பீட லிங்கத்தின் இயல்பும் ஓரார்"

என்னும் சிவஞானசித்தியாரிலும் இவ்வுண்மையைக் காணலாம்.

உயிர்ப் பொருள்களில் ஆணும் பெண்ணுமாகவும் உயிரற்ற அறியாமைப் பொருள்களில் குணமும் குணியுமாகவும் இவ்வாண் பெண் இயல்புகள் விளங்குதலைச் சித்தியார்ப் பாடல் நன்கெடுத்துக் காட்டுகின்றது. இவ் வியல்புகள் இரண்டும் தமக்குள் ஒத்தும ஒவ்வாமலும், தொடர் வண்டியின் இரு தண்டவாளங்களைப்போல விளங்குகின்றன. இரு தண்டவாளங்களும் இரு பிரிவுகளாய்த் தம்முள் ஒவ்வாதனபோலப் பிரிந்து சென்றுகொண் டிருந்தாலும், தமக்குள் அவை ஒத்து இணக்கங் கொண்டிருப்பதை அறியாதார் யார்? தமக்குமேல் உலகமாகிய தொடர்வண்டி இயங்கிக்கொண் டிருப்பதையும் உணராதார் யார்?

எல்லாம் வல்ல ஒரு முழுமுதற் கடவுள், அம்மையாய் உலகத் தொண்டுகளுக்கும், அப்பனாய் உண்மைத் தொண்டுகளுக்கும் பணி புரிந்து வரும் அழகை, உதவியை, உயிர்கள் மறக்க முடியுமா? உருகுவதைத் தவிர வேறென்ன செய்ய முடியும்? பற்று நீங்கச் செய்வது, பக்குவஞ் செய்வது, ஒளிவிளக்கம் செய்வது (மல நீக்கம்) அம்மையின் அருள்! மலங்கள் நீங்கி ஓரளவு தூய்மை எய்திய உயிரின் இறத்தில், மலவாதனையையும் நீக்கி முழுத்தூய்மை யுண் டாக்கிப், புதுமை புதுமையாய் நாளும் இன்பம் ஊட்டி வருவது (சிவப்பேறு) அப்பன் அருள்!

'உள்ளொளி பெருக்குதல்' அம்மையின் திறமாதலோடு, தன்னலங் கழன்ற பொதுமையையும் அதனில் அது நிழலாட விடுகிறது. அப்பன் திருவருள் புதுமை புதுமையாய் 'உலப்பிலா ஆனந்தத் தேன் சொரிந்து' உயிர்களை உய்விக்கின்றது. புணருந் தொறும் பெரும்போகம் இதனால் உண்டாகின்றது. முன்னைப் பழம் பொருட்கு முன்னைப் பழம் பொருளாய் விளங்கும் இறை நிலை, பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப் பெற்றியதாய்த் தேன் பிலிற்றிக்கொண் டிருக்கின்றது.

1600 ஆண்டுகளுக்கு முன் சிவனடிப் பேரன்பில் ஈடுபட்ட மாணிக்கவாசகரும், அவருக்கு முன்னும் பின்னும் உருகி அடியடைந்த பேரடியார்களின் ஆருயிர்களும் இன்னும் இன்புற்றபடியாய்ப் புதுமை புதுமையாய்ப் பேரின்பம் துய்த்து வருகின்றன; நாழி கொண்டு ஆழியை அளந்துவிட முடியுமா?

உரையாசிரியர் மெய்க் கருத்தறியாமல் சிலர் கடவுளின் அருளே அம்மையென்று கூறுவதுண்டு; 'அம்மைக்கும் அருளுண்டு, அப்பனுக்கும் அருளுண்டு' என்று சேக்கிழாரடிகள் தனித்தனியே எடுத்துக் காட்டி இணக்குகின்றார். சீகாழித் தெருவில் திருஞான சம்பந்தரும் அப்பரும் இருவராய் இணைந்து செல்வதை அப் பெருமான்,

"இருநட்கடு உண்டவர் அருளும்
ஈன்றுள்தன் திருவருளும் போல"

என்று அருளிச் செய்வார்.

இங்கே ஆசிரியர் மறைமலையடிகளார் திருவருட் பயிற்சியாகிய பொதுமையை நிறைவாகப் பெற்றுத் திருவருட் சான்றோராய் விளங்கினர் என்பதற்கு அவர்களுடைய 'பொது நிலைக் கழக' அமைப்பும் சீர்திருத்தங்களுமே தக்க சான்றாகும்.

தம்மை மறந்த நிலையில் தம் அன்பையும் அருளையும், எல்லாம் வல்ல திருவருட் செயலில் இரண்டறக் கலக்கிக் கொள்வது அவர்கள் பயிற்சிகளில் ஒருவகை. திருவருட் செல்வத்தைத் தவிர மற்றைச் செல்வங்களை அடிகள் ஒரு பொருளாக எண்ணாதவர்; எவ்வளவு பெரிய உயிர்களையும் தெய்வமாகப் பேணாதவர்;

"சிறுநெறிகள் சேராமே திருவருளே சேரும் வண்ணம்"

நாளும் பயின்று வருபவர்.

உ. சிவநிலையில் நாகரிகம்

இதனை 'உண்மைத் திரு' (புதுமைத் திறன்) என்றும் சொல்லி விடலாம்; உயிரின் சிறப்புக் கருதி, உரிய காலத்தில், திருவருட் செல்வி, உயிரைச் சிவத்துடன் சேர்த்துப் புதுமை இன்பத்தை நுகரும்படி செய்யும்; புதுமையைப் பெறுவதற்காகவே பொதுமை அறம் கையாளப்பெற்றது. பொதுமை உண்டாகாமல் புதுமையும் உண்டாகாது.

"நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்"

என்னும் திருமந்திரத்தில் பொதுமைச் சிறப்பும் அதனல் புதுமை இன்பமும் நிழலாடுதல் காணப்படும்.

ஆசிரியரடிகளார் தம் வாழ்நாள் முழுமையும் உண்மைத் திறத்திலேயே, அஃதாவது புதிய புதிய கொள்கையிலேயே ஒழுகியவர்கள்; அவர்கள் கருத்துக்களெல்லாம் நாட்டுக்குப் புதுமையுண்மைகளை எப்போதும் விசிறிக்கொண் டிருந்தன. அறியாதார் சிலரிடமிருந்து எதிர்ப்புக்களும் மறுப்புக்களும் தோன்றியபடியிருக்கும். மன்பதை நலங் கருதி அடிகளாரும் உண்மைகளையும் புதுமைகளையும் மேன்மேலும் தெளிவித்து விளக்கங்கள் கொடுத்துக் கொண் டிருப்பார்கள். உயிர் உணர்வில் சிவம் நிறைகிறது என்பதற்கு இஃது அடையாளம்! அடிகளார் வகையில் சிவம் தன்னிலையிலும் நிறைவுபெற் றிருந்தது.

உயிர்கள் எக்காரியம் செய்தாலும் ஆண்டவனுக்கு அது திருவுள்ளமா? என்பதனை முதலில் தெரிந்துகொள்ள வேண்டும். திருஞான சம்பந்தர் சமணர்களோடு வாதிடுவதற்குமுன் அதற்கு ஆண்டவன் திருவுள்ளம் உண்டா என்று அறிந்துகொள்ள விரும்பினுர். ஆலவாய்த் திருக்கோயிலுக்குச் சென்று ஆண்டவனை வேண்டினுர்.

"வாது செய்யத் திருவுள்ளமே"

என்று கேட்டார். இறைவன் கட்டளை பெற்றுர்; பெற்று, அதற்கு மேலேதான் அரண்மனை சென்று சமணரோடு வாதிட்டார். வெற்றியும் எய்தினுர்; ஏடு எதிரேறியபோது, 'அவர் தமிழால் ஏடு எதிரேறிய' தென்று அருணகிரிநாதர் அதனை வியந்து மகிழ்ந்தார். தமிழ்ச் சுவை இன்னதென்பதற்கு இது சான்று! தெய்வச் சுவையின்றித் தமிழ்க்குச் சுவை ஏது? தெய்வச் சுவை ஏருதது இலக்கியம் ஆகுமா? தொல்காப்பியமும் சங்க நூல்களுமாகிய இலக்கண இலக்கியங்கள் தெய்வச் சுவை ஏருதனவா! "பிறவா யாக்கைப் பெரியோன்" எனவும், "தெய்வம் தெளிமின்" எனவுங் கூறிய சிலப்பதிகாரம் சிறந்த இலக்கிய மன்ருே!

சமயகுரவரிற் பலரும் அத்தகையவரே. தனித்தமிழ் இயக்கத்துக்கு ஆண்டவன் திருவுள்ளத்தை அடிகள் பெற்றுக்கொண்டார். இதனைப் பலர் அறியார்.

ஒரு நேரம் (23, 24-7-1927) தஞ்சாவூரில் மாபெரும் புலவர் விழாவில் இத் தனித்தமிழ் இயக்கம் வீறுற்றது. இறைவன் திருவுள்ளத்தை அடிகளார் அறிந்து துணிந்து செயலாற்றினர்.

இறைவன் நம்பிக்கைக்கு அடிகளார் வரலாற்றில் பல நிகழ்ச்சிகள் உண்டு; வெறும் வாயுரையால் இவ்வுறுதி நிலைபெறுவதன்று; வாழ்க்கையில் இடர் நேர்கின்ற காலங்களிலேதாம் இவ்வுறுதி விளக்கமாகும். ஒன்றை இங்கே குறிப்பிடலாம்.

வடநாட்டுப் பயணத்தில் 'சிகந்தராபாத்து' அருகில் மாலை வேளையில் தொடர்வண்டியிலிருந்து, அடிகளார், குறிப்பிட்ட முகவரிக்குச் செல்ல வண்டி அமர்த்திக்கொண்டார்! வண்டிக்காரன் மலைக் கணவாய்களின் வழியே மிகு விரைவாக வண்டியை ஓட்டிச் சென்று ஒரு தனி இடத்தில் கத்தியை உருவிக்காட்டி அச்சுறுத்தி அடிகள் அணிந்திருந்த பொற்சங்கிலி பின்னிய ஒரே ஒரு சிவ மணியைத் தனக்குக் கொடுத்துவிடும்படி கேட்டான்.

அடிகளார் சற்றும் அஞ்சவில்லை. மாலை எட்டு மணியிருக்கும். 'சிவமணி இறைவன் அடையாளம்; அதனைத் தர இயலாது; இறைவன் இருக்கிறன்; நீ குத்து பார்க்கலாம்" என்று நெஞ்சு நிமிர்ந்து கூறினர்.

வண்டிக்காரனுக்கு என்ன தோன்றியதோ தெரியவில்லை. அடிகள் திருவடியைத் தொட்டு வணங்கிக்கொண்டு 'அடியேன் அறியாமற் செய்த பிழையை மன்னித்தருளவேண்டும்' என்று வேண்டிக்கொண்டு, உரிய இடத்திற் சேர்த்துவிட்டு, வண்டிக் கூலியும வாங்காமல் திரும்பிப் போக முற்பட்டான்;

அடிகளார் அவனை அழைத்து 'நீ பெருந்தன்மை மிக்கவன்; உனக்கு இரு மடங்காகக் கூலி கொடுக்கிறேன்; நீ கட்டாயம் பெற்றுக்கொள்ளத்தான் வேண்டும்' என்று பரிந்தளித்து நீடு வாழ்த்தி அனுப்பி வைத்தார்.

இங்ஙனமெல்லாம் ஆசிரியர் மறைமலையடிகளார் உடல், மனம், உயிர், அருள், சிவம் என்னும் எல்லாப் பிரிவுகளிலும் விளக்கம் நிறைந்தவராய், நாகரிகச் சான்றோராய், நாளுந் திகழ்ந்து சுடர் வீசி விளங்கினர்.

௪. இயல்பு நலம்

தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட இத் தென் ளுட்டில் அடிகளார் தோன்றியதனல், அவர்களுக்கும் தாய் மொழி **தமிழாயிற்று.**

தாய் மொழியாகிய தமிழைப் பயில்வார் அரியராய் இருந்த காலத்தில் அடிகள் தோன்றியிருந்தும், இந் நாட்டின் இயற்கை மொழியாகிய அதனையும் இயற்கை நெறியாகிய சிவநெறிக் கோட்பாடுகளையும் அடிகள் நன்கு பயின்ருர்; இரண்டிலும் புலமை, மிக உயர்வாக அமைந்துவிட்டது.

உயர்வுக்குக் காரணம், இந் நாட்டின் இயல்பு மொழி தமிழ் என்பது ஒன்று; அல்லாமலும், இயல்பு நலம் அடிகளிடம் சிறந்திருந்தமை மற்ருென்று. மேலும். இவ் வியல்பு நலம் நன்கு சிறக்கும் படி, பகுத்தறிவு மாட்சியும் ஆராய்ச்சியும் அமைந்த ஆங்கில மொழியறிவும் அதனில் உயர்ந்த நூற்பயிற்சியும் இயற்கை நேர்வாக அடிகளுக்கு இனிதமைந்து விட்டன. பிறவியே, அடிகளுக்குக் கடவுளின் இயற்கை வழியில் அமைந்தது; அதனல், எம் முகத்திலும் இயல்பு நலமே தாண்டவமாடியது.

இயற்கையும், செயற்கையும்:

இயற்கை நெறியை 'உண்மை நெறி' எனலாம்; 'தெய்வ நெறி' என்றும் இதனைச் சொல்வதுண்டு.

'அப்பன்', 'அம்மை' என்னும் தெய்வப் பகுதிகள் இரண்டில் அப்பன் என்பது தூய இயற்கை நிலை; தூய இன்ப நிலை அல்லது வீடுபேற்று நிலை.

'ஈசனவன் எவ்வுயிர்க்கும் இயல்பானன் சாழலோ'

என்பது திருவாசகம்.

அம்மை என்பது, அவ் வியற்கையோடு ஒட்டிய அருட் செயற்கை நிலை; அஃது இருவகை: உயிர்களுக்காக நிகழும்

ஐவகை நடனம் என்பது (உலகப் படைப்பு, காப்பு முதலியன) ஒன்று ; படைத்த இயற்கை யுலகத்தில் அம்மை அங்கங்கும் மறைப்பம்மையாய் அமர்ந்து, உயிரறிவு உயிருணர்வுகளை அவற்றிற் பதியும்படி செய்து, ஈர்த்து ஆட்கொள்ளும் ஆற்றல் நிலை அழகு நிலைகள் மற்றொன்று.

"நம்மையும் ஓர் பொருளாக்கி நாய்சிவிகை ஏற்றுவித்த
அம்மை எனக்கு அருளியவா றார்பெறுவார் அச்சோவே"

என்றார் மாணிக்க வாசகரும்.

இயற்கையோடு ஒட்டிய இந்த இரண்டாவது அருட் செய்கை நிலையைத்தான், 'உலகியற்கை' 'மக்களியற்கை' என்று பாராட்டு கிறோம். அம்மையின் இந்த இரண்டாவது நிலையே நமக்கெதிரிற் காணப்படும் உலகம்.

மறைப்பம்மையாக விளங்கும் இந்தக் கவர்ச்சிகளை அவற்றின் அழகியல்படி எடுத்து விளக்குவனவே கலை நூல்கள்; விளக்குவோர், உயர்ந்த புலவர்கள் ; ஆதலால், இந்த இருவகை இயற்கைகளே (அப்பன் இயற்கையும் அம்மையின் இருவகைச் செயற்கைகளும்) அடியார்களுக்கு ஊற்று. இந்த ஊற்று வடிக்கப்படாமல் வெளி வரும் நூல்கள் உண்மை நூல்களாகா.

அம்மையின் இரண்டாவது செய்ற்கை எனப்படும் உலகியற் கையின் வழியே மக்களின் வாழ்க்கை நிகழவேண்டும். அது செயற் கையிற் செயற்கை எனப்படும். இச் செயற்கை நெறி என்பது, அந்தத் தெய்வ இயற்கை செயற்கைகளின் வழியே அமையும் மக்கள் கடமைகள். இதனைத்தான் புலவர்களுக்கு அமைய வேண்டிய 'இயல்பு நலம்' என்கிறோம்.

இவ் வேறுபாடுகளை இனிது தெளிந்து கொண்டால், புலவர்கள், மக்களுயிர்களில், அருமைகளோடு குலாவும் 'தெய்வப் பெற்றி'யினர் என்பதும், மக்களுள் 'முன்னணியினர்' என்பதும், 'வழிகாட்டிகள்' என்பதும், ஏனை அனைவரும் அவர்களைப் பின் பற்றியே உய்ய வேண்டுமென்பதும், அவர்களுள்ளும் சிறந்தார் சமய குரவர் போலும் அடியார்கள் என்பதும், எளிதில் உணர லாம்.

இயல்பு நலம் வேறாகவும் மக்கள் செயல் வேறாகவும் ஒட்டாமல் நடந்தால் வாழ்க்கை மேம்படாது; அடிகளார் வாழ்க்கை அத்தகையதன்று; தெய்வ இயற்கை செயற்கைகளோடு ஒட்டிய வாழ்க்கையாய் வெற்றி மிக்கது!

அடிகளுக்கு இளமையிலேயே இந்த இயல்பு நலம் நன்கு அமைந்துவிட்டதனால், அவர்கள் நூல்களெல்லாம் பேச்சுக்களெல்லாம் இயல்பு வழியிலேயே சிறந்து நின்றன. சங்க இலக்கியங்களில் அடிகள் உள்ளம் சென்றதற்கு முக்கிய காரணம், இந்த இயல்புநலம் அந்த இலக்கியங்களில் வாய்ப்பாக அமைந்திருந்தமையே!

சங்க நூல் இயல்பு :

சங்க இலக்கியங்கள் அவற்றின் இலக்கணங்கள் எல்லாம் இயற்கை நலத்தை அடிப்படையாகக் கொண்டு மக்கள் செயல்களாக வெளிவந்தவை!

பத்துப் பாட்டில், 'நெடுநல் வாடை' ஒரு பாட்டு: நக்கீரனார் இயற்றியது.

"ஆறு கிடந்தன்ன அகல் நெடுந் தெரு" (30)

என்று அதில் ஒரு வரி காணப்படுகிறது. அகன்ற தெரு ஆறு போல நீண்டு கிடக்கிறதாம்; எத்துணை இயல்பான உவமையோடு கூடி இந்த வண்ணனை வாய்ந்துள்ளது!

1928இல் அடிகளார் தம் பரிவாரங்களுடன் திருச்சிராப்பள்ளி சென்றிருந்தபோது, ஒரு நாள் காலையில் திருச்சி உச்சிப்பிள்ளையார் கோயிலுக்கு எல்லோரும் சென்றிருந்தோம். திருச்சியின் பெரும் புலவர் நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் முதலியோரும் உடன்வந்திருந்தனர்; வழிபாடு முடிந்தபின் எல்லோரும் வெளியில் வந்து, ஒரு பக்கம் காவிரியின் அழகு காட்சிகளையும் அதன் எதிர்ப்பக்கம் திருச்சி நகரத்தின் அழகு தோற்றங்களையும் கண்டு பெரு மகிழ்ச்சியிற் களித்தோம்; அப்போது மலைக்கோட்டையிலிருந்து திருச்சி தொடர் வண்டிச் சந்திப்புக்கு மிக நீண்டு செல்லும் சாலை எதிரில் தெரிந்தது; 'ஆறு கிடந்தன்ன அகல் நெடுந்தெரு' என்னும் இந் நெடுநல்வாடை அடியையே அடிகளாருக்கு நாட்டார் நினை

ஓட்டி, ஒரு பக்கம் ஆறும் அதன் எதிர்ப் பக்கம் அந்த ஆறே கிடந்தன்ன அகல் நெடுந் தெருவும், இவ் விரண்டையும் இடையில் நின்று நன்கு காண்பதற்கு இவ் வுயர்ந்த மலையும் திருச்சியில் ஒருங்கு வாய்ந்திருப்பது, சங்க காலச் சான்றோர் வாய்மொழி இன்றைக்கும் எவ்வளவு இயல்பாயிருக்கிறதென்பதை இனிது விளக்குகிறதென்று வியந்து பேசினர்; பொருத்தமாக நாட்டார் நினைவுகூர்ந்து எடுத்துக் காட்டியதை அடிகளார் மிகப் பாராட்டி மகிழ்ந்தார்கள்.

அன்றியும், 'நெடுநல்வாடைப்'பாட்டில் கூதிர்க்காலமும் அதில் வீசும் வாடைக் காற்றும் பற்றிய இயல்பு இனிது ஓதப்படு கின்றது!

'சிறுபாணாற்றுப்படை'யில் நிலத்தின் ஐவகைப் பகுப்புகளும், அவற்றின் இயற்கை அமைப்புகள் நன்கு விளங்க, அதன் ஆசிரியர் இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனர் பாடுதலும் இங்கு நினைவு கூர்தற்குரியது.

'சிறுபாணில்' யானையைப் பற்றி ஒரு கூற்று:

"பொழிகவுள் தறுகண் பூட்கைத் தயங்குமணி மருங்கின்
சிறுகண் யானை"

என்று வருகின்றது. 'யானையின் கதுப்பில் மதம் வீழ்கிறது; யானை அஞ்சுதற்குரிய குணம் படைத்தது. இருபக்கமும் மணிகள் அசைந்துகொண்டிருக்கின்றன; சிறிய கண்களையுடையது;' என்பது அவ் வரிகளின் பொருள். யானையை நேரிற் பார்த்தாலும் இவ் வரிகளின் கருத்து அப்படியே அதன் இயல்பு தோன்ற இருக்கும்.

பத்துப்பாட்டில் 'குறிஞ்சிப் பாட்டு' என்பது ஒன்று. இரவில் மலர்கின்ற பூ (இருள்வாசி—இரு வாட்சிப்பூ) "நள்ளிருள் நாறி" (94) என்றே அதன் இயல்பு தோன்ற உரைக்கப்பட்டுள்ளது.

இங்ஙனம், அறிவில் பொருள்களின் இயல்புகளும் சிற்றுயிர் களின் இயல்புகளுமட்டுமின்றி, மாந்தர் பல வகையினரின் இயல்பு களும் சங்க இலக்கியங்களில் அங்கங்கும் வருதலை உற்றுநோக்க லாம்.

வீரப் புதல்வன் ஒருவனைப் பற்றி அவன் தாய் கூறுவதாகப் 'புறநானூ'ற்றில் (86) ஒரு பாடல் உண்டு. 'காவற் பெண்டு' என்னும் நங்கையார், கேள்வியும் விடையுமாகத் தாமே இயற்றியது:

"சிற்றில் நற்றூண் பற்றி நின்மகன்
யாண்டுள னோஎன வினவுதி"

என்பது கேள்வி; அதற்கு விடையாக,

"என் மகன்
யாண்டுள னாயினும் அறியேன்"

என்று மறுமொழி கூறிவிட்டு, அதனை அடுத்துத் தனக்குத் தெரிந்த உண்மை,

"ஓரும்,
புலிசேர்ந்து போகிய கல்அளை போல
ஈன்ற வயிறோ இதுவே"

என்பதுதான் என்று தெரிவித்து,

"தோன்றுவன் மாதோ போர்க்களத் தானே"

என்று தன் வீரமகன் வழக்கத்தையும் அவர் அறிவிக்கிறார். இப்பாடலின் இயல்பு நலம், உள்ளது உள்ளவாறே கூறும் முறைகளிலிருந்து இனிது புலப்படும். இயல்புக்கு மாறானது இதில் யாதுமில்லை.

அதே நேரத்தில், தூணைப் பிடித்து நிற்கும் மாதர் இயல்பும், புலி கிடந்து போன மலைக்குகைபோலத் தன் வயிற்றில் மகன் தோன்றிய நிலை ஒன்றே திண்ணமாய்த் தனக்குத் தெரிந்த உண்மை என்னும் இயல்பும், மகனைப் புலியென்று வீர மொழியால் உயர்த்துரைத்த இயல்பும், அதற்கேற்பத் தன் வயிற்றை ஒரு மலைக்குகை போல உவமைப் படுத்திக்கொண்ட இயல்பும், போர்க்களத்தில் நாடு காக்கும் நோக்கத்தில் போய்ப் பொருவது அவன் வழக்கமாதலின் பெரும்பாலும் அக் களத்திற்போய்ப் பார்த்தால் காணப் படுவான் என அவன் வீர இயல்பும் இதனில் வந்துள்ளன. 'மாதர் வழக்கம்' 'அழகிய உவமை' 'புதல்வனின் தன்னல இழப்பு' 'அஞ்சாத் தறுகண்' முதலிய பல கருத்துக்களும் அவ்வம்மை சில வரிகளில் கூறியிருக்கிறார்.

தொடுமிடந்தோறும் இங்ஙனம் இயற்கை நெறி செல்லும் மெய்நலமே சங்க இலக்கியங்களில் தோன்றும். இதுவே அவற்றின் சுவை முறை.

ஆசிரியர் மறைமலையடிகள் இயல்பாகவே இயற்கை நெறி நாடிய உள்ளம் உடையவராதலின், பொய்யாச் செந்நாவினரான சங்கச் சான்றோரின் இயல்பு நலம் அவர்க்கு மிகவும் பிடிப்புடையதாயிற்று.

> "உயர்நிலை உலகம் அழுதொடு பெறினும்
> பொய்சேண் நீங்கிய வாய்நட்பு"

'மதுரைக் காஞ்சி'யில் (197—98) பேசப்படுகின்றது.

புன்மை யியல்பு:

'முற்கால பிற்காலத் தமிழ்ப் புலவோர்' என்னும் நூலொன்றை அடிகள் இயற்றியிருக்கின்றார். அடிகளின் இயற்கை உணர்ச்சிகளும் சங்கச் சான்றோர் நூல் நெறிகளும் அதனில் நன்கு வெளிப்படுகின்றன. அவற்றிற் சில வருமாறு :

"பிற்காலத் தமிழ்ப் புலவரிற் பெரும்பாலார், பண்டைத் தமிழாசிரியரும் அவர்க்குப் பின் இடைக்காலத்தே வந்த தமிழாசிரியரும் செந்தமிழ் மொழியை இயற்கைச் சொற்பொருள் வகையிற் பேணியவாறுபோற் பேணாது அவரொடு திறம்பிச் செயற்கைச் சொற்பொருட் குறுநெறியே புகுந்து அதனொளியையும் வனப்பையுங் குறைத்து அதனைக் குற்றுயிருங் கொலையுயிருமாய் வலிவிழந்து கிடக்கச் செய்தனர்."

"முற்காலத்துப் புலவர்கள் இயற்கைத் தோற்றங்களையேனும் மக்கள் இயல்புகளையேனும் பாடப் புகுந்தால், உண்மைக்கு மாறுகாமல், ஓவியம் வரைந்து காட்டினாற்போல் அவை தம்மை நம் அகக்கண்ணெதிரே விளங்கக் காட்டுவர். அவர் பாடிய தோற்றங்களையும் மாந்தர்தம் நிலைகளையும் நாம் நேரே சென்று காண்டல் கூடுமாயின், அவை அவர் பாடியவாறே யிருக்கக் கண்டு வியப்பும் மகிழ்ச்சியும் எய்துவம். அவர் பாடியவெல்லாம் அங்ஙனம் பட்டாங்கு மொழியும் பெற்றிய"

"சில சொல்லிற் பல பொருட் டோற்றமும், உலக இயற்கை மக்களியற்கையில் உள்ளவாறே, எழில் கெழும எழுதிக் காட்டும் பேரறிவாற்றல் பண்டை நல்லிசைப் புலவரெல்லார் மாட்டும் வீறி விளங்கா நிற்கின்றது"

"பண்டைச் செந்தமிழ்ப் புலவரேயன்றி, இடைக்காலத்து வந்த தமிழ்ச் சான்றோரும் உலக இயற்கை மக்களியற்கையை அவையிற்றின் உண்மைக்கு மாருகாமலே ஓவியத்தில் வரைந்து காட்டுவதுபோற் காட்டி அரும்பெருஞ் செய்யுட்கள் இயற்றி வந்தனர். இதற்கு, மணிமொழிப் பெருமான் அருளிச் செய்த 'திருச்சிற்றம்பலக் கோவையார்' என்னுந் தமிழ்த்தேன் நிறைந்த பொலன் குடத்திருந்து ஒரு நறுந் திவலையினை எடுத்து ஈண்டு நுஞ் செவிவாய்ப் பெய்குதும்:

''ஈவிளை யாட நறவிளை வோர்ந்தெமர் மால்பியற்றும்
வேய்விளை யாடுவெற்பா! உற்று நோக்கிஎம் மெல்லியலைப்
போய்விளை யாடல்என் றாள்அன்னை; அம்பலத் தான்புரத்தில்
தீவிளை யாடநின் றேவிளை யாடி திருமலைக்கே''

"பிற்காலத்துத் தோன்றிய பொருட்டொடர் நிலையிற் பெரும் பாலன, இலக்கியச் சுவை பயில்வார்க்கு இன்பம் பயத்தலின் அது பற்றி அவை பாராட்டற் பாலன அல்லவோ வெனின், அல்ல. அந் நூல்களை ஆக்கிய புலவர்கள் மெய் இவை, பொய் இவை என்று ஆராய்ந்துரைத்தவர் அல்லர்" எடுத்துக்காட்டு:

"வேழம் வீழ்த்த விழுத்தொடைப் பகழி
பேழ்வாய் உழுவையைப் பெரும்பிறிது உறீஇப்,
புழற்றலைப் புகர்க்கலை உருட்டி, உரற்றலைக்
கேழற் பன்றி வீழ, அயலது
ஆழற் புற்றத்து உடும்பிற் செற்றும்
வல்வில் வேட்டம் வலம்படுத் திருந்தோன்.'' (புறம், 152)

இதில் வன்பரணர் என்னும் புலவர் பெருமான் வல்வில் ஓரி என்னும் தலைவனின் வில்லாண்மையை விளக்குகின்றார்.

'யானையை வீழ்த்த அம்பு, புலியை ஊடுருவி, மான் கலையைக் கீழே உருட்டிக், காட்டுப் பன்றியைத் தரையில் விழும்படி செய்து, அடுத்திருந்த ஒரு புற்றில்போய் உடும்பின் உடம்பில் பட்டு

கின்றது' என்னும் கருத்து வருகின்றது. அம்பின் துரிதம் வர வரக் குறையும்; அதுபோல யானையையும், யானையினும் சிறிய தாகிய உழுவையையும், அதனினும் சிறிதாகிய கலைமானையும், அதனின் சிறிதாகிய பன்றியையும், அதனின் சிறிதாகிய உடும்பை யும், முறையே வீழ்த்தியும் ஊடுருவியும் உருட்டியும் தள்ளியும் செற் றும் சென்ற இயற்கை அழகு எடுத்துக் காட்டப்படுகிறது.

இதனுடன் கம்பராமாயணத்தில் வருகின்ற இராமனது வில் தொழிலாண்மையினையும் அடிகள் ஒப்பிட்டுக் காட்டுகிறார். இராம காதையின் இரண்டு செய்யுட் பகுதிகள் இவை:

"உலையுருகக் கனல்உமிழ்கண் தாடகைதன் உரம்உருவி
மலையுருவி மரம்உருவி மண் உருவிற்று ஒருவாளி"

(பால. குலமுறை, 26)

"ஏழு மாமரம் உருவிக்கீழ் உலகமென்று இசைக்கும்
ஏழும் ஊடுபுக் குருவிப்பின் உடன்அடுத்து இயன்ற
ஏழுஇலாமையான் மீண்டதுஅவ் விராகவன் வாளி."

(கிட்கிந், மரா, 138)

'இராமனது அம்பு, விசை குறையாதது; அதனால், தாடகையின் மார்பை உருவி, அதன்பின் மலை உருவி, மண்ணும் உருவிற்று; மேலும், ஏழு மராமரம் உருவி, பாதாள உலகம் ஏழும் ஊடுருவி, அடுத்தபடி உருவுவதற்கு ஏழு இல்லாமையால் அம்பு மீண்டு விட்டது!'

இதைப் பற்றி அடிகளார், 'இஃது எத்துணைப் பொய்ம்மை நிறைந்ததாய் இருக்கின்றதென்பதனைக் கருதி, அருவருப்புக் கொள்கின்றார். இராமன் ஏவிய அம்பு, தாடகையின் மார்பைத் துளைத்திருக்கலாம்; அதன்பின் தாடகையினும் பெரிய மலையை யும் துளைத்தது என்றதும், பல மரங்களைத் துளைத்தது என்ற தும், நிலத்தைத் துளைத்தது என்றதும், பெரும் பொய்யாயிருக் கின்றன.

அதனையும் அடுத்து ஏழு மராமரங்களைத் துளைத்த தென் பதும். பாதாள உலகம் ஏழும் துளைத்த தென்பதும், திரும்பி வந்ததென்பதும் இயற்கைக்கு எவ்வளவு மாறாயிருக்கின்றன!

ஊன் உடம்புகளைத் துளைக்கும் ஓரியின் வில்லாண்மையின் இயல்பு நலத்துக்கு, ஊனுடம்பு மட்டுமன்றி மலை, மரம், மண், பாதாளம் ஏழு எல்லாம் துளைத்ததோடு விசை குறையாமல் திரும்பியும் வந்தது என்னும் இராமனின் வில்லாண்மைப் போக்கு எவ்வளவு நடக்கக் கூடாத செயற்கையா யிருக்கிறது' என்பது அடிகளார் கருத்து.

"இப் பிற்கால மொழி பெயர்ப்பு நூல்களிலும் ஓரோவிடங்களில் இலக்கியச் சுவை காணப்படுமேனும், முதலிலிருந்து முடிவுவரையில் அவற்றின்கட் பொய்யாவனவே தொடுக்கப்பட்டிருத்தலால், அவற்றின் பயிற்சி மக்கட்கு மெய்யுணர்வினையும் மெய்யறிவு விளக்கத்தினையுந் தராது."

"இவ் வுயர்வு நவிற்சி நினைக்குந்தொறும் நமக்குப் பேரா வெறுப்பினையே விளைக்கின்றது."

"ஒருவனது வலிவை, ஒரு பொருணிகழ்ச்சியைச் சிறப்பிக்க 'உயர்வு நவிற்சி' சொல்லுங்கால், இங்ஙனம் இயற்கைக்கு முழுமாறுபாடுண்டாகச் சொல்லுவது நல்லிசைப் புலமையாகுமா?"

"பண்டைத் தமிழாசிரியரது மெய் வழக்கிலேயே பழகினார்க்கு உவர்ப்பினையும் வருத்தத்தினையுந் தராதொழியுமோ?"

என்று இங்ஙனமெல்லாம் சங்க இலக்கியங்களின் இயல்புகளில் மிகப் பழகிய அடிகளாரின் இயல்பு நலச் சிறப்பு, இவ்வாற்றாற் பெரிதும் விளங்குகின்றது.

ஒழுக்க இயல்பு :

சங்க இலக்கியங்களில் அருளொழுக்கத்துக்கு மாறான புலால் உண்ணும் பழக்கங்கள் செயற்கை முறையாகச் சில வருதலையும் இங்கே எண்ணிப் பார்க்க வேண்டும்.

ஓரறிவு புல்பூண்டு, மரம், செடி, கொடி வகைகள் எல்லாம் உலகத்தில் இயல்பாகக் காணப்படுகின்றன. இயற்கையின் வழியே வளர்கின்றன. பழங்கள் பழங்களின் விதைகள் எல்லாம் இயல்பு நலத்தை வகையாக மேற்கொண்டிருப்பதனால் அவை மற்ற உயிரினங்களுக்கெல்லாம் இயல்பாகக் கிடைக்கும் வாழ்க்கைப் பேறுக

ளாய் உதவுகின்றன. ஊன் உண்ணும் மக்களுக்கும் ஓரறிவு உயிர்களாகிய செடிகொடி வகைகள் உதவாமல் இல்லை.

மக்கள் செயல்கள் இங்ஙனம் அமைந்த இயல்பு நலத்தோடு ஒத்திருப்பதனால், அவர்களும் ஊன் உண்ணமாட்டார்கள்.

இயற்கை உணவு நெறி இவ்வாறு இருப்பதனால், மக்கள் செயற்கையும் ஊன் நீக்குதலாய் இருக்க வேண்டுமென்று, வாழ்க்கை மறை அருளிய திருவள்ளுவர் 'புலால் மறுத்தலை' வற்புறுத்தினர். பிற்கால வள்ளலாரும் ஊன் உண்ணாதவர்களையே, இயற்கையின் வழி, 'அக இனத்தார்' என்று சாதி பிரித்துக் கொண்டார்.

பழைய் நான்மறையாகிய திருக்குறளும் புதிய திருவருட்பாவும், இங்ஙனம் இயல்பு நலம் மேம்பட்டிருப்பதனால், அந் நலம் மிக்கவராகிய அடிகளுக்கும் ஊன் உண்ணா அருள் ஒழுக்கமே வாழ்க்கையில் சிறப்பதாயிற்று.

மேற்காட்டிய நூல்களல்லாமல், சங்க இலக்கியங்களும், ஊன் உண்ண வேண்டுமென்று கூறவில்லை.

அக் காலத்துப் புலனழுக்கற்ற அந்தணளராகிய கபிலர் முதலிய சான்றோர் ஊன் உண்டு பழகியவரே யாயினும், மக்கள் ஊன் உண்ண வேண்டுமென்று அவர் பேசியதில்லை. அவர் காலத்திலேயே சங்கச் சானறோர் பலர், தம் வாழ்க்கையில் ஊன் உண்ணாது புலால் மறுத்து மிருக்கின்றனர். 'ஊன்' என்றும் 'உணவு' என்றும் சங்க நூல்கள் வேறு பிரித்தே பேசியிருக்கின்றன.

"ஊனும் ஊணும் முனை இ"

என்று சிற்றுயிர்களுக்கு உணவு வேறென்று குறிப்பு வருகின்றது. அது கொண்டும், புலால் மறுப்பு, சங்க காலத்திலும் இருந்தமை தெளியலாம்.

இயற்கையோடு ஒட்டிய இச் செயற்கைத்திறம் சங்க நூற்பயிற்சியினால், அடிகளுக்குக், கெடாமல் கிட்டியது. காரணம், அவர்களுக்கு அமைந்த 'இயல்பு நலம்' என்றே கருத வேண்டும்.

'சமய ஒழுக்கம்' எல்லா மதங்களிடத்தும் புலால் மறுப்பதாயில்லை. 'சீவகாருண்ணியம்' பற்றிப் புத்தமதம், இசுலாம், கிறித்துவம் முதலியன பேசுகின்றனவாயினும் சமண் மதத்தைப்போல் 'அருள் ஒழுக்கம்' மிக்கதென்று கூறுதற்கில்லை. ஆதலால், சமய ஒழுக்கத்தால் அடிகளுக்கு இப் புனித உணர்வு அமைந்ததென்று தீர்த்துச் சொல்வதற்கு இல்லை. அது குழந்தையாயிருக்கும் போதே அறிவறிந்து அமைவதும் அன்று. சமய ஒழுக்கமும் இயற்கை நிலையை ஒட்டியதே யன்றி வேறில்லை.

நால் வகை இயற்கைநெறிகள் :

கடவுள் ஒருவரே, மற்றவையெல்லாம் உயிரினங்கள்; ஆதலால் இயல்பு நெறி ஒரு முழுமுதற் கடவுளைத் தெளிவிக்கும்.

அப்படியானால், உயிரினங்களெல்லாம் ஒரு கடவுளின் குழந்தைகளாகின்றனர். ஓரறிவு உயிர் முதல் பிறப்பால் வடிவு வேறுபட்ட ஆறறிவு உயிர் வரையில் வகை வகையாகப் பிறந்திருக்கின்றன. இந்த இயற்கை வேறுபாட்டை "மீன் வாழ் சாதி" என்பது முதலாகக் கூறித் தொல்காப்பியர் முதல் எல்லாப் பெரியவர்களும் ஒப்புக் கொள்கிறார்கள்.

வடிவு வேறுபடாத இனங்களில் மக்கட் பிறவியைச் சேர்ந்தவர் மட்டும் அந்தணர், அரசர், வணிகர், உழவர் முதலாகத் தொழில்களாற் பிரிவுண்டிருக்கிறார்கள்; தொழிலாற் பிரிவு என்பதைச்,

"சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமை யால்"

எனக் கூறித் திருவள்ளுவர் முதல் அனைவரும் ஒத்துக்கொள்கின்றனர்;

மற்றப்படி மக்களுக்குள் சாதி என்னும் பிரிவை, ஊனுண்பார், ஊனுண்ணார் என இருவகையிலேயே வைத்து, 'அக இனத்தார்' 'புற இனத்தார்' என இரு வகையில் இயற்கை அருளொழுக்க முறையே, வள்ளலார் வகுத்தோதுவார். "இட்டார் பெரியார் இடாதார் இழிகுலத்தார்" என்னும் ஔவையார் வாக்கும் இயற்கை நெறியாகிய அருளொழுக்கமே குறிக்கின்றது. இவ்வெல்லாக் கருத்துக்களும் 'சைவம்' என்பதில் உள்ளன.

இனி, இயற்கை நெறியில் அறிய வேண்டுவது இன்னொரு முக்கியக் கருத்தும் உண்டு; அஃது, ஆண் பெண் திருமணங்கூடி நிகழ்த்தும் இல்லறமாகும். அறிவுடைய எல்லா உயிர்ப் பகுப்புகளிலும் ஆண் பெண் உள்ளன; இயற்கையிற் காணப்படும் இப் பிரிவை, இயல்பு நலம் வாய்ந்த எவரும் அசட்டை செய்தல் இயலாது; புறத்துறவு இயற்கையோடு ஒட்டிய செய்கையாகாது. உள்ளத்தில் பற்று நீங்கியிருக்கும் இல்லறமே 'அறம்' என்று தெய்வத்திருவள்ளுவரால் சிறப்பாக எடுத்துக் கொள்ளப்பட்டது.

ஆகவே, (1) ஒரு முழுமுதற் கடவுள் வணக்கம் (2) உயிரினங்களெல்லாம் ஒரே ஆண்டவனின் பிள்ளைகளாய் உடற் பிறப்பாய் ஒத்து நிற்றல் (3) அக இனத்தார் புற இனத்தார் எனனும் அருளொழுக்க மன்பதைப் பகுபபு (4) ஆண் பெண் இயைந்த இல்லறம் என்னும் நான்கு வகையும் முதன்மை கொண்ட இயற்கை நெறிகளாயின. இவை பெரியோர் கருத்து; இந்நால் வகையையும் ஆசிரியர் மறைமலையடிகளார், தம் வாழ்க்கை முறையில் பிடிப்பாய்க் கையாண்டு, இயல்பு நலத்தில் மேம்பட்டவர்களாய் விளங்கினர்; இது, வெளிப்படை!

ஆராய்ச்சி யியல்பு :

திருமுருகாற்றுப்படையில் இளமைப் பருவம் 48 ஆண்டுகள் என்று வருகின்றது.

> ''அறுநான் கிரட்டி இளமை நல்யாண்டு''

என்பது அதிற் காணப்படும்; அதற்கு உரையாசிரியர் நச்சினார்க்கினியர், "இருபத்து நான்கின் இரட்டியாகிய நாற்பத்தெட்டியாண்டு நல்லிளமை" என்று உரை எழுதினர் (179).

அடிகள் மிக இளமையிலேயே தந்தையை இழந்து இறைவன் இயற்கை உணர்ச்சியோடு மேம்பட்டு வந்திருக்கிறார்கள். இயல்பு நலம் இவ்வாறு விளங்கி வந்திராவிட்டால், இந் நாட்டு இயல்பு மொழியாகிய தமிழிலும் இயல்பு நெறியாகிய சிவநெறியிலும் எண்ணம் சென்றிராது.

'மாயா வாத நூற்' பயிற்சியும் அடிகளார் உள்ளத்துக்குச் சுவைக்கவில்லை. காரணம், அது, இயல்பு நெறியன்று. அப்பயிற்சி

மறுப்புக் கூற மட்டும் உதவியது. 'முதற்குறள் வாத நிராகரணம்' என்னும் மாயா வாத மறுப்பு நூலில் இயல்பு நலத்தின் அழகுகளை இனிது காணலாம்.

'முதற்குறள் வாத நிராகரணத்தின்' முதற்பகுதியில் இருபத்திரண்டு கருத்துக்களும், 'மாயா வாதம்' பற்றிய இரண்டாம் பகுதியில் பத்துக் கருத்துக்களும் மறுக்கப்பட்டிருக்கின்றன.

சென்னை சோமசுந்தர நாயகர் 'சித்தாந்த சேகரம்' என்னும் தமது நூலில் முதற்குறளைப் பற்றி ஒரு விளக்கம் எழுதினர். அதனை 'நாகை வாதி' என்பவர் 'சச்சன' இதழில் மறுத்து எழுதவே, அதற்கு ஒரு மறுப்பு 'நாகை நீலலோசனி' இதழில் அடிகளார், தெளிவு தரத்தக்க சான்றுகள் காட்டி எழுதி நாயகர் கொள்கைகளை நிறுவினர். அதைக் கண்ட 'மாயா வாதி' ஒருவர், அடிகள் கருத்துக்கள் பொருந்தா எனக் கூறித் தாம் 'முதற்குறள் வாதம்' எனும் பெயரிட்டு ஒரு மறுப்பு விடுத்தார்; அதற்கு அடிகள் எழுதிய எதிர் மறுப்பே 'முதற்குறள் வாத நிராகரணம்' என்னும் மறுப்பு நூல்; அடிகளுக்கு அப்போது அகவை இருபது; இளமைக் காலத்திலேயே இம் மறுப்பு எழுதப்பட்டிருக்கிறது.

இம் மறுப்பை எழுதிய பின் 'நாகை வாதி' என்பவர் 1897 ஆம் ஆண்டின் பிப்பிரவரி 23இல் நாகை வெளிப்பாளையத்தில், யாழ்ப்பாணம் தில்லைநாத நாவலரைச் சூழ்ந்திருந்த அன்பர்கள் ஏறக்குறைய ஐம்பது பேர் முன்னிலையில், தாம் மறுப்பு எழுதிய குற்றத்தைத் தாமே ஒப்புக்கொண்டதாக ஓர் இதழிற் குறிப்பிருத்தலின், அடிகளார், தம் 'முதற்குறள் வாத நிராகரணத்'தை அதற்குச் சிறிது முன்புதான் 'தம் இருபது' அகவைக்குள் எழுதியிருக்க வேண்டும்.

அடிகளார் இயல்புநலத்தைப் பலவகையிலும் அது வெளிப்படுத்துகிறது. 'தமிழ்மொழி சமக்கிருதத்தைப் பிறப்பிடமாகக் கொள்ளாத தனிச்சொல்' என்பது அடிகளின் கருத்து. எப்படி என்பதற்குக் காரணங்கள் விளக்கும் முறையில் அவர்க்குரிய இயல்பு நலம் நன்றாகத் தெரிகிறது.

"வடமொழியேயன்றிப் பிறபாடைச் சொற்களும் வந்து விரவித் தமிழ் நடைபெறுதலின் அவையுந் தமிழ்க்குப் பிறப்பிடமாம்

போலுமெனக் கடாவுவார்க்கு இறுக்கலர்காமையின் அவர் கூற்றுப் பொருந்தாதென மறுக்க" என்றிங்ஙனம் ஒரு காரணம் கொண்டு அடிகளார் மறுத்தலின், காரண இயல்பு நன்கு விளங்குதல் காண்க. இன்னும் பல காரண விளக்கங்கள் இதற்குக் காட்டப் பட்டிருக்கின்றன.

திருவள்ளுவர் 'எழுதிய' திருக்குறள் என்பதைவிடத் திருவள்ளுவர் 'அருளிய' திருக்குறள் என்பது சிறப்பு என அடிகள் கருதுகிறார். அதற்குக் காரணம், 'அருளால் எழுதினர்' என்பது. அருள் காரணமாகத் திருவள்ளுவர் எழுதிய இயல்பு நலத்தை அடிகள் விளக்குதலும் அதனை ஒரு முதன்மையாகக் கொள்ளுதலும் கண்டுகொள்க.

மேலும் ஒரு கருத்து விளக்கம் :

"ஒரு நாட்டில் பலவகைப் பொருளும் நிரம்பி வளந் துவன்றி இருந்துழி அந் நாட்டிற் பொருளைக் கவர் தற் பொருட்டுப் பல பாடை வழங்கும் பல தேய மக்களும் ஆண்டுப் போந்து தாம் வேண்டும் காலம் உறைவரன்றே! அவ் வளவிய நாட்டு மக்கள் ஆங்ஙனம் போந்த பலவேறு பாடை பேசும் மக்களோடு பண்டம் மாற்றும் காலம் அவர்கள் கூறும் சொற்களைத் தாமும் கற்றுத் தம்முன் பல்வகைப் பொருளும் மேதகத் துவன்றி வளங்கெழுமிய தொன்று யிருந்த தென்பதூஉம், இருக்கிறதென்பதூஉம், யார்க்கும் உடன் பாடாம். ஆதலால், இதில் பல நாட்டாரும் போந்தார். போதரவே, அவர்கள் வழங்கும் சொற்களையும் நந்தமிழர் தாமும் வழங்குவா ராயினர். பிறபாடை வழங்கும் தேயங்கள் நந் தென்னாடுபோற் பல வளமுடையவாகிச் சிறக்காமையான் அந் நாட்டுச் சொற்களில் அருகிருந்த நாட்டுச் சொற்களன்றிப் பிற பாடைச் சொற்கள் விரவாவாயின."

"தமிழ் மொழிப் புணர்ச்சிக்கட்படுஞ் செய்கைகளும், குறியீடு களும், வினைக்குறிப்பு வினைத்தொகை முதலிய சில சொல்லிலக் கணங்களும் உயர்திணை, அஃறிணை முதலிய சொற்பாகுபாடுகளும், அகம் புறம் என்னும் பொருட்பாகுபாடுகளும், 'குறிஞ்சி' 'வெட்சி' முதலிய திணைப் பாகுபாடுகளும், அவற்றின் பகுதிகளும், வெண்பா

முதலிய செய்யுளிலக்கணமும், இன்னோன்ன பிறவும் வடமொழியிற் பெறப்படா' என்பது தமிழியல் விளக்கம்.

"மக்களுக்கும் பிறவுயிர்க்கும் உலகில் நிகழுந் தொழில்களெல்லாம் உறங்குதல் விழித்தல் எனும் இரண்டு தொழிலுளடங்குவனவாம். இவற்றுள் உறக்கம் என்பது அவ் வுயிர்களின் அறிவு நிகழா தடங்கிக் கிடக்கு நிலையாம்; விழிப்பு என்பது அவற்றிற்கு அவ்வறிவு விரிந்து நிகழ்ச்சியுடைய நிலையாம். பிறவுயிர்களை யொழித் தொழிந்த மக்கள் அத்தகைய விழிப்பு நிலையில் புரியுந் தொழில்களெல்லாம் மனத்தாற் குறிக்கப்படுவனவும் மொழியா லிசைக்கப்படுவனவும் மெய்யா லியக்கப்படுவனவுமாகிய வினைகளுள் அடங்கும்; இங்ஙனம் மக்கள் மன மொழி மெய்யென்னும் மூன்றினு லன்றிப் பிற கருவிகளான் ஒரு வினையும் புரிவதாகக் காணப்படாமையான் எத்தகைய பாடையேனும் அஃது அம் மக்களின் முக்கருவிகளையும் செவ்விய நெறிக்கட் கடாவி அவரறிவைப் பெருக்கி வீட்டுநெறி கூட்டுதற் பயத்ததாகல் வேண்டும். ஆகவே, நஞ் செந்தமிழ் மொழியெனும் நங்கை மக்கள் தம் மனத்தாற் பிறி தொன்றைக் குறித்துத் தம்முயிர்க்குறு முறுதியை இழவாமை அதனால் இயற்றமிழைப் பயிலவும், மொழியாற் பிறிதிசையாமை இசைத்தமிழைப் பயிலவும், மெய்யாற் றோன்றியவா றியங்காமை நாடகத் தமிழை நாடவும், முத்திறப்பட்டு அப் பாகுபாடுடைமைச் சிறப்புத் தோன்ற முத்தமிழென்னும் அரிய பெயரால் வழங்கப்படு வாளாயினள். பிற பாடைக்கண்ணும் வியாகரண சங்கீத நாடகாதிகளிருப்பினும்... தமிழிற்போலத் 'திரிசமஸ்கிருதம்' முதலிய குறியீடு பிற பாடைக்கண் காணப்படாமையின் அவையெல்லாம் பாகுபாட்டுச் சிறப்பிலவெனக் கொள்க" என்பது மற்றொரு சிறப்புத் தமிழியல்!

"தொழிலை ஏனை யெழுத்துக்களுக்கு நிமித்த காரணமெனவும் அகரத்தை முதற்காரணமெனவும் கொண்டார் ஒருவருமிலர்; அன்றிக் கோடு மென்பார்க்கு ஏதுவின்மையின் பொருந்தாவென மறுக்க. காரணங் காரியப்படுந் துணையுந் துணைக்காரணம் அதனோ டொன்றித்து நிற்றல் கண்கூடா யறியப்படுதல்போல் நாதமாகிய முதற் காரணம் இ, உ முதலிய வெழுத்துக்களாகக் காரியப்படுவழி ஆண்டவற்றோ டொற்றித்து நிகழும் இதழ், நா, பல், அணம்

முதலியவற்றின் றொழிலே துணைக்காரணமா மென்பதூஉம், முதற் காரணத்தின்கட் டுணைக்காரணத்தை யுய்த்தன் மாத்திரைக்கே நிமித்த காரணம் வேண்டப் படுதல்போல், நாதம் ஏனையெழுத்துக் களாகக் காரியப்படு தன் மாத்திரைக்கே அங்காப்பு வாயிலாக அவ் வங்காப்பே அகரமாதலின் அது நிமித்த காரணமா மென்பதூஉம் சாலப் பொருத்தமுடைய தெனவும் இங்ஙன மேதுக் கூறலின்றி வாளா மனம் போனவாறு கூறுவார் கூற்று வெறிய வெனவு முணர்ந்து கொள்க" என்பதும் கவனித்தற்குரியது.

இளமைக் காலம் அடிகளார்க்கு ஒரு செழுமையான பருவ மாகும்; புலமையும், ஆராய்ச்சியும், இயற்கை யுணர்ச்சியும் அடிகளார் தமிழ் நடையைக் கூடச் செழிப்பித்தன. இளமைப் பருவத்தில் எழுதப்பட்ட சமக்கிருதம் முதலிய அயல் மொழிச் சொல்லெல்லாம் தூயவாய்த் தமிழாக்கப்பட்டுவிட்டன. இல்லம் முதல் விரிவுரை அவைக்களம் வரையில் பேச்செல்லாம் தமிழே. கட்டுரைகள் முதல் நூலெழுத்து வரையில் எழுத்தெல்லாம் தமிழே. தமிழ் உருவமாய் அடிகள் விளங்கினர்கள். தொடர்களெல்லாம் இயல்பு நலம் பெற்றன

ஒரு கருத்தை விளக்கும்போது அதற்காக விளக்கப்படும் சொற்கள், தொடர்கள், காரியம் நிகழும் முறையே கூடிவந்து இயல்பு விளக்கமாய் இயன்றன. கருத்துக்கு ஏற்ற சொற்கள் தமிழில் நிரம்ப உண்டு. புதிய சொல்லாயினும், பழைய சொல் லாயினும் கருத்து விளக்கமுள்ள சொற்கள் மிகக் கவர்ச்சியாகவும் காணப்படும். அவையெல்லாம் மனிதவசியம், யோக நித்திரை, தொலைவில் உணர்தல், மக்கள் நூறுண்டு உயிர் வாழ்தல், இறப் பின் இருப்பு முதலிய அடிகளின் கலை நூல்கள் பலவற்றிலும் அங்கங்கே காணலாம்.

சைவசித்தாந்தக் கழகம் அடிகளார் நூல்களை அருமையாய்ப் பதிப்பித்து வருகின்றது. அவற்றுள், 'அறிவுரைக் கோவை' என்பது ஒன்று. அதில் 'தமிழின் ஒலி எழுத்துக்கள்' என்பது ஒரு தலைப்பு.

தமிழின் ஒலி எழுத்துக்களில் அ, ஆ முதலிய பன்னீருயிர் எழுத்துக்களும் க, ங முதலிய பதினெண் மெய்யெழுத்துக்களும்

முறையே எப்படித் தோன்றின என்னும் இயற்கை அழகை அடிகளார் மிகச் சிறப்பாக எடுத்து விளக்குகிறார்கள். அந்த இயல்பு நலனை எப்படி வியப்பது? அன்பர்கள்தாம் அதனை ஊன்றிப் படித்து உணர்தற்குரியர்.

இயற்கையாக எழுகின்ற ஒலிக் குறிப்புகளே தமிழ் மொழியை அணி செய்கின்றன. இதனைப் படிப்போர், தமிழ் ஓர் இயற்கை மொழி என்பதைக் கட்டாயம் ஒப்புக்கொள்வர்.

தமிழ் மொழியில் இத்தகைய ஒலி ஆராய்ச்சிப் பகுதிகளை அறிஞர்கள் இதுகாறும் செய்யவில்லை. பிறர் செய்யாத நற்றொண்டுகளையெல்லாம் சைவத்துக்கும் தமிழுக்கும், அடிகள், அடிப்படையிட்டு விளக்கம் செய்திருக்கிறார்கள்.

அறிவுரைக் கோவையில் வருகின்ற 'தமிழின் ஒலி எழுத்துக்கள்' என்னும் பகுதியில், நில இயற்கைக்கு ஏற்றபடி அவ்வந் நிலங்களில் உறையும் பொருள்கள், சிற்றுயிர்கள், மக்கள் முதலியவற்றின் இயற்கைகளும் பலவேறு வகையவாய்க் காணப்படுதலால், அவ்வந் நிலத்து மக்களின் குரல் ஒலிகளும் பல திறப்பட்டுத் தோன்றுவவாயின என்பதும் காண்க.

அறிவு முறுகித் திறமுடையன எழுதி அதற்குமேல் இலக்கண விதிகள் ஆன்றோர் மேற்கோள்கள் காட்டும் இயற்கை நெறியிற் செல்லாமல் ஓர் இயைபுமில்லாமல் வாளா இலக்கண இலக்கியம் முதலியவற்றைக் கைகொண்ட மட்டும் எழுதி விடுதல், 'இயல்பு முறை' யாகாது என்பது அடிகள் கருத்து.

சாகுந்தல நாடக ஆராய்ச்சியின் முதற் பதிப்பு 1907 இல் வெளிவந்தது. அதற்கு முன் ஆண்டுகளில் அஃது எழுதப் பட்டது. 'இந் நாடக அமைப்பிற் சில குறைபாடுகள்' என்று ஒரு பகுதி, நூலின் கடைசியில் உள்ளது. அப் பகுதியில் அடிகளார் குறிப்பிடும் செய்திகள் சில வருமாறு :

"இயற்கைக்கு முழுமாறான நிகழ்ச்சிகளை ஆசிரியன் இந் நாடகக் கதை நிகழ்ச்சியின் இடையிடையே புகுத்தி யிருப்பது இதனைப் பயில்வார்க்கு உண்டாம் இன்ப உணர்வினைச் சிதைப்பதா யிருக்கின்றது. சகுந்தலை துஷ்யந்த மன்னனை யாழோர் முறையில் மணந்து கருக் கொண்டிருக்கும் செய்தியினை வானின்கட் டோன்றிய

ஒரு தெய்வ ஒலி, அவள் தந்தை காசியபருக்கு அறிவித்த தென்னும் புனைந்துரை, பயில்வார்க்கு மகிழ்ச்சி தருவதாயில்லை. அவள் தோழிமார் வாயிலாகவே அச் செய்தி அவரது செவிக்கு எட்டியிருக்க வேண்டும். இச் சிறு நிகழ்ச்சிக்கு ஒரு தெய்வ ஒலியினைக் கொணர்ந்து மாட்டியது நாகரிக அறிவின்பாற் பட்டதாயில்லை.

"இந்திரற்கு அரக்கரால் நேர்ந்த இடரை மண்ணுலகத்துள்ளனை ஒரு மன்னன் நீக்கினன் என்றால் சிறிதும் நம்பத் தகுந்ததாயில்லை. இயற்கைக்கு மாறான இந் நிகழ்ச்சியை இங்ஙனம் படைத்து மொழியாமல் இயற்கையோடு ஒத்த ஒரு நிகழ்ச்சியால் செய்திருந்தனராயின்...இந் நாடகம் சுவை பெரிதும் மிகுந்து பயில்வார்க்குக் கழிபேருவகையினை அளியா நிற்கும்.

"இயற்கைச் செந்நெறி பிழைத்து இங்ஙனமெல்லாம் ஏலாதவற்றை இயைத்து இடையிடையே இழுக்கினர்.

"உலக வியற்கை மக்கள் இயற்கையோடு மாறுகொள்ளாவாறு நாடக நூல் யாக்கும் வகைகளை விரித்து விளக்கிய தொல்காப்பியம், இறையனார் அகப்பொருள் முதலிய பண்டைத் தமிழ் நூல்களின் ஆசிரியர்க்கும் அவர் வழிப் பிழையாது போந்து கலித்தொகை, அகநானூறு, திருச்சிற்றம்பலக் கோவையார் முதலான நாடகத் தமிழ் நூல் யாத்த நல்லிசைப் புலவர்க்கும், காளிதாசரைப் போல் உலகவியற்கை மக்கள் இயற்கையோடு திறம்பிக் கூறுவாருரைகள் ஒரு சிறிதும் உடம்பாடாகா.

"கொன்னே உலகியலோடு மாறுகொண்டு காளிதாசர் அதனைப் புணர்த்தியது ஒரு குறைபாடே.

"பட்டது பட்டாங்கு கிளக்கும் தமிழ்ச் சான்றோர் மலிந்த இத் தென்றமிழ் நாட்டிலிருந்து அவரது புலனெறி வழக்கிற் பயின்றிருந்தனராயின் காளிதாசர் யாண்டும் எஞ்ஞான்றும் நடவாத புனைந்துரையும் பிறவும் இந் நாடக நூலின்கட் படைத்துப் புகுத்தியிரார்.

"இயற்கையில் நடவாப் பொய் நிகழ்ச்சிகளைத் தாம் வேண்டியவாறெல்லாம் படைத்து அவர் இழுக்குவாராயினர்."

'சிவஞானபோத ஆராய்ச்சி' என்பது ஒன்று ; மிக இளமையிலேயே (1904இல்) அறிவுக்கடல் என்னும் 'ஞானசாகரம்' இரண்டாம் பதுமம் நான்காம் இதழில் தொடக்கப்பட்டது. அதில், 'முப்பொருள்களின் இயல்பான விளக்கங்கள், இறைவனுடைய எண் குணங்கள்' உட்பட முதலில் வருகினறன. கடவுளுடைய எண் குணங்களை அடிகள் மிகவும் இயல்பாக விளக்குகின்றார்.

'இயல்பாகப் பாசங்களில் நீங்குதல்' என்னும் பகுதியில் 'ஒவ்வொரு பொருட்கும் உள்ள இயற்கைத் தன்மையை மாற்றுதல் யாரானும் ஆகாது என்பதும், பளிங்கில் ஓருருவம் தோன்றுதலும் முருட்டுக் கருங்கல்லில் அது தோன்றாமையும் என்னவென்று நுணுகி ஆராய்வார்க்குப் பொருளியற்கை இணைத்தென்றல் நன்கு அறியப்படும்' என்பதும்,

'பேரருள் உடைமை' என்னும் பகுதியில் 'சீவர்கட்குப் போலச் செயற்கையான் விளைவதன்றி இறைவன்மாட்டு இயற்கையில் பொருந்திக் கிடக்கும் ஓர் அருமைக் குணம்' என்பதும்,

'முடிவில் ஆற்றலுடைமை' என்னும் பகுதியில், 'ஆற்றல்' எனினும் 'சக்தி' எனினும் ஒக்கும்; இஃது ஒரு பொருட்கண் இயற்கையாய்ப் பிரிவின்றி நிலைபெறுவது' என்பதும், அடிகளின் இயல்பு நலத்தை விளக்கக் கூடியன.

இடையில், 'மண் முதல் நாதம் வரையில் முப்பத்தாறு கருவிகளும் மனித்தப் பிறவியில் வேலை செய்வதை' இயல்பான ஆராய்ச்சியால் விளக்கிச் செல்கின்றார். ஒவ்வொரு கருவியும் தேவைதானா? கருவிகள் எப்படி இயங்குகின்றன? அவை எவ்வாறு பயன்படுகின்றன என்பனவெல்லாம் ஏதுக்கள், எடுத்துக்காட்டுகள், இயற்கைப் பழக்கங்கள் என்பவற்றால் விளக்கிச் செல்கிறார்.

அதன்பின், நூற்பா விளக்கங்கள் வருகின்றன. ஒவ்வொரு நூற்பாவிலும் கருத்து விளக்கங்களாக எழுதியிருக்கும் பகுதிகள் முற்றிலும் இயற்கை விளக்கத்தோடு கூடியன.

இவற்றில் ஒரு பகுதி மனத்தைப்பற்றி வருகிறது; (பக்கம் 41–8) பதம் பார்த்தல் என்பதுபோல இவ்வொரு பகுதியின் இயல்பான ஆராய்ச்சியுரையைக் கவனித்தாலும் போதும்; நூல்

முழுதும் எத்தகைய இயல்பு நலத்தில் இயன்றிருக்கிறதென்பதை அறிந்துகொள்ளலாம்.

மிக அருமை வாய்ந்த இவ் வாராய்ச்சி நூல் முற்றுப் பெருமல் இடையிலேயே நின்றுவிட்டமை மக்கள் தவக்குறைவே. இங்ஙனமே, முதற் குறள் வாத நிராகரணத்தில் "ஷேக்ஸ்பியர் காளிதாசர் முதலிய வித்துவான்கள் இயற்றிய நாடகக் காப்பியங்கள் போல்வன தமிழில் இல்லையெனக் கூறுவார் தெளியுமாறு 'நித்தில மணி' என்னும் நாடகக் காப்பியத்தை விரைவில் வெளிப்படுத்துவாம்" என்று அடிகள் கூறியதும் நின்றுவிட்டதே!

'கோகிலாம்பாள் கடிதங்கள்' என்பதில் இயற்கைக்கு மாறுன நிகழ்ச்சி எதுவுமின்றி எல்லாம் இயல்பு நலத்தோடு, பள்ளம் வீழ் கறும் புனல் ஒப்ப, முடிவறியும் வேட்கையோடு விரைந்து செல்லுகின்றது. ஊர்ப் பெயர்கள், அவ்வூர்களின் இயல்புகள், கதைத் தொடர்ச்சியில் சிக்கல்கள், அவை தீரும் முறைகள், இடையிடையே தம் கொள்கைகளின் இயல்பான அமைப்புகள், கதைக்கு உரியோர் பேசும் மொழி நடைகள், புனைந்துரைகள் எல்லாம் இயற்கைப் போக்குப்படியே அமைந்திருக்கின்றன. கடைசியில் வியப்புணர்வில் முடியுமாறு கதை நூல்கள் சென்றிருக்கிற அழகு மிகவும் பாராட்டற்குரியது. நூலின் கடைசியில் (209–214; 247–256; 274) 'குகையின் இயற்கை' விளக்கப்படுதல் இவ்வுண்மையை எடுத்துக்காட்டப் போதும்.

சிவ நெறி இயல்பு :

இளமைக்குப் பின் இருபத்தைந்து ஆண்டுகள் அடிகளார் உயிர்வாழ்ந்திருக்கிறார்கள். (1925 முதல் 1950 வரையில்) இக் காலத்தில் அடிகளார் தம் மாணவர்களுக்குப் பாடம் சொல்லுதலில் ஊக்கங் கொண்டிருக்கிறார்கள்.

அவற்றில் முக்கியமான பாடம், சிவஞானபோதமாய்ச் செறிவு கொண்டிருந்தது. இளமையில் தொடங்கிய 'சிவஞான போத ஆராய்ச்சி' இக் காலத்தில் மிகவும் பயன்பட்டது. 'திருக்குறள் ஆராய்ச்சி'யும் முடிவு பெருமலே நின்றுவிட்டது. திருக்குறள் உலகப் பொதுமறையும் சிவஞானபோதம தமிழகத்தின் சிவநெறியுமாக இருத்தலின் சிவஞானபோத பாடத்தில் திருக்குறள் அடிக்கடி

வரும். திருவள்ளுவர், 'சித்தாந்த சைவரே' என்று துணிவதற்கு' இது, உதவியாயிருந்தது; திருவள்ளுவர், தமது நடைமுறைக்கு ஏதேனும் ஒரு சமய நெறியையே கையாண்டிருக்கக் கூடும் எனவும், அது 'சிவநெறி'யாகவே இருக்கவேண்டும் எனவும் அடிகளார் விளக்குவார்.

'திருச்சிற்றம்பலக் கோவையார்' பாடம் எனக்கு மட்டும் இக் காலத்தில் எழுந்ததேனும், அதைப்பற்றிய நினைவு, அடிகளார் உள்ளம் முழுதும் எப்போதும் ஆட்கொண்டிருந்தது.

தஞ்சை, திருச்சி முதலிய இடங்களில் நடைபெற்ற சொற் பொழிவுகள் பெரும்பாலும் நூல்களாக வெளிவந்தன. 'கடவுளுக்கு மாறான கொள்கைகள் சைவம் ஆகா' என்பதும், 'பழந்தமிழ்க் கொள் கையே சைவசமயம்' என்பதும திருச்சி விரிவுரைகள்; அவற்றிலும் அடிகளின் இயல்பு நலம் நன்கு வெளிப்படுவதோடு தமிழ்நெறி சிவ நெறியே என்பதும் இனிது புலப்படுகின்றது.

''திருவொற்றி முருகர் மும்மணிக் கோவையுரை' வரி வரியாக ஆராய்ந்து இக் காலத்தில் பதிப்பிக்கப்பட்டது. 'மாணிக்க வாசகர் வரலாறும் காலமும்' என்னும் பெருநூலின் இயல்பான ஆராய்ச்சி அடிகள் உள்ளத்தை மிகவும் கவர்ந்து, மேலெழுந்து ஓங்கிச் சிறந்து, முடிவுபெற்றது. தமிழ் நூல், வடநூல் பற்றிய கருத் துக்கள், கால ஆராய்ச்சிகள், தமிழகத்தின் அரசு ஆராய்ச்சிகள் பெரும்பாலும் இந் நூலில் இயல்பு நலங்கொண்டே இயற்கை யுணர்ச்சியோடு எண்ணி வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன. அடி களின் கனிந்த தமிழ், பழகிய நடை, ஆழ்ந்தகன்று உயர்ந்து நுணுகிய ஆராய்ச்சி இயல்பு, பன்னூல் மேற்கோள்கள் பலவும் இதிற் காணலாம்.

அடிகளிடம் நான் தொடர்பு கொண்டதிலிருந்து கடைசி வரையில் வாழ்க்கையிலும், நூல்முறையிலும், விரிவுரைகளிலும் இங்ஙனமெல்லாம் பலகாலும் இயல்பு நலம் கண்டுவந்திருக்கிறேன், எல்லா முடிவுகளுக்கும், ஆராய்ச்சிகளுக்கும் அடிகளின் இயல்பான போக்குதான் காரணமாயிருந்து அவற்றை விளைத்துக் கொடுத் திருக்கிறது.

ரு. உயர்ந்த நோக்கம்

ஆசிரியர் மறைமலையடிகள் ஏறக்குறைய ஒரு நூற்றாண்டுக்கு முன் 1876 ஆம் ஆண்டு இத் தமிழகத்தில் தோன்றினார்கள். 1976 ஆம் ஆண்டில் 'சைவ சித்தாந்தக் கழகம்' அடிகளாரின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாட இருக்கிறது. தமிழ் விழாக்களில் இது மிகச் சிறந்த விழா! தனித் தமிழ்க்கு உழைக்கும் 'செந்தமிழ்ச் செல்வி'யின் 50 ஆம் ஆண்டாகிய பொன் விழாவும் அப்போது நிறைவுறுகின்றது; இரண்டும் ஒன்றாய் வருகின்றன; திருவருட் செயல்!

பிறந்தபோதே அடிகளார் பிறவி எடுத்த நோக்கத்துக்கேற்ற படி தமிழும் சிவமும் பயிலலானார். அவற்றின் உயர்ந்த நோக்கங்களில் பிறர் நலத்தை முன்வைத்துத் தந்நலத்தை அதற்கடுத்த நிலையில் கவனித்துக்கொள்ளுதல் முதன்மையானது! இக் கருத்தை ஆசிரியரடிகளே,

"பொதுநலம் கருதாது அவ்வப்போதும் வரும் தந்நலங் கருதுபவர்களாய் உயர்ந்த நோக்கம் இன்றி"

என்று புலப்படுத்துவார்;

"அறிவும் ஒழுக்கமும் பொதுநல முயற்சியும் உடையாரே உயர்ந்தோர்"

என்று மேலுங் கூறுவர்.

(—மக்கள் நூறாண்டு உயிர் வாழ்க்கை, பக். 145, 147.)

"தமக்கென முயலா நோன்தாள், பிறர்க்கென முயலுநர் உண்மையானே...உண்டாலம்ம இவ்வுலகம்" என்பது புறநானூறு! இதற்குக் காரணமும் இருக்கிறது.

இயற்கைக் காரணம்:

எதுவும் பிறர்க்கென முயலும்போதுதான் தமது நிலை தானே மேம்படுகிறது! கடவுளுக்குப் பெரிய பெரிய வெண் குடைகள்

விழாவிற் பிடிப்பதுண்டு; குடை பிடிப்பவர்க்கு நோக்கம் தமக்கென்பதன்று; ஆனால், குடையில் ஒன்றாகவும் நடுவராகவும் நிற்பவர் குடைபிடிப்பவரே! யாருக்காகக் குடைபிடிக்க ஏற்பாடோ அவர் அக் குடையின் ஒரு பகுதியிலேதான் இருக்கவேண்டும்; இஃது, இயற்கை! பிறர்க்கென முயன்றால் தந்நலம் தாமே அமைகின்றதென்பது, இதனால் விளங்கும்; "ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும்" என்பது அறிந்தோர் பழமொழி !

1. பிறப்பியற்கை

பிறப்பின் இயற்கையை உற்றுநோக்குவார்க்கும் இவ்வுண்மை எளிதில் தெளிவாகும்; குழந்தைப் பருவமே பெற்றோராகிய பிறரால், உடன் பிறந்தவரால் ஆசிரியரால், அரசினரால், சான்றோரால் வளர்க்கப்படுகின்றது; கட்டிளம் பருவமாய் வளர்ந்தபின், தம் குழந்தைகளை வளர்க்கத் தாமே முற்படுகின்றார்; மூப்பு எய்தினால், முற்றிலும் குடும்பத்தார்க்கே விட்டுவிடுகின்றார்.

2. உலகியற்கை

இனி உலகியற்கையை உற்று நோக்கலாம்; 'அண்டம்' என்னும் இவ்வுலகம் 'பிண்டத்'திலுள்ள உயிர்களுக்கு உதவியாயிருக்கிறது; உலகம் இல்லையானால் உலகிற் பிறக்கவேண்டிய வேலையுமில்லை; உலகம் உதவியாயிருக்கும் என்னுங் கருத்திலேதான் உயிர்கள் உலகத்திற் பிறப்பிக்கப்படுகின்றன.

உலகியற்கையைப் 'புறம்' என்று தமிழ் நூல்கள் வகுத்துக் கூறும்; 'புறம்' என்னும் பொதுநலம், அகம்' என்னுந் தந்நலத்துக்கு உதவி; 'புறம்' இல்லையானால் 'அகம்' மாட்சிமைப்படாது; பிறந்தவரைத் தவிரப் 'புறம்' என்னும் உலகத்தில் இன்னும் எத்தனையோ மக்களும் உயிரினங்களும் உயிரில்லாத பொருள்களும் உள்ளன; பிறந்தவர்க்கு அவையெல்லாம் பல வகையிலும் மாட்சிமை செய்யும் இயைபு கொண்டிருக்கின்றன.

3. புலவர் ஏடுகள்

உலகத்தின் அழகுகளை நுகரவே வெளிப் புலன்கள் உள்ளன; புலனறிவு மாட்சிகளை ஏடும் எழுத்தாணியுங் கொண்டு நூல்களாக

வடித்துக் கூறும் பேரறிவு மிக்கவர்களாய்ப் புலவர்களும் உதவு கின்றனர்!

4. அருள் நூல்கள்

மெய்ந் நூல்களாகிய திருமுறைகள்கூட உலகியற்கையை நன்கு புனைந்து, அகத்தின் அகநலமாகிய இறைவனோடுகூட்டி அருளிச் செய்வதை அங்கங்குங் காணலாம்.

"வலம்வந்த மடவார்கள் நடமாட
முழுவதிர மழையென் றஞ்சிச்
சிலமந்தி அலமந்து மரமேறி
முகில்பார்க்குந் திருவை யாறே"

என்பது ஒரு பாடலின் பிற்பகுதி!

"கோழைமிட றுககவி கோளுமில
வாகஇசை கூடும்வகையால்
ஏழையடி யாரவர்கள் யாவைசொன
சொல்மகிழும் ஈசனிடமாம்
தாழையிள நீர்முதிய காய்கமுகின்
வீழநிறை தாறு சிதறி
வாழையுதிர் வீழ்கனிகள் ஊறிவயல்
சேறுசெயும் வைகாவிலே"

என்பது ஒரு பாடல்; இப் பாடலில் ஏறக்குறைய முழுப் பகுதியும் மக்களியற்கை உலகியற்கைகளைப் புனைந்துரைக்கின்றது!

அருள் நுவலும் மெய்ந்நூல்களிற்கூட இவ்வாறு வருமானால், ஏனை உலகியல் நூல்கள் உலகியற்கையை எவ்வளவு விரித்துக் கூறும்! புறவியல் அகவியலுக்கு உதவியாக இல்லையென்றால், அருட்பாடல்களில் உலகியற்கைகள் ஏன் விரித்துரைக்கப்படும்! இவ்வாற்றால், புறவியற்கைகள் அவ்வளவும் அகமாகிய தந்நலச் சிறப்புக்கு இயல்பாகவே ஏதுவாதல் இனிதுணரப்படும்.

5. சங்க நூல்கள்

சங்க நூல்கள் உலகியற்கைகளை விரித்துரைப்பதில் மிக்க கருத்துள்ளவை; அதனால் அகநலத்துக்கு வாய்ப்புக் கோலுபவை,

பத்துப் பாட்டில் பட்டினப்பாலை என்று ஒருநூல் உண்டு; அதில் புறப்பொருள் விரிவும் விளக்கமும் 297 அடிகளில் பெருக வரும்; அவை அத் துணையும் சுருங்க 4-அடிகளில் உரைக்கப்படும் அகப் பொருள் உண்மைக்கு உதவி; காரணம், புறச் சேவைகளால் அகநலம் எங்கும் மாட்சிமைப்படுதலே!

உலகியற்கை மக்களியற்கைகளெல்லாம் இங்ஙனம் சேவைக் குரியனவா யிருத்தலால், பிறர்க்கென முயன்று சேவை செய் வார்க்கு அகமாகிய தந்நலம் அதன் விளைவாய்த் தானே அமைந்து விடுகிறது; அகத்தில் செம்மைநலம் சிறந்தோங்குகிறது!

6. வாழ்க்கை நிலை

இனி, வாழ்க்கையை எடுத்துக்கொண்டாலும், இவ்வுண்மை இனிது தெருட்டப்படும்; ஒளவையார் 'ஆத்திசூடி'யில் கூறும் அறிவுரைகளெல்லாம் பெரும்பாலும் பிறர்க்கென முயலுதலாகவே காணப்படும். இல்வாழ்வோர்க்குக் கடமைகள் கூறிய திருவள்ளுவர்

"இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு"

"விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று"

எனவும்,

"தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு"

"ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு"

எனவும் தெரிவிப்பார்; இவற்றில் தமக்கென முயறல் யாதிருக் கின்றது!

'இல்வாழ்வார் தந்நல மறுத்தவ ரல்லர்' என்று சிலர் கருதக் கூடும்; தந்நல மறுத்தற் பொருட்டே இல்வாழ்க்கையறம் திரு வள்ளுவரால் முதன்மையால் ஓதப்பட்டது!

"அறத்தாற்றின் இல்வாழ்க்கை யாற்றின் புறத்தாற்றிற்
போஒய்ப் பெறுவ தெவன்?"

"ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை உடைத்து"

என அவர் திருவாய்மலர்ந்தமை இங்கே எண்ணிப் பார்த்தற்குரியது! இல்வாழ்க்கையை 'அறத்தாறு' என்பதனாலும் நோன்பு வாழ்க்கையைப் 'புறத்தாறு' என்பதனாலும் திருவள்ளுவர் விதந்தோதி அவ் வேற்றுமை தேற்றுதலும் நினைவு கூர்க.

"தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை"

என்னும் மறைமொழியில், 'தான்' என்பதைக் கடைசியாக வைத்து, உதவத் தக்காரையெல்லாம் முதலில் வைத்து, மக்கள் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்பதை அவர் இனிது விளக்கினார்.

7. வலிய முயற்சி

பிறர்க்கென இங்ஙனம் முயலுதலே 'முயற்சி' எனப்படும்; தந்நலப் பற்றுவிட்டால் மட்டுமே இந் நன்முயற்சிகள் சிறக்கும்; பற்று விடுவோரை, அதனால், 'முயல்வார்' என்பார் திருவள்ளுவர்; இல்வாழ்வார், பற்றுவிடும் முயற்சியில் முன்னிற்போராதலின், அவரை "முயல்வாருள் எல்லாந் தலை" என்றது அவர் தமிழ் மறை! மேலெடுத்துக் காட்டிய புறநானூற்றுப் பாடல் "தமக்கென முயலா நோன்தாள்" எனத், தக்கோர் செயலை முயற்சியின்மேல் வைத்துரைத்தலுங் காண்க.

தமக்கென முயலாததுதான், பிறர்க்கென முயல்வதுதான் 'வலிமைவாய்ந்த முயற்சி' யெனவும் அப் பாடல் குறித்தது; நோன்தாள் என்பது வலிமையான முயற்சி! "உறுநர்த் தாங்கிய மதனுடை நோன்தாள்" என்னும் திருமுருகாற்றுப்படை அடியானும் இவ்வுண்மை வலியுறுத்தப்படுதல் காண்க! 'நோன்தாள்' என்பது, உறுநரைத் தாங்குதலாக இருப்பதுதான் இயல்பு!

இவ்வாற்றாலெல்லாம் நமக்குத் தெரிவது என்ன? தம்மைப் பற்றிய தந்நலங்கள் தாமே நடைபெறும்படி பற்றுவிட்டு ஒழுக

வேண்டும்; முயற்சிகள் வலிய முயற்சிகளாய் நிகழவேண்டுமானால், அம் முயற்சிகள் தமக்கென முயலாதனவாய்ப் பிறர்க்கென முயல்வனவாய்ப் பொதுநல முயற்சிகளாய் இருக்க வேண்டும்.

ஆசிரியர் மறைமலையடிகள். இவ் வியல்பினை இளமையிலேயே இனிது தெளிந்து, எதனையும் பிறர்நலங் கருதியே முயலும் உயர் நோக்கம் உடையவரானார்.

"தம்மைப் போலவே தமது நாட்டிற் பிறந்தவர்களெல்லாரும், செல்வ வாழ்க்கையிற் சிறந்து வாழ வேண்டும் என்னும் உயர்ந்த நோக்கம்" என்று, உயர்ந்த நோக்கம் இன்னதென்பதை விளக்குதலும்,

"கடவுளின் அருளைப் பெறுதற்கும், வாழ்க்கையின் நலங்களை அடைதற்கும் எல்லா மக்களும் ஒத்த உரிமை உடையர்"

—அறிவுரைக் கோவை, பக். 186, 198

என்று பொதுநலம் விளக்குதலும் அடிகள் இயல்பாயின! அத்தகைய பொதுநலம் என்பன யாவை என்பதும் அடிகள் அப் பொது நிலையை எவ்வெவ்வாறெல்லாம் வாழ்க்கை நெடுக முயன்று முயன்று உயர்ந்து உயர்நோக்கில் திகழ்ந்தார்கள் என்பதும் அறிந்து தெளிதல் நன்று.

பொதுமையிற் பிரிவுகள் :

மக்கள் மேம்பட வேண்டுமானால், அவர்கள் 'தொழில் நலம்' 'கலை நலம்' 'மொழி நலம்' 'அருள் நலம்' 'சேவை நலம்' உடையவர்களாய்ச் சிறக்க வேண்டும். ஒவ்வொருவரும் ஒரு தொழில், ஒரு கலை, ஒரு மொழி, ஒரு சமயம் ஒரு தொண்டு உடையவர்களாய் வாழ்வாரானால், அவர்கள் வாழ்க்கையிலும் அனைவர் வாழ்க்கையிலும் நிறைவு இருக்கும்.

இவற்றில் எந்தத் தொழிலாவது ஒரு தொழில், எந்தக் கலையாவது ஒரு கலை, தெரிந்திருக்கலாமாயினும், உழவு தொழிலும் அதனொடு தொடர்புற்ற வாழ்க்கைக் கலையும் அறிந்திருப்பது முதன்மை; மொழி என்பதில் தாய்மொழிப் புலமை முக்கியம்; அருள் என்னும சமயத்தில், அவரவர் தாய்ச் சமயமே சிறந்தது; சேவையில், புலை கொலை நீக்குந் தூய்மைச் சேவையே மேலானது!

உலக மாந்தரனைவர்க்கும் இவற்றின் கருத்துக்களை நளினமாக விளக்கித் தெளிவை உண்டாக்கி வாழ்க்கையில் உயர்த்த வேண்டும்.

பொதுநலச் சேவைகளை அருள் அடிப்படையிற் கலை முறையி லாவது அரசியல் முறையிலாவது செய்யலாம்; அரசியல் மாறுத லுடையது; கலையியல் அரசியலைப் பார்க்கிலும் நிலையுடையது; உயர்ந்தது; நுட்பமிக்கது! சான்றோர், கலை முறையில் தொண் டாற்றுவர்; அடிகளார் முயற்சி இத்தகைய கலை மாண்பமைந்தது.

கலையியலும் அரசியலும் அருள் அடிப்படையில் நிகழ்வனவே யாயினும் கலை என்பது நுட்பச் சிறப்புடையதாகலின், அரசியலை விடக் கலையியல், அருளுக்கு அணுக்கமானது! கலை முறையிற் சேவை செய்வோர்க்கு அருளடிப்படை இனிதமையும்; எளிதில் நிறையும்; ஆதலின், அடிகளார் அருள் உதவியோடு கலை முறை யில் பிறர்க்கென முயன்று வந்தார்.

அ. மொழிநலம்

மக்கள் பிறந்தவுடன் பயில்வது மொழி! அதனால் 'அன்னை மொழி' என்று அது பாராட்டப்படும்; "பிறந்து மொழி பயின்று" என்றார் காரைக்காலம்மையார்: அதன் பின்னர்த்தான், இறைவ னிடம் காதல் சிறப்பது என்று அவர் தெரிவித்தார்.

தமிழ்மொழி தமிழரின் அன்னை மொழி! இறக்கும் வரை யிலும் பின்னுங்கூட மக்கட்கு அம்மொழி, பிரியாத் துணையாயிருக் கிறது; அயல் நாடுகளுக்குச் செல்லும்போது, எல்லாப் பொருள் களையும் நீங்கினாலும், அப்படி நீங்காமலும் பிரியாமலும் தொடர் வது தாய்மொழி! மொழி நலத்தின் இவ் வருமை யுணர்ந்து, அதனை நன்றாகப் பயின்றுகொள்ள வேண்டுவது மக்கள் கடமை!

தமிழ்மொழியைத் தமிழர் அனைவரும் பயிலும்படியும் ஆழ்ந்து பயிலும்படியும், அழகாகப் பயிலும்படியும், பிறமொழிக ளோடு ஒப்பிட்டுப் பயிலும்படியும், உணர்ச்சிமிக்க செய்யுளிலும் விளக்கமிக்க உரைநடையிலும் தோய்ந்து பயிலும்படியும், உயிர்க்கு உரந்தருகின்ற கலைகளையும் நாடுகளின் வரலாறுகளையும் மெய்ந் நூல்களையும் தாய்மொழித் தமிழிலேயே பயிலும்படியும், தமிழைத் தமிழாக வைத்துப் பயிலும்படியும், அதன் பொருள்நலத்தை

இருவகை வழக்கிலும் கரவின்றி வைத்துப் பயிலும்படியும் தமிழ் மக்கள் அனைவரும் இப் பயிற்சியில் மேம்பட்டுக் கல்வி வல்லவராய் இயற்கை நுகர்வுகளில் திளைத்துப் பிறவி அறுக்குமாறு பயிலும் படியும் மறைமலையடிகள் தனியிருந்து பிறர்க்கென முயன்று வந்தார்கள்; இடர்களைப் பொருள் செய்யாமலும், எவர்க்கும் அஞ்சாமலும் இப் பணிகள் நடந்துவந்தன.

1. தனித் தமிழ்

அடிகளார் தனித்தமிழ் இயக்கங் கண்டவர்கள்; இது, நமக்காக அன்று, தமிழ்மொழியும் தமிழகமும் சிறக்கும் பொருட்டேயாம்.

2. அதன் நலம்

தனித் தமிழியக்கம் யார்க்கும் தீங்கு தருவதன்று! அதே நேரத்தில் அது தமிழர்க்கு ஆக்கமாகவும் இருப்பதாகும். எல்லா மொழிகளும் விழிப்புற்றுத் தத்தம் இயல்புகளில் இயங்குவதற்குத் துணை புரிவதுமாகும்; இவ் வியக்கத்தால் உண்மைத் திறம் பெருகிக் கரவு உள்ளம் மறையவும் வாய்ப்பிருக்கிறது!

இயக்க நோக்கம், தந்நலங் கருதுவதாயிருந்தால், அந் நலத்துக்குத் தனித் தமிழியக்கம் காணுமலிருப்பதே பெரும்பாலும் அக்கறையில்லாத இந் நாட்டு நிலையில், நல்லது. செல்வம் முதலிய நலங்களும் கூடிவரும்; பெயரும் போலிப் புகழிற் பொலியும்; அத் தந்நலத்தை மறுத்தவர் அடிகளார்; நாட்டுக்கு நலம் செய்தலே அவர் நோக்கமாயிருந்தது!

3. புதிய சொல்லாக்கம்

புதிய புதிய சொல்லாக்கங்கள் இவ் வியக்கத்தால் மேன் மேலும் உண்டானதும் இதன் நலங்களுள் ஒன்று; கலைச்சொல் ஆக்கங்கள், விஞ்ஞானச் சொல்லாக்கங்கள் முதலியன ஏராளமாய்ப் பெருகின. அரசு வழியிலும் அறிஞர் வழியிலும் பெருக்கெடுத்தன.

ஊன்றி நோக்கினுல் மொழியின் சிறப்பு அதன் சொல் வளத்தில் அமைந்துள்ளமை காணலாம். வேர்ச் சொற்கள் பலவற்றைத் தமிழ்மொழி ஏராளமாய்ப் பெற்றிருத்தலின், அவற்றின் துணை

கொண்டு எல்லாத் துறைகளுக்கும் புதுச் சொற்களை உண்டுபண்ணும் வாய்ப்புக்குக் குறைவேயில்லை. பகுதி விகுதி முதலிய சொற்பாகுபாடுகளாகிய சொல்லிலக்கணச் சிறப்பும் தமிழ்க்கு மிகுதி! சாரியைகளும் சந்திகளும் வேறு துணை செய்கின்றன; மிக எளிதாகப் புதுச் சொற்களை உருவாக்கலாம்.

பண்டைப் பேராசிரியர்களின் சொல்லாக்க முயற்சிகள் ஆழமும் அழகும் மிக்கவையாதலால், அவற்றை மக்கள் இழந்துவிடக்கூடாது என்னும் நன்னோக்கமும் அவர்களுக்கு இருந்தது!

4. பழைய சொற்கள்

பழம்பெருஞ் சொற்களை அழிந்து போகாமல் காப்பாற்றுவதற்கு, அவற்றை இருவகை வழக்கிலும் பொருள் உணரவைப்பது இயக்கமுடையோர் கடமை; பொருள் தெரிந்த சொற்களை முன்பின் இட்டுத் தொடர்களை வழங்கி வந்தால், இடையில் அமைந்த அரிய சொற்களுக்கும் தானே பொருள் விளங்கிவிடும்; அடிகள் இயற்றியருளிய நூல்களிலெல்லாம் அத் திறம் மிக நன்ருகக் காணப்படும்.

'சிவஞானபோத ஆராய்ச்சி' என்னும் அடிகளாரின் அரிய நூல் நடையில்,

"மூலப்பகுதி தன்கட் டோன்றிய" "அவற்ருன் அவ்வறிவு மயங்குதருன் என்னையோ வெனின்"

என்பவற்றில் 'தன்கட்டோன்றிய' என்னும் புணர்ச்சியும், 'மயங்குதருன்' என்னும் 'தான்' சாரியைச் சேர்க்கையும்;

"தன்னிலை திரிந்து 'கடுகி' இயங்குமாயின்" "ஞாயிறு திங்கள் முதலான கோள்கள் 'உடுக்குழாங்கள்' என்னும் இவற்றது இயக்கத்தான்" "அவை யெல்லாவற்றிலும், 'நனி நொய்ய' இறைவனிருந்தே" "வளி 'உளருங்கால்' மெய்க்கட் சென்று பட்டு"

எனவும் வருகின்ற தொடர்களில், 'கடுகி' 'உடுக்குழாங்கள்', 'நனிநொய்ய' 'உளருங்கால்' என்னும் அரிய சொற்களும் இடையிடையே கையாளப்படுதல் காண்க.

'கோகிலாம்பாள் கடிதங்கள்' என்பது, அடிகள் எழுதிய இனிய புதுக் கதை; எளிய நடையில் அமைந்த இந் நூலில், "தன்

றந்தையாரான" "யாங்கள் மறைந்து செல்லாநிற்க" எனப் புணர்ச்சியமைப்பும், நிகழ்கால வினைச்சொல் பெய்தலும் வந்துள்ளன;

மேலும், "சொல்லுவார் மறைவுகளை அறிதலாற் கேட்பார் அவரைத் தாழ்வாக நினைத்து" என்பதில் 'மறைவுகளை' என்னுந் தூய தமிழ்ச் சொல்லும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

"இரட்டுத் துணியிற் செய்த இரண்டு தொட்டில்கள்" "வாய் பூசிக் கை கழுவியபின்" "பூங்காவினுட் சென்று உலவி வருவோம்" "வைகறைப் பொழுது மிகவும் இனியதாகத்தான் இருந்தது" என்பவற்றில் தனித்தமிழ் வழக்குகளும் இணைந்துள்ளன.

"ரோஸ் என்னும் நிலத்தாமரைப் பூஞ்செடி" எனச் சொல்லாக்கமும் விளக்கமுங் கூடியுள்ளன.

"ஆங்கிலர் இசைக் கருவி முழக்கும் மண்டபத்திற்கீழ்ப் பாங்குள்ள இலைக்கொடி மண்டபத்தினுட் சென்று" எனவும், "அது தண்ணீரின்மேற் சறுகி யோடிற்று" எனவும், "அந்த அம்மையார் ஒன்றுஞ் சொல்லாமற் புருவத்தை மேல் நிமிர்த்தித் தலையை அசைத்து வாயைக் குவித்து வலக் கையின் முன் விரல்களை மடக்கி வாய்மேல் வைத்தார்" எனவும், தமிழிற் படம் போல் விளக்கப்படும் நடைத்திறனுங் காணப்படுகின்றது.

"அழகு மேன்மேற் பெருகிச் சுடர்வீசிப் பசும்பொன்போல் விளங்கும்" "என் மனத் தடத்தில் மலர்ந்திருக்கும் மணங்கமழ் தாமரையே" எனவும், "நெய்யடிசிலிற் சிறிதும் எடுத்து அயின்றேன்" எனவும் நற்றமிழ்த் தொடர்களும் அரிய சொற்களும் வந்திருத்தலும் நினைவு கூரப்படும். இந்த அழகியலைத் தனித் தமிழியக்கம் எல்லார்க்கும் வழிகாட்டி உய்வித்திருக்கிறது.

'மக்கள் நூறுண்டு உயிர் வாழ்க்கை' என்னும் ஒரு நூலில், முதற்பகுதியில் மட்டும் அடிகள் உண்டாக்கிய புது ஆக்கங்களும், பழஞ்சொல் வழக்கங்களும் ஏராளம்! சில குறிக்கலாம் :

'உள்ளொளி' 'உயிர்க்காற்று', 'ஈளை இருமல்' 'வடிபால்' 'மூச்சுப் பழக்கம்' 'ஞாயிற்று மண்டிலம்' 'பகற்கலை' 'மதிக்கலை' 'மின்னொளி' (விந்து), 'மின்பிழிவு' (நாதம்), 'வியர்வைப் புழைகள்' 'நீரேற்றி' 'காய்ச்சல்' என்னும் 'உயிர்த்தீ' 'கன்னங்கறேல்' 'சாய் வெயில்' 'காட்டுத் தீ' 'வெள்ளை வெளேல்' 'கிச்சிலி' (நிறம்), 'மினுக்கெண்

ணெய்' 'நிறத்துருக் கடவுள்' 'கறையிழிவு' 'கோழைக் கட்டு' 'பரிய முறைகள்' 'பெருமறை' 'உதவி முயற்சி' 'வெள்ளிய மாசி' 'நீர்த் தூம்பு' 'அரத் துவாரம்' 'கக்கற் கழிச்சல்' 'செம்மை நூல்' 'இலந் தன்' 'நீர் உறிஞ்சு பொறி' 'மூச்சுநீர்' 'தீவிய நீர்' 'உயிர்த்துகள்' (Cell Protoplasm) 'நீர் வீக்கம்' 'மெருகெண்ணெய்' (Varnish), 'பன்னீர்ச் சவர்க்காரம்' 'தேம்பொருள்' 'கொப்பூழ்' 'கட்டுக் கிடையாக' 'பொலு பொலுப்பான' 'நீறு நீற்றி' 'தீக் கல்' 'சாம்பருப்பு' 'குப்பிகள்' 'எண்ணெய்க் கடு' 'உலவாக் கிழி' 'முதலுணு' (Protein) 'கொழுப்புணு' (Fats), 'இனிப்புணு' (Carbo-hydrates), 'உப்புணு' (Salts), 'நீருணு' (Water), 'ஒலிவ நெய்' 'உவர்க்காரம்' 'உய்வனவு' அல்லது 'உய்வுறை' (Vitamins), 'பொருத்து' 'கடுக்கொட்டை' (Walnut), 'கல் யானை' முதலிய எத் துணையோ பல. அடிகள் யாத்த அனைத்து நூல்களிலும் இத் தனித் தமிழ்ச் சிறப்பு நன்கு காணப்படும்; அடிகளார் இவ் வகையில் சோம்புவதில்லை; பாரா முகம் கொள்வதில்லை; கடமை என்று மகிழ்வோடும் கிளர்ச்சியோடும் தமிழ்ப்பணி புரிந்து வந்தார்; அடிகளார் தனித்தமிழ் எழுத்து இதனாலும் வெற்றி மிக்கதாயிற்று!

5. தமிழின் சிறப்புகள்

அடிகளார் வாய்மொழிகள் சில இங்கே நினைவு கூர்தல் நல்லது:

"தென்றமிழ் நாட்டிலுள்ள நம்மனோர்க்கு உயிர்போற் சிறந்தது தமிழ்மொழி!...பல்லாயிர ஆண்டுகளாக உயிரோடு உலவிவரும் சிறப்புடையது; இறவாதது; கட்டுக் கதைகளைப் போல்வன சிறிதும் இல்லாதது; உண்மை நூல்களே நிரம்பியுள்ளது; முறையில்லாத விதிகளை வகுத்த...முறையற்ற நூல்கள் சிறிதும் இல்லாதது; எத்தகைய நுண்ணிய உயர்ந்த ஆழ்ந்த கருத்துக்களையும் தெரிவித்தற்கியைந்த சொல்வளம் உடையது; பிறமொழிச் சொற்களை இதன்கட் புகுத்தாமல் இதனையும் இதன் நூல்களையும் எல்லார்க்கும் தனிமையிற் கற்பித்தல் இன்றியமையாததாகும்"

—அறிவுரைக் கோவை, பக் 198, 9.

'மற்றை மொழியின் உதவியை வேண்டாது தனித்து இயங்க வல்ல சொல்வளமும் பொருட்செழுமையும் உடைய நம் செந்தமிழ்

மொழியை அதற்கே உரிய சொற்களால் வழங்காமல் அயல்மொழிச் சொற்களை இடையிடையே நுழைத்து அதன் அழகையும் வலிமையையும் சிதைத்தல் பெரியதொரு குற்றமாமென உணரலானேம்; இன்றியமையாது வேண்டப்பட்டாலன்றித் தமிழிற் பிற சொற்களைப் புகுத்தல் நிரம்பவும் பிழைபாடுடைத்து"

—பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை,
2ஆம் பதிப்பின் முகவுரை, பக். 18.

"எல்லாரும் தமிழாகிய தமது பண்டைமொழியையே வழங்கிப் பிளவுபடாதிருந்தால் குமரி முதல் இமயம் வரையில் இன்றைக்கும் தமிழும் தமிழருமே பிறங்கி நிற்கும் பெரும்பேறு உளதாமன்றோ?

"ஒரு மக்கட் கூட்டத்ததவராய் ஒற்றுமையும் வலிவுங் கொண்டு வாழ்ந்தவர், பலவேறு மக்கட் பகுப்பினராய்ப் பிளவுபட்டு ஒற்றுமையும் வலிமையும் இழந்து, வறுமைப்பட்டுத் தாழ்வது அவர் தமது பண்டை மொழியின் சொற்களைப் பலவாறு திரித்துப் பேசி அயன்மொழிச் சொற்களையும் எடுத்துச் சேர்த்து வழங்குதலினாலேயாம்."

—முற்கால பிற்காலத் தமிழ்ப் புலவோர் (பக். 28, 9)

தமிழ் நடையைத் தனித்தமிழ் நடையாக்குவதில் எல்லாத் துறைகளிலும் அடிகளார் பெருவெற்றி பெற்றிருக்கிறார். தமிழ் மக்களிடையே தனித்தமிழ் உணர்ச்சியைப் பெருக்கித் தமிழ் மொழியைத் தமிழாகவே வழங்குமாறு இங்ஙனம் பொதுநலம் பேணி முயன்றார் அடிகளார்! தமிழ்ச் சுவையைத் தமிழ் மக்களுக்கு அடிகளார் விளக்கிக் காட்டிய அளவு பிறர் யாரும் செய்யவில்லை. இவ்வுயர்ந்த நோக்கத்தால் தமிழ்நாடு பெற்றபேறு பெரிது!

தாயுமான அடிகள்,

"உண்டவர்க் கன்றி உட்பசி ஓயுமோ
கண்டவர்க் கன்றிக் காதல் அடங்குமோ
தொண்ட ருக்கெளி யானென்று தோன்றுவான்
வண்ட மிழ்க்கிசை வாக மதிக்கவே'' —பொன்னை மாதரை, 70.

என்பதில், தொண்டையும் தமிழையும் இணைக்கிப் போற்றினமை காண்க. தமிழ்க் கொள்கையே பிறர்க்கென முயலும் பொதுநலத் தொண்டு!

'தொண்டு' என்னுஞ் சொல்லாக்கமே, அது, பழைமை வாய்ந்த தென்பதையும் நினைவூட்டும்; அது, பற்றறுச் செய்யும் பொது நலச் சேவை. தமிழகத்துக்கு இந்நோக்கம் புதுவதன்று; திருவள்ளுவரை உலகினுக்கே தந்தது இத் தமிழ்நாடு. உலக நாடுகள் அனைத்தையும் நோக்கியது அவர் பொதுமறை!

6. மொழி வழி

அடிகள் நோக்கம் உயர்வுற்றதன் காரணமே, உண்மை வழியில் அவர் கருத்துக்கள் சென்றமை; உண்மை என்பது நாட்டின் வரலாற்றையும் உட்கொள்வது; ஆனல், அடிகளார் நினைவுகள் வரலாறுகளைப் பின்னிக்கொண்டன; தமிழில் வைத்த உள்ளம் அதன் வரலாறுகளை நினைந்தது; தமிழிலே தமிழரும் தமிழகமும் உயரவேண்டும்; வரலாற்றின்படி இக் காலத்தில் நாடு இல்லையே என்று இரக்கமுற்றது; இக் கால இந்தியாவையும் எண்ணத் தொடங்கியது.

7. வரலாறு

அடிகள் தமிழகத்தில் தோன்றியவராயினும் இந்தியா முழுதையும் ஒருங்கிணைத்துநோக்குமாறு தமிழ்வரலாறு அடிகளார்க்கு உணர்ச்சி தந்தது; ஒரு காலத்தில் இந்தியா முழுதும் தமிழ் வழங்கும் நாடாயிருந்தது புலப்பட்டது. இது வரலாறு; வரலாற்று நோக்குப்படி தமிழ் மொழியே இந்தியப் பொது மொழியாக இருத்தற்குரியது என்பதும் தெரிந்தது; தேயத் தொண்டர்களை விளித்துக் கீழ்வருமாறு சொல்ல அடிகளார் துணிந்தனர்:

8. பொது மொழி

"நடுநின்று நோக்கவல்ல உண்மைத் தேயத் தொண்டர்கள் உளராயின், இவ்விந்திய நாட்டுக்கு மிகப் பழைய மொழியாய் இருப்பதுடன் இன்றுகாறும் பல கோடி மக்களாற் பேசப்பட்டுவரும் உயிருடை மொழியாயும், இவ்விந்திய மக்களை எல்லாத் துறையிலும் மேலேற்றத் தக்க பல சீரிய நூல்களை உடையதாயும் உள்ள தமிழ் மொழியையே இவ்விந்திய தேயம் முழுமைக்கும் பொதுமொழியாக்க அவர் முன்வந்து முயலல் வேண்டும்."

—அறிவுரைக்கோவை, (இந்தி பொது மொழியா என்னும் பிரிவு) பக். 176.

9. இந்து சமயம்

இக் காலத்தில் இந்தியா பன்மொழி நாடாகவும், பல சமய நாடாகவும், பல சாதி நாடாகவும் தோன்றினாலும், எல்லாரும் ஒரு தமிழ்க் குடும்பமே என்பது அடிகளார் உள்ளம்.! நூல்களில் பலப் பல இடங்களில் இந்தியா முழுமையுமே ஒருங்குநோக்கி அடிகள் குறிப்பிடுவர். சைவசமயமே இந்துசமயம் என்பதும் அவர்கள் கொள்கை.

"'இந்து சமயம்' என்பது யாது என்று உண்மையான் ஆராயும்வழி அதுவே 'சைவ சித்தாந்தம்' என்னும் வேறு பெயரான் வழங்கப்படுவதென்பது இனிது புலப்படா நிற்கும்"

—சைவசித்தாந்த ஞானபோதம், பக். 48.

என்றது காண்க; இதை அடிகள், 'இந்து சமய உண்மைகள்' என்னும் பிரிவில் விரிவாகக் காரணம் கூறி ஆராய்வர்.

10. இந்திய நோக்கு

'பழந்தமிழ்க் கொள்கையே சைவசமயம்' என முழங்கிய அடிகள் அச் சைவ சித்தாந்தமே இக் காலத்தில் 'இந்து சமயம்' எனவும் வழங்குகின்றதென்று முடித்துக் கூறுவார்; பனிமலை தொட்டுக் குமரி வரையும் இந்துசமயிகள் எனப்படும் சைவசித்தாந்திகள் எங்கும் பரவியிருக்கின்றனர் என்பார், இங்ஙனம் இந்து மக்கள் அனைவர்க்கும் பொதுவாகவும் அடிகளார் உயர்நோக்கம் ஓங்கியிருந்தது; அவர் வாக்கு ஒன்று :

"ஓ, இந்திய மக்களே! நீங்களும் உங்கள் கால்வழியும் மற்ற நாட்டவரைப் போலவே எல்லாச் செல்வங்களும் பெற்று இன்பத்தோடு நீண்ட காலம் உயிர் வாழவேண்டின், யாங் கூறுவதைச் சிறிது செவி சாய்த்துக் கேட்டு அதன்படி நடக்க முந்துமின்"

—மக்கள் நூறுண்டு உயிர்வாழ்க்கை, பக். 147

என்று இந்திய நோக்கிற் பேசுவது இங்கு நினைவுகூர்தற்குரியது!

ஆ. கல்வி நலம்

கல்வி என்பது ஆழ்ந்து நோக்குதல்; அப்படி என்ன இருக்கிறது ஆழ்ந்து நோக்க? எதிரில் உலகந்தான் இருக்கிறது!

உலகம் என்ருல், மக்களும் சிற்றுயிர்களும் தேவர்களும் அடங்குவர்.

நூல் நிலையங்களிற் காணப்படும் நூல்களெல்லாம், அவை எந்த மொழியில் எந்தத் துறையில் இருந்தாலும், இந்த உலகங்களேயும் அவற்றிலுள்ள உயிரினங்களையும் பற்றி வருவனவாகவே இருக்கின்றன.

ஆழ்ந்து நோக்கினல் இவற்றின் அடிப்படையில் மெய்ப்பொருள் விளங்குதலைத்தான் காண நேரும். கல்வி என்பது ஆழ்ந்த கல்வியாக இருப்பதோடு மெய்க்கல்வியாகவும் இருக்க வேண்டும். அதற்காகத்தான் திருவள்ளுவர் தமது தமிழ் மறையில் 'மெய்யுணர்தல்' என்று ஓர் அதிகாரம் நிறுவி, 'உண்மைக் கல்வி'யையும் அறிவுரைத்தார். உலகியற்கையில் மெய்ப்பொருளுங் கலந்திருப்பதனுல் அப்படி அவர் ஆழ்ந்து மெய்யை அறியும்படி அறிவுரைக்க வேண்டிய கட்டாயம் நேர்ந்தது!

ஆழ்ந்து ஆராய்வதும், ஆராய்ந்து மெய்யைக் காண வேண்டுமென்னும் நோக்கங் கொள்வதும், கல்வி நலத்தில் உயர்ந்த நோக்கமாகும்; அடிகளார் இவ்வுயர்ந்த நோக்கத்திற் சிறந்தவர் என்பது யாவரும் அறிந்ததே! வாழ்நாள் நெடுகக் கற்றுக்கொண்டிருந்தவர் அடிகள்; கற்பதும், உயர்ந்த நூல்களேயே; அவற்றையும் ஆழ்ந்து ஆழ்ந்து கற்பார்; மெய்ப்பொருளுங் காண்பார்: எப்பொருள் எத்தன்மைத் தாயினும், யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருளின் மெய்ம்மை என்ன என்றறிவதே அடிகட்கு இயல்பாய்விட்டது! 'எழுதுதலைவிடப் படித்தலே எனக்கு இன்பம் பயக்கிறது' என்று அடிகளார் அடிக்கடி கூறுவார்கள். உலக மொழியாகிய ஆங்கிலத்தில் புலமை படைத்தவர்களாதலால், உலக நாடுகளின் கலைகள் பலவும் அறிந்து உண்மை நோக்கில் எண்ணிப் பார்த்து மக்களுக்கு அறிவுரை வழங்கவும் வாய்ப்பிருந்தது. பிறர்க்கென முயலும் உயர்ந்த நோக்கத்தால் அதற்குரிய பெரும் புலமையை அடிகள் அடையவும், அறிவுரைக்கவும், அனைவரும் ஒன்றியிருந்து கேட்கவும் நேர்ந்தது புதுமையன்று; தகுதியான விளக்கம் வேண்டும் என்ருல், அதற்கு அடிகளிடம் செல்ல வேண்டும் என்னும் உணர்வு நாடெங்கும் தோன்றிப் பரவியது!

1. பழைய கல்வி

கல்வியிற் பழைய தமிழ்க் கல்வி சங்கநூற் கல்வியாயிருக்கிறது! அவற்றின் பகுதிகளே பிற்காலக் கல்விகள்; பிற்காலத்திற் பொய்ம்மைப் போக்குகளும் அவற்றோடு கலந்து மலிந்தன; இதனால் சங்கச் சான்றோரைப் பொய்யாச் செந்நாவினர் என்பர். அவர்கள் நூல்களும் பொய்யா மொழிகளாயின; தலைசிறந்த மறை நூலாகிய திருக்குறள், 'பொய்யாமொழி' என்றே பெயரெடுத்தது!

சங்க நூல்களைப் பெரும்புலவர் பலர் பேருழைப் பெடுத்துப் பதிப்பிட்டுதவினர்; ஆசிரியர் மறைமலையடிகள் போன்றோர் அவற்றின் மெய்ம்மையில் ஈர்ப்புண்டு, தமிழ்ச்சுவையாகிய அம் மெய்ச் சுவையை ஆழ நுகர்ந்து அவற்றின் அழகுகளை யாவரும் உணர்ந்து சுவைக்கும்படி, நாகரிக அறிவும் விம்மிதங்கொள்ளும் முறையில் மிகத் தெளிவான விளக்கங்கள் கொடுத்து உதவினார்கள்; சில சான்றுகள் வருமாறு:

2. மெய்வழி

"பழந் தமிழிலுள்ள நூல்களெல்லாம் உள்ளவற்றை உள்ள வாறே நுவல்வன; மக்கள் தம் மனமொழி மெய்களால் நினைப்பனவும் சொல்வனவும் செய்வனவுமெல்லாம் தூயனவாய் இருக்க வேண்டுமென்று வற்புறுத்துவன; மக்கள் வாழ்க்கையானது அன்பையும் அறத்தையும் இரு கண்களாகக் கொண்டு ஒரு தெய்வ வழிபாடாகிய உயிருடன் கூடி உலவ வேண்டுமென உயர்த்துக் கூறுவன.

"மிகப் பழைய மொழிகளில் தமிழ் ஒன்றைத் தவிர மற்றையவெல்லாம் இஞ்ஞான்றுள்ள எந்த மக்கட்குழுவினராலும் பேசப் படாமல் இறந்தே போய்விட்டன.

"தமிழ் மொழி ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே தொட்டு இயல் இசை நாடக இலக்கணங்களும், மக்கள் வாழ்க்கையின் பல துறைகளிலும் அறிவை விளக்கி இன்பத்தை ஊட்டும் அரிய பெரிய பல இயற்றமிழ் இலக்கிய நூல்களும் ஆயிரக்கணக்காக உடைய தாய் இன்றுகாறும் பலகோடி மக்களாற் பேசவும் எழுதவும் பயிற்சி செய்யவும் படும் உயிருடை நன்மொழியாய் உலவி வருகின்றது."

—அறிவுரைக்கோவை, பக். 161, 175

"தமிழ் மொழியானது ஆறரைக்கோடி இந்து மக்கட்குப் பொது மொழி.

"பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே தொட்டு இன்றுகாறும் வழங்கும் தனிப் பெருஞ் சிறப்பு வாய்ந்த தனித் தலைமை மொழி!

"ஓர் ஊரில் கற்றறிவுடையார் ஒருவர் இருப்பினும் அவரால் அவ்வூராரெல்லாரும் திருத்தமடைவர்;.... திருத்தங்களெல்லாம் அவரறிந்தும் அறியாமலும் யாண்டும் பரவிக்கொண்டேயிருக்கும்.

"எந்த நாட்டில் தொன்றுதொட்டுக் கற்றோர் மிகுதியாய்ப் பல்கிவருவரோ அந்த நாடு வளம் பெறும்;...அவர் வழங்கும் மொழி மிகுந்த சிறப்புடையதாய் நிலைபெறும்"

"தமிழ் நாட்டிற் பண்டைக் காலத்துக் கற்றறிவுடைய சான்றோர் கணக்கின்றி இருந்தனர்; அவர்களால் திருவாய் மலர்ந்தருளப்பட்ட அளவிறந்த நூல்களும் அளவிறந்த பாட்டுக்களுமே சான்றாம்."

பண்டைக்காலத் தமிழரும் ஆரியரும் பக். 16, 17, 57, 104, 105

"வேறெந்த மொழிகளிலுங் காணப்படாத தொல்காப்பியம், திருக்குறள், திருவாசகம், சிவஞானபோதம், திருத்தொண்டர் புராணம் முதலான ஒப்புயர்வில்லா இலக்கண இலக்கிய நூற் பெருஞ் செல்வங்கள் வாய்ந்த மொழி."

—இவையுமது பக். 185

"அறிவின் ஏற்றத் தாழ்வு கண்டு, உயிரினங்களை ஆறு வகையில் அடக்கிக் காட்டிய மிகப் பழைய நூல் தமிழ் மொழியிலுள்ள தொல்காப்பியத்தைத் தவிர வேறெந்தப் பழைய மொழியிலும் எந்தப் பழைய நூலிலும் இல்லாமை கருத்திற் பதிக்கற் பாலது."

"தொல்காப்பியம் எழுதப்பட்ட காலத்தே செந்தமிழ் நாட்டின் கண் வழங்கிய செந்தமிழ் மறைகள் நான்கு.

"அந் நான்மறை வல்ல துறவோரால் அறிந்து வழிபடப்பட்ட கடவுள் சிவபெருமானே"

இவ்வுரைகளெல்லாம் அடிகளாரின் உயர்ந்த நோக்கத்தை இனிது புலப்படுத்துதல் காண்க. நாட்டவரிற் பெரும்பாலார்

எழுத்தும் அறியாதவராயிருப்பதும், சிறிது கற்றவரென்பவர் புலமை வாயாதவராயிருப்பதும், நன்கு கற்றவரென்பவர், தமது மொழியில் உயர்வெது என்று அறியாதவராய்த் தம் புலமைச் சிறப்பையே பெரிது பாராட்டிக் கொள்பவராய்ச் சேவையிற் கருத்தில்லாமல் இருப்பதும் அயல்மொழிகளில் பலர் நாட்டமும் பெருமையும் புலமையுங்கொண்டு தாய்மொழியைப் புறக்கணித்து அதன்கண் அன்பே இல்லாதவராய் இருப்பதும், அடிகள் நெஞ்சத்தை இறுக்கிப் பிழிந்து, உயர்ந்த நிலையில் தமிழகம் வளரும்பொருட்டே, பொதுத் தொண்டாற்றும் பெருநிலையில் தம்மை ஒப்படைத்துக் கொள்ளும்படி செய்துவிட்டன!

இ. அறிவு நலம்

இங்கே 'அறிவு' என்பது, மனத்தாற் பகுத்தறிவதன்று; மன அறிவு, எதையும் நல்லது இது, தீயது இது எனப் பகுத்தறிதல் மட்டும் வல்லது; பகுத்தறிந்தபடி தீயதை நீக்கி நல்லதைச் சேர்த்து நாளுங் கடைப்பிடித் தொழுகுதல் மன அறிவுக்கு இயலாது; ஆனால், தமிழ் மறைக்குரவர், "தீது ஒரீஇ நன்றின்பால் உய்ப்பது அறிவு" என்று அறிவுக்கு ஓர் இலக்கணங் கூறுவார்; நடத்தைக்குக் கொண்டுவரும் இந்த அறிவுதான் 'உயிரறிவு' எனப்படும்.

1. உயிரின் தன்மை

உயிரின் தன்மையாயிருப்பது உயிரறிவு; மனம் ஒரு கண்ணாடி போன்றது; அதில் இந்த உயிரறிவு நிழலாடிப் 'பகுத்தறிவு' எனப்பட்டது. அது, உண்மை யறிவன்று; கண்ணாடியில் தோன்றும் நிழலறிவு.

மனம் என்பது தன்னியல்பில் அறிவில்லாத கருவி; மாந்தர்க்கு வாய்ந்திருக்கும் முப்பத்தாறு கருவிகளில் ஒன்று; முப்பத்தாறும் அறிவில்லாதவை; ஆனால், ஒன்றைவிட ஒன்று நுண்ணியது! உயிரின் அறிவு இக் கருவிகளில் நிழலாடினால், இக் கருவிகளும் அறிவுடையனபோலத் தோற்றும்.

2. நிழலறிவு

உடம்பின் மேற்புறத்தில் இருக்கும் ஐம்பொறிகளும் வெளியில் உலகமாகக் காணப்படுகின்ற மண் நீர் முதலிய ஐம்பெரும் பொருள்

களையே நோக்கும் பருவடிவின வாதலின், இப் பொறிகளைச் செயற் படுத்தும் மனம் என்பது, அகத்தில் ஒரு கருவியாய் இருந்து கொண்டு, இப் புறப்பொறிகளோடு இயைந்து புறம் நோக்கும் நுட்பக் கருவியாய் விளங்கி உதவுகிறது! நுட்பமாதலின் ஊனக் கண் ணுக்குத் தெரிவதில்லை. நிழலாடும் கண்ணாடிபோல் விளங்குகிறது! கற்பாறைபோல் பருமனுகை இல்லை. அதனால் மனத்தில் தோன்றும் உயிரறிவு, கண்ணாடியில் தோன்றும் நிழலுருவங்களைப்போல நிழலறிவாய் இருக்கிறது!

மனம் இயைந்த பொறியறிவுகளும் நிழலறிவே! பொறி புலன் களாற் காணப்படும் உலக அறிவும், அது கொண்டு உலகப்பொருள் பற்றி மெய்யுணர்வின்றி எழுதப்படும் நூல்களும் பொறிபுலன் முதலிய மாயைக் கருவிகளால் நுகர்ந்தின்புறும் உலக வாழ்வுமெல் லாம் வெறும் நிழல்களாய் முடிதலின், "காயமே இது பொய்யடா" எனப்பட்டது!

3. மெய்யறிவு

ஐந்தவித்து, அறிவு எங்கிருந்து வருகிறதோ அங்கு உள் திரும்பி, முப்பத்தாறு மாயைக் கருவிகளாகிய படிகளை ஏறி அவற் ருல் அலையுருமலும் அங்கங்குந் தங்கிவிடாமலும் ஒரு நெறிய மனம் வைத்து உயிரறிவு இருக்கும் உச்சியை அடைந்து உண்மையை உணர வேண்டிய முதன்மை, மனம் படைத்த மனிதர் ஒவ்வொரு வருக்கும் கட்டாயமாயிற்று. உண்மையை நாடும் உயர்ந்த நோக்கமு மாயிற்று!

ஆசிரியர் மறைமலையடிகளார் இத் திறம் அமைந்தவர்கள்; உண்மை காணும் உயர்ந்த நோக்கமுடையவராய், அகம் திரும்பிய உள்ளுணர்வினராய், எந் நேரமும் விளங்கினர்கள்; உயிரறிவோடு மட்டும் நில்லாமல் அதற்கும் அகமாய் விளங்கும் மெய்ப்பொருளை நாடும் உயர்நோக்கமுடையவராய்த் திகழ்ந்தனர்! அச் சிறப்பினுல் எதனையும் நடுநின்று ஆராய்ந்து சிக்கறுத்து உண்மை முத்துக் களையே ஆழக் குளித்தெடுத்துப் பிறர்க்குக் கொடுக்கும் பேருதவி யாளராய் நாளும் பிறங்கினர்! ஐந்தும் அடக்கா அறிவறிந்து வாழ்ந்து, மெய்ப்பொருள் நாடி விரிவுரைகளும் நூலெழுத்துக்களும் செய்து வந்தார்கள்.

ஆடியின் நிழலுருக்களையும் நிழற்படங்களையும் காண்போர், அவற்றின் மெய்யுருவைக் காண வேட்கையுறுவர்; உற்று முயன்று காணுதலும் உடையர்; அதுபோல, உலகியற்கையில் நிழலறிவைக் காண்போர், உடனே அகந்திரும்பி அதன் மெய்யறிவைத் தேடி ஒரே ஊக்கமாய் ஒரு நெறிய மனம் வைத்து உணர முற்படுவர்; 'ஐந்தவித்தல்' என்பது இது; நிழலறிவை உலகியற்கையிற் காண்பதனால் உண்மையைக் காணும் நாட்டம் பிறந்தது; அதனால், உயர்ந்த நோக்கத்தில் ஐந்தையும் புறங் காணவிட்டு அகம் திரும்பி மெய்காணுதல் முறையாகுமாதலின்,

> "ஐந்தும் அடக்கின் அசேதனமாம் என்றிட்டு
> ஐந்தும் அடக்கா அறிவு அறிந்தேனே"

என்றார் திருமூலர்! புறம் நோக்குதல், அகந் திரும்புதற்கேயன்றி வேறில்லை; கழனிகளில் நெல் விளைத்தல், முடிவில் அகத்துக்குக் கொண்டு வருதல் வழக்கம்; அதுவே வாழ்க்கை; புறவாழ்வு வெறும் நிழல் வாழ்வு! உண்மை வாழ்வு அகத்தில் நடைபெறுவது!

ஈ. அருள் நலம்

இங்ஙனம் மெய்யுணர்ந்து அகத்தில் நிகழ்தலாகிய அக வாழ்வும் பிறர்க்கென உயர்நோக்கில் நிகழும்போது, அது வலிவான நன் முயற்சியாய் நற்றவமாய் நன் ஞானமாய்ச் சிறந்த தேனிப்பாய் நிகழ்ந்து, "நான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்" என்னும் முறைமையில் ஓங்குகின்றது! இந் நிலையில் எழுகின்ற நினைவு சொற் செயல்களெல்லாம் விழுமியவாய் உள்ளன; நாட்டை நலப் படுத்துவனவாய் விளங்குகின்றன. மொழி நலனும் சொல் வளத் தாற் சிறக்கின்றன! செய்யும் சேவைகள், தக்காரை நோக்கி நிகழ்ந்து, கடவுட் சேவைகளாய்க் கருதப்படுகின்றன.

சேவையால் அருள் நலனும் அருள் நலத்தால் உயிரறிவு நலனும் சிறக்கின்றன! அத்தகைய் அறிவு நலத்தால் கலை நலனாகிய மன நலனும், அதனால் தொழில் நலனும் உடல் நலனும் உண்டாகின்றன; மெய் வாழ்வுக்கு இம் முறைமை மருந்து! எல்லாம் உண்மை என்னும் சிவத் தன்மையை அடிப்படையாகக் கொண்டவை.

1. ஒளி நிலை

புறத்திலிருந்து பொது முறையில் அகத்துக்குப் போய் அகத்தின் அகமாகிய கடவுள் நிலையை அடைந்து ஆற்றலுற்று அகத்திலிருந்து சிறப்பு முறையில் நினைவு சொற் செயல்களுக்கு வந்து பலர்க்கும் உதவும் பொதுநலங் கொண்டு இவ் வுயர்நோக்கில் வாழ்ந்தவர்கள் அடிகளார்! அதனால் அவர், வெறும் புறத்தார் யார்க்கும் அஞ்சுவதில்லை; அருளாற்றல் இவ் வகையில் அடிகட்கு உதவி வந்தது;

"பால் நினைந்து ஊட்டும் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே!"

என்னுந் திருவாசகம் இங்கு நினைவு கூர்தற்குரியது! உள்ளொளி பெருக்கிப் பேரின்பம் சொரிந்து புறம்புறம் திரிந்து உதவும் பெற்றியனாய் அடிகட்குச் சிவபெருமான் பாதுகாத்து நின்றான்; இது நாயன்மார் திறம்; அடியார் மாண்பு! அடிகளுக்கு அமைந்த இப் பயன்படும் மெய்த்திறம், மேலெடுத்துக் காட்டிய அடிகளார் நூலுரைகளாலேயே நன்கு தெளியப்படுமாயினும், இன்னும் இரண்டொன்று இங்கே எடுத்துக் காட்டலாம்:

2. உண்மை கடைப்பிடி

"உரிமை நண்பர்கள், உலக இயற்கை உயிர் இயற்கைகளெல்லாம்....வரையறை செய்து இலக்கணம் எழுதிய ஆசிரியர் தொல்காப்பியரை ஒத்த ஆசிரியரையாயினும், அல்லாதவர் அருளிச் செய்த தொல்காப்பியம் போன்ற பிறிதொரு நூலை யாயினும் இன்றைக்கு நாலாயிர ஆண்டுகளின் முன் நாகரிகம் எய்திய எத் தேசத்திலாயினும் எம் மொழியிலாயினும் காட்டுதல் கூடுமோ? நடுநிலை திறம்பா துரைமின்கள்!"

"தமிழர், (மாபாரத) வரலாற்றுக் காலத்துக்கு முன்னும், மிக்க நாகரிகம் பெற்று வாழ்ந்தனர்! இற்றைக்கு இரண்டாயிரம்

ஆண்டுகளின் முன்னே நமது செந்தமிழ் மொழி எவ்வளவு திருத்தம் பெற்று உலாவியது! அந் நாட்களிலிருந்த கற்றோர் நுண்ணறிவு, எவ்வளவு தெளிவாக அவரியற்றிய பாக்களிலே துளும்பி ஒளி வீசுகின்றது! அப்போதிருந்த நன்மக்களெல்லாரும் எவ்வளவு இன்புற்று வாழ்ந்தனர்கள்! என்று நினைக்க நினைக்க எம் உள்ளம் வரைகடந்த இன்பத்தாற் பொங்குகின்றது!"

—பண்டைக் காலத்தமிழரும் ஆரியரும், பக். 46.

அக் காலத்தில் எழுதப்பட்ட தெய்வத் திருக்குறளுக்கு இணையான நூல் இவ்வுலகத்தில் உண்டோ? அஃது உயர்வு ஒப்பில்லா உவரா அமிழ்தமன்றோ!

உள்ளன உள்ளபடி கூறிய முழுக் காப்பியங்களான சிலப்பதிகாரம் மணிமேகலை என்பவற்றின் முன் தலையெடுத்து நிற்கும் வேறு காப்பியங்கள் இவ்வுலகில் எந்த மொழியிலேனும் உளவா? இல்லையே!

மக்கள் மெய்யுணர்வின் இயற்கையினைப் பகுத்து விளக்கிய இறையனு ரகப்பொருளுரை போன்ற நூல் இவ் விரிகடலுலகினும் இல்லையே!

கலித்தொகையிலுள்ள இயற்கைப் பொருள் நுட்பமும் பல திறப்பட்ட மக்கள் வழக்க ஒழுக்க ஆராய்ச்சியும் வேறு எம் மொழியிலாயினும் உள்ளனவா!

மனு முதலிய அறநூல்க ளெல்லாம் நாலடியாரை ஒக்குமோ!

ஆ! அக் காலத்துத் தோன்றிய திருச்சிற்றம்பலக் கோவையார் என்னும் அவ் வொரு நூலை நோக்கினும் தமிழ்மொழியின் அமைதியும் சிறப்பும் இனிது புலப்படுமே!

நண்பர்காள்! இங்ஙனம் சீர்திருத்தமுற்று நிலாவிய இச் செந்தமிழை வழங்கிய மக்கள் எத்துணை நாகரிகமுடையராய் இருந்தனராவர்!

நாற்குல வகுப்பு, நாலெல்லை வகுப்பு, நான்மறை வகுப்பு, முதலாயின வெல்லாம் செந்தமிழ் நிலத்தே பண்டைக் காலத்துத் தமிழ் மக்களாற் செய்யப்பட்டுப் பின் போந்து கலப்புற்ற ஆரியராற்றழுவி வேறு வேறாக அவர் மொழியினும் செய்து கொள்ளப் பட்டனவென்றறிக.

"அறிவிற் சிறந்த தமிழ் மக்காள்! பழிப்புரைக்குச் சிறிதும் அஞ்சன்மின்! எவர் யாது கூறினும் உண்மை கரக்கப்படாது"

"நமக்கும் மற்றும் அறிவுடையார் எல்லார்க்கும் சிறந்த பிரமாண நூல்களாயுள்ள தொல்காப்பியம், திருக்குறள் முதலி யனவே நமக்குச் சாலும் என்று மனந்திருந்துமின்கள்!"

"பிறர் கூறும் பகட்டுரைக் கஞ்சி உண்மையைக் கைவிட்டு விடாதீர்கள்"

—பண்டைக் காலத் தமிழரும் ஆரியரும், பக். 17, 18, 44, 45.

இங்ஙனம் சேவையில் உண்மை கடைப்பிடித்தல் தெய்வ வழிபாட்டின் அடிப்படை நலம்; அகத்திலும் புறத்திலும் அவ் வுண்மை அமையாமல் எவ்வளவுதான் பூவும் நீருங்கொண்டு தனிமையிலும் திருக்கோயிற பொதுமையிலும் பகட்டாக வழி பாடுகள் நிகழ்த்தினும் இறைவன் அப் பொய்ம்மைக்கு அருள் செய்துவிடமாட்டான்; நகைப்பான், நாணுவான்!

"பொக்கம் மிக்கவர் பூவும் நீருங் கண்டு
நக்கு நிற்பன் அவர்தமை நாணியே"

என்றார் திருநாவுக்கரசர்!

"கரவாடும் வன்னெஞ்சர்க்கு அரியான்"

அப் பெருமான்! காரணம், கடவுள் எப்போதும் உண்மையோடும் உண்மை அடியார்களோடும் விரவாடும் பெருமான்! 'அறம்' என்னும் உண்மையிலேயே உறைபவன்!

3. நெஞ்சறிந்தது

உண்மைகள் அவரவர் நிலைக்கேற்ப உணரப்படும்; ஒருவர், தம் நெஞ்சறிந்ததனை நினைவு சொற் செயல்களிற் கடைப்பிடிக் கலாம்; ஒருகால், அது, மெய்ம்மைக்கு வேறாகவும் இருக்கக் கூடும்; ஆயினும், அறிந்த வரையில், அஃது, உண்மையொடு படுதலின், ஆண்டவன் அவர் நிலையறிந்து அருள் செய்யவே முந்துவன்! கண்ணப்ப நாயனர், செருப்படியும் எச்சில் நீரும் சூடிய பூவும் இறைச்சிப் படையலுங் கொண்டு திருக்காளத்தி நாதரை வழிபாடு செய்தது, முறையான வழிபாடு ஆகாததுதான்; இறைவன்

ஏற்கத் தக்கது மன்று; ஆயினும் அது கண்ணப்பரின் நெஞ்சறிந்தது! நெஞ்சின் உண்மை கருதத் தக்கது! இறைவன் அவ் வுண்மைக்கும் மகிழ்ந்து அவர்க்கு அருள் செய்தான்!

மறைமலையடிகள் தம் நெஞ்சறிந்த உண்மைகளை மறைப்பதில்லை; அஞ்சாமல், கூசாமல், வெளிப்படையாய் வெளியிட்டு வந்தார். அவை அடிப்படை உண்மைக்கும் ஒத்துவரக் கூடியனவே! கண்ணப்பர் வழிபாடுபோல் ஆகாதன அல்ல. திருவள்ளுவர் கருத்துப்படி, யாண்டும் மெய்ப்பொருள் காண்பவராக அடிகள் விளங்கினர்; அதனால், ஆண்டவன் திருவருளுக்கும் அவர் இலக்கானார்!

4. அன்பாதல்

சேவையால் உயிரறிவில் அருள் ததும்புதலின், அறிவு அன்பாக மாறுகின்றது; பிரைமோரால் பால் தயிராவதுபோல, அருள் வீழ்ச்சியால் உயிரறிவு அன்பாய் மாறுகிறது! அதிலிருந்து உயிர்கள் தந்நலம் நீங்க முற்படுகின்றன. உயிர்கள் சேவைக்காக அன்றித், தமது வாழ்வுக்காகப் புறம் வருதல் குறைகின்றது; பற்றற்றுப் பொதுநலங் காண்பதே, அருளுடைமையில் தலைப்படுதலே, உயிர்களின் நோக்கமாயிருக்கின்றன.

5. அருளாதல்

அன்புடைமையும் அருளுடைமையுமே இப்போது உயிரின் நிலை; மண் முதல் நாதம் வரையில் அமைந்த அறிவில்லாத மாயைக் கருவிகள் இனிச் சேவைகளாகிய தொண்டுகளுக்கே பயன்படும்;

6. அறமாதல்

தொண்டுகள் 'அறம்' எனப்படும்; அறஞ் செய்ய விரும்புதல் இவ்வுயர்ந்த நோக்கத்திலேதான் உண்மையாய்க் கைகூடும். அன்பும் அருளும் அறனுமாகிய இம்மூன்றும் உயிர்க்குநேர்ந்தால், கருவிகளை அவை கடந்தன ஆகின்றன; அஃதாவது, அறிந்து அவற்றைச் சேவையில் ஆளும் திறம் பெறுகின்றன; சேவையால் மேன்மேலும் பற்றறுகின்றன. பற்றற்றுத் திருவருளையே பற்றி நிற்கின்றன.

"யாம் இரப்பவை
பொன்னும் பொருளும் போகமுமல்ல நின்பால்
அன்பும் அருளும் அறனும் மூன்றும்"

என்னும் 'பரிபாடல்' வரிகள் இங்கு நினைவுகூரத் தக்கன!

அடிகளார் எந் நிலையிலும் இம் மூன்றும் மேற்கொண்ட செம்மலார்! அன்பே சிவமாவது இந் நிலையிலாதலின், அடிகள் எந் நாளும் சிவநெறியில் அழுத்த முடையவராய், அகம்புறம் இரண்டும் சிவத்துக்கே ஒப்படைத்து ஒழுகி வந்தார்! இவ்வுண்மை இயைபுகளை அறியாதார், அடிகளார் சமய நெறியில் அழுத்தமாயிருப்பதுபற்றி, 'விஞ்ஞானக் கல்வி வாய்ந்த இவர் இவ்வாறும் இருக்கின்றனரே' என்று வியப்பதும் உண்டு.

7. அன்பு சிவமாதல்

அறிவு அன்பாய் மாறி அருளுடைமையில் உயிரிரக்கத்திலும், அதன்பின் 'திருவருள்' என்னுந் தன் ஆற்றலிலும் கூடி உயர்வதே இறை தொடர்பிலேதான்; ஆதலால், இறை தொடர்பு இப் பக்குவத்திறத்துக்கு இன்றியமையாத தென்பது புலப்படும். இறை தொடர்பில் 'அருள்' என்னுங் குழவி தோன்றுகிறது; அன்பு தாயாகிறது; இறைஇயல் தந்தையாகிறது;

உயிரன்பு இங்ஙனம் 'சிவசத்தி' யொடு கூடி 'அருளுடைமை' என்னுங் குழவியைச் சேவை செய்வதற்கென்றே பெறுதலால் அன்பு சிவமாகிறது; "அருளென்னும் அன்பீன் குழவி" என்று ஈனுதலைத் திருவள்ளுவரும் நினைவுகூர்ந்தார். தொடர்பு எதுவும் இன்றிக் குழந்தை தோன்றாதே!

இறை தொடர்பு இவ்வாற்றால் உயிரன்புக்கு இன்றியமையாத தாயிற்று! அன்பர்கள் இதனை எண்ணிப் பார்ப்பது நல்லது.

முதலில் அருளுடைமையாய் (சிவகாருண்ணியமாய்த்) தோன்றிய குழந்தை (திரோதான சத்தி) சேவைபால் உயிரன்பு முற்றிலும் பற்றுவிட்டுக் காதலாகிக் கசிந்து, தாவுமாறு பாவையாய் (சிவ சத்தி) வளர்ந்து, உயிரைச் சிவப்பேரின்பத்திற் சேர்ப்பிக்கிறது! 'சிவத்தின் சத்தி', காதற் பாவையாயிற்று. இந் நிலையை விளக்க எழுந்தது திருச்சிற்றம்பலக் கோவையார். "அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே" என்றார் திருமூலரும்!

இவ்வாற்றால், 'உயிரினியல்பு, தன் அறிவு நிலையிலிருந்து முப்பத்தாறு கருவிகளின் மூலம் புறம் வரும் போக்கு ஒன்று' எனவும், 'அவ்வுயிரறிவு அன்பாய் மாறி அக்ந்திரும்பி உயிர்க்குயிராகிய சிவத்தின் நிலையை எய்துதல் ஒன்று' எனவும் அந் நிலையில் அன்பு புறம் வருமாயின், கருவிகளைச் சேவையிற் கொள்ளும் எனவும், அறிகின்றோம்! இச் சிவநிலையை முற்றும் எய்துமுன் மெய்ஞ்ஞானப் பக்குவ உயிர்கள் தமக்குற்ற முப்பத்தாறு கருவிகளையும் அடக்காமல் அடக்கும் மெய்த்திறம் பெற்றுப் பயன் காணும் முறையில், சேவை செய்யும் திருத்தொண்டராய் உலகில் விளங்குவர்! பிறர்க்கென முயலும் நோன் தாளினராய்த் தமக்கென முயலா உண்மையாளராய் உயர்ந்த நோக்கத்தில் ஈடுபட்டிருப்பர்!

ஆசிரியரடிகள் இவ்வுயர் நோக்கம் உடையவர்! இவரோடு ஒத்துச் செல்லப் பிறர்க்கு இயல்வதில்லை; அடிகள் தனி நின்று மெய்த் தொண்டாற்றும் வாழ்க்கை உடையவரானார்! உயர்ந்த நோக்கத்தை எல்லாருங் கடைப்பிடிப்பது அரிதுதான்! அதனால், உலகம் (அறிவு நிறைந்தோரும் குறைந்தோரும்) நுண்ணோக்குடைய அடிகளையே தாவி நின்றது! அவ்வாற்றால், பலரோடு கூட்டுண்ணும் பெருநிலை வாழ்க்கையும் அடிகட்கு அமைந்தது!

உ. சேவை நலம்

இதைச் 'சமய நலம்' எனவுங் கொள்ளலாம்; அம்மையப்பர் ஓருருவாதலின், சிவநலம் தனிப்படுவதன்று! அருள் நலமே அகநலமுமாகும்! சேவை நலம் இதனால் அரும்பி மலரும்;

மிக இளமையிலேயே பதினாறும் அகவையில் அடிகளார் 'இந்து மதாபிமான சங்கம்' என்னும் சமய சங்கம் நிறுவிச் சைவசமய விளக்கங்களைச் சேவை நலமாய்ச் செய்து வந்தார்; பாலப் பருவத்தில் கிறித்தவப் பள்ளியிற் படிக்க நேர்ந்ததனால், உடன் மாணவர் முதலிய பலரும் 'இந்துமதத்தில் அபிமானம்' கொள்ளும்படி அடிகளார் முயன்று வந்தார்கள்; பிறர்க்கென முயலும் நோன்தாள் இத்துணைச் சிறுபோதிலேயே உயர் நோக்கமாய் அடிகளுக்கு அமைந்துவிட்டது! 'இந்து மதாபிமானம்' என்னும் பெயரால் இந்திய நோக்கமும் அப்போதே அரும்பினமை தெரிகின்றது!

அதன்பின், சைவ சித்தாந்தச் சங்கங்களிலும், அவற்றைச் சேர்ந்த அன்பர் குழாத்திலும், அங்கங்கும் வந்து சொற்பெருக் காற்றிய பெரியோரிடத்திலும் இணங்கிச் சுறுசுறுப்பாக நிகழ்ச்சி களில் ஈடுபட்டார்; சைவ சமயச் சொற்பொழிவுகளும் எழுத்துக் களும் பெருகின; சைவ நாடாகிய இந்தியா எங்கணும் இலங்கை யிலும் உலவ நேர்ந்தது; மேலை கீழ் நாடுகளிலெல்லாம் சமய உணர்வு பரவ முற்பட்டது! அடிகளார் ஆற்றிய அருஞ் செயல்கள் அளவில்லாதவை!

சிவ சமயத்தைப் பற்றி அடிகளார் வழங்கியருளிய புது விளக் கங்கள், நாட்டவரைப் பேரறியாமையிலிருந்து எவ்வளவோ நீக்கி யிருக்கின்றன.

1. புரட்சி

'பிறப் பிறப்பில்லாத ஒருவரே முழுமுதற்கடவுள்; இரண்டாவ தாக எவர் எவ்வளவு உயர்ந்த காரிய நிலையினரேயாயினும் அவ ரெல்லாம் தெய்வமல்லா உயிரினங்களே! உருத்திரர் முதலிய 'பதமுத்தி'யினரும் உயிரினங்களைச் சேர்ந்தவர்களே; அவர்களெல் லாரும் உயிரினங்களில் மிகவும் உயர்ந்தவர்களாய், மிகு நுட்ப நிலை களில் ஓங்கியவர்கள்! எல்லாம் வல்ல முழுமுதல் அம்மையின் அருள் வடிவினர்; தெய்வத்தின் சாயலாய்த் திகழ்பவர்கள்!

முழுமுதற் கடவுள் என்பவர், அம்மையப்பராய், இரு கூற்ற ஒரு வடிவின் முதல்வராய்த் திகழ்பவர்; கடவுளுக்கு அருளுருவம் உண்டு; அது செந்நிறமும் நீலநிறமும் இயைந்தது; இவ்வுரு நிலையைத் தேனித்து அருவமுங் கடந்த செம்மை நிலையை ஒருவர் அடை யலாம்.

மண் முதல் நாதம் வரையில் முப்பத்தாறு கருவிகளும் மக்கள் உடம்பில் உண்டு; வெளி உலகத்திலும் உண்டு; எல்லாம் அறிவில்லாத மாயைக் கருவிகள்; அத்தனைப் பிரிவுகளும் உயிர் களின் உணர்வு வளர்ச்சிக்கு, உணர்வு தெளிவடைவதற்குத் தேவையாயுள்ளன. இத் தேவை குருட்டுத்தனமாய்ச் சொல்லப் படுவதன்று; எல்லாம் காரண காரியங்கள் உடையவை!

சிவ சமயம் இயற்கைச் சமயம்; இன்னாரால் இன்ன காலத்தில் தோற்றுவிக்கப்பட்டதென்பது இல்லாததாய் முழுமுதற் சமய

மாய் விளங்குகிறது; பழந்தமிழ்க் கொள்கையே சைவ சமயம்; கடவுளுக்கு மாறான கொள்கைகள் சைவமாகா.

'முக்கண்ணன்' 'புண்ணியன்' 'சடையன்' முதலிய சிறப்புப் பெயர்கள் சைவசமய முதல்வனுக்கு உண்டு. பழந்தமிழ் நாட்டுச் சேவைக் கொடியாகிய நந்திக் கொடியே பழையோனாகிய கடவுளுக் குரியது!

சேவை தெரிந்து பழவினைகளைத் தீர்ப்பவன் முதல்வன் ஒருவனே; பிறப் பிறப்பில்லாத அப் பெருமான் ஒருவனே உயிர் களின் பிறப்பை நீக்க வல்லவன்! அவனொருவனே மாதேவன்; எல்லாராலும் வணங்கத் தக்கவன்! வணங்கப் படுபவன்!

2. நால்வர்

இக் கொள்கைகளெல்லாம் ஒருங்குடையவர்களே நால்வர்கள்! அவர்களே நமக்குக் குருமார்; எல்லாம் வல்ல இறைவனைப்பற்றி வேறு பிறரை எதற்காகவும் எந் நிலையிலும் வேண்டுதலில்லாத கொள்கையில் நிலைபெற்ற உறுதியுடையவர்கள்! அம்மையையும் மூத்த பிள்ளையாரையும் இளைய முருகனையுங் கூடத் தனியாகப் பாடாதவர்கள்; முதல்வனை, அம்மையப்பர் திருவுருவினை, நேரிற் கண்டவர்கள்! அப் பெருமானால் ஆட்கொள்ளப்பட்டவர்கள்; பிறந்த பிறப்பில் பிறவியை அறுத்தவர்கள்; உயிரினங்களின் சேவைக்காக இவ்வுலகில் தோன்றின மேலோர்; முதல்வன் சமயத்தை விளங்க வைத்தவர்கள்!

தமிழில் முன்பு இக் கொள்கைகளை விளக்கும் நான்மறைகள் இருந்தன. அவற்றின் வழியில் திருக்குறள் என்னுந் தமிழ் மறை போன்றவை இப்போது நமக்கு உதவுகின்றன. இவையே மக்களுக்குப் போதும்; பிறமொழி வேதங்கள் தமிழர்க்கு முக்கிய மல்ல.

கொலைபுலை நீக்கித் திருநீறு சிவமணி அணிந்த செவ்வியர் சிவ நெறியினர்! 'சிவமணி' சிவபெருமானுடைய அருள் விளங்கிய நெற்றிக் கண்ணைக் குறிக்கும்; நெற்றிக் கண்ணால் காமத்தை எரிக் கலாம்; எல்லாம் எரிந்தபின் முடிவாகத் தேறுவது திருநீறு! 'அறம்' என்னும் விடையில் ஏறிப் பொருளின்பங்கள் ஊர்ந்து,

அந்த அறத்தையே கொடியாகக் கொண்டு உயர்த்திச் செம்மை நிலையில் நிற்பது சிவநெறிச் சைவர் கடமை! இந்த அருள் வாழ்க்கையின் அடையாளமே சிவமணி, திருநீறு!

நன்று உடையவன் கடவுள்; தீயது இல்லாதவன் அப்பெருமான்! அம் முழு முதல்வனையே, முதலாய முதல்வனையே அனைவரும் வணங்குதற்குரியர்! 'அந்நிலையில் எந்நாளும் இன்பமே, துன்பமில்லை!'

என்றிங்ஙனமெல்லாம் 'அருள்நிலை' 'சேவைநிலை'கள் கொண்டு அம்மையப்பர் வணக்கத்தை அடிகளார் விளக்கினர்; இவற்றிற்கான ஆராய்ச்சிகள்—முடிபுகள் பலப்பல.

நாட்டுமக்கள் அனைவரும், உடம்பு நலமாய், உட்கருவிகள் நலமாய், உயிரறிவு அன்பும் அருளும் அறமுமாய்க் கனிந்து, செம்மை நிலையை அடைய வேண்டுமென்னும் உயர்ந்த நோக்கத்தில், அடிகளார் தம் வாழ்நாள்காறும் எடுத்துக் கொண்ட நன்முயற்சிகட்கு, நாட்டுமக்கள் நலத்தையே முதலில் மேற்கொண்டு தமது வாழ்வை இரண்டாவதாக வைத்துச் செய்துவந்த நற்றொண்டுகட்கு ஓர் அளவே இல்லை!

சா. இனிமைச் சுவை

இதன் பொருள்நலத்தை முதலில் திட்டப்படுத்திக் கொள்ளலாம். இனிமையே சுவை எனப்படும்; ஆதலின் இனிமைச் சுவை எனத் தலைப்பமைந்தது; சுவை வேறு இனிமை வேறல்ல;

'தமிழ்' என்னும் சொல்லே 'இனிமை' என்னுங் கருத்தைத் தரும் என்று முன்னோர் விளக்கினர்; "தமிழ் தழீஇய சாயலவர்" என்னும் சிந்தாமணி வரிக்கு (2026) உரையாசிரியர் நச்சினார்க்கினியர் 'இனிமை தழுவிய சாயலையுடையவர்' என்று பொருளுரைப்பர்; அடிகள் தமிழ் நலத்தில் திளைத்தவர்; ஆதலின் இனிமைச் சுவை அவர்க்கு மிகச் சிறப்பாக வாய்த்துவிட்டது.

மொழியே இனிமையாதலோடு அதனில் இலக்கியமும் அமைவதானால், இனிமைச் சுவை இன்னும் மிகும்; அது, பாலில் சர்க்கரை கலப்பது போன்றது; இலக்கியத்தில் மெய்க்கல்வியும் பொருந்துமானால் சர்க்கரைப் பாலுடன் தேனுங் கலந்ததுபோல் மிகவும் இனிக்கும்.

> "சிறையாரும் மடக்கிளியே இங்கேவா பாலொடு தேன்
> முறையாலே உணத் தருவன்''

என்றார் திருஞான சம்பந்தர்;

அருட் கல்வியாகிய மெய்க் கல்வியே 'தேன்' எனப்படும். கடவுட் பேரின்பம் தேன்; இவ்வாற்றால் அவ்வானந்தத் தேனில் மிகத் திளைத்த மாணிக்கவாசகரது திருவாசகமும் 'தேன்' என்று வழங்கப்பட்டது;

> "உலப்பிலா ஆனந்தத் தேன் சொரிந்து''
>
> "ஆனந்தத் தேன் இருந்த பொந்தைப் பரவி"
>
> "திருவாசகம் என்னுந் தேன்''

என்னும் மணிவாசகர் வாக்குகளே, முறையே இப் பொருளுணர்த்தும்; "தேன் ஆரும் இன்பச் சிவ வடிவம்'' என்றது, துகளறு

போதம். தமிழ்மொழி, பால்; தமிழிலக்கியம், சர்க்கரை; தமிழின் மெய்க்கல்வி, தேன்; தமிழின் பேரினிமைக்குக் குறைவே இல்லை; மாணிக்கவாசகப் பெருமானே இம் மூன்றையும் ஒருங்கு சேர்த்துத், "தேனைப் பாலைக் கன்னலின் தெளிவை" எனவும், "தேனையும் பாலையும் கன்னலையும் ஒத்தினிய கோன்" எனவும், (திருவாசகம், திருச்சதகம், 58; திருவம்மானை, 14) அருளிச் செய்வார்.

தமிழ்மொழி, பாற் சுவையுடைய்தென்பது, அதன் இலக்கண அழகு; சர்க்கரையும் இடப்பட்ட தென்பது, அதன் இலக்கிய இனிமை; தேனும் முறையாகக் கலந்ததென்பது மெய்யுணர்வின் நடுவுநிலைச் சுவை.

நடுவுநிலை என்பது, சிற்றம்பலம்; திருவாசகம் திருச்சிற்றம் பலக் கோவையார், சிற்றம்பலச் சுவையுடையன; தமிழில் தொல் காப்பியம் இலக்கணப் பெருமைக்கும், சங்க நூல்கள் இலக்கியச் சிறப்புக்கும், திருமுறைகள் மெய்யுணர்வு மேன்மைக்கும் உரியன; இம் மூன்றும் ஒருங்கமைந்த பேரினிமை மொழித்திறமே, 'தமிழ் மறை' எனவும் 'பொதுமறை' எனவும் வழங்கும் வேத நூலாகிய திருக்குறளாய்த் திகழ்கிறது. இதன் ஒவ்வொரு குறளும் ஒவ் வொரு நிறைமொழி யாகும்.

அ. இலக்கண இனிமை

மண்ணிடைச் சில இலக்கண வரம்பிலா மொழிபோல், தமிழ் மொழி, வெறும் எண்ணிடைப்படக் கிடந்ததா எண்ணவும் படுமோ? தமிழ்மொழிக்கு இலக்கண வரம்பு உயர்வாக அமைந் திருப்பதுபற்றித் தமிழ்மக்களே அன்றி உலக மக்கள் அவ்வளவு பேரும் பெருமைப்படலாம்.

'இலக்கணம்' (லக்ஷணம்) என்பதே, திருத்தமான அமைவுக் கும் அழகுக்கும் உரியது. நல்லறிஞராயிருந்தால் அவர்க்கு இவ்வழகு சுவைக்காமற் போகுமா? தொல்காப்பியம் தமிழின் திருத்தமான அமைப்புகளை அழகுகளை நன்றாக விளக்கித் தமிழ்மொழிக்கு இனி மையை ஊட்டுகிறது. தொல்காப்பியம் முழுமுதல் நூல்; இலக் கணம் முழுமையும் நிறைவாக உணர்த்துவது; அடிகள் இதனை நன்கு ஆராய்ந்து சொக்கிப் போய், அதன் இனிமைகளை எத்

தனையோ வகையாக விரித்து, ஆங்காங்கும் சுவை தோன்ற விளக்கியிருக்கின்றனர்; ஒன்று காணலாம்.

1. ஆய்தத்தின் மாட்சி

தமிழ் நெடுங்கணக்கிலுள்ள ஆய்த எழுத்துக்குத் 'தனி நிலை' என்றும் பெயருண்டு; உயிரெழுத்துக்களையும் சாராமல் மெய்யெழுத்துக்களையும் சாராமல் தனித்து நிற்றல் முதலிய நிலைகளால் 'தனிநிலை' என்று அது பெயர் பெற்றுவிட்டது; ஏன் இவ்வாறு ஆய்தம் தனிப்பட வேண்டும் என்றும், தொல்காப்பியர் இதன் நிலைமைக்கு என்ன காரணம் கூறுகிறார், எப்படி வழிவிடுகிறார் என்றும், ஆசிரியரடிகளுக்குச் சிந்தனை பிறந்தது.

தொல்காப்பியர் ஏனை எல்லா எழுத்துக்களுக்கும் 'தலை' 'மிடறு' 'நெஞ்சு' எனப் பிறக்குமிடமும், 'பல்' 'இதழ்' 'நாக்கு' 'மூக்கு' 'அண்ணம்' என உறுப்பின் தொழில்களும் கூறுகிறார்; ஆய்தத்துக்கு மட்டும் இவற்றில் எதுவுங் கூறவில்லை; அடிகள் சிந்தனை, நேர் ஆய்வாகிய பழக்கத்திற் சென்று சோதித்துக் கொண்டது, பிறப்பிடம் தோன்றவில்லை, உறுப்புகளின் துணையும் பெறவில்லை; பிறப்பிடமேனும் உறுப்பின் தொழில்களேனும் பெருமையால், 'ஆய்த' எழுத்து, 'தனிநிலை' என்னும் பெயரைப் பெற்றது எனவும், அதனாலேதான் ஏனை உயிரெழுத்து மெய்யெழுத்துக்களோடு அது சாராமல் தனிநிலையாய் நிற்பதாயிற்று எனவும் காரணம் தெரிந்தது.

அடிகளார் சிந்தனையும், தொல்காப்பியச் சுவையும், தமிழ் மொழியின் தோய்வும் இவ்வளவோடு நிற்கவில்லை; ஆய்தம் மூன்று புள்ளிகளைத் தனக்கு வடிவமாகக் கொண்டது ஏன் என்றும் அவர் கருதினார்.

தொல்காப்பியம் மக்கள் வாழ்க்கைக்கே இலக்கணம் கூறும் நூல். 'பொருளதிகாரம்' என்று ஓர் அதிகாரமும் தனக்கே உரித்தாக வகுத்துக்கொண்ட நூல். எழுத்து சொல்லாகி அவ்வளவோடு நின்று விடுவதானால், மொழி என்பது வாழ்க்கைக்குப் பயன்படாது; வாழ்க்கைக்குப் பயன்படாத மொழி எதற்கு வேண்டும்? சொல் வடிவுகளோடு கூடிய மொழிக்குப் பொருள் என்ன? வாழ்க்கை தானே பொருள். அதனால் பொருளதிகாரம் என்பது கருத்தநி

காரம் எனக் கொள்ளப்பட்டு, இயற்கை வாழ்க்கையை இயல் தமிழ்க்கு அது விரித்து விளக்குகிறது.

வாழ்க்கையின் அழகுகளைச் சொல்லி அதனை ஒழுங்குபடுத்தி வேதபாட்டின் பயனாதலின், வாழ்க்கைச் சிறப்பு, செய்யுளியலையும், அது கவர்ச்சியாகச் செய்யப்படுவதற்குரிய உவமை அணியியலையும், அடுத்தடுத்துத் திரிபு கொள்ளாதபடி நிலைப்படுத்தும் மரபியலையும் உட்கொண்டு, எல்லாம் பொருளதிகாரப் பகுதிகளாய் எழுந்தன.

எழுத்துக்களும் சொற்களுங்கூட, உலகத்தில் வாழ்க்கை நடத்தும் மக்களின இயக்கம் போலவே 'உயிரும்' 'உடம்பும்' 'உடம்போடு கூடிய உயிரும்' இயங்கும் முறையிலேயே இயக்கங்கள் கொள்வன எனவும், மொழி என்பது இதனால் மக்கள் வாழ்க்கையின் பிழிவே எனவும், மொழியின் இலக்கணங்கள், வாழ்க்கையின் இலக்கணமாய், வாழ்க்கையோடு இனப்பட்ட மெய்யுணர்வியலின் (தத்துவ இயலின்) இலக்கணமாய் அமைந்து விளங்குவனவே எனவும் முடிபுகள் தோன்றின.

இவை, ஆய்த எழுத்தின் வடிவுக்கும் பெயர்க் காரணத்துக்கும் வழி திறந்துவிட்டன. தமிழ் மொழியியல் மெய்யுணர்வியலின் அடிப்படையில் மேலெழுந்து, உலக நடைக்கு உதவும் அழகு புலப்பட்டுவிட்டது; உள்ளத்துணர்வில் மெய்யுணர்வியல் எழுந்து, வாக்கின் வழியே தமிழ்மொழியாய் வெளிப்பட்டுச் செயல் வகையாய் உலகநடை நிகழும் இயற்கையே, இந் நினைவு சொல் செயல்களின் இயல்புகளே, எழுத்தும் சொல்லும் பொருளுமாகிய தொல்காப்பிய உணர்வு என்பதுந் தெளிவாயிற்று. மொழிக்கும் அடிப்படை மெய்யுணர்வியலுக்கும், மிகப் பொருத்தமான தொடர்பிருப்பது விளங்கிபது.

'ஆய்தம்' என்னுஞ் சொல் 'நுட்பம் உடையது' என்னும் பொருள் வாய்ந்தது.

> "ஒய்தல் ஆய்தல் நிழத்தல் சாஅய்
> ஆவயின் நான்கும் உள்ளதன் நுணுக்கம்"
>
> (தொல், உரிச்சொல், 32)

என்று தொல்காப்பியரே இந் நுட்பப் பொருளைப் புலப்படுத்துகிறார். ஆய்தம் என்பதன் இப் பெயர்க் காரணத்தால் ஆய்த எழுத்து

'மூலம்' என்பதும், ஏனை எழுத்துக்கள் 'காரியம்' என்பதும் புலப்பட்டன. மெய்யுணர்வியலின் உண்மைகளோடு ஆய்த எழுத்தின் நுட்ப மூலம், தொடர்புடைத்தாதல் வேண்டும் என்பதும் தெரிந்தது; அடிகள் வாக்குகளைக் காணலாம் :

"ஆய்த எழுத்து, உயிரெழுத்தும் அல்லாதாய் மெய்யெழுத்தும் அல்லாதாய்த் தனித்து நிற்றலின் 'தனிநிலை' என்னும் பெயர் வாய்ந்தது.

"ஆய்தம், எழுத்தொலியாய்ச் சொல்லின்கண் நின்று பொருளை அறிவுறுத்தலின் இது விந்துவின்கண் நின்றும் பிறப்பதே.

"விந்து மாயையின், இயற்கைக் காரண ஒலி ஆய்தம்.

"ஒரே தன்மைத்தாகிய 'ஆய்தம்' என்னும் விந்துவொலி, ...பல திறப்பட்ட ஒலி எழுத்துக்களாய்க் காரியப் படுத்தப்படலாயிற்று...... திரிபு படுத்தப்படும் காரிய ஒலிகளே வெவ்வேறெழுத்துக்களாம். இக் காரிய ஒலிகளுக்கு முதலில் நிற்கும் ஆய்தம்......காரண ஒலி.

"தலை, மிடறு, நெஞ்சு என்னும் இடங்களைப் பற்றுக் கோடாகக் கொள்ளுதலும், பல் இதழ், நா, மூக்கு, அண்ணம் என்னும் உறுப்புக்களால் திரிபுபடுத்தப் படுதலும் இல்லாதது.

"இவ்வாறு இம் மூன்றிடங்கட்கும் ஐந்துறுப்புகட்கும் வேறாய்த் தனித்து நிற்றலினாலன்றே, ஆய்தம், 'தனிநிலை' எனவும் வழங்கப்பட்டது.

"இது பற்றியே ஆசிரியர் தொல்காப்பியனார், ஆய்தத்திற்குப் பிறப்பிடமேனும் உறுப்பின் றொழிலேனும் கூறிற்றிலர்.

"இக் கருத்துணராத பவணந்தியாரோ, தாமியற்றிய நன்னூலில், 'ஆய்தத்துக்கு இடம் தலை, அங்கா முயற்சி' எனப் பிழைபடக் கூறினர்.

"ஆய்தமாகிய காரண வொலியோ, ஓரிடத்தைப் பற்றி நில்லாமலும், உறுப்புக்களாற் றடை செய்யப்படாமலும் இயங்குதலைச் சொல்லிக் காண்க.

"தன் இயல்பினில் இயங்குவதே ஆய்தம் என்னும் முதற் காரண ஒலியின் இயற்கை.

"இது விந்துவென்னுங் காரணத்தின் ஒலி வடிவாதல் பற்றியே, இதற்குப் புள்ளி வடிவு சொல்லப்பட்டிருக்கிறது; விந்து என்பது புள்ளி வடிவினது.

"மூன்று புள்ளியிட்டு எழுதப்படுதல் என்னையெனின், விந்து மாயையின் ஒலி தன் நிலையில் நிற்பதாயின், ஒற்றைப் புள்ளியே பெறும்; அவ்வாறன்றி, அது 'சுத்த மாயை'யை ஊடுருவி இயங்குதலால் தான் தனித்து இயங்கு நிலையில் ஒரு புள்ளியினையும், 'அசுத்த மாயை'யை ஊடுருவி இயங்கு நிலையில் மற்றொரு புள்ளியினையும், 'பிரகிருதி மாயை'யை ஊடுருவி இயங்கு நிலையிற் பின்னும் ஒரு புள்ளியினையும் ஆக மூன்று புள்ளிகளைப் பெறுவதாயிற்று.

"விந்து, காரண ஒலியாகிய ஆய்தமும், அதன் காரியங்களாகிய அகரம் முதல் னகர இறுவாயான முப்பதெழுத்துக்களும், தோன்றுவதற்கு நிலைக்களனும்.

"காரண வொலியின் (ஆய்த வொலியின்) முதல் காரிய வொலியே அகர உயிர்; அங்காந்து கூறுங் காரியப்பாட்டாற் பிறக்கும் அகரவொலியை முதற்காரணம் என்றல் அமையா(து).

"அகர வொலிக்கும் முற்பட்ட காரணமாய், உந்தியினின் றெழும் ஆய்த வொலியே எல்லா எழுத்தொலிகட்கும் முதலாம்.

"(திருவள்ளுவர்) அகர வொலி என்றேனும் அகரவெழுத்தென்றேனுங் கூறாமல், அவையிரண்டற்கும் பொதுப்பட 'அகரம்' என்று கூறினமையால், (புலப்பட்ட) அகரவொலியும் பிற எழுத்தொலிகளுந் தோன்றுவதற்கு இடமாய், அங்காந்து வாயின்கண் நிற்கும் இடைவெளியே அகரமாமென, (நுண்ணிய அகரத்தைக்) கருதினார்.

"மிக நுண்ணிய இடைவெளி வடிவாய் நிற்கும் (நுண்ணிய) அகரமும், அவ் வெளியின்கட் டோன்றி இயங்கும்

விந்து காரண ஒலியின் முதற் காரியமாய் ஒலிக்கும் (புலப்பட்ட ஒலி) அகரமும், அவ்வொலியின் அடையாளமாய் வரிவடிவில் எழுதப்படும் (வரி) அகரமும் என அகரம் மூவகைத்து.

'எஃகு' 'கஃசு' என்னும் சொற்களிற் போல,...தன் காரிய வொலிகளில் சார்ந்து நின்றன்றி அது பொருள் தராமையினு லும், தன் காரியமான ஓர் எழுத்தொலியையே தான் சார்ந்து நின்று அதனைப் பலவேறு ஒலிகளாய்ப் பலவேறு மொழிகளில் வழங்கச் செய்தலினாலும், அதனை ஆசிரியர் (தொல்காப்பியர்) 'சார்பெழுத்து' என்று கூறுவாராயினர்.

"தமிழின்கண் உள்ள ஒற்றெழுத்து உயிரெழுத்துக் களோடு இவ் வாய்த எழுத்தையும் குற்றியலிகரம் குற்றிய லுகரங்களையும் சார்த்தி, உலகத்தின்கட் பரவி வழங்கும் எந்த மொழியின் எந்த எழுத்தையும் செயற்கைப்படுத்துப் பிறப் பித்தல் எளிது.

"பற்றுக்கோடும் தடையுமின்றித் தானே இயங்குவதூ உம், பற்றுக்கோடும் தடையும் உற்றுத் தாமே இயங்குவனவும், பற்றுக்கோடும் தடையும் உற்றுத் தாமே இயங்காதனவும் என, ஒலி எழுத்துக்கள் தாம் மூவகைய; அவற்றுள், முதலது ஆய்த வொலி; இரண்டாமவை உயிரெழுத்துக்கள்; மூன்று மவை ஒற்றெழுத்துக்கள்".

(அறிவுரைக் கோவை, பக். 59-62, 71-72)

இவை, ஆய்த எழுத்துக்கு அடிகள் கண்ட ஆய்வுரைகள்; ஒவ் வோர் எழுத்தொலி பற்றியும் அடிகளார் இவ்வாறு ஆய்ந்திருக் கிறார். தொல்காப்பியத்தின் ஆழ்ந்த பயிற்சிகள் இவற்றிற்குக் காரணம்; மொழியின் இயற்கை அமைதியை அடிகளார் நன்கு கண்டு கொண்டனர்; அச் சுவைகளைப் பிற மொழிகளிற் காணக் கூடாமை யால், தமிழ்மொழியில் அடிகட்கு மேன்மேலும் அன்பும் அழுத்தமும் உண்டாயின. உலகத்தின் முக்கிய மொழிகளான ஆங்கிலத்திலும் சமக்கிருதத்திலும் அடிகள் புலமையுடையவராயிருந்தும், அவ் விரண்டின் சுவையிலும் ஊறியவர்களாயிருந்தும், தமிழ் மொழியின் பெருஞ்சுவை அவர்கள் திருந்திய உள்ளத்தைப் பெரிதுங் கவர்ந் திருக்கிறது.

தாய்மொழியாதலின் அது பற்றிய கடமையால் அடிகள் அவ்வாறு அன்பு கொண்டார் என்றால், தமிழ்மொழியின் விஞ்சிய இனிமைக்கு அடிகளார் காரணம் காட்டாமல் இல்லையே! தமிழ் மொழியின் திருந்திய அமைதியை அடிகளார் வியக்காமல் இருக்க முடியுமா? 'தமிழ் மொழியும் ஏனை மொழிகளைப் போல் கருத்தறி விக்கும் ஒரு கருவிதானே, அடிகளார் அதில் மட்டும் ஏன் இவ்வளவு பிடிப்பாய் இருக்கிறார்' என்றால், ஏன் இருக்க மாட்டார்? அவரைப் போல் தமிழ்மொழியின் இயற்கை அமைதியையும் அழகையும் மற்றவர் கண்டு இன்புறவும் அழுந்திச் சுவைக்கவும் அறிந்துகொள் ளாதவரா யிருக்கின்றனர்; அதற்கு என்ன செய்யலாம்?

2. தமிழ்மொழி படிமுறையில் எழுந்ததன்று

தமிழ் மொழிக்குள்ள மற்றொரு தனிச்சிறப்பையும் அனைவரும் கண்டு கொள்ளல் வேண்டும்; தமிழ்மொழி இயற்கை மொழி என் பதையும் பழைய முதல்மொழி என்பதையும் பலரும் அறிவர்; மேலும் அது, மெய்யுணர்வியலோடு ஒத்ததாய் அதன் வெளி யீடாய் இயற்கையின் அமைதி பெற்றிருக்கிறது. அதனாலேயே அது, திருந்திய அமைப்புடையதாகவும் வாழ்க்கையியற்கைக்கு ஏற்றதாகவும் திகழ்கிறது.

முப்பது ஆண்டுகளுக்கு முன் கழகப் பதிப்பாகத் தொல் காப்பியம் முழுதும் உரைக்குறிப்பு எழுதி ஒவ்வொரு நூற்பாவுக்கும் தலைப்புகளிட்டுப் பதிப்பிக்கவும் அதற்கு ஒரு பதிப்புரை எழுதவும் எனக்கு வாய்ப்பு நேர்ந்தது; பதிப்புரையில்,

"எழுத்தாயினும் சொல்லாயினும் பொருளாயினும் எல் லாம் உயிர்களின் வாழ்க்கை முறையைப் போலவே உயிர்த் திறம் விளங்க இயற்றப்பட்டிருக்கின்றன.

"உயிர்மெய் எழுத்தும் அதன் இயக்கமும் என்றால், உண்மையில் உடம்போடு கூடிய ஓர் உயிரைப் போலவும், அதன் இயக்கங்களைப் போலவுமே இலக்கணம் காட்டப்படு கிறது.

"பெயர்ச் சொல்லும் அதன் வேற்றுமையும் என்றால், நேரில் மக்களைப் போலவும் அவர்தம் வேறுபாடுகளைப் போலவுமே விளக்கங்கள் தோற்றுவிக்கப்படுகின்றன.

"பொருளதிகாரத்திற் காணப்படும் அகப்பொருள், புறப் பொருள் இலக்கணங்களேயன்றிச் செய்யுளிலக்கணந்தானும் மக்களின் வாழ்க்கை நிழலே என்னும்படி நுட்பம் விளங்கத் தெளிவுறுக்கப்பட் டிருக்கின்றன. வெண்பா யாப்பு எனில், மக்களுள் உயர்ந்தாரது ஒழுகலாற்றுப் போக்கில் ஓசையும் பொருளும் நடையும் உடையதாய்த் தொல்காப்பியத்தில் அது பெருங்காட்சி அளித்து மகிழ்விக்கின்றது" என்று ஒரு பகுதி வருவது, தமிழ்மொழியின் அமைப்பு, வாழ்க்கையியலோடு மிகவும் ஒத்தமைந்து, அனைவர்க்கும் வழி காட்டுவதாய்த் திகழ்வதை நினைவூட்டும்.

மெய்யுணர்வியலோடு பொருந்தி அதன் அடிப்படையாய், நல் வாழ்க்கைக்கு வழிகாட்டுவதாய், இயற்கை முதன்மொழியாய்த் தமிழ் திகழ்வதனால், அது, அதன் வெளிப்பாட்டில், இயற்கைச் சிவசமயத்தைப்போல் இயற்கைத் தமிழ்மொழியாய் முழுமையாகவே தோன்றியதென்று தெளிந்துகொளளலாம்.

மேனாட்டாசிரியர் சிலர் கூறுவதுபோல், படிப்படியாய் அது தோன்றவில்லை ; 'முதலில், சைகைகளாகவும், பின்னர்ச் சில முதல் ஒலிகளாகவும், அதன் பின்னர்ப் பல எழுத்தொலிகளாகவும் வழங்கிப் பலகாலம் வடிவு கொள்ளாமலிருந்து, முடிவில் வரிவடிவு களும் படிப்படியே கொண்டன' என்பது தமிழுக்குப் பொருந்தாது ; ஒருகால் அண்மையில் தோன்றிய வேறு மொழிகள் அவ்வாறிருக்கக் கூடும்.

உயிர்களைப் பற்றிய படிமுறை ஆராய்ச்சிகளும் அத்தகை யனவே ; 'முதலில் கல்லில் உயிரணுக்கள் இருந்து, பின்பு நீரிலும் அதன்பின் நிலத்திலும் தோன்றி, நாற்கால் விலங்காய்க் குறுக்கி லிருந்து உயிர் வாழ்ந்து, பின்பு நிமிர்ந்து மனித உருத் தோன்றி யது' என்பதும் பொருந்தாது. ஆறறிவுயிர்களும் முதலிலேயே தோன்றி, அவை மேன்மேல் பிறப்பதும் நிகழ்தலே இயல்பு !

இறைவன் உலகைப் படைத்தான் என்னுங் கொள்கையை ஒப்புக்கொள்வதானால், படிப்படியே இறைவன் படைக்கின்றான் என்பது எவ்வாற்றானும் இசையாது ; இறைவனும் படிப்படியே அறிவு வளர்ச்சி பெறுகின்றான் என்பது போதரும்; இக் கொள்கை,

தெய்வ நம்பிக்கையும் மெய்யுணர்வியல் மாட்சியும் கொள்ளாதவர் கொள்கையாய் முடியும்; விஞ்ஞானம் என்பது இயற்கையின் வழியதாயினும் மாறுதற்குரியது; கலை உயிர்ப்புடையது. மொழிவயப் பட்டது கலை; மொழி, கொள்கைத் திறம் அமைந்தது: கொள்கைக் கலை உறுதி மிக்கது.*

வளர்ச்சி முறை இன்னும் என்னுகுமோ என்று கொள்கை அறுதியின்றிச் சென்ருல் எப்படி? தொல்காப்பியர் வகுத்த ஆறறிவு உயிர் விளக்கமும் நிலைக்காதே; மெய்யுணர்வியலோடு இவை சற்றும் பொருந்தவில்லை.

"என்று நீ, அன்று நான், உன் அடிமை" என்னும் **தாயுமானுர்** போன்ற சான்ருேர் வாக்கும் புரைபடும்.

மக்கள் அறிந்தது படிமுறையே தவிர, இயற்கையில் எழுந்தவை படிமுறைகளில் அல்ல; அதனுலேதான், சிவசமயத்தையும் அதன் அடிப்படையில் வாழ்க்கை வழிகாட்டியாய்த் திகழும் இயற்கைத் தமிழ்மொழியையும், எல்லாம் வல்ல இறைவனே படைத்து வழங்கினுன் என்று கூறும் வழக்கம் ஏற்பட்டது.

> "தமிழ் இன்ன காலத்திலேதான் தோன்றியதென்று கட்டுரைத்துச் சொல்லல் இயலாது; பழைய நாளில் இவ்வுலகமெங்கணும் பரவியிருந்த பெருந்தொகையினரான நாகரிக நன்மக்களால் வழங்கப்பட்டது."
>
> (உரைமணிக் கோவை, பக். 64.)

> 'சைவசமயம்' என்பது, இவ்விந்திய நாடு எங்குமுள்ள தமிழ் நன் மக்களால் எத்தனையோ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னே தொட்டுக் கைக்கொள்ளப்பட்ட கடவுட் கொள்கை."
>
> இவை அடிகளின் வாய்மொழிகள்!
>
> (சைவசமயத்தின் தொன்மையும் தனிச்சிறப்பும்)

குழந்தைகளின் மழலை மொழிகள், மொழி முழுதும் அறியவில்லை என்பதற்காக, மொழியே அப்போது இல்லையென்று கூற முடியுமா? மக்களிற் பெரும்பாலர் உலகு முழுதும் அறியாததற்காக உலக நாடுகளே இல்லையென்று சொல்ல முடியுமா? அமெரிக்காவையும் நிலா மண்டலத்தையும் காணுததற்கு முன் அவையிரண்டும்

---

* Victor Hugo: 'Art and Science' pp. 78. 9.

பிறவும் இல்லை எனலாமா? காட்டு மக்கள் வாழ்க்கை, நாகரிக மற்றோர் வாழ்க்கை, இப்போதும் இந் நூற்றாண்டிலும் இல்லையா? அதுபோல, அடியார் பெருமக்கள் தொன்மையிலும் இருந்திருக்க முடியாதா?

உலகியற்கையில் மண், நீர், தீ, வளி, வான் என்னும் ஐம்பெரும் பொருள்களும் படிமுறையில் தோன்றியவை யென்றால், 'வான்' என்னும் ஐந்தாவது பெரும் பொருளை உலகாயதம் முதலிய சில சமயங்கள் அறியாதிருந்த காலத்தில், 'வானம்' என்பது இல்லாமலா இருந்தது? உயிர்கள் நீர் வாழ்வனவா யிருந்தபோது, நிலத்தில் ஏறாத நிலையில், நிலப் பகுதியே இல்லையா? உயிரினங்களே அற்று, அது வீணாகவா கிடந்தது? மனிதப் பிறவிக்கு ஐந்து விரல்கள் முதலிய உறுப்புக்கள் உண்டானது படிமுறையில் அமைந்ததுதானா?

முற்றறிவுடைய இறைவன், உலகு முழுதும் உயிர்களின் பிறவி முழுதும் ஒருங்கே படைத்தான் என்பதும், அவற்றின் பெருக்கம் சிறுக்கம் தொகுப்பு வகுப்பு ஆக்கம் அழிவுகளாக இடையிடையே நிகழ்வனவெல்லாம், முதலில் ஒருங்கு படைத்ததற்கும் கடைசியில் ஒருங்கு அழிவதற்கும் (சர்வ சங்காரம்) மாறாகமாட்டா என்பதும் சமய நெறியினர் தெளிவு.

சிவ சமயம் இயற்கைச் சமயமென்றால், அதன் கொள்கைகளும் இயற்கையில் முற்றும் அமைந்திருக்க வேண்டும்; அவற்றை முழுதுமறிந்த அடியார் பெருமக்கள் சிலரும் அன்றே விளங்கியிருக்க வேண்டும். சைவ சமயத்துக்கு அடிப்படைக் கொள்கைகளால் வளர்ச்சி என்பது யாதுமில்லை; மேல் வகைகளில் இருக்கலாம்.

ஆதலால், தமிழ்மொழி அமைப்பு, முற்றும் தக்கோர் வழி வெளிப்படுத்தப்பட்டு, அதன் திருந்திய அமைப்பழகை முழுதுணர்ந்த சான்றோரும் அன்றே திகழ்ந்திருக்க வேண்டும் என்க.

அல்லாக்கால், ஆய்தவெழுத்து, விந்து மாயையில் தோன்றியதென்பதும், சுத்த மாயை, அசுத்த மாயை, பிரகிருதி மாயை மூன்றிலும் ஊடுருவி மொழி யெழுத்தாய் வாக்கில் வெளிப்பட்டது என்பதும், ஆய்தவெழுத்து அக் காரணத்தால் மூன்று புள்ளிகளைத் தன் வடிவமாகப் பெற்றதென்பதும் பொருந்தாமற் போம்.

இக் காலத்தில் தட்டெழுத்துக்கேற்பச் சில வடிவுகளைத் திருத்தலாம் என்பது மெய்ப் பொருளியலோடு முரணும். இயற்கை அமைப்போடு பொருந்துதலே முதன்மையாகும். "எழுது மொழி தமிழ்" என்றருளுவார் சம்பந்தர் (325 : 12). அடிகள் கூறுவது:

> "தமிழ் நெடுங்கணக்கிலுள்ள எழுத்துக்களைக் குறைக்க வேண்டு மென்றும், அயல் மொழிகளிலுள்ள ஒலிகளைத் தமிழிற் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்றும், அப்போது தான் தமிழ் வளர்ச்சியடையு மென்றும் கூறுவர் சிலர். நல்லது; தமிழ்ச் சொற்களினாலுந் தமிழ் ஒலியினாலுந் தெரி விக்கக் கூடாதவை இருப்பினன்றோ அயல்மொழிச் சொற் களையும் ஒலிகளையுஞ் சேர்த்தல் வேண்டும்? உலகத்தில் உள்ள எல்லாப் பொருள்களையும், எல்லா அறிவு இயல்களையும் தமிழ்ச் சொற்கள், தமிழ் ஒலிகள் கொண்டே செவ்வையாகத் தெரி விக்கலாம் என்பது, யாம் எல்லாத் துறைகளிலும் புகுந்து எழுதியிருக்கும் நூல்களைச் சிறிது பார்த்தாலுந் தெரிந்து கொள்ளலாம்."
>
> (உரைமணிக் கோவை, பக். 67.)

"ஊறு பொருளின் தமிழ்" (334 : 4) என்றன்றோ திருஞான சம்பந்தர் திருவாய் மலர்ந்தருளினர். இன்றும் தமிழ்மொழியின் இலக்கணச் சுவைகளைப் பலர் அடிகளைப்போல் அறிந்து சுவைக் கவோ அதன் இனிமையில் திளைக்கவோ மாட்டாதவராய்த், தமிழ றிலேயே வறியராய்க் காலங் கழிக்கின்றனர். அத்தகையோர்க்கு முன்னும் இறைவனையே போலத் தமிழ்மொழி தன் முழு அமைப் போடும் இனிது விளங்கிக் கொண்டேதான் இருக்கிறது. "ஓர் எல்லையறு பரம்பொருள் முன் இருந்தபடி இருப்பதுபோல்" என்றார் மனோன்மணீய ஆசிரியரும். தமிழ்மொழியின் தனிச் சிறப்பு இது; தமிழ் நெறிக் கொள்கையாகிய சிவ சமயத்தின் தனிச் சிறப்பும் இது.

3. முயற்சி வேண்டும்

தொன்மையாகவே இயல்பில் அமைந்துவிட்ட இத் தனிச் சிறப்புக்களை, மங்காமல் பயன் கொள்வது அவரவர் முயற்சியில் உள்ளது. ஒரு காலத்தில் மங்குதலும் மற்றொரு காலத்தில் விளங்கு தலும் மக்கள் முயற்சிகளால் நேர்வன. தமிழ்மொழிக்கும் சிவ

சமயத்துக்கும், இயற்கையில், கருத்துக்களால் குறைவில்லை; தமிழர் முயற்சிகளின்றிச் சோம்பிக் கிடந்தால் அச் சோம்பலால் அவை மங்கிக் கிடக்கின்றன. மாணிக்க மணிகளைக் கழுவி வைப்பதும் பொன் அணிகளை அவ்வப்போதும் மெருகேற்றி வைப்பதுமான முயற்சிகள் இல்லாவிட்டால், இயற்கையில் ஒளி வாய்ந்த அப் பொருள்கள் மங்கியே கிடக்கும்! கிடைத்தற்கரிய வாழ்க்கை வழி காட்டிகளான சிவசமயமும் தமிழ்மொழியும் எவ்வளவோ நிறைவுடன் இம்மை அம்மைப் பயன்களாக இயற்கையே கிடைத்திருந்தும், தமிழ் மக்கள் வறிதே முயற்சியின்றிக் கிடந்தால், அவை மங்காமல் தம் இயற்கை யொளியுடன் சிறப்பது எப்படி?

இரங்கத்தக்க இந் நிலையை உணர்ந்த ஆசிரியர் மறைமலை அடிகள் போன்றோர், தக்க முயற்சிகளுடன் அவ்விரண்டையும் ஒளி விளக்கி வைத்து இனிமை யேற்றி உதவினர். தமிழகமும் தமிழக அரசும் அப் பெரியோர்க்கு என்ன கைம்மாறு செய்ய இயலும் ? வையகமும் வானகமும் ஆற்றல் அரிது. தமிழ் மறையே இங்ஙனங் கருதியது; ஏனென்றால், இவை செய்யாமற் செய்த உதவிகள்.

ஆ. இலக்கிய இனிமை

இலக்கணம் அமைந்தது இலக்கியம்; இலக்கணத் தமிழை மேலுஞ் சுவையூட்டி இலக்கியம் சிறக்கும்; இலக்கணம் அமையாத நிலையில், மொழியைச் சிலர் கையாண்டால், இலக்கியமாக அது நிலைபெறாது. பேச்சு வழக்கில் பலவகையாகத் திரிபுகளும் மரூஉக்களும் உண்டாகக் கூடும்; திருந்திய இலக்கண அமைதி கொண்டு ஆன்றோர் அவ்வப்போதும் நூல்களை ஒழுங்குபடுத்தாவிட்டால், மொழி பலவகையிற் சிதைந்து முன்பின் நூல்களின் பொருள் அறிய முடியாமல் வழக்கு வீழ்ந்து கெடும்.

> "மொழி...அநாகரிகமுடைய மக்களால் வழங்கப் படுவ தொன்றாயின் அதன்கட் காலந்தோறும் பிறந்த சொற்கள் எல்லாம் ஒருங்கு மறைந்தழிய அம் மொழியும் நாளடைவில் இறந்தொழியும்."
>
> (பண்டைக்காலத் தமிழரும், பக். 10.)

மொழியை உயிர்த்திறமாக்கிக் கொண்டிருப்பது அதன் இலக்கணம் என்று துணியப்படும். இலக்கணத்தை வைத்துக் கொண்டு

தான், மேலும் சுவை பெருக்கிக்கொண்டு இலக்கியங்கள் எழும். சங்கம் இருந்து அவ்வப்போதும் நூல்களை இயற்கையோடு ஒத்த இலக்கணங்களால் திருத்தி இலக்கியங்களாக்குதலே, தமிழுக்குத் திருத்தம் என்பது! தமிழ் அத்தகைய இலக்கணத் திருத்தம் உடையது; அதனாலேதான் தமிழ் 'சங்கத் தமிழ்' எனப்பட்டது; ஏனை மொழிகளுக்கு இவ்வாறு பெயர் இல்லை; "சங்க மலி செந் தமிழ்" (332) என்றது திருமுறை!

"கூடலின் ஆய்ந்த ஒண்தீந் தமிழ்" என்பது திருச்சிற்றம்பலக் கோவையார்;

அத்தகைய முயற்சி, கட்டுப்பாடாய், நெறிப்பட்ட முறையில், இப்போது உள்ளதா? "ஆய்ந்த ஒண்தீந் தமிழ்" என்றது, பெரிதுங் கருத்திருத்துதற்குரியது.

'தீந்தமிழின் துறைவாய் நுழைந்தனையோ, அன்றி ஏழிசைச் சூழல் புக்கோ, இறைவா, நின் தடவரைத் தோட்கு என்கொலாம் புகுந்து எய்தியதே" என்பது அச் செய்யுளின் பின் வரிகள்; உடம்பும் இனிக்கும்படி ஈடுபட்டுச் சுவைக்கும் அகப்பொருட் செய்தியும் இசைச் செய்தியும் இச் செய்யுளில் வருகின்றன. இயற் றமிழ் இசைத் தமிழ்களோடு நாடகத் தமிழும் சேர்ந்தால், இங்ஙனம் வரும் முத்தமிழ்ச் சுவையின் இனிமைக்குக் கேட்க வேண்டுமா? தமிழ்ச் சுவைதானே சமயச் சுவை! இரண்டும் கடவுள் திருவடிச் சுவைகளே!

இலக்கணம் பால்; இலக்கியம் என்பது மேலும் சுவையூட்டும் சர்க்கரை போன்றதென்றால், பாலை வைத்துக்கொண்டு தானே சர்க்கரை இடமுடியும்!

தமிழ்மொழிக்கு இங்ஙனம் திருந்திய இயற்கையமைப்புச் சிறப்பாக அமைந்திருப்பதனால் மேன்மேலும் சுவையூட்டிய இலக் கியங்கள் இம் மொழிக்கு நன்கமைந்துள்ளன. இலக்கியங்களி லிருந்து அவற்றின் இலக்கண அமைதிகள் இன்னவையென்று தெளிதற்கும் வாய்ப்பாயிற்று. நல்ல பால், நல்ல சர்க்கரை! இவ் வினிமைகள் தக்கோரைப் பெரிதுங் கவர்கின்றன.

அறிவார்ந்த உரைநடையாகவும் உணர்வார்ந்த செய்யுள் நடை யாகவும் தக்கபடி தோன்றும் இலக்கணத் தமிழ்மொழி, கறந்த

பாலாகவும் காய்ச்சித் திரட்டிய திரட்டுப் பாலாகவும் சுவை மிகுந்துள்ளன; இவ்வுண்மையை ஆசிரியரடிகள்,

"பால், கறந்த மாத்திரையே உண்பார்க்குச் சுவை பயக்குமாயினும் அதனை வற்றக் காய்ச்சிக் கட்டியாகத் திரட்டிப்பின் உண்பார்க்குக் கழிபெருஞ் சுவை தருதல்போல"

என விளக்குதல் கொண்டு அறிந்துகொள்ளலாம். அதில் சர்க்கரையும் இட்டால் இன்னும் எப்படியிருக்கும்!

"பாட்டெல்லாம் அறிவு நிலையைப் பற்றிக்கொண்டுபோய் உயிர்களின் உணர்வு நிலையை எழுப்பி விடுவதாகும்"

—பட்டினப்பாலை. பக். 7.

1. முதல்வகைச் சுவை

இலக்கியம் என்னுஞ் சொல் குறிக்கோள் (லட்சியம்) அமைந்தது என்னுஞ் சொற்பொருள் உடையது; குறிக்கோள் இல்லாத நூல் எதுவும் இலக்கியமாகாது; இதற்கு அடுத்தபடிதான் ஏனைச் சுவைகளெல்லாம்! வாழ்க்கையின் வடிப்பே பாட்டும் உரையுமான நூல்களாய் எழுதலின், வாழ்க்கையே குறிக்கோள் உடையதாக அமையாவிட்டால், அது நல்வாழ்க்கை யாகுமா? நல் லிலக்கியங்கள் தாம் எழுமா? "குறிக்கோள் இலாது கெட்டேன்" என்றார் அப்பர்.

செய்யுள் நூலேயாயினும் உரைநடை நூலேயாயினும் அவற்றின் குறிக்கோள், அறம், பொருள், இன்பம், வீடு; வாழ்க்கைக்கும் குறிக்கோள் அவையே!

"அறம் பொருள் இன்பம் வீடடைதல் நூற்பயனே."

அறம் பொருள் இன்பம் என்னும் மெய்ப்பொருட் சிறப்பையே தலைப்புகளாக உடையது திருக்குறளாதலின், அது சிறந்த குறிக்கோளுடைய திருமறை யிலக்கியமாய்த், தலைமை பெற்றுவிட்டது. அவ்வாறு வேறு நூல் தமிழ்க்கு அமையவில்லை.

"மறைந்த தமிழ்மறைகளையே, இறைவன், மக்கள் உய்ய வேண்டி, ஆசிரியர் திருவள்ளுவ நாயனார் வாயிலாக வெளிப்படுத்தருளினன்.

"வேதம் என்னுஞ் சொல் அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நாற்பொருள்களைக் கூறும் நான்கு தமிழ் வேதங்களையே உணர்த்தலும்,

"பண்டைக் காலத்தில் தமிழில் வழங்கிய நான்மறைகளே நால் வேதங்கள் எனக் கூறப்பட்டன.

"சிவபிரான் ஆலின் கீழிருந்து அறம் பொருள் இன்ப வீடு களை அருந்தவருக்கு அறிவுறுத்திய அருமறைகள் தமிழ் நான் மறைகளேயாம்;......இந் நால்வகை உறுதிப் பொருள்களைச் சிறக்கக் கூறும் திருவள்ளுவர் திருக்குறள், 'மறை' எனவும் 'வேதம்' எனவும் பண்டு தொட்டு இன்றுகாறும் வழங்கப் படுதலுங் காண்க."

—வேளாளர் நாகரிகம், பக். 102, 96-71, 109, 113.

அறம் முதலிய நான்கையும் ஆலின் கீழிருந்து சிவபெருமான் உணர்த்தினன் என்பதனால் அக் குறிக்கோளுடைய திருமுறை களும் உயர்ந்த இலக்கியங்களாயின.

திருக்குறள் திருமறையும், தேவார திருவாசகத் திருமுறை களும் இவ்வாற்றால் ஒரே முடிபுகளுடையன; திருமறை, பொது வேதம்; திருமுறைகள் சிறப்பு வேதங்களாகும்; 'பொது மறை' 'சிறப்பு முறை' என்றும் சொல்லலாம். மெய்கண்ட நூல்கள் பொருள் நூல்களாகிய ஆகமங்கள் இரண்டன் முடிபும் ஒன்றே; இது,

"நாதன் உரையவை நாடில் இரண்டந்தம்
பேதமதென்பர் பேரியோர்க்கு அபேதமே!"

என்னும் திருமூலர் வாக்கினால் இனிது தெளியப்படும்;

சங்க இலக்கியங்கள் அவ்வளவும் அறம் முதலிய கொள்கை களைப் பெருக உடையன என்பது அனைவரும் அறிந்ததே! செல்வ வாழ்க்கையின் குறிக்கோள் இன்னதென்பதைப் புறநானூறு (28),

"அறனும் பொருளும் இன்பமும் மூன்றும்
ஆற்றும் பெருமநின் செல்வம்"

என்றதும், முற்றிய திருவின் மூவராகிய சேர சோழ பாண்டியரை நினைந்து கோவூர்கிழார் சோழன் நலங்கிள்ளியைப் பாடிய பாடலில்,

"சிறப்புடை மரபிற் பொருளும் இன்பமும்
அறத்து வழிப்படூஉந் தோற்றம் போல
இருகுடை பின்பட ஓங்கிய ஒருகுடை"

என்றதும் (31) இங்கே நினைவுகூரத் தக்கன.

புறப்பொருள் வெண்பா மாலையில் (269), 'முடிந்த பொருளாகிய அறம்பொருளின்பத்தைச் சொல்லுதல்' என்பதும், அது 'முதுமொழிக் காஞ்சி' என்னும் துறையாதலும், அதில் முதுமொழி' என வருதலும்,

அறம் பொருள் இன்பம் என வாழ்க்கைக் குறிக்கோள் நுவலும் தமிழ் மறையாகிய திருக்குறளுக்கு 'முதுமொழி' என்று ஒரு பெயர் இருத்தலும்,

அதைப் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாகிய 'முதுமொழிக் காஞ்சி' என்பது ஏற்று மொழிதலும் கருதுக!

சிலப்பதிகாரம் அறத்தை நிலைநாட்டும் குறிக்கோள் உடையது; அறத்தின் வழிப் பொருளும் இன்பமும் வீடும் பயப்பிப்பது; குறிக்கோள் சிறப்பாக அமைந்ததாகலின் தமிழில் அது சிறந்த இலக்கியமாயிற்று.

"அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற் றாவதூஉம்,
உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்,
ஊழ்வினை உருத்துவந் தூட்டு மென்பதூஉம்,
சூழ்வினைச் சிலம்பு காரண மாகச்
சிலப்பதி காரம் என்னும் பெயரால்
நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்"

என இளங்கோவடிகள் தமது சிலப்பதிகார நூன்முகத்தில் நூலின் குறிக்கோள் இன்னதென்பதைக் குறித்தார்.

சிலப்பதிகாரத்தைக் 'கோவலன் கதை' என்பதைவிடக் 'கண்ணகி கதை' என்பது சிறப்பு! கண்ணகி வாழ்க்கையில் குறிக்கோள் விளங்குகிறது! சிலப்பதிகாரம் அதனால் இலக்கியமாயிற்று!

ஆசிரியர் மறைமலையடிகளாரும், "சிலப்பதிகாரத்தில் கிளக்கப் படுவன யாவும் உண்மைப் பொருள்கள்" என்று 'நக்கீரனார் தெய்வப்புலமை மாட்சி' என்னும் கட்டுரையில் கூறுவர்.

ஆசிரியரடிகளின் நூல்கள், சிவநெறி தமிழ் மொழிச் சிறப்புகளை விளக்குதலும், அவை இரண்டாலும் மக்களுக்கு வாழ்க்கை அறத்தின் முறைகளைத் தெரிவித்தலும், குறிக்கோளாகக் கொண்டு இயன்றவையாதலின், அவை யத்தனையும் இலக்கியச் சிறப்புக் குரியனவாய் மிளிர்கின்றன.

"மக்கள் கூட்டத்தாரின் நாகரிகமெல்லாம் அவர் வழங்கும் மொழியினால் நன்றாக அறியப்படும்...நிலையான நாகரிகமும் நிலையான வாழ்க்கையும் நாளுக்கு நாள் பெருகும் அறிவு விளக்கமும் அரிய முயற்சியுமுடைய மக்களிடத்தல்லாமல் மற்றவர்பால் ஒரு மொழி சிறந்து தூய்தாய்த் தொடர்பாய் நடைபெறாது...மக்களின் முயற்சியால் ஒரு மொழியானது உரம் பெற்று உயிர்ப்புடையதாய் வழங்குதல் போலவே, திருந்திய மொழி வழக்கினாலும் அம் மக்கள் உரம் பெற்று உயிர்ப்புடன் நடைபெறுவர்.

"மொழியானது அம் மொழியை வழ்ங்கும் மக்களின் கொள்கைகளை விட்டுத் தனித்து நடவாது.

"தமிழ்மொழியின் உண்மை, அதனை வழங்கி வளர்த்த தமிழ்மக்களின் கொள்கையாகிய சைவத்தைத் தனக்கு உயிராய்க் கொண்டு உலவுகின்றது.....பண்டைக் காலம் தொடங்கித் தமிழை வழங்கினவர்களும் வளர்த்தவர்களும் சைவர்களே அல்லாமல், மற்றைய மதத்தவர்கள் அல்லர்.

"தமிழுக்கே உரிய தமிழ்மக்கள் சைவர்களாயிருந்தமையால், அவர்கள் அதனைத் தூயதாகவே வழங்கி வளர்த்து வந்திருக்கிறார்கள்; அதனாற் சைவக் கொள்கையானது தமிழுக்கு உயிர்போல்வது; அதனை அதிலிருந்து பிரித்தல் இயலாது."

—உரைமணிக் கோவை, 61, 75, 76.

என்று தமிழ்மொழியும் சைவசமயமும் ஒன்றுக் கொன்று தொடர்புற்று மக்கள் வாழ்க்கையோடு பிணைந்து விளங்குதலை அடிகளார் குறிக்கோளினிமையுடன் நன்கெடுத்துக் காட்டுவர்.

2. இரண்டாவது வகை

தொல்காப்பியர், சில மெய்ப்பாடுகளைப் புலப்படுத்தி அவை எட்டென்றும் வகைப்படுத்து,

> ''நகையே, அழுகை, இளிவரல், மருட்கை,
> அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்று
> அப்பால் எட்டே மெய்ப்பாடு என்ப'' (தொல், மெய்ப், 3)

என்று ஓதுவர்; எட்டும் மெய்ப்பாடுறும்படி நூல் யாத்தால் அது அடுத்தபடி இலக்கியச் சுவை உடையதாகும்.

திருவாசகம் ஓதினால், "தொடு மணற் கேணியிற் சுரந்து நீர் பாய" என்று சிவப்பிரகாசர் கூறியபடி, மெய்ப்பாட்டுச் சுவை தருகின்றது; திருவாசகம் அருளிய மாணிக்க வாசகரை 'அழுதடி அடைந்த அன்பன்' என்பார் பரஞ்சோதியார்; இவ்வாற்றால், திருவாசகம் ஓர் இலக்கியமாயிற்று.

ஒவ்வொரு சுவையோ, அன்றிச் சில சுவைகளோ, எண் வகைச் சுவையுமோ இனிதமைய யாக்கும் நூல்கள் இலக்கியங்களாகின்றன ; இச் சுவைகள் விளங்கும் வாழ்க்கையே இலக்கியமாய் (இலட்சியம் உடையதாய்த்) திகழ்தலின், அவ் வாழ்க்கையின் வடிப்பாகிய நூலும் இலக்கியமாய்ச் சுவைக்கிறது.

சுவை, உலகியலில் எங்கும் விளங்குவதொன்று, ஒரு குழந்தையை ஓரிடத்துக்கு அனுப்பினால் அது வளைந்து வளைந்து ஆடிக்கொண்டே ஓடுகிறது; நேராய்ப் போய் நேராய் வருவதில்லை; அதன் நடை, சுவை வண்ணமாகிறது ; இதை அக் குழந்தைக்கு யாரும் சொல்லிக் கொடுப்பதில்லை; இயற்கையாகவே உள்ளது.

உள்ளத்திற் கிளர்ச்சி தோன்றினால் இத்தகைய சுவைத் திறங்கள் மேலெழுந்து விடுகின்றன ; உள்ளக் கிளர்ச்சியும் உணர்ச்சிப் பெருக்கும் எழுகின்ற பாட்டு வல்லான் ஒருவன், இங்ஙனமே இலக்கியப் பாடல்களைப் பொழிந்து விடுகிறான் ; தன்னை மறந்து நாட்டியமாடும் ஒரு மாதின் நிலையும், இங்ஙனமே அமைகிறது ; வெறும் உடம்பு இலக்கியம் பெறுகின்றபோது அதன்கண் மெய்ப்பாடுகள் தோன்றி விடுகின்றன. உடம்பிலும் உலகத்திலும் எவ்வளவு இலக்கிய இனிமைகள் இங்ஙனம் காணப்படுகின்றன!

உயிருடம்பில் எண்வகைச் சுவையாகக் காணப்படும் இலக்கியம், உலகத்தில் எத்தனையோ வகையான அழகுகளாய்த் தோன்றுகின்றன. அவை அத்தனையும் எல்லாம் வல்ல இறைவியின் நாட்டிய மெய்ப்பாடுகளே. இறைவன் திருநடன இயக்கமே. திருமுறை இலக்கியங்கள் உலகியற்கைகளை விரித்தோதுதலில் இம் மறைபொருள் அடங்கியிருக்கிறது.

"பயன்படாது நிற்குஞ் சொல் ஒன்றுயினும்...காணப்படுவதில்லை...

"மாம்பழச் சாறு பெய்த குடுவையின் எப் பக்கத்தே பொத்திட்டு நாவை நீட்டினும் அவ்வழியே ஒழுகும் அச் சாறு தித்தித்தல் போல, செய்யுளின் எவ்விடத்தே அறிவு தோயினும் ஆண்டு இனிமையே விளையாநின்றது."

(பட்டினப். பக். 76, 77)

3. மூன்ருவது வகை

'கற்பனை' என்பது மூன்ருவதாய்க் கருதப்படும் ஓர் இலக்கியச் சுவை: திருவள்ளுவர், நிலையாமை பற்றி, 'நேற்றிருந்த ஒருவன் இன்று இல்லை, இறந்துபோனுன்' என்று ஒரு கருத்தைத் தெரிவிக்க விரும்பினர். அதை அப்படியே தெரிவித்திருந்தால் வெறுங் கருத்தைத் தெரிவித்ததுபோல் ஆகும். படிப்பவர் சுவையோடு படிக்கமாட்டார்; 'இது யாருக்குத் தெரியாது' என்று புறக்கணிப்பாகக் கூட இருந்துவிடுவர். ஆனல், அதைச் சுவையுடன் சொல்லத் திருவள்ளுவர் உள்ளம் பற்றி, 'உலகுக்கு ஒரு பெருமை உண்டென்றுல் அது இந்த நிலையாமைதான்' என்று சொல்ல முற்பட்டார்; கேட்பவர் உள்ளம் 'அப்படியா' என்று கவிந்தது;

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு."

மற்றப் பெருமைகள் சில உலகத்துக்கு இருந்தாலும், இந்த நிலையாமைதான் அதற்குப் பெரிய பெருமை என்று கற்பித்து, உள்ளதைப் புனைந்துரைத்தார்.

உள்ளதை இங்ஙனம் கவர்ச்சிபெறச் சொல்லுதலைத்தான் 'கற்பனை' என்றனர் முன்னேர். இல்லாததைப் படைத்துச்

சொல்லுதலே, அஃது எத்துணைச் சுவை தருவதாயினும், 'பொய்' என்று தெரிந்ததும் உலகம் பழிக்குமே தவிரப் புகழாது.

'முயற்கொம்பின்மேல் ஒருவன் ஏறி வானத்திலுள்ள தாமரைப் பூவைப் பறித்தான்' என்பதுபோல, இல்லாததைக் கவர்ச்சியாக்க முற்பட்டால் அது சுவைக்குதவாது; வெறும் பகடியாய் ஒழியும்; முயல், கொம்பு, ஒருவன், வானம், பூ, பறித்தல் என்னுங் கருத்துக்கள் உலகத்தில் உள்ளனவே. இவற்றை, ஒன்றின்மேல் ஒன்றாக ஏற்றி இயைத்துரைத்ததுதான் பொய்;

இப் பொய்யும் பொய்மைக்கானல் காட்டப்படும்; சடுதியில் அது சுவையுடையதுபோலத் தோன்றினாலும் நிலைக்காது; ஒரோவொருகால் சுவையிலும் பொய்யாகவே ஒழியும்; பொய்யை இயைப்பது ஒரு திறமைதான் என்றாலும், அத் திறமை, திருவள்ளுவர் போல, மெய்யையே சுவைபடச் சொல்லப் பெரும்பாலும் பயன்படுவதில்லை; பொய்மைக்கு மட்டும் இதனைப் பொய்ச் சுவையாய் எடுத்துக்காட்டும்போது, இது, கற்பனைச் சுவைக்கு ஒரு வழுவமைதியாய் உதவும்.

தலைவன்மேல் குற்றமில்லாததைக் குற்றமாகக் கொண்டு தலைவி ஊடுவது வழக்கம்; மெய்ப்படாத இதனைத் தலைவன், 'அப்படி நான் குற்றஞ் செய்யவில்லை' என்று கருத்தளவாய்த் தெரிவித்தால் அது சுவை பயக்காது; இக் கருத்தைக் கற்பனைப்படுத்தி இலக்கியச் சுவை ஏற்றி இனிமையாகச் சொல்லவேண்டும். அதற்குப் புலமை வேண்டும்; புலவர் திருவள்ளுவர்க்கு அவ்வாறு இனிமைப்படுத்துவது எளிதாயிற்று. பொய்யைப் பொய் என்றுங் காட்டவேண்டும், அதே நேரத்தில் அதைக் கற்பனையால் சுவைப்படுத்தியும் சொல்லவேண்டும்; மெய்க் காட்சியைச் சுவைப்படுத்துதல் ஒரு திறன் என்றால், இல்லாததை இல்லாத முறையிலேயே சுவைப்படுத்துதலும் ஒரு திறனாகும்; தெய்வத் திருவள்ளுவர்க்கும் இது மாட்டாமை யாகுமா?

> "வழுத்தினாள் தும்மினே னாக, அழித்தழுதாள்
> யாருள்ளித் தும்மினீர் என்று"

என்றார்; திருக்குறள் இலக்கியமாய் விட்டது.

பேரறிஞர்க்கே இவ்வாறு பொய்மை முறையிலேயே இனிமைப் படுத்த முடியும்; இதனைப் 'புலன் நெறி வழக்கம்' என்று முன்னோர் பாராட்டினர்; இதன் திறன், மெய்யை மெய்யாகவும் பொய்யைப் பொய்யாகவுமே சுவைபடச் சொல்லுதலாம்; மெய்யைப் பொய்யாகவும் பொய்யை மெய்யாகவும் சொல்லிப் பகடிபண்ணுதலன்று. தும்மினால் வேறொருவர் நினைக்கின்றார் என்பது ஒரு குருட்டு வழக்கு; புரைக்கை ஏறுதல் வேறு. அதனால் இது பொய்; தலைவி ஊடுவதும், காமத்திற்கு இன்பமாதலின், வருத்தம்போற் பொய்யாய் நிகழ்வதாகும்; தலைவன் அதனைத் தணித்தற்குக் காட்டிய கருத்தும் உண்மையன்று.

ஆனால் நிகழக் கூடிய செய்கைகளையே திருவள்ளுவர் சுவைப் படுத்தினர். தும்முதலும், தும்றும்போது வாழ்த்துதலும், யாரோ நினைத்துத் தான் தும்மினீர் என்று கேட்டலும் வாழ்க்கையில் நிகழ்வனவாம்

ஆனால், முயற்கொம்பின்மேல் ஏறுதலும் பூப் பறித்தலும் நிகழாதவை. முற்றிலும் இன்மைக் கருத்துக்கு இச் செய்தி எடுத்துக் காட்டப்படலாம்.

இங்ஙனம் இவ் வெடுத்துக்காட்டுக்கள் மெய்யும் பொய்யுமான கற்பனை வேறுபாடுகளாக இருத்தல் கண்டுகொள்ளப்படும்.

மேலும், அவ்வத் துறையில் இதற்கு ஆழ்ந்த புலமை வேண்டுமாதலின், இச் சுவைததிறன் 'கற்பனை' எனவும் கூறப்பட்டது! 'புனைவது' எனவும் சொல்லப்படும்; உள்ளதை உள்ளதாகவும் இல்லதை இல்லாததாகவும் இனிமையாய் அணி செய்யுந் திறனை ஈதுணர்த்தும். "இல் வழக்கை உள் வழக்காகக் கருதிப் புலந்தாள் என்பதாம்" என்றார் உரையாசிரியர் பரிமேலழகரும். இவ்வாறு சுவைப்படுத்துவது பயன்படுவதற்கேயல்லது வேறில்லை;

பழங்களைப் போல் சில காய்கறிகளைப் பச்சையாய் உண்ணமுடியாது; ஆதலால் சமையல் தொழில் வாழ்க்கையில் அரும்பியது; அத் தொழிலில் ஒரு மாது திறமையாய் அக் காய்கறிகளைச் சுவைப் படுத்துதல் இரைப் பையில் சென்று அவை பயன்படும் பொருட்டேயாம்.

அறியாமையில் வீழ்ந்து கிடக்கும் மாந்தர் அறிவைப் பெற வேண்டுமானால், வெறும் அறிவுரைகளோ குறிக்கோளுரைகளோ போதா; அவற்றைச் சுவைப்படுத்தி இலக்கியச் சுவையுரைகளாகச் சமைத்து வழங்கினால் அவ்வறியாமை மாந்தர் அவ் விலக்கியக் கற்பனைச் சுவையில் ஈடுபட்டு அம் முறையில் அறிவுரைகளையும் ஏற்று அறிவுடையராவர்; பயன்படுவது மருந்தேயானாலும் அதனைச் சுவையூட்டிக் கொடுப்பதுபோல் இக் கற்பனைச் சுவை மாந்தரிடையே அறிவுப் பெருக்கத்துக்கு இன்றியமையாததாயிற்று.

4. நான்காவது வகை

நான்காவதாக உவமை நலனும் சிறந்த இலக்கியச் சுவையாய் எண்ணப்படுகின்றது; இலக்கியச் சுவைகளுக்காக ஆசிரியர் தொல்காப்பியனார் வகுத்துக்கொண்ட இனிமைகளில், மெய்ப்பாட்டியலைச் சேர்ந்த எண்வகைச் சுவைகள் மேலே காட்டப்பட்டன; அணிவகைகளில் உவமை நலன் ஒன்றே ஆசிரியரால் எடுத்துக் கொள்ளப்பட்டது.

நூலாசிரியர் தாம் கூறுதற்குக் கருதிய ஒரு கருத்தோடு, உலகத்தில் ஒத்திருக்கும் மற்றொரு கருத்தை உவமை காட்டி விளக்கும்போது தெளிவு உண்டாகின்றது; தெளிவு பிறவாதபடி கூறுதல் சுவைப்பதற்கு மாறு என்று தெரிகின்றது.

"நூல் பயில்வதெல்லாம், உணராத பொருள் உணர்ந்து அறிவு பெறுதற்கும், உணர்ந்த பொருளை மேலும் அழகுறக் கண்டு இன்புறுதற்குமேயாம்"

(முற்கால பிற்காலத் தமிழ்ப் புலவோர், பக். கடுக)

விளக்கத்துக்காகவே நூல் எழுதுதல் வழக்கமாதலின், அதனை விளங்காதபடி கடுமையான எழுத்து நடையிலும் தெளிவற்ற கருத்திலும் எழுதுதலால் யாது பயன்? எதுவும் விளங்கும் போது ஈடுபாடும் அதனால் சுவையும் தோன்றுகின்றன; அவ்வாற்றால் விளங்க வைத்தலையே நோக்கமாகக் கொண்ட உவமைகள் இலக்கிய அணிகளில் சிறந்தன வாயின.

அத்தகைய சிறப்புக்குரிய உவமைகளை ஆசிரியர் பொருத்தமாகக் கையாள வேண்டும்; கருத்துக் கேற்ற உவமையாய்,

ஒத்திருக்க வேண்டும்; உவமைகள் பலவற்றுட் சிறந்ததையே மேற்கொள்ள வேண்டும்; உயர்ந்ததற்கு உயர்ந்ததையும், தாழ்ந்ததற்குத் தாழ்ந்ததையும் முதற் பொருளுக்கு முதற் பொருளையும் கிளைப் பொருளுக்குக் கிளைப் பொருளையும் உவமித்தல் பொருத்தம்; பொதுவாகத் 'தலைமைப்பாடு' 'அறத் திறன்' 'அன்புச் சிறப்பு' 'ஆற்றல் விளக்கம்' முதலியன தோன்ற, உவமைகளைத் தேர்ந்து கொள்ள வேண்டும்; உள்ளுறை உவமங்கள் அறிவுப் பெருக்கமும் சுவை மிகுதியும் தரும்; இவையெல்லாம், தொல்காப்பியர் காணும் சுவை முறைகள்!

மாந்தர், தமது நிலையிலிருந்து தாழும் கீழ் நிலைமையைத் தெய்வத் திருவள்ளுவர் விளக்க விரும்பினார்;

> **"தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர்**
> **நிலையின் இழிந்தக் கடை"**

என்று (மானம், 4) அதற்கு ஓர் உவமை தேர்ந்து கூறினார். கீழ் இயல்புக்கேற்ற கீழான உவமை! அதற்கான உவமைகளுள் இது சிறந்தது! இது, திருவள்ளுவர் திறம்! அவர் திருக்குறள் இலக்கியமாதற்குக் கேட்க வேண்டுமா? அடிகள் கருத்துக்கள் :

"பொருள்களைக் கிடந்தவாறே சொல்லிக்கொண்டு போம் நெறி 'தன்மை நவிற்சி'; அங்ஙனம் சொல்லிப் போதற்கு இடையிடையே உணர்வு சலியாமைப் பொருட்டுச் சுவை வேறு படுத்தி அப் பொருளோடு இயைந்த பிற பொருட்டோற்றத்தை எழுப்பு நெறி உவமை உருவகம்."

"திங்கள் வானில் விளங்குகின்றதென்று ஒருவன் உரைத்தால் அவ்வுரை நம் அறிவுக்கு ஓர் உண்மையை அறிவிக்கும்; அவ்வாறன்றிக்,

> **'கொழுந்தாரகைமுகைக் கொண்டலம் பாசடை விண்மடுவில்**
> **எழுந்தார் மதிக்கமலம் எழில்தந்தென'**

என்னும் திருச்சிற்றம்பலக் கோவையார் திருப்பாட்டை உரைப்பக் கேட்டால்,

"விரிந்த நீலவானம் என்னும் நீர்மடுவில் முகிற் குழாமாகிய பச்சிலை பரவியிருப்ப, இடையிடையே வான்மீன்களாகிய வெண்

டாமரை முகைகள் நிறைந்துவிளங்க அவற்றின் நடுவில் முழு வெண் திங்களாகிய ஒரு வெண்டாமரை அலர்ந்து அழகுடைத்தாய்த் தோன்றுகின்றது' என்னும் இச் செய்யுட் பொருள், நம் அறிவுக்குப் புலனாதலோடு......உணர்வினையும் எழுவித்து இன்பந் தருதல் கண்டாம்.

"உவமை உருவகம் முதலியவற்றின் வேறாகப் பிறர் ஆயிரம் புனைந்துரைகள் கூறினாராயினும், அவையெல்லாம் இவ்வுவமை உருவகம் என்னும் இரண்டிலே அடங்கும்.

"புலவர்க்கு இயற்கையாய்த் தோன்றும் ஒப்புமைகள், உவமை உருவகம் என்னும் இவ்விரண்டே."

(பட்டினப் பாலையில்) கஞ்சி உலர்ந்து புழுதியாய் மேற்படிந்த அரண்மனை வீடுகளுக்கு, வெண்ணீற்றிற் புரண்டெழுந்த களிற்றி யானைகளையும்; கடற்றுறை முகத்தில் அசைந்துகொண்டிருக்கும் மரக்கலன்களுக்கு, கட்டுத்தறியை அசைக்குங் களிற்றியானைகளையும் போல இருபது உவமைகளை உருத்திரங் கண்ணனார் என்னும் நல்லிசைப் புலவர் காட்டியிருக்கின்றார்.

(பட்டினப்பாலை. பக். 54-8)

5. ஐந்தாவதாக அகச்சுவை

வாழ்க்கையில் 'அறிவு' 'அன்பு' 'அருள் 'அறம்' என நால்வகை முன்னேற்றங்கள் உயிர்களுக்குக் கூறப்படுகின்றன.

(1) அகமும் புறமுமாகிய கருவிகளில் ஓடித் திரும்பும் உயிரறிவு 'அறிவு' எனப்படும்.

(2) திரும்பிக் கருவிகளைக் கடந்தபின், திருவருள் பெருகமின்னி நண்ணுதலால் உயிரறிவு தன் அறிவு நிலை திரிந்து மாறி அருளுடைமையை (உயிரிரக்கத்தை) நோக்குவது 'அன்பு'.

(3) அவ் வுயிரிரக்கப் பண்பால் (சீவ காருணியத்தால்) உயிர்த் தொண்டுகளும் கடவுள் தொண்டுகளும் நிகழ்ந்து, திருவருளைக் கழும எய்தி அதன் வண்ணமாதல் 'அருள்'.

(4) திருவருள் வண்ணமான நிலையில், பற்றுக்கள் முற்றும் அற்று இறைவன் வயமாதல் 'அறம்' (மெய்யின்பம்).

இந்த அறநிலையில் வயங்கும் நீத்தாரே (சிவன் முத்தரே), அறன் வலியுறுத்துக்கொண்டு, பிறவியில், இறைவன் திருவுள்ளப் படி சேவையில் நிறைந்து பிறங்குவோர்.

இவ்வுயிர் முன்னேற்றங்கள், முறையே சீலம் நோன்பு செறிவு அறிவு (சரியை கிரியை யோகம் ஞானம்) எனவும், அறம் பொருள் இன்பம் வீடு எனவும் நான்கு வகையாகவும், நான்கு மறைகளாகவும் விளக்கப்பட்டன.

திருஞானம், ஓங்கிய ஞானம், கலைஞானம், மெய்ஞ்ஞானம் எனத் திருஞான சம்பந்தர் சீகாழியிற் பாலுண்டு எய்திய நால்வகை ஞான நிலைகளெல்லாம், அறம் என்னும் ஞான நிலைகளின் படி முறைகள்! ஆதலால், அறிவு நிலையிலேயே (சரியையிலேயே) அறம் (ஞானம்) தொடங்குகிறது. கடைசியில், நிறைந்த அறமாய் (இறை யின்பமாய) முழுமையடைகிறது!

மேலே காட்டப்பட்ட நான்கில், அறிவு புறம்; அன்பு அருள் அறம் என்பன அகம்; இந்த அகச் சுவையே இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழ் ஓம்; (சதாசிவ தத்துவம்); இச் 'சதாசிவ தத்துவத்தி'லிருந்து அ, உ, ம் என்னும் அறம் பொருள் இன்ப மாகிய முப்பொருளும் (அறத்தில் அறம், அறத்தில் பொருள், அறத்தில் இன்பம்) இவற்றின் பயனாகிய வீடும் என நால் வேதங்கள் தோன்றின.

அன்பு அருள் அறம் என்னும் முறைமை முறையே இன்ப மும் பொருளும அறனும் உணர்த்தும்; இங்கே 'அருள்' என்றது, உலகியலின் மறைப்பம்மை (திரோதாயி)யையும் உட்கொண்டு திரு வருளை (சிவ சத்தியை) உணர்த்துதலின் உலகியல் பொருட் செல் வத்தையுங் குறித்து நின்றது! இவ்வாற்றால் முதல் நிலையாகிய அறம் பொருள் இன்பம் என்னும் அன்பு முதலிய மூன்றும் உலகி யல் (இம்மை) நடைமுறையைக் காட்டும்; முடிந்த நிலையாகிய அறம் பொருள் இன்பம் மூன்றும் அருளியல் (அம்மை) நடைமுறையை உணர்த்தும். தொல்காப்பியம் இலக்கணங் கூறுதலின், இம் மையை முதன்மையாகக் கொண்டு மறுமையுணர்வை உள்ளடக்கி, "இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு" என உலகியலிற்

(இம்மையில்) நிகழுமாறே வாழ்க்கையிலக்கணங் கூறியது! திருக்குறள் மறைநூலாதலின், இம்மையும் மறுமை நோக்கத்துடன் நடைபெறுதற்கேற்ற முதன்மை தேற்றி, மறுமையில் இம்மையை அடக்கி, அறம் பொருள் இன்பம் என்னும் முறைமையை முதலிலேயே முறைப்படுத்து விளக்கி, 'பொருளும் இன்பமும் அறத்தாற் கடக்க' என்னுங் கருத்தை வலியுறுத்தி ஆலின் கீழ் இறைவன் உரைத்தது போலவே அறம் உரைத்தார் திருவள்ளுவர்.

திருக்குறள், 'மறைநூல்' என்பதற்கு இம் முறைமையே சான்று; "வித்தக மறைமலி தமிழ்" என்பார் திருஞான சம்பந்தர் (79). திருக்குறளுக்கு இந் நோக்கம் இருப்பது, பாயிரத்தில் திருவள்ளுவர் கூறுகின்ற

"அறஆழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறஆழி நீந்தல் அரிது"

என்னும் கடவுள் வாழ்த்துப் பாட்டாலும் அதன் உரையாலும் தெளியலாம்.

திருக்குறள் இங்ஙனம் திருமறை நூலாய்த் திகழ்தலால், ஏனையோர் போலத் தமிழ் அன்பரும் அதனை வெறும் இலக்கிய நூல் என்றோ, நீதிநூல் என்றோ கூறுதல் எவ்வாற்றானும் பொருந்தாது; திருக்குறளின் இயல்பினை நன்கறிந்தவர் அதனை 'மறைநூல்' ("மந்திர நூல்" தொல், செய், 196) என்றே போற்றுவர்! நல்லொழுக்கம் என்பது இது.

புறத்திலிருந்து அகம் திரும்பும்போது, சுருங்கல் அழகு அமைகிறது; "சிரம் குவிவார் ஓங்குவிக்கும் சீரோன்" (திருவாசகம், சிவபுராணம், 10) என்பதில் வரும் 'குவிவார்' என்னும் வாக்கு நினைவு கூர்தற்குரியது. அகத்துக்கு அகமாய் (உயிரினுள் உயிராய்; உயிரன்பினுள் திருவருளாய்) விளங்கும் திருவருட் சுவையை அது செறிந்த கட்டியாய் இனித்தலின் உயிருணர்வு உணர்தலாலும், அதனால் பெரியோர் இன்பத்தை எய்துகின்றது; "உன்னை உள்குவார் மனத்தின் உறுசுவை அளிக்கும் ஆரமுதே" (திருவா. அருட்பத்து, 6) என்றார் மாணிக்க வாசகர். இறையின்பம் ஏற்படுவதனாலும், அகந் திரும்பும் இலக்கியச் சுவையை நூல்களும் மொழியும் பெறுகின்றன.

இவையெல்லாம் பற்றி அடிகளார் உரைப்பன வருமாறு :

"நல்லிசைப் புலவர் நம் அறிவை ஒருமைப்படுத்து விளக்கு மாறு போல் பிறர் அங்ஙனம் செய்யமாட்டுவாரல்லர்.

"ஓரிடத்திலும் நிலைபெறுதலின்றிக் குரங்குபோல் ஓடுதலாலன்றோ நம் அறிவு விளக்கம் அடைதலின்றி மழுங்கியே கிடக்கின்றது; அறிவு விளங்காது மழுங்கிக் கிடக்குமாயின், அதன் மேற்பட்ட உணர்வு எழப்பெறுதல் ஒருவாற்றானும் இல்லை.

"நல்லிசைப் புலவரும் ஒரு நிலையின்றி ஓடும் நமதறிவை ஓர் ஒழுங்குபடுத்தற் பொருட்டு, அவ் வறிவு பற்றிச் செல்கின்ற உலகியற் பொருள்களில் அழகு மலிந்து விளங்குவனவற்றை அவை விளங்குமாறே விரித்துக் கூறி அவ் விரிந்த அறிவைச் சிறிது சிறிதே சுருக்கிக் கொண்டு போய் அகமுகப் படுத்தி உணர்வெழச் செய்து (அன்பெழச் செய்து) இன்பத்தின்கண் இருத்துவர்.

"சிறந்தன சிலவற்றைப் பற்றுமாறு செய்யப்பட்ட மாத்திரையானே, அஃது, அப் பழக்கம் தவிர்ந்து அகமுகப் பட்டு ஒருங்கும்.

"காணவும் கருதவும் உரைக்கவும் படாத முதல்வனோடு ஒற்றித்து நின்று அவனை அனுபவித்தல், அவன்போற் காணவும் கருதவும் உரைக்கவும் படாத உணர்வு நிலை (உயிரன்பு நிலை) ஒன்றற்கு மாத்திரமே வாய்ப்பதாம்."

(பட்டினப்பாலை. பக் 6, 16)

"தமிழர்க்குள்ள பெருமையெல்லாம் அவர் தொன்று தொட்டுத் தாய்தாக வழங்கிவரும் தமிழ்மொழியினையே சார்ந் திருக்கிறது".

(வேளாளர். பக். 119-20)

"சொல்லாட்சிகள் முக் காலத்து மில்லாத வெறும் பொருளைக் குறிப்பன அல்ல;"

(உள்ளது போகாது இல்லது வாராது)

6. ஆருவதாகச் செய்யுட் சுவை

இவ் வகையில் இலக்கியச் சுவையாகப் பல கூறப்படுதலும் கவனித்தற்குரியது.

(1) உணர்ச்சி மிகுந்து பாட்டு வெளிப்படுதலால், அவ்வுணர்ச்சி மனவுணர்ச்சியாலன்றி உயிருணர்ச்சியாயிருக்க வேண்டும். 'மனவுணர்ச்சி' என்பது புறத்திற் பொறி புலன்களில் ஓடும் கருவியுணர்ச்சி; உயிருணர்ச்சி யென்பது, கருவிகளைத் தன் வயமாக்கிச் சேவையிற் பயன்படுத்திக்கொண்டு திருவருளையும் சிவத்தையும் உணர்ந்தின்புறும் அன்புணர்ச்சி! 'செய்யுட்கள் அகத்தைத் தொடுத'லென்றும் இதனைக் கூறுவதுண்டு. அகமார (உயிரார) கருதுதலால் இச் சிறப்பினைப் பெறுதல் இயல்பு! இதனால், உண்மைத் திறமும் மிகும்; கரவும் ஒழியும்; இந் நிலையில், பிறர்க்கும் உண்மையுணர்ச்சி தோன்றிச் சுவை மிகுக்கும்.

(2) ஒலியினிமையும் கருத்தினிமையோடு ஒத்தும் பாட்டில் இடங்கொள்ளும்; "கொழுஞ்சுவை கெழுமிய செழுந்தமிழ் வழக்கு" எனவும், "என்பு நெக்குருகும் இசையுடன் தழீஇ" எனவும், அடிகள், பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை முகப்பில் உரைப் பாயிரத்திற் கூறுவார்; அவர் வாய்மொழிகள் மேலும் சில:

"நம் அறிவு மெல்லோசை வழிச் சென்று உருகி மிகவும் தூயதான மேலுலகத்தில் உயரப்போகின்றது; நீர் மடையிலே தெள்ளத் தெளிந்த அருவிநீர் திரண்டு ஒழுகுதல் போலச் செய்யுளோசையும் மெல்லென்று மொழு மொழுவெனச் செல்கின்றது.

"இயற்கையிலே இசை தழுவாது நடப்பன......உணர்வை எழுப்புமாறு எவ்வாற்றானுமில்லை."

(பட்டினப்பாலை. பக். 9, 76)

அரிய பொருளும் அழகிய பொருளும் நுவலப்படுங்கால் அவற்றின் இயல்புக் கிசைந்த சொற்கள் ஓர் இழையில் முழு மணிகள் கோக்கப்பட்டாற்போல் கவினுறப் போந்தமைய உருவானும் உள்ளுறை பொருளானும் அறிவும் இன்பமும் மேன்மேற் பெருகச் செய்வதே ஒரு விழுமிய நூலின் தன்மை".

(முற்கால பிற்காலத் தமிழ்ப் புலவோர்)

ஒலி இனிமையும், கருத்தினிமையும், இங்ஙனம் இலக்கியச் சுவை பெருக்குவன. 'வண்ணம்' 'வனப்பு' என்பனவும், 'அளபெடை' 'சாரியை' என்பனவுமாக ஒலிச் சிறப்பு முதலியவற்றில் வரும் தொல்காப்பியப் பகுதிகளை இங்கு நினைவு கூர்க.

'இன்னோசை' என்பது சொற்களின் சொற்றொடர்களின் ஒலி இனிமைகள்; இன்றைக்கு நாற்பது ஆண்டுகளுக்கு முன் அடிகள் எழுதியருளிய 'திருவொற்றிமுருகர் மும்மணிக் கோவைக்கு' எளியேம் வகுத்த விளக்க உரையில் அடிகள் சில திருத்தங்கள் செய்து பதிப்பிட்டார்கள்; அத் திருத்தங்களுள், "சொற்களையும் சொற்றொடர்களையும் செந்தமிழ்ச் சுவை துளும்ப மாற்றியதும்" ஒன்று.

சொற்களை இனிமையேற்றிச் சுவையாய் எழுதி இன்புறுதல் அடிகளார்க்கு இயற்கையில் அமைந்துவிட்ட தமிழ்த் திறன்! அது, பிறர் எவர்க்கும் அமையாதது; அடிகள் 'எழுத்து நடை'யைப் பற்றி எழுதுங் கட்டுரையில் அது விளக்கப்படும். ஆயினும், இங்கொன்று எடுத்துக் காட்டிச் செல்லலாம்!

"பவளவாய் மடுத்துத் திவளொளி சிறந்து
பழகுறு தந்தைக்கு மழவிடை யயர்ந்த"

என்னும் வரிகளின் ஒலியினிமை, அடிகள் தம் இளமையில் இயற்றிய திருவொற்றி முருகர் மும்மணிக் கோவைச் செய்யுளில் (6 : 46-7) வருகின்றது; இவ்வாறே பிறவும்.

(3) இலக்கியங்களில் வெளிப்படும் சொற்கள், தக்கனவாய் எப்போதும் மரபு தழுவியே அமைய வேண்டும்; மாத்திரை முதலான செய்யுளுறுப்புக்களும் பெரும்பாலும் மரபு திரியாமல் ஒத்தே வரும். எல்லாவற்றாலும் இனிமை நோக்கு எங்கும் பொருந்தித் தோன்றும்.

மரபு கழன்றால் மொழிச்சுவை மாறும்; "மாற்றருஞ் சிறப்பின் மரபு" என்பதும், "மரபு திரிதல் செய்யுட் கில்லை" என்பதும் தொல்காப்பியம் (மரபு 1, 91); இனிமை செய்ய உயர்ந்தோர்க்கே தெரியுமாதலின் மரபு வழக்கு உயர்ந்தவரால் அமைந்ததென்பதையும் இலக்கியச் சுவையாளர் கவனித்துக் கொள்ள வேண்டும். ஏனென்றால், "மரபுநிலை திரியின் பிறிது பிறிதாகும்" ஆதலால் "மரபு

திரியா மாட்சிய வாகி" (தொல், மரபு 92, 94) நூல்கள் விளங்க வேண்டும்; மரபு தழுவுதலால் இலக்கியங்கள் இனிமை ஏறும்.

> "தமிழ்ச் சொற்கள் திரிபடையாமலும் அயன்மொழிச் சொற்கள் விரவுதலால் தன் சொற்கள் இறந்துபடாமலும் வழங்கி வருதலாலன்றோ......முன்னரே தமிழ்மொழியில் எழுதப்பட்ட நூல்களை நாம் இன்றைக்கும் எளிதிலே கற்றறியப் பெறுகின்றோம்."
>
> ('பண்டைப் புலவர் தமிழ் ஓம்பினமை')

ஆசிரியர் மறைமலையடிகள் தொல்காப்பியச் சுவையில் மிதந்தவர்; சங்க இலக்கிய இனிமைகளில் ஆழத் திளைத்தவர். அவர் எழுத்துக்களும் பேச்சுக்களும் இலக்கிய நயம் மிக்கவை; இன்சுவை செறிந்தவை.

> 'நூல்கள் திரிபடையாத தமிழில் எழுதப்பட்டிருப்பதால் தான் இப்போதும் நாம் அவைகளை எளிதில் கற்று, நம் முன்னோர்களின் உயர்ந்த சிறந்த கருத்துக்களை அறியப் பெறுகின்றோம்...........முன் இயற்றப்பட்ட திருக்குறளை நாம் இப்போது எளிதிற் கற்றுணர்தல் போல இக்காலத்து ஆங்கிலமொழியைக் கற்பவர்கள் ஐந்நூறாண்டுகட்கு முற்பட்ட 'சாசரு'டைய நூல்களையும் மூந்நூறாண்டுகட்கு முற்பட்ட 'ஷேக்ஸ்பிய'ருடைய நூல்களையும் எளிதில் கற்றறிதல் கூடுமோ?......'சாசர்' எழுதிய நூல்களையும் 'ஷேக்ஸ்பியர்' எழுதிய நூல்களையும் ஒப்பிட்டுப் பார்த்தால் இவ்வுண்மை நன்கு விளங்கிவிடும். செந்தமிழ் மொழி ஆறாயிரம் ஆண்டுகட்கு மேலாக நம் முன்னோர்களால் திரிபடையாமல் பாதுகாக்கப்பட்டு வந்தது.
>
> "'கால்டுவெல்' முதலான மேனாட்டாசிரியர்கள்,.........தமிழானது பிறமொழிக் கலப்பின்றித் தூயதாக எழுதப்படும் போதும் பேசப்படும்போதும் மிக்க அழகுடையதாய்ப் பிறர் உள்ளத்தைக் கவருந் தன்மையதாய் விளங்குகின்றது என்றும் வலியுறுத்திச் சொல்லியிருக்கின்றார்கள். அவர்கள் சொல்லிய அவ்வுண்மை எல்லாப் பொருள்களையும் தனித்தமிழில்

எடுத்துரைக்கும் 'திருக்குறள்' என்னும் ஒருநூலைப் பார்த்தாலும் நன்றாகத் தெரிந்துகொள்ளலாம்".

(உரைமணிக். பக். 64-66.)

இ. மெய்ப்பொருள் இனிமை

இவ்வினிமை எல்லையற்றது; என்ஞான்றும் புதுப்புது நுகர்வாய் இன்புறுத்திக்கொண்டிருப்பது; சேக்கிழார் பெருமான் இதனை 'என்றும இன்பம் பெருகும் இயல்பு" என்பார்; "இன்பமே எக்நாளும்! துன்பமில்லை" என்பது அப்பர் தெளிவுரை!

"கற்பதை ஆழ்ந்து கற்பதனால், இம் மெய்ப்பொருளின்பம் காணலாம்." "கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார்" (356) என்பதனால் இது தெரிகிறது; கற்பதென்பது ஆழ்ந்து கற்பதுதான்; அச் சொல்லுக்கு அதுதான் பொருள். அதனாலேதான 'கற்றதனாலாய பயன் மெய்ப்பொருள் காண்பது' என்று தமிழ் மறைக் குரவர் கருதினர்.

கற்பதற்கு உலகியற்கை இருக்கிறது; அதைப் பிழிந்து கொடுக்கும் நூல்களும் உள்ளன; அவற்றில் மெய்ப்பொருள் இரண்டற்ற கலப்பில் (அத்துவிதமாய்க்) கலந்திருப்பதனாலேதான் ஆழ்ந்து கற்றால், கலந்திருக்கும் மெய்பொருளிருப்பினை அறிவாற் காணவும், அகம் திரும்பி அன்பினால் உணரவும்; உணர்ந்து ஈடுபடவும் முடியுமென்பதற்கு "வாலறிவனைக் காண முடியும்" என்று மட்டும் கூறாமல், அன்பினால் நன்கு ஈடுபடவும் கூடுமென்பது தோன்ற "நற்றாள் தொழாஅ ரெனின்" என்று சொல்லித் திருவள்ளுவர் தொழுதலையும் நினைத்தார்.

1. பயன்படுந் தன்மை

மெய்ப்பொருளின் இயல்பென்பது இனிமையென்றும் பயன்படும் தன்மை; இத் தன்மை அமையாத மனிதரோ, அவர் காணும் பொருளியல்புகளோ வீண்; இயற்கையின் உண்மை விஞ்ஞானமென்றால், அதை இனிமைப்படுத்தும் மெய்ச்சுவையாகிய கலைத்திறம் பயன்படுதலி லுள்ளது! இது தமிழ்க் கொள்கை; தமிழ்க் கலை; தமிழினிமை; தமிழ்ச்சுவை!

அடிகளார் இச் சுவையே உருவானவர்; அடிகளிடம் பாடங் கேட்டு நான் தெரிந்துகொண்ட தமிழ், இப் பயன்படும் மெய்ச்சுவை தான்; அடிகள் தம வாழ்க்கையினுலேயே இதனை விளக்கினர்; சொல்லால் மட்டுமன்று!

எளியேனல் அவர்கள் அடைந்த நலம் யாதுமில்லை; ஆனல், அவர்களால் நான் அடைந்த தமிழ்நலம் பெரிது! பெரிது! "அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன், யாது நீ பெற்றதொன் றென்பால்" என்னும் திருவாசக வரிகள் (கோயில் திருப். 10) என் நினைவுக்கு அடிக்கடி வரும்.

அப்படி அடிகளார் வாழ்க்கை மெய்ச்சுவை மிக்கது. உண்மை யான இனிமைத் திறம், தீந்தமிழினிமை, சைவ மெய்த்தன்மை செறிந்தது; பிறர்க்குப் பயன்படும் செய்கைகளையே எந் நேரமும் நாடி அவர்கள் வாழ்க்கை இயங்கி வந்தது!

அவ்வாறு மெய்ப்பொருளைக் காண்பதே கல்விக்குப் பயனுதலின். மெய்ப்பொருள் தோன்றும்படி நூல்களியற்றுதல் முக்கிய மாகின்றது; அத்தகைய நூல்களே தக்கவை; அதனல் திருக்குறள் "கற்பன கற்றபின்" எனவும் அருளியது; 'கசடறக் கற்றல்' ஐயந் திரிபுகள் எழாதபடி ஆழ்ந்து ஆராய்ந்து முடிவுகள் அமையும் படி கற்றலாகும்; அப்படி அடைந்தால் மட்டுமே, 'நிற்க அதற்குத் தக' என்னும் அறிவுரைப்படி, செயலுக்கு வரும்போது ஐயந் திரி புகள் உண்டாகாமலிருக்கும்.

மெய்ப்பொருளமைப்பு அமையாத உலகியற்கை உயிரியற் கைகள் இல்லாமையால், அவற்றை வடித்துக் கூறும் நூல்கள் மெய்ப்பொருள் அடிப்படையைக் கட்டாயம் பெற்றிருக்க வேண்டும்; அவைதாம் கற்பன என்னும் கற்கத் தகுந்த நூல்கள். அவ்வுண் மையை உணர்ந்து, அதற்காகவே தமிழ்ச் சான்றோர் மெய்ப்பொரு ளியற்கைகள் விளங்கத், தமிழிற் செய்யுள் நூல்களும் உரை நூல் களும் இயற்றியுதவினர். சிலப்பதிகாரம் கடைசிக் காதையாகிய 'வரந்தரு காதை'யின் இறுதியில், முடிவாகச் சில அறிவுரைகளை ஆசிரியர் கூறுமிடத்துத், "தெய்வந் தெளிமின், தெளிந்தோர்ப் பேணுமின்" என்பது போன்றவை வந்திருத்தலை இங்கே நினைவு கூரலாம். இங்ஙனம் 'தமிழ்ச் சுவை' என்பது பெரிதும் இம் மெய்ப் பொருட் சுவையே!

நூலிற் பயன்படும் மெய்ப்பொருள் அடிப்படை இல்லை யென்றால், ஏனை இலக்கண இனிமை, இலக்கிய இனிமைகள், ஏறி யிருந்தாலும் அதனைத் தமிழ்ச்சுவை நூலென்று பாராட்டுதற் கில்லை. வெறும் இலக்கண நூல்கள், வெறும் இலக்கிய நூல்கள், வெறும் கலை நூல்கள், நூலென்னும் பெயர்க்கேற்றபடி, மாந்தர் நினைவு உரை செயல்களை ஒழுங்குபடுத்தும் நூல்களாகா. உள் ளத்தை ஒருமுகப்படுத்தித் தூய்மை செய்யாத நூல்கள் பயனற் றவை.

வெறும் உலகியலின்பம் நிலையாதவையாதலின், திருவள்ளுவர் கருத்துப்படி அவையெல்லாம் புல்லறிவென்று பொத்துப்படும்.

> "நில்லாத வற்றை நிலையின என்றுணரும்
> புல்லறி வாண்மை கடை"

என்பது அப் பெருமான் அறிவுரை! இத்தகைய புல்லறிவாண்மை ஆறறிவு படைத்துச் சிந்தனை யாற்றல் வாய்ந்த மாந்தர்க்குச் சற்று மாகாது; அவரெல்லாம் சான்றாண்மை பெற்றுப், பிறந்த பிறவியை மாட்சிமை செய்துகொள்ளுதற்குரியர்.

இம் மெய்ப்பொருள் இனிமையாகிய தமிழ்ச் சுவையை மிக நன்றாக நுகர்ந்து இன்புறுவார் ஆசிரியரடிகளார்! அவர் நுகர்வு இத்தகைய தென்பதை அவர் தமிழ்ச்சுவை எழுத்துக்கள் விளங்கக் காட்டும்:

"முழுமுதற் கடவுளுண்டென்பதனை விளங்க அறிவித்தற் குரிய அறிவுநிலையும் பின் அதனோடு வேறறக் கலந்து இன்புறுதற் குரிய உணர்வுநிலையும் என்னும் இருதிற நிலையினையும் பயிலச் செய்து, தூய அன்புருவாய் விளங்கும் உணர்வு நிலையை நிலைபே றுக்குவித்து,

"உயிர்களுக்கு அளந்தறியப் படாத பெரும்பயனைத் தருதற்கு இன்றியமையாக் கருவியாவதுதான் பாட்டு என்பது.

"எங்கே உண்மைத் தன்மை விளங்கித் தோன்றுமோ அங்கே நம் அறிவு ஊன்றி நிற்றல் கண்கூடாய் அறியப்பட்ட தொன்றும்.

'சொற்கள் கொண்ட பொருட்கருவை அறியப்புகுவான் ஒருவன், தன்னறிவால் அதனைக் கூர்ந்தறிய வேண்டுதலின்,

தன்னறிவு மிக நுணுகப் பெறுதலோடு......வியப்பும் உடனெய்தி, ...அதன்கண் ஓரின்பம் தோன்ற, அதன் வயப்பட்டுச் சிறக்கின்றான்.

"சில் சொல்லிற் பல்பொருள் தேற்றி அறிவை நுணுகச் செய்து அவ்வாற்றால் உணர்வெழுச்சிபெறச் செய்தல் நன்கு தெளியக் கிடந்தது.

"இதனோடு...இன்னோசை நலந் தழுவி வாய்ப்புறச் சென்று ...இன்புறுத்தும்."

(பட்டினப்பாலை. பக். 6, 8, 13, 15)

உ. அணுகுமுறை

இனி, மெய்ப்பொருள் என்பதில் அதன் இயல்பாகிய குண நலன் முதன்மையானது; இக் குணநலனை இலக்கண இலக்கியக் கலை நூல்களிற் காணலாமென்றால், இயல்புகள் தனியே அமைவன அல்ல; ஒரு பொருளின் இயல்பாகவே அவை அமைய முடியும்; இன்ன பொருள் இன்ன இயல்புடையதென்பதே இயற்கை; இயல் பமையாத பொருளோ, பொருளமையாத இயல்போ உலகியற்கையில் காண இயலாது; கற்கண்டு என்னும் ஒரு பொருளைக் கொண்டு தான் அதனியல்பாகிய இனிமையை அறிய முடியும்.

கடவுள் ஒரு பொருள்; "என் வாழ் முதலாகிய பொருளே," (திருப்பள்ளி. 1) என்றார் மாணிக்கவாசகரும்! 'கடவுள்' 'உயிர்' 'மலம்' என்பவற்றை 'முப்பொருள்' என்று கூறும் வழக்கும் இங்கு நினைவு கூர்க. "பதி பசு பாசம் முதலிய பொருள் வழக்கமும்" என்றதுங் காண்க (சிவஞானபோத மாபாடியம், சிறப்புப் பாயிர விளக்கம்.)

பொருளை அடையாமல் அதன் பண்பை அடைய முடியாது; "எண்குணம் செய்த ஈசனே" (திருக்கழுக். 7) என்பது திருவாசகம். அதுபோல நிலையான மெய்ப்பொருளாகிய கடவுளை அடையாமல் அதன் தெய்வ குணங்களை அடைதலும் இயலாது.

''இன்னா தம்ம இவ்வுலகம்
இனிய காண்கஇத னியல்புணர்ந் தோரே '

என்பது புறநானூறு. தெய்வ குணங்கள், தெய்வத்தை உணர்ந்து எய்தினார்க்கன்றி எல்லார்க்கும் நுகர்ந்து கூறல் இயலாது. ஆகவே

தமிழ்ச்சுவை என்பது தமிழில் அமைந்த மெய்ப்பொருட் சுவை யாகிய கடவுட் சுவையேயாம். இதனைச் "செந்தமிழ்ப் பயன்" என்றே திருஞானசம்பந்தர் (:97 : 4) அருளிச் செய்வார்.

அடிகளார்க்கு நற்றமிழ்ச் சுவை அமைந்ததென்றால், அடிகளார், இறைவனைத் தம் உள்ளகத்தும் புறத்தும் எய்திய பேரருளாளர் என்பதை நாம் உணர்ந்து பெருமையுறல் வேண்டும். அத்தகைய மெய்ச்சான்றோர் திருவடிக்கீழ் அமர்ந்து, பல ஆண்டுகள் தீஞ்சுவைத் தமிழ் பயில நேர்ந்தமை, அடியேன் பெற்ற பெரும் பேறு!

ஈ. எல்லாம் இனிமை

இதற்கு, அடிகளார் வாழ்க்கையே முற்றும் இனிமையாதல் வேண்டும்; ஆம், உண்மை; நடை, உடை, பண்பு, இடம், பொருள், ஏவல், உண்ணல், பருகல், உறங்கல் முதலிய அனைத்தும் ஓர் ஒழுங்கு முறையில் அடிகளார் வாழ்க்கையில் இனிமை கனிந்திருந்தன; எங்கும் இனிமை; எதிலும் இனிமை; காலையில் துயிலெழுவதிலிருந்து நள்ளிரவில் துயிலப் போகும் வரையில், எல்லாரும் யாரும் சுவைக்கும் வகையில் இனிமை திகழ்ந்தது!

வருவோரை வரவேற்று இருக்கையில் அமர்வித்து அமர்ந்து பேசும் இனிமை, எவ்வளவு துரிதத்திலும் கையெழுத்து ஆங்கிலமாயினும் தமிழாயினும் எழுத்துக்கள் ஒன்றோடொன்று கலவாமல், மணி மணியாய்ச் சொல்லுக்குச் சொல் இடம் விட்டு, அச்சில் விளங்கும் எழுத்தமைவு போல் திருத்தமாய், மீண்டும் படி எடுக்க வேண்டிய கட்டாயம் நேராதபடி, நேர் நேராய், ஒரே தடவையாய் எழுதும் இனிமை, அமர்ந்து நிமிர்ந்து சற்றும் அசைவின்றிப் பெருநூல்களை ஆழப்படித்துப், படித்த வரையில் தெளிவாய் உணர்ந்துகொண்டதற்கு அடையாளமாகவும் நினைவுக்காகவும் ஓரங்களில் கோடுகளிட்டும், குறிப்புகள் கொடுத்தும், விரிவாய் இருந்தால் வேறு நோட்டில் கருத்துக்கள் எடுத்தும் கற்கும் இனிமை, கற்கும் ஒவ்வொரு நூலுக்கும் தாமே அட்டைகளிட்டு அவற்றை ஒழுங்காகப் பேழைகளில் அடுக்கி வைக்கும் இனிமை, எங்கும் எப்போதும் எவையும் தூய்மையும் அழகும் தோன்ற அவ்வவற்றை அவ்வவ்விடங்களில் நிறுத்தி, ஓவியம் போல, ஒரு கண்

காட்சி நிலையம் போல அமைத்து உள்ளக் கிழியில் எழுதிப் பார்க்கும் இனிமை, அவைக்களங்களில் நின்றும், இடையிடையே அமர்ந்தும், சுவை பெருக்கிப் பேசும் இனிமை, சுவைத்துச் சுவைத் துப் பால் பருகும் இனிமை, உண்ணும் எதுவும் அங்ஙனமே சுவைத் துண்ணும் இனிமை, உடுக்கும் காவி ஆடையை அழகுறக் கட்டி வழி பாட்டில் அமரும் இனிமை, நெற்றியில் திருநீறும் சந்தன குங்குமங் களும் அணியும் இனிமை, எல்லா நடைமுறைகளையும் ஒழுங்கிற் படுத்து, எந்த நேரத்தில் எந்தப் பணி செய்தல் என்ற முறையில், அந்த நேரம் சற்றும் பின்னிடையாமல், காலந்தோறும், கருத் தாகவும், அதனை ஒரு முதன்மையாகவும், கொண்டு ஒழுகிவரும் இனிமை என எல்லாம் கவர்ச்சியாக அடிகளார் வாழ்க்கையில் சுவை மலிந்து காணப்பட்டன.

எனது நீண்ட காலத் தொடர்பில் அடிகளார் மாளிகைக்கு எத்தனையோ முறை முன்னறிவியாமல் சென்றதுண்டு; அடிகள் இன்ன நேரத்தில் இன்னது செய்துகொண்டிருப்பார் என்பது எல்லார்க்கும் திட்டமாய்த் தெரியும்; ஒரு காலத்திலாவது நான் சென்ற தடவைகளில், நூல்கள் இறைந்து சிதறிக் கிடந்தது கிடையாது; இல்லத்தில் எப்போதும், அது வேலை நேரமாயினும் அல்லாத நேரமாயினும்; எந்தத் தட்டுமுட்டுக்களும், பொருள் களும் இடம் மாறிச் சிதர்ந்து அலங்கோலமாய்க் காணப்பட்டதே இல்லை.

இவ் வினிமைத் திறத்தில் அடிகளார் மிகவும் கண்டிப் பானவர்; அடிகள் குடும்பமோ பெரிது; அனைவரும் அடிகளார் பார்வையில் ஒழுங்குற இயங்கி வந்தனர்; அடிகளார் கண்காணிப் பில் மற்றவர்களும் அப்படி நடந்து கொள்ளுதலில், எவ்வளவோ விழிப்பான திருத்தங்கள் வேண்டப்படும்; மாணவர்களும் இதற்கு விலக்கல்லர்; ஒருகால் என்னைத் தாழ்வாரத்திலேயே அரைமணி நேரம் ஒதுக்கித் தேம்பித் தேம்பி அழவைத்து விட்டார்கள்.

கண்டிப்பாய் இருக்கும் அடிகள், அனைவர்மாட்டும் அன்புச் சுவை பெருக்குதலிலும் மிக வல்லவர்கள்; அழுது கொண்டிருப்ப வர்களை அப்போதே நகைக்க வைத்து விடுவார்கள்; வியக்கவும் வைப்பார்கள்; அஞ்சவும் மகிழவும் வைப்பார்கள்; தாழ்வுகளை இகழ்ந்தொதுக்கவும் உயர்வுகளிற் பெருமிதங் கொண்டு முன்னேற

வும் வைப்பார்கள். நடுநிலைமையில் நேர்மை கொள்ளவும் பழக்கு வார்கள்.

அடிகளார் எழுத்துக்களில் பேச்சுக்களில் மட்டுமன்றி வாழ்க் கையிலேயே இலக்கியம் (இலட்சியம்) ஆக்குவார்கள். அவர்கள் வாழ்க்கையில், 'இலக்கண வாழ்க்கை' 'இலக்கிய வாழ்க்கை' 'மெய் வாழ்க்கை' ஏனைச் சுவைகளின் வாழ்க்கை, எல்லாமே காணப் பட்டன. வாழ்க்கையே சுவைத்திறம் மிகும்போது எல்லா இனிமைகளும் நடுவுநிலைமையும் அமைவது இயற்கை!

கையில் ஒரு பண்டம் இருக்கும்போது மற்றொரு பண்டம் எடுத்தலாகாது. கையிற் காசிருக்கும்போது, அக் கையினாலேயே, எவ்வளவு துரிதத்திலும், ஒரு புத்தகமோ கடிதத் துண்டோ எழுதுகோலோ எடுக்கக் கூடாது; நழுவுகின்ற ஆடையைக் கூட அந்தக் கையால் பற்றலாகாது; துட்டை ஒருபுறம் வைத்துவிட்டே, ஆடையை உடுத்த வேண்டும்; இச் சிறிய வகைக்கே இப்படி என்றால், அடிகள் எவ்வெவ் வகையில் மற்றவைகளைக் கவனித்து ஒழுங்குறத் தொடர்ந்து இனிமைச் சுவையை எழுப்புவார்களென்று உய்த்துணர்ந்து கொள்ளலாம்.

இவ்வாற்றால், அடிகளார் வாழ்க்கையே இனிமைச் சுவையாய் மிளிர்ந்ததெனவும்; அதனால் அனைவர்க்கும் இன்னதென்று சொல்ல முடியாத ஒரு கவர்ச்சியும் அன்பும் நாளும் பெருகி வந்த தெனவும், அறிந்துகொள்ளலாம். இங்ஙனம் இனிமை சொட்டச் சொட்ட, அகமாயினும் புறமாயினும், செய்வன திருந்தச் செய்தல் அவர்கள் இயல்பு!

எ. கலைக் கவின்

அடிகளாரின் கலைப் பெருமைகளை இப் பகுதியிற் சிறிது எண்ணிப் பார்க்கலாம். அவர்கள் எழுத்து, பேச்சு, வாழ்க்கை அனைத்தும் கலைக் கோலங்கள்; கலை வடிவே அடிகளார் என்று கூறிவிடலாம்.

கலை — ஓர் ஆற்றல் :

கலை என்பது கல்வியினால் உண்டாவது; பயன்படுந் தொழிலுக்கும் கல்விக்கும் முன் நிலை; கலையழகு பெறாமல் யாரும் தொழிற் சிறப்பை அடைய முடியாது; அருளையும் எய்த முடியாது; உலக நிலைக்கும் அருள் நிலைக்கும் இடைப்பட்டது கலை; உலக நிலையிலிருந்து அருள் நிலைக்கு ஏற, ஏணியாய் உதவுவது கலை; சேவை காரணமாக உலகத்தின் தொழில் வகைகளுக்கும் அது உதவும்; அடிப்படை மெய்யருளுக்குப் ஏற்றி நலஞ் செய்யும்.

கல்வி வேறு, கலை வேறு; இயற்கையை ஆழ்ந்து ஆழ்ந்து கற்பது கல்வி; அதற்கு மொழி உதவும்; ஆழ்ந்து கற்பதனால் ஓர் அறிவாற்றல் அரும்பிப் பெருகியபின், அது கனிந்து அன்பாய் ஒளிர்கிறது; அந்தக் கனிவுதான் 'கலை' என்பது! கனியும் இயல்பு எங்கெங்கே அமைகிறதோ, அங்கெல்லாம் கலைகள் காணப்படும். உயிரில் அறிவு என்பது காய்; அன்பு என்பது பழம்; அறிவு பழுத்து அன்பாவதற்கு உதவும் அருளாற்றலே கனியும் இயல்பாகிய கலை!

> "காயெலாம் கனிஎனக் கனிவிக்கும் ஒரு பெருங்
> கருணை யமுதே"

என்று இவ்வுண்மையை இராமலிங்க அடிகளார் நன்கு விளக்கினர்; (திருவருட்பா : நடராசபதி மாலை, 31).

> "கலைவளர் கலையே, கலையினுட் கலையே
> கலையெலாம் தரும் ஒரு கருவே"

என்று, மேலும் (பொது நடம், 18) அவர் போற்றுவார்!

கலை என்பது அறிவன்று, அன்பும் அன்று; அஃது ஓர் ஆற்றல்! யாருக்காவது நாம் 'அறிவும் ஆற்றலும் வாய்ந்த ஐயா' என்று கடிதம் எழுதுகிறோம்; அதில் வரும் 'அறிவு' என்பதுதான், கல்வி; ஆற்றல் என்பதுதான் கலை! இதனை அழகு என்றும் கூறுவதுண்டு; ஆயினும் 'அழகு வடிவம்' அமைவதற்கு உதவியாயிருப்பது ஆற்றல்! ஆற்றல் அரும்பி மலர்ந்தால் எதுவும் அறிவின் வழி அன்பும் அழகும் பெறும்; உண்மையின் மலர்ச்சியுங் கனிவுமே 'ஆற்றல்' என்னுங் கலை! உண்மை என்பது இறையுண்மை; அது பொருள்களில் அழகாய், உயிர்களில் அன்பாய்த், தனது ஆற்றலைச் சிந்துகின்றது! எல்லாம் கைபுனைந்தியற்றாக் கலைக் கவின் பெறுகின்றன!

இத் தெய்வ ஆற்றல், மொழி மூலம் வெளிப்பட்டால், 'மொழிக் கலை' ஆகின்றது; செய்யுள் அல்லது உரைநடை மூலம் விளங்கினால் 'இலக்கியக் கலை' ஆகும்; பேச்சு மூலம் சுடர் விட்டால் 'பேச்சுக் கலை' எனப்படும். பல தலையான கருத்துக்கள் வாயிலாக ஒளி வீசினால், கணக்கியல், பொருளியல், மனவியல், உயிரியல், அறிவியல் முதலிய கல்விகளாய்ப், பின்பு உணர்வு மிகுந்து சேவையில் மிளிரும் கலைகளாய்த் தோற்றும்; உலகத்திற் காணப்படுகின்ற அழகு கோலங்களெல்லாம் இக் கலையாற்றலால் அமைவனவே; இதனைச் 'சுவை' என்று சொல்லிவிடலாமோ என்றால், அதுவுமன்று; ஆற்றல் அமைந்த பின்பே எதுவும் சுவை தரும்; பழம் வேறு, அதன் சாறு வேறு, சுவை வேறு! காய்கள் பழுக்கவும், சாறு நிரம்பவும், சுவை தரவும் செய்யும் ஆற்றல் வேறு! பொருள்களின் மூலமாகவும் உயிர்களின் மூலமாகவும் அரும்பி மலர்ந்து கனிந்து நிற்கும் தெய்வ ஆற்றலே கலை என்க.

இனி, இந்த ஆற்றலைத் 'திருவருள்' என்றுதான் துணியலாமோ எனின், அவ்வாறும் அன்று; இறைவன் நமக்குத் தந்தை போன்றவர்; 'திருவருள்' என்னும் அம்மை, தாய் போன்றவர்; தந்தையின் ஆற்றல் வேறு, தாயின் ஆற்றல் வேறு; இரண்டும் ஒன்றல்ல; வாழ்க்கையில் நாம் அதனை அறிவோம்; தந்தையின் ஆற்றல் உரிமையின் வல்லமை, தாயின் ஆற்றல் உரிமைக்கு அணைக்கும் வல்லமை; உரிமை என்பது உண்மை நிலை; அதற்கு மக்களைக் கொண்டுவரப் பதஞ் செய்யும் வல்லமையே அணைக்கும்

வல்லமை! கருத்துடைய தலைவர் வேறு, அதனை விரிவுரைகளாலும் எழுத்துக்களாலும் பரவச் செய்யும் தொண்டர்கள் வேறு; இருவரும் ஒருவராகார்; ஆனால், இருவரும் ஒருமை யுடையர்; ஓரிடத்தவர்; ஒரு கோலத்தவர்; பொதுவாக ஒத்தவர் என்று சொல்லிவிடலாம். ஆண் பெண்ணும், கணவன் மனைவியும், தாய் தந்தையும், அம்மை யப்பராகிய இக் கடவுள் ஆற்றல்களுக்கு உரியவர்; ஒன்று உரிமையியல், அஃதாவது உண்மை யியல்; மற்றொன்று அதனை ஒளி விளக்கும் அழகியல்; 'Beautiful, the servant of the True' என்பது Shakespeare–ல் வரும் ஒரு பொன்மொழி, (பக். 243).

சேக்கிழார் பெருமான் இவ் விருவேறு வகையான அம்மை யப்பர் ஒருமைப்பாட்டை இனிது விளக்கும் பொருட்டே, சீகாழி வீதியில் சம்பந்தரும் அப்பரும் ஒருமையுற்றுத் திருக்கோயிலுக்குச் செல்லுவதை,

"இருட்கடு உண்டவர் அருளும், உலக மெல்லாம்
ஈன்றாள் தன் திருவருளும் எனவும் கூடித்
தெருட்கலை ஞானக்கன்றும், அரசும் சென்று
செஞ்சடை வானவர் கோயில் சேர்ந்தா ரன்றே"

—திருத்தொண். திருநாவுக். 185.

என்று திருவாய்மலர்ந்தார். 'சிவபிரான் அருள் வேறு, அம்மையின் அருள் வேறு; ஆயினும் அவை ஒருமை யுடையவை' என்பது இதன் கருத்து.

உண்மையின் ஆற்றலாகிய ஆண்டவன் வல்லமை, திருவருள் வல்லமையாகிய அணைப்பின் மூலம் உயிர்களின் அறிவு நிலையிற் கலந்து அன்பு சிறந்து ஏனைப் பொருள்களிலும் பாய்ந்து சேவைத் தொழிலாய்த், தொண்டாய் விளங்கி, எதிரற்ற பேராற்றலாய் இங்ஙனம் எல்லாவற்றிலும் பிறங்குகின்றது! இவ்வாற்றலே 'தமிழ்க் கலை' என்பது! 'வாழ்க்கைக் கலை' என்பதும் இது!

கலைஞர் :

உலகியற்கையின் மூலமாகவும், அவ்வியற்கையைப் பிழிந்து விளக்கும் சான்றோர் நூல் மொழிகளின் மூலமாகவும், இக் கலை

யாற்றல் வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதில் திளைப்பவரே, ஏனையோர்க்கு அவ்வாற்றலால் உண்மையை விளக்குவோரே, கலைஞராவர்! இயல் மொழியிலும், இசைக் குரலிலும், நாடக மெய்ப்பாடுகளிலும் முத்தமிழ் வடிவில், இக் கலைஞர், வாழ்க்கை விளக்சம் தருகின்றனர்! அறம் பொருள் இன்பம் என்னும் முப் பொருள் முறையில், அங்ஙனம் வாழ்க்கை மறை வழங்கி உதவியவர் திருவள்ளுவர்! மறை நூல் அருளியவராதலின் தமிழகத்துக்கு அவர் முதற் கலைஞர்! முப்பொருட் கலை வாயிலாக வீடுபேற்றியல்பும் விளக்குதலின, இவர் அருளாளருமாவார். ஏனென்றால், கலை யேணியின் மூலம், பொருள்நிலையிலிருந்து அருள் நிலைக்கு மக்களை அவர் முன்னேற்றுகின்றார்! அதனால் அவர் நாற்பொருள் உறுதி யுந் தேற்றுங் குரவருமாகின்றார்!

அத்தகைய பெருங் குரவரே இருபதாம் நூற்றாண்டின் கலைக் கவின் செல்வர் மறைமலை யடிகளார்!

அலைமகளாகிய 'திருமகள்' என்பது, அறவழியில் வரும் நற் செல்வம்! 'கலைமகள்' என்பது அப் பொருட் செல்வத்திலிருந்து அருட்செல்வத்துக்கு ஏற்றும் நற்படிகள் வாய்ந்த பலவகையான கலையாற்றல்கள! 'மலை மகள்' என்னும் உமையம்மை, மெய்ஞ் ஞானம் எனப்படும் மெய்யுணர்வுப் பேறு!

பொருள் என்பது, கலையையும் (இன்பத்தையும்) ஞானத்தை யும் (அறத்தையும்) தரும்; ஆனால், ஞானம் என்னும் அறமே, அவ் விரண்டையும் கடந்து நாலாவது நிலைபேற்றுறுதியாகிய வீடு கூட்டும்.

கலைமகள், இவ்வாற்றால், 'இன்பம்' ஆகின்றார்; திருமகள், பொருளும்; மலைமகள், அருளும் ஆகின்றனர். இம் மூவராலும் (மூன்றாலும்) எய்தத் தகுந்த பயன் வீடுபேறு; இதனைப் பயப்பவர் எல்லாம் வல்ல கடவுள்; 'அறம்' என்னும் ஞானமே (மெய்யுணர்வே, பலரையுந் தழுவிச் செல்லும் வாழ்க்கை யியலே) அம்மையாகிய மலை மகளாதலின், அவரோடு அணுக்கமாய்ப் பாகங் கொண்டவராய் அவர் விளங்குவார்.

அடிகளார் வாழ்க்கையில், திருமகள் கலைமகள் மலைமகள் மூவரும் ஒற்றுமையாய் ஒருங்கு குலவி யிருந்தனர்; தத்தம்

நற்பயன்களை விளைத்து அவை விளங்கிப் பயன்படுமாறு மிளிர்ந்து கொண்டிருந்தனர். பொருள்களின் மூலம் கலையாற்றல் வீறிக் கொண்டிருந்தன; அவ்வாற்றலின் மூலம் மெய்யுணர்வு மிதந்து கொண்டிருந்தது!

அடிகளார் 'பொதுநிலைக் கழக' மாளிகை, தெரு வீடுகள் பல வற்றினும் பெரியது; ஓராண்டில், திருடர் சிலர், வேறு வீடு ஒன்றிற் புகுந்து கொள்ளை யடித்தனர்; அடிகளார் மாளிகைக்கு வரவில்லை; 'திருடர்க்கு இங்கே ஏதும் அகப்படாதே' என்று அடிகளார் அப்போது தெரிவித்தார்கள். அது முற்றிலும் உண்மை; காரணம் பொருள் வளமெல்லாம், கலை வளமாக, ஞான வளமாக அங்கே விளங்கிக்கொண் டிருந்தன; அவ்வப்போதும் வரும் வருவாய்கள் கலை நூல்களாக, கலைஞான நூல்களாக மாறிக் கொண்டிருந்தன; அடிகளார் வாழ்வு எளிய வாழ்வு! செல்வர் பலர்க்கும் ஈது எடுத்துக் காட்டு.

நூல்களை மன மகிழ்ச்சியோடு விலைகொடுத்து வாங்குவதில் அடிகளார் பேரூக்கம் கொண்டவர்; 30—8—1913 இல் கொழும்பு அன்பர் ஒருவர்க்கு எழுதிய கடிதத்தில், "James caston புத்தகத் திற்கு London L. N. Fowler & Co-க்கு எழுதிக் கேளுங்கள்" என்று குறித்திருப்பது இங்கு நினைவு கூர்தற் குரியது; உலக நாடு களிலிருந்தெல்லாம் அவர்கள் பெயர்க்கு நூல்கள் வரும்; வேண்டு வன தேர்ந்தெடுத்துக் கொள்வார்; மற்றவை, திருப்பி அனுப்பப் பட்டு விடும்; உலக நாடுகளிலும் விற்பனை நிலையங்களிலும் அடிக ளாரிடத்தில் அவ்வளவு நம்பிக்கை; புதியவாக நூல்கள் வெளி வந்தனவென்றால், மறுகிழமையே அவை அடிகளார் மேசை மேல் இருக்கும்; பொதுநிலைக் கழகத்தில், 'மணிமொழி நூல் நிலையம்' அவ்வாறு பேரளவில், தகுதிச் சிறப்பில், அமைக்கப்பட்டு வந்தது. எல்லாருடைய வீடுகளிலும் நூல்நிலையங்கள் இவ்வாறு அமைந்துவந்தால், நாடு எவ்வளவு வீறு பெற்றிருக்கும்! நாட்ட வரிற் பெரும்பாலார், கலை விளக்கம் உடையவராயிருந்தால், இடர்க்கு இடமேது?

அடிகளார் நூல் நிலையந்தான் இப்போது சென்னை இலிங்கி செட்டித் தெருவில் மல்லீசர் திருக்கோவிலுக்கருகில், வள்ளலார் திருவருள் மாளிகையில் 'மறைமலையடிகள் நூல்நிலையம்' என்னும்

மாட்சிமைப் பெயரில் அமைந்து, சைவ சித்தாந்தக் கழகத்தாரால் தக்க கலை நிலையமாகப் போற்றப்பட்டு வருகிறது. அதன்றலை, ஆன்றவிந் தடங்கிய சான்றோர் பலரும், அவ்வப்போதும் வந்து பயன்கொள்கின்றனர்! பயன்கொள்ளும்படி தகுதிவாய்ந்த நூல்கள் மிகுந்து, புலவர் படங்களுடன் அவ்வளவு சிறப்பாய் நூல்நிலையம் திகழ்கிறது! நடத்துவோர் நோக்கமும் திறமும் அத்தகையன!

அருட் கலை:

மெய்யுணர்வினர், அம் மெய்யுணர்வைத் தம் மனத்தால் வாக்கால் எழுத்தால் வளர்த்துப் பிறரையும் முன்னேற்ற முடியும்; மனவாக்குக் காயங்களில மெய்ப்பொருளின் ஆற்றல் கலந்து வெளிப் படும்போதுதான், அது 'கலை' என்று பெயர் பெறுகிறது.

மனம் முதலிய அகக்கருவிகள் மூலம், அங்கங்கும் மெய் கண்டு, மெய்யைத் தேனிக்கும்போது அதனை 'யோகக் கலை' என்ப; வாக்கால் வெளிப்படும்போது 'மொழிக் கலை' ஆகின்றது; செயலில் வரும்போது 'தொழிற் கலை' யாய்ச் சிறக்கின்றது! மூன்றிலும் கலைஞர் அடிகளார்.

மெய்ப்பொருட் சிறப்பு மிக்கவர் என்பது, அவர் வழிபாட்டி னாலும், சிவயோகப் பயிற்சியினாலும், மாணவர்க்கு அருளுரை பகர்ந்து வழிபாடுகள் செய்வித்த ஈடுபாட்டினாலும், மெய்யுரைத்து மெய்யிலேயே ஒழுகிய மெய் வாழ்க்கையினாலுந் தெளியலாம்.

கலைச் சிறப்பில் மேம்பட்டவரென்பது, எந் நேரமும் நூல்களைக் கற்றுணர்ந்து, மாணாக்கர்க்கும் அறிவுறுத்தி, நாடெங்கும் ஆயிரக் கணக்கில் விரிவுரைகள் செய்து, கலை நூல்கள் பலப்பல இயற்றிய தோடு, எல்லாவற்றிலும் ஆற்றல் புலப்படுத்தி வாழ்ந்ததனால் உணர்ந்துகொள்ளலாம்.

பொருட்சிறப்பிலும் அதற்குரிய தொழிற் சிறப்பிலும் சிறந்தவ ரென்பது, அடிகளாரே அச்சுக்கலை தேர்ந்து, வெளியீட்டுத் தொழில், விற்பனைத்தொழில்கள், செய்துவந்தமையால் அறியலாம்.

எடுத்துக் காட்டுகள்:

சட்ட வல்லுநரான யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை நாகலிங்கம் அவர்கட்கு 16—5—1931 இல் அகமுகப் பயிற்சி பற்றி அடிகள் ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்; அக் கடிதத்தில்,

"அறிவு ஒரு மேற்பொருளை நாடி நிற்குமாறு பழகுதலே எல்லாவற்றிலும் சிறந்ததாகையால், அப் பயிற்சியை நாடோறும் கால்மணி நேரமாவது காலை மாலையிற் செய்து வருதல் நன்று; கடவுளின் மேற்பட்ட பொருள் இல்லையாகையால் அதனையே நாடல் வேண்டும்.

"கடவுள் நம்பொருட்டு ஒளியுடைப் பொருளிலேதான் விளங்கித் தோன்றுகிறார்; நமதுடம்பின் அகத்தும் புறத்தும் ஒளியில் விளங்குகிறார். ஆகையால் நமதகக் கண்ணாலும் புறக் கண்ணாலும் ஒளி வடிவில் இறைவனைக் கண்டு உருகி வழிபடுக. நமதுடம்பின் அகத்தே முக்கோண வடிவமாயுள்ள மூலத்திலிருந்து தலையுச்சி வரையில் நுண்ணிய ஒளி வடிவு ஒன்றிருக்கிறது. இதனை நன்றாக நினைவிற் பதித்துக்கொள்ளும் பொருட்டுப் புறத்தேயும் அவ் வொளி வடிவினை அமைத்தல் வேண்டும், அதனைப் பின் வருமாறு செய்க:

"முக்கோண வடிவமான ஓர் இருப்புச் சட்டத்தின் மேல் வட்ட வடிவமான ஓர் இருப்புச் சட்டியை வைத்து, அதில் தீ வளர்த்து, அதன் எதிரே அசைவின்றி யிருக்க; கீழே ஒரு பலகையிட்டு அதன்மேல் இருந்து, வலக்காலை இடத் தொடைமேல் ஏற்றி நிமிர்ந்திருத்தல் வேண்டும்; கைகளிரண்டும் முழங்காலின்மேல் வைத்துக் கொள்க. சட்டியில் எரியும் ஒளி வடிவினை நன்றாய்ப் பார்த்து வணங்கி நினைவிலேற்றியபின், கண்ணை மூடிக்கொண்டு மூலத்தின்கண் உள்ள முக்கோணத்தினையும் அதிலிருந்து எழுந்தெரியும் குண்டலி ஒளியினையும் நினைத்து வழிபடுக. அதன்பின் அங்கிருந்து ஏறி, நெஞ்சத் தாமரையுள் அசையும் ஒளி வடிவாகிய அம்பலக் கூத்தனை வழிபடுக. அதன்பின் அங்கிருந்தேறித் தலையில் புருவத் திடைவெளியில் அவ் வொளியின் உச்சியிலே சிவந்த நிறமுடைய அப்பனும் வெண்ணீல நிறமுடைய அம்மையும் ஒருங்கு பிணைந்திருக்கும் வடிவினைக் கருத்தூன்றி வழிபட்டு, முடிவில் திருநீறு அணிந்தெழுக.

"இவ் வழிபாட்டோடு சேர்த்துச் செயற்பாலதாகிய 'பிராணுயாம'மும் வேறு சில முதன்மையான பயிற்சிகளும் நேரே தெரிவிக்க வேண்டும்.

"மந்திரங்களாகச் சொல்லற்பாலன திருவாசகம் போற்றித் திருவகவலிலுள்ள சொற்ருெடர்களேயாகும். தேவார திருவாசகங்களில் தங்கட்கு விருப்பமான செய்யுட்களை உரு வேற்றலாம்.

"அம்மையப்பர், முருகர், பிள்ளையார், நடராசர் முதலான திருவுருவங்களில் எதன்கண் உங்கட்கு அன்பு மீதூர்கின்றதோ அதனையே வழிபடலாம். எதை நினைத்தாலும் ஒளி வடிவாக நினைத்தல் வேண்டும்.

"கல்லினும் செம்பினும் செய்த வடிவங்களும் ஒளி வடிவின் குறிகளேயாம். பளிங்கிற் செய்த சிவலிங்கமேனும், பொன்னிற் செய்த மற்ற உருக்களேனும், இவை இல்லையாயின் தாமிரம் முதலியவற்றிற் செய்தனவேனும், விளக்கொளி முன் வைத்து வழிபடுதற்காம்."

"படுக்கப் போகும்போது உங்கள் உடம்பின் உள்ளும் புறம்பும் மின்னல் ஒளியால் நிறைக்கப்பட்டிருப்பதாகப் பாவித்து, 'The Light of Bliss pours into me perfect health Om' என்னும் மந்திரம் செபித்தவாறு தூங்கி, எழும்போதும் அங்ஙனமே செய்து எழுங்கள்"

(மறைமலையடிகள், பக். 189)

என்று வரும் பகுதிகள் அடிகளின் அகப்புற அருட் பயிற்சிகளையும் திளைப்புகளையும் காட்டும்.

கவின்கலை :

நுண்ணிய கவின் கலைக்கும் ஓர் எடுத்துக் காட்டு; இலக்கியம் ஒரு கவின் கலை.

"இரஸ்கின் என்னும் ஆங்கில மொழி உரைவல்ல ஆசிரியர், 'காட்டு' என்ற புலவரைப்பற்றிச் சொல்ல வந்தவிடத்து, 'அவர் தமதுணர்வின் வழியே உலக இயற்கையினை நிறுத்திக் கொள்ளாமல், அவ் வுலக யியற்கையின் வழியே

தமதுணர்வினை நிறுத்தி நின்றார்' என்று புகழ்ந்தெடுத்துக் கூறினார்; (அதனாற் கலை பிறக்கின்றது.)

"அதுவே நல்லிசைப் புலவர்க்கு அடையாளம்"

"பழந்தமிழ்ப் புலவர்களெல்லாரும் இந் நுணுக்கம் இனிதறிந்து விளங்கினார்கள்; பழைய தமிழ்ப் பாட்டுக்களே சான்று:

'முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம் கழாஅ துடீஇக்
குவளை யுண்கண் குய்ப்புகை கமழத்
தான்துழந் தட்ட தீம்புளிப் பாகர்
இனிதெனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே'

"வற்றக் காய்ச்சின கட்டித் தயிரைப் பிசைந்த, காந்தள் மலர் முகிழ்போற் சிவந்த மெல்லிய விரல்களால், நன்கு கழுவி வெண்மையான உயர்ந்த ஆடை, சமையல் செய்யும் விரைவினால் இடுப்பினின்றும் அவிழ்ந்து கழல, அதனைக் கை கழுவாமலே உடுத்துக்கொண்டு, குவளைப் பூப் போன்ற மை தீட்டிய தன் கண்களிலே தாளிப்புச் செய்யும் புகை பட்டு மணக்கவும், அதனையும் பாராது தான் துடுப்பினால் துழாவி மிக்க அன்போடு சமைத்த சுவை மிகுந்த புளிப் பாகினைத் தன் கணவன் மிகவும் இனிதா யிருக்கின்றதென்று சொல்லிக் கொண்டே உண்ணுதலைப் பார்த்து, ஒளி மிகுந்த நெற்றியினையுடைய என் மகளின் முகம் உள்ளுக்குள்ளே நுட்பமாய் மகிழ்ச்சியடைந்தது" என்பது இப் பாட்டின் பொருள்.

"காதற் கணவனும் மனைவியும் கெழுமியிருந்து இல்லறம் நிகழ்த்தும் ஒழுக்கம் 'முல்லை' எனப்படும். முல்லை நிலத்திற்கு ஏற்ப 'முளி தயிர் பிசைந்த' என்றார். தயிர் பால் முதலியன ஆனிரை மிக்க முல்லை நிலத்திற்கே உரிய.

"தன் கணவன் மேலுள்ள காதன் மிகுதியினால், ஏவலரும் பிறரும் சமையல் செய்வதற்கு ஒருப்படாது, தானே தன் மெல்லிய சிவந்த விரல்களால் தயிரைப் பிசைதலும்,

"கணவன் பசித்திருப்பானே என்னும் நினைவால் விரைந்து சமையல் செய்யும்போது இடுப்பிற் கட்டிய உயர்ந்த

ஆடை கழலவும், பிசைந்த கையினைக் கழுவிவிட்டு உடுப்பதற்குக் காலம் நீண்டு அப் புளிப் பாகின் பதங் கெடுமென உணர்ந்து, அக் கையுடனே அவ் வுயர்ந்த ஆடையைக் கட்டிக் கொள்ளுதலும்,

"அங்ஙனம் பிசைந்து திருத்திய புளிப்பாகினைத் தாளிக்கும்போது, மேல் எழும் புகை, தன் குவளைப் பூ அன்ன கண்ணிற் படவும், அப்புறந் திரும்பினால் அது பதங்கெடுமே என்று, முகந்திருப்பாமல் அதனை விரைந்து துழாவலும்,

"அங்ஙனமெல்லாம் தன் வருத்தத்தினையும் பாராது சமைத்த சுவை மிக்க அப் புளிப் பாகினைக் கணவன் மகிழ்ந் துண்ணல் கண்டு, தன் மகிழ்ச்சி வெளியே தெரியாமல், அவள் முகம் மலர்ந்து காட்டுதலும்,

"இயற்கையே தனக்குள்ள நாணத்தால் அவள் முகம் சிறிது கவிழ்ந்து நிற்க, அவளது ஒளி மிக்க நெற்றியே அம் மகிழ்ச்சிக் குறிப்புப் புலனாக முன் விளங்கித் தோன்றுதலும்,

"சில சொல்லில் மிக விளங்கக் கூறிய நுண்மை, பெரிதும் வியக்கற்பாலதொன்றும். இப் பாட்டின்கண் ஓவியம் எழுதிக் காட்டினாற்போல் எவ்வளவு உண்மையாகவும் இனிதாகவும் சொல்லப்பட்டிருக்கின்றது!

"இப் பொருளருமையோடு இச் செய்யுளில் உள்ள சொற்கள் எல்லாம், நீர் மடையில் வெளிநீர் மொழுமொழு வென்று ஓடுவதுபோல், ஓசையின்பம் உடையவாய் ஒழுகுதலும்,

"ஒரு சொல்லாயினும் பொருளின்றி வேண்டா கூறலாகாமல், முன்னும் பின்னுமுள்ள பொருட்டொடர்புக்கு ஏற்ப இடையே முழுமுழுச் சொற்களாய் அமைந்து நிற்றலும் மிகவும் பாராட்டற்பாலனவாகும்" என்பது.

(முல்லைப் பாட்டு ஆராய்ச்சி யுரை, பக் 9-12)

மேற்காட்டிய குறுந்தொகைப் பாட்டின் உரையும் விளக்கமும் அடிகளின் கல்விப் புலமையோடு இலக்கியக் கலையாற்றலையும் இனிது புலப்படுத்தும்.

அடிகளார்க்கு அமைந்த செய்யுளியற்றுங் கல்வியுங் கலையும் இணையற்றவை.

> "உருக்கிளர் இளந்தளிர் உலரத் தீய்த்திடு
> பொருக்கெனுந் தீவளி பொருந்த வாடிய
> மருக்கமழ் மல்லிகை போன்ற மாதர்பால்
> இரக்கமும் இன்பமும் ஒருங்கெ ழுந்தவே"
>
> "விழைந்தறவு வேண்டி விரி மாவிணரிற் பருகிச்
> செழுமுளரி இடைவறிது சேருமிள வண்டே!
> செழுமுளரி யிடையிருந்து திகழ்மாவை நீயோர்
> பொழுதுமறந் துறைகுவது பொருந்துமோ உரையாய்?"
>
> (சாகுந்தல நாடக மொழிபெயர்ப்பு, பக். 48, 81)

சமயக் கலை :

'கலை' என்பது மூலப் பகுதிக்கு மேற்பட்ட 'புருடன்' முதலிய நுண்ணிய பன்னிரண்டு அகக் கருவிகளின் இயல்; 'கல்வி' என்பது, மனம் புத்தி அகங்காரம் சித்தம் என்னும் நால்வகைக் கருவிகளின் இயலே! 'கல்வி' மனப் பழக்கம் என்னும் ஔவைப் பெருமாட்டியின் கருத்து இங்கே நினைவு கூர்தற்குரியது! கல்வியால் கலை மிகும். அறிவுக்குரியது கல்வி; உணர்வுக்குரியது கலை; எல்லாம் கருவிகளில் சேவை காரணமாகவும் அல்லாத வகையிலும் ஊடுருவுவன. கருவிகளில் ஊடுருவாத நிலையில், கருவிகளின் தொடர்பின்றி உயிருணர்வு மட்டும் திருவருளில் ஊடாடும் மிகத் தூய நிலை, 'சுத்தாவத்தைக்கும்' மேற்பட்டது!

மனங் கொண்டு பொறியறிவாற் கையாளப்படும் பொருள் நிலையிலிருந்து உயிருணர்வால் இணங்கி யுணரும் அருள் நிலைக்கு, ஏற்றும் ஏணி போன்ற இக் கலைஞானம், இடையே கருவிகளில் உயிருணர்வு ஊடாடும் முன் நிலையாகும்; 'அசுத்த மாயை'யாலான கருவிகளிலும் இது புகுதலால், 'கலை' யென்பது தூய்மையும் அழுக்கும் கலந்த நிலையில் இடைப்பட்டதாய் அருட் கலையாகவும் பொருட் கலையாகவும் இருக்கிறது!

அறிவு விளக்கம் மிகுதியாகப் பெருகித் தோன்றுவது. மனமும் பொறி புலன்களும் வான் வளி முதலிய உலகக் கூறுகளு

மாகிய புற நிலைகளில்; 'ஆன்ம தத்துவம்' என்னும் பகுதி இது! 'வித்தைத் தத்துவம்' என்பது சிறப்பாகக் கலைக்குரியது; 'சுத்த தத்துவங்கள்' அருட் கலைக்குரியன; 'வித்தைத் தத்துவங்'கள் ஏழும், 'சுத்த தத்துவங்கள்' ஐந்தும், பொதுவாகக் கலை நிலைகளே யாயினும், முன்னவை தூய்மை குறைந்தும் பின்னவை தூய்மை மிகுந்தும் நிகழ்வன; இவையிரண்டும் உணர்வு மிகுதற்குரியன; முறையே 'கலையும்' கவின் கலையு'மாய் வாழ்க்கையிற் சுடர் விடும். இங்ஙனம் 'கல்வி' 'கலை' 'கவின் கலை' என்பன Science, Art, Fine Art என்று பிற மொழியாளராற் கூறப்படுகின்றன.

மேல் வந்த குறுந்தொகைப் பாடலின் உரைத் திறமும் விளக்கச் சிறப்பும் செயயுட் செப்பமும் **கல்வி நலன்கள்;** இவற்றின் உலகியற்கை விளக்கங்களும் குணம் எனும் உணர்வுச் சிறப்பும், மொழியில் மிளிரும் நளினமும் **கலைத் திறத்தைச்** சேர்ந்தவை; இவற்றில் வந்த உண்மைக் கூறுகளாகிய தெய்வ வல்லமைகள் **'கலைக் கவின்'கள்!**

சில இலக்கியங்களில் இவ்வொளி மிகப் பெருகி யொழுகும்; சில நூல்கள் சில நலங்களில் மிகுந்து தோன்றும்.

ஆசிரியரடிகளுக்குப் பத்துப் பாட்டுகளின் ஏனை நூல்களைப் போல் 'முல்லைப் பாட்டு' சில வகைகளில் நிறைவு தரவில்லை.

> "தித்திப்பாக எழுதப்பட்ட ஓரடியையாவது இம் முல்லைப் பாட்டிற் காண்டலரிது; சொல்லின் கொழுமை இதன்கண் மிக முதிர்ந்து தோன்றுமையின் இது, தன்னைக் கற்பார்க்கு மிக்க சொல்லின்பம் பயவாதென்று கருதுகின்றோம்; (முல்லைப் பாட்டாசிரியர்), சுவைப் படாத ஒரோவொன்றனையும் சிறிது அகல விரித்துக் கூறுகின்றார்"
>
> (முல்லைப் பாட்டாராய்ச்சி யுரை, பக். 57, 54)

என்பன அடிகளார் கருத்து; அடிகளார்க் கமைந்திருந்த இலக்கியச் சுவையுணர்வுக்கு முல்லைப்பாட்டின் சில நிலைகள் அவ்வாறுள்ளன!

சேக்கிழாரின் செய்யுள் நலங்களில் திளைத்து மகிழ்ந்த திருவாவடுதுறை மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் இலக்கிய உணர்வு "பத்திச்

சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவி" என்று, அப் பேரிலக்கிய மேன்மையை எடுத்துக் காட்டியது!

இலக்கியங்களில் இங்ஙனம் கல்விச் சிறப்பும்; கலைச் சிறப்பும்; கவின் கலைச் சிறப்பும் பலவாறாய், ஏறியும் இறங்கியும் இருப்பது இயல்பே!

இவை முத்தமிழாலும் வெளிப்படும்; இயற்றமிழ்க் கலைக் கவின் என்பது இலக்கிய மாண்பு; இசைத்தமிழ் கவின், செய்யுளும் உரையும், ஓசை இடையற்றுப் போகாமல் இழுமென் றொழுகுதலும் வண்ணம் வனப்புகளும், வெண்பா முதலிய நால்வகைப் பாக்களின் செய்யுளோசைகளும், இசைகளுக்கேற்ற இசைப் பாடல் அமைவுகளுமாகும்; நாடகத் தமிழ்க் கவின், சிறந்த உரையாடல்கள், மெய்ப்பாட்டு விளக்கங்கள், வரலாற்றுக் கதை நிகழ்ச்சிகள் முதலியன!

'மனம்' முதல் 'நாதம்' இறுதியாகப் பதினாறு அகக் கருவிகளும் அடிகளாரிடத்தில் நன்கு மலர்ந்து மணமகமழ்ந்து இயங்கி வந்தன. அதனால் கல்வியும் கலைகளும் அவர்களிடத்திற் களி நடம் புரிந்தன; மேல் வந்த எடுத்துக் காட்டுகளில், ஆற்றல் விளங்கிய இடமெல்லாம், கலைத் திறம் ஒளிவிடும் நேர்வுகளாகும்.

குறுந்தொகைச் செய்யுளைக் கூறிவிட்டாற் போதாது; அவற்றிற்கு உரையும் தெரிவித்தாற்றான், கற்பவர்க்குத் தெளிவு உண்டாகும்: உரிய விளக்கங்களும் புலப்படுத்தினாற்றான் படிப்பவர்க்குப் பாட்டின் நலம் தக்காங்கு வெளிப்படும் என்றெல்லாம், கற்பவர் எண்ணங்களுக்கும் ஆர்வம் விளக்கம் முதலியவற்றிற்கும் பயன் படும்படி முன்னுணர்ந்து செய்வகை ஆற்றலுடன், உணர்வு இசைவு கொள்ள எழுதியது கலைச் சிறப்புகளாகும்.

அடிகளாரிடத்தில் விளங்கிய இத்தகைய கலைச் சிறப்புக்கள் பலவகை; பிறர்க்கு இயலாதனவெல்லாம் இவ் வகையில் அடிகளார்க்கு எளிதின் இயன்றன; பிறர்க்கு இடரா யிருந்தவை யெல்லாம் அடிகளால் இனிமையாய் நீந்தப்பட்டன. முயன்றும், முயற்சியில் இன்னலுறாமலும், நீந்துதல் நிகழ்ந்தது.

கலையுணர்ச்சி இல்லையானால், இவ்வாறு நீந்திக் கடத்தல் அரிது; கல்வி நலம் மிகப் பெற்றார்க்கும் இங்ஙனம் நீந்திக் கடத்தல்

இயலாது ; பிறர்க்கெனப் பொதுவில் முயலுவோர்க்கு மட்டுமே இத் திறம் அமைகின்றது ; பொது நலந்தான் முழுத் தூய்மை எனப் படும். ஆயினும், தனக்காக முயல்வதும் பொதுவில் உழைப் பவர்க்குக் கடமையே என்றால், அது தூய்மையின் தொடக்கமாகிய தன்னல மயக்கமாகும் ; அன்பின் முன் நிலை!

இல்லறக் கடமைகளால் அதனை நன்கு பயின்று, தன்னலங் கழன்ற துறவு கூடி, ஏழைகட்கும் புறத் துறவினர்க்கும் நாளும் உதவியாயிருந்து தூய அன்பினைப் பெறவேண்டும்; இது, 'நன் முயற்சி' எனப்படும்.

இங்ஙனம் 'முயல்வாரெல்லாம்' தலைவராய், அடியார்கள், திருவருள் வண்ணமாகித் தம்மைப் பற்றிய தந்நல உணர்வும் அற்றுச் சிவத்திற் படிவர்.

இத்தகைய தூய பேரன்பே தெய்வத்திரு மூலரால் "அன்பே சிவமாவது" எனப்பட்டது. அருள் வீழ்ச்சியினால் உயிரின் அறிவு நிலை இவ்வாறெல்லாம் தந்நலத் தொடக்க அன்பாகவும், இல்லறப் பயிற்சி கொண்டு தந்நலங் கழன்ற தூய நல்லன்பாகவும், உள்ளத் துறவு கொண்டு அவாவும் அற்ற அருள் வண்ணமாகவும், முடிவிற் சிவ வண்ணமாகவும் உயர் தலை, நுகர்வு மூலம் தெளிகின்றவர் யாரோ அவரே வீடுடையவராதலின், அவர் 'அன்பே சிவமாய்' அமர்ந்திருத்தல் ஒருதலை! உயிருணர்வு நிறைவான அன்பாகி அங்ஙனம் அமர்ந்திருக்கின்றது! உயிரைப் பற்றியும் உலகத் தைப் பற்றியும் முன் பற்றிய பற்றின் நினைவும் அறுதல் அவா அறுதலாயிற்று.

கலையாற்றல், தூய்மையை நோக்கிச் செல்லுகின்றது ; அதன் முதற் பகுதி தூய்மையும் தூய்மையல்லாமையுங் கலந்த மயக்க முடையது ; ஆதலின் அது கலங்கல் நிலை ; முயற்சி மிக்கது! தூய் மையாகிய அருட்கலையிற் சென்றார்க்கு மட்டுமே, முன் முயற்சியும், எளிமை இனிமைகளுடன் சிறக்கும் ; அடிகளார் அத்தகைய 'சுத்த தத்துவச்' செல்வர் மட்டுமல்லர் ; அதனையுங் கடந்த அருள் வீரர்! 'வித்தைத் தத்துவங்'களையும் 'ஆன்ம தத்துவங்'களையும் பொதுச் சேவையில் இயக்கும் புனிதச் சேவை, அவர்கள் வாழ்க்கையில் நெடுக நடந்து வந்தது!

அடிகளார் எழுத்துக்கள் பேச்சுக்கள் வாழ்க்கை முறைகளி லெல்லாம் தூய்மைக் கலை மிகுந்து தோன்றும். மக்களை உயர்ந்த தெளிவில் விளங்க வைப்பதற்கு அடிகள் பல வகையாகப் புனிதப் பணி இயற்றியிருக்கிறார். புலவரென்பார் பலர்க்கு இடராயிருக்கும் நிலைகளில், அடிகள் நழுவமாட்டார்.

"மடுத்தவா யெல்லாம் பகடன்னான்" (திருக்குறள். 624)

என்னும் மறை மொழிக்கேற்ப நாளும் வென்று விளங்கினர்!

கற்பவர்க்கு உண்டாகக் கூடிய ஐயங்களை முன்னறிந்து எழுத் துக்களில் பேச்சுக்களில் இட்டு, மேல் மேல் அடுக்கிக் கொண்டு, அடிகளார், தாமே அவற்றிற்கு விடைகளும் கூறுவார்; கூறுவது எதுவும் நாகரிக அறிவுக்கும் ஒப்புதலுக்கும் ஏற்றதாயிருக்கும். விளக்க வேண்டியவற்றை விடாமல் விளக்குவார்; தள்ளிச் செல்ல மாட்டார்; சொற்பொருள் தோற்றித் தெளிவுபடுத்துவார்; மறுக்க வேண்டியவற்றைத் துணிந்து மறுப்பார்; அஞ்சமாட்டார். எழுத்து, சொல், பொருள் என்னும் தொல்காப்பிய இலக்கண முறைகளையும், 'செய்யுள்' 'மரபு', 'அணி' வகைகளையும் நூற் சிறப்புக்கு வகுக்கப்பட் டிருக்கும் எல்லா உத்திக் கூறுகளையும் அளவை நெறிகளையும், கை யாள்வார். சொற் சுவை பொருட் சுவைகளிலும் உண்மைகளிலும் கருத்தா யிருப்பார். இடையில் வேறொன்றை எவ்வளவு பெருக்கி விரித்தாலும், எடுத்த கருத்தை முடிவில் நினைவாகக் கொண்டு கூட்டுவார். இறுதியில் எல்லாக் கருத்துக்களையும் முறையாகவும் விடாமலும் சுருக்கித் தொகுத்துரைப்பார். ஆராய்ச்சியாளர்க்கும், ஐயுறுவோர்க்கும், மாறுயினர்க்கும், அன்பர்க்கும், மாணக்கர்க்கும் பல வேறு வகையில் அறிவும் தெளிவும் இசைவும் புதுமையும் அருமையுமாகிய இனிய சிந்தனை விருந்துகள் வைப்பார். சிக்கல் தீர்ப்பார். இருவகை வழக்குகளையும் அலசுவார்; எப்போதும், சான்றுகள் காட்டாமல் வழுவமாட்டார்; அவற்றிலும் மிகப் பழைய சான்றுகள், மிக வலிய சான்றுகளே எடுத்துத் தொடுப்பார்; பழைய அயல் நூற் குறிப்புகளும், ஆங்கிலச் சிறப்புகளும், அவற் றின் உதவியாற் பிற மொழிப் பெருமைகளும் ஒப்பிட்டு நோக்கி உலகளாவிய உரிய மேன்மைகள் புலப்படுப்பார்; குறிப்புகள் இருக்கு மிடங்களைச் சோம்பாமலும் குழப்பாமலும் இழக்காமலும் குறித்துச் சேர்ப்பார்; சுருங்கச் சொன்னால், பலதலையான கல்வி கலை

யாற்றல்கள் அடிகளாரிடத்தில் மலர்ந்து மலிந்து கிடந்தன எனலாம்.

சிறப்புக் கலை :

முதலில் எண்ணுதற்குரியது, சமயம்; 'அருட்கலை'யாதல் கருதி அதுவும் 'கலை' எனக் கருப்பட்டதே தவிர, மற்று, அது, கருவிகள் மூலம் விளங்கும் கலைகளெல்லாம் ஒருங்கு குவிந்து, கருவிகள் கடந்த உயிரினியல்பாய் உயர்ந்து, அன்புணர்வில் அமர்ந்து, அருள் வழிப்பட்டு, இறை நிலையை எய்துவிக்கும் பெருமை சிறந்தது எனல் வேண்டும்; மக்கள் அடைய வேண்டிய பெருமையெல்லாம் இதனில் அடங்குதலாலும், இதற்குமேல் நுணுக்கம் (சிறுகி நிற்றல்; சிற்றம்பலமாதல்) ஏதுமில்லாமையா லும் வீடுபேற்றைச் 'சிறப்பு' என்பர் சான்றோர்; வீடுபேற்றுக்கு ஏதுவாகிய 'ஞான'மும் 'தவ'முங்கூட இப் பெயராற் கூறப்படும்.

"சிறப்பு ஈனும் செல்வமும் ஈனும்,"
"சிறப்பு என்னும் செம்பொருள்" —(திருக்குறள், 31, 358)
"சிறந்தது பயிற்றல்" —(தொல்காப்பியம், 1138)

சன்மார்க்கம் :

சமய நெறி, என்பது ஞான வழிபாடு; ஞானத்தால் வீடு என்றாலும், அறத்தால் வீடு என்றாலும், சமயத்தால் வீடு என்றா லும் ஒன்றே! ஞானநெறி, அறநெறி, சமயநெறி எல்லாம், உண்மை நெறி அல்லது சன்மார்க்க நெறி என்னும் ஒரே குறிப்புடையன; மக்களாய்ப் பிறவி எடுத்தார் அனைவருக்கும் அது பொதுவாதலால் 'சமரசம்' எனவும், நிலை பேற்றுண்மையின் விளக்கமேயாதலால் 'சத்தியம்' எனவும், தூய்தாதலால் 'சுத்தம்' எனவும், வள்ளற் பெருமான் அடைமொழிகள் தந்து, சரியான சமய நெறியைச் 'சமரச சத்திய சுத்த சன்மார்க்கம்' என வழங்கினர்.

இத்தொடரில் வரும் சமரசம், சத்தியம், சுத்தம், சத் என் பன, முறையே சரியை ஞானம், கிரியை ஞானம், யோக ஞானம், ஞான ஞானம் என் மூன்னோர் வழங்கிய முறைமைகளுடையன. சரியை தொடங்குவோர், எல்லார்க்கும் பொதுவெனத் திகழ்வர்; சமயத்தின் தொடக்கமே பொதுநிலைதான்! கிரியை நிகழ்த்துவோர்

உண்மையில் ஈடுபடுவர்; யோகம் பயில்வோர் தூய்மையில் நிற்பர்; ஞானம் பெறுவோர் பற்றற்றொழுகுவர்; 'சன்மார்க்கம்' என்பது ஞான மார்க்கம்; பக்குவம் எய்திய உயிர்கள், அதனில், ஞானச் சரியையாகிய 'தாசமார்க்கம்', ஞானக்கிரியையாகிய 'சற்புத்திர மார்க்கம்' ஞான யோகமாகிய 'சக மார்க்கம்' நின்றெய்தியபின், ஞான ஞானமாகிய சன்மார்க்கம் கூடுவர்.

'சன்மார்க்கம்' என்பதும் ஒரு மார்க்கமே! அந் நெறி வழிப் பட்டோர், 'வீடு' என்னுந் துறை புகுவர்; அதுவரையில் அவர்கள் 'துச்சில்' இருந்த உயிர்களே! 'வீடு' என்னும் புக்கிலாகிய பேரின்ப மாளிகை எய்திய பின் மீளவும் உடம்பினுள் துச்சிலுக்கு (ஒதுக்கிய தங்குமிடத்துக்குத்) திரும்பார் – (திருக்குறள், 340).

தவக் கலை:

சமயக் கலை இருவகைப்படும்; ஒன்று தவம்; மற்றொன்று ஞானம்; 'தவம்' என்பது 'யோகம்'; உண்மைப் பொருளில் ஒருமைப் படுதல்! ஞானம் என்பது அதனால் விளங்கும் விளக்கமாகிய தெளிவு! இந்த யோகக் கலையைத்தான், 'வேதாந்தம்' என்று முன் னோர் கூறினர். 'கீதை நூல்' அதனால் பதினெட்டு வகையான யோகங்களாக வகுக்கப்பட்டது! உண்மையில் அழுந்துதலாகிய ஒருமைப்பாட்டை உணர்த்துவது.

'சித்தாந்தம்' என்பது ஞானம்! 'சைவ சமயம்' சித்தாந்தத் துணிபுடையதாதலின், 'சைவ சித்தாந்தம்' என்னும் வழக்கு நாட்டில் ஏற்பட்டது! சைவ சமயம் (ஞானம்) வீடுபேற்றுத் துறை வரையிற் சென்று முடிதலின் 'துறை' எனவும் அது சிறப்பிக்கப் பட்டது.

வேதம், வேத முடிவாகிய உபநிடதமெனப்படும். வேதாந்தம், மகா வாக்கியம் எனப்படும். வேதாந்த சூத்திரம், சங்கர இராமாநுச மாத்துவபாடியங்கள், கீதை முதலியனவெல்லாம வீடுபேறு நோக்கும் நெறிகள்; இவை பலவும் வேத நெறி அல்லது 'வேதாந்தம்' எனப் படும். சேக்கிழார் பெருமான் வேத நிலைகளை 'நெறி' எனவும், அது தழைப்பதற்கும் ஓங்குதற்கும் உரியது எனவும், சைவத்தின் நிலை 'துறை' எனவும், அது சுடர் விட்டு விளங்குதல்மாத்திரையே உரியது எனவும் தோன்ற, "வேத நெறி தழைத்தோங்க, மிகு

சைவத் துறை விளங்க" (சம்பந். 1.) என்று திருவாய்மலர்ந்தமை காண்க.

ஞானக் கலை:

தவம் என்னும் யோகத்தில் கருவிகளின் மூலம் விளங்கும் ஆற்றலெல்லாம் குவிந்து ஒருமைப்படுதலின், அந் நிலைமையைக் 'கலை ஞானம்' எனவும் அருட் கலையாகிய அக் கலையை 'யோகக் கலை' எனவும் கூறுவதுண்டு. 'யோகம்' என்பது ஒரு கலையே;

"உவமையிலாக் கலை ஞானம், உணர்வரிய மெய்ஞ்ஞானம்"

என்பது திருத்தொண்டர் புராணம் (சம்பந். 70);

"மேவரு ஞானம் இரண்டு; அவற்றொன்று,
விமலனார் பாத தாமரையே
ஓவரும் அன்பின் உணர் திரு அளிக்கும்,
ஒப்பிலா உயர் கலைஞானம்"

(தணிகைப் புராணம், அகத். 353);

மற்றொன்று, மெய்ஞ்ஞானம்; உயிருணர்வாகிய தூய அன்பு, சிவ வண்ணமான நிலை; எட்டாத மேல் நிலை; அதனால் அது, 'உணர் வரிய மெய்ஞ்ஞானம்' எனச் சிறப்பிக்கப்பட்டது; அன்பின் உணருந் திரு, 'கலைஞானம்' என்க.

'சரியை கிரியை யோகம், ஆகிய சீலம் நோன்பு செறிவு மூன்றும் தவமெனப்படுமாகலின் 'தவம்' என்பது, இம் மூன்றில் உயர்ந்ததான 'யோகம்' என்னும் பெயரினால் கூறப்படுவதா யிற்று. 'தவ யோகம்' என்னும் வழக்கும் நினைவுகூரலாம். 'தவத்தில் யோகம்' எனவும் 'தவமாகிய யோகம்' எனவும் இரு வகையாகக் கூறப்படுங் கருத்தும் இதற்குப் பொருந்தும். இங்ஙனம் சமயமும் ஒரு வகைக் கலையாயிற்று!

அடிகளார் இக் கலையில் வல்லவர்களென்பது வெளிப்படை' 'சிவஞான போத ஆராய்ச்சி (1958)' 'சைவ சித்தாந்த ஞானபோதம், (1905) 'கடவுள் நிலைக்கு மாறான கொள்கைகள் சைவம் ஆகா' (1929) 'பழந்தமிழ்க் கொள்கையே சைவ சமயம்' (1930) 'திருவாசக விரி வுரை' (1922), முதலிய சமய நூல்களும், சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம், நாகை, திருச்சி, தூத்துக்குடிச் சைவ சித்தாந்த சபைகள் முதலிய எத்தனையோ பேரவைகளில் நிகழ்த்திய எண்

ணிறந்த சமய விரிவுரைகளும்; மாநிலச் சைவ நிலையமான 'சைவ சித்தாந்த மகா சமாசத்'தை நிறுவி அதன் செயலாளராயிருந்து நடத்திய தொடர்பும்; திருப்பாதிரிப்புலியூர் 'ஞானியார் மடாலயத்' தில் நடந்த நாடுமுழுதுந் திரண்ட பெரிய 'சைவர் மாநாட்டுக்'குத் தலைமை தாங்கிய சிறப்பும் பிறவும் சான்றுகளாம். 'வைதிக சைவ சித்தாந்த சண்ட மாருதம்' எனப் பெயரும பீடும் ஓங்கிய சிவஞான வள்ளல் சோமசுந்தர அடியவர்பால் மாணுக்கராய் அமர்ந்து சித்தாந்தம் தெளிந்தும், திருக்குடந்தைக் கருகில் திருக்கொட்டை யூர் இராசாநந்த யோகியார்பால் அகமுகப் பயிற்சி பெற்று 'சிவராச யோகம்' உணர்ந்தும், தமது முற்பிறவித் தொடர்பால் அருள் மின்னல் ஒளி சூழ்ச் சிவத் திளைப்பில் திகழ்ந்தும் திருவிளையாடல் புரிந்தவர் அடிகளார்! இவர்கள் அகமுகப் பயிற்சியின் ஒருவகை முன்னும் எடுத்துக்காட்டப்பட்டது; 'தமிழர் மதம்' (1941) என்னும் அடிகளார் நூலில் 'தவப் பயிற்சி' என்னும் தலைப்பில் வரும் பகுதி யிலும் காண்க.

கல்வியும் கலையும் :

கலை என்பதைப் பெரும்பாலும் 'பொருட் கல்வி' என்று கருதி, அறிவியல் துறைகளெல்லாம் எடுத்துக் காட்டப்படுவதுண்டு; ஆனால், அவையெல்லாம் 'கல்வி' யேயன்றிக் கலைகளல்ல. இந் நுட்பம் இனிது விளக்கும் பொருட்டே, கல்வி, கல்லாமை, கேள்வி, அறிவுடைமை எல்லாம் பொருட்பாலில் வைத்து அறிவுரை செய் தார் திருவள்ளுவர்; இன்பப்பால் மட்டுமே கலைப்பாலாகும். அன் புணர்வு, கருவிகள் மூலம் பாய்ந்து அவற்றை இயக்கும் அகவுணர் வாகிய அகப்பொருட் கலையாதலின், அதனை மொழியால் மட்டும் வெளிப்படும் கல்வியைப்போல் நினைத்து விடலாகாது; கலை, மொழி யினால் வெளிப்படுவதோடு 'மெய்ப்பாடு' முதலிய மிக நுண்ணிய ஆற்றலைச் சார்ந்ததாய், மொழிக்கும் நினைவுக்கும் அப்பாற் பட்ட தாய், உயர்ந்து நுணுகி, வித்தைக் கருவிகளாலும் 'சுத்தக்' கருவி களாலுமட்டுமே வெளிப்படுவதாய், மன வாக்குகளுக்கு எட்டாத கடவுளை நாடி, அங்ஙனமே மன வாக்குகளுக்கு அப்பாற்பட்ட உயிருணர்வாய், உயிரின் நிலைமைக் கருவிகளூடு உயர்த்தி முன் னேற்றுவதாய், இக் கலைநிலைகள் திகழ்கின்றன.

"(முதல்வனை) அனுபவித்தல், அவன்போற் காணவும் கருதவும் உரைக்கவும் படாத உணர்வு நிலை ஒன்றற்குமாத்திரமே வாய்ப்பதாம்." (பட்டினப். பக். 6)

என்பது அடிகளார் பொன்மொழி!

இவ்வுணர்வு நிலையின் ஒரு புறமே, (கீழ்ப் பக்கமே) தூய, தூய வல்லாக் கருவிகள் மூலம் வெளிப்படும் அருட் கலையும் கலையும்; மறு புறமே, திருவருள் மூலம் இறைவனை எய்தும் ஞான நிலை; இவை ஒரு பொற்காசின் இருபக்கங்கள் போல உயிரின் உயர்ந்த இயல்பாகிய அன்பின் இரு பக்கங்கள்! இதில் வரும் 'அருட் கலை' என்பது சேவைத் திறம் என்னும் 'அருளுடைமை'யாகிய சிவகாருணியம்!

இருவகைக் கல்வி :

பொருட் கல்வியும், 'பொதுக் கல்வி' எனவும் 'விஞ்ஞானக் கல்வி' எனவும் இருவகைப்பட்டு, மனம் முதலிய நான்கு அந்தக் கரணங்களால் மட்டும் நிகழ்கின்றன; இந் நான்கில் 'மனம், ஐம் பொறிகள் மூலம் இயங்கித் 'தொழிற் கல்வி'யாய் நடைபெறுகின்றது.

"எண்என்ப, ஏனை எழுத்தென்ப, இவ்விரண்டும்
கண் என்ப வாழும் உயிர்க்கு"

எனத் திருவள்ளுவர் இக் கல்வி நிலைகளை ஒரு கண்ணாகவும், இவற்றை வெளிப்படுத்தும் மொழி நடையை மற்றொரு கண்ணாகவும், வாழும் மக்களுக்குப் பார்வையாக உருவகப்படுத்தி விளக்கினார். கண்ணற்ற உயிர்கள் நடைப் பிணம் போல்வராகலின், நாகரிகமாய் வாழ விரும்புவோர் இக் கல்விப் பார்வை உடையவர்களாய்ச் சிறக்க வேண்டுமென்று திருமறைக் குரவர் தெரிவிக்கிறார். 'எண்' என்பது எண்ணம்; எழுத்தின் மூலம் எளிதாகவும், நேர்க் காட்சியிற் சிந்தனையாகவும் எண்ணும் பொருட் கல்விகள் இங்கே 'எண்' எனப்பட்டன, எழுத்தின் மூலம் முதலில் எளிதிற் கிடைத்தலின் மொழிக் கல்வியின் முதன்மையும் எடுத்துக் காட்டினார் ஆசிரியர்!

அத்தகைய பொருட் கல்விகளிலும் அடிகளார் வல்லுநர்! தாய்மொழியாகிய தமிழோடு பழைய வேறொரு மொழியாகிய சமக்

கிருதமும், புதிய உலக மொழியாகிய ஆங்கிலமும் என்னும் மொழிக் கல்விகளாகிய கண், நற்பார்வையாய் அடிகட்கு அமைந்துவிட்டது; 'பொருட் கல்வி' என்பதற்கு மிகச் சிறப்பாய்ப் போற்றப்படும் அறிவியற் கல்விகளாகிய மற்றொரு கண்ணும் புத்தொளி மிக்குச் சிறப்பின் அமைந்துவிட்டது! பேரொளிப் பார்வைகள் இரண்டாலும் அடிகளார், உலக வாழ்வை இனிதளந்து மக்களை வாழ்வித்தார்கள்!

அடிகளார் அருளிய அரிய நூல்கள், பொருட் கல்விக்குக் கடல்! கலைக் கல்விக்கு மலை! அறக் கல்விக்கு ஞாலம்! வீட்டுக் கல்விக்கு வான்! அவற்றில் பொருட் கல்விக் கடலை எடுத்துக் கொண்டால், அதன் அகலமும் ஆழமும் அரும் பொருள்களும், இன்காற்றும், கருத்தலைகளும், அடங்கி வீசும் அருமையும், குளிர்ந்த இரக்க ஒளியும், நடுநிலை நிறமும், பிறவும் அனைவர்க்கும் வியப்பைத் தரும்; பிறவும் அத்தகையன!

அடிகளார் நூல்களிலெல்லாம் சமய உண்மைகள் கலவாமலிரா; அடுத்தபடி எல்லாவற்றிலும் வரலாறுகள் செறிந்திருக்கும்; தம் ஆசிரியர், 'சோமசுந்தரரின் வரலாறும்' (1957), 'பண்டைத் தமிழரும் ஆரியரும்' (1960), 'மாணிக்கவாசகர் வரலாறுங் காலமும்' (1930) என்னும் அரிய பெரிய வரலாற்று நூல்கள் இதற்குப் பேரளவிற் சான்று!

கல்வியோ கலைகளோ மெய்யுணர்வோ எவையாயினும் வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்குத் தானே! 'மக்கள் நூறுண்டு வாழ்க்கை' (1933), 'மரணத்தின் பின் மனிதர் நிலை' (1917), வாழும் போது அறிந்துகொள்ள வேண்டிய 'தமிழர் மதம்' (1941), முதலிய நூல்கள் வாழ்க்கைத் திளைப்புக்கு உதவும்.

மாந்தர் பருமையிலிருந்து நுட்பம் பெறவே பிறவியெடுக்கின்றனர்; பொறி புலன்களாகிய புறக் கருவிகளிலிருந்து மனம் முதலிய அகக் கருவிகளில் திரும்பினால், நுட்பத் திறங்களெல்லாம் எளிதில் எய்தலாம்; இம் 'மனவியல்' முறைகளையும் நலங்களையும் பயன்களையும் தெரிவிப்பன, 'யோக நித்திரை' (1922), 'மனித வசியம்' (1937), 'தொலைவிலுணர்தல்' (1935), முதலிய நுண்பொருள் நூல்கள்!

இத்தகைய அரிய கல்விகளில் அடிகளார் முதலில் தாமே பழகித் தேர்ந்து, அப் பழக்க உணர்வாலும் தெளிவாலும் பிறரும் பழகுமாறு கருத்துக்களை மறைப்புத் திரைப்பின்றி விளக்கமாக எடுத்துக்காட்டுவார்! அவ்வாறு காட்டும் வகையிலும், பலப்பல பொருட் கல்விகளின் திறங்கள் அங்கங்கும் சிந்திச் செல்லும்!

பொருட் கல்விகள் :

'உயிர் நூற் கல்வி' 'தொழிலியற் கல்வி' 'கணு நூற் கல்வி', 'உடல் நூல்' 'வள நூற்' கல்விகள், 'இயற்கை நூல்' 'பொருள் நூற்' கல்விகள், 'நில நூல்' 'வான் நூற்' கல்விகள், 'மூச்சு நூல்' 'மருத்து நூற்' கல்விகள், 'செடிகொடி நூல்' 'விலங்கு நூற்' கல்விகள், 'உணவு நூல்', 'மரக்கறி நூற்' கல்விகள், 'கரு நூல்' 'மரபு நூற்' கல்விகள், 'மின்னல்' 'மின்னணு' நூற் கல்விகள், 'கோள் நூல்' 'குடிமை நூல்' 'அரசியல்' 'அமைச்சியல்' 'அற நூல்' 'இன்ப நூற்' கல்விகள், 'ஒளி நூல்' 'ஒலி நூற்' கல்விகள், 'நிற நூல்' 'உலோக நூற்' கல்விகள், 'புதை நூல்' 'மழை நூற்' கல்விகள், 'உழவு நூல்' 'வணிக நூற்' கல்விகள், 'கால நூல்' 'இணை நூற்' கல்விகள், 'உறுப்பு நூல்' (Physiognomy) மண்டை நூல் (Phrenology) 'நரம்பு நூற்' (Neurology) கல்விகள், 'குழந்தை நூல்' 'குழந்தை வளர்ப்பு நூற்' கல்விகள், 'உடற் பயிற்சி', 'தத்துவப் பயிற்சி' கல்விகள், 'யோக நூல்' 'ஞான நூற்' கல்விகள், 'சித்தர் நூல்' 'சித்தாந்த வேதாந்த நூற்' கல்விகள், 'பரபக்கம்' 'பல சமய நூற்' கல்விகள், 'மறை நூல்' 'நல நூற்' கல்விகள் பலவும் அடிகளார் நூல்களில் கருக்கொண்டு மக்களுக்குப் பெரும்பயன் விளைத்திருக்கின்றன. இவற்றிற்காக அடிகள் படித்துத் தெளிந்திருந்த உயர்ந்த தமிழ், சமக்கிருத, ஆங்கில நூல்களையெல்லாம் இங்கெடுத்துக் காட்டுதல் பொருந்துமேனும், இக் கட்டுரை மிக விரியுமாதலின் வாய்ப்பில்லை; அன்பர்களே உய்த்தறிந்து கொள்ளலாம்.

இனி, இப் பொருட் கல்வியை அடிகளார் மக்களுக்குப் பயன் படுமுறையில் விளக்கிய பேராற்றலும் முறைகளும் பல; இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற பெரும் புலவராய்த் தமிழகத்தில் வான் ஞாயிறெனத் தலைமை தோன்ற விளங்கியவர் அடிகள்!

இந் நூற்றாண்டில் தமிழை வளர்த்த பெரியோர் வேறு சிலரும் உளர்; ஆயினும் அதன் உயிர்ப்பும் இயல்பும் சுவையும் வரலாறுந் தோன்ற வளர்த்த வீரப் பெருமகனார் இவர் ஒருவரே! தந்நலம் விடுத்துப், பல வழக்குகள் பிறர் இழுக்குகள் எல்லாவற்றிலும் முன் வந்து, தலை நிமிர்ந்து களம் ஓடித் தோள் கொட்டிப் போர் தாங்கி வெற்றி கண்டவர் இத் தனித் தமிழ் வீரரே!

கலைத் திறங்கள் :

உரை நடை, செய்யுள் இயல், செய்யுள் உரை, கட்டுரை வன்மை, கதை யழகு, நாடகக் கவின், ஆராய்ச்சி வகை, மொழி பெயர்ப்பாற்றல், சீர்திருத்தச் சிறப்பு முதலிய பல ஊக்கத் திறங்களையும் தமிழிற் கையாண்டு கலைத் திறங்கள் பெருக்கினார்; இவை பலவும் கல்வித் திறங்களல்ல; கலைத் திறங்கள்!

இத்தனை வகைகளும் பிறராற் கையாளப்படவில்லை; தமிழ் வளர்த்தவருள் இணையற்ற ஒருவராய் நின்று விளங்கியவர் அடிகளார்; இம் முறைகள் பலவும், 'புதுமைச் சிறப்புப்' பெற்றவை; 'இயல்பு வல்லமையும்' உடையவை; இணையற்ற 'இனிமைச் சுவையும்' வாய்ந்தவை!

'பொது மக்களும், பிற்பட்டவர்களும், தாழ்த்தப்பட்டவர்களும், முன்னேற வேண்டும்; உயர்ந்த நோக்கங்கள் வாய்ப்புக்கள் கொண்டு வாழ்க்கை விளக்கம் பெறவேண்டும்; நாகரிகத்திற் பிறங்க வேண்டும்' என்பது அடிகளார் நோக்கம்; 'காலத்துக் கேற்றபடி தமிழ் உதவ வேண்டும், தமிழர்க்குத் தமிழே கதி' என்பதும் அடிகள் கருத்து; 'எக் காரணத்துக்காகவும் அதன் பழைமைச் சுவையும் வரலாற்றுப் பெருமையும் கெடலாகாது; பழைமை வேர் ஊன்றிப் புதுமைக் கொடி படர்ந்து, ஆராய்ச்சி முறை மலர்ந்து, திருவருட் கலை கமழ்ந்து; நாகரிகக் கனி சிறக்க வேண்டும்' என்பது அவர்கள் எண்ணம்; உரைநடை நூல்களே இதற்குத் தக்கவை யென்பது அவர்கள் செய்முறை!

மாணவர்களையும் இந் நிலைமைக்கே அடிகளார் பழக்கினார்; பாடந் தொடங்கிச் செய்யுள் இலக்கணம் பழகியதும், வெளியூரி லிருக்கும்போது நான் பல்வகைப் பாட்டு வண்ணங்களில் அடிகட்குக்

கடிதங்கள் எழுதிவந்தபோதெல்லாம், என் கவிதை வழியை அடிகள் தூர்த்துவிட்டார்; 'தமிழிற் சான்ருேர் செய்யுட்கள் ஏராளமாய் உள்ளன; உரைநடை நூல்களே இக் காலத்துக்குத் தேவை; பொதுமக்கள் பயன் கொள்வது முதன்மை; ஆதலால், செய்யுட்கள் எழுதுவதை விடுத்து, இனிய உரைநடை எழுதுதலில் உள்ளங் கொள்' என்று வாய்மலர்ந்து வழி திருப்பி விட்டார்கள்; அதுமுதல், செய்யுட் செய்தல், அடிகள் கட்டளை யிருக்கும்போது மட்டும் நிகழ்வதாயிற்று; அவர்கள் மறைவுக்குப் பின்பும் அவர்கள் கருத்தே பின் பற்றுவது பெரிதும் வழக்கமாயிற்று ;

அடிகளார் நூல்கள் பெரும்பாலும் தமிழ் உரைநடை நூல்களே; 'ஆங்கிலமொழி உரைநடை'யில், தமிழ் நூல் பலவற்றிற்கு முன்னுரைகள் பல பக்கங்கள் எழுதியிருக்கிருர்; 'The Saiva Siddhantha as a Philosophy of Practical Knowledge' (1923) என்னும் தனி ஆங்கில நூல் ஒன்றும் வெளிவந்திருக்கிறது. Oxford கல்லூரி யொன்றைச் சேர்ந்த Dr. F. C S. Schiller என்பவர் பரிவுரையையும் அது பெற்றிருக்கிறது. 'The Oriental Mystic Myna' 'The Ocean of Wisdom' என்னும் ஆங்கில இதழ்களையும் நடத்தி வந்ததாகத் தெரிகிறது;

செய்யுட் சிறப்பும் அடிகட்குச் சங்கத் தமிழ நலங்கனிந்து அருட் சாறு நிரம்பித் தனிச்சுவை மிக்கது; 'திருவொற்றி முருகர் மும்மணிக் கோவை' (*1900*) 'சோமசுந்தரக் காஞ்சி' (*1901*) என்பன, அடிகளின் *26* ஆம் ஆண்டுக்குமுன் மலர்ந்தவை; அச்சிலிருக்கும் அடிகளின் தனிப்பாடல் திரட்டும் நினைவு கூர்க. ஆங்கிலத்திற் செய்யுள் இயற்றும் ஆற்றலும் அடிகளார் பெற்றிருந்தார்கள்; கல்கத்தா, 'சுரேந்திரநாத் பானர்ஜி'யின் திறங்கள் பற்றிச் செய்யுள் செய்திருப்பதை நினைவுகூரலாம்.

செய்யுட்களுக்கு '**உரைவகுக்குங் கலையினிமைக்**'குத் 'துகளறு போதம் உரை' (*1897*), முல்லைப் பாட்டு (*1903*), பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை (*1903, 1906*), திருவாசக விரிவுரை (*1922*) முதலியன சான்று.

'**கட்டுரை வன்மைக்**'குச் சிறுவர்க்கான செந்தமிழ் (*1934*), இளைஞர்க்கான இன்றமிழ் (*1957*), அறிவுரைக் கோவை (*1971*), உரைமணிக் கோவை (*1972*) முதலியனவும்,

'கதை யழகுக்'குக் கோகிலாம்பாள் கடிதங்கள் (1921) முதலிய தனித்தமிழ்ப் புதினங்களும்,

'நாடகக் கவி'னுக்கு அம்பிகாபதி அமராவதி நாடகமும் (1954),

'ஆராய்ச்சி வகைக்'கு 'முற்கால பிற்காலத் தமிழ்ப் புலவர்' (1936), 'சாகுந்தல நாடக ஆராய்ச்சி' (1934), 'திருக்குறளாராய்ச்சி', 'சிவஞான போத ஆராய்ச்சி' (1958), முதலியனவும்,

'மொழிபெயர்ப் பாற்ற'லுக்கு ஆங்கிலத்திலிருந்து பெயர்த்த 'சிந்தனைக் கட்டுரைகள்' (1905) 'குமுதவல்லி அல்லது நாக நாட்டரசி' (1911), சமக்கிருதத்திலிருந்து பெயர்த்த 'சாகுந்தல நாடகம்' (1907), முதலியனவும்,

'சீர்திருத்தச் சிறப்புக்'குச் 'சாதி வேற்றுமையும் போலிச் சைவரும்' (1923), 'வேளாளர் நாகரிகம்' (1923), 'பொருந்தும் உணவும் பொருந்தா உணவும்' (1921) போன்ற பலவும் எடுத்துக்காட்டுகள்.

இத்தனைக் கலைக் கோலங்கள் தமிழகத்தில் அடிகளார் ஒருவரிடமே மலர்ந்திருந்தமை, அவர்களிடம் விளங்கிய தெய்வக் கலையொளியை இனிது புலப்படுத்தும்.

அ. ஆராய்ச்சித் திறம்

ஆராய்ச்சித் திறம் பற்றி அடிகளார் வரலாற்றிற் கூறப் புகுவது, 'கொல்லன் தெருவில் ஊசி விற்றலை' ஒக்கும். எதை எடுத்தாலும், ஆராய்ச்சியாற் சாணை பிடித்தன்றி எழுதுவதோ பேசுவதோ அடிகளுக்கு இயலாது. 'ஆராய்ச்சி' என்னும் முறை, முன்னும் இருந்தாலும், ஆங்கிலக் கல்வி வல்லமையாலும், மெய் யருள் பெற்றுடைமையாலும், அடிகள்பாற் சுடர்விட்டு விளங் கியது;

ஒரு பொற் கட்டி சுடர் விட வேண்டுமானால், பொற்கொல் லரின் தீமூட்டியில் அது காய்ச்சப்படும்; "சுடச் சுடரும் பொன் போல்" என்பார் திருவள்ளுவர். துன்பம் சுடச்சுடத்தான் ஆன் மாக்களும் மலங்கழன்று தவ ஒளி வீசுகின்றன; பிறவித் தீயில் மக்கள் அவ்வாறு மலம் தீய்ந்து ஒளி விளங்குகின்றனர். எந்தப் பொருளும் தன்னியல்பில் ஒளிபெறுவதற்குச் சுடு முறைமை இன்றி யமையாததாயிருக்கிறது.

அடிகளார் ஆராய்ச்சிச் சாணையில் நெருப்புப் பொறிகள் நாற் புறமும் பறக்கும்; முரணியிருப்போர் அதனைப் பார்த்துப் பார்த்து அஞ்சி மாழ்குவர்; மருளுவர்; விலகி ஏதேனும் பேசுவர்; அடிகள் எதையும் பொருட்படுத்தமாட்டார்; தம் செயலிலேயே கண்ணும் கருத்துமா யிருப்பார். அணுகியிருப்போர், விளக்கங்கள் பெறுவர்.

அடிகளார் ஆராய்ச்சி, எடுத்துக்கொண்ட பொருளை மட்டும் சுடுவதன்று; நாட்டவரையும், அறிஞரென்று பேசிக் கொள்வோரை யும் சுடும். சுட்டு இருபக்கமும் ஒளி பெருக்கும்; இருள் விலக்கும். அடிகளார் ஆராய்ச்சிகளால், நாட்டுக்குப் பெரும்பாலும் நன்மையே யல்லது தீங்கில்லை.

வினாவுகள் :

1. குன்று முட்டிய குரீஇப் போல, சில நிலைகளில் எப்படி ஆராய்வது என்று திகைக்குமிடங்களிலெல்லாம், அடிகளார்

எவ்வாறே தமது நுண்ணறிவு நுண்ணுணர்வுகளால் திருகி ஆராய்வார்; கடந்து வெற்றி காண்பார்.

எழுத்துக்களில் பேச்சுக்களில் சில இடங்கள் குறிப்பாகவும் இருக்கும்; அங்கிலைகளில் ஆராய்ச்சி இன்றியமையாதது; குறிப்பா யிருக்குங் கருத்துக்களை அது வெளிப்படச் செய்யும்; ஆராய்ச்சியால் விளையும் நன்மைகள் பல; அவற்றுள் ஈது ஒன்று.

2. நூல்களில் ஓரிடத்திலுள்ள கருத்து அந் நூல்களிலேயே மற்றோரிடத்தும், முரண்பட்டது போலவும் தோற்றும்; ஆராய்ச்சி அம் முரணறுத்து இணக்கப்படுத்திச் செல்லும்.

3. அளவைகளின் அடிப்படையிலும் இலக்கண முறைகளிலும் கருத்துக்கள் பின்னிக் கிடக்கும்; ஆராய்ச்சி, சிக்கல் அவிழ்த்து உதவும்.

4. சுருக்கமாகச் சொல்லப்பட்டதை விரித்து விளக்கியும், விரிவாக விளக்கப்பட்டதைச் சுருக்கமாக எடுத்துக் காட்டியும்; விடுபட்டிருப்பதைத் தொடுத்துத் தெளிவுபடுத்தியும், காரண காரிய இயைபு தேற்றியும், தேவைக்கேற்ப வேண்டுவதைப் புலப் படுத்தியும் செல்லுவது ஆராய்ச்சி.

5. முற்கால பிற்கால அமைவுகளும், அவற்றிற் கேற்றவாறு நூலாசிரியரையும் அறியாதபடி அமைந்துவிடும் 'உலகியற்கை' 'வாழ்க்கைப் பழக்கம்' முதலிய பலவும் ஆராய்ச்சியால் விளங்கி விடும்.

6. கருத்துக்கள் ஒவ்வொரு நூலில் ஒவ்வொரு வகையாக அமைந்திருக்கும்; அவை, இன்ன நூலில் இன்ன வகையாக இன்ன தோற்றத்தில் வந்திருக்கின்றன என்று தெரிந்து தெளிந்துகொள் வதற்கும் ஆராய்ச்சி துணை செய்யும்.

7. கருத்துக்களை அறிந்துகொள்ளவே நூல்கள் உள்ளன; அக் கருத்துக்கள் சொற்களின் மூலமாக வெளிப்படுதலே முதல் நிலை. சொற்களின் ஒழுங்கு சில நூல்களில் நூலாசிரியராலும், பெயர்த்தெழுதுவாராலும், பதிப்பாசிரியராலும், இடைச் செருகல் செய்வாராலும் சீராக அமையாமல் பொருட் குழப்பம் செய்யும்; விடுவித்துச் சீராக்குவதற்கு, ஆராய்ச்சி இன்றியமையாதது.

8. முதல் நூலாகவும் வழிநூலாகவும் சார்பு நூலாகவும் அமைந்து நூல்கள் தத்தம் முறைமைக் கேற்பக் கருத்துக்களை வகுத்துக் கொண்டு போகும்; அம் முறைமை அறிந்து 'வண்ணம்' 'வடிவு' 'வழக்கு' 'அடிப்படை' தெரிந்து தெளிவுபடுத்துவது ஆராய்ச்சி.

9. அயல் மொழிகள், அயல் வழக்குகள்; பிரிந்து வேருகிய தன் மொழிகள், வழக்குகள்; ஒரு மொழியிலேயே பழைய புதிய அமைதிகள், வழக்குகள் முதலிய பலவும் ஒப்பு நோக்கி உண்மைகள் தேறுவதற்கும் ஆராய்ச்சிகள் வகை செய்யும்.

10. எதனையும் சொற்பிறப்பு முறையில் பொருட் பரப்பு, வடிவறிய வழியாயிருப்பது ஆராய்ச்சியே.

அமைவுகள் :

ஆராய்ச்சி செய்வார், உண்மை காண்பதே நோக்கமாய் இருக்க வேண்டும்; உழைப்புக்குப் பின்வாங்கக் கூடாது; பலகால் பல முகமாக ஆழ்ந்து ஊடுருவி அறியுந் திறமும், இரண்டிலொன்று துணியும் துணிவும், அதற்கேற்ற நுண்ணுணர்வும் இயல்பாகவே பெற்றிருக்க வேண்டும். பொதுநலன், சிறப்புடன் பொலிய வேண்டும்; கடமையுணர்வு மிக்கிருக்க வேண்டும்; 'சார்பும்' அதிற் 'பற்றும்' அற்ற நடுநிலைப் பான்மையும் இன்றியமையாதது; அள வற்ற பொறுமையும், நேர்மையும், பொச்சாவாமையும், ஆராய்ச்சி யில் ஒரு தனிப்பட்ட வேட்கையும் வேண்டப்படும். தாம் உலகுக்குப் பயன்படுவதே தம் வாழ்க்கைக் குறிக்கோள் என்னும் சேவையுள்ளம் உடையவராய், மெய்ப்பொருள் காணும் இப் பயன்படுஞ் செயல், 'ஒரு முக்கியமான தொண்டு' எனக் கொண்ட திருத் தொண்டராய், ஆராய்ச்சிச் செயலை மேற்கொள்ள வேண்டும்; ஆராய்ச்சி காட்டும் புலமைப் பெருமை கூட்டும்.

கருவில் திரு :

ஆராய்ச்சியறிவு மிக வேண்டுமானல் அதற்குச் சிந்தனைச் செல்வம் சிறப்பாக அமையவேண்டும்; ஆராய்ச்சியாளராக எல் லாரும் அமைதல் அருமை; அடிகளாருக்கு முன்னைத் தவத்தால் அனைத்தும் அருமையாக அமைந்துவிட்டன; அமைந்த ஒவ்வொன்

றும் ஈடு இணை அற்றவை; நேரிற் கண்டு திளைத்தவர் அனைவர்க்கும் இவ் வுண்மை வெளிப்படை! இது ஏதோ அருள்! உலகம் இடர்ப்படுங் காலங்களில், எல்லாம் வல்ல இறைவனே இங்ஙனம் தோற்றங் கொள்வான் என்பதில், உண்மை நிழலாடிக்கொண்டு தான் இருக்கிறது. அடிகளிடம் அனைத்தும் ஒருங்கமைந்து விளங்கின என்பதைவிட, அவர்கள்பால் அமையாதன யாவை? என்று கேட்பதே பொருத்தமாயிருக்கும்.

முதலில் உடலழகு அமைந்ததே அடிகளின் நலத்தைப் புலப்படுத்தும்; உண்மையுணர்வின் நலம், புறத்திலும் அழகு கூட்டிவிட்டது. அடிகளார் நெடிய திருவுருவும், அதற்கேற்ற ஒல்லியான, ஆயினும் தசைப் பிடிப்பான, திருவடிவும், செந்தாமரை ஒத்த மென்மையும், செந்நிறமும், ஒளியுங் கூடிய பேரழகுத் திருக்கோலம் உடையவர்கள்; அவர்கள் அணிந்திருந்த காவியாடை அவர்கள் அழகை மிகப் பெருக்கிக்கொண்டு பொருத்தமாய் விளங்கியது.

2. அழகு கெழுமிய நல்லுடல் அமைந்த அடிகளுக்கு உயர் வகையான கல்விப் புலமையும் பெருமிதங் கொள்ளும் வகையில் அமைந்துவிட்டது. மதிப்பு உடலால் மட்டுமன்றிப் புலமையாலும் பெருகியது.

3. கற்றது உணர விரித்துரைக்கும் நறுமணம் வேறு, அவர்கள்பாற் சிறந்திருந்தது; இதனால் அவர்கள் கல்வி, மணங் கமழுங் கல்வியாயிற்று.

4. அங்ஙனம் விரித்துணர்த்துதற் கேற்றபடி, குயில் போன்ற குரலினிமையும் மிக வியக்கத்தக்க வகையாய் இனிதமைந்து விட்டது.

5. இவ் வகைகளோடு சிறந்த எழுத்தாற்றலும் நன்கு பொருந்தி, இறும்பூது பயப்பதாயிற்று.

6. எவ்வளவுதான் நலங்கள் கூடியிருந்தாலும், "நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில்நலம், மண்மாண் புனைபாவை யற்று" என்று திருவள்ளுவர் கூறுதல்போல வீணாகி விடாதபடி, மிகச் சிறந்த நுண்ணறிவும் நுண்ணுணர்வும் அடிகளுக்கு அமைந்தது தமிழகத்தின் நற்பேறு.

7. இவ்வளவோ, இவற்றுடன் சமய உணர்வும் தெளிவும் பழக்கமும் வாழ்க்கையும், இயல்பாகவே, செழிப்பாய் அழுத்தமாய், இடையீடுகளால் நிலைகலங்காத நிலையில் வீறுற்றன. மெய்ப்பொருள் அமையாத நிலையில் எந்தக் கல்வியும் கலையும் நூலும் பேச்சும் பயனற்றனவாதலின், இவ்வமைப்பே அடிகளார் மூலம் நன்கு விளங்கி நாட்டின் ஒவ்வொரு பகுதிக்கும் நடைமுறையிற் பெருகி உதவியாயிருந்தது. இதனால், வெற்றாரவாரங்கள் அடிகளார் நிலையில் இல்லை.

8. உரைநடை, செய்யுட் சிறப்பு; புதுக்கதை, நாடகக் கவின், மொழி பெயர்ப்பு, மறுப்பழகு, பதிப்பு நலன் முதலிய எத்தனையோ வகையான கலையாற்றல்கள் ஒருங்கமைந்து நாட்டவரைக் கவர்ந்து வந்தன.

9. 'தாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்னும் அருளுள்ளம் அடிகளிடம் நாளும் விளங்கியது.

10. சைவ சித்தாந்த மகா சமாசம், சைவசித்தாந்தக் கழகம், தமிழகத்தில் எத்தனையோ சமய சங்கங்கள், ஞான சாகரம் முதலிய இதழ்கள், பொதுநிலைக் கழகம், மணிமொழி நூல் நிலையம், அம்பலவாணர் திருக்கோயில், மாணவர் சூழல், அன்பர் திரள், அடியார் திருக்கூட்டம், தல யாத்திரை முதலிய பலவும் திருத்தொண்டுகளாய் நிகழ்ந்தன.

11. எல்லாம் இங்ஙனம் ஒருங்கமைந்த இழைவில், அடிகளார் திருத்தோற்றம் இனிதெழுந்து திகழ்ந்தமை ஒரு பெரும் இறும்பூது! இவற்றோடு ஆராய்ச்சித் திறமும் அடிகளார் வாழ்விற் பெருஞ் சிறப்புற்றமை விந்தையினும் விந்தை! இது கிடைத்தற்கரிய பெருஞ் செல்வம், கருவிற் றிருவுடைய பெருமானாதலின், ஆராய்ச்சித் திறம் எல்லாவற்றிற்கும் மாண்பு செய்து உலகுக்கு உதவுவதில் இணையற்றதாய்ப் பொலிவெய்தியது; எடுத்துத் தோன்றியது.

பெரும் பயன்:

அடிகளார் ஆராய்ச்சிகளால் மாண்புறாத் துறைகளே இல்லை; உலகியற்கைகளே இல்லை; பனித சூலங்களே இல்லை; காலப் பகுதிகளே இல்லை; நூலுருமைகள் இல்லை; பொதுத் தொண்டுகளே இல்லை; தலைமை அழகுகளே இல்லை.

தமிழ்மொழி மட்டுமா அடிகளார் ஆராய்ச்சிகளால் சீருற்றது? இந்திய மொழிகளும் உலக மொழிகளுங்கூட ஏற்ற விளக்கங்கள் பெற்றன; பெருமை பிறங்கின.

சைவ சமயமோ, அடிகளார் ஆராய்ச்சிகளால் மிகவும் செழுமை மேவியது. இந்து சமயங்களும் உலகவர் சமயங்களும் அவ்வவர் பொருளாய் வளங் கண்டதோடு, சிவநெறி என்பது வேருங் குறியதாய் விளக்கமுற்றது.

தமிழக நாகரிகம் என்பது, அடிகளார் ஆராய்ச்சிகளால் பேரொளி பெற்றுவிட்டது. இந்திய நாகரிகமும் உலக நாடுகளின் நாகரிகங்களுங்கூட ஒளிபெற்றுச் சிறந்தன.

தமிழ் நூல்களில் அடிகள் ஆராய்ச்சிகளுக்கு உட்படாத, தக்க பழைய புதிய நூல்கள் உண்டா? அவற்றின் கால நிலைகள், வரலாறுகள், கருத்தழகுகள், ஆசிரியர் திறங்கள், இலக்கிய இலக்கண அளவை மரபுகள், மொழி நடைகள் முதலிய எவைதாம் அடிகளார் ஆராய்ச்சிகளில் ஒளி தீட்டப் படாதவை? கல்வெட்டுத் திறங்கள், புதைபொருட் பெருமைகள், விஞ்ஞானச் செழுமைகள், புதுக் கண்டு பிடிப்புகள், முற்கால பிற்கால இக்கால இயக்கங்கள் முதலிய பலவற்றிலும், இவ் வகையில் விடுபட்டுப் போனவை எவை? இப்படியும் ஒரு பெருங்குரவர் திருவுருவம் நம் கண்ணெதிரில் தமிழகத்தில் நடமாடியதே!

முறைகள் :

ஆராய்ச்சித் திறம் பற்றிய முறைகள் எத்தனையோ உள்ளன; அடிகளார் கையாண்ட வகைகளும் பல வகை; முதலில், முறைகளைக் காண்போம்.

1. இயற்கை நெறி, 2. நூல் நெறி, 3. உலக நெறி, 4. மேற்கோள் நெறி, 5. மரபு முறை, 6. வரலாற்று முறை, 7. இலக்கிய நிலை, 8. இலக்கண வகை, 9. அளவை முறை, 10. ஒப்பு நோக்கு, 11. நாகரிக நெறி, 12. பாகுபாட்டு வகை, 13. சொன் முறை, 14. சொற்பிறப்பு முறை, 15. எழுத்து முறை, 16. ஓது முறை, 17. நூலாசிரியர் கருத்தறியு முறை, 18. புதுக்கு முறை, 19. பலமுக ஆராய்ச்சி, 20 துருவி ஆயுமுறை, 21. ஆழ்ந்து செல்லு முறை,

22. இரண்டிலொன்று துணியு முறை, 23. பகுத்தறியு முறை, 24. முரண் அவிழ்க்கு முறை, 25. விளக்கு முறை, 26. வேறு படுத்து முறை, 27. அறிவியல் முறை, 28. சமய வகை, 29. இணக்க முறை, 30. துணிவு நிலை, 31. நிலைப்படுத்து முறை, 32. நடுநிலைப் பாங்கு, 33. பயன்படு முறை, 34. இயைபு நெறி, 35. வினவு முறை, 36. விடைகாணு நெறி, 37. வழூஉ முறை, 38. ஒதுக்கு முறை, 39. அறநெறி, 40. வாய்பாட்டு வகை, 41. கோட்பாட்டு வகை, 42. திட்டப் படுத்து முறை, 43. காரிய காரண முறை, 44. சுவை முறை, 45. நுண் முறை, 46. பொருட் பேறுகள், 47. இன்றியமையாச் சிறப்புகள், 48. குணப் பொருள் நெறி, 49. வாக்கு வகை, 50. சொற் பொருள் வரம்பு நிலை, 51. இனங்காணு முறை, 52. தொடுக்கு முறை, 53. விடுக்கு முறை, 54. உண்மை நோக்கு, 55. தொழில் முறை, 56. விரிப்பு முறை, 57. பரவை வழக்கு, அருகிய வழக்கு, உள் வழக்கு, இல் வழக்கு, பொது வழக்கு முதலிய வழக்கு நெறிகள், 58. பொதுமை முறை, 59. முன்பின் ஆயு முறை, 60. கற்பனை முறை, 61. செயற்கை முறை, 62. இறை முறை முதலிய எத்தனையோ வகையான ஆராய்ச்சி முறைகளை அடிகள் மேற்கொண்டிருக்கிறார்கள். இவற்றிற் கெல்லாம் சான்றுகள் எடுத்துக் காட்டப் புகின் மிக விரியும்.

சொந்தத்தில் :

அடிகள் இம் முறைமைகள் பலவற்றை மேற்கொண்டதோடு, **தமது** சொந்த ஆராய்ச்சியில் கையாண்டு கண்ட கருத்துக்களும் பலப்பல, அவர்கள் நூல்களில் அங்கங்குங் காணப்படுகின்றன; சில காட்டலாம்.

> ''நம் ஆராய்ச்சியிலும் அஃதேற்புடைத்தாமாறு சிறிது காட்டுதும்''
>
> —'முதற்குறள் வாத நிராகரணம்' பக். 19

> "யாம் அவற்றின் உண்மைத் தன்மை கூறியதே யன்றிப் பிறிதில்லை"
>
> —பண்டைக் காலத் தமிழரும் ஆரியரும், பக். 45

> "நாகரிக மக்களிடத்து நடைபெறும் மொழிகள் விரைவில் வேறுபடுதல் இல்லை...ஒரு மொழி உருவந் திரிபடை

யாது நிலை நிற்றற்கு வேண்டும் முயற்சி என்னை என்று ஆயும்வழி, அதன்கண் ஒவ்வொரு சொல்லும் பண்டுதொட்டு வழங்குமாறும், அச் சொற்கள் தோன்றுங்காற் பெற்ற காரணமும், அவை வாக்கியங்களில் தொடர்புற்று நின்று பொருள் அறிவிக்குமாறும், அவற்றோடு கலந்து வழங்கும் பிறமொழிச் சொற்கள் இவை யென்றதும் இனிது அறியப் பட்டு வருதலேயாம்."

—பண்டைக் காலத்...பக். 16

"இரண்டாயிர ஆண்டுகளுக்கு முற்பட்டு இடிந்து வெறும் பாழாய்க் கிடக்குங் கால அரண்மனை வாயிலை அணுகி உட்செல்ல நோக்குகையில், அங்கு மிகப் பரவித் தோன்றும் இருள், கரிய மைச்சேறு குழைத்த குழம்புபோல் மிகத் திணிந்து காணப்படுவதாயிற்று; அதனைக் காண்டலும் எம் உள்ளம் பெரிதும் புழுக்கமுற்று,

"ஆ, இக் கால அரண்மனையினுள்ளே பண்டைக் காலத்து எம் முதுமக்கள் தொகுத்து வைத்த களஞ்சியங்கள் எத்தகையனவோ? அவற்றை எங் கண்ணாரக் காணவும் பெறுகின்றிலமே! அவற்றின் அருமை பெருமைகளை எங்ஙனம் உணர்வேம்?

"என்று நினைந்து நினைந்து ஊடுருவிச் செல்லுதற்கு அரிதாம் அவ்விருளை நோக்கிய வண்ணமே மிக வருந்தி நின்றேம்; அங்ஙனம் நிற்பேமுக்கு எதிரில், விரிந்த அவ்விருளின் நடுவிலே, மன வலிமையும் விடா முயற்சியும் ஆழ்ந்த அறிவு முடைய சிலர் அஞ்சா நெஞ்சினராய் இயங்கும் அரவம் செவிப் புலனாயிற்று.

"கதுமென அப் பக்கமாய் உறுத்து நோக்க, அவர் அங்கே, புற்று மூடிய சரக்கறையினைத் திறம்படப் பிரித்து, அதனுள்ளிருந்த பொற்பேழையினை உடைத்து, அதனுள் ளிருந்த முழு மாணிக்க மணிகள் சிலவற்றைப் புறத்தே எடுத்து வைத்தனர். உடனே அக் கால அரணில் விரிந்த இருள் வலிசுருங்குவதாயிற்று.

"அது கண்டு கரை கடந்த உவகை உடையேமாய் உள் நுழைந்து அவற்றினருகே சென்று விழைந்து நோக்க, அவ்

வரிய பெரிய முழு மாணிக்க மணிகள் 'தொல்காப்பியம்' 'திருக்குறள்', 'இருக்குவேதம்', 'திரிபிடகம்' முதலியனவாய் இனிது விளங்கின.

"பின் இவ் வருமருந்தன்ன நூல் விளக்கத்தினாலே அப் பண்டைக் கால ஆரண்மனையுட் சிறந்த இடங்கள் பலவும் கண்டு வியப்பேமாயினேம்."*

— பண்டைக் காலத்...பக். 31

"தமிழின் வரலாறும் அதன் வழக்கும் (ஆங்கிலம் பயிலு கிறவர்கள்) எவ்வளவு ஆராய்ந்திருக்கின்றார்கள் என்பது, அவர்கள் சொற்களிலிருந்து விளங்கவில்லை; ஆனாலும், எமக்குத் தெரிந்த மட்டில் எழுதுகின்றேம்."†

—உரைமணிக் கோவை, பக். 64

இங்ஙனமே 'புராணங்க'ளின் ஆராய்ச்சியும், 'பெரிய புராணச்' சிறப்பும் பற்றி வரும் அடிகளாரின் சொந்த ஆய்வுத் திறங்கள் பலப் பல. (உரைமணிக். பக். 143-9; 150–1; கடவுள் நிலைக்கு மாறான கொள்கைகள் சைவமாகா, பக். 64–112)

முடிபுகள் :

அடிகள் அவ்வப்போதும் செய்த மிக வலிமையான, மிக ஆழ மான, மிக உழைப்பான அறிவார்ந்த ஆராய்ச்சிகளால் எத் தனையோ கருத்துக்கள் தக்க சான்றுகளுடன் தமிழகத்துக்குக் கிடைத்திருக்கின்றன. அவற்றிற்கு ஓர் அளவே இல்லை.

தமிழகம் அடிகளாரை இப்போது இழந்து நிற்கிறதே! இது வன்றோ உண்மையான கையறவு! கடமைகள் இன்னவை என்று

---

*இந்தப் பகுதியினால், அடிகளார் கையாண்ட 'கற்பனை முறை' 'ஆராய்ச்சி வேட்கை' புலப்படுகின்றன. திருக்குறள் தொல்காப்பிய மாகிய தமிழ் நூல்களோடு, 'இருக்கு வேதம்', 'திரிபிடகம்' என்பன வும் எடுத்துக் காட்டலால் 'நடு நிலைமை' 'பொது முறை' 'ஒப்பு நோக்கு' 'வரலாற்று நெறி' முதலிய ஆராய்ச்சி முறைகள் பலவும் விளங்கும்; இவை, சான்றுகளாகவும் உதவுதல் கண்டுகொள்ளப்படும்.

†இப் பகுதி, வரலாற்றாராய்ச்சி, வழக்கு நிலை, உண்மை காணு முறை, இடர்ப்பாடுகளில் நழுவி விடாமை, அடிகளின் தன்னடக்கம் முதலியவற்றைத் தெளிவிக்கும்.

அறியாமையாலும், கருத்து வேறுபாடுகளாலும் பின்பற்ற மாட்டாமையாலும், அடிகளை மிகு விரைவில் இழந்துவிட்ட தமிழகம், இனிச் செய்வதற்கு என்ன இருக்கின்றது! தமிழகத்தின் புறக்கணிப்பும், கருத்தில்லாப் புல்லறிவாண்மையும், அடிகள் நெடுநாள் இத் தமிழ்ப் பகுதியில் உலவாமற் செய்துவிட்டன; இப் புறக்கணிப்புக் கேற்பப் 'போதும்' என்று இறைவனுங் கருதிவிட்டனன் போலும்! தமிழகத்தின் இழப்பு, ஐயகோ, பெரிது, பெரிது!

ஆராய்ச்சியால் விளங்கிய உண்மைகள், எவ்வளவு பெரும் புதையலாய் இருக்கின்றன! நடுநிலைமைக்கும் உண்மைக்கும் நேர்மைக்கும் இனி எங்கே போவது! சில எடுத்துக் காட்டுகளே இங்கே காணமுடியும்,

அடிகளார் நூல்கள் எழுத்தெண்ணிப் பயில்வதற்குரியன; அதற்கேற்றபடி, அந் நூல்களைப் பதிப்பிடும் கழகத்தார், பிறர், எல்லாரும், பக்கந்தோறும் உரிய அடிக்குறிப்புக்கள் பதித்தும், சில சந்திகள் பிரித்தும், உள் தலைப்புக்கள் இட்டும், சுவை முறைகள் குறித்தும், பொருட்பேறுள்ள இடங்களைப் பெரிய எழுத்துக்களில் அமைத்தும், சில தொடர்களுக்கிடையே பகுதிகள் (பாரா) வகுத்தும், குறியீடுகள் கொடுத்தும், செய்யுள் நூல்களைப் போலவும், ஆங்கிலம் முதலிய அயல் மொழிப் பதிப்புக்கள் போலவும், அடிகள் நோக்கங்களைத் தமிழகமும் உலகமும் தழீஇப் பயன் கொள்ளுமாறு அச்சிட்டுப் பரப்புதல் நன்று!

மாணவர் முதலில் மாண்புறுவர்; புலவர்கள் மேன்மேற் புலமை பெறுவர். ஆராய்ச்சியறிஞர் வைப்பெனும்படி குறிப்புகள் பல அடைவர். பொது மக்களும் நலமெய்துவர்; சிறப்பு மக்களாகிய சான்றோர், தகுவன பரவச் செய்து கடமைகள் ஆற்றுவர்; எல்லாம் வல்ல இறைவனும், தம் நோக்கங்கள் நிறைவேறிவருதலறிந்து திருவுளம் நிறைவர்.

அ. உண்மைகள் சில

1. உரைகள்

"ஆசிரியர் நச்சினார்க்கினியர் பொருள் நுட்பங் கண்டு பிடிப்பதில் மிக வல்லுநர்."

—முதற்குறள் வாத நிராகரணம், பக். 5

"இளம்பூரணர், சேனாவரையர், பரிமேலழகியார் என்னும் உரைகாரர் மூவரும் சொற் பொருள் திட்ப நுட்பங்கள் செறிந்த உரைகள் எழுதுதற்கண் வல்லுநர்."

மாணிக்கவாசகர் வரலாறுங் காலமும், பக். 452

"சூத்திரங்களின்" சொற்பொருளை விடாமல் அவற்றைக் கௌவிக்கொண்டே சென்று பேருரை விரிப்பார் ஆசிரியர் நக்கீரனார்.

"நக்கீரனாரது உரை.........நெகிழவேண்டும் பதத்து நெகிழ்ந்தும், இறுகவேண்டும் பதத்து இறுகியும், நல்லிசைப் புலமை மலிந்த செய்யுட்போல், நகை, அழுகை, இழிவு, வியப்பு, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்னும் எண்வகை மெய்ப்பாடும் தோற்றுவிக்கும்.

"தருக்க இயைபும் சொற்பொருளடுக்கும் உடைத்தாய்ப், பாச் சுவை விராவிய உலக நடைத்தாய்ப் பண்டைக் காலச் செந்தமிழ் வளந்துறுமி, அகன்று ஆழ்ந்து தெளிந்து நிற்றல் காண்க.

"எவராலும் ஆக்குதற்கேலாத...உரை:

"செய்யுட் சுவை தோய்ந்த உரைநடை, இளம்பூரணர், பேராசிரியர், சேனாவரையர், அடியார்க்கு நல்லார், பரிமேலழகியார், நச்சினார்க்கினியர் முதலான வேறு உரைகாரர் தம் உரைகளுள் யாண்டுங் காணப்படா.

"பிற்காலத்திருந்த சிவஞான முனிவருங்கூட நக்கீரனாருக்கு ஈடாகார்."

"இறையனாரகப் பொருளுரையினை இயற்றிய ஆசிரியரின் புலமைத்திறம் பெருமாட்சித்து."

மாணிக்கவாசகர் வரலாறுங். 452, 453, 457, 460

2. திட்டங்கள்

"முல்லைப் பாட்டின் பகுதி பதினெட்டடிகளில் உள்ள நூறு சொற்களில், தொண்ணூற்றெட்டுச், செந்தமிழ்ச் சொற்கள்".

"திருவாசகம் முழுதும் உள்ள சொற்களை எண்ணிப் பார்க்க, முதன்மையாயுள்ளன இரண்டாயிரத்து எண்ணூற்றுப் பத்துச் சொற்களே; எண்ணூற்றுப் பதினெட்டுச் செய்யுட்கள், திருவாசகத்தின்கண் உள்ளன.

மாணிக்கவாசகர் வர. பக். 47, 51

3. மொழித் திறன்

"தமிழ் மொழி தனிமொழி;

"தமிழ் 'திரமிளத்'தின் திரிபாயின், 'தமிழ்' இனிமை எனப் பொருள்படுவது போலத் 'திரமிள'மும் இனிமையெனப் பொருள் படல் வேண்டும்.

"சங்கச் செய்யுட்களிலும் தொல்காப்பியம் முதலிய பேரிலக்கணங்களிலும் வட சொல்லே விரவாதிருத்தல்"

"சில தமிழ்ச் சொற்களை வடசொற்களாகக் கூறுவார் விரகும், தமிழினின்று பல தமிழ்ச் சொற்கள் வடமொழியில் வழங்கப் பெறுவதும் விரிப்பாம்"

"முன், இமயவரை தொட்டுக் குமரியாறு காறும் வழங்கியது தமிழே"

"அகரம் எழுத்துகட்கு நிமித்த காரணம்"

முதற்குறள் வாத. 15, 16, 18, 38

"சமக்கிருதத்துக்குத் தாய்மொழி ஆரியம்"

பண்டைக் காலத். பக். 14

"தொல்காப்பியம் பஃறுளியாறு கடல் கொள்ளப்படுமுன் எழுதப்பட்டது"

பண்டைக் காலத். பக். 22

"இலக்கண ஆராய்ச்சிக்கு இன்றியமையாப் பெருஞ் சிறப்பினது...சொல் வரலாற்று முறை"

பண்டைக் காலத். பக். 22

"வடநாட்டிலிருப்பார் பெரும்பாலார் பண்டைக்காலத் தமிழ் மரபினரே"

பண்டைக் காலத். பக். 49

"கவுதம சாக்கியர் தமிழரே"

பண்டைக் காலத். பக். 54

" 'சூத்திரம்' என்பது தனித் தமிழ்ச் சொல்"

உரைமணிக். பக். 53

"கி. பி. மூன்றும் நூற்றூண்டிற்குப் பின்னெழுந்தது சமக்கிருத மொழி"

உரைமணிக். பக். 153

"சமக்கிருதம் தோற்றியவர் ஆருகதர்"

உரைமணிக். பக். 134

4. சமயத் திறம்

"மாயாவாதியர் அஃகியறியும் ஆற்றலில்லார்;...... பொருந்தா இயைபுகள் காணுதற்கண் மாயாவாதியர் மிக வல்லுநர்"

முதற்குறள் வாத. 41

"பழ வினைக்கே முதன்மை சொல்லுவர் மீமாம்சகர்"

"மக்கள் தமது நன்முயற்சியால் ஊழையும் புறங்காண்பர் என்பதே சைவ சித்தாந்திகள் கோட்பாடு"

"இருக்கு முதலிய வட நூல்களில் பிரகிருதிக்கு மேற்பட்ட 12 தத்துவங்கள் கூறப்பட்டிருக்கின்றனவா?"

"திருநீறும் உருத்திராக்கமும் சிவபிரான் திருக்கோயில்களும் 'இருக்கு' 'யசுர்' முதலிப நூல்களிற் சொல்லப்பட்டிருக்கின்றனவா?"

தலைமையுரைமேல்-தடைகளுக்கு விடை, பக். 18, 78

"எத்தகைய முயற்சியைச் செய்தாலும் முழுமுதற் கடவுள் உணர்ச்சியோடு அதனைச் செய்தல்"

"ஆராய்தலாலும்...பேசுதலாலுமே...பேரின்பப் பேற்றை அடைதல் இயலாது;...நெஞ்சம் நெக்கு நெக்குருகுதலால் மட்டுமே...திருவருட் பேற்றிற்கு உரியராகலாம்"

பொதுநிலைக் கழகம், பக். 7, 15

5. பொது

"தருக்க முறையும் ஆராய்ச்சி முறையும்...நன்கறிய மாட்டாத தடைகள், பிழைபாடுடையன"

தலைமையுரை மேல். 80

"மொழி, கால வேறுபாட்டால் வேறுபடினும் மக்கள் சாதிப் பிறப்பு யாண்டும் ஒரு தன்மையாகவே இருக்கும்"

பண்டைக் காலத். பக். 49

ஆ. வரலாற் றுராய்ச்சி

ஆராய்ச்சி, முக்கியமாக 'இயற்கை யாராய்ச்சி' எனவும், 'நூலாராய்ச்சி' எனவும் இருவகையிற் பாகுபடும்; நூலாராய்ச்சியில் வரலாற்றுராய்ச்சி அடிப்படையானது; நூலாசிரியர்கள், அவர் நூல்கள் எழுந்த காலங்கள், திட்டப்பட்ட பின்பே, நூல்களின் ஏனை எல்லா ஆராய்ச்சிகளும் ஒழுங்குபடும்; அடிகளார் காலத்தில், பெரும்பாலான தமிழ்ப் புலவர்கள் இவ்வியல்பிற் கருத்தில்லாதவர்கள்; சமய நூல்களின் முறை பிறழ்ந்த செல்வாக்கு, இதனை ஓரளவு மறைத்துவிட்டது. சமய நூல்களையும் சமய நூலாசிரியர்களையும் நன்கு கவனிப்பவர் ஆசிரியர் மறைமலையடிகளார்; பலர்க்கு இதனால் அடிக்கடி கருத்து வேறுபாடுகள் அங்கங்கும் எழுந்தன; இந்நிலை அடிகளாரை மேன்மேலும் உரம்பெறச் செய்ததேயன்றி வேறில்லை; "மாணிக்கவாசகர் வரலாறுங் காலமும்" என்னும் மாப்பெரும் செந்தமிழ் ஆராய்ச்சி நூல் இதனால் உருவாயிற்று.

'வரலாறு' என்பதே கால நிலையின் முதன்மையுடையதுதான்; இப் பெருநூலில், எல்லாச் சிறப்பு நூல்களுக்கும் காலம் திட்டம் செய்துகொள்ளப்பட்டது. அரசர்கள் ஆசிரியர்கட்கும் காலத் திட்டம் ஒழுங்கு செய்யப்பட்டன. தமிழகத்துக்கு இந் நன் முயற்சியைத், தம் மாட்சி சிறந்த ஆராய்ச்சித் திறனால், அடிகளார், ஓர் அருட்கொடையாகவே வழங்கியிருக்கின்றனர்.

அந் நூலில் வரும் ஆராய்ச்சி முறைகளையும், முடிபுகளையும் முற்றும் இங்கே விளக்கமுடியாவிட்டாலும், அதில் முடித்துக் கூறப்பட்ட கருத்துக்களை மட்டுமாவது, தொகுத்துரைப்பது நன்றாகவே யிருக்கும்; தமிழகம் எளிதில் அறிந்து பயனடையலாம்;

ஆயினும், அந் நூலின் பொருளடக்கப் பகுதி கண்டு, நூலுள் நுழைந்து, விளக்கங்கள் பெற வாய்ப்புள்ளது; சில குறிப்புக்கள் மட்டும் இங்குங் கொடுத்துச் செல்லலாம்.

1. மாணிக்கவாசகர் வரலாறு

1. மாணிக்கவாசகர், சென்ற காலத்தில் திருப்பெருந் துறையில் கோயில் இல்லை; மூவர் காலத்திலும் இல்லை.

2. திருப்பெருந்துறையில் எழுந்தருளிய குரு, மாணிக்க வாசகர்க்கு அறிவித்தது 'சிவஞான போதம்' அன்று; திருவைந் தெழுத்து.

3. மாணிக்கவாசகர்க்கு மனைவியார் இருந்தார்.

4. நரி பரி யாக்கிய திருவிளையாடல் மாணிக்கவாசகர் பொருட்டே நிகழ்ந்தது.

5. சோதி (ஒளி) வடிவிலேயே அடிகளுக்கு இறைவன் எங்கும் வெளிப்பட்டுக் காட்சி நல்கினர்; திருப்பெருந்துறை, திருவுத்தர கோச மங்கை, திருக்கழுக்குன்றம் என்னுந் தலங்களில் அடிகள் கண்டது ஒளி வடிவே.

6. அவர் எதிர்த்துப் பேசிய புத்த குருவை ஊமையாக்கி, எழிலுரை நல்கிய இலங்கை மன்னன் புதல்வியை, ஊமை நீக்கினர்.

7. சைவ சமய முதலாசிரியர் திருவள்ளுவர் முதலியோர்.

8. சைவ சமயாசிரியர் கூறிய(து) தமிழ் நான்மறை.

9. கவுதம சாக்கியராகிய தம் முதலாசிரியர்க்கு மாருய்ப், பின் வந்த புத்த குருக்கள் கொள்கைகள் வகுத்தனர்.

10. மாணிக்கவாசகரால் மறுக்கப்பட்ட பவுத்தம், பழைய 'சௌத்திராந்திகம்' என்னும் ஈனயானம்.

11. எல்லா மக்கட்கும் உடம்பாடான கொள்கைகள் மேல் சமய உண்மைகள் நிற்கவேண்டும்.

2. மாணிக்கவாசகர் காலம்

1. 'திருச்சிற்றம்பலக் கோவை' கூறும் வரகுணன் வேறு; அவன், அடிகளார் காலத்தவன்; கல்வெட்டுகளிற் குறிக்கப்பட்ட

வரகுண பாண்டியர் இருவர்; இவர்கள் இருவரும் 8 ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டவர்.

2. கல்வெட்டுக்களிற் காணப்படும் கரிகாற் சோழர் மூவர்.

3. வடுகக் கருநாடர் வேங்கட மலைக்கு வடக்கேயிருந்து வந்தவர்.

4. 'கல்லாட' நூலின் காலம் 5 ஆம் நூற்றாண்டின் இறுதி.

5. இறைவன் திருவடிச் சிலம்பொலி கேட்ட சேரமான் வேறு, சேரமான் பெருமாள் வேறு.

6. திருஞானசம்பந்தர் குறித்த பாணரே, பாணபத்திரர். திருநீல்கண்ட யாழ்ப்பாணர் இவரின் வேறு; பாணபத்திரர், மாணிக்கவாசகர் காலத்துக்கு முற்பட்டவர்.

7. நக்கீரர், இடைக்காடர், சிவனடியார்கள்.

8. தமிழுக்குப் பழைமையானது அகவற்பா. கட்டளைக் கலித்துறை, கலி விருத்தம், ஆசிரிய விருத்தம் முதலியன புதுப் பாக்கள்; கி. பி. 3 ஆம் நூற்றாண்டுக்கும் கி. பி. 6 ஆம் நூற்றாண்டுக்கும் இடையில் இவை விரவின.

9. 'திருக்கோவையார்' பழைய தமிழ் வழக்கைத் தழுவிய தென்பதை நிலைநாட்டவே 'கல்லாடம்' யாக்கப்பட்டது.

10. கட்டளைக் கலித்துறை தேவாரத்தில் விருத்தம் என வழங்கப்பட்டது; 3 ஆம் நூற்றாண்டில் புதிது புகுந்தது.

11. திருக் கண்ணப்பதேவர் திருமறம் 11 ஆம் நூற்றாண்டிற்கு முற்படுதல்.

12. பண்டிருந்தது, மறவர்க்கு மட்டும் கல்நாட்டும் பழக்கம்; அரசர் கல்வெட்டன்று.

13. பல்லவராட்சிக்கு முன் கல்வெட்டுக்கள் இல்லை; முன் தமிழ் வேந்தர் வரலாறுகள் பழைய தனித்தமிழ் நூல்களால் அறியப்படும்.

14. பல்லவரும் ஆந்திரரும் உறவினர்; இவரோடு சாளுக்கியரும் வேளாளரே; சோழன் வழியினரே பல்லவர்.

15. வடுகர் தமிழ் நாட்டிற் புகுந்தபின், தமிழ் மன்னர் வலி சுருங்கினர்.

16. கண்ணகி சிற்றத்தால், சோழ பாண்டிய நாடுகள் சீர் குலைந்தன.

17. சேரமான் பெருமாள் காலம் 8 ஆம் நூற்றூண்டு; காரைக்காலம்மையார் காலம் 4 ஆம் நூற்றூண்டு.

18. புத்தமதம் தமிழ்நாட்டில் தலையெடுத்ததும் ஒடுங்கியதும் கி. பி. 2 ஆம் 6 ஆம் நூற்றூண்டுகளுக்கிடையில்.

19. மாணிக்கவாசகர் நூல்களில் சமணசமயக் குறிப்பில்லை; பல்லவ அரசரைப் பற்றிக் குறிப்பில்லை.

20. மாயாவாதம் சங்கராசாரியார்க்கு முன்பே இருந்தது.

21. திருமந்திரத்தின் காலம் 6 ஆம் நூற்றூண்டு; அந்த நூலில் 'மாயா வாதம்' குறிக்கப்படுகிறது.

22. 'அத்துவிதச்' சொல்லின் மெய்ப்பொருள் கண்டவர் மெய்கண்ட தேவர் ஒருவரே.

23. திருமந்திரம், பெரிய புராணம், இறையனூரகப் பொருளுரை என்பவற்றில் இடைச்செருகல் உண்டு.

24. 'காமிகம்', முதலியன, பழந்தமிழ்த் தச்சு நூல் மொழி பெயர்ப்பு.

25. பிரத்தியபிஞ்ஞைக்கு முதல் நூலாகிய சிவ சூத்திரங்கள் தமிழ்ச் சிவாகமங்களில் தோன்றி வடக்கே சென்றன.

26. முழுமுதற் கடவுள் அம்மையப்பராய் நிற்றல்.

27. 'மந்திரம்' 'மாலை' என்பன தமிழ்ச் சொற்கள்.

28. உபமந்யு முனிவரைத் திருநாவுக்கரசர் குறிப்பிடுதலால், அவருட்பட்ட நாயன்மார் வரலாற்றைக் கூறும் 'உபமந்யு பக்த விலாசம்' அம் முனிவர் செய்ததாகாது.

29. அகநானூறு முதலிய சங்கச் செய்யுட் காலத்தில் 'அகத்தியர்' என ஒருவர் தமிழகத்தில் இல்லை; பிற்காலத்தில் அகத்தியர் பலர்.

30. மழைக் கடவுளாகிய இந்திரனே ராமன்; உழவு சால் சீதை; இவ்வாறு இருக்கு வேதத்தில் வந்தது.

31. கி. மு. முதல் நூற்றாண்டுக்கு முன் பழந்தமிழ்ப் பாட்டுக்களில் 'இராம இராவண'ரைப் பற்றிக் குறிப்பில்லை.

32. பெரும்பாலும், உள்ளது கூறுவது பாரதம்; இல்லது கூறுவது, இராமன் கதை; கண்ணபிரான், உண்மையாய் இருந்தவன்; இராமன் உண்மையில் இருந்தவனல்லன்; கி. பி. 7 ஆம் நூற்றாண்டிற்குப் பின்பே இராம வணக்கம் உண்டாயிற்று.

33. பண்டைத் தமிழரது தெய்வக் கொள்கை, எல்லா மக்களாலுந் தழுவப்படும் பொதுக் கொள்கையே.

34. பொய்கையாழ்வார் பேயாழ்வார் இருவரும் பண்டைத் தமிழ்க் கொள்கையின் வழிப்பட்டவர்.

35. ஆண்டாள், பெரியாழ்வார், தொண்டரடிப் பொடியாழ்வார், திருமங்கை யாழ்வார், 10 ஆம் நூற்றாண்டு; ஏனை யாழ்வார் 8 ஆம் நூற்றாண்டிற்குப் பின்.

36. முதலாழ்வார் மூவர் காலத்தில் திருமால் கோயில்கள் 20 க்கு மேல் இல்லை; திருமங்கையாழ்வார் காலத்தில் 85.

37. மாணிக்கவாசகர் குறித்த சிவபிரான் திருக்கோயில்கள் 54.

38. மாபாரதத்தின் பழம்பகுதியில் கண்ணன் குழவிக் கால ஆண்மைச் செயல்கள் இல்லை.

39. கபிலர் காலம் கி. பி. முதல் நூற்றாண்டின் முற்பகுதி; கபிலர் முதியராயிருந்த காலத்தில் பரணர் இளைஞர்; இக் கபிலர், தமிழரல்லர்.

40. சுந்தரமூர்த்தி நாயனர் கி. பி. 760–810 வரை 50 ஆண்டுகள் இருந்தவர்.

41. மூன்றும் நந்திவர்ம பல்லவன் பாண்டிய சேர அரசர்களைப் போரில் வென்றுன்; நந்திக் கலம்பகம் உடையான்.

42. சம்பந்தர் பதிகங்கள் மட்டுமே, பன்னிராழ்வார்கள் பதிகங்கள் அளவு உள்ளன;

43. திவாகர நிகண்டின் திட்டமான காலம், 10 ஆம் நூற்றாண்டு.

44. நாச்சியார், திருவாசகத்தை நன்கு பயின்றவர்.

45. 'களவழிப்' பொய்கையார், 'இன்னிலைப்' பொய்கையார், பொய்கை யாழ்வார் மூவரும் வேறு வேறு காலத்தவர். 'களவழிப்' பொய்கையார் ஏனை இருவர்க்கும் முற்பட்டவர். 'இன்னிலைப்' பொய்கையார் 2 ஆம் நூற்றாண்டினர்.

46. ஆழ்வார்களெல்லாரும் சைவசமய ஆசிரியர்களின் தேவார திருவாசகங்களை நன்கு பயின்றவர்கள்

47. உக்கிரப் பெருவழுதி என்னும் பாண்டி மன்னர் இருவர்.

48. கருநட அரசர் சமண மதத்தினர்.

49. மதுரைக் கடைச் சங்கம் இருந்தது, கி. பி. 2 ஆம் நூற்றாண்டிற்கு முன்.

50. தமிழ் முச்சங்கமும் நடைபெற்ற மொத்தக் காலம் 3940 ஆண்டுகள்.

51. பரதவர் என்பார் தமிழ் நாகரிக மக்கள்; அவர் ஆண்ட இந் நாடு 'பரத கண்டம்' எனப்பட்டது.

52. வசிட்டரின் மரபினர் ஆரியர், விசுவாமித்திரரின் மரபினர் தமிழர்; முன்னவர் சிவத்தை இகழ்பவர், பின்னவர் போற்றுபவர்.

53. தமிழந்தணர் முத்தீ வேள்வி வேட்டனர்; அவ் வேள்வி, உயிர்க் கொலை இல்லாதது!

54. விவிலிய ஆபிரகாம் நாயனர் முதலானவர்கள் தமிழரே.

55. தமிழர்க்குத் தனியாக வேதமிருந்தமை பற்றி, 'ஐதரேய பிராமணம்' கூறியது.

56. மகாவீரரும் தமிழர்.

57. இ. மு. 2 ஆம் நூற்றாண்டிலிருந்து கிரேக்கரிடத்தில் வான் நூலாராய்ச்சி தோன்றியது.

58. ஓரை, தமிழ்ச் சொல்.

59. பண்டைத் தமிழர் நாகரிகம், ஏட்டுச் சுவடியால் நடை பெற்றது.

60. வட்டெழுத்துக்கள் 6000 ஆண்டுகளாக வழங்குவன.

61. முரஞ்சியூர் முடிநாகராயர், முதுகுடுமிப் பெருவழுதி, நெட்டிமையார், நெடும்பல்லியத்தனார், தலைச் சங்கத்தினர்; தொல்காப்பியம் இவர்க்கும் முற்பட்டது; அது, தலைச்சங்க காலத்து நூலே.

62. கபாடபுரம் என்பது திருச்சீரலைவாய்.

63. குமரி நாடு கடல் கொண்டது ஏறக்குறைய கி. மு. 2000 இல்.

64. நக்கீரனார் காலம் கி. பி. முதல் நூற்றாண்டு.

65. எத்துணைப் பெரியாரும் பிழைபடுதல் இயல்பு.

66. சம்பந்தர் கி. பி. 630 இல் அருளொளியிற் கலந்தார். அப்பர் அதற்கு 4 ஆண்டுகட்குமுன் அருளொளியிற் கலந்தவர்;

67. "நூலே கரகம் முக்கோல் மணையே" என்னுந் தொல்காப்பிய நூற்பாவில் நூல் என வந்தது பூணூலன்று, கலைநூல்; துறவிகட்குப் பூணூல் இல்லை.

68. கி. பி. 9 ஆம் நூற்றாண்டுக்கு முன் இருந்தவர் இளம்பூரணர்.

69. மாணிக்கவாசகர் காலத்தில் தில்லை நகர்க்கருகில் கடல் இருந்தது; திருஞானசம்பந்தர் காலத்தில் வற்றி எட்டிச் சென்று விட்டது.

70. அறுபத்து மூவரில் மாணிக்கவாசகராற் குறிக்கப்பட்டவர் இருவர்; அப்பர் சம்பந்தரால் பதினைவர்.

71. சுத்த மாயையின் பெயராகிய 'மாமாயை'யும், 'ஆணவம்' என்னும் மூல மலப் பெயரும் மாணிக்கவாசகர் நூல்களில் வரவில்லை.

72. 'நம்பியாண்டார் நம்பிகள்', 'இராசராச அபயகுல சேகர சோழர்' காலம் கி. பி. 10 ஆம் நூற்றாண்டின் இறுதியில்.

73. திருவாசகம் திருக்கோவையார் பழந்தமிழ் வழக்குடை யன; தேவாரம் புதுத் தமிழ் வழக்கு.

74. கல்வெட்டுக்களில் திருவாதவூரடிகள் பெயர் காணப்படவில்லை.

75. பண்டு தொட்டே தில்லையம்பலம் பொற்றகடு வேயப் பட்டு வந்தது.

76. 'மற்ச புராணம்', 'வாயு புராணம்' பழைய புராணங்கள்; பின் வந்தவை, 'அக்கி புராணம்' முதலிய ஒன்பது புராணங்கள்; 'விஷ்ணு புராணம்' முதலியன 10 ஆம் நூற்றுண்டுக்குப் பின்; இவை பழைய பதினெண் புராணங்களிற் சேராதவை. பழைய புராணங்கள் கி. பி. 2 முதல் 6 ஆம் நூற்றுண்டுக்கு இடைப்பட்டவை. புராணங்களுக்கு முந்தியது, வான்மீகி இராமாயணம்.

சிந்தனைச் செல்வம்:

இத்தனை ஆராய்ச்சி முடிபுகளுக்கு அடிகள் எவ்வளவு சிறந்த ஆராய்ச்சியாளராய் இருந்திருக்கவேண்டும். சிந்தனைச் செல்வம் அடிகளுக்கு மிகுதி.

மனம் நினைக்கும்; சிந்திப்பது சித்தம்; துணிவது புத்தி; ஊக்கங் கொள்வது அகங்காரம்: அகங்கரிப்பது, அஃதாவது அகம் உறைப்புக் கொள்வது, ஊக்கத்துடன் முனைந்து நிற்பதாகும்; அகங்காரம் என்னுங் கருவி, நன்மையிற் செல்லும் போது நற்கருவியாய் நின்று உதவுகிறது. மனத்தின் பகுதியாய்ச் சித்தம் சிந்திக்கும் என்பதை மாதவச் சிவஞான முனிவரும் தமது பேருரையில் (சிவஞான பாடியம், சூ. உ. அதி. உ. ஆங்கார தத்துவம்) நன்கு விளக்கினார். இங்ஙனம் நான்கு அந்தக்கரணங்களும் நன்கு மலர்ந்திருப்பவர்க்குப் புறக் கருத்துக்களை அகத்திற் கொண்டுபோய் ஆராய்ந்து முடிபு காண்பது நன்கு நிகழ்கிறது.

"சிந்தையீர், உமக்கொன்று சொல்லக் கேண்மின்" என்றார் அப்பர்; மனிதரைச் 'சிந்தையீர்' என்றழைப்பதனால், ஆராய்ச்சி செய்யும் சிந்தனைச் செல்வம் மக்களுக்கு எவ்வளவு முக்கியம் என்பது சொல்லாமலே விளங்கும். சிந்திக்கும் சிறப்பு, மக்களை முன்னேற்றுகிறது; அந்தக்கரணங்கள் அத்தனையையும் நன்கு மலர

வைக்கிறது; வித்தைக் கருவிகள் விளக்கும் கலைத்திறனை மேம்படுத்துகிறது; தூய்மைக் கருவிகளால் அமையும் அருட்கலை பெருகவும் உதவுகிறது. ஆராய்ச்சித் திறங்கள் மக்கட்கு இங்ஙனமெல்லாம் நன்மைகள் கூட்டுகின்றன!

அடிகளார் வாய்மொழிகள் சில :

1. "அறிவைப் பண்படுத்து விளக்கமுறுவிக்க வேண்டுமென்னும் அவாவுடையாரெல்லார்க்கும் நூலாராய்ச்சி என்பது இன்றியமையாது வேண்டப்படும் தலைமையுடைத்து.

2. "தாம் இன்புறுவது குறித்தாயினும் பொருளீட்டி....... வாழ்வது குறித்தாயினும் பல நூற் பொருளை உணர்ந்து சேறல் நூலாராய்ச்சி யாகாது.

3. "புகழ்வேண்டுவார் நூற்பொருளாராய்ந்தா ரெனப்படார்."

4. "நடுநிலை திறம்பாது பல நூற்பொருளும் நுண்ணிதாக அளந்து ஆராய்ந்து உளங்கொளப் பயின்று புலமை நிரம்புதல்... பெறப்படும்.

5. "ஒன்றோடொன்று தலைமயங்கிக் கிடக்கும் நூல் கலவையுள் நல்லன தெரிந்தெடுத்துக் கோடற்கும் அல்லன ஒழிதற்கும் உதவு(வது).

6 "நூல்களில் நுட்பப் பொருள் தேர்ந்து தாம் இன்புறுதற்கும் பிறர் இன்புறு வகையான் அவர்க்கு இனிது விளக்குதற்கும் சிறந்த கருவியுமாவது.

7. "நூலாராய்ச்சி செய்வாரும் வேறே, நூலறிவு கொள்வாரும் வேறே.

8. "நூலாராய்ச்சி செய்ய விரும்புவார்க்கெல்லாம் மிகுந்த நுட்பவுணர்வும், பரந்த நூலறிவும் உளவாதல் வேண்டும்;

9. "நுட்ப வுணர்வுதானும் ஒருவர்க்குப் பிறவியிலே இனிதமைவதன்றி இடையிலே அரும்பி மலர்வதன்று; ஒருவன் தன் தாயகட்டிற் கருக்கொண்டவாறே, அவனறிவில் தானுங் கருக்கொண்டு சிறிது முகிழ்த்துப் பின்னைப் பயிற்சி வயத்தானும் நூற் புலமையானும் முறுக்குடைந்து விரை பரப்பி விரிவது.

10. "இயற்கையிலே வாய்ப்பப் பெற்றாரன்றி ஏனையோர் அதனை அடைதுமென மேற்கொண்டு புகுதல் பெரிதும் இடர்ப் படுதற்கேதுவாம்.

11. "சொன்னோக்கம், பொருணோக்கம், அதனுரை நோக்கம், அவ்வுரையின் முன்பின் உள்ள இயைபு.........இலக்கண நூற் கருத்து, முதலிய(ன)......கண்டு (தேறுதல் வேண்டும்.)

12. "புடைபடஒற்றி அளந்தாராய வல்லார்க்கு விளங்கும்.

—காஞ்சியாக்கம், பக். 11, 12, 31, 32.

13. பொதுமக்களின் நன்மையையும் முன்னேற்றத்தையும் கருதும் நல்லறிஞர்கள்......இவ்வாறு கொள்ளத் தருவன தள்ளத் தருவன இவ்விவை என்பதைப் பொதுமக்களுக்கு நன்கு எடுத்துக் காட்டி......தமக்கும் பிறர்க்கும் பயன்பட ஒழுகுதல், இஞ்ஞான்று இன்றியமையாது செயற்பாலது.

14. மெய் வரலாறுகளினாலேதான் ஐயுறவுக்குச் சிறிதும் இடனின்றி நன்கு தெளிய (முடியும்).

15. தக்க சான்றுகளில்லாமையால்......வெறுங் கதைக ளாகவே இருக்கின்றன.

16. "நூலாராய்ச்சி என்பது இவ்வாறெல்லாம் அமைந்து கிடப்பது".

— கடவுள் நிலைக்கு மாறுன, பக். 66, 42.

அடிகளார் தமிழகத்தில் மிகப் பெரிய ஆராய்ச்சியாளர்; தமிழகம் அவர்களை இழந்து தவிக்கிறது. எல்லாம் வல்ல திரு வருளே தமிழ்மக்களின் குறை அறிந்து உதவவேண்டும். பன் மொழிப் புலமையும், பன்னூற் பரப்பறிவும், மிக நுண்ணிய இயற்கையுணர்வும், மெய்ப்பொருள் வாழ்க்கையும், ஆசிரியத் தலைமையும், நடுநிலை மாட்சியும், அருள் எழிலும் உடையராய் இறைவன் விரைவில் எழுந்தருளி இந் நாட்டை உய்விப்பானாக!

க. மறுப்பழகு

'குட்டுப் பட்டாலும் மோதிரக்கையால் குட்டுப்படவேண்டும்' என்று சொல்வது வழக்கம். 'மறுப்பாயிருந்தாலும் ஆசிரியர் மறைமலை அடிகளாரால் மறுக்கப்பட்டால் பாதகமில்லை', என்று சொல்வது தமிழகத்தில் ஒரு வழக்கமாயிருந்தது. இதற்கு எடுத்துக்காட்டு இல்லாமலும் இல்லை.

1. சிவபெருமான் தண்டித்தால் வானவர்க்கு வெற்றி; அப்படிக் கூறுபவர் மாணிக்கவாசகர்!

"நயனங்கள் மூன்றுடைய நாயகனே தண்டித்தால்
சயமன்றோ வானவர்க்குத் தாழ்குழலாய் சாழலோ"
(திருவாசகம், திருச்சாழல், 4)

2. நினக்குப் பகைவர் எனப் பெயர்பெறுதலும் எளிதன்று; அதற்கு அவரெல்லாரும் தவம் புரிந்திருக்க வேண்டும். அவ்வாறு சொன்னவர் மாங்குடி கிழார்.

"தோற்றோர் மன்ற நின்பகைவர்" (புறம், 26 : 16)

3. "தேவர் குறளும் திருநான் மறைமுடிவும், மூவர் தமிழும் முனிமொழியும்" என்னும் திருமொழியில் 'முனிமொழி' எது என்பது பற்றி அடிகளின் இளங்காலத்தில் அறிஞர்களிடையே ஓர் ஐயம் நிலவியது. அக் காலத்தில், 'திராவிடப் பிரகாசிகை' என்ற ஒரு நூல் எழுதிய சபாபதி நாவலர் என்பவருக்கும், அடிகளாருக்கும் ஆசிரியராகிய சோமசுந்தர நாயகருக்கும் இது பற்றி ஒரு கருத்து மாறுபாடு இருந்தது.

சபாபதி நாவலரும் பெரும் புலவர்; திருவாவடுதுறை ஆதீனத்தால் மிகவும் மதிக்கப் பெற்றவர். அவ்வாதீனத்தின் புலவராக விளங்கியவர்! யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர்க்கு மாணவர்; உரைநடை கைவந்தவர்.

சோமசுந்தர நாயகரின் கருத்து, "முனிமொழி' என்பது, சமக்கிருதத்திலுள்ள 'வியாச சூத்திரம்' ஆகிய 'மகா வாக்கியம்' என்

யது. சபாபதி நாவலரின் கருத்து, மாணிக்கவாசகர் திருமொழிக ளாகிய திருவாசகம், திருக்கோவையார் என்பது.

மறைமலை அடிகளார் தம் ஆசிரியர் நாயகர் அவர்களைத் தெய்வம் எனப் போற்றுபவர்; நாயகர் கருத்தை நிலைநிறுத்த மறைமலை அடிகளார் முற்பட்டு, 'முனிமொழிப் பிரகாசிகை' என்று ஒரு மறுப்பு நூல் எழுதினர். அந் நூலில் சபாபதி நாவலர் கருத்து மறுக்கப்பட்டது. சிறிது காலத்தில் நாவலர் அவர்கள் இறக்குந் தறுவாயில் இருந்தபோது, நாகை வேதாசலம் என்பவர் (மறைமலை அடிகள் என்பார்க்குப் பிள்ளைமைப் பெயர்) மறுப்பெழுதினர் என்றால், அதில் தமது கருத்து மறுக்கப்பட்டிருப்பினும், தமிழ்ச் சுவை விஞ்சியிருக்கும்; மறுப்பழகு மேம்பட்டிருக்கும்; தமக்குப்பின் இலக்கண இலக்கியத் திறமும், தமிழ் நலமும் மேம்படும்படி சிறந்த உரைநடை எழுதக் கூடியவர் தமிழகத்தில் நாகை வேதாசலமே என்று மகிழ்ந்தும் வியந்தும் பாராட்டிப் பேசி, அடிகளையும் நேரில் பார்க்க விரும்பினர் என்று ஆர்வமாய்ப் பலரும் சொல்லுவர்.

4. ஒட்டக்கூத்தர் என்னும் பெரும்புலவரும் தாம் இறக்குந் தறுவாயில், "புகழேந்திப் புலவர் வெண்பாக்களில் இரண் டொன்றைப் பிழிந்து எனக்கு மருந்தாகக் கொடுங்கள்" அஃதாவது அவர் வெண்பாக்களின் சுவைகளை எடுத்துச் சொல்லுங்கள் என்று சொல்லி அவற்றின் அழகைப் பாராட்டிப் பேசினர் என்று கூறுத லும் உண்டு.

மறுப்புச் சிறப்பு :

மறுப்பு நூல் எப்போதும் உணர்ச்சி மிகுக்கும். அதனால் பெருமித நடை கைவரும். நுண்ணுணர்வும் நூல் ஆராய்ச்சியும் அம் மறுப்பைக் கற்பார்க்கு மிகப்பெருக்கும். மறுப்பு என்பது ஆராய்ச்சி யோடு நிகழ்வதாதலால், மாணவர்க்கு நுட்பத் திறன்களுடன் புலமையும் மிகும்.

உரையாசிரியரின் உரைநடைச் சிறப்பும், ஏனைய உரை நடை யாசிரியர்களின் நூலும் இம் மறுப்புச் சிறப்பினாலேயே எழுச்சியும் கிளர்ச்சியும் மிகுத்தன. எந்த எழுத்தும் பேச்சும், வெளிப்படை யாகவோ உள்ளுறையாகவோ, பொய்க் கருத்துக்களை மறுத்து மெய்க் கருத்துக்களை நிறுவும் முறையை மேற்கொள்ளவில்லை

யென்றால், அந் நூல்களைப் படிப்பதற்கு அவ்வளவாகச் சுவைத் திறன் மிகாது.

செய்யுள் நடையில்கூட இம் மறுப்புச்சிறப்பு மேம்பட்டிருப் பதை, அவற்றைக் கற்பார் நன்கறிவர். கூந்தலின் மணம் செயற்கை யானதன்று என மறுத்து மொழிந்த 'இறைவன் தமிழ்' இங்கு நினைவு கூர்தற்குரியது.

ஆசிரியர் திருவள்ளுவர் இவ்வாற்றால் "மெலியார்மேல் மேக பகை" என்று கூறிப் பகைமாட்சியென ஓர் அதிகாரமும் நிறுவினர்.

நக்கீரர், நெற்றிக்கண் காட்டிய முக்கணரை மிகத் துணி வுடன் எதிர்க்கும் உள்ளம் வாய்ந்தவராய் விளங்கினர்.

ஆய்வதினும் மேம்பட்டது மறுக்குந் திறன்; ஆய்வு முறை அறியாதார் மறுக்கப் புகுதல் பேடிகை வாளாண்மை போன்றது. ஆராய்ச்சி முடிவை உரைப்பதற்குத் தேவையான துணிவைவிட, மறுத்துக் கூறுவதற்கு மிகப் பெருந்துணிவு வேண்டும். நக்கீரனருக்கு அத் துணிவு மிகுந்திருந்தது.

மறுப்புக்கு உட்படாத, குற்றம் தீர்ந்த நூல்கள் தமிழிற் பல; எல்லாவற்றினும் பார்க்கத் திருக்குறள், மறுப்புக்கே இட மில்லாத அழகிய மூல நூல். 'சீத்தலை' என்னும் ஊரில் திகழ்ந்த சாத்தனார் என்னும் பெரியவருக்கு அந்நூல் ஒரு மருந்துபோல் உதவியது. பிழையற்ற நூல்கள், தக்கோர் வாழ்நாளை மிகுத்து வருகின்றன என்ப; மண்டை இடி தீர்த்த மாமறை நூலாய்த் தெய்வத் திருக்குறள் மேம்பட்டிருந்தது. திருக்குறள் பயின்று அதனால் வாழ்க்கையில் அமைதியைப் பெற்றவர் பலர். மறுப்பு மாட்சியாகிய முறை, தமிழ்க்கு அச் சிறப்பை நல்கியுள்ளது.

மறுக்கப்படுமோ என்று ஒரு நினைவும் இருந்தால் மட்டுமே, நல்ல நூல்கள் வெளிவரும்; இதற்காகவே, தமிழகத்தில் சங்கமும், நூல் அரங்கேற்றமும் முன்பு விளங்கின; மறுக்குந் துணிவுமிக்க மாபெரும் புலவர் நக்கீரனார் சங்கத் தலைவராய்த் திகழ்ந்தார்; சிறந்த நூல்கள் வெளிவருதற்கே இச் செயல் முறைகள். 'சங்கத்தமிழ்' என்னும் பெயர்வழக்கு இப் பெரும் புகழ்க்கு உரியது.

மறுப்புக்கள் பல் வகை :

பொதுவாக, 1. மாற்றார் கேட்பதுபோல் தாமே கேள்விகளை அடுக்கிக் கொண்டு, அவற்றுக்கு விடை கூறுதல் மறுப்பு முறையில் ஒருவகை.

2. முன்னூல்களில் வெளிவந்திருக்கும் கருத்துக்களை அவை ஒவ்வா என்று வேறு கூறுதல் மற்றொருவகை.

3. எதிர்க் கருத்துடையார் தம் காலத்திலுள்ளவராய் இருந்தால், பெயரை வெளிப்படுத்தாமல் எல்லார்க்கும் உரியவாம்படி மறுப்புத் தெளிவித்தல் இன்னொரு முறை.

4. தம் காலத்திற் கருத்து வேறுபட்டோர் இன்னாரென்று தெரிந்து அவர்கள் தகுதிக்கு ஏற்ப மறுப்பெழுதுதல் பிறிதொரு முறை.

5. கருத்து வேறுபட்டோரின் செம்மல் சிதைத்து மீண்டும் அவ்வாறு தலைப்படாமல் திருந்தும் முறையில் விளக்கந் தருதல் வேறொரு முறை.

6. மறுப்பெழுதினார்க்குத் திரும்ப மறுக்கும் முறையும் உள்ளதாதலின், அதற்கும் மறுப்பெழுதினாரை முடிவாய் மறுக்கும் திறமும் காணப்படும்.

எல்லா வகைகளிலும் ஆசிரியர் மறைமலை அடிகளார் வல்லவர். இப் பயிற்சி அவர்களுக்கு இளங்காலம் முதலே ஒழுங்குபட்டு வந்திருக்கிறது.

மறுப்புக்கு அடிப்படை :

1. அளவையியல்

மறுப்பு முறைக்கு அடிப்படை, அளவையியல், (தருக்கம்). இலக்கண இலக்கியப் பன்னூல் ஆய்வு முதலியனவெல்லாம் இதற்குத் துணை; எழுதுதலும், பேசுதலோடு ஒக்கும்; பேசுதல், எதிர்க் கருத்துடையாரிடம் நேரில் இருந்து பேசுதற்குரியது. அது நேர் எதிர்ப்பாடாய் முடிகிறது. ஆதலால் எழுதுதலைவிடப் பேசுதலுக்கே வல்லமை மிகுதி.

2. சொல் நலம்

பேசத் தெரியாதவரைப் பற்றி ஆசிரியர் திருவள்ளுவர் 'அவையறிதல்', 'அவை அஞ்சாமை' முதலிய அதிகாரங்களைத் தமது திருமறையில் வைத்து அழகு செய்திருக்கிறார்; கற்றோர்க்கு இச் சொல்வன்மை முக்கியமாதலின், 'நா நலம் என்னும் நலனுடைமை யா நலத்தும் உள்ளதன்று' எனவும், அதற்குக் காரணம், 'ஆக்கமும் கேடும் அதனால் வருதலால்' எனவும், 'ஞாலம் விரைந்து தொழில் கேட்கும்' எனவும், 'சொல் வன்மை' அதிகாரத்திலும் திருவள்ளுவர் விளக்குவார்.

3. அகத்தூய்மை

கல்வி வல்லவர்கள், அப்போதுதான் மணங்கமழும் மலர்கள் ஆவார்கள்; அல்லாதார் வெறும் பூக்கள் போல்வாரே; அவை அறிந்து, குறிப்பறிந்து அவை அஞ்சாது, சொல் வழங்குவோர், கற்றோருள் கற்றார் எனப்படுவர். கூறியதே கூறாமல் மிகச் சுருக்கமாக மறைநூல் உதவிய திருவள்ளுவர் சொற்களைப் பற்றிச் சொல்லும்போது மட்டும் 'சொல்லின் தொகை யறிந்த தூய்மை யவர்' என்பதை இருமுறை சொல்லுகிறார். அங்ஙனம் சொல்லும் வகையிலும், தூய்மை என்பது சொல்லின் வழியில் உண்டாகிறது என்பதை நன்கு புலப் படுத்துகிறார்.

'அவாக்' கெட்டால் 'தூய்மை' உண்டாகும். அந்தத் தூய்மை 'வாய்மை'யால் வரும். 'வாய்மை' பெரும்பாலும் 'வாய் மைச் சொல்லால்' வெளிவருவது; 'அகம் தூய்மை'யென்பது இது. அதனால் உள்ளத்தால் பொய்யாது ஒழுகுதலைப்பற்றி ஆசிரியர் கூறுவார். வாய்மையை உரைப்பதனால், 'வாய்' என்று முகத் தில் ஓர் உறுப்பும் பெயர் பெற்றிருக்கிறது. சொற்கள் இவ்வாறு அகந் தூய்மையாய் வெளிப்படுகின்றன.

ஞான நூல்களில் 'சொல்' என்பது தூய மாயையில் விந்துவில் (சக்தி தத்துவத்தில்) தோன்றுவதென்று சொல்லப் படும். மறை மொழிகள் அந் நிறைமொழிகளால் வெளிப்படுவ தனால் 'சாதாக்கிய தத்துவத்'தில் மறைமொழி தோன்றுகின்றது

என்பர்; சிவலிங்க நிலையில், மறை நுட்பக் கருத்துக்கள், 'ஓம்' என்பதும், 'நமசிவாய' என்பதுமாக உள்ளன.

அந் நிலையெல்லாம் கைவந்த பெரியவரே மறைநூல் அருளிய திருவள்ளுவர். அதனால், எல்லா ஆசிரியர்களுக்கும் திருவள்ளுவர் மேம்பட்டவர் ஆகின்றார்.

தூய சொற்கள், ஞான நூல்களில் எழுத்து, சொல், மந்திரம் என்று மூவகைப்படுகின்ற 'சொல்லுலக'மாகக் கூறப்படும்; உலகத்திற் காணப்படும் உடல் முதலியவைகளும், அவற்றின் நுட்பங்களும் உலகத்திலுள்ள நுகர்பொருள்களும் மேற்காட்டிய, சொல்லால் உணர்த்தப்படுவனவே; இவை 'பொருளுலகம்' எனப்படும். சொல்லுலகம், பொருளுலகம் இவ்விரண்டும் சொல்லின் வகையாதலால் அகந்தூய்மை உடையார்க்கே அவை எளிதிற் கிட்டுவனவாய் இருக்கின்றன. இவற்றிற் பொருளுலகம் என்பது, சொல்லின் 'அர்த்தம்'; ஆதலால் சொல்லுலகமே சிறந்ததாகின்றது. 'விரைந்து தொழில் கேட்கும் ஞாலம்' என்னும் மறைமொழி இவ் வடிப்படையுடையது. சொற்கள் வாயின்மூலம் அஃதாவது வாய்மையின் மூலம் பிறர்பொருட்டு வெளிப்படுகின்றது. அகந் தூய்மையாகிய வாய்மை உடைய பெரியோரே இதற்குத் தகுதியுடையவர்.

4. இனியவை கூறல்

அதனாலேதான் திருக்குறள் திருமறை 'இனியவை கூறல் கூறியது. 'படிறு இல்லாமல் செம்பொருள் கண்டார் வாயில் வெளிவருவ'தென்று அவ்வதிகாரத் தொடக்கத்திலேயே தெளிவித்தது. 'இன்சொல்' என்றும், 'அதுவே அறம்' என்றும், 'அதனால் வறுமை உண்டாகாது' என்றும், 'தீமைகள் தேய்ந்து விடும்' என்றும், 'தக்க பயன் தரும்' என்றும், 'பண்புடைமைக்கு அடையாளம்' என்றும், 'பெருந்தன்மை யுடையது' என்றும், பலவாறுகச் சொல்லிக், கனிபோன்ற இன்சொல்லைத் தமக்கும் பிறர்க்கும் இன்பம் பயக்கும் இன்சொல்லை வழங்காமல், மக்கள் ஏனோ வன்சொல்லை வழங்குகின்றனர் என்றும் இரக்கத்தோடு அருள் செய்கின்றது.

பேசுவதன் பிழிவே எழுதுதலாதலின், இங்ஙனம் சொற்கள் பேச்சு எழுத்து என இரண்டு நிலைகளிலும் உலகுக்குப் பயன்பட்டு

வருகின்றன. இரண்டிலும் முதன்மை, பொருள்களல்ல; சொற்களே; ஆதலால் இவற்றைப் பயன்படுத்தும் ஆற்றலுடைய புலவர் பெருமக்கள் அகந் தூய்மை வாய்ந்தவராய் இருப்பது இன்றியமையாதது.

தமிழ்மொழியைப் பயில்வோர் பெரும்பாலார்க்கு இந்நோக்கம் இருக்கிறது. மற்ற மொழிகளைப் பயில்வோரிலும் இந்நோக்கம் இருக்குமிடங்களில், பேச்சாலும் எழுத்தாலும் உலகுக்குப் பெரும் பயன் உண்டு. நூல் நிலையங்கள் இதனால் 'கோயில்' என்றே மதிக்கப் பெறுகின்றன. தூய்மை, இங்ஙனம் எங்கும் போற்றப்படுகின்றது.

5. வாதத்திறன்

பேசத் தெரியாதவர்கள் பேச்சுக்கு ஏற்றவர் அல்லர்; எதனையும் உண்மையோடு பேசுதலே 'வாதம்' எனப்படும். சொற்களைக் கையாளத் தெரியாமல் அஃதாவது பேசத் தெரியாமற் பேசுதல், தூய்மையை இழத்தலாகும், வாழ்க்கைக்கே அது தோல்வி நிலையை உண்டாக்கும் (தோல்வித் தானத்தை). அகந் தூய்மையால், வாய்மைச் சொற்கள் வெளிப்பட்டுத், தமக்கும் பிறர்க்கும் வாழ்க்கையொழுக்கமே அமைவதானல் மட்டுமே, வாழ்க்கையே தூய்மையாய் அது 'வெற்றித்தான' மாகும். அல்லாவிட்டால் வெறும் சொல்லலைகளாகப் பேச்சு நிகழ்ந்துவிடும்; அது, வெற்றுக் கற்றலாகிய் கற்றுக் குட்டியின் இயல்பு; 'நிற்க அதற்குத் தக' என்னும் மறைமொழி எவ்வளவு அழுத்தமும் ஆழமும் முதன்மையும் உடையது என்பது இதனல் விளங்கும். வாழ்க்கைக்கு வராத கல்வி, வெற்றுக் கல்வியே.

'தோல்வித் தானம்' அளவை முறையில் இருபத்திரண்டு வகைகளாய் உள்ளன. ஆசிரியர் மறைமலையடிகள் இவ்வகைகளை நன்கறிந்த பெருமானர்; 'முதற் குறள்வாத நிராகரணத்'தில், இத் தோல்வித்தானங்களில் பாதிக்குமேற் குறித்து, எதிர்ப் பக்கத்தவர் முறை பிறழ்ந்து பேசுதலை அடிகள் குறித்திருக்கிறார். வகையறிந்து மறுப்பெழுதும் ஆற்றலாய் அவர் எழுத்துக்களும் பேச்சுக்களும் (விரிவுரைகள், நடைமுறைப் பேச்சுக்கள்) மறுப்பழகு மிகுந்துள்ளன.

மறுப்பில் அழகு :

இதில், அழகு என்பது, வெறுங் கற்றல் அன்று; மணங் கமழும் மலரென விளங்குபவராய்ச், செம்பொருள் கண்டவராய்த், தூய வாழ்க்கை உடையவராய்ப், பயனிலாச் சொல் சொல்லாதவ ராய், அரும்பயன் ஆய்பவராய், இவ்வாறு அகந்தூய்மை உடையவ ராய், அதனால் சொல்லின் தொகை யறிந்த தூய்மையவராய்க், கற் ருருள் கற்றவராய்ப், பேசும் சிறப்பாகும். அடிகள் இவ்வழகுச் சிறப் புடைய வெற்றித் திருஉடையவர்! அடிகளார் நூல்கள் எல்லா வற்றிலும் இம் மறுப்பழகு மிகுந்து, தூய்மைக்குப் பாடுபடு கின்றது.

'ஏனோ இவ்வாறு மறுப்பு முறைகளில் அடிகளார் ஈடுபட வேண்டும்?' என்று எண்ணும் அறிஞர்களும் உண்டு. காரணம் மேலே காட்டியவற்றால் விளங்கும்.

வாழ்க்கைப் புரட்சி :

'அறத்தொடு படுத்தல்' என்று தமிழகத்தில் நெடுங்கால மாகவே இப் புரட்சி முறை நடந்து வருகிறது. புரட்சிமுறை என்பது மறுப்பழகுதான். வாழ்க்கையிலேயே அங்ஙனம், மறுத்தொழுகு தல், அஃதாவது: மறத்தை மறுத்து அறத்தொடு படுத்தல் என் பது தமிழர் வாழ்க்கை முறை; இது, தமிழர் நாகரிகம்; தொன்று தொட்ட மலத் தொடர்பு இருத்தலால், மறம் நிகழ்வது இயற்கை; அதை மறுத்து வென்று அறத்தின் வழி ஒழுகுவதுதான் சிறப்பு.

ஒரு தலைவி தன் காதலனை அற முறைமையில் காதலிக் கின்றாள். பெற்றோர்க்கும் மற்றோர்க்கும் இது இணக்கமில்லாத தாய்த் தோற்றுகிறது. அந் நிலையில், தன் சுற்றத்தார்க்காக அறத்திலிருந்து வழுவுதல் முறைமையற்றது என்று உள்ளம் உறுதி கொண்டு, தலைவி தன் தோழியினிடம்,

> "வள்ளி கீழ்விழா; வரைமிசைத் தேன்தொடா;
> கொல்லை குரல்வாங்கி ஈனா மலைவாழ்நர்
> அல்ல புரிந்தொழுக லான்"

என்று வருந்திக் கூறி அறமுறைமையையே பின்பற்ற விரும்பு கின்றாள்.

'வள்ளிக் கிழங்கு மிகுதியாக நிலத்தில் பெருகுதலும், மலையுச்சியில் தேன் வண்டுகள் தேனடை சேர்த்தலும், கொல்லையில் தினை முதலிய பயிர்கள் கதிர் தருதலும் இம் மலையில் இனி நிகழமாட்டா' என்னும் உலகியற்கை எவ்வளவு சிறந்ததா யிருக்கிறது! மலைவாழ்நர் முறையற்றதைச் செய்வதனால் ஓரறிவு உயிர் முதலிய சிற்றறிவு உயிர்கள்கூட, உதவா என்று, அவள் கடவுளின் அறத்திறத்தை, புரட்சி முறையை, மறுப்பழகை, வாழ்க்கையொடு படுத்து, வல்லாங்கு பேசுகின்றாள். சங்கச் செய்யுளாகிய இது, தமிழகத்தில் அறத்தொடு படுத்தலை அருமையாக விளக்குகிறது.

இவ் வாழ்க்கைப் புரட்சியே இடைக்காலத்தும், இக்காலத்தும், எக்காலத்தும் தொடர்ந்து நிகழ்ந்துவருகின்றது.

நூற் புரட்சி :

பொதுமறை நூலாகிய திருக்குறளை அருளிச் செய்த திருவள்ளுவ தேவர் அறத்துப்பாலை முதலில் நிறுத்தி, அறத்தால் பொருளையும் இன்பத்தையும் மக்கள் அடைந்து வாழ்ந்துவந்தால் மட்டுமே அறவோன் ஆகிய ஆண்டவன் திருவருளைத் தலைக்கூடிப் பேரின்பம் அடைய இயலும் என்று உண்மை கண்டு,

> "அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்
> பிறவாழி நீந்தல் அரிது"

என்று அருளிச் செய்தார்.

ஐம்பெருங் காப்பியங்களுள் தலைசிறந்ததாய்த் திகழும் இளங்கோவடிகளின் சிலப்பதிகாரம், கடைசியாய்ப்,

> "பரிவும் இடுக்கணும் பாங்குற நீங்குமின் ;
> தெய்வம் தெளிமின், தெளிந்தோர்ப் பேணுமின் ;
> பொய்யுரை அஞ்சுமின், புறஞ்சொற் போற்றுமின்,
> ஊனூண் துறமின், உயிர்க்கொலை நீங்குமின்,
> ....
> செல்லுந் தேயத்துக் குறுதுணை தேடுமின்,
> மல்லன்மா ஞாலத்து வாழ்வீர் ஈங்கு"

என்றெல்லாம் அறவாழ்க்கையை வற்புறுத்துச் சென்றது.

அடுத்துத் தோன்றிய தேவார திருவாசகத் திருமுறைகள் இந்த அறப்பயனை நன்கெடுத்துக் காட்டும்; கடவுள் அறவாழி யந்தணன்; கடவுளை அறிந்து ஈடுபடுதலே அறப்பயன்; அதனைச் செய்யுமாறு மக்களைத் தெளிவித்து, நாடெங்கும் அப் பெருமான் விளங்குந் திருக்கோயில்களைச் செழிப்பித்தவர் நால்வர் பெருமக்கள்.

"குமரன் திருமால் பிரமன்
கூடித் தேவர் வணங்கும்
அமரன் இருப்பதும் ஆரூர்
அவர்எம்மையும் ஆள்வரோ கேளீர்"

(சுந். தே. திருவாரூர், கரையுங். 9)

"தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்"

(திருவாச. திருவெம். 6)

என்பன தேவார திருவாசக வாய்மொழிகள்!

இராமலிங்க அடிகள் அண்மையில் நமக்குக் கிடைத்த பெரும் புரட்சியாளர். "தமிழகம் முழுதும் திருக்கோயிற் கருவறைகளில் விளங்கும் சிவலிங்கப் பெருமான் "வான் சோதி வடிவினரே" என்று கண்டு, வடலூர் என்னும் தனித் தலத்தையும் ஞான சபையையும் அமைத்துப் பெரும் புரட்சி செய்து, அதனை உயிரிரக்கத்தால் (சீவ காருணியத்தால்) அடைவது எளிது என்று தெளிவித்து, எல் லார்க்கும் பொருந்துகின்ற சன்மார்க்க நுட்பத்தைத் தமது 'திரு வருட்பா'வாலும் பெரிதெடுத்து விளக்கினர்.

"சோறு வேண்டினும் துகிலணி முதலாம்
சுகங்கள் வேண்டினும் சுகமலாற் சுகமாம்
வேறு வேண்டினும் நினையடைந் தன்றி
மேவொ ணாதெனும் மேலவ ருரைக்கே
மாறு வேண்டிலேன் வந்துநிற் கின்றேன்
வள்ளலே உன்றன் மனக்குறிப் பறியேன்;
சாறு வேண்டிய பொழில்வட லரசே,
சத்தி யச்சபைத் தனிப்பெரும் பதியே!"

(திருவருட்பா, சிற்சபை விளக்கம்)

ஆசிரியர் மறைமலையடிகள், நம் கண்ணெதிரில் 75 ஆண்டுகள் வாழ்ந்து, எல்லாத் துறைகளிலும் மறம் மறுத்து அறம் செழிக்கப் புரட்சி செய்த ஈர நெஞ்சினர் ஆவர். அவர் வாழ்க்கையே பொய்களை மறுத்து மெய்களைத் தழைப்பிக்கும்; இந் நிலவுலகில் தோன்றியதிலிருந்து மறையுங் காலம் வரையில், பெரிய புரட்சித் தலைவராய், தம் அரிய பெரிய நூல் வெளியீடுகளாலும் மறுத்தொழுகும் அழகு மிக்கவராய் விளங்கினர். வாழ்க்கையிலேயே இங்ஙனம் மறம் மறுத்தொழுகும் அறச் சிறப்பு மேவினால்தான், நூல்களும் தக்க மறுப்பழகில் மேம்பட்டு, எல்லார்க்கும் நலந் தருவதாய் இருக்கும்.

புலால் மறுத்து, மாறுபா டில்லாத உண்டி மறுத்து, சாதி குலச்சழக்குகள் மறுத்து, பொய்க் கொள்கைகள் மறுத்து, பொருந்தா நாகரிகங்கள் மறுத்து, தாய்மொழியும், தாய்ச் சமயமும் அறியா அறியாமை மறுத்து, பிறந்து பிறந்து இறக்கும் ஆவிகளையும் சிறு தேவதைகளையும் அதி தேவர்களையும் எத்தகைய நெருக்கடியிலும் மறுத்து, மனிதர்க்கு மனிதர் அடிமையாதலை மறுத்து, விடுதலை வீரராய், 'முழுமுதற் சிவத்தின் தமர் நாம், அஞ்சுவது யாதொன்றுமில்லை, அஞ்ச வருவது மில்லை' என்னும் உரம்மிக்கவராய் அடிகள் வாழ்ந்துவந்தனர். வாழ்க்கை வேறு; எழுத்தும் பேச்சும் வேறு என்றிருப்பவர் நற்குணம் இல்லாதவராவார்; நல்லவராகமாட்டார்; மெய்ம்மையில் ஒழுகும் பொய்யடிமை இல்லாத பெரும்புலவராய் அடிகள் திகழ்ந்தார்.

வாழ்க்கை நெடுக, பொய் யுலகத்தை மறுத்து அதனை மெய்யில் திருத்தவே அடிகளார் தம் வாழ்க்கையாலும் நூல்களாலும் மறுப்புக்களை மிகுத்தார்.

'ஏன் மறுக்கிறார்?' ஏதாவது படித்துக்கொண்டு எழுதிக்கொண்டு நாள் கழிக்கலாமே என்றால், காந்தியடிகள் ஏன் ஏதாவது புரட்சி செய்துகொண்டு உழைக்கவேண்டும்?

அது அவரவர் இரக்கவுள்ளத்தைப் பொறுத்தது. இரக்கம் இல்லாமல் தன்னலமே மிகுந்து உண்டுடுத்து மாய்பவராய் இருந்தால், எவ்வகை மறுப்பும் அவர் வாழ்க்கையிலோ நூல்களிலோ இராதுதான். இரக்கம் மிக்க அடிகளார், அவ்வாறு இருத்தல் சற்றும் இயலாது. அவர் அருளிய அறிவு நூல்களைப் பார்த்தால்,

அடிகளார் வாழ்க்கை இனிது புலப்பட்டுவிடும். வாழ்க்கையை நேரில் பார்த்திருப்பவர் எவர்க்கும், அவர் நூல்கள் செய்த மறுப்புப் புரட்சி விளங்காமற் போகாது.

தருக்கமும் இலக்கணமும் :

அடிகளார் ஒப்பற்ற பெரும் புலவராய்த் திகழ்ந்தமைக்குக் காரணம், அவர் வாழ்க்கை இயலின் பெரும் புரட்சியே; எழுத்தும் பேச்சும், இலக்கணமும் தருக்கமும் வாய்ந்தவை.

இலக்கண நெறி அமைந்த நூல் தக்க இலக்கியமாய் அமைந்து திகழும். இலக்கண நெறி ஆராய்ச்சித் திறனை நன்கு புலப்படுத்தும், மிருக்கும்.

எழுத்துக்கும் பேச்சுக்கும் தருக்க நெறியும் இன்றியமையாதது. ஒரு கருத்தை மேற்கொள்வது மேற்கோள்; மேற்கொண்டவர் அதற்கேற்ற காரணமும் விளக்குவர்; எடுத்துக் காட்டுக்களாலும் ஏதுக்களை வலியுறுத்துவர். 'மேற்கோள்', 'ஏது', 'எடுத்துக்காட்டு' என்னும் இம் முறைமையில் நூல்கள் நடவாமற் போனால், மக்கள் உள்ளத்திற்கு அமைதி உண்டாகாது. இலக்கண நெறி, மொழித் திருத்தத்துக்கு உதவும்; தருக்க நெறி கருத்தமைதிக்கு உதவும். 'சிவஞான போதம்' என்னும் மிகச் சுருங்கிய நுட்ப நூல் தமிழகத்தில் தருக்க அமைதியுற்று இம் முறைமையில் எழுந்தது.

'மேற்கோள்' என்பது, இங்கே, எடுத்துக்காட்டன்று. ஒருவர் மேற்கொள்ளும் கருத்தை அது புலப்படுத்துகிறது; வாழ்க்கையில் நடைபெறுவதற்காக அவ்வாறு அவர் மேற்கொள்ளுவதனால், இது 'காட்சியளவை'யிற் சேரும்; நடைமுறையில் நேரிற் காணும் முறை!

காரணத்துடன் கருத்தை மேற்கொள்ளுங்கால், மேற் கொள்வோரின் பேரறிவு சுடர்விட்டு விளங்குகிறது; நின்று நிலைக்கிறது; 'அளவையியல்', 'மேற்கோள் இன்னது, அதற்கு ஏது இன்னது, எடுத்துக்காட்டு இன்னது' என்று ஆசிரியரிடம் ஒரு கருத்தைக் கேட்டுக் கொள்வதற்கு உதவும்; 'இலக்கணம்' என்பது, அம் மூன்றையும் நன்கு சிந்தித்துக் கொள்வதற்கு உதவும்.

'தருக்கம்' 'இலக்கணம்' இரண்டும் அறிவு அளவாய் இங்ஙனம் துணிந்து கொள்வதற்கு உதவுதலின், அவை, 'பொதுவியல்' எனப்படும்.

கேட்டுச் சிந்தித்த பொதுவியலை அழுந்தி நுகர்தலால் கேட்டல் சிந்தித்தலுடன் தெளிதல் நிட்டை என்பனவும் அமைகின்றன; இவை, 'சிறப்பியல்' எனப்படும்.

"ஆசிரியர் சிவஞான முனிவர், பொதுவியல்பு, அளவை முகத்தானும் இலக்கண முகத்தானும் கூறப்பட்டுக் கேட்டல் சிந்தித்தல் என்னும் இரு திறத்தான் உணரப்படும்" என்பர். (சிவஞான போதச் சிற்றுரை, பாயிர விளக்கம்)

பள்ளியில் மாணவர்கள் பயிலும் முறையும் அவர் பயிற்சியிற் காணும் தேர்வு முறையும் 'ஏது என்ன' என்னும் சூழ்நிலையையும், சிந்தனையையும் புலப்படுத்துவனவாகும். கல்வி இவ்வாறு கேட்டலும் சிந்தனைச் செல்வமும் விளைத்து மக்களை மேம்படுத்துகிறது. ஏது கருதலளவையிற் பொருந்தும்.

இனி, எடுத்துக்கொண்ட மேற்கோட் கருத்தும் அதற்குரிய காரணமும், எவ்வளவுதான் தெளிவாயிருந்தாலும், நடைமுறையிற் காணப்படும் எடுத்துக்காட்டுக்களாலேதாம் வாழ்க்கையிற் பின்பற்றுதற்கு எழுச்சி உண்டாகும். பொதுவாக மக்கள் அறிவு நிலைக்கு எட்டாத உலக நடைமுறைகளும் உண்டு; அவையெல்லாம் சான்றோர் உரைகளாகிய எடுத்துக்காட்டுக்களாற் பொள்ளென விளங்கும்; ஆதலால் எடுத்துக்காட்டுக்கள் உரையளவையில் அடங்கும்.

இயற்கையிற் காணப்படும் எடுத்துக் காட்டுக்களும் சான்றோர் உரையாகிய எடுத்துக் காட்டுக்களும் என எடுத்துக்காட்டு இருவகைப்படும்; இயற்கை நிகழ்ச்சி அவரவர்க்குத் தென்பட்டால் மட்டுமே எடுத்துக்காட்ட இயலும். தென்படாத நிலையில், சான்றோர் உரைகள் உதவும். உரைகள் என்பது, சான்றோர் நினைத்துத் தெளிந்தன வாதலால், பிறர்க்கு அவை எட்டுதற்கரியன. அதனால் உரையளவை இன்றியமையாததாயிற்று.

இத் தருக்க நெறி, முறை பிறழாத நூல் நெறி; நூல்கள் எவ்வளவுதான் இலக்கண இலக்கிய நெறியுடையனவாய் இருந்

தாலும், மக்களுக்குத் திருத்தத்தை உண்டாக்கா; முறை பிறழ்ந்து பேசுதலும் எழுதுதலும் தருக்க நெறி அமையாதன என்றும், வாழ்க்கையோடு தொடர்பு படாதன என்றும் சொல்லி, அவற்றைத் தோல்வித் தானங்களாக அறிஞர் ஒதுக்கி விடுவர்.

காண்டல், கருதல், உரை என்னும் அளவைகளாகிய இத் தருக்க நெறி, பின்னும் பலவாய் வேறுபட்டு, நூல்களின் நடை முறைக்கு வழி செய்கின்றன. அவையெல்லாம் 'சிவஞான சித்தியார் சுபக்கத்'தில் அருணந்தி சிவம்' தொடக்கத்திலேயே வைத்து விளக்கி, இம் முறைமையில் மெய்கண்ட நூல்கள் திகழ்கின்றன என்று 'நூல் நெறி' தெருட்டுகின்றூர்.

ஆசிரியர் மறைமலையடிகள் தமது இளமைக் காலத்தில் இலக்கண இலக்கிய நெறிகளில் மட்டுமன்றி இத் தருக்க நெறியிலும் நன்கு பயின்று புலமைமிகுந்தவராதலால், அவரிடம் யாரும் முறை பிறழப் பேசவோ எழுதவோ இயலுவதில்லை. எல்லாம் வல்ல இறைவனது இயற்கை நிலையே இந் நூல் நெறியில் தருக்க நெறியில் அடங்காதது, அப்பாற்பட்டது!

"ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்குச்
சோதிக்க வேண்டா சுடர் விட்டுளன் எங்கள்சோதி" 3: 54. 5

என்றூர் திருஞானசம்பந்தர்.

மற்ற உயிர்களினியல்பும் உலகியற்கையும், முறையுமெல்லாம் வாழ்க்கை நெறிக்கு உட்பட்டவையே; உலகியற்கையிலும் உயிரியற்கையிலும் கலந்து பயன்படும்போது, இறைவனும் தருக்க நெறியோடு பிறழாமலே ஒத்துத்தான் இயங்குவான்.

சான்றோர் நூல்களெல்லாம் இலக்கண நெறியோடு இத் தருக்க நெறியும் அமைந்தவை. மறைநூல் ஆகிய திருக்குறளின் அதிகாரம் ஒவ்வொன்றும், இலக்கண இலக்கிய நெறிகளோடு இத் தருக்க நெறியின் அடிப்படையில் முன் பின் தெரிவிக்க வேண்டிய முறைபிறழா நிகழ்ச்சிகளும் கொண்டுள்ளன.

அதிகாரத்தின் முதலில் பெரும்பாலும் அந்த அதிகாரம் மேற்கொள்ளும் கருத்து அமைந்திருக்கும். அடுத்து, அக் கருத்தை ஏதுக்களால் விளக்கி மேன்மேலும் தெளிவுபடுத்தும். தக்க

உவமைகளும் எடுத்துக் காட்டுக்களும் அதன்பின் அமைந்து, விரும்பும் முடிவுரையோடு அவ்வதிகாரங்கள் இயன்று செல்லும்.

வாழ்க்கையில் நேர்க் காட்சியிற்படும் பொருள்களுக்கே இவ்வாறு தருக்கம் தேவைப்படுமானால், நேரிற் காணவியலாத கடவுட் பொருளை உறுதிப்படுத்தற்கு இத் தருக்கநெறி எவ்வளவு இன்றியமையாததென்பதை எண்ணிப் பார்மின்கள். அதனால், 'சிவஞான போதத்'தில் முதல் நூற்பாவிலேயே 'என்மனார் புலவர்' என்று சொல்லப்படுபவர், 'அளவை நூல் அறிந்தோர்', என்று சிவஞான யோகிகளால் உரைக்கப்பட்டனர்.

மறுப்பு நூல்கள் :

அடிகளார் தம் இளங் காலத்தில் 20 ஆவது அகவைக்குள்ளாகவே 'முதற்குறள் வாத நிராகரணம்' என்று ஒரு மறுப்பு நூல் எழுதினார்; கடைசி காலத்திலும் 'தலைமை உரைமேல் எழுந்த தடைகளுக்கு விடை' என்னும் மறுப்பு நூல் இயற்றினார். மாணிக்க வாசகர் வரலாறுங் காலமும்' என்னும் மாபெரும் மறுப்பு நூலும் இயற்றப்பட்டது. இடைப்பட்ட காலங்களில் எல்லாம், இங்ஙனம் மறுப்பில் வெளிவந்த நூல்களே பெரும்பாலன.

தருக்க நெறியோடும் உண்மையோடும் மாறுபட்டோர்க்கு மறுப்பெழுதாமல் இருக்க இயலுமா? தாம் உண்மை என்று கருதுவது இன்னதென்பதைப் புலப்படுத்தாவிட்டால், வாழ்க்கைச் சிறப்பை யாரும் எய்துதல் இயலாது. மரபும் மாட்சிமைப் படாது. தமிழ் நூல்களின் தொண்டும் பிறவும் விளங்காமற் போம். உலகம் உண்மையில் ஒழுக வேண்டும் என்னும் திருவுள்ள இரக்கமே இதற்குக் காரணம்; புலமை நினைவுகள் நெடுக நிலைப்பன அல்ல; விளக்கங்களில் அடிபட்டுப்போம்.

அடிகளின் இளமை யுணர்ச்சி மிக்க வீறு பெற்றது. இலக்கண நெறியை விடத் தருக்க நெறியே இளமை யுணர்ச்சிக்கு எழில் கூட்டும்.

பல்லாவரத்தில் ஒருநாள் அடிகளாரின் மொழி நடையைப் பற்றிப் பேச்சு வந்தது. அப்போது என்னிடம் அவர்கள் தெரிவித்தது இது :

"இளமைக் காலங்களில் எனக்கிருந்த எழுச்சி, தருக்க நெறியோடும் இலக்கண நெறியோடும் இணையற்றதாய் இருந்தது. இளமை இயல்புக்கு அது உரியதுதான். இப்போதெல்லாம் எனது நடை பழுத்துக் கனிந்துவிட்டது; பெருந்தன்மையில் என்னுள்ளம் ஈடுபடுகிறது; இளமைக் காலத்தில் என்னைப் பார்ப்பவர் என் புலமைக்கு அஞ்சுவர். பழுத்துவிட்ட இக்காலத்தில் புலமை முன்னினும் மிகுதியேயாயினும், கனிந்த சாறுடையதா யிருத்தலின், குழந்தைபோல் என்னிடம் அனைவரும் குலாவுகின்றனர். முன்னையது ஆட்சி முறை, பின்னையது உதவு முறை. இலக்கண நெறி ஆராய்ச்சித் திறனை அஃதாவது சிந்தனைச் செல்வத்தைப் பெருக்குமாயினும், தருக்க நெறியே மறுப்பழகுக்கு ஏற்றதாய் இருக்கிறது" என்று அடிகள் விம்மிதமாய் அடிக்கடி கூறுவர்.

வாழ்க்கைத் தொடக்கத்தில் அடிகளார் தெளிந்திருந்த கருத்துக்கள் பெரிதும் வியப்பைத் தருகின்றன. ஏதுக்களும் எடுத்துக் காட்டுக்களும் அடிகளார் பேராற்றலைப் புலப்படுத்துகின்றன.

'முதற்குறள் வாத நிராகரணத்'தில் அடிகள் எடுத்துக் கொண்ட கருத்துக்கள் வருமாறு: அவர்கள் விளக்கிச் சென்ற ஏதுக்களும், காட்டிச் சென்ற எடுத்துக் காட்டுக்களும், மறுப்பழகுகளும் இங்கே சிறிது காணலாம். ஒரு சோறுதான் பதம் என்பதற்கேற்பச், சிலவே இங்கு எடுத்துக் காட்டப்படும்.

1. வேதம் கூறும் 'வேதாந்தம்' மாயாவாதமன்று; 'ஆகமாந்தம்' என்னும் சித்தாந்தத்தின் முன் நிலை; 'வேதாந்த சித்தாந்தம்' இரண்டும் ஒன்று நெறியும் மற்றொன்று துறையுமாய் முழு முதல்வன் கோட்பாடு உடையவர்க்கே உரியவை.

2. கல்வி கற்கும்போது உய்த்துணர்ந்து கற்க வேண்டும்.

3 தமிழ்மொழி தனி மொழி; உலக வழக்கம் உடையது; முத்தமிழ்ப் பாகுபாடும் அமைந்தது; மிகப் பழைமையானது; இயற்கை நலம் சிறந்தது.

4. பிற மொழிகள், தமிழ் மொழியோடு ஒத்த இலக்கண நிலை, ஒலி முறை, வழக்குப் பயிற்சி முதலியன உடையனவல்ல.

5. மலையாளத்தை விடக் கன்னடமும், கன்னடத்தை விடத் துளுவமும், துளுவத்தை விடத் தெலுங்கும், மொழி வகையில் ஒன்றுக்கொன்று மேம்பட்டவை.

6. காரணங்களில், முதற் காரணம் என்பது, அதன் காரியத்தோடு ஒற்றித்து நிற்கும்; துணைக் காரணம், காரியப்படும் வரையில் ஒற்றித்து நிற்கும்.

7. மொழிக்கு அகரம் முதற் காரணமன்று; நிமித்த காரணமாய் எல்லா எழுத்துக்களோடும் கலந்து இயக்கும். அகரத்துக்கு முன் நிகழ்வது 'நாதம்' எனப்படும். வாய் அங்காந்த அளவில் அகரம் தோன்றுதலின், மற்ற எழுத்துக்களை விட அகரத்துக்கு நாதத்தோடு தொடர்பு மிகுதி; அங்காப்பு நிலையில் துண்டுபட்டது, அகரமாகும்; எழுத்துக்களெல்லாம் நாத காரியங்களேயன்றி அகரத்தின் காரியங்களல்ல. மற்ற எழுத்துக்கள் உருவாவதற்கு முன் அகரம் தோன்றுதலால், அது வாயில் போல உதவுகிறது.

8. சுட்டுக்கள் தமக்கு முன் வந்தவற்றைக் குறிக்கும்; இது வழக்கு: "இயற்பெயர்க் கிளவியும்" என்னும் தொல்காப்பியத்தானும் (521) விளங்கும்.

9. திருக்குறளில், 'பொருளல்லவற்றை' என்று வந்தமை, 'பொருள்கள் நிலையா' என்பது பற்றி.

10. தமிழ்மொழி, வீட்டு நெறி பயக்கும் சிறப்புடையது;

11. 'அத்துவிதம்' என்னும் சொல் 'சித்தாந்தசைவர்' போன்றவர்க்கே உரியது. கடவுள், அம்மையோடு (தன் ஆற்றலோடு-தன் சத்தியோடு) ஒன்றுபட்டு நிற்றலை, அஃதாவது இரண்டற நிற்றலைக் குறிப்பதற்கே, ஞான நூல்கள் 'அத்துவிதம்' என்ற சொல்லை வழங்கின. மெய்கண்ட தேவர்க்கு முன், பேருரைகாரரெல்லாம் இச் சொல்பற்றி ஐயுற்றிருந்தனர்; மெய்கண்ட தேவர் ஒருவரே, எல்லார்க்கும் விளங்கும்படி மெய்ப்பொருள் (அன்மைப் பொருள்) கூறினர். மாயாவாதிகள் அஃகிய அகன்ற அறிவுடையரல்லர்; 'சூனிய வாதி' 'நாத்திக வாதி' என்னும் பெயர்களும் அவர்களுக்குப் பொருந்தும்.

இக் கருத்துக்களெல்லாம் அடிகள் தமது 20ஆவது அகவைக்குள்ளாகவே ஆழக் கற்று உண்மை தெளிந்திருந்தனர்; மறுக்கவும் வல்லராய் விளங்கினர் !

ஒருதலைத் துணிவு :

மறுப்பதற்கு 'ஒருதலை துணி'யும் புலமைச் சிறப்பு இன்றியமையாதது; புலவர்க்குரிய எழுவகைக் கொள்கைகளில், இது புலவர்க்கு அடையாளமா யிருப்பது; அடிகளே அதனை இந் நூலில் விளக்குகின்றார்.

மொழிக்கு எழுத்து என்பது காரண ஆகுபெயரா, சினை ஆகுபெயரா என்று அறிஞரிடையே சிக்கல் தோன்றுகிறது. இது போன்ற நிலைகளில், 'சிறப்பியல்பு எது' என்பதைக் கண்டு 'ஒருதலை துணிதலால்' சிக்கல் நீங்கும்; இதனால் மேற்கொண்ட கருத்தை வலியுறுத்தக் காரணமும் காட்டியபடியாகும். அதன் பின், எடுத்துக்காட்டுக்களில் இது தெளிவிக்கப்பட வேண்டும். 'பொன்னாலான குடம்' ஓர் எடுத்துக்காட்டாகும்.

காரியப் பொருளாகிய குடத்தோடு பொன் வேறுபடாமல் ஒற்றித்து நிற்கிறது. அப்படியே மொழியாகிய காரியப் பொருளிலும் எழுத்து வேறுபடாமல் ஒற்றித்து நிற்கும். இங்ஙனங் கூறுவதாயின் குடத்துக்குப் பொன்னும் மொழிக்கு எழுத்தும் 'காரண ஆகுபெயர்' என்பது பொருந்தும்

ஆனால், பொன்னாலான குடத்திலிருந்து அப் பொன்னே வேறுபட நிற்கவில்லை; எழுத்து, மொழியாக நிற்கும்போது, மொழியில் வேறுபடாமல் நிற்பதோடு அதே எழுத்துத் தனித்தும் நிற்கும்; 'அழகு' என்னும் சொல்லின் 'அ' என்னும் எழுத்து இயைந்து நிற்கிறது; அதே அகரம் 'அருமை' என்னும் வேறொரு சொல்லிலும் தொடர்புற்று நிற்கிறது; அவ்வெழுத்தே 'அன்பு', 'அறம்' முதலிய வேறு பிற சொற்களையும் தோற்றுவிக்கும்; இவையெல்லாம் வேறு வேறு அகரங்களல்ல. 'அ' என்னும் எழுத்து ஒன்றை வரிப்பாடத்தில் தனியாகவும் நிற்கக் காண்கிறோம். இந் நிலைமையைத்தான் 'சினைத் தன்மை' என்பது.

எழுத்துக்கள் இச் சிறப்புடையனவாதலால், மொழிக்குக் 'காரணம்' என்பதைவிடச் 'சினை' சிறந்ததென்பது மாட்சி; அகரத்

தைச் 'சினையாகு பெயர்' என்பது, காரண ஆகுபெயர் என்பதை விட இதனால் மிகச் சிறப்புடையதாகும்.

'எழுத்தால் மொழி அமைகிறது' என்பது மேற்கோள்; 'காரண காரியத்திலும் ஒற்றித்து நிற்பதோடு வேறாகவும் நிற்கிறது' என்பது ஏது; 'பொன்னாலான குடம்' என்பது, இருவகை நிலைகளையும் விளக்குவதற்கு ஏற்ற எடுத்துக்காட்டு.

'நெற்பொலி' 'மலர் மாலை' என்பன 'சினையாகு பெயர்' என்பதற்கு மட்டும் ஏற்றவை; 'பொற்குடம்' என்பது, 'காரண ஆகு பெயர்க்கும்' பொருந்தும்; ஏனென்றால், குடமாகவே பொன் திரிந்து விடுகிறது.

அதோடு, 'காரண ஆகுபெயர்' 'சினையாகு பெயர்' என்னும் இரண்டுக்குங்கூடப் பொருந்துகிறது; எழுத்து மொழியாய்த் திரிந்து விடுவதோடு வேறாகவும் தனியே நிற்பதைக் காண்கிறோம்; இரண்டிலும், ஒன்று பொது; மற்றொன்று சிறப்பு; சிறப்பியல்பை எடுத்துச் 'சினையாகு பெயர்' என்று ஒரு தலை துணிவது புலமைச் சிறப்பாயிற்று!

கருத்துக்களை ஒருதலை துணியும் வல்லமையின்றி, இப்படியும் இருக்கலாம் அப்படியும் இருக்கலாம் என்று மழுப்புவது அடிகளார்க்குப் பிடிக்காது. வழவழப்பின்றித் தெரிப்பாக இருப்பதே அடிகள் இயல்பு!

மொழிக்கு உறுப்புப்போல் எழுத்துக்கள் பயன்படுதலைச் 'சினைத் தன்மை' என்ப; மேற்காட்டிய எடுத்துக் காட்டுக்கள், உலகியற் பொருள்கள்! உரையளவை என்பதற்கு, இவற்றோடு நூற்குறிப்பும் வேண்டுமாதலின், அதனையும் அடிகளார் எடுத்துக் காட்டுகின்றார்; "பிண்டப் பெயரும் ஆயியல் திரியா" என்னும் தொல்காப்பிய நூற்பாவின் (574) உரைக்கு ஆசிரியர் நச்சினார்க் கினியர், 'சொல்லுக்கு எழுத்து அவயவம்' என்கின்றார் என்பதை அடிகள் எடுத்துக் காட்டுதல் காண்க.

இங்ஙனமே ஆகுபெயரா, அன்மொழித் தொகையா என்று ஒன்றை ஒருதலை துணிய வேண்டிய சிக்கலும் அடிகளின் இளமைக் காலத்தில் எழுந்தது! திருமயிலை சண்முகம் பிள்ளை, சோழவந்தான் சண்முகம் பிள்ளை முதலிய பெரும் புலவர்களும் இதில்

ஈடுபட்டு மாறிமாறி மறுத்துக் கொண்டனர். புலவர் மாறுகோளில் ஒருதலை துணிதல் துணியவேண்டிய கட்டாயம், அவர்களிடையே தென்படவில்லை; அடிகளார் தலையிட்டு, ஒருதலை துணிந்து அனை வர்க்கும் வழிகாட்டினர்.

'கனங் குழை' என்பது அடையடுத்த ஆகுபெயர் என்பாரும் அன்மொழித் தொகை என்பாருமாக இருபிரிவினர் போராடினர்; திருக்குறள் இன்பப் பாலின் முதற் குறளாகிய,

"அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொல் மாலும்என் நெஞ்சு"

என்பதில் இச் சொல் வருகின்றது; உரையாசிரியர் பரிமேலழகர், தமது விளக்கத்தில் 'கனங்குழை' ஆகுபெயர் என்றே குறித்தார். புலவரிற் சிலர் இதனை 'அடையடுத்த ஆகுபெயர்' என்றனர்; ஆசிரியர் மறைமலையடிகளார், 'ஆகுபெயர்' என்பதுதான், பரிமே லழகர் கருத்துப்படி, முன்னோர் வழக்கு; 'அடையடுத்த ஆகு பெயர்' என்ற ஒன்று தொல்லாசிரியர்க்கு உடன்பாடன்று என்று துணிந்தார். சிலர் அன்மொழித்தொகை என்றனர்.

ஆகுபெயர்க்கும் அன்மொழித் தொகைக்கும் வேறுபாடு காணும் எழுச்சி பெரிதாய் எழுந்தது; சொற்களின் பொருள்களை நுனித்துணரும் சொற்பொருட் சிறப்பில், இக் கருத்து வேறு பாட்டுக்கே இடமில்லை; 'கனம் குழை' என்னும் இரு சொற்களில், 'குழை' என்பது மட்டும் அதனை யுடைய பெண்ணுக்கு ஆகி வரு கிறது; 'குழை' என்னும் அச் சொல்லைக் 'கனம்' என்பது அடை மொழியாக அடுத்து நின்று அதன் பளுவை உணர்த்துகின்றது; குழை என்னும் சொல்லைப்போல் 'கனம்' என்னும் சொல்லும் பெண்ணை உணர்த்தவில்லை; பெண்ணுக்காக ஆகி வந்தது குழையே யன்றிக் கனம் அன்று; ஆதலால் பரிமேலழகர் இதனை ஆகுபெயரென்று உரைத்தார்.

அஃதொக்கும், 'கனம்' என்பது குழைக்கு அடைமொழியாய் வந்தமையால் 'கனங் குழை' என்பதை 'அடையடுத்த ஆகுபெயர் என்றால் என்ன?' என்று சிலர் கருதினர்; அப்படிச் சொல்லுவதா யிருந்தால் உரையாசிரியர் பரிமேலழகரே அவ்வாறு உரைத்திருப்

பார்; அவரைப் போலவே பழைய ஆசிரியர்கள் யாரும் 'அடை யடுத்த ஆகுபெயர்' என்று ஆகுபெயரில் ஒரு பிரிவைக் கொள்ள வில்லை; தொல்காப்பியருங் கொள்ளவில்லை; தமிழ்க்குள்ள சிறப்பே சுருங்கலழகில் உள்ளது; இலக்கண விதிகளை எவ்வளவு சுருக்க மாகக் கையாளுகிறேமோ அவ்வளவும் தமிழ்க்கு அழகு செய்யும்; ஆகுபெயரில் 'இருமடியாகுபெயர்' எனவும் 'மும்மடி யாகுபெயர்' எனவும் பின் வந்தோர் விரித்துப் பெருக்கிக் கொள்வதுபோல் 'அடையடுத்த ஆகுபெயர்' என்பதும் அங்ஙனம் எழுந்ததாகும்; இலக்கண விதிகளைப் பெருக்கப் பெருக்க, அது சமக்கிருதம் முதலிய ஏனைய மொழிகளைப் போல வழக்கு வீழும்; அதனல் தொல்லாசிரியரெல்லாரும் இங்ஙனமொன்று கொண்டாரல்லர். பரிமேலழகரைப் போல் தொல்லாணை நல்லாசிரியரைப் பின்பற்று தலே நமக்குக் கடமை, என்பது அடிகளார் கருத்து.

இனி 'அன்மொழித் தொகை' என்னும் சொல்லின் பொருள் கருதுவோம்; 'தொகை' என்னுங் குறிப்பால், அது இரு சொற்க ளாகவே வரவேண்டும் என்று தெரிகிறது.

ஆகுபெயர்க்கு ஒரு சொல்லே முக்கியம்; இரு சொல் வந்தால் அவற்றில் முன்சொல் மற்றெரு பின்சொல்லைச் சிறப்பிக்கும் அடைமொழியாய் வரக்கூடும். அவற்றிற் பின்சொல் மட்டுமே வேறெரு பொருளுக்கு ஆகிவரும் ஆகுபெயராகும்; 'அன்மொழித் தொகை' அங்ஙனமன்று. இருசொற் பொருள்களும் அல்லாத பொருளை (அல் மொழி) அவ்விரு சொற்களுமே உணர்த்தும். அதனைக் குறிப்பிடும்பொருட்டே இரு சொற்களின் இடையில் தொகுப்புண்டு மறைந்திருப்பதாகத் 'தொகை' என்னும் சொல் சேர்ந்து 'அன்மொழித் தொகை' எனப்பட்டது. இது முதன்மை; மற்று உருபுகள் முதலியன தொக்கு வருதல் அடுத்தபடியே கருதத்தக்கது; புலவரிற் பலர் முதன்மையைக் கைவிட்டு விட்ட னர்; அடுத்ததைப் பற்றிக்கொண்டனர்.

மேலும், ஆகுபெயருக்கு 'இயைபு' முக்கியம். இயைபுடைய பொருளுக்கே அது ஆகிவரும்; அன்மொழித் தொகைக்கு இயைபு முக்கியம் அன்று; இயைபில்லாத வேறெரு பொருளிலும் வரும். அன்மொழித் தொகையாகக் கூறவிரும்பும் புலவர், தம் கருத்துப் படி வேறெரு பொருள் அமையுமாறு இரு சொற்களை அமைப்பார்.

இவ்வாறு ஒருதலை துணிதல் முதன்மையாயிற்று. ஆசிரியர் மறைமலையடிகள் இங்ஙனம் தருக்க முறைப்படியும் இலக்கண முறைப்படியும், ஒருதலை துணிந்து நலம் பெருக்குவர்.

முறை தழுவுவது :

1. தருக்க இலக்கண இலக்கியம்

இங்ஙனமெல்லாம் அடிகளார் மறுப்பு நூலில், முறை தழுவி வருவது 'மறுப்பழகு'களாகும். மொழிக்கு எழுத்து, 'காரண ஆகு பெயரா' 'சினையாகு பெயரா' என்னும் சிக்கலை ஒரு தலையாகத் துணியாவிட்டால், கருத்து வேறுபடுவோரை மறுத்தல் இயலாது; புலமையும் வீறு பெறாது; தருக்க நெறி சிறக்காது; இலக்கண அமைதியும் மேம்படாது.

மேற்காட்டிய 'காரண ஆகுபெயர்' 'சினையாகுபெயர்' என்பவற்றிலும், 'ஆகுபெயர்' 'அன்மொழித் தொகை' என்பவற்றிலும் காரணங்களோடும் காட்டுக்களோடும் விளக்கியது தருக்கமுறை! 'திரிந்து வருவது', 'தனியாய் நிற்பது' என்பதும், 'தொகை' 'இயைபு' என்பதும் போல்வன இலக்கண முறை!

2. முடிக்கும் முறை

மற்றொரு வகையான மறுப்பழகும் இங்கே எண்ணிப் பார்க்கலாம்; கருத்துப் போக்குக் கேற்ப, மறுக்கும் முறைகளை மேற்கொள்வது ஓர் அழகியல்! வேதாந்த அறிவு நூல்களில் 'கூடத்தன்' என்று ஒரு சொல், வழங்கப்படும். உலக நிலையில் 'சீவன்' என்றும், விடுதலை நிலையில் 'கூடத்தன்' என்றும் இரண்டு நிலைகளிலும் உயிர்களே குறிக்கப்படுகின்றன; இவ் விளக்கத்தை மாயாவாதிகள் ஒப்புக்கொள்வதில்லை. உடம்போடு கூடிய நிலையில் உயிர்கள், பற்றுடன் இருத்தலால் 'சீவன்' என்றும் பற்றற்று நிற்கும்போது 'கூடத்தன்' என்றும் பெயர் பெறும். கருவிகளோடு கூடி உயிர்வாழ்வதனால் அப்படிச் சீவிக்கும் உயிர்க்குச் 'சீவன்' எனப் பெயர் அமைந்தது; விடுதலையான நிலையில் புளியம்பழத்தின் ஓடு போல வெறுங் கூட்டில், பற்றின்றி உலவுதலால் 'கூடத்தன்' என்று அவை சொல்லப்படுகின்றன.

இவ் வேறுபாடுகளை யறியாமல், ‘பிரம்ம’மே ‘சிவ’னாகவும் ‘கூடத்த’னாகவும் ஆகின்றன என்று சொல்லுகின்ற வாதம், தம் கொள்கையை நிறுவ வேண்டுமென்னுங் கருத்தால், தம் கொள்கைகளில் ‘கொஞ்சுகின்ற இளஞ் சொல்’லாகும், பொருளற்ற மழலை மொழியாகும்;

‘கொஞ்சுதல்’ என்பதனால் தமது கொள்கைமேல் வைத்த பற்றுப் புலப்படும்; அதோடு, அந் நிகழ்ச்சி பெரும்பாலும், தாய் மாருடையது; அதுபோல, அறியா மழலைகள் பேசும் உள்ளீடற்ற மாணவருக்கு, தாய்போல் தாம் ஆசிரியராய் இருந்து, உரமற்ற மொழி பகர்தலையும் அது காட்டியது. அத்தகைய கொஞ்சும் வார்த்தைகளுக்குக் கனம் (பெருமை) ஏது? என்பது அடிகளார் முடித்து மறுக்கும் மறுப்பு!

கருத்துக் கேற்றபடி இங்ஙனம் முடிக்குஞ் சொல் பெய்து, உயர்ச்சி மிகுப்பது, ஒரு மறுப்பழகு மாட்சி. இவ்வாறு வருவன ஒன்றிரண்டல்ல, பல!

3. செம்மல் சிதைத்தல்

திருவள்ளுவர், தமது திருமறையில்,

> **“உயிர்ப்ப உளரல்லர் மன்ற செயிர்ப்பவர்**
> **செம்மல் சிதைக்கலா தார்”**

என்றொரு பொய்யா மொழியை அருள் செய்வார்; தம்மை மறுப் பவரைத் தாம் அவர் வலி கெடுக்காமல், எவரும் விட்டு வைத்த லாகாது; அவர்க்குமேல், தமது வலியைக் காட்டி அவர் தருக்கை ஒழித்தல் வேண்டும்;

“இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால் என்ன பயத்ததோ சால்பு” எனவும் திருவள்ளுவரே அருளுவராதலின், ‘இனியவே செய்தால் என்ன?’ என்று மயங்குவாரும் உண்டு; குருதலத்தில் கண்ணபிரான் அருச்சுனற்கு அருளிய கீதை மொழியும் இங்கு நினைவுக்கு வரும்; ‘இனியவை செய்ய வேண்டாம், கொடுமையே செய்க; செய்து, செயிர்ப்பவர் செம்மல் சிதைக்க வேண்டும்’ என்று திருவள்ளுவர் சொல்லவில்லையே; பயன்படு மென்றால், இனியவே செய்து அவர் செம்மலைச் சிதைக்கலாம்; செம்மல் சிதைப்பதே இங்கு முதன்மை;

பயன்படாதென்றால், பயன்படு முறையாகக் கொடுமை செய்தல் சால்பாகுமா? என்றும் சிலர் எண்ணக் கூடும். பயன்படும், பயன்படாதென்பது, செய்யும் செயலால்மட்டும் விளைவதன்று; செய்வாரது உள்ளத்தின் ஈர நிலைமையையும் பொறுத்தது; "இனியவர் என் சொலினும் இன்சொல்லே" என்பது இங்கு நினைக்கத் தக்கது; ஈர நெஞ்சம் மறம் செய்யாது; நலமே செய்து உய்விக்கும்;

தம் தலைமை கெடாமலே, தம் தலைமைக்கு ஊறுவிளைக்கும் பிறர் கருத்தையும் அதனால் அமையும் போலித் தலைமையையும் கெடுத்தல் இன்றியமையாதது; உண்மைத் தலைவராயிருந்தால், யாரும் அவர்க்குப் பணிந்து போதலே தக்கது! வெற்றுச் செருக்கு மட்டுமே இங்குக் கூறப்பட்டது; அச் செருக்குடையாரைக் கெடுத்தொழிக்கக் கூறவில்லை; செருக்கை மட்டும் அழிப்பதற்கு அதற்கேற்ற இனிமை வலிமைகளைக் காட்டுதலே ஒக்கும். செய்திறத்தால் அதனைக் காட்டுவதானால் பயன்படும்; செய்முறை வேறுபட்டால் மட்டுமே (**இனியதான**) பயன் குலையும்;

அடிகளார், மறுத்தார் என்னாமல், மறுப்பில் அழகு செய்தார் எனத் தலைப்பமைந்தமை இவ்வினிமைச் செய் திறனையே புலப்படுத்தும். உண்மையிற் கருத்து வேறுபட்டோர், குழறுபடை செய்வதுபோல் தாமும் குழறாமல், உரிய தருக்க இலக்கண முறைகளைப் பின்பற்றினால், செம்மல் சிதைந்துபோம்; அல்லது அவரவர் பக்குவத்திற்கேற்பப் பொறுத்துக் காலமுண்டாகத் தானே கெடுமாறு காண்டலும் பொருந்தும்.

4. கருத்து விளக்கம்

தருக்க இலக்கண இலக்கிய அமைப்புகளில் புலமை மிக ஊறிச் 'சோமசுந்தரக் காஞ்சி ஆக்கம்' என்ற சிறந்த மறுப்பைத் தெளித்தெடுத்து அடிகள் எழுதினர். பொருளிலக்கணக் குறிப்புக்கள் பலவும் அதில் வருகின்றன. அடிகளாருடைய புலமை நுட்பமும் வீறும் உயர்வும் அதில் நன்றாய்த் தெரிகின்றன. 'கையறுநிலை' 'மன்னைக் காஞ்சி' 'ஆனந்தக் குற்றம்' போன்ற பல நுட்பங்கள் தொல்காப்பியப் பொருளிலக்கண மரபை அடிப்படையாகக் கொண்டு தெளிவாக எடுத்துக் காட்டப்படுகின்றன. தமிழ்

பயிலும் மாணவர்க்குப் பயன்படும்படி கருத்துக்களை மிக அழகாக அதில் அடிகள் விளக்கியுள்ளார்.

மரங்களிற் பழுக்கும் பழங்கள் இரு நோக்கங் கொண்டவை; உயிர்களுக்கு உணவாகும்படி சதைப் பாங்கான பகுதியும், தமது வளர்ச்சிக்கும் உதவும் முறையில் விதைகள் அப் பகுதியினுள்ளும் அமைந்திருக்கக் காண்கின்றோம்; அங்ஙனமே மாணவர்க்குக் கருத்து விளக்கங்களும் மறுக்கும் எதிர்ப் பக்கத்தார்க்கு மறுப்புரைகளும் அடிகள் மறுப்பு நூல்களிற் காணலாம். மறுப்பழகில் இவ்வியல்பு மாட்சி மிக்கது; காரணம், பிறர்க்கும் பயன்பட்டுத் தங் கருத்தும் நிறைவேறுதலின்!

இங்ஙனமே, 'வாழ்க்கை யறம்' என்பதிலும் இருவகை நோக்கங்கள் இயற்கையிலிருத்தல் கண்டு கொள்ளப்படும்.

இம் மேன்மைகளான் அடிகளாரின் மறுப்பெழுதும் மாட்சி இனிது விளங்கும். மறுப்பார்க்கு மட்டுமன்றி மற்றவர்க்கும் நிலையாய் அவை பயன்படும். மறுக்கும் அழகில் ஈதும் ஒன்று.

மறுப்புக்கு இளமை :

'சோமசுந்தரக் காஞ்சியாக்கம்' என்பது ஒரு மறுப்பு நூல்; அதனை எழுதும்போது அடிகளுக்கு அகவை 25க்கு மேல் இராது.

இம் மறுப்பு, மறுப்புக்கு மறுப்பாகும். தலையாலங்கானத்து நெடுஞ்செழியனை மன்னர் பலரும் குறுநில மன்னரும் எளியன் என்று எதிர்த்தனர். அப்போது நெடுஞ்செழியன் மிக இளைஞன்; ஆயினும் அவன் உணர்வு மிகுந்தவனாய் அனைவரையும் முறியடித்து வென்றனன். அவ்வாறு அடிகளார் இளமையா யிருக்கிறார்களென்று கருதிச் 'சோமசுந்தரக் காஞ்சிக்'குச் சென்னையில் புலவர் சிலர் ஒருங்கு சேர்ந்து, கரவுப் பெயரால் மறுப்பெழுதினர். மறைமலை யடிகளாரா விடுபவர்?

'இப் பகுதி (ஆனந்தக் குற்றம்) யாமெழுதத் தொடங்கிய காலத்துச் **சோமசுந்தரக் காஞ்சியின்**மேன் மறுப்பெழுதினார், **திருமயிலை திரு சண்முகம் பிள்ளை** யெனச் சிலரும், திரு. நா. கதிரைவேற் பிள்ளையென ஒரு சிலரும் திரு. வைத்தியலிங்கம் பிள்ளை யென வேறு சிலரும், அற்றன்று இம் மூவருமே

ஒருங்கு சேர்ந் தெழுதினாரென மற்றுஞ் சிலருந் தெரிவித் தனர். அப் போலி மறுப்புக் கரவு பெயர் நிறுத்தி எழுதப் பட்டமையினஃதெழுதினாரின்னாரென ஒரு தலையாற் றுணியப் படவில்லை. சிவபெருமான் றிருவருள் வழிநின் றொழுகாது தற்பெருமையா னறிவு மருண்டு செருக்கிப் பொறாமைகொண்டு திரிகுவார் யாராயினு மென்? திருவருட் பெருந்துணை கொண்டொழுகும் யாம் அவரையு மவர் போலி மறுப்பினையும் ஒருபொருட் படுத்துவா மல்லமென் றொழிக."

கோள்நூல் ஆய்வுக்கு இளமையுடையாரும் மருத்து நூல் ஆய்வுக்கு முதுமையுடையாரும் ஏற்றவர் என்பது ஒரு வழக்கு; அதுபோல மறுப்புக்கு இளமையும் தெளிவுக்கு முதுமையும் ஏற்றவை யாகும்; மறுப்புக்கு இங்கே எடுத்துக் காட்டப் பட்டவை, அதனால் அடிகளின் இளம்பருவ நூல்கள் மற்றவற்றிலும் மறுப் புக்கள் உண்டு. மேலும், அடிகளாரின் இளம்பருவ வீறு நன்கு தெரியும்பொருட்டும், மிக இளமையிலேயே முற்பிறவியின் நலத் தால் அவர்கள் பெற்றிருந்த அருமையான புலமைச் சிறப்புக்கள் விளங்கும்பொருட்டும் இங்கே சில எடுத்துக் காட்டப்பட்டன. இவ் வாறே ஒவ்வொரு நூலும்!

கo. எழுத்து நடை

'ஞான சாகரம்' என்னும் 'அறிவுக் கடல்' 1902 இல் தொடங்கப்பட்டது. அப்போது அடிகள் சென்னைக் கிறித்துவக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராய் விளங்கி வந்தார்கள். 'அறிவுக் கடல்' என்னும் இதழின் மூலமாகவே பெரும்பாலும் அடிகளார் நூல்கள் வெளிவந்தன. 1902 இல் அடிகளுக்கு வயது 25 முடிந்திருந்தது. பதினாறும் ஆண்டில் தமிழ் நூற் பயிற்சி தொடங்கப்பட்டது. தமது 21 ஆம் ஆண்டிலேயே தமிழ்ப்புலமை பெருகப் பெற்றிருந்தார். தமிழ் மொழியைப் பயின்று வரும்போதே நாகப்பட்டினத்திலும், பிற இடங்களிலும் நடைபெற்று வந்த இதழ்களில் அரிய கட்டுரைகள் பல எழுதி வந்தார். 20 ஆம் அகவைக்குள் 'முதற் குறள் வாத நிராகரணம்' என்னும் மறுப்பு நூல் எழுதினார். 'துகளறு போதம்' என்பதற்கும் உரை எழுதினார். அதன்பின், 'சித்தாந்த தீபிகை' என்னும் இதழுக்கு 5 திங்கள் வரை ஆசிரியராய் இருந்து கட்டுரைகள் பல வெளியிட்டார். 'சோமசுந்தரக் காஞ்சியாக்கம்' என்னும் செய்யுள் நூலும் பின்பு எழுதினார். இவையெல்லாம் அடிகளின் 25 ஆம் அகவைக்குள் எழுதப்பட்டவை.

ஞான சாகரத்தின் முதல் மலரில் 'உருவ வழிபாடு' 'தமிழ் வடமொழியினின்றும் பிறந்ததா' 'தமிழ்ச் சொல் உற்பத்தி' 'தொல்காப்பிய முழுமுதன்மை' 'உள்ளது போகாது இல்லது வாராது' 'கேனோபநிடத மொழி பெயர்ப்பு' 'மாணிக்கவாசகர் காலம்' 'இறையனார் அகப்பொருளுரை வரலாறு' 'பரிமேலழகர் உரை ஆராய்ச்சி', 'முனிமொழிப் பிரகாசிகை' முதலிய அரிய கருத்துக்களின்மேல் நூல்களும் கட்டுரைகளும் வெளிவந்தன. இவற்றிலிருந்து அடிகள், வாழ்க்கைக்குத் தேவையான பல துறைப் பொருள்கள்மேல் எதுவும் எழுதக் கூடியவர் என்னும் உண்மை விளங்குகிறது. அறிவுக் கடலின் கடைசி வரையில் இங்ஙனமே பல துறைப் பொருள்கள் தொடர்ந்து வந்தன.

கல்லூரியில் அலுவலில் இருக்கும்பொழுது விடுமுறைக் காலங்களில் அடிகளார் தமிழ்நாடு எங்கும் உலாவி அரிய

பொருள்கள்மேல் சொற்பொழிவு ஆற்றியும் வந்தார். அவை யெல்லாம் 'அறிவுக் கட'லில் பெரும்பாலும் நூல்களாகவே வெளி வந்துள்ளன.

எழுதும் முறை :

கட்டுரை எழுதினாலும், நூல் எழுதினாலும், ஒரு கருத்தின் மேல் விரிவுரை செய்தாலும், முன்னால் அதனை நன்கு ஆராய்ந்து தலைப்புகளும், உள் தலைப்புகளும் அடிகள குறித்துக்கொள்வார். கருத்துக்களின் இப் பாகுபாடுகளுடன் தமிழ், ஆங்கிலம், வட மொழி நூல்களின் மேற்கோள்களும் குறிப்புக்களும் திட்டப்படுத் திக் கொள்வார். அதன் பின்பே எழுதவோ, பேசவோ முற்படு வார். இக் காரணத்தால், நூல் எழுதி முடியப் பல ஆண்டுகள் ஆனாலும் கருத்துத் தொடர்பும் எழுத்து நடைத் தொடர்பும் ஒத்துச் செல்லும், விடாமலும் இருக்கும்.

இனி, அக் கருத்தை மொழியில் இட்டு எழுதும்போது பெரும்பாலும் ஒவ்வொரு நூலுக்கும் ஒவ்வொரு வகையாக எழுத்து நடையை அடிகளே அமைத்துக் கொள்வார். இடை யிடையே வேறுவேறு எழுத்து நடையை எழுதி வந்தாலும் ஒவ் வொரு நூல் நடையும் நடைவேறுபாடு தவறாமல் தொடர்ந்து வரும்; அப்படி எழுதுகின்ற பழக்கம் மிக வியப்பாகவும் தனிச் சிறப்பாகவும் அடிகளுக்கு அமைந்துவிட்டது. ஒரு நூலின் ஒரு பகுதி எழுதி ஆண்டுக்கணக்கில் இடைவிட்டிருக்கும். இடையில் வேறுவேறு நூல்கள் வேறுவேறு நடையில் எழுதப்பட்டு அவை களுள்ளும் இடைவிட்டிருப்பன உண்டு. எல்லா எழுத்துக்களையும் அந்த அந்த நடையிலும் கருத்திலும் அடிகள் தொடர்ந்து எழுதி வந்தார். இந்த ஆற்றல் பலர்க்கு அமையாதது. அடிகளுக் கென்றே தனிச் சிறப்பாய் அமைந்தது.

கருத்துக்கேற்ற எழுத்து நடை அடிகளால் மேற்கொள்ளப் பட்டு வந்தது. புதுக்கதை நூலாகிய 'கோகிலாம்பாள் கடிதங்கள்' ஒருவகையான எளிய செந்தமிழ் நடை வாய்ந்தது. இது கதைக் கருத்துக்கேற்ற தமிழ் நடை; அப்படியே 'சிந்தனைக் கட்டுரைகள்' என்னும் நூல் அடிசனார் எழுதிய ஆங்கிலக் கட்டுரைகளின் மொழி பெயர்ப்பு. மொழி பெயர்ப்பாயினும் கட்டுரைக்கேற்ற தமிழ்நடை

அது; 'சிவஞானபோத ஆராய்ச்சி' என்பது மிகு நுட்பப் பொருள் அமைந்தது. அந் நுண்பொருளை உணரும் தவம் உடையார் மிகச் சிலரேயாதலின் அதற்கேற்ற தமிழ்நடை அதனிற் கையாளப் பட்டது; 'அறிவுரைக் கொத்து' என்னும் நூலிலும் 'சிறுவர்க்கான செந்தமிழ்' போன்ற நூல்களிலும், மாணவர்க்காகச் சில எழுதப் பட்டவைகளிலும், அவர்களின் பொருட்டே அமைந்த தமிழ்நடை வேறு வகையாக இருக்கிறது.

இங்ஙனம் கருத்துக்களுக்கும் கற்பார்க்கும் ஏற்ற வெவ்வேறு தமிழ்நடை அடிகளால் மேற்கொள்ளப்பட்டாலும், பொது வகை யாக, 'இது அடிகளின் தமிழ்நடை' என்று தெரிந்துகொள்ளும்படி தமிழ் அழகு அவற்றிற் சிறந்திருந்தது.

நடையின் அமைப்பு :

தமிழ் அழகில் 'குறியீடுகள்' போன்ற சிலவற்றைத் தவிர மற்றவையெல்லாம் தனித் தமிழ்ச் சிறப்பே பொருந்தியிருக்கும்.

பழைய தமிழ்ச் சொற்களை இடையிடையே விரவி, வழக்குக் கெடாமல் அடிகளார் எழுதுவார்.

இலக்கண இலக்கியத் தருக்கச் சிறப்புக்கள் மிகுந்திருக்கும்.

கருத்தழகுகள், கலையழகுகள், புலமை அழகுகள் விஞ்சி யிருக்கும்.

நீளப் பேசுவோர்க்கு ஏற்றபடி நீண்ட தொடரும், ஆராய்ச்சி முடிபுகளுக்கு ஏற்றபடி இடைநிலைத் தொடரும், பேச்சுகளுக்கு ஏற்றபடி சிறிய தொடர்களும், பேசுவோர்க்கு ஏற்றபடி கொச்சைத் தொடர்களும், இலக்கணத் தொடர்களும், மறுப்பழகுகளுக்கு ஏற்றபடி உறுத்தும் சொல்லழகுகளும், அடிகளார் நடையில் அங்கங்குங் காணப்படும்.

நக்கீரர், இளம்பூரணர், சேனாவரையர், அடியார்க்கு நல்லார், நச்சினார்க்கினியர், பரிமேலழகர், சிவஞான முனிவர் போன்றாரின் உரைகள் அடிகளாரின் நூலில் இடையிடையே மின்னும்; சங்க நூற் சொற்கள் தொடர்கள் நடைகளும் இடையே மிளிர்ந்து வரும்.

சொற்கள், சொற்றொடர்கள் முதலியன கருத்துக்களுக்கேற்றனவாய் அமைந்திருக்கும்.

'சாரியை' 'சந்தி' முதலியனவெல்லாம் எவ்வெவற்றிற்கு எவ்வெவை விதிகளாக மரபுகளாக முன்னோர் கூறினரோ, அவ்வவற்றை அவ்வவற்றின் கருத்தும் இணக்கமும் அறிந்து எழுத்து நடை மேற்கொள்ளப்படும்.

இன்னோசை வழுக்காமல் சொல்லழுகுகளை அடிகளார் பதித்துத் தமது நடையில் ஒருவகையான ஓசையினிமை காணும்படி சமைத்தெழுதுவார்; அளபெடைகளும் இதற்காகவே பெரும்பாலும் அமைந்துவரும்.

மாணவர்க்கும், கற்பார்க்கும் உணர்வு சலியாதபடி கருத்துக்களைக் கொண்டு போகும் முறையில் அடிகளின் விளக்க நடை அமைந்திருக்கும்.

மரத்தில் அரும்பு, மலர், காய், கனி முதலிய உறுப்புக்கள் காணப்படுவதுபோல், அடிகளார் தமிழ் நடையிலும் அரும்பு நடை, மலர் நடை, காய் நடை, கனி நடை போன்ற எழுத்து நடைகளைக் காணலாம்.

மக்கள் புரிந்துகொள்வதற்காகவும் உணர்ச்சிகளையும் சுவைகளையும் தெரிந்துகொள்வதற்காகவும், நூல்கள் எழுதப்படுகின்றன; தெளிவுகளைக் கருத்திற் கொண்டு, தமிழ்ச் சுவையும் மாறுபடாமல் நடை அழகை அடிகளார் மேற்கொள்வார்.

முன்னால் இன்ன தொடர் அமைப்பது, அதனை விளக்கும் முறையில் பின்னால் இன்ன தொடர் அமைப்பது என்ற காரண காரிய முறை பிறழாமல் அவர் எழுத்து நடை அமைந்திருக்கும்.

முத்தமிழ்ப் பாகுபாடு, நடையெங்கும் சிறந்து, அடிகளார்' 'முத்தமிழ் வித்தக'ராய் விளங்குவார்; கருத்துத் தொடர்புக்கு ஏற்ற தொடர்ந்த மென்னடை, இசை கேட்பது போன்ற இனிமை கவின்ற மொழி நடை, மக்கள் உரையாடுவது போல் அமைந்த பேச்சு நடை முதலியனவெல்லாம் அடிகளின் எழுத்தில் மின்னும்.

தொடர்ந்த வாழ்க்கை யொழுக்கம் உடையவர்களானமையால், அடிகளின் எழுத்து நடையில் நீண்ட தொடர்கள் மிகுதியாய்

இருக்கும்; ஒரு பகுதி முழுமையும், பல பக்கங்கள்கூட, ஒரே தொடராகக் காணப்படும்.

(சைவசித்தாந்த ஞானபோதம், பக். 120-125)

எவ்வளவு நீளத் தொடராயினும் எழுவாய், பயனிலை, திணை பால் இடைச்சொல் இயைபுகள், முடிக்கும் வகைகள் பிழைபடா.

அடிகளார் நூல்களிற் பெரும்பகுதி மறுப்பு நூல்களே யாதலால், அவர்களின் நூல்நடை, பெரும்பாலும் விறுவிறுப்பும் கவர்ச்சியும் வாய்ந்ததாயிருக்கும்; கற்பார்க்கும் பெருஞ்சுவை விளைக்கும்.

தொல்லாணை நல்லாசிரியரின் எழுத்து முறையே அடிகளார் எழுத்து முறை!

இங்ஙனமெல்லாம் பல துறைகளிலும், பல திறன்களிலும், அடிகளார் எழுத்து, இலக்கியச் சுவை முதலியன சிறந்து, இலக்கணக்கருத்து அழகுகளுடன், தமிழ்ச்சுவை கவின்று, மேம்பட்டிருக்கும்.

சில எடுத்துக்காட்டுகள் :

> **1.** விரிந்து கிடப்பனவாகிய நுண்பொருட் பரவையெல்லாந் தமிழ் நான் மரபு பற்றி யாராய்துமென மனவெழுச்சி கொண்டு புகுவார்க்குச் சிறுகிய வாழ்நாளும் பெருகிய பிணியுமுண்மையின். பெருந்தவத் தொல்லாசிரியர் அருட்குறிப்பு நிகழ வவர்க்கவற்றைச் சுருங்க வறிவுறுத்துவார், அருட் பொருட் பரவையை யிரண்டு கூறுபடுத்து அகத்திணை புறத்திணையெனப் பெயர் நிறீஇ, அப் பகுதி யிரண்டனு ளுலகியற் பொருண் முழுவதூஉம் பிறவுஞ் செறியத் துறுத்து விளக்குவாராயினர். இங்ஙனம் பொருளிய றெரிக்கு மிலக்கணங்களெல்லாம் முடிய வெடுத்துக்கொண்டு முன்னெடுபின் மாறுகோளின்றி வரம்பு குறித்துரைக்கு நூல், கொழிதமிழ்த்துறை பழுதறக் கண்டு முழுமுதலறிவினராய் விளங்கிய ஆசிரியர் தொல்காப்பியனார் இயற்றிய தொல்காப்பியம் ஒன்றுமேயாம்.
>
> **(சோமசுந்தரக் காஞ்சியாக்கம், பக். 20)**

2. 'என்னடி, ஒன்றும் அறியாத அம்முக்கள்ளிபோற் பேசுகிறாய்? பாவி உன்னைக் கட்டாமல் இருந்தால் என் தமையன் இன்னும் உயிரோடே இருப்பான்; உன்னைக் கட்டின மறு வருஷமே அவன் இறந்துபோனான்; நீ மாத்திரம் குத்துக் கொழுக்கட்டைபோல் இருக்கின்றாய்!' என்று சினந்து கூவினாள்.

(கோகிலாம்பாள் கடிதங்கள், பக். 25)

3. பசுமையான பச்சிலைப் போர்வை மேற்கொண்டு பருத்துயர்ந்தடர்ந்த புளியமரத் தோப்புகள் ஆங்காங்கு இருக்கின்றன. அத் தோப்புகளை அடுத்துச் சிறுசிறு குன்றுகளும் உயர்ந்த மலைகளுந் தோன்றுகின்றன. ஒரோவோர் இடங்களில் வாழைத் தோட்டங்களும் வெட்ட வெளியான இடங்களும் இருக்கின்றன. அருவியோட்டங்களாயினுங் கான்யாறுகளாயினும் அங்கில்லை.

(சிந்தனைக் கட்டுரைகள், பக். 3)

4. அதற்குத் திகழ்கலை "மக்களுடைய கை, மருந்துகள் கொடுக்கும்; ஆனால், மற்றையதை ஆண்டவனே முடிவு செய்ய வேண்டும். உங்களுடைய தோழி பிழைத்தாலும் பிழைக்கலாம், அல்லது செத்தாலும் சாகலாம்; அதனைக் கடவுளே அறிவார், கடவுளே பெரியவர்" என்று விடை கூறி, இந்த வகையான பேச்சினால் மருத்துவஞ் செய்யுந் தன் உண்மைக் குணத்தையுஞ், சிறிது நேரத்திற்குமுன் தவறாமற் பலிக்குமென்று தான் பெருமை பாராட்டிக் கூறிய தன் மருந்துகளின் மதிப்பையும் பாதுகாக்கப் பார்த்தாள்.

(நாகநாட்டரசி, பக். 170)

5. 1. இறைவன் அறிவொளியுடையவனாதல் போலத் தீயும் ஒளியுடைமையானும்,

2. அவன் அவ்வறிவொளியால் உயிரை மறைத்த அறியாமை வல்லிருளைத் தூக்குமாறுபோல இதுவுந் தனதொளியாற் கண்ணை மறைத்த காரிருளை நீக்குதலானும்,

3. இறைவன் உயிரினைப் பற்றிய வாலாமையினைச் சுட்டெரித்துத் தூய்தாக்குமாறு போலத் தீயும் நிலத்தின்கட்

சேருங் குப்பை கூளங்கள் அழுக்குகள் எல்லாவற்றையும் கொளுத்தி நீறுக்கித் தூய் தாக்குதலானும்,

4. அங்ஙனம் முதல்வன் வாலாமையினைத் தூய்தாக்கும் வழி அதனாற் றான் சிறிதும் பற்றப்படாது தான் அதனைத் தூய்மைப் படுத்துமாறுபோலத் தீயும் தன்னால் எரிக்கப்படும் அழுக்குகளாற் பற்றப்படாது தான் அவற்றைச் சுட்டுத் தூய்மை செய்தலானும்,

5. இறைவன் படைத்தல் காத்தல் அழித்தலென்னும் முத்தொழில்கள் புரியுமாறுபோலத் தீயின் வெம்மையும் நீரினும் நிலத்தினும் புற்பூண்டுகளினும் உயிர்களின் உடம்புகளினும் ஓரளவுப் படப் பரவி நின்று படைத்தல் காத்தல்களையும் தான் அவற்றின்கண் நிற்கவேண்டும் அளவின் மிக்குத் தோன்றியவழி அவற்றை அழித்தற்றொழிலையும் நிகழ்த்துதலானும்,

6. இறைவன் வெய்யனாய்ச் சிவந்த அருள்நிறம் உடையனாதல் போலத் தீயும் வெய்தாய்ச் சிவந்த நிறம் வாய்ந்து நிற்றலானும்,

7. இறைவன் நீல அருள்நிறம் வாய்ந்த அருட்சத்தியைத் தன்னுள் அடக்கிவைத்திருக்குமாறு போலத் தீயும் நீலநிறம் பொருந்திய தண் நீரினைத் தன்னுள் அடக்கி வைத்திருத்தலானும்,

8. இறைவன் அருவம் உருவம் இரண்டற்கும் பொதுவான அருவுருவம் உடையனாதல் போலத் தீயும் அருவம் உருவம் இரண்டற்கும் பொதுமையாய் நிற்கும் பிழம்பு வடிவு உடையதாய் நிற்றலானும்,

9. இறைவன் உலகுயிரெல்லாம் ஒருங்கு நிறைந்து நிற்றலும் அன்பர்க்கு அருள்புரிதற் பொருட்டு ஓரோவிடத்து முனைத்து விளங்கித் தோன்றுதலும் உடையனாதல் போலத் தீயும் எல்லாப் பொருள்களினும் ஊடுருவி நிற்றலும் உயிர்கட்குப் பயன்படு முகத்தால் ஒரோவழின் விளங்கித் தோன்றுதலும் உடைத்தாகலானும்,

10. அகத்தே உயிர்களின் அறிவை விளக்குதற்கு இறைவனதொளி இன்றியமையாது வேண்டப்படுதல்போலப் புறத்தே கண்ணறிவை விளக்குதற்குத் தீயினொளி இன்றியமையாது வேண்டப்படுதலானும்,

தீ ஒருவாற்றால் இறைவனியல்போடு ஒப்புமையுடைத்தென்பது அறியப்படும்.

(சிவஞானபோத ஆராய்ச்சி, பக். 142)

6. கோமாளி : ஐயையோ ! இந்தக் கோவுரம் பூதமா ? இதின் வாய்க்குள்ளவா நாம்ப எல்லாம் நுழையப்போறோம். அம்மா ! மாராசா ! நான் வரமாட்டேன். என்னை விட்டுடுங்கோ ! என் பெண்டாட்டிக்கி யாரு துணை? எனக்குச் சாமியும் வேணும் பூதமும் வேணும்.

(அம்பிகாபதி அமராவதி, பக். 75)

7. சிறார் இழைத்து விளையாடும் மணற்சிற்றிலிலே நுண்ணறிவு வாய்த்த தச்சரியற்றும் அழகிய மாடங்கள் காணப்படுதலுண்டோ? எந்த நுண்பொருள் எவர்வாயின் வருமோ அஃது அவர்பாலே ஆராயற்பாலதாம். அஃதொழிந்து ஓர் அறிவுடையாரிடத்துப் பெறப்படும் ஓரும் பொருளை ஏனையோர் அறிவிலாரிடத்துக் கேட்க முந்துவாரைப்போல் தமிழ்நூற்களிற் குறிக்கப்படும் அந்தரங்க மெய்ப்பொருட்குப் பிரமாணம் வடநூலிற் றேடுதல் பெரிதும் நகையாடி இகழற்கே ஏதுவாம்.

(பண்டைக்காலத் தமிழரும் ஆரியரும், பக். 45)

8. நாயகரவர்கள், 'சைவ சமயாசிரியர் பெயரைச் சிறிதும் மாற்றுமல் இவர் தமக்கு வைத்துக்கொண்டு அதனை அப்படியே எழுதச் சொல்லுகிறார். அஃது அவ் வாசிரியரை இகழ்ந்ததாகும். ஆதலால், அவர் வேண்டியபடி யான் செய்யவில்லை' என்று விடை கூறினர். அது கேட்ட துரைமகனர் நகைத்து, 'இவர் தமக்கு வழங்கும் பெயரைச் சொன்னல், அஃது உங்கள் சமயாசிரியர் பெயர்; அதனை அப்படியே சொல்லக்கூடாது என்று நீர் சொல்வது பொருத்தமாயில்லையே' என்றார். அதற்கு நாயகர், 'நல்லது? ஐய, உங்கள் மதத்தைச் சேர்ந்த ஒருவர் 'என் பெயர் கர்த்தர் ஏசு (Lord Jesus) என்று

எழுதச் சொன்னால் தாங்கள் அதனை ஒப்புவீர்களா?' என்று எதிர் வினவினர். அவ் வறிவுரை செவிப்பட்டதும் அத் துரை மகனார், "ஆ! அப்படியா! 'கர்த்தர் ஏசு' என்னும் பெயரை நம் போன்ற ஒருவர் அப்படியே தமக்கு வைத்துக்கொள்வது பெருங் குற்றம்: அப்படியே உங்கள் சமயாசிரியர் பெயரை இவர் சிறிதும் மாற்றாமல் வைத்துக் கொண்டதும் பெருங் குற்றந்தான்".

(சோமசுந்தர நாயகர் வரலாறு, பக். 44)

9. ஆண்டவனையன்றி அணுவும் அசையாதாயின் பொய்யராகிய தீய மக்கள் சிலர் நல்லோனுக்கு எங்ஙனம் தீது செய்ய மாட்டுவார்? உண்மை வடிவாய் விளங்குங் கடவுள் உண்மை திறம்பாதவன்மாட்டு மிக முனைத்து விளங்குமாதலின் அந் நல்லோன் முன்னர்த் தீயோர் திரண்டு செய்த தீயவையெல்லாம் பகலவன் முன்னர்ப் பாயிருள் மாய்ந்தாற் போல முதலறக் கெட்டு ஒழியும்.

"விளக்குப் புகஇருள் மாய்ந்தாங் கொருவன்
தவத்தின்முன் நில்லாதாம் பாவம்"

என்னும் நீதியுரையைக் கடைப்பிடித்துத் தீயோர்க்கு அஞ்சி நல்லவற்றை நெகிழவிடாது, அவற்றைக் கிளர்ச்சியோடும் சிக்கெனப் பிடித்தலே உயிர் ஆற்றலை மிகச் செய்வார்க்கு உரியதாகும். மலையுருண்டாலுங் கடல் புரண்டாலும் நிலன் அதிர்ந்தாலும் புயல் அடித்தாலும் அச்சம் அடையாமல் உண்மை நெறியில் உறைத்து நிற்கவேண்டும். எல்லாம் வல்ல இறைவனையே ஒப்பற்ற துணையாக நாடி நிற்கப் பெறுகுவமாயின், நாம் எதற்கும் அஞ்சா மனத்திட்பத்தை அடைவம். இதுவே தான் நாம் அச்சம் அடையாமல் இருத்தற்கு இலேசான வழியாமென்க.

(யோக நித்திரை. பக். 30)

10. இற்றைக்குப் பத்தொன்பதாண்டுகட்கு முன் யாம் வடநாடு சென்று அங்குள்ளார்க்குச் சைவசித்தாந்த உண்மைகளை விரிவுரைகள் வாயிலாக எடுத்துச் சொல்லல் நேர்ந்தது. அங்கே கற்கத்தாவிலிருந்து இமயமலைமேல் தார்ஜலிங்கத்திற்கும், பின்னர் அங்கிருந்து கீழிறங்கிக் காசிக்கும், அங்கிருந்து

ஆரத்துவாரத்திற்கும், அங்கிருந்து மறுபடியும் இமயமலை யடிவாரத்திலுள்ள துரோணாசிரமத்திற்கும், அங்கிருந்து தில்லி ஆக்ரா வம்பாய் முதலான நகரங்களுக்கும், பிறகு சிக்கந்தரா பாக்கம் ஐதராபாக்கங்களுக்குஞ் சென்று பின்னர்ப் பல்லாவரந் திரும்பினேம்.

(மக்கள் நூறுண்டு உயிர்வாழ்க்கை, பக். 327)

அடிகளார் நடை :

அடிகளார் நடை, பொதுவாகக் கருத்தை மட்டும் விளக்கும் மொழிநடை யன்று; மொழிக்குரிய இயல்புகள், சுவைகள், முறைகள், தொல்லாசிரியர் மரபுகள் அமைந்து, இலக்கிய நடையாய்க் கருத்தினிமைகளுடன் கூடிய திருசுவை நடை; உலக இயற்கையின் நடையும் அத்தகையது.

ஒரு மரம் அல்லது செடியின் நோக்கம், மலர் தருதல் காய் தருதல் என்பது. ஆனால், அந்த மரம் அல்லது செடி கொடிகள், பல வேறு வகையான வடிவுகளும் நிறங்களும் பொருந்தி அழகும் கவின்று விளங்குகின்றன. அப்படியே, மற்ற உயிரினங்களின் நிலைகளும்!

'நோக்கம்' என்பது 'பராசக்தி'யின் நிலை. 'அழகு' என்பது 'திரோதான சத்தி'யின் நிலை. ஒரு சத்தி இவ்வாறு இரண்டு பிரிவாய் நோக்கமும் அழகும் கொண்டு பயன்படுகிறது. உயிர்களுக்குக் கவர்ச்சியைத் தந்து ஈடுபடச் செய்து உள் நோக்கத்தைத் தெரிந்துகொள்ளும்படி செய்தலே அவற்றின் கருத்து.

பண்டைக்காலம் தொடங்கி அவ்வப்போது தோன்றியருளிய எல்லா ஆசிரியர்களும் இதனைப் பின்பற்றி யிருக்கின்றனர். சரியாகத் தெரிந்துகொண்டால், 'கருத்தை விளக்குதல் மட்டும் மொழிநடையின் போக்கன்று, அது வெறும் நடையாகவே இருக்கும்' என்று அறிந்துகொள்ளலாம்.

பெரும்பாலார், எழுதும் நடை, கருத்தை மட்டும் விளக்கும் பொது நடையாய் இருக்கிறது. சுவைச் சிறப்பை அடையவில்லை. கைக்கு அணியும் வளையல் முதலியன கூட வளைந்த தன்மை மட்டும் உடையனவல்ல; எத்தனையோ வகையான பூவேலைகளும் அழகுகளும் வாய்ந்தவை. கண்ணாடி வளையல்கூட இங்ஙனம் இயற்கைப்

பொருள்களைப் போல அணிநலம் வாய்ந்தனவாய் (Ornamental) உள்ளன. இந்த அழகுச் சிறப்பு கவர்ச்சிச் சிறப்பு; அதனாலேயே அவை 'அணிகலன்' என்று பெயர் பெற்றன.

இயற்கையிற் காணும் அழகு முறைகள் மொழியிலும் தகுதியாக அமைந்திருப்பது தமிழ்மொழி! தமிழ்மொழியைக் கையாளுவோர் சுவைத் திறன் இன்றி, 'எல்லாரும் புரிந்து கொள்வதே போதும்' என்று எழுதுவதானால், 'பாட்டு' என்பதே தமிழுக்குத் தேவையில்லை. அதன் யாப்பிலக்கணங்கூட, அணிகளோடும் மரபுகளோடும் பொருந்தி வருதலை நினைவு கூர்க. அவ்விரண்டும் இணைந்த இணைவே யாப்பாதலின், தொல்காப்பியத்தில் அணிக்கும் மரபுக்கும் தனி அதிகாரம் வகுக்கப்படவில்லை. அணியையும் மரபையும் செய்யுளில் இரண்டறக் கலப்பித்துச் 'செய்யுள் இயல்' மட்டும் பொருளிலக்கணத்தில் வந்தது.

அழகு மட்டும் வாழ்க்கைக்குப் போதாதுதான். கருத்துத் தான் முக்கியம். வாழ்க்கைக்கு முக்கியமாதலின், பொருளதிகாரம் தனி அதிகாரமாகக் கொள்ளப்பட்டது. பொருளை வெளிப்படுத்தவே யாப்பு வேண்டப்படுதலின், அதனை வடிவு கொள்ள வைக்கும் மொழி நடைகள் இன்ன இன்ன இயல்புகளும், முறைகளும், அணிகளும், மரபுகளும் கொண்டவைகளாக அமைய வேண்டுமென்பது கட்டாயமாகும். நடையைச் சுவைபடக் கையாளாவிட்டால் அது தமிழாகாது; இயற்கையும் ஆகாது; எழுதுவோர் ஆசிரியரும் ஆகார்; கருத்திலும் மொழியிலும் பலப்பல சிறப்புடையவர்கள், ஆசிரியர் மறைமலையடிகளார்!

கருத்துக்களிலும் வல்லுநர்:

கருத்துக்களை மட்டும் எடுத்துக்கொண்டால், மொழிநடைகளின் வேறுபாடுகளைப் போலவே கருத்துக்களிலும் பல வேறுபாடுகள் இருக்கக் காணலாம்; பிரிவுகள் பல; வாழ்க்கை ஒழுக்கத்தோடு தொடர்புடையனவாய், கற்பவர் திறத்துக்கேற்பக் கருத்துக்களைக் கொண்டுபோகும் சிறப்புக்கள் உடையனவாய், உலகியலோடும் அருளியலோடும் மாறுபடாதனவாய், இயற்கை நலம் பொருந்தித் திகழ்வனவாய்ப் பல திறன்களை அவை உடையனவாகும். ஆசிரியர் அடிகளார் அச் சிறப்புகளிலெல்லாம் வல்லுநரே!

பெரும்பாலார் எழுத்து நடைக்கும், அடிகளார் எழுத்து நடைக்கும் இவ் வேறுபாடுகள் அமைந்து கிடப்பதனால், மொழித் திறம் முட்டறுத்துச் செல்லும் தமிழ்ச் சுவைக்கும் அவற்றில் இட்டு எழுதப்படும் கருத்துக்கள், ஆராய்ச்சிகள், முடிபுகள், மறுப்புகள் முதலிய கருத்து வகைகளுக்கும், தமிழ் மக்கள் பலர், அவர்கள் நூல்களை ஆழப் பயின்று இருவகை நலங்களும் பெறுகின்றனர்!

பதிப்பும் சுவையும் :

கருத்து விளக்கத்துக்கு 'நலங்கள்' வேண்டப்படும். எழுத்துத் திறத்துக்கு 'மொழியழகு' வேண்டப்படும். உயர்ந்த கருத்துக்களை யெல்லாம் பாட்டில் எழுதிய ஆசிரியர்களும் அவற்றிற்கு உரை விளக்கம் செய்த நக்கீரர் முதலிய உரையாசிரியர்களும் இவ்விரு வகைச் சிறப்புக்களையும் தத்தம் நூல்களிலும், உரைகளிலும் பின் பற்றியிருக்கின்றனர். சங்க நூல்களைப் பதிப்பித்த பேராசிரியர்கள் இச்சிறப்புக்களை நன்கு உணர்வாராயினும், தம் எழுத்துக்களில் பெரும்பாலும் அவற்றைப் பின்பற்றவில்லை. மக்கள் புரிந்து கொள்வது ஒன்றே அவர்கள் எழுத்தின் கருத்தாய் இருந்திருக்கின்றது. மொழியழகுகளைப் பெரும்பாலும் அவர்கள் எண்ணிப் பார்க்கவும் இல்லை ; சிலர்க்குப் பயிலவும் வாய்ப்பு ஏற்படவில்லை.

ஆனால், ஆசிரியர் அடிகள் ஒருவர் மட்டுமே இருவகைச் சிறப்புகளையும் நன்கறிந்து, நேரம் கண்டு, பயின்று, சுவைத் திறம் பெருக உரைநடை நூல்களை இயற்றிய நல்லாசிரியரானார். சுவை நலம் வேறு, பதிப்பு நலம் வேறு ; தொல்லாசிரியர் மரபையே பயிற்சியினால், இவர் நெடுகச் சுவையாகப் பின்பற்றுவதனால், மொழிச் சுவை என்பதற்கு அடிகள் நடை பெரிதும் துணை செய்தது ; இளமையிலிருந்தே இவர்களுக்கு இம் மொழியழகு நன்கு வாய்த்துவிட்டது ; அது, பிறவிப் பேறுமாகும்.

தனித்தமிழ் நடை :

அடிகள் மிகப் பழைய ஆசிரியர்களையே பின்பற்றுபவர் ; பின் வந்த ஆசிரியர்களிற் பழைய பேராசிரியர்களைப் பின்பற்றுவோர் எவரேனும் இருப்பாரானால், அவர்கள் நன்முறைகளையும் போற்றிக் கொண்டு, அவர்களைப் போலவே எழுதுவார். பிற்காலத்துச் சில

ஞான முனிவரரின் உரைநடை, பெரும்பாலும் அடிகளார் நடையில் மலர்ந்திருக்கிறது. பழைய நக்கீரர் நடையும் அவ்வாறே காணப்படும்.

மிகப் பழைய தமிழாசிரியர் அக் கால இயல்புக்கு ஏற்றபடி தமிழ் மொழியைத் தனித் தமிழாகவே வழங்கி இன்புற்றார்கள். அதில் ஒரு தனியின்பம் காண்பதும் அவர்கள் இயல்பாய் இருந்தது. அடிகளார் தம்முடைய எல்லா நூல்களையும் பிற்காலத்தில் தனித்தமிழாய் ஆக்கிவிட்டார். மொழி மட்டுமல்லாமல் கருத்தும் தமிழ்க் கருத்தாகவே எழுதி வந்தார்.

தமிழ்க் கருத்து, தமிழ் நாகரிகம், தமிழ் வாழ்க்கை முதலியன வெல்லாம் சிறப்பாய் இன்னவையென்று, கதிரொளி போல் புலப்படும்படி, பிரித்து விளக்கினர். புதிய புதிய தமிழ்ச் சொற்களையும், கலைச் சொற்களையும் உண்டாக்கி அவை எளிதிற் பொருள் விளங்கும்படி இடையிடையே சேர்த்து மக்கள் புரிந்து கொள்வதற்கும் வழி செய்தார். அதற்காகத் தமிழ்ச் சுவையை அவர் குறைத்துக் கொள்ளவில்லை. மிக எளிய நடையானாலும், அரிய நடையானாலும் தமிழ் நலத்துக்கு எவ்வகைக் குறைவும் உண்டாகாதபடி, சுவை பொருந்திய நடை எழுதுவதே அடிகளின் இயல்பு. நடை தனித் தமிழாய் இருந்தால் அதன் சுவை மிகுதியாகும் என்பதை அடிகளார் நன்கு உணர்ந்திருந்தார்கள்; தொல்காப்பியர்,

"வடசொற் கிளவி, வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா குமே"

என்று (எச்சவியல், 5) அருளிச் செய்தது, ஏனைய மொழிகளில் வந்த பெயர்கள் முதலிய குறியீடுகளைத் தமிழில் எழுதும்போது, வட எழுத்துக்களை நீக்கித் தமிழ் எழுத்தால் எழுதலாம் என்று குறிப்புத் தந்தபடியாகும்.

இலக்கண நடை :

அடிகளார் எதை எழுதினாலும் அதில் இலக்கணப் பிழை இராது. தருக்கமும் இதில் அடங்கும். இலக்கணத்தில் பழைய ஆசிரியரான தொல்காப்பியர் முடிவுகளையே அடிகளார் மேற்கொள்வார்.

"சொற் பொருள்களில் ஐயம் வந்துழியெல்லாம், எல்லார்க்கும் மேற்கோளா யொப்ப முடிந்த 'தொல்காப்பிய' முதலான பண்டை நூற்கோள் பற்றியும், 'களவியல்' முதலான உரைக்கோள் பற்றியுமே துணிதல் வேண்டும்."

(சோமசுந்தரக் காஞ்சியாக்கம், ஆனந்தக் குற்றம், ii-பக். 16)

எடுத்துக்காட்டாக, 'மக்கள் சுட்டு ஒன்றே உயர்திணை; தெய்வஞ் சுட்டிய பெயர்நிலைக் கிளவி வேறு' என்னும் தொல்காப்பியனார் கொள்கையையே அடிகளார் எடுத்துக் கொள்வார்.

(சோமசுந்தரக் காஞ்சியாக்கம், பக். 43)

அழகு நடை :

கருத்தழகுகள், கலையழகுகள், புலமை அழகுகள் முதலியன இதில் மேம்பட்டிருக்கும்; 'நோக்கம் வேறு, அழகு வேறு' என்பது முன்பே தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

சிவஞான சித்தியார்க்குச் சிவஞான முனிவரின் உரை ஒன்றுண்டு; அதில் அவர், செய்யுட்களுக்குச் சொற்பொருளுரை தரவில்லை; மற்றுக் கருத்துத் தொடர்பு, செய்யுள் இயைபு, சமயக் கொள்கைகளின் நுண்பொருள் விளக்கம்; புலமைச் சிறப்புகள் தோன்ற விளக்கிச் செல்கின்றார்; மிக்க பயனுடைய உரை; அவர் எழுதிய தொல்காப்பியச் சூத்திர விருத்தி, இலக்கண விளக்கச் சூறாவளி முதலியவற்றிலும் இத் திறங்கள் காணப்படும்; ஆசிரியரடிகளாரும் இச் சிறப்புக்களைப் பாராட்டி,

"தொல்காப்பிய முழுமுதலோ டிங்ஙன மாறுகொண்டுரைத்திட்ட விடங்களெல்லாம் புரைபட்டுப் பொய்யாயொழியுமாறு, ஆசிரியர் சிவஞான யோகிகள், புலமை மலியவெழுதிய தொல்காப்பியச் சூத்திர விருத்தி, இலக்கண விளக்கச் சூறாவளி முதலிய அரிய நூல்களிலெல்லாம் இனிது விளங்கும்."

(சோமசுந்தரக் காஞ்சியாக்கம், பக். 43-4)

பேச்சு நடை :

கருத்துத் தொடர்பாய் இருந்தால் நீண்ட தொடர் அமையும். (சிவஞானபோத ஆராய்ச்சி எடுத்துக்காட்டில் இது காட்டப்பட்

டத்து); இடையிடையே முடிக்கப்பட வேண்டிய ஆராய்ச்சியாய் இருந்தால் இடைத்தொடரும் சிறு தொடரும் பொருந்தும் (நாக நாட்டரசி எடுத்துக்காட்டில் இதனைக் காணலாம்); பேசுவார்க்கு ஏற்றபடி கொச்சைத் தொடர்கள் போன்றன, 'கோகிலாம்பாள் கடிதங்கள்' என்பதில் (பக்கம் 45–ல் அயல்மொழிக்குரிய பாரசீகர் ஒருவர் பேசுவதுபோல்) வருகின்றன.

"அய்யா! நம்ப பெஞ்சாதி நம்பளெக் காட்டிலும் தம்பிள் நல்லாப் பேசுவா; நம்பளிக்கித் தம்பிள் நல்லாப் பேச வருறதில்லே; அதுக்காக நீங்கோ நம்பளே ரொம்ப மன்னிச்சுக் கொள்ளணும்; இந்த அம்மாவை பார்த்த ஒடனே எங்க மூத்த பெண்தா உசிரோடே வந்திட்டாள்னு நாங்க ரொம்ப ஆனந்தப்பட்டிருக்கிறோம். அய்யா! நீங்கோ மெத்த தயவு பண்ணி அடிக்கடி இந்தம்மாவெ நாங்க பார்க்கும்படி உபகாரம் பண்ணனும், அப்பொதா எங்க துக்கம் போவும்."

இன்னோசை நடை :

ஓசைகூட வழுக்காமல் நடையெழுதுதலில் பாட்டுக்கு எவ்வளவு உரிமையுண்டோ அவ்வளவு உரைக்கும் உண்டு; இசை நிறைக்கும் அளபெடைகள் பாட்டில் வருதல் போலவே (திருவாசக விரிவுரை பக். 287) உரைநடையிலும் அளபெடைகள் வரும்.

(சோமசுந்தர நாயகர் வரலாறு, பக். 31)

ஓசை வழுக்காமல் உரைநடை எழுதுவதிற்கூட அடிகளார் நடை ஏனையோர் நடைகளைவிடப் பீடுடையதாகும்.

"வல்லோசையின்றித் தமிழ்ச் சுவை ததும்பும் இனிய மெல்லோசை வாய்ந்த நடையில் ஆக்கப்பட்டிருத்தலின் சிந்தாமணியுந் திருத்தொண்டர் புராணமும் ஒற்றுமையுடையவெனவே உரைக்கலாம்"

(அம்பிகாபதி அமராவதி, பக். 72)

என்பது அடிகளார் சொல்.

முன்னோர் மொழி நடை :

பழைய நூலாசிரியர் உரையாசிரியர்களின் எழுத்து நடைகள், அடிகளார் உரைநடையில் மின்னி வருதல், ஒரு தனிச் சிறப்பு! நக்கீரனார் களவியலுரை பற்றி அடிகளார்க்கு மிக்க மதிப்புண்டு.

(மாணிக்கவாசகர் காலம், 448-68, 608)

பாச்சுவை மேவிய அவர் நடைச் சிறப்பும் மறுப்புத் திறன் மேவிய பிற்றைச் சிவஞான முனிவரர் நடைச் சிறப்பும் அடிகளார் நடையில் அங்கங்கும் மிளிரும்; அடிகளார் நடைச் சுவைக்கு இவ்விரு பேராசிரியர்களின் எழுத்துக்கள், முக்கிய வழிகாட்டிகளாய்த் துணை புரிந்திருக்கின்றன.

(சோமசுந்தரக் காஞ்சியாக்கம் முழுதும்)

விளக்க நடை :

'சிந்தனைக் கட்டுரைகள்' என்னும் ஆங்கில மொழி பெயர்ப்பு நூலில், 'படைப்பின் வியத்தகு தோற்றங்கள்' என ஒரு பகுதியுண்டு; சைவ சித்தாந்தக் கருத்துக்கள், அம் மொழி பெயர்ப்பு நூலிலும் அங்கங்கே இனிது விளக்கப்படுகின்றன; வேறோராசிரியரானால், மொழி பெயர்ப்பே யாயினும், அப் பகுதி விளக்கமே மாறுண்டிருக்கும்.

'கோகிலாம்பாள் கடிதத்'தில், கோகிலாம்பாளின் அறிவாற்றலைப் பல முகமாக ஆசிரியர் அங்கங்கும் விளக்கிச் செல்கின்றார். திருமுறைகளின் இசைச் சிறப்பு, பிறப்பிறப்பற்ற சிவபிரானது முழுமுதன்மை, தமிழ் நூல்களின் மாட்சி திருவள்ளுவர் உயர்வு முதலியனவெல்லாம் கோகிலாம்பாளின் வாய் மொழியாக விளக்கப்படுகின்றன.

'அம்பிகாபதி அமராவதி' நூலில் அரங்கேற்றக் கலைச் சிறப்பு, சொற்பொருட்கலை மேன்மை, காப்பியங்களின் வேறுபாடுகள், இலக்கணம் என்பதன் கருத்து, தொல்காப்பிய மாட்சி முதலியன நன்கு விளக்கப்பட்டிருக்கின்றன.

(பக். 40-50, 69-73)

காரண காரிய நடை :

சொற்றொடர்கள் ஒன்றன்பின் ஒன்றாய்த் தொடரும்போது, கருத்து விளக்கங்களைக் காரண காரிய முறையில் தொடர்ந்து

எழுதினால், அஃது அறிவு முறையாதலின், கற்பவர்க்கு அறிவு கிளர்ந்தெழுந்து பேரறிவாகி அறிவின்பம் பயக்கும்; அறிவையும் சிந்தனையையும் பெருக்குதலால், அவ்வெழுத்துப் பணி, வாழ்க்கை விளக்கத்துக்கும் வகை செய்யும்.

(யோக நித்திரை நூலின் எடுத்துக் காட்டினால் இது விளங்கும்.)

'இங்ஙனம்' 'ஆனாலும்' 'ஆயினும்' 'ஏனென்றால்' 'ஆதலால்' 'ஆகவே' 'எனவே' 'சுட்டுக்கள்,' 'உருபுகள்' முதலிய எத்தனையோ வகையான இடைச்சொற்கள் தமிழில் இருப்பது இந்நடைக்கு மிகவும் உதவியாயிருக்கும்.

(தொலைவிலுணர்தல், பக். 221)

பெயர், வினை, இடை, உரி என்னும் நால்வகைச் சொற்களின் இடைச் சொற்களால் விளையும் பயன்களில் இதுவும் ஒன்று; இடைச் சொல் இருப்பதைத் தமிழெழுதுவோர் கருத்தூன்றிப் பயன்படுத்தாவிட்டால், நடையிற் சுவை குறையும்.

இடைச் சொற்களைப் பயன்படுத்தாமலே காரண காரிய முறையில் தொடர்ந்தெழுதுதலும் உண்டு; சொற்கள் மிகாமைக்கு இம் முறை ஏற்றதே யாயினும், அது, இயல்பன்று.

ஆராய்ச்சி நடை :

ஆராய்ச்சிகள் பெரும்பாலும் காரண காரிய முறைகளை ஒட்டியே நிகழுமாயினும், வெளிப்படையற்ற மறைவான கருத்துக்களை வெளிப்படுத்தி மன்பதையை அவை உய்விக்கின்றன; பொய் மெய்களைப் பிரித்துத் தருகின்றன.

மரபு கொண்ட சொற்களாலேயே கருத்துக்களைக் கூறிக் கொண்டிராமல், அவற்றின் கருத்துக்கள் இன்னவையென்று வாழ்க்கை விளக்கமாக விளங்க வைத்தலும் இவ் வாராய்ச்சி முறையின் பெரும் பயனாகும்.

சிவஞானபோத ஆராய்ச்சியில், வித்தைக் கருவிகளுள் ஒன்றான 'கலை' என்னும் பிரிவும் ஆராயப்பட்டிருக்கிறது. 'கலை' என்று சொல்லப்படுங் கருவி எது? வாழ்க்கையில் எப்படித் தெரிகிறது? எப்படிப் பயன்படுகிறது? என்றெல்லாம் அடிகள்

விளக்கியிருக்கின்றார் (பக். 67-8). மிகவும் இன்றியமையாத இவ்வாராய்ச்சி போல்வன, கற்பார்க்கு எவ்வளவு உதவியாயிருக்கும், பாருங்கள்! இங்ஙனமே பிறவும்!

ஆய்வு முறையில் ஒன்றிக் கலந்து தமிழை எழுதும் பொழுது, அதற்கேற்ற இயல்பில் நடை மிக அமர்த்தலாக அமைந்து விடுகிறது; நிறைந்து கரைபுரண்டோடும் ஓர் ஆற்று வெள்ளம், ஓடுவதே தெரியாதபடி எவ்வளவு சுழித்தாழ்ந்து நடைபயில்கிறது! "நடவாய் வாழி காவேரி" என்னும் இளங்கோவடிகளார் வாக்கு எவ்வளவு இயற்கையாய் இருக்கிறது!

'சிவஞானபோத ஆராய்ச்சி' 'திருக்குறள் ஆராய்ச்சி' என்பன, நூல்களின் தலைப்புகளாலேயே ஆராய்ச்சி நிலைகளைப் புலப்படுத்தும்; 'மாணிக்கவாசகர் வரலாறு' என்பதைத் தனியாகப் பதிப்பித்த நூற்பதிப்புக் கழகத்தார், 'சமயக் கொள்கைகள் ஆராய்ச்சி' என்று ஓர் உள்தலைப்பு இட்டிருப்பதும் இதனை வெளிப்படுத்தும்.

மறுப்பு நடை:

அடிகளார் ஒன்றை மறுக்க முற்பட்டால், தக்க சான்றுகளின்றி எதுவும் செய்யார்; மறுப்புக்குரியவரும் அதனால் தெளிவு பெறுவர்; உரிய மறுப்பு முறைகளைக் கையாள்வதுடன், உரிய முடிபு வாய்பாடுகளையும் அங்கங்கும் ஏற்றி நடைகூட்டுவார். இடையிடையே விந்தையான பழமொழிகளையும் இணைத்து, மறுப்பவர் செம்மலையும் சிதைத்து விடுவார்; சோமசுந்தரக் காஞ்சியாக்கம் முதலிய மறுப்பு நூல்களில் முழுதும் இவ்வியல்புகளைக் காணலாம்.

எடுத்துக் காட்டாக இங்கே ஒரு தொடர் மட்டும் (பக். 36).

"தலையாய அறிவினர்க்கே விளங்கற்பாலனவாய், ஏனைப் புல்லறிவினார்க்கு விளங்கா திருண்டு கிடப்பனவாய பொருட்பால் நுண்பொருளெல்லா மறிதற்கு நீர் யார்?"

முத்தமிழ் நடை:

அறிவுநிலை (இயற்றமிழ்), உணர்வுநிலை (இசைத்தமிழ்), இவ்விரண்டின் அடிப்படையில் நிகழும் செயல்நிலை (நாடகத்தமிழ்)

என்னும் திறத்தில் அடிகளார் எழுத்து முத்தமிழ் நடையாய்ப் பயில்வுறுகின்றது.

"உண்டு என்பதனை விளங்க அறிவித்தற்குரிய அறிவு நிலையும், பின் அதனோடு வேறறக் கலந்துநின் றின்புறுதற் குரிய உணர்வு நிலையு மென்னும் இருதிற நிலையினையும் உயிர்களுக்கு முறுகுவித்துப் பின் அவ்வறிவு நிலையினையுங் கழலச் செய்து தூய அன்புருவாய் விளங்கும் உணர்வுநிலையை நிலை பெருக்குவித்து உயிர்களுக்கு அளந்தறியப்படாத பெரும் பயனைத் தருதற்கு இன்றியமையாக் கருவியாவதுதான் பாட்டென்பது"

(பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை, பக். 6.)

மேல் வந்த 'சோமசுந்தர நாயகர் வரலாற்'றின் எடுத்துக் காட்டினாலும், உரையாடற் செயலின் நாடகத் தமிழ் நிலையை, அது வாழ்க்கை யுண்மையாய் நடைபெற்றதாதலின், இனிது விளக்கும்; 'அம்பிகாபதி அமராவதி' முதலிய நாடகநூல் நடையும் இங்கே நினைவுகூரத் தக்கது.

அடிகளார் நூல்கள் அனைத்தும், எழுத்து நடையில் எவ்வளவு சிறப்புடையனவோ அவ்வளவு கருத்து விளக்கத்தாலும், விளக்கும் முறைகளாலும், மாட்சிமை வாய்ந்தவை.

இங்ஙனம் அடிகளாரின் எழுத்து நடை, இனிமையும் அருமையும் இலக்கண இலக்கியத் தருக்கச் சிறப்புகளும், பிறவும் வாய்ந்ததாய் இருப்பதுடன, பலப்பல வாழ்க்கை நலன்களும் அமைந்து, தொல்லாணை நல்லாசிரியரின் அழகு நடை போலவே சுவை மிகுந்து செல்கின்றது

கக. சீர்திருத்தம்

அடிகளார் வாழ்க்கையில் பல நிலையான ஆற்றல்கள் மிளிர்ந்து தோன்றின. ஒவ்வொன்றும் வீறி விளங்கித் தலைமை பெற்றுச் சிறந்தன. எல்லாம் புரட்சி விளைத்து மற்றவர்க்குச் சீர்திருத்தங்களாய்த் திகழ்ந்ததோடு, நிலை கொண்டனவாயும் பெருமை பெற்று விட்டன. சங்க நூல்கள், சமய நூல்கள், கொள்கை நூல்கள், உலக நூல்கள், பன்மொழி நூல்கள், எல்லாவற்றின் அடிப்படைப் பெருங் கருத்துக்களையும் அகங்கொண்டு, பெரும் பெருந் திருத்தங்களாய்ப் பொலிவுற்றுவிட்டன!

அ. உடலோம்பல்

இதைப் பற்றிய திருத்தத்திற்கு வான், வளி முதலிய உலகப் பொருள்களும், மனம் முதலிய உட்கருவி விளக்கங்களும், இவ்வுடலமைப்புகளும், பிறவும் நன்கு தெரிந்திருக்க வேண்டும்.

உயிரின் இயல்புகளும் கடவுள் உணர்வும் அறிந்திருக்க வேண்டுவது முதன்மை.

இவ்வெல்லாப் பொருள் இயல்புகளோடு அவ்வவற்றின் இயற்கையான இயக்க முறைமைகளும் தெளிவு பெற்றிருந்தால் மட்டுமே உடலோம்பலில் நிலையான திருத்தம் காண முடியும், கண்டு தொடர்பாகப் பின்பற்றி நலமுற வாழவும் வாழ்விக்கவும் முடியும்!

அடிகளார் இயற்றிய பலவேறு பொருளியல் நூல்களில், 'மக்கள் நூறு ஆண்டு உயிர் வாழ்க்கை' என்பதும் ஒன்று; அதில் இவ்வியல்புகளெல்லாம் நன்கு விளக்கப்பட்டிருக்கின்றன.

உடம்பின் பொருள்கள் நிலைகுலையாமலிருந்தால் மட்டுமே உடலோம்பல் செவ்வையாக நிகழ்ந்து வரும். மூப்பினால் நிலை தளர்தலை யாரும் தடுப்பதற்கு இல்லை. இருக்கும் வரையில்

நோயின்றி இருப்பது இன்றியமையாதது. அதற்கான குறிப்புக் களெல்லாம் அந் நூலில் வருகின்றன.

நோய்ப்பட்டு அதனைப் பின்பு பெருமுயற்சியுடன் நீக்கிக் கொள்வதைவிட, நோய் வராமல் காக்கும் திருத்தங்கள் முக்கியமானவை; இது தமிழ் மறையிலும் வற்புறுத்தப்பட்டது.

உலகப் பொருள்களோடு உடம்பு ஒத்து இயங்குதல், ஒரு வகையில் இயற்கையே அமைந்திருக்கின்றது; அதோடு உலகப் பொருள்களாகிய வான், வளி, நீர், தீ, மண் என்பவற்றையும் அவற்றின் திரிவுண்ட விளைபொருள்களையும் உட்கொண்டு கழிக்கும் முறை ஒன்று. இவ்விரண்டும் சரியான அளவில் இருக்கப் பார்ப்பதோடு அதற்கேற்ப அறிவு, விருப்பம், தொழில்கள் முதலியவற்றை அளவாய்ப் பயன்படுத்திக் கொண்டு அமைதியால் அருளுணர்வோடு வாழ்ந்து வருதலும் ஒரு திருத்தமாகும்.

இவையெல்லாம் ஒக்கப் பொருத்தும் முறையில் அடிகளார் உடலோம்பல் திருத்தங்களைத் தெரிவித்திருக்கிறார்கள்; இவ்வளவும் அமையாத ஏனையோரால் எத் திருத்தங்களையும் செவ்வையாய்த் தெரிவித்தல் இயலாது. அவர்களிடம் சீர்திருத்தங்களை எதிர் பார்த்தலும் முறையன்று!

'மருந்து' என்னும் அதிகாரத்தில் திருவள்ளுவர் இயற்கை மருத்துவமே விளக்கியிருக்கின்றார். அதற்கு அவர் எவ்வளவு உள்ளுணர்வு மிக்க மேதையாய் விளங்கியிருக்கவேண்டும்! எல்லார்க்கும் இயலுமா? சொல்லுவதைக் கிளிப்பிள்ளைபோல் சொல்வது வேறு!

உண்ணும் உணவுப் பொருள்கள் பொருத்தமாய் இருந்தால் உயிருக்கு ஊறுபாடு ஏதுமில்லை. மருத்துவர் உணவுகளின் சாறுகளைத் திரட்டியே நீருகவும், நீராளமாகவும், கிண்டிய பொருளாகவும், மாத்திரைகளாகவும், மற்ற வடிவுகளிலும் மருந்துகளைத் தருகின்றனர்.

உலகத்தில் உள்ள மாஞ்செடி கொடிகளின் வேர்கள், பட்டைகள், இலைகள், அரும்புகள், மலர்கள், விதைகள் போன்ற மரக்கறிப் பொருள்கள் பலவற்றின் இயல்புகளையும் ஆற்றல்களையும் இன்னும் மக்கள் சரியாக அறிந்துகொள்ளவில்லை.

மேற்கு மலைத்தொடர் விந்தியமலை, பனிமலை மறைந்து போன ஐந்தர மகேந்திரமலை முதலிய மலைகளிலும் இடையிடையே விளங்கும் குன்றுகளிலும் எத்தனையோ வகையான மரஞ் செடி கொடி வகைகளில் மருந்தாற்றல்கள் நிரம்பியுள்ளன. பூதப் பொருள்கள், உலோகப் பொருள்கள், கறி காய்ப் பொருள்கள் முதலியவற்றில் அமைந்திருக்கும் மருந்தாற்றல்களுக்கும் ஒரு கணக் குண்டோ? அவற்றிலெல்லாம் நூற்றில் இரண்டு மூன்று பங்குகூட உயர்ந்த மருத்துவராலும் இன்னும் அறியப்படாமல் உள்ளன.

இப்போது காணப்படும் இயற்கை மருத்துவம் அல்லாத அயல் மருத்துவ முறைகள் பெரும்பாலும் ஊன் பிழிவுகள் கலந்து பல வேறு வகையில் இடர்விளைத்து வருகின்றன. ஆண்டுதோறும் மருத்துவர் மிகுந்தே வருகின்றனர்; நோய்களும், புதியன புதியன வாய் வேறு வேறு பெயர்களில் மிகுந்து வருகின்றன. 'பொருந்தும் உணவும் பொருந்தா உணவும்' என்னும் அடிகளார் நூல், அனை வராலும் இங்கே கருத்தூன்றுதற்குரியது!

இக்கால மருத்துவரிற் பெரும்பாலோர், நோய்கள் வருமுன் அவை வாராமைக்குரிய வழி முறைகளையும் எடுத்துக் காட்டுகின்ற வராயில்லை; வந்தபின் நீக்கும் முறைகளும் நோயாளருக்குத் தெரிய விடுவதில்லை; காலம் மாறிப்போயிற்று! அறிவு, காரணங்களைத் தேடுகின்றது.

மருத்து நூல்கள், மருத்துவர் படிப்புக்கே பெரும்பாலும் இயற்றப்பட்டிருக்கின்றன; மக்கள் தெளிவுக்கு இல்லை. ஆனல், அடிகளார் நூல்கள் பொதுமக்களின் நலங்கருதி அவர்க்குப் பயன் படும் வகையில் இயற்றப்பட்டிருக்கின்றன. அவற்றை வாங்கிப் படித்து அனைவரும் நலம் எய்துதற்குரியர். 'எந்த நூல்களை எப்படிப் பயன்படுத்துதல் வேண்டும்? எவை என்ன மதிப்புக் குரியன?' என்று நாடு அறிந்து கொள்வதும் போற்றிக் கொள் வதும் ஒரு நாட்டின் வளர்ச்சியைக் காட்டுமல்லவா?

அடிகளார், வாழ்க்கையில் விளங்கியபோது, நூல்கள் மட்டு மன்றி அன்பர்களுக்கு எழுதும் பெரும்பான்மைக் கடிதங்களிற்கூட உடலோம்பலின் முதன்மையை இயற்கை மருத்துவ முறைகளாலும் தவ முறைகளாலும் தெரிவித்து வருவார்கள்.

எமக்கு எழுதிய எத்தனையோ கடிதங்களில், மறக்க முடியாத படி இவ்வன்புச் சிறப்புகள் காணப்படும்.

ஒரு முறை யாம் பெரியம்மை வார்க்கப்பட்டுப் படுக்கையில் கிடந்தேம்; எமக்கு ஆண்டு அப்போது இருபதுக்குள் இருக்கும். அந் நிலையில் யாம் கையாள வேண்டிய முறைகளையெல்லாம் தொகுத்து, அடிகளார் தெரிவித்து வந்தார்கள். சூழலில் உள்ளோர் குளிர்ந்த பண்டங்களை உண்ணக் கொடுப்பார்கள்; அவற்றை நீ உண்ணாதே! என்பது அவற்றுள் ஓர் அறிவுரை. மற்றொரு முதன்மையான அருளுரை, திருமுறைகளை நாளும் ஓதிக்கொண்டு, முழுமுதல் சிவத்தையே தேனித்துக் கொண்டிரு; மாரி முதலான சிறு தேவதைகளை உன்னாதே என்பது.

திருஞானசம்பந்தர்க்குத் திருநீலகண்ட யாழ்ப்பாணர் வாய்த்தது போல், அடியேமுக்கும் திருக் கலியாணசுந்தரம் என்னும் பாடல் மாணவர் ஒருவர் அமைந்திருந்தனர். திருத்தலங்களுக்குச் செல்லும்போதெல்லாம் அவர் உடன் வந்து பாடல் தொண்டு புரிவார். பெரியம்மை வார்க்கப்பட்டிருந்த காலங்களில், ஒவ்வொரு நாளும், இடையறாமல் அருகில் இருந்துகொண்டு திருமுறைப் பாடல்களை இசை முழக்கி இனிது ஓதி வந்தார். முழுமுதற் சிவம் பற்றிய இத் தெய்வ உணர்வு மிகப் பெரிதும் அருள் சுரந்து நலம் விளைத்தது; பலரும் அஞ்சியதுபோல் உடம்பில் வடுவே விழாமலும், பெரியம்மை வார்த்த அடையாளமே இல்லாமலும், கண் முதலியன சிறிதும் பழுதாகாமலும், சுருங்கிய நாளில் அப் பெரியம்மை இறங்கி நீங்கியது. இங்ஙனம் அடிகளாரால் நலமுற்ற அன்பர்கள் எத்தனையோ பேர்! செய்திகள் எத்தனையோ பல.

ஒன்று மட்டும் இங்கே அவர்கள் கடித வடிவிலேயே எடுத்துக் காட்டலாம். ஒருகால் எம் துணைவியார்க்குச் சூடு மிகுதியாகித் தொடர்பாக நோய் உண்டாக்கியது; அடிகளார் இதனை எப்படியோ அறிந்துகொண்டனர். அப்போது அவர்கள் எழுதிய கடிதம் முழுவதும் நினைந்து நினைந்து நெஞ்சு நெகிழ்தற்குரியதாய் இருக்கிறது. பல்லாவரத்திலிருந்து இதனை எழுதியிருக்கிறார்கள்.

ஓம் சிவம்

பல்லாவரம்,
12—9—1927

அன்புமிக்க பாலசுந்தரத்திற்கு அம்மையப்பர் திருவருளால் எல்லா நலங்களும் உண்டாகுக!

நீ அன்புடன் எழுதிய கடிதமும் மறுப்புரையும் வந்தன.

* * * * *

ஐந்தாறு கடுக்காய்களை உடைத்து உள்ளுள்ள விரைகளை நீக்கி மற்றத் தோலுஞ் சதையும் இடித்து, அத் தூளை உழக்குத் தண்ணீரில் இட்டுக் காய்ச்சி அரையாழாக்காகச் சுண்டியபின் அச் சாற்றை இறுத்துக் காலை 8 மணிக்கெல்லாம் உட்கொண்டால் பத்து மணிக்கெல்லாம் இரண்டு மூன்று முறை மலங்கழியும். இவ்வாறு ஏழுநாளைக் கொருகால் மலக் கழிவு மருந்து உட்கொள்க.

காலையில் ஆவின் பாலிற் காய்ச்சிய சவ்வரிசிக் கஞ்சியும், பகலில் வெங்காயத்தை நெய்யில் வதக்கி அதனையுந் தயிரையுங் கலந்த சுடு சோற்றையும் இரவில் சவ்வரிசிக் கஞ்சி அல்லது நாட்டுக் கோதுமை நொய்க் கஞ்சியும் உணவாக உட்கொள்க. நோய் தீரும் வரையில் மிளகாய் சேராதே மிளகாற் சிறிது சேர்க்கலாம். கருணைக் கிழங்கும், பலகீரை, சிறு கீரை, பொன்னாங்காணிக் கீரை, அறைக் கீரையும் மிகச் சேர்க்கலாம். நோய் தீர்ந்தபின் ஒரு பங்கு மிளகாய்க்கு ஒரு பங்கு கொத்தமல்லி விரைசேர்த்து மஞ்சள் கலந்து அக் கூட்டைப் பயன்படுத்துக.

ஓர் அங்கை நிறைந்த வெந்தயத்தை எட்டுமணி நேரம் நீரில் ஊறவைத்தெடுத்து வெண்ணெய்போல் அரைத்து அதனைத் தயிரிற் கலக்கி வெறு வயிற்றிற் காலை நண்பகல் மாலை என்னும் முப்பொழுதும் மருந்தாக அருந்திவரல் வேண்டும். நோய் தீர்ந்தபின் இம் மருந்தை நீக்கி விடலாம்.

நோயின் நிலையை அவ்வப்போது தெரிவி.

வாதுமைப் பருப்பிற் கசப்பில்லாத ஏழு எட்டை ஊறப் போட்டுத் தோல் நீக்கி, அவற்றோடு கசகசா வைத்து அரைத்

துச் சிறிது சோற்றுக் கஞ்சியிற் குழப்பிக் காய்ச்சியெடுத்து, அதனைத் தலையிற் றேய்த்துக் காலையில் வெந்நீரிற் றலைமுழுகல் வேண்டும்.

திருச்சிராப்பள்ளிச் சைவசித்தாந்த அவையின் ஆண்டு விழாவுக்கு எம்மை அவைத் தலைவராய் அழைக்கத் தமிழ்ப் புலவர் திரு. அ. மு. சரவண முதலியாரவர்கள் வந்து காத்திருக்கிறார்கள். ஆதலால் அவர் முன்னிலையில் இதனை மிக விரைந்தெழுதலானேம். பிறபின். நலம்.

அன்புள்ள,

மறைமலையடிகள்

சென்னையிலுள்ள சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தில் உன்னைத் தமிழாசிரியராக வைத்துக் கொள்ளும்படி சொன்னேம்.

* * * * *

இணங்கி யுள்ளார்கள். நின் கருத்தென்னை? தெரிவி.

மறைமலையடிகள்

குறிப்பு: மிக விரைந்தெழுதிய இக் கடிதத்தின் கையெழுத்து அச்செழுத்துப்போல் உள்ளது. மருத்துவத்தில் தொலைவிலிருப்பவர்க்கு எவ்வகை ஐயமும் தோன்றாதபடி, விளக்கமும் தெளிவும் கொண்டு, தனித்தமிழ் நடை அமைந்து கடித இலக்கியமாய் இது திகழ்கிறது.

இக் கடிதத்தைக் கழக ஆட்சியாளர் திரு. வ. சு. அவர்கள் பார்த்தவுடன் மிக அழகாக அட்டை இட்டுக் கட்டுச்செய்து அன்புடன் அளித்துப் பத்திரமாய் ஓம்பி வரப் பரிவுரை கூறினர். இன்னனம் எத்தனையோ பல நிகழ்ச்சிகள்! தமிழகம் முழுதும் அன்பர்களின் உடலோம்பலில் அடிகளார் காட்டிய ஆர்வமும் அன்பும் அருளும் திருத்தங்களும் இணையற்றவை!

ஆ. உள்ளம் ஓம்பல்

உட்கருவிகளின் பொருளியல் இதற்குத் தெரிந்திருக்க வேண்டும். அக் கருவிகளின் நிலைகளைச் (நிலைவத்தையைச்)

சேராமல், எல்லாக் கருவிகளோடும் மேல்நிலையிற் சேர்ந்திருக்கிற விழிப்பு நிலையிலேயே (சாக்கிராவத்தையிலேயே) மேல் மேல் நுட்பங்களைச் சாக்கிரத்தில் சாக்கிரம் முதலிய மத்தியாலவத்தை சுத்தாவத்தைகளைப் பழக்கத்தால் தெளிந்திருக்கவேண்டும்.

உட்கருவிகளையெல்லாம் மனம் என்னும் ஒரு சொல்லாலேயே குறிப்பிடுவதும் உண்டு.

கருவிகளின் பொருளியல்புகளை மட்டும் அறிந்திருக்கிற நிலையோடு. அவற்றின் ஆற்றல்களிலும் பழகியிருக்கவேண்டும்; இதனை மனவல்லமை என்று சொல்லலாம்.

மனம் முதலிய கருவிகளின் இயல்பை அறிந்திருப்பது வேறு, மன வல்லமையிற் பழகியிருப்பது வேறு. இக்காலப் பல்கலைக் கழகப் பெரும் படிப்பாளிகள் மனம் முதலிய பொருளியல்புகளை அறிந்திருக்கிறார்கள்; ஆனால், மன வல்லமையிற் பெரும்பாலோர் பழகியிருக்கவில்லை.

'யோக நித்திரை' யென்னும் அறிதுயில் (Hypnotism), மனக் கவர்ச்சி என்னும் மனித வசியம்' (Personal Magnetism) தொலைவில் உணர்தல் (Telepathy) முதலிய மனப் பழக்கங்களைப் (Communication between mind and mind) பல்கலைக் கழகப் படிப்பாளிகளில் பலர் அறிந்திருக்கின்றனரா? மருத்துவர்களிற்கூடப் பெரும்பாலார் உளநூல் (Psycology, The Science of Mind) அறிந்திருப்பார்களே யன்றி மன வன்மையிற் (Psychical power) பலர் பழகியவர் அல்லரே?

அடிகளார் இயற்றிய நூல்கள், மன ஆற்றலைப் பலர்க்கும் விளைத்து, அதன் வாயிலாக, விழிப்பு நிலையிலேயே 'தூங்காமல் தூங்கும்' பழக்கமும், (மத்தியாலவத்தை) 'தெளிவுக் காட்சி' (சுத்தாவத்தை) என்னும் பழக்கமும் மக்களுக்கு உண்டாக்குகின்றன! இவற்றால், 'மறைபொருள் நுட்பங்கள்' 'எதிர்கால நோய்கள்' முதலியன கண்டு, அவை தீர்த்துக் கொள்ளுதற்குரிய எளிய இயற்கை முறைகளையும் அடிகளார் விளக்குவர். X-Ray முதலான கதிரொளிகளைக் கருவிகளில்லாமலேயே காணும் பேறு, இதனால் மக்களுக்கு வாய்க்கின்றது!

விஞ்ஞானமெல்லாம் இக்காலத்தில் கருவிகளுக்கு அடிமைப் பட்டுக் கிடக்கின்றன; அவை வியப்புக்குரியன எனினும் இயல் பல்லாதன; செலவு முதலியன வாய்ந்தன; பொருளியல் சீர்கேட்டிற்கும் அச்சம் முதலிய விலங்கியல்புகளுக்கும் உரியன. ஓரளவு விஞ்ஞான உணர்விருப்பின் வாழ்வியல் வளத்துக்கு உதவியாயிருக்கக்கூடும்; மெய்ஞ்ஞானச் சிறப்பே எல்லாச் செழுமைகளுக்கும் வித்து. உலகம் சீர் திருந்திய நிலையிற் சிறக்கும்படி விரைவில் இறைவன் அருள் புரியக்கூடும்.

காற்றுக் குழாய்க்குள் சென்றுவிட்ட காற்றும்; நெஞ்சக் குழாய்க்குள் நுழைந்துவிட்ட குருதியும், உணவுக் குழாய்க்குள் புகுந்துவிட்ட உண்பொருள்களும் உள்ளே என்ன ஆகின்றன என்பது பொதுவாக மக்களுக்குத் தெரிவதில்லை; இவற்றை யெல்லாம் 'மனவல்லமை'யின் நுட்பங்களால் இனிது தெரிந்து, திருத்தங்களை மேற்கொள்ளலாம்.

எல்லாக் கருவிகளோடும் உயிரறிவு கூடி இருக்கும் இடம் புருவநடு! அதனை மனக்கண் அல்லது நெற்றிக் கண் என்பர். அது மேல்நோக்கியிருக்கும்; 'நோக்குதல்' 'ஆழ்ந்து நோக்குதல்' 'உற்று நோக்குதல்' 'உறுத்து நோக்குதல்' 'வேறின்றி நோக்குதல்' ஆகிய 'நனவு' 'கனவு' 'உறக்கம்' 'பேருறக்கம்' 'உயிர்ப்படக்கம்' என்னும், 'சாக்கிரச் சாக்கிரம் சொப்பனம்' சுழுத்தி துரியம் துரியாதீதம் ஆகிய ஐவகை நிலைகளால் அடிக்கடி தேனித்து, நெற்றியிலிருந்து உச்சிவரையில் இம் மனக்கண் வல்லமையை அடையலாம். இவை யெல்லாம் மேற்கூறிய நூல்களில், அடிகளார், இயற்கைத் திருத்தங்களாக விளக்கியிருக்கிறார்கள்.

இப் புரட்சி வாழ்க்கைக்கு மிக இன்றியமையாதது! இதனை 'மத்தியாலவத்தை' அல்லது 'வித்தியா தத்துவக்'காட்சிகள் (மிசிர மாயா தத்துவதர்சனம்) என்று சாத்திரம் பகரும். 'சிவஞான போத ஆராய்ச்சி'யிலும் 'நூறாண்டு உயிர் வாழ்க்கை'யிலும் மேற் காட்டிய தவமுறை நூல்களிலும் கண்டு தெளிய வாய்ப்பிருக்கின்றது. முதலில் பிறரை நிறுத்தப் பழகி உடனுக்குடன் தம்மை நிறுத்தவும் பழகிக் கொள்ளலாம்.

இ. உணர்வு ஓம்பல்

இஃது உச்சிக்குமேல் தூய முதல்களில் (தத்துவங்களில்) உலா வரும் "சுத்தாவத்தை"யாகிய ஐவகை நிலைகளைக் குறிப்பதாகும். இதனை அடைவோர் தமது உடம்பை ஞான உடம்பாகவும், தூய சிறப்புடம்பாகவும், வெளி உடம்பாகவும், ஒளியுடம்பாகவும், ஒலி உடம்பாகவும் மாற்றிக்கொள்ளும் உயர்ந்த திருத்தங்களை எய்துவர். "வானத்தின்மீது மயில் குயில் ஆச்சுதடி" என்னும் திருவருட்பா, சாதாக்கிய வெளியின்மீது ஒளி ஒலியுடம்புகளாதலை உருவகத்தாற் குறித்து மகிழ்ந்தமை இங்கு நினைவுகூர்தற்குரியது!

தூய நிலைகளில் (சுத்தாவத்தை ஐந்திலும்) புருவ நடுவிலிருந்தே உச்சிக்குமேல் அருளொளி பரவும் வரையில் தேனிக்கலாம்; குண்டலி ஒளிக்கனலை அதுவரையில் எழுப்பி அதன் உச்சியில் அம்மையப்பரை வணங்கித் தூய ஞானமும், தலைமையும், நிறைமொழியும், அருளொளியும், நுண்ணிய நாத நிலைகளாகிய சேவைச் செல்வ அமிழ்தும், அருளால் எய்தி,

அதன்பின், கருவிகளின் தொடர்புகள் எவையுமின்றி, உயிருணர்வினால் மட்டும் திருவருளைத் தேனித்துக் கூடி, அத்திருவருள் அம்மையின் உதவியால், சிவநிலைப் பேரின்பத்தில் இரண்டறக் கலந்து நிலைபேறெய்தலாம்.

இதற்கு, இவ் வுடம்பிலேயே தூய பொருள்களாயுள்ள எழுத்தொலிகளைப் (பீசாட்சரங்கள்' 'மந்திர ஒலிகள்' திருமுறைப் பாடல்களைப்) பயன்படுத்துதல் வேண்டும்.

நமது உடம்பில் வெளியே வந்து உள்ளே செல்லுவது ஒரே ஒரு பொருள். அது 'மூச்சு' எனப்படும். இதன் மூலம் 'அண்ட பிண்டங்'களின் அனைத்து நலங்களையும் அடைய நம் முன்னோர் அறிந்திருந்தனர். அதை உள்வாங்கினால் காற்றுப் பையில் செல்வதோடு மூலப்பகுதிவரையில் நடமாடும்; நாம் பேசும்போது பேச்சுடன் மூச்சும் வருதலை அறிவோம். மூலப்பகுதி வரையில் சென்ற மூச்சு உடனே வெளிவந்து விடாமல் சிறிது நேரம் நிற்குமானால் (பிராணயாமம்) அஃது இரண்டு மூக்குகளிலும் (நடு நாடியில்) ஒலி ஒளிகளை ('மூல குண்டலி என்னும் 'மின் வல்லமையை)' எழுப்பிக்

கொண்டு மேல் உய்ரும். உள்ளிருந்து வெளியே வருவதும் உடம்பெங்கும் விசிறுவதும் ஒலி ஒளிகளாகிய இந்த அருள் மின்னலே!

அழுக்கு மிக்க 'அசுத்த மாயை' நமது உடம்பில் தூய பொருளாய் (சுத்த மாயை) உள்ளது விந்து நாதம் என்னும் இவ் ஒளி ஒலிகளே!

எழுத்துக்கள் நாதம் உடைமையோடு மின் வடிவும் உடையவாகும். அவை தூய மாயையாகிய விந்து நாதங்களில் தோன்றுவன; ஆதலால் தேவார திருவாசகங்களாகிய அருள் மின் ஒலி ஒளிகள், மிகவும் தூயவை ஆகும். அவற்றைப் பற்றிக் கொண்டும் திருவைந்தெழுத்தாகிய சிவ மந்திர அருள் மின்னலைப் பற்றிக் கொண்டும் மேல் எழுந்தால், பாடலோடு ஆடலாகிச் 'சுத்தாவத்தைகள்' ஏற்படும்; விளையும்! அதன் மேல்நிலைகளையும் அடையலாம்! இதனால், தேவார திருவாசகங்களாகிய திருமுறைப் பாராயணம், 'சுத்த தத்துவங்'களோடு ஒன்றுதலாய்ச் 'சுத்தாவத்தை'யையும் மேல்நிலைகளையும் அடைய உதவுகிறது என்பதில் தெளிவு இருக்கவேண்டும்.

இந்தத் தவ நுகர்வு உச்சிக்குமேல், உயிரும் சிவமங்கையும் உலவும் மிகு நுட்பமான அருள் மின்வெளித் திருநடனமாகும். சுத்த மாயையில் உரிமையோடு திகழும் சோதியின்பமாகும்; "தொடக்கெலாம் அறுத்த நற் சோதி யின்பமே" என்னும் திருவாசக மெய் யுணர்வு நிலை இங்கே உணர்தற்குரியது!

பொதுவாக, மக்கள் பாராயணம் பண்ண வேண்டும் என்பது, இங்ஙனம் 'சுத்தத்'தோடு பழகுவதற்கே ஆகும். உச்சிக்கு மேற்பட்ட இத் தேனிப்புப் பழக்கத்தால், தூய ஞானமும் (சுத்த வித்தை), தூய தலைமையும் (ஈசுரம்), வெளி ஒளி, ஒலி உடம்புகளும் (சாதாக்கியம்), அவற்றிற்குக் காரணமான தூய மின்னலும் (விந்து), தூய அமிழ்தமும் (நாதம்) மக்கள் அடைவர்.

சாதாக்கியத் தத்துவம் 'மணி' எனப்படும்; விந்து தத்துவம் 'மந்திரம்' எனப்படும்; நாத தத்துவம் 'அமிழ்தம்' எனப்படும். மணி மந்திர ஒளடதங்களாகிய சுத்தாவத்தைகளை, உயர்வகைத் தேனிப்பால் பெற்று, உடல் நலம், உள்ள நலம், உணர்வு நலம், முதலியன எய்துதல் எவ்வளவு சிறப்பான 'சீர்திருத்தம்' என்பதைச் சற்று

எண்ணிப்பார்மின்! எண்ணிய எண்ணியாங் கெய்துப, எண்ணியார் திண்ணிய (நிட்டாதிப)ராகப் பெறின்!

இத் திருத்தங்களெல்லாம் 'சிவஞானபோத ஆராய்ச்சி' 'சைவசித்தாந்த ஞானபோதம்' 'நூறாண்டுயிர்வாழ்க்கை' முதலி யவற்றில் அடிகளார் விளக்கிய பற்பல உண்மைகள் கொண்டு இனிது தெளியலாம். எடுத்துக் காட்டுகளுடன் விளக்குவதானால் இச் சிற்றுரை மிக விரியும்; ஆயினும் சில :

"தூய விஞ்ஞானகலரும் தங்நிலைக்கேற்பச் சுத்தமாயையின் கண் இறைவனருளால் ஆண்டுளவாய தூய ஒளியுடம்புங் கருவி களும் நிலனும் நுகர்பொருள்களும் பெறலாயினர்."

(சிவஞானபோத ஆராய்ச்சி, பக். 212)

"தேவார திருவாசகச் செந்தமிழ் மாமறைத் திருப்பதிகங்களை அன்பினால் எடுத்தோதி அகங்கரை தலே கழிபெருஞ் சிறப்புடைத் தாம்."

'புருவ நடு' என்றும் 'நெற்றிக் கண்' என்றும் இறைவனும் உயிரும் ஒன்றனேடொன்று பிரிவற விராய் ஒளிரும் 'நடுநிலை'யாம் என்றும் உணர்ந்து கொள்க. இதனை ஆசிரியர் திருமூலர்,

> "நெற்றிக்கு நேரே புருவத் திடைவெளி
> உற்றுற்றுப் பார்க்க ஒளிவிடும் மந்திரம்
> பற்றுக்குப் பற்றாய்ப் பரமன் இருந்திடம்
> சிற்றம் பலம்என்று தேர்ந்துகொண் டேனே"

என்றும் நன்கு தெருட்டியருளினமை காண்க.

(சைவசித்தாந்த ஞானபோதம் பக். 212-3)

"மன நிலையை எவ்வளவுக்கு நலமுடையதாக வைத்து ஒழுகு கின்றார்களோ அவ்வளவுக்கு அவர்கள் நீண்டகாலம் மூவாயாக்கை யினராய் நன்கு உயிர் வாழ்வர்"

(மக்கள் நூறாண்டு உயிர்வாழ்க்கை, 333)

இறைவனொளியுடன் உயிரினுணர்வு ஒருங்கு தோய்ந்து...... அருளொளியைத் தலையின் உச்சிக்கு மேலும் சுடர்த்தெரியச் செய்யும்......தவவுடம்பைச் சூழக் கண்ணையுங் கருத்தையுங் கவரும் 'கதிரொளி வட்டம்' (Aura எந்நேரமும் துலங்கிக்கொண்டே

விருத்தல்......எல்லார் கண்களுக்கும் புலனுகா விடினும், தெளிவுக் காட்சி (Clairvoyant Vision) யுடைய சிலர் தங் கண்களுக்கு நன்கு புலனாய்த் தோன்றுகின்றது.

(தமிழர் மதம், பக். 256)

அருள் ஓம்பல் :

அகமுகமான இத் திருத்தங்களில் அன்றாடம் பழகி வருவோர்க்கு, 'அருள் நலம்' என்னும் திருத்தத்தை அடிகளார் விளைத்திருக்கின்றனர். உயிரின் அன்பை இறைவன் அருள், முழுமுதற் சிவத்துடன் (செம்மை நலத்துடன்) ஒன்று சேர்த்து ஒன்றுவித்து வேறின்றி யுணரும் மிகுதூய 'அத்துவிதப்' பேரின்ப வீடுபேற்றை விளக்கும் பெருநலம் இது! அந் நிலையில் உதவும் அருந்துணையாகிய சிவசத்தி அமிழ்தத்தை என்னென்பது!

'வான் புலன்கள் அகத்தடக்கி மடவாரோடும் பொருந்தணை மேல் வரும்பயனைப் போக மாற்றிப் (பத முத்திகளைக் கடந்து) பொது நீக்கித் தனையுணர வல்லார்க்கு என்றும் பெருந்துணையைப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே' என்பது இன்னுஞ் சிறிது அடிகளுக்கு மேம்பட்டிருந்தால், அவர்களை இங்கே இவ்வளவு அருகிற் காணும் பேறு நம்மனோர்க்குக் கிட்டுவது மிக அருமையாயிருந்திருக்கும்!

இவ்வளவு திருத்தங்களில் அடிகளாரது வாழ்க்கை யாற்றல் மின்னிக்கொண்டு இருந்ததனல், பெரும்பாலும் அவர்கள் தனிமையும், வாய் வாளாமையும், நோன்பும், உருக்கமும் உண்மையும் மேற்கொண்டவர்களாய் இருந்தார்கள்! இவ் வருமைகளையெல்லாம் அறியாதவர்களுக்கு, அடிகளாரின் உள்ளுணர்வு நிலைகள் சற்றும் விளங்குவதில்லை. உயர்ந்த தமிழும், உயர்ந்த கொள்கைகளும் உயர்ந்த திருத்தங்களும் இவற்றின் விளைவுகள்! ஆதலால் இப் பெருநிலையை எய்தாதவர்கள் எங்ஙனம் தமிழ்ச் சுவையும் ஞானச் சுவையும் பெற மாட்டுவர்? தமிழின் இலக்கண நுட்பங்களும் இலக்கிய ஒட்பங்களும் எங்ஙனம் அடைவர்? உயர்ந்த சுவைநடை அவர்களுக்கு எவ்வாறு கைவரும்?

ஒருகால், திரு. வி. க. அவர்களுடன் எளியேம் அளவளாவியிருக்க நேர்ந்தது; அப்போது அவர்கள், 'காணவேண்டும்'

'செய்ய வேண்டும்' என்பன போன்ற மிக எளிய தமிழ்த் தொடர்கள் சிலவற்றை எடுத்து மொழிந்து, 'இவற்றின் இலக்கணம் என்ன' என்று கேட்டார்கள். 'காணல் வேண்டும்' 'செய்யல் வேண்டும்' என்று அடிகளார் எழுதிவரும் தொடரமைப்புகளின், தூய்மை, ஒட்பம், அழகு, சுவை முதலியனவெல்லாம் அப்போது விளக்க முற்றன. அதனையெடுத்து அவர்களிடம் சொல்லும்போது, அடிகளார் அவ்வாறு சுவையுணர்ந்து அச் சுவையை இழவாமல் எழுதுவதற்கு, அவர்கள் உள்ளுணர்வுத் தேனிப்பே காரணம் என்பதை மிக ஆர்வமாய் விளக்கினூர்கள்; பிறர்க்கு அச் சுவை தெரியவில்லையென்றூல், அவர்கள் புலமை அருட் புலமையாய் விஞ்சிச் செல்லாமையே அதற்குக் காரணம் என்பதையும் உடன் தெளிவித்தார்கள்! அன்பர்களை மேன்மேல் அன்பராக்குதற்கு ஈது எவ்வளவு உதவியாயிருக்கும் நோக்குமின்! 'மெய்யடிமை' 'மெய்த் தொண்டு' என்பது ஈதன்றே!

சேவையோம்பல் :

வாழ்க்கை அகம், புறம் எனப்படும். ஒவ்வோர் இயற்கைப் பொருளுக்கும் உட்புறம், வெளிப்புறம் என்று இரு பக்கமும் உண்டு. பழத்துக்கு உட்புறம் சாறும், சதையும், விதையும் இருக்கும். வெளிப்புறம் அவற்றின் வெளிப்பாட்டு நிறமும், பாது காப்புத் தோலும், ஊட்ட வழிகளும் இருக்கும். உட்புறத்துக்காக வெளிப்புறமே யன்றி வெளிபுறத்துக்காக உட்புறமன்று.

மேலும் உட்புறம் முக்கியக் கருவிகளும், இயக்கங்களும் இருக்கும். கடிகாரம் உட்கருவிகளில்லாமல் புறத்தே மணிமுள் இயங்காது.

இந்த உடம்பை எடுத்துக்கொண்டால் உட்கருவிகளும், வெளிப் புலன்களும், புறப் பொருள்களும் உள்ளன. புறப் பொருள்களாகிய உலகப் பொருள்களை வாங்கி உள்ளே அனுப்புவதற்காக உடம்பில் இடை நடுவாகப் பொறி புலன்கள் உள்ளன. மற்றப்படி, அகமும் புறமுமே வாழ்க்கை நிகழ்ச்சிகள்! அவற்றின் அகமே முக்கியம்.

புறப் பொருள்களில் மிக உயர்ந்தது மின்னாற்றல்; அகப் பொருள்களில் மிக நுட்பமானது உணர்வாற்றல்!

உணர்வின் வளர்ச்சிக்காகவே புறத்து மின் உள்ளது. புற நாகரிகம் எல்லாம் மின்னாற்றலை அடிப்படையாகக் கொண்டுள்ளன. அக நாகரிகமெல்லாம் உணர்வாற்றலை முதன்மையாகக் கொண்டுள்ளன.

விஞ்ஞானிகள் இதுவரையிற் கண்டுபிடித்த பொருள்களில் மின் ஆற்றலாகிய ஒலி, ஒளி, இயக்கங்களே உயர்ந்தவை. மெய்யுணர்வு நூலார் இதனை 'நாத' 'விந்து' எனவும், 'சிவம்' 'சத்தி' எனவும் கூறுவர்.

அக உணர்விலும் சிவம் சத்தியே மேம்பட்டிருக்க வேண்டும்' புறத்தில் நாதவிந்து நுண் இயக்கமாகவும் அகத்தில் சிவம் சத்தியாகவும் உயிர்களின் நலத்துக்காகச் சுத்தமாயையும் இறை திருவருளும், இயங்கி வருகின்றன.

சீர்திருத்தம் என்பவை இந்த அடிப்படையில் நடைபெறு விட்டால், அஃது இயற்கையாகாது.

திருத்தங்கள், அகத்தும் புறத்தும் நிழலாடும் திருவருள் ஒளியாகிய மின் இயக்கத்தின் அடிப்படையில் நிகழ வேண்டும். அந்த மின் இயக்கமே 'எழுத்து' என்னும் கல்வி கலை மின் திருத்தங்கள்!

'நாதம்' என்பது, எழுத்தின் நாதங்கள்; 'விந்து' என்பது எழுத்தின் வடிவுகள். இவை ஒலி, ஒளி எனப்படும். 'சாதாக்கியம்' என்பது. இவற்றின் இயக்கம்; 'ஈசுரம்' என்பது, இதனால் உண்டாகும் தலைமை நிலை; 'சுத்த வித்தை' என்பது, இத் தலைமையால் விளக்கப்படும் குருஞான நிலை.

இங்ஙனம் மாமாயை எனும் தூமாயை (சுத்த மாயை) அகத்தும் புறத்தும் மின் இயக்கமாய், ஒலி ஒளி எழுத்துக்களாய்ப் பயன்படுகின்றன.

இந்த அடிப்படையில், கல்வித் திருத்தம் அமைந்துள்ளது. நாட்டின் நாகரிகமாய், முதல் சீர்திருத்தமாய் அமைகின்றது.

இதனை நன்குணர்ந்தவர் அடிகளார். அதனால் அவர்கள் கல்வித் திருத்தத்தை நாகரிக அடிப்படைத் திருத்தமாகவும் சேவையின் முதல் திருத்தமாகவும் அறிவுறுத்தினர்.

புரட்சித் தலைவராகிய 'மாஸ்கோ லெனினி'ன் அடிப்படைத் திருத்தமும் இதுவே! கடவுள் தலைமையையும், ஞானத்தையும் விளக்க வந்த தமிழ் மறைக்குரவர், முதலிரண்டு திருக்குறளிலேயே அவற்றைப் புலப்படுத்திக் "கற்றதனால் ஆய பயனென்கொல்?" என்று அருளிச் செய்து, அகவுணர்வின் ஈடுபாட்டில் அனைவரையும் தெளிவித்தார். கல்வியும் கலையும் மெய்யுணர்வுமாய் இங்ஙனம் புறத்து மின்னலும், அகத்து மின்னலும் முதல் திருத்தமாய்ப் பயன்படுகின்றன. சங்க நூல்கள் சமய நூல்கள் முதலிய பலவும் இக் கல்விச் சிறப்பையே அடிப்படையாகக் கொண்டுள்ளன;

> **"அன்ன யாவினும் புண்ணியங் கோடி**
> **ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறி வித்தல்"**

என்பது எவ்வளவு உண்மை சிறந்திருக்கிறது!

இவ்வடிப்படைக்கு மேல், சாதி, குலம், தொழில், தீண்டாமை பற்றிய உலகத் திருத்தங்களும் இவற்றில் வேறுபாடில்லாமற் கொண்டும் கொடுத்தும், திருமணம் அமைந்து குடி குடி ஈசர்க்கு ஆட் செய்தல் முதலிய அனைத்துச் சீர்திருத்தங்களும் படிப்படியே எழுந்து ஒரு பொது நிலையை (அருள் நிலையை) விளைத்தன. அவற்றையும் அடிகளார் எடுத்துக் காட்டுவதுண்டு.

1. "தமிழர்கள் தமது பழம் பெருமையை யுணர்ந்து அதற்கேற்ப நடத்தல் வேண்டும்.

2. "தமிழ்மொழியைத் தூய்தாய் வனனுற வளர்த்து வருதல் வேண்டும்.

3. "தமிழ கற்பார் சிலரும்...அடிமை வாழ்க்கையையே தமக்கொரு பெருமை வாழ்க்கையாகவும் பிழைபட நினைந்து...ஒழுகுகின்றனர்.

4. "பண்டுபோல் தமக்கும், தம் இல்லங்களுக்கும், தம் ஊர்களுக்கும், பிறவற்றிற்குமெல்லாம் தூய தமிழ்ப் பெயர்களையே அமைத்தல் வேண்டும்.

5. "தமிழரெல்லாரும் தம்மைத் தமிழரென்றே வழங்கக் கடமைப்பட்டிருக்கின்றனர்... தம்மை எவரும் 'சூத்திரர்' என்னும் இழிசொல்லால் அழைக்க... இடந்தரலாகாது.........தாழ்ந்த வகுப்பினராய் இருப்பவரை இழித்துப் பேசுதலும் அழைத்தலும் ஒரு சிறிதுங் கூடாது.

6. "தொழில் வேற்றுமையால் உண்டான குலவேற்றுமையையே பெரிது பாராட்டித் தமிழ்மக்கள் தம்முள் உண்ணல் கலத்தல்களைச் செய்யாமல், தனித்தனி வெவ்வேறினங்களாய்ப் பிரிந்து வலிவிழந்து துன்ப வாழ்க்கையிற் கிடந்துழல்வது நிரம்ப வருந்தத்தக்கதாயிருக்கின்றது.

7. "ஊனுண்ணாச் சைவ ஒழுக்கத்தினின்றும் தாம் சிறிதும் வழுவுதலாகாது.

8. "காதலன்பைக் கருதாமற் செய்யும் போலி மணத்தை அறவே ஒழித்துவிடல் வேண்டும்.

9. "(மக்களுக்குச்) செல்வப் பொருளைத் தேடித் தொகுத்து வைக்கும் பெற்றோர், அவர்க்குத் தீமையே செய்பவராவர்.

10. "செலவுக்கு மேற்பட்ட பொருளைத்......தனித் தமிழ்க் கல்லூரி வைத்து......கற்பித்தற்கு......கொடுத்தல் வேண்டும்.

11. "வரைதுறையின்றி உணவளிக்கும் அறம் பயன்தரா.

12. உறுப்பறைகட்கும், பிணிப்பட்ட ஏழைகட்கும், கல்வி பயிலும் எளிய மாணவர்க்கும், நூல் ஓதுவிக்கும் வறிய ஆசிரியர்க்கும், புதியன பழையன ஆராய்ந்து பல துறைகளிற் பயன்படும் நூல்கள் இயற்றும் நூலாசிரியர்கட்கும், சொற்பொழிவு நிகழ்த்தும் நாவலர்க்கும், தவவொழுக்கத்தில் நிற்கும் துறவிகட்கும் உணவும் பொருளும் வேண்டுமட்டும் உவந்து நல்குதலே உண்மையான அறமாகும்.

13. முழுமுதற் கடவுள் ஒன்றேயன்றிப் பல இல்லை என்னும் உறுதியில் ஒரு சிறிதும் நெகிழலாகாது.

14. பிறப்பு இறப்புகளிற் கிடந்துழன்ற சிறு தெய்வங்களையும் கண்ணன் இராமன் முதலான அரசர்களையும் கடவுள் நிலையில் வைத்து வழிபடுதல் மன்னிக்கப்படாத பெருங்குற்றமாய் முடியும்.

15. திருக்கோயில்களைவிட மக்களுக்கு உறுதி பயக்கக் கூடியது வேறெதும் இல்லை.

16. வழிபடும் முறைகளும் வடநாட்டைவிடத் தென்னாட்டின் கண்ணேதான் சிறந்தனவாய் நடைபெறுகின்றன.

17. வடநாட்டுக் கோயில்களில்......மக்கள் தாமே......நீரும் பூவும் இட்டு வணங்குகிறார்கள்; தென்னாட்டு முறை,......எவ்வளவோ நலந் தருவதாய்க் காணப்படுகின்றது......சிறிதும் மாற்றாமல்......நடபபித்தலே வேண்டற்பாலது.

18. கோயிலுக்கு வழங்குவது உண்மையில் வீணாகுமா?

19. இல்லறத்தார் வேறு துறவறத்தார் வேறு என்னுந் தவறான கருத்தை நந்தமிழ்மக்கள் அறவே ஒழித்துவிடல் வேண்டும்."

(தமிழர் மதம், பக். 260-76)

20. "தீண்டாதவர்கள்பால் எல்லா உதவியும் பெற்றுக் கொண்டு......தமக்கு அவ்வுதவிகளைச் செய்யும் அவ்வேழையெளியவர்களுக்கு ஒருவேளை நல்லுணவுகூடக் கொடாமல்......துன்புறச் செய்வதுடன், அவர்கள் கடவுளை வணங்குதற்குக் கோயில்களினுள்ளே வருதலும் ஆகாதென்று கொடுமை செய்தலும் தெய்வத்துக்கு அடுக்குமா?"

(மறைமலையடிகள் கருத்தோவியம், பக். 62)

பெரிய புராணத்தின திருத்தொண்டர்கள் இத்தகைய பொதுமைத் திருத்தமும் உடையவர்கள்! எல்லாம் மின் சிதறல்களே! ஆதலின், அவர்களெல்லாம் பொதுமக்களினும் மேம்பட்ட சிறப்புமிக்க சோதி அடியார்கள் ஆனார்கள். ஈசனுக்கு அன்பும், எவ்வுயிர்க்கும் அன்பும ஆகிய உணர்வுமின்னல் அவர்களிடம் சிறந்திருந்தது. எளிய வேறுபாடுகளெல்லாம், அவர்களிடத்தில், அவர்கள் பெரிய நோக்கத்தில், முற்றிலும் நீங்கிப் பொதுமைகளாய் விளங்கின.

'சோதி' என்பது அக்கினியன்று; மின்னொளியே அவ்வாறு கூறப்பட்டது; அக்கினி வேறு, மின் வேறு;

"மின்னொளியானது நிலன் நீர் தீ வளி வான் என்னும் ஐம்பூதங்களுள் ஒன்று அன்று;...இஞ்ஞான்றை இயற்கைப்

பொருணூலார்க்கெல்லாம் ஒப்பமுடிந்தது......மின்னொளி.... தீயொளியின் வேறுதல் நன்கு துணியப்படும்."

(சிவஞானபோத ஆராய்ச்சி, பக். 129)

மின்னின் ஒரு பகுதியே காந்த ஆற்றல் மிக்க பகலவனாகவும், அமிழ்த ஆற்றல் மிக்க நிலவோனாகவும், வெப்ப ஆற்றல் மிக்க தீவண்ணனாகவும் உலகத்தில் விளங்குகின்றது. இம் மூன்று வகைகளையும் 'முத் தீ' எனக்கொண்டு, நம் நாட்டு மக்கள் 'முத் தீ மின்வேள்வி' வேட்டு வந்தனர்; இங்ஙனமெல்லாம், கடந்த பேராற்றல் வாய்ந்ததே 'மின்' என்க.

இனி, இப் பொதுமையாகிய அருள் மின்னிலிருந்து அதன் தனிமையாகிய 'சிவம்' என்னும் செம்மையை அடைதற்கும் உரியவர், அடியார் பெருமக்கள்! நால்வர் சமயகுரவர் இப் பொதுமையிலும் தனிமையிலும் நன்கு ஊறியவர்கள்!

கருத்தற்ற வேறுபாடுகளைத் தவிர்க்கும் சீர்திருத்தங்களால் மின் பொதுமையடைந்து, பின் அதிலிருந்து சிவத்தின் தனிமையில் ஊறி நிற்க வழிகாட்டியவரே நால்வர் குரவர்! அந்த அருமைப்பாட்டை அறிவதன்றோ, சீர்திருத்தம் என்பது! எளிதான உலகியல் சீர்திருத்தங்களையே வானளாவ உலகம் கரைந்து கொண்டிருக்கிறதே!

"பொதுநீக்கித் தனைஉணர வல்லார்க்கு என்றும் பெருந்துணையை" என்பது அப்பர் தேவாரம்.

கஉ. வரலாற்றுத் தலைவர்

மறைத்திரு மறைமலை அடிகளார் 15—7—1876 இல் நாகபட்டினத்தில் தோன்றினார். 15—9—1950 இல் தமது 75 ஆம் அகவையில் பல்லாவரத்தில் தமது மாளிகையில் மறைந்தார்.

புதுமையும் பொலிவும் புரட்சியும் வீறும் சீர்திருத்தமும் தனி இயக்கமும் உடையோர், வரலாற்றுத் தலைவராய் உலகில் ஓங்குகின்றனர்; அடிகள் இத் தன்மையர்; அடிகள் இயக்கம், தனித் தமிழ் இயக்கம்;

1876—1896 நாகை வாழ்க்கை: (20-ஆண்டுகள்) இளம் பருவ வாழ்க்கை:

இவர் தந்தையார் சொக்கநாத பிள்ளை என்பவர், பெரிய நிலக்கிழார்; செல்வத்துக்கும் செல்வாக்குக்கும் ஏற்ற உடற் சிறப்பும், அழகும், குணமும் வாய்ந்தவர். இவர் மனைவியார் சின்னம்மாளிடத்தில் அடிகளார் தோன்றினார்.

பிறந்த குடும்பத்துக்கு ஏற்றபடி அடிகளார்க்கு உடல்மேன்மையும், அழகும், இனிய குரலும், இசைத் திறனும், பெருங் குணமும், இரக்கமும், தலைமைப்பாடும் இனிது பொருந்தியிருந்தன.

8 ஆம் அகவை நடக்கும் போதே இவர் தந்தையார் காலமாகி விட்டார். வளர்க்கும் பொறுப்பும், கல்வி கற்பிக்கும் பொறுப்பும், நல்லவர் சேர்க்கைப் பொறுப்பும், தாயாருடையன ஆயின.

அக்காலத்தில் மதுரைநாயகம் பிள்ளை என்பவர் சிவநேயமிக்கவராய், நாகை வெளிப்பாளையம், ‘சைவ சித்தாந்த சபை’யை நிறுவி நடத்தி வந்தார். அடிகளார் அப்போதே நல்வினை வயத்தால் திருநீறு சிவமணி அணிந்துகொண்டு, தேவார திருவாசகம் முதலிய திருமுறைகளை ஓதுவதுண்டு. 5 ஆம் அகவையிலேயே இவர், தம் தகப்பனார் கையைப் பிடித்துக் கொண்டு வெளியில் உலாவி வந்த காலங்களில், இவரைக் கண்டவரெல்லாரும், இவர் அழகிலும்

சைவத் தோற்றத்திலும் மிகவும் ஈர்ப்புண்டனர். மதுரைநாயகம் பிள்ளையும் இதற்கு விலக்கல்லர். அடிகளார், அவர் தந்தையார், சைவக் கோலங்கள், இவர்க்குக் கவர்ச்சி யளித்தன. சிவநேய மிக்கவராதலால் இவர்களோடு தொடர்பு கொண்டார்.

தந்தையார் இறந்தபின், மறைமலை அடிகளாரின் குழந்தைப் பருவத்துக்கு மதுரைநாயகம் பிள்ளை, உற்ற தந்தையாரைப்போ விருந்து பல நாள் வரையில் நல்லிணக்கத்துக்கும் நல்வழிக்கும் துணை புரிந்து வந்தார். 5 ஆம் அகவை முதலே இந்த நற்றுணை இவர்க்குக் கிடைத்து வந்தது. தாயார்க்கும் ஒரு வகையிற் சுமை குறைந்தது.

மதுரைநாயகம் பிள்ளை பிரிவில் (1920), அடிகள் பாடியருளிய இரங்கற் பாக்களில்,

> "சின்னஞ் சிறிய காலத்தே சிறந்த தந்தை இழந்தேற்குக்
> கன்னல் மொழிசேர் தமிழ்க்குரவர் இருவ ரோடுங் காதல்மிகும்
> அன்னை யனைய நின்றனையும் அரிய துணையாய் அடைந்திருந்தேன்
> பின்னை யிருவர் பிரிந்தேகப் பெரிய துணையாய்ப் பிறங்கினையே"

என்று நன்றி கருதி உருகிய பிரிவாற்றுமைச் செய்யுளால் இவ் வுண்மை இனிது புலப்படும். ('தமிழ்க் குரவர் இருவர்' என்றது, வெ. நாராயணசாமி பிள்ளையும், சோமசுந்தர நாயகருமாவர்.)

முறைப்படி 5 ஆம் ஆண்டில் நாகபட்டினத்தில் ஆங்கிலக் கல்லூரியில் அடிகளார் கல்வி பயிலத் தொடங்கினர். அவர் முன்னை நல்வினை, தமிழ்க் கல்விக்கு ஈர்த்தது. மதுரைநாயகம் பிள்ளை பாடம் கேட்டுக் கொண்டு இணக்கமும் கொண்டிருந்த நாராயணசாமி குரவரிடத்திலேயே, இவரும் 10 ஆவது அகவையி விருந்து போக வர இருந்தார்; தமிழ் பயிலவுந் தொடங்கினர். நன்னூல், திருத்தணிகைப் புராணம், திருவிளையாடல், பெரிய புராணம் முதலிய இலக்கண இலக்கியங்களை வரலாற்று முறை யாகப் பாடம் கேட்டார். பத்துப்பாட்டு, எட்டுத்தொகை முதலான சங்க இலக்கியங்களில் முன்னைப் புண்ணியத் தொடர்பாகக் கல்வி வளர்ந்தது; இயற்கையாகவே இவர்க்கு எளிதில் தமிழ்ப் பயிற்சிகள் சிறந்து வந்தன. 15 ஆம் அகவைக்குள் உயர்ந்த நூல்கள் சில மனப்பாடமாயின; ஊன்றிய தமிழ்ப் பயிற்சிகள் பதினாறும் அகவை

யிலிருந்து தொடங்கின. இளமையிலேயே இவர்க்குச் சங்க நூல் களில் உள்ளம் ஈர்ப்புண்டமை எல்லார்க்கும் வியக்கத் தக்கதா யிருந்தது.

சிறு போதிலேயே 'சங்கப் புலவர்' என்று இவர் பெயர் எடுத் தார். 'சைவப் பேரறிஞர்' எனவும் புகழ் ஓங்கினர். இவர் ஆசிரியர் நாராயணசாமி குரவரே ஒருகால் இவரைச் 'சங்கப் புலவர்' என்று அழைத்து மகிழ்ந்தார். இவர் வருகிற போதும் போகிறபோதும், 'சங்கப் புலவர் வருகிறார், சங்கப் புலவர் போகிறார்' என்று பலர் வழங்குவதும் வழக்கமாயிற்று.

அக்காலத்தில் அடிகளார், நூல்களை முற்றும் மனப்பாடம் செய்து கொள்வது வழக்கம்; திருக்குறள், தொல்காப்பியம், பத்துப் பாட்டு, எட்டுத்தொகை பதினெண் கீழ்க் கணக்குகள், பிற்கால ஐந்து இலக்கணங்கள், ஐந்து காப்பியங்கள், பெரிய புராணம், திருவிளையாடல், கந்த புராணம், சிவஞானபோதம், சித்தியார் முதலியனவெல்லாம் அடிகளுக்குப் பெரும்பகுதி மனப்பாடம் என்புழி; நினைவாற்றலோடு, இங்ஙனம் இவர்கள் கல்வி மணம் வீசும் நறு மலராய், நாளும் திகழ்ந்து வந்தனர்.

இத்தகைய நல்லோரை நல்லினத்திற் சேர்த்து மேன் மேலும் விளங்க வைக்க வேண்டும் என்று மதுரைநாயகம் பிள்ளை விரும் பினர்.

அக்காலத்தில் நாகையில் முத்தி மண்டபத்தில் தேவாரத் திருக்கூட்டத்தை ஏற்படுத்தி, வீரப்ப செட்டியார் என்னும் பெரியவர், சைவம் வளர்த்து வந்தார். யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர், திருச்சி மீனாட்சி சுந்தரம் பிள்ளை, முதலியவர்க்கு நண்பர். வேதாந்த சித்தாந்த நுட்பங்களின் தெளிவும், 'திருநீறு' 'சிவமணி' 'திருவைந்தெழுத்து' 'சிவபூசை' 'சிவாலய வழிபாடு' 'சிவ புராண படனம்' 'அடியார் நேயம்' முதலிய செய்கைகளும் உடையவர்; நாகை வெளிப்பாளையம் சைவ சித்தாந்த சபையின் தலைவர். நாகை யிற் பெருமகனார்; இவர்களிடத்தில் அடிகளார்க்குத் தொடர்பு உண்டானால் நல்லதென்று கருதித் தம் ஆசிரியரையுங் கலந்து, மதுரைநாயகம், அடிகளை அப் பெரியவர்க்கு அறிமுகப்படுத்தினர்.

நூல்களில் சிலகேள்விகளை அவர் கேட்க அடிகளார் நுணுக்கமாகவும் ஆழமாகவும் இனிமையாகவும் விடை கூறி வந்தார். அடிகளாரின் இளமையையும் பொலிவையும் ஆராய்ச்சியையுங் கண்டு, 'மேலும் மேலும் நுண் பொருள்களை இவர் அறிந்துகொண்டால் உலகுக்கு நலமாய் இருக்கும்' என்று கருதித், தாமும் தம்மிடம் வரும் அன்பர்களுமாக இவரோடு பழகி இணங்கிப் பலப்பல நற் கருத்துக்களை அறிவுறுத்து வந்தனர். அடிகளார்க்கு இத் துறையில் எல்லாம் எளிதிற் பொள்ளென விளங்கின; மேற்சென்றும் பல நுட்பங்களைக் கூறி வந்தார். அதனால் அவர்கள் எல்லாரும் மிக்க மகிழ்ச்சி யடைந்து இஃது ஏதோ திருவருள் தோற்றமே என்று வியந்து மகிழ்ந்தார்கள்.

அடிகள் 20 ஆம் ஆண்டு நடப்பதற்குள்ளாகவே, காரைக்கால் 'திராவிட மந்திரி' 'நாகை நீலலோசனி' 'பாஸ்கர ஞானோதயம்' 'இந்து மதாபிமானி', 'சச்சன இதழ்' முதலியவற்றிற்குக் கட்டுரைகளும் எழுதி வருவது வழக்கம். மறை நூலாகிய திருக்குறளின் முதல் குறளுக்கு 'முதற் குறள் வாத நிராகரணம்' என்றொரு நூலும் அப்போதே எழுதப்பட்டது. அது 'நாகை வாதி' என்பவருக்கு மறுப்பு நூல்; அதனால் நாவும், கையும், வாயும், இவர்க்குச் சரியாய் இல்லையேயென்று அடிகளார் இரங்கினர்.

'துகளறு போதம்' என்னும் சித்தாந்த நூலுக்கு ஒரு நுட்ப உரையும் அவ் அகவையில் எழுதப்பட்டது; துகளறு போதம் சிவஞான முனிவர் போன்றோர்க்கு மேற்கோள் நூல்; அடிகளார் அதற்கெழுதிய உரையை அடிகளார்க்குச் சமய குரவராகிய சென்னை 'வைதிக சைவ சித்தாந்த சண்ட மாருதம்' சோமசுந்தர நாயகர் பார்த்து, வியப்பும் மகிழ்ச்சியும் எய்தி, பின்பு தமது பொருட் செலவில் தாமே அச்சிட்டு வெளிப்படுத்தினர்.

16ஆவது அகவை நடக்கும் போதே (1892) நாகையில் 'இந்து மதாபிமான சங்கம்' நிறுவி நடத்தி வந்தார். 18ஆவது அகவையில் கல்லூரில் பயிற்சியை விடுத்துத் தமிழ்ச்சுவையிலும் சித்தாந்தத் தெளிவிலுமே மூழ்கிவிட்டார்; 19ஆம் அகவைக்குள் ஆங்கிலத்திலும் தமிழிலும் செய்யுட்கள் இயற்றினர்; திருவனந்தையில் தமிழாசிரியராகவும் அலுவல் பார்த்தார்.

அடிகளாரின் சங்க நூற்பயிற்சியை அறிந்து அக்காலத்தில் வியந்தவர்களுள் திருவனந்தபுரத்து 'மனோன்மணீயம்' சுந்தரம் பிள்ளை என்பவரும் ஒருவர்; நாடகத் தமிழின் இலக்கணம் அறிந்து 'மனோன்மணீயம்' இயற்றிய பெரியார். அடிகளார் அவரைப் பார்க்கும் பொருட்டுத் தம் ஆசிரியருடன் திருவனந்த புரம் சென்றிருந்தார். சங்க நூல்களில் 'நாடகத் தமிழின் இலக்கணம்' எத்தகையது என்று காணும் வகையில் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை 'நாடகத் தமிழ்' எனத் தலைப்புக் கொடுத்து அடிகளாரை ஒரு விரிவுரை செய்ய ஏற்பாடு செய்தார். அடிகளாரின் விரிவுரை, அவரும் பிறரும் மதிக்கும்படி இருந்தது. அடிகளாரின் இளமையை நோக்கி மிகவும் வியந்த சுந்தரம் பிள்ளை, 'கல்லூரிகளில் ஆசிரியராய் இருப்பதற்கு இவர் ஏற்றவர்' என்று ஒரு தகுதிச் சீட்டும் வழங்கினார்.

தஞ்சையில், ஒரு நேரத்தில், பள்ளிகளின் கண்காணிப்பாளர் 'வில்லியம்ஸ்' என்பவரைப் பார்க்க நேர்ந்தது. யார் என்று கேட்க அடிகளார் 'வித்வான்' என்று விடை கூறினார்; அதனைக் கேட்ட அவர், "ஒரு சிறுவர் நம்மிடம் வந்து, 'வித்வான்' என்று துணிவாகச் சொல்லுகிறாரே" என்று வியந்து, 'உமக்கு என்னென்ன வரும்' என்று கேட்டார்; அடிகளார், 'இலக்கண இலக்கியம், சங்க நூல்கள் என்பவற்றோடு, சிவஞான போதமும், சிவஞான சித்தியாரும் பாடமும் உண்டு' என்று சொல்ல, அதைக் கேட்டு இறும்பூது எய்திச் சில இலக்கணக் குறிப்புக்களைக் கேட்டுப் பெருமகிழ்ச்சியுற்று, இவரைத் தஞ்சை மாவட்டத்தி லேயே ஒரு பள்ளியில் அலுவலில் அமர்த்திக் கொள்ள வேண்டும் என்று விரும்பினார் என்ப.

ஒருமுறை இவர் திருநெல்வேலி போக நேர்ந்தது; அங்கே புலவர் கூட்டத்தில் இவர் விரிவுரை நடந்தது. 'தமிழ் இயற்கை மொழி' என்று பேசினார். இளமையிலேயே அடிகளார் புரட்சிக் காரர். வழக்கமாக அங்கங்கும் சொல்லிவரும் கருத்துக்களை மறுத்து, உண்மை நிலைநாட்டுவார். எதற்கும் அஞ்சமாட்டார்.

இத்தகையவர் 'தமிழ் இயற்கை மொழி, 'அது இந்திய மொழி' என்று நெல்வேலியில் பேசியது வியப்பன்று; ஒருவர்

எழுந்து மறுக்கத் தொடங்கினர். 'இந்தியாவின் ஒரு கோடியில் தமிழ் வழங்குவதாய் இருக்க, இதை இயற்கைமொழி என்பதும் இந்தியா முழுவதும் வழங்கிய இந்திய மொழி என்பதும் பொருந்தாதே' என்று அவர் கூறினர். அடிகளார், அதன்பின் மேலும் ஊக்கங் கொண்டு, 'இந்தியா மட்டுமன்று, உலகமெங்கும் தமிழ்மொழியே முன்பு நிகழ்ந்தது' என்று சான்றுகளுடன் விளக்கினராம.

மற்றொரு நாள், 'சமக்கிருதம் தமிழைப் போல் தொன்மை யான மொழியன்று' என்றும், 'சமக்கிருதம் சில ஆயிர ஆண்டுக் காலமாகவே வழங்குகிறது; நம் நாட்டவரெல்லாரும் அம் மொழி கலவாமல் தமிழிற் பழக வேண்டும்' என்று சொல்ல; அதற்கும் மறுப்பு எழுந்தது; அப்போது சங்க நூலில் வரும் 'உலகம்' என்னும் சொல், தமிழ்ச் சொல்லே என்று சான்றுகள் பல காட்டித் தங் கோள் நிறுவினர் என்ப.

அடிகளார் சிறு பருவம் முதலே துறவு நிலைப் பெரியோ ரிடம் அன்புடையவர்; ஒருநாள், சூரியனார் கோவில் மடத்தில், சைவத்தின் மேல்நிலை பெறப், போகவேண்டுமென்று மதுரை நாயகம் பிள்ளையிடம் கூறினர்; 'தாயார்க்கு உதவியாய் இருப்பது முக்கியம்' என்று சொல்லி, அவர் நிறுத்தி விட்டாராம். ஒரு முறை எழுத்தர் அலுவல் ஒன்றுக்கு அவர் இடம் செய்யப், 'பள்ளியில் ஆசிரியராய் அலுவல் பார்க்கவே விருப்பம்' என்று அடிகளார் கூறிவிட்டார் என்றுந் தெரிகிறது.

இதற்குமேல் அடிகளின் இளம்பருவ நிகழ்ச்சிகள் பற்றிக் குறிப்பொன்றுந் தெரியவில்லை; சான்றுகள் கிடைக்கவில்லை; கூறிய இந் நிகழ்ச்சிகள் மட்டும், உடனிருந்த மதுரை நாயகனர், அடிகள் வரலாறுபற்றி எழுதிய குறிப்பு நோட்டு ஒன்றில் காணப் படுகின்றன.

இவ்வளவும் அடிகளாரின் 20ஆம் அகவைக்குள் நிகழ்ந்தவை. இளமைப் பருவம் இங்ஙனம் தமிழ்க் கல்வியிலும் சைவ சித்தாந் தத்திலும் பெருக ஊறி, அதனல், அடிகளார் செவ்விள ஞாயிறு போலவும், செழும் பெருஞ் செந்தாமரை போலவும், கலை வளரும் திங்கள் போலவும், பலர்க்கும் அச்சமும் அன்பும் பெருக விளங்கி

வந்தனர். அதுவரையில் அடிகளார் வாழ்க்கை நாகையில் நிகழ்ந்தது.

நாகபட்டினத்தில் அடிகளார் பயின்ற ஆங்கிலக் கல்லூரியின் பாதிரியாரே, அடிகளாரை வரவழைத்துத் தமக்குத் தமிழ் கற்பிக்க வேண்டுமென்று கேட்க, அவ்வாறே அடிகளார் அவ்விளமையில் கற்பித்து வந்தார்; கற்பிக்கும் முறைகளையும் திறமையையும் பாதிரியார் கண்டு, அடிகளார்க்குத் தம் கல்லூரியிலேயே அலுவல் கொடுப்பதாகவும் சொன்னார். வேறு கல்லூரியில் இருக்க விரும்பி, அடிகளார் அதற்கு இசையவில்லை.

சென்னைச் சோமசுந்தர நாயகரிடம் அடிகளாரை ஆட்படுத்தியதும் மதுரை நாயகம் பிள்ளையே. நாயகர் திருவாவடுதுறைக் குரவர்க்கும், நல்லசாமி பிள்ளைக்கும் அடிகளாரைப்பற்றித் தெரிவித்தார். திருவாவடுதுறைக் குரவராகிய அம்பலவாண தேசிகர், அடிகளைக் கண்டு அளாவியபோது, திரு. உ. வே. சாமிநாத ஐயரையும் அங்கே சந்திக்க நேர்ந்தது. ஐயர் அடிகளைக் கண்ட அளவிலேயே அகமும் முகமும் மலர்ந்து மிக மகிழ்ந்து, அடிகளாரின் இலக்கண இலக்கியச் சிறப்புப் பற்றியும் சங்க நூல் ஆராய்ச்சி பற்றியும், அடிகளார்க்கு இயற்கையாக அமைந்துள்ள நுண்ணிய அறிவு பற்றியும் தேசிகரிடம் தெரிவித்தார். தேசிகர் மகிழ்ந்து, அடிகளார்க்கு அந்தப் பயணத்தில் பொன்னாடை போர்த்து மகிழ்ந்தார்.

1897—1910 சென்னை வாழ்க்கை: (14ஆண்டுகள்) இது, அலுவல் வாழ்க்கை:

1897 : இவ்வாண்டில் அடிகளுக்கு 21ஆவது அகவை நடந்து வந்தது; ஜெ. எம். நல்லாசாமி பிள்ளை சிற்றூரில் மாவட்ட நடுவராய் விளங்கினவர். 'சிவஞான போதம்' என்னும் சைவசித்தாந்த முதல் நூலை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிட்டவர். அவர் நடத்திய 'சித்தாந்த தீபிகை' என்னும் தமிழ் இதழுக்கு ஆசிரியரடிகள் இவ்வாண்டில் இதழாசிரியராய் விளங்கினர். 'சிவஞான சித்தியா'ரின் அளவை யிலக்கணச் செட்டியுட்களுக்கு அவ் விதழில் அடிகளார் விளக்கம் தந்திருக்கிறார்; பத்துப்

பாட்டுள் ஒன்றான குறிஞ்சிப்பாட்டுக்கு உரையும், ஆங்கில மொழி பெயர்ப்புச் செய்யுட்கள் சிலவும் வெளிவந்தன.

1898 ஆம் ஆண்டில், சென்னைக் கிறித்துவக் கல்லூரியில் தமிழாசிரியராய் அமர்ந்தார்.

பேரும் தொண்டும் மிக்க நாவலர் டாக்டர் எஸ். சோமசுந்தர பாரதியார், ராவ்பகதூர், டாக்டர் வ. சு. செங்கல்வராய பிள்ளை, திருப்புகழ் மணி டி. எம். கிருஷ்ணசாமி ஐயர், டாக்டர் பி. சுப்ப ராயன், திவான்பகதூர், ஆர். வி. கிருஷ்ணய்யர், டி. கே. சிதம்பரநாத முதலியார், எஸ். வையாபுரி பிள்ளை, சி. என். முத்துரங்க முதலியார், எஸ். அனவரதவிநாயகம் பிள்ளை, சி. டி. நாயகம், கோவை இராமலிங்கம் செட்டியார் முதலியோரெல்லாம் அடிகள் மாணவர்கள்.

சென்னைத் திரு. சோமசுந்தர நாயகர், தம் நூலுக்கு அடிகளை முகவுரையும், கருத்து வேறுபடுவார்க்கு மறுப்புகளும் எழுது மாறும், தம் விரிவுரைகளின் இடையே விரிவுரை செய்யுமாறும் விரும்புவார். அவர் மனைவியார் சிவஞானத்தம்மையாரும் அடி களுக்கு ஏற்ற உணவுகள் சமைத்து வழங்குவார்.

1899 : அடிகள் திருவொற்றியூரில் இயற்கையழகில் ஈடுபட்டு அங்கே சென்று அமைதியாய்த் திருக்கோயில் வழிபாடு செய் வார்கள். இவ்வாண்டில் அங்கே உறையும் முருகப்பெருமான் மேல் சங்கப் புலமை மலிய 'மும்மணிக் கோவை' என ஒரு நூல் இயற்றத் தொடங்கினார்கள். *20* அகவைக்குள் இதழ்களிற் கட்டுரைகள் எழுதி வந்த காலத்திலேயே தம்மை 'முருகவேள்' என்று குறிப்பது வழக்கம். *40*-ஆண்டுகளுக்குப் பின், திருவருட் செயலால், அந் நூல் எளியதோர் உரையுடன் அடிகளாலேயே திருத்தப்பட்டு வெளி வந்தது.

இந்த ஆண்டில் அடிகளார் சொற்பொழிவுகள் நாகையிற் பல நடந்தன; நீலலோசனியின் இதழாசிரியர் சதாசிவம் பிள்ளை, அ. மு. சுந்தரம் செட்டியார், வழக்குரைஞர் நடராச சாத்திரியார், கும்ப கோணம் கல்லூரி கோபால ராயர், நாகைத் தலைமையாசிரியர் கிருட்டின ஐயர் முதலியோர் பாராட்டினர். "கற்றார் பயில் கடல் நாகை" என்னும் திருநாவுக்கரசர் திருவாக்கு மெய்யாயிற்று என்று பலரும் வியந்தனர்.

1900: 'முனிமொழிப் பிரகாசிகை' என்னும் மறுப்புநூல் இவ்வாண்டில் வெளிவரலாயிற்று.

விருதைச் சிவஞான யோகிகள், நடுவர் நல்லசாமிப் பிள்ளை பேச்சுக்கள் நிகழ அடிகள் தலைமை தாங்கினார்.

1901: வள்ளலார் அன்பரிற் சிலர், "சைவ சமயத்துக்கு மேற்பட்டது 'சன்மார்க்கம்' என்பது; வள்ளலார் சமயங்கள் பொய் என்று சொன்னவர்; ஆதலால், அவர் பாடல்கள் திருமுறைகளை விட மேலானவை" என்று கருதினார்கள்; யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர்க்கு இது பிடிக்கவில்லை; அவர் மாணாக்கரின் மாணாக்கராகிய கதிரைவேலர், 'வள்ளலார் பாடல்கள் அருட்பா அல்ல, மருட்பா' என்று கூறிவந்தார்;

இரண்டையும் மறுத்து, 'சைவ சமயத்தின் உச்சப் பகுதி சன்மார்க்கம்'; அதைச் சைவ சமயத்துக்கு மேற்பட்டதாக வள்ளலார் சொல்லவில்லை; அதற்காக அவர் அருட்பாவை மருட்பா என்பது பொருந்தாது என்று சென்னை காஞ்சி திருச்சி முதலிய இடங்களிற் பல விரிவுரைகள் செய்து அடிகள் அக் கிளர்ச்சியை ஒடுக்கினார்.

1902: 'ஞானசாகர' இதழ் இவ்வாண்டில் தொடங்கப்பட்டு அடிகளின் இறுதிக் காலம் வரையில் நடைபெற்று வந்தது; அடிகளார் மரபினர் அதைத் தொடர்ந்து நடத்துதல் நன்று.

1903: தனித் தமிழ் இயக்கத் தொடக்கத்துக்கு வித்தாய் இருந்த, தமிழறிவு மிக்க நீலாம்பிகை அம்மையார், அடிகளுக்குப் புதல்வியாகத் தோன்றினார். தமிழ்ச் சைவத் தொடர்பால், இவ் வம்மையிடம் அடிகளுக்கு மிக்க அன்பு.

கல்லூரியில் இவ்வாண்டில் முல்லைப் பாட்டுக்கு அடிகள் கூறிய உரை விளக்கத்திற்கு மாணவர்கள் மகிழ்ந்து, தாமே தம் பொருட் செலவில் 'முல்லைப் பாட்டு ஆராய்ச்சியுரை' என ஒரு நூல் வெளிவர உதவினர்.

1904: இராமநாதபுரத்தில் அரசர் மரபில் வந்த பாண்டித் துரைத் தேவர், மதுரையில் தமிழ்ச் சங்கம் நிறுவி, அடிகளார் சிறப்பறிந்து தமிழ்ச் சங்கப் புலவராக ஆக்கிக்கொண்டார். சங்கத்தின் ஆண்டு விழாக்களில் அடிகளாரை வருவித்துச் சிறப்பித்தார்;

இராமநாதபுரத்துக்கு வருவித்தும், தம் அரண்மனையில் இருத்தி நட்புக் கொண்டு விருந்தோமபி அடிகளின் புலமை நுட்பங்களை விளங்கவைத்தார். அடியேம் பிறந்தது 10—4—1904இல்.

1905: 'மக்கள் நூறாண்டு உயிர்வாழ்க்கை' என்னும் நூல் தொடக்கமாயிற்று; 'சிந்தனைக் கட்டுரைகள்' என்னும் மொழி பெயர்ப்பு நூல் வெளிவந்தது.

தூத்துக்குடி சைவ சித்தாந்த சபை, இவ்வாண்டு முதற் சில ஆண்டுகள் அடிகளைத் தலைவராகக் கொண்டு சிறப்புற்றது.

தஞ்சையில், மாயாவாதம் வல்ல குப்புசாமி இராசு என்பவர், அடிகளார் அங்கு விரிவுரை நிகழ்த்தியபோது வாதமிடத் தொடங்கி, 'வேதம்' மயக்கம் தருவதென்று அடிகள் கூறியதை மறுத்து, 'மயக்கம்' என்றால் என்ன 'ஐயம்' எனலாமே என்று சொன்னார். அதற்கு அடிகளார், "வேதம் கிடந்து தடுமாறும் வஞ்ச வெளி" என்றது, மயக்கத்தைச் சேர்ந்ததா, ஐயத்தைச் சேர்ந்ததா? என்று கேட்டு அவர்க்குத் தெளிவை உண்டாக்கினார்.

7—7—1905 இல் 'சைவ சித்தாந்த மகா சமாசத்தை' அடிகள் நிறுவினார். அதற்கு அப்போது துணைபுரிந்தவர்கள், திருப்பாதிரிப் புலியூர் ஞானியாரடிகள், தாசில்தார் பொன்னுசாமி பிள்ளை, ஓவர் சியர் சிங்காரவேல் முதலியார், தமிழாசிரியர் கந்தசாமி முதலியார் ஆவர். அடிகளே நான்கு ஆண்டுகள் அதன் செயலாளராயிருந்து விழாக்கள் நடத்தினார்; 'சமாசம்' நாடு முழுவதற்கும் உரிய பெரிய அமைப்பாயிற்று.

விழாக்களில், நன்கு கற்று வல்ல அறிஞர்களையே விரிவுரை செய்ய வருவிப்பார்; அவர்களுக்கு இரண்டாம் வகுப்பு வண்டிச் செலவு, பொருளுதவி மேடையில் தனியிருக்கை, தங்கத் தனி மாளிகை, தக்க உணவு முதலிய நலங்கள் பலவும் செய்விப்பார்; கல்வியோடு செல்வம் செல்வாக்கு முதலியன உடையவர்களே தலைவராக வருவார்கள். தொடர் வண்டியில் வரும்போது அங் கங்கும் வரவேற்புகளும் சிறப்புகளும் நிகழும். ஆங்கிலேயர் முதலிய அயல் நாட்டினரும் விழாவிற் கலந்து கொள்வர். விழாக்கள் ஓர் அரசர் நடத்துவதுபோல் இருக்கும்.

உண்மை எண்ணத்தினால் நிறுவப்பட்டமையால், இன்றளவும் 'சமாசம்' 70-ஆண்டுகளுக்கு மேலாகத் திருவருளுதவியால் நடந்து வருகிறது. பேரறிஞர் தொடர்பு கொண்டு வருகிறார்கள ; அறக் கட்டளைகளும் நிதிவைப்புகளும் திங்களிதழ்களும் வெளியீடுகளும் நடந்து வருகின்றன.

1906: சைவ சித்தாந்த ஞானபோதம், பட்டினப்பாலை; 'பண்டைத் தமிழரும் ஆரியரும்' என்னும் நூல்கள் வெளியிடப் பட்டன.

மணி திருநாவுக்கரசு முதலியார், நாகை கோபால கிருட்டினன் என்பவர்கள் அடிகட்கு மாணவராகி இராப்பகல் உற்ற துணைவ ராய் விளங்கினர்.

1907: சமக்கிருதத்திலிருந்து பண்டிதர்களும் வியக்கும்படி 'சாகுந்தல நாடகத்தை' அடிகளார், அழகாக மொழி பெயர்த்தார்.

1908: The Oriental Mystic Myna என்னும் ஆங்கில இதழ் தொடங்கப்பட்டது.

கொட்டையூர் இராசாநந்தரிடம் அருளுரை பெற்றார். அடி களுக்கு அப்போது அகவை முப்பத்திரண்டு.

1909: இவ்வாண்டில் நடைபெற்ற 'சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்'தின் ஆண்டு விழாவில் அடிகள் தலைமை தாங்கிச் சிறப்பித்தார்.

1910: திரு. வி. கலியாணசுந்தர முதலியார் தொடர்புற்றார். முதற் சந்திப்புச் சென்னை சிந்தாதிரிப் பேட்டையில் நடந்தது. இராயப்பேட்டைப் பாலசுப்பிரமணிய பத்த சன சபையில் அவ்வப் போதும் ஐயங்கள் கேட்டு மாணவரானார்.

சென்னை வாழ்க்கை அடிகளார்க்கு எத்தனையோ நிகழ்ச்சி களுடன் இங்ஙனமெல்லாம் நிகழ்ந்து வந்தது.

1911 – 1920: **முயற்சி வாழ்க்கை : (10 ஆண்டுகள்) மாளிகை, அச்சகம், நூல்நிலையம் முதலிய அமைப்புகளுக்கு முயற்சிகள் :**

கிறித்துவக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் அலுவலை *10—4—1911* இல் விடுத்து, *1—5—1911* இல் சென்னையையடுத்த

பல்லாவரத்தில் அடிகள் குடிபுகுந்தார்கள். 'பொதுநிலைக் கழகம்' அமைக்கப்பட்டது. அங்கே ஒரு தனி மனையில் கழகத்துக்கு மாளிகை அமைக்க அடிப்படை இடப்பட்டது. அது முதல் காவி யாடைக் கோலத்தில் அடிகள் விளங்கினார்கள்.

யோக நித்திரை, குமுத வல்லி, தொலைவிலுணர்தல் என்னும் நூல்கள் இவ்வாண்டில் தொடக்கமாயின.

சோழவந்தான் அரசஞ் சண்முகனாரை மதுரைத் தமிழ்ச் சங்கக் கூட்டத்திற் சந்திக்க நேர்ந்தது.

'சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம்', சைவ சித்தாந்த மகா சமாசத்தைவிடப் பழைமையானது ; அடிகள் இவ்வாண்டில் அதன் ஆதரவாளரானார்.

1912: திருநெல்வேலி, மணியாச்சி, திருத்தருப்பூண்டி, வடலூர் முதலிய இடங்களில் அடிகளார் திருப்பயணம் நிகழ்ந்தது.

7—4—12 இல் ஓர் அன்பர்க்கு 'வாழ்க்கைத் திருத்தம்' பற்றி ஒரு கடிதம் எழுதியிருக்கிறார் ; அதில், 'பிறர் செய்யுந் தீமைக்கு எதிர்த் தீமை செய்யலாகாது ; அறிக்கை வெளியிடுவதும் அவையிற் பேசுவதுங் கூடப் பிறர் துன்பப்படாதபடி எச்சரிக்கையாய்ச் சொல்ல வேண்டும்' என வருகின்றன.

1913: அடிகளார், வடநாட்டுக்கு இவ்வாண்டிற் பயணம் புறப்பட்டார். கல்கத்தா சமரச சன்மார்க்க சபையில் தலைமை ஏற்றார். விசயவாடா, தவளேச்சுரம், பூரி, புவனேச்சுரம், பலாசூர், கல்கத்தா, பேலூர், டார்சிலிங், காசி, பிரயாகை, அரத்துவாரம், டேராடூன், தில்லி, ஆக்ரா, நாசிக், பம்பாய், செகந்திராபாத், போலவரம், ஐதராபாத் முதலிய இடங்களைப் பார்த்துக்கொண்டும் அங்கங்கும் தமிழின் சைவ சித்தாந்த நெறிகளைப் பரவச் செய்து கொண்டும், கடவுளை வணங்கிக் கொண்டும் வந்தார். 'சிவநெறி' இந்தியா முழுதும் விளங்குகிறது; ஆனால், அறிவார்ந்த நிலையிலும் தூய்மை நிலையிலும் அது விளங்க வேண்டும் என்பது அடிகள் கருத்து.

விசயவாடாவில் உலகநாத முதலியார், கல்கத்தாவில் கோவிந்தராச முதலியார், பேலூரில் பி. கே. ஆசாரியர், அரீந்திர நாத் டட்டர், தார்ஜிலிங்கில் செல்வர் இருவர், காசியில் அன்னி

பெசன்ட் அம்மையார், பிரயாகையில் எஸ். வி. நாயுடு, டேராடூனில் பலதேவசிங், தில்லியில் பஞ்சாபி இராமசந்திர வர்மா, ஆக்கிராவில் பால்முகுந்தா, நாசிக்கில் நாகேசுர ராவ் பந்தலு, சிகந்தராபாத்தில் ஏகாம்பர முதலியார், அவர் துணைவியார் ஆண்டாளம்மையார், காதர் உசேன், போலவரத்தில் வேதாசல முதலியார், முதலியோர் துணையிலும் கூட்டுறவிலும் உதவியிலும் அடிகள் பயணம் இனிது நடந்தது.

1914: இவ் வாண்டிற் கொழும்பிலும், பாலக்காட்டிலும், நீலமலையிலும் அயலிடங்களிலும் அடிகளின் விரிவுரைகள் நடந்திருக்கின்றன. நாகப்பட்டினத்தில், அடிகள் தமது இளமையில் நிறுவிய 'இந்துமதாபிமான சங்கத்'தின் 28 ஆம் ஆண்டு விழாவிற்கும் தலைமை ஏற்றிருக்கிறார்கள்.

1915: மாளிகையின் ஒரு பகுதி இவ்வாண்டில் நிறைவேறியது

1916: *23—9—1916*இல் அடிகளார், காஞ்சி இசைப் புலவர் ஆ. விநாயக முதலியார்க்கு ஒரு விடைக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். அதில், 'பண்டைக் காலத்துத் தமிழிசையின் சிறப்புப் பற்றியும் அதிலிருந்து மற்ற இசைகள் நாட்டில் விளைந்தமை பற்றியும், திருமுறைகளை இசையுடன் ஓதிக் கேட்கின்றபோது உள்ளம் உருக்கங் கொள்வது பற்றியும் வேறு வகையான இசைகளோ மெட்டுக்களோ அவ்வாறு உருக்கம் உண்டாக்காமை பற்றியும் தெரிவித்திருக்கிறார்கள்.

பல்லாவரம் பொதுநிலைக் கழக மாளிகையில் இவ்வாண்டு புதிதாக அச்சகம் அமைக்கப்பட்டது.

தனித்தமிழ் இயக்கத் தோற்றம் இவ்வாண்டு முதல் பல்லாவரத்திலும் நாட்டிலும் கிளர்ந்தெழுந்தது.

1917: 'மரணத்தின்பின் மனிதர் நிலை' இவ்வாண்டில் வெளிவந்தது.

1918: திருவரங்கம் பிள்ளை முதல் முதலாக இவ் வாண்டில் பல்லாவரம் வந்தார்; அடிகளாராலும் குடும்பத்தாராலும் அவருக்குச் சிறந்த வரவேற்பு நிகழ்ந்தது.

1919: பல்லாவரத்தில் 'பொதுநிலைக் கழக' மாளிகையில் அடிகள் இவ் வாண்டிலிருந்து வாழத் தொடங்கினர்.

1920 இல் அடிகளாரின் 'திருவாசக விரிவுரை', தொடர்பாக வெளிவருவதற்குக் காரணமான 'செந்தமிழ்க் களஞ்சியம்' என்னும் மாத இதழைத் திருவரங்கனர் தோற்றுவித்தார். அடிகளார் உணர்ச்சியும் ஆணையும் கொண்டு சென்னைச் 'சைவ சித்தாந்தக் கழக'மும், இவ்வாண்டில் தொடங்கப்பட்டது. அவர் இளவல் தாமரைச் செல்வர் சுப்பையா பிள்ளை கழகத்தைக் கண்ணுங் கருத்து மாகக் காத்து வளர்த்துப் புகழ் பெறச் செய்திருக்கிறார்.

1921—1940 (20 ஆண்டுகள்) இனிமை வாழ்க்கை; அடிகளின் பொற்காலம்.

1921: யாழ்ப்பாணத்தில் அடிகளின் விரிவுரைகள் மீண்டும் தொடங்கின; அரங்கனர் மிகவும் உதவியாயிருந்தார். *29–5–21* இல் யாழ்ப்பாணம் வட்டுக் கோட்டை நாகலிங்கனர்க்கு எழுதிய கடிதத்தில் வழிபாட்டு முறைகள் விளக்கப்பட்டிருக்கின்றன.

காந்தியடிகளின் 'ஒத்துழையாமை இயக்கம்' *11—12—21* நாட்குறிப்பில் அடிகளால் பாராட்டப்பட்டுள்ளது.

1922: 'யோக நித்திரை' என்னும் நூல் வெளிவந்தது.

1923: சென்னை தொண்டமண்டலம் பள்ளி ஆண்டு விழாவில் கா. நமச்சிவாயர் விரிவுரைக்கு அடிகள் தலைமை ஏற்றார்.

1924: திருவாலங்காடு, பழையனூர், தக்கோலம் முதலிய தலங்கள் வழிபடப்பட்டன; 'தமிழர் நாகரிகம்' என்னும் நூல் தொடங்கப்பட்டது

1925: மகனர் திருநாவுக்கு அறிதுயில் வருவித்து அவர்க்கிருந்த மூச்சிழுப்பு நோயை அடிகள் அடியோடு நீக்கினர்.

1926: அலகாபாத்திலிருந்து அதன் செயலாளர், இவ்வாண்டின் 'உலகமத மாநாட்டு' நிகழ்ச்சிக்கு. 'The early race and religion of India' என ஓர் ஆங்கிலக் கட்டுரை எழுதுமாறு கேட்டிருந்தார்; அடிகளார் இசைந்தார்.

1—6—26 இல் 'சாதி வேற்றுமையும் போலிச் சைவரும்' வெளிவந்தது;

திருவையாற்றுக் கல்லூரியில், மறை திருநாவுக்கரசர் புலமைப் பயிற்சியிற் சேர்ந்தார்.

1927 இல் நீலாம்பிகை அம்மையின் திருமணம் மயிலை கபாலீசுவரர் திருக்கோயிலில் நடந்தது; தமிழகப் பேரறிஞர் பலர் வந்திருந்தனர்; ஆதிசைவர் என்னும் தமிழ்க் குருக்கள் இறைவன் திருமுன்னிலையிலிருந்து மங்கல அணி எடுத்துக் கொடுத்தார். மணமகன் திருவரங்கனார் மணமகள் நீலாம்பிகையார்க்கு அணிந்தார். திருமுறைத் திருமந்திரங்கள் ஓதப்பட்டன; அடிகளாரும் அனைவரும் மலர் சொரிந்து வாழ்த்தினர்.

திருவையாற்று அரசர் கல்லூரியின் தலைமைத் தமிழாசிரியர், தொல்காப்பியத்தில் தமக்கு நேர்ந்த ஐயங்களை அடிகளாரிடம் கேட்டு நீக்கிக் கொண்டார்.

'தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கம்', 'திருச்சி சைவசித்தாந்த சங்கம்' ஆண்டு விழாக்கள் அடிகளார் தலைமையில் நடந்தன.

திருப்பராய்த்துறை சித்பவாநந்தர் பல்லாவரம் போந்து அடிகளாரைக் கண்டு அளவளாவிச் சென்றனர்.

1928: 'சென்னை மரக்கறி யுணவுச் சங்கம்' ஆண்டுவிழா, உருக்குமணி அருண்டேல் முதலியோர் பேச்சு நிகழ, அடிகளார் தலைமையில் நடந்தது.

இராயப்பேட்டைப் பாலசுப்பிரமணிய பத்தசன சங்கத்தின் ஆண்டு விழாவும் அடிகள் தலைமையில் நடந்தது. அடியேமை ஆட்கொண்டது இவ் விழாத்தான். இச் சபையை நிறுவியது, திரு. வி. க.

நீலாம்பிகை திருவரங்கனார்க்கு அடிகள் 2—4—1928 இல் எழுதிய வாழ்த்துக் கடிதத்தில், 'கருவுற்ற மகளிர், உள்ளுவதெல்லாம் உயர்வு கருதி, தமிழகத்தின் தேவைகளை நிறுவும் வகையில் நினைவு நிகழ்ந்து, சுறுசுறுப்பும் தூய்மையுமாய் உயர்ந்த நூல்களைப் படித்துக் கொண்டிருக்க வேண்டும்' என்று அறிவுரைகள் வருகின்றன.

1929: திருப்பாதிரிப் புலியூரில் 6 நாட்கள் நடந்த பெரிய சைவர் மாநாட்டில் எல்லா நாட்களிலும் அடிகளார் தலைமை தாங்கி அரும்பெருங் கருத்துக்களை வெளியிட்டார்.

பேரூர், வடலூர் ஆண்டு விழாக்கள் அடிகளின் அரிய தலைமையில் சிறப்பாய் நடந்தன.

1930: சேலம் மாணவர் ஆ. மாணிக்கத்துக்கு 23—4-30 இல் அவர் பைந்தமிழ்க் கழக ஆண்டு விழா முன்னேற்பாடுகள் பற்றி ஒரு கடிதம் எழுதியிருந்தார். கடிதப்படியே விழா இனிது நிகழ்ந்தது.

1931: பல்லாவரத்தில் 'பொதுநிலைக் கழகத்' திருக்கோயி லுக்குக் குடமுழுக்கும், 'பொதுநிலைக் கழக' விழாவும் இவ்வாண்டில் தமிழ்த் திருமுறைத் திருமந்திரங்களையே ஓதி அனைத்தும் சிறப்பாக நடைபெற்றன. பேரறிவு சான்ற அறிஞர் பெருமக்களின் இனிய விரிவுரைகள் நிகழ்ந்தன. விழா, சி. என். முத்துரங்க முதலியார், நடுவர் மாசிலாமணி முதலியார் முதலிய செல்வர்களின், அறிஞர் களின் ஆதரவில் இனிது நடந்தது.

1932 இல் அடிகளாரின் கடைசித் திருமகள் திரிபுரசுந்தரி யாரின் திருமணம் பல்லாவரத்திலேயே அம்பலவாணர் திருக் கோயிலின் திருமுன்னிலையில் நிகழ்ந்தது. அடிகளாரே ஆசிரிய ராக இருந்து திருமுறைத் திருமந்திரங்கள் ஓதித் திருமணத்தை நிகழ்த்தினர்.

1933: திருநெல்வேலியில் நடந்த 'சென்னை மாகாணத் தமிழர் மாநாட்டுக்கு' அடிகள் தலைமை ஏற்று 'முற்கால பிற்காலத் தமிழ்ப் புலவோர்' பற்றிப் பேசினர். பின்பு அது நூலாக வெளி வந்தது.

1934: 'சிறுவர்க்கான செந்தமிழ்' ஆங்கில முன்னுரையுடன் 25—3—34 இல் வெளிவந்தது; இனிய தமிழை மாணவர்கள் இளமையிலேயே அறிந்துகொள்ள வேண்டும் எனபதும், ஆங்கி லேயர் ஆராய்ச்சிமுறை நாட்டில் பரவ வேண்டும் என்பதும் நோக்க மாக இந் நூல் எழுதப்பட்டது.

1935 இல் 'The Ocean of Wisdom' என்னும் இரு திங்களுக்கு ஒருகால் வெளிவரும் ஆங்கில வெளியீடு அடிகளால் தொடங்கப்பட்டது. 6—1—1934 இல் 'சாகுந்தல நாடக ஆராய்ச்சி' என்னும் நூல் வெளிவந்தது. நூலின் முகவுரையில் சேக்குவியர், நாடக நூல்களுடன் நாடக இயல்களை நன்கு ஆராய்ந்து இது எழுதப்பட்டது என்று அடிகளார் குறித்திருக்கின்றார். சென்னையில் இவ்வாண்டில், 'திருவள்ளுவர் திருநாள் கழகம்', அடிகளின் அரிய தலைமையில் விழாக் கொண்டாடியது. இனிய முறையில் ஒரு மலரும் வெளியிட்டது.

1936 இல் சென்னைப் புரசவாக்கத்தில் தொழிலாளருக்குத் 'தமிழ் எப்படிக் கற்பது?' என்று அடிகளால் விளக்கப்பட்டது. 'உமர் கயாம்' நூலைத் தமிழில் மொழி பெயர்த்தவர் 'வி. எம். ஷம்ஷுடீன்' என்பவர்; அவர்கட்கு 'அயல்மொழி மிகுதியாகக் கலந்தெழுதிய ஒரு நூலுக்குத், தாம் தனித் தமிழைப் பின்பற்றுவதாக முடிவெடுத்துக் கொண்டமையால், முகவுரை தரமுடியவில்லை' என்று, 21—9—1936 இல் கடிதம் எழுதி யிருக்கிறார். இந் நூலின் முதற் செய்யுளை அடிகள் பின்வருமாறு தனித் தமிழில் மொழி பெயர்த்துங் காட்டியிருக்கிறார்.

> **எழுக கதிரவன் இரவெனுங் களத்திருந்து**
> **எண்ணில் விண்மீனை இரிந்திடச் சிதறி,**
> **இரவையும் அவற்றுடன் வானினின் றோட்டி**
> **அரசன் மனையின் கொடுமுடி மேலும்**
> **விரிகதிர் வெங்கணை விடுத்தன னன்றே!**

1937 இல் இவ்வாண்டின் ஆகஃச்டு மாதத்தில், 'கட்டாய இந்திச் சட்டம்' வந்தது. சென்னைக் கோகலே மண்டபத்தில் அதற்கோர் எதிர்ப்புக் கூட்டம் நடந்தது. அடிகள் தலைமை ஏற்றார்கள். 'இந்தி பொது மொழியா?' என்று ஒரு நூலும் அடிகளால் எழுதப்பட்டது. சென்னைக் கடற்கரையில் இதற்காக நூறாயிரக் கணக்கில் மக்கள் கூடிய பேரவை பெரிதாக நடந்தது. அதற்கும் அடிகளாரே தலைவர்; தமிழகத்தின் தலைவர் பலரும் அப்போது பேசினர்.

1938: 'பலி விலக்குச் சட்டம்' வெளிவந்து அமலாயிற்று; அடிகளார் அவ் வகையில் மிகவும் ஊக்கம் உள்ளவர். பல ஆண்டு

களாக அதுபற்றி விரிவுரைகள் நிகழ்த்தி நூல்களும் இயற்றியிருக்கிறார்கள்.

இவ் வாண்டில் இந்தி எதிர்ப்பு மிக முறுகியது; பலர் மறியலில் ஈடுபட்டார்கள்; அடிகளார் குடும்பத்திலும் குழந்தைகளுடன் மறை திருநாவுக்கரசும் உறவினரும் சிறை சென்றனர்.

1939: அடிகளார் தம் ஆசிரியர் சோமசுந்தர நாயகர் வரலாற்றை எழுதத் தொடங்கினர்; நாயகரிடத்தில் அடிகளாருக்கு மிக்க உருக்கம்.

1940 இல் 'அனைத்திந்தியத் தமிழர் மத மாநாடு' சென்னையில் நடந்தது. 'அடிகளார் தலைமை ஏற்றார். 'Saiva Siddhanta as a Philosophy of Practical Knowledge' என்று ஒரு நூல் *29—4—1940* இல் வெளிவந்தது முன்னுரை உட்பட *131* பக்கங்களே உள்ள இக் கட்டுரை நூலுக்கு *57* பக்கத்தில் மிக விரிவான ஆங்கில முன்னுரையை அடிகளார் எழுதியிருக்கிறார்.

இவ் வாண்டில் இந்தி மொழியைக் 'கட்டாயக் கல்வி' என்னும் நிலையிலிருந்து அரசு நீக்கிவிட்டது.

அடிகளார் இந்த *20* ஆண்டுகளிலும் மிக இனிமையாகவும் மகிழ்வாகவும் வாழ்க்கை நடத்தியிருக்கிறார். தொடக்கத்தில் அடிகட்கு அகவை *44.* அடியேமுக்கு *16* முடிந்திருந்தது. *17* ஆம் அகவை முடியுமுன், எளியேமை மாணவராக அடிகள் ஏற்றுக் கொண்டார்; தமிழகத்தில், அடிகளுக்கே அப்போது தலைமையும் மேன்மையும் இருந்தன; அடிகள் நன்முயற்சிகளால் 'தமிழர் நெறி' ஓங்கியது. தெய்வப்பணி மிக்கவர்க்கு இவ் வுலகத்திலும் யாதும் குறையில்லை, என்பது அடிகள் வாழ்க்கையால் இனிது விளங்கியது!

1940—1950 அமைதி வாழ்க்கை (10 ஆண்டுகள்) இஃது அடிகளார்க்கு 'இறுதி வாழ்க்கை' யாகும் :

1941: அடிகளார் இவ்வாண்டு முதல் வெளியூர்க்குச் செல்வதைப் பெரும்பாலும் குறைத்துக் கொண்டார். 'ஆராய்ச்சி' 'நூல் எழுதல்' முதலியவற்றில் கடுமையான உழைப்பும் மேற்கொள்ளுவதில்லை. ***13—12—1941*** இல் 'சோமசுந்தரக் காஞ்சி

யாக்கம்' 3 ஆம் பதிப்பு முகவுரையுடன் வெளிவந்திருக்கிறது. 15—10—1941 இல் 'தமிழர் மதம்' என்னும் நூல் விரிவான ஆங்கில முன்னுரையுடன் வெளிவந்தது. எல்லாம் முன்பே முடிக்கப்பட்டவை.

1942: 'திருவொற்றி முருகர் மும்மணிக் கோவை'யின் உரை வெளியீடு 1—1—1942 இல் வெளிவந்தது. 8 ஆண்டுகளாக அடிகளார் இதனைத் திருத்தி அச்சிட்டு வந்ததனால் இதுவும் முன்னாண்டுகளில் நிறைவேறியது.

இவ்வாண்டில், 25—5—1942 இல் தென்காசித் திருவள்ளுவர் கழகத்தைச் சேர்ந்த முத்துக்குமாரசாமி பிள்ளை என்பவருக்கு அடிகள் ஒரு கடிதம எழுதியிருக்கிறார். அதில், மதுரை நடராச நாடார் போன்ற சைவத் தமிழ் அனபரையும் அவர் அருமை மனைவியாரையும் பார்க்க இசைவுதான் என்று விருப்பம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது; நடராச நாடார் தென்காசியிலும் மாவட்ட நடுவராய் விளங்கியவர்.

1943: சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகக் கூட்டத்துக்கு அடிகளார் தலைமை ஏற்றனர்.

1944 இல் அடிகளார் பெரிதும் அன்பு பாராட்டிய நீலாம்பிகையாரின் கணவரும், தம் முயற்சிகளுக்கு என்றுான்றும் போதரவாயிருந்து விளங்கிய பெருஞ் செயலாளரும், 'சைவ சித்தாந்தக் கழகத்'தின் அறிவார்ந்த முயற்சிகளுக்கு உழைப்பெடுத்த உண்மைத் தலைவருமாகிய திருவாளர் திருவரங்கனார் இவ்வாண்டில் மறைந்துவிட்டார். தமிழ்த் தொண்டு சிவத் தொண்டுகளுக்கு மிக்க ஆதரவாளராதலால் அடிகளார் உள்ளத்துக்கு இது பெருந் தளர்வைக் கொடுத்துவிட்டது!

1945 இல் அன்பிற் சிறந்த மகளார் நீலாம்பிகையாரின் மறைவும் இவ்வாண்டில் நேர்ந்துவிட்டது; கணவரைப் பிரிந்து நீலாம்பிகையார் நெடுநாள் உயிர்வாழ மாட்டாதவரானார். தனித் தமிழ் இயக்கத்துக்கு வித்தானவரானதாலும் சிவநெறிச் செல்வியாரானதனாலும் அம்மையார் பிரிவையும் அடிகளார் தாங்கமாட்டாதவரானார்; மருகரும் மகளாரும் அடுத்தடுத்து மறைந்துவிட்டமை அடிகளார் உள்ளத்தை மிகப் பெரிதும் வாட்டிவிட்டது.

1946: சைவத் திருவள்ளுவர் செந்தமிழ்ச் சிவநெறிக் கழகத்தைச் சேர்ந்த கேதாரச் செல்வர் ஆடலரசு, முருகவேள், கூத்தரசு முதலியோர் அடிகள் திறத்தில் ஈடுபட்டனர்.

1947: நாடு விடுதலை அடைந்ததை, நகரத்தார் ஊராகிய பள்ளத்தூரில் நடந்த பாராட்டு விழாவில் அடிகளாருங் கலந்து கொண்டனர்; அவ் விடுதலையில் அக்கறை மிக்கவராய் அடிகள் விளங்கினர்.

1948: இந்தி மொழி தமிழகத்தில் கட்டாயக் கல்வி என்பது நீக்கப்பட்டாலும், அதனிடம் பற்றுக் கொண்டவர் பிறரையுங் கற்குமாறு செய்து வந்தனர். மீண்டும் இந்தியெதிர்ப்பில் அடிகளார் தலைப்படும்படி நேர்ந்தது; சென்னை 'செயின்ட் மேரி' மண்டபத்திற் பெருங் கூட்டம்; அடிகளார் தலைமையில் தமிழகத் தலைவர் பலருங் கலந்து கொண்டு மறுத்துப் பேசினர்.

1949: 'அம்பிகாபதி அமராவதி' என்னும் புதிய நாடக நூல், யாரும் எழுதாததை அடிகளார் எழுதி முடித்தார்: இது மொழி பெயர்ப்பு நூல் அன்று; நாடக வியலின் அமைப்பு நன்கு பொருந்த இந் நூல் இயற்றப்பட்டது.

'மறைமலையடிகள் மாட்சி' என ஒரு சிறிய நூல், திரு. வி. க அணிந்துரையுடனும் ஆடலரசு பதிப்புரையுடனும் புலவர் முருகவேள் என்பவர் எழுதியது வெளிவந்தது; பார்க்கத் தக்கது!

1950: இவ்வாண்டு 15—9—1950 இல் அருமை அடிகளாரின் மறைவு நிகழ்ந்துவிட்டது. அதற்கு முன் இரண்டொரு கிழமைகளில் அடிகளார் உடல் தளர்ந்தது. 30—5—1950 லும் 21—6—1950 லும் சென்னைச் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக ஆட்சிப் பொறுப்பாளர் வ. சுப்பையா பிள்ளைக்கு முறையே தமிழிலும் ஆங்கிலத்திலும் கடிதங்கள் எழுதியிருக்கிறார். மறைவதற்கு 3 கிழமைக்கு முன் இவை எழுதப்பட்டன. அவற்றில், அடிகளார் கையெழுத்துத் தமிழிலும், ஆங்கிலத்திலும் மணிகள் கோத்தாற் போல் அழகாகவே அமைந்துள்ளன.

அடிகளின் துணைவியார் 24—5—1950 இல் நான்கு திங்களுக்கு முன்னர்த்தான் மறைந்தார். துணைவியார் மறைவு அடிகளைப் பின்னும் பின்னும் வாட்டி வதக்கிவிட்டது. மிகப் பத்தி

பதைத்தார்; பற்றற்ற பெரியவராயினும், துணைவியார் அதுவரை யிற் பட்ட பாடுகள் அடிகளாரால் நினைத்துப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. துணைவியார் செய்ந்நன்றியை அடிகள் நாளும் மறவாதவர். எல்லாப் பிரிவுகளாலும் அடிகளார் உள்ளமும் உடலும் பணிசெய்யமாட்டாத நிலையை எய்திவிட்டன; துணைவியார் உதவிகள், வாழ்க்கைக்கு அவ்வளவு இன்றியமையாதவை!

1876 இல் தோன்றி 1950 இல் 75 வது அகவையில் மறைந்து விட்ட அடிகளார்க்குத் தமிழகம் மிகவும் கடமைப்பட்டிருக்கிறது.

19 ஆம் நூற்றுண்டில் அவர் இளைஞராய்ப் பயிற்சியில் விளங் கினர். 20 ஆம் நூற்றுண்டின் முற்பகுதி முழுதும், அவர்கள் அருட் புலமையாட்சி தமிழகத்தில் நிகழ்ந்தது. '20 ஆம் நூற் றுண்டின் இணையற்ற புலவர்' என்று கா. சுப்பிரமணிய பிள்ளை தம் இலக்கிய வரலாற்றில் சிறப்பித்தார்; தமிழகத்தாரிற் பெரும் பாலோர் கருத்து அது.

அடிகளார் பெருந்தன்மையும் இரக்கமும் புலமையும் முதலியன அவர்களுக்குத் தலைமையை வழங்கியிருக்கின்றன; விரிவுரைகளும் எழுத்துக்களும் வாழ்க்கைக் கட்டுப்பாடுகளும் உண்மைச் சுவை மிக்கு, அடுத்து உதவியிருக்கின்றன.

அவ் வுண்மைச் சுவையும், புரட்சிக் கருத்துக்களும், தமிழ்க் காகவே தொடர்பாகப் பணி செய்து வந்தமையும், தனித்தமிழ் இயக்கமும், பெரும் புலமையும், சைவ சித்தாந்தத் தேர்ச்சியும், ஆராய்ச்சியும், முடிவுரைகளிற் காட்டிய பெருந்தன்மையும், இரக்க மும், புலவர்களைப் பெருமைப்படுத்தும் சிறப்புமெல்லாம் அன்பர் களை அவர்பால் அன்பு கொள்ளச் செய்தன. அழுக்காற்றினல் யாராவது குறைகூறினுல், அன்பர்களாவோர் அதை எடுத்துச் சொல்லும்போது, 'அவ்வளவில் அவர் மகிழ்க' என்று விட்டுவிடு வதே நல்லது என்பார்; யார்க்கும் எதுந் தீங்கு செய்யார்; எவரை யும் பகையார்.

பலர்க்கு அமையாத நற்பேறுகளெல்லாம் தவத்தோன்ற லாகிய அடிகளார்க்கு வாய்ந்து திகழ்ந்தன; உண்மையைக் காணும் விருப்பம், அதற்காக மிகவும் உழைப்பெடுத்து ஆராய்ந்து தேடிய அகப் புறச் சான்றுகள், வாழ்க்கைக் கட்டுப்பாட்டு ஒழுங்குகள்,

இடர்ப்பட்டும் இழப்புகளடைந்தும் எந்நிலையிலும் தமிழ் நெறியையே நாடி வந்தமை, பல துறைக் கலையுதவிகள், நிறுவிய அமைப்புகள் முதலிய சிறப்புகளெல்லாம், தமிழகம் தக்க மதிப்போடும் உருக்கத்தோடும் நன்றியோடும் போற்றிக் கொள்ளுதற்குரியன.

அடிகள் காலத்துக்குப் பின், 'மறைமலையடிகள்' என ஒரு வரலாற்று நூல், 'புலவர் அரசு' என்பவரால் இனிது எழுதப்பட்டுக் கழகத்தில் 1951 இல் வெளிவந்திருக்கிறது.

அடிகளார் நூல்களைச் சென்னைச் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார், அழகாக அச்சிட்டு வருகின்றனர். அடிகளால் முற்றும் அச்சிடப்படாமல் விடுபட்டுப் போனவற்றையும் கழகம் அச்சிட்டு வருகிறது. அடிகளார் கருத்துக்களும் எழுத்துக்களும் பொன்போற் போற்றி வெளியிடப்படுகின்றன.

'இளைஞர்க்கான இன்றமிழ்' 1951லும், 'சிவஞானபோத ஆராய்ச்சி' 1958லும், மறை. திருநாவுக்கரசு நடுநிலையோடு எழுதிய 877 பக்கங்கள் உள்ள 'மறைமலையடிகள் வரலாறு' 1959லும், 'மறைமலையடிகள் அறிவுரைக் கோவை' 1971லும், 'உரைமணிக் கோவை' 1972லும், 'கருத்தோவியம்' 1976லும் 'பாமணிக்கோவை' அண்மையிலும் கழகம் வெளியிட்டுள்ளது; மேலும் அடிகள் எழுத்துக்கள் பல நூல்களாய் வெளிவரவும் கழகத்தார் முயற்சியெடுக்கின்றனர்

அடிகளார் வாழ்ந்து வந்த பல்லாவரம் 'பொதுநிலைக் கழக' மாளிகை, இந்திய அரசு, தமிழ்நாடு அரசுகளின் பொருளுதவியோடு விலைக்கு வாங்கப்பட்டுப் பொதுப் பொருளாகிக் கலை நிலையமாய் விளங்கி வருகிறது. இங்ஙனம், அடிகளார் நன்னினைவுகள் அப்பதிப்பகத்தாரால் பெரிதும் நாட்டிற் பரவி வருகின்றன.

தமிழ்நாடு அரசும், நன்றி மறவாமல், 'மறைமலையடிகளார் பாலம்' 'மறைமலை நகர்' எனவெல்லாம் நினைவுச் சின்னங்களும் எழுப்பி வருகின்றது! புலவர் கோவை இளஞ்சேரர் முயற்சியினால் நாகையில் "அடிகளார் திருவுருவச் சிலை" அமைந்துள்ளது.

அடிகளார் நினைவை மேன்மேலும் போற்றிக்கொள்ளுதல் நாடு ஓங்குதற்கே வாயிலாகும்.

முடிப்புரை

ஆசிரியர் மறைமலையடிகளாரின் வரலாற்று மாட்சி இய்ன்ற வரையில் இங்கு விளக்கப்பட்டது. அடிகளாரின் தனிச் சிறப்புகளை இதனால் அறிந்து கொள்ளலாம். இதன்கண், விளக்குதற்குரிய விடுபட்ட கருத்துக்கள் பலப்பல. அடிகளார் வாழ்க்கை ஒரு சுரங்கம் போன்றது. அதிலிருந்து எவ்வளவோ கருத்துக்கள் எடுக்கலாம்; தக்க அறிஞர்களுக்கு வாய்ப்புண்டு.

அதோடு, அடிகளார் வாழ்க்கையிற் குறுக்கிட்டும், அவர்கள் கருத்துக்களை எதிர்த்தும், வளர்ச்சிக்குத் தடை விளைத்தும், கடைசி வரையில் இடர் மிகுத்து வந்த அன்பர்களும், அறிஞர்களும், அங்கங்கே நிகழ்ந்த நிகழ்ச்சிகளும், ஏராளம். இவற்றையெல்லாம் அடிகளார் பொருள் செய்வதில்லை. தம் நிலையிலேயே நிலையா யிருந்து, தம் புரட்சிகளையும், இயக்கங்களையும், செய்கைகளையும் அஞ்சா நெஞ்சுடன் நிமிர்ந்து நின்று, வீரமாய்ச் செயல்புரிந்து வந்தார்கள். அப் புறங் கூற்றுக்களும் மறுப்புக்களும் நிகழ்ச்சிகளு மெல்லாம், இதில் விடாமல் விளக்கவில்லை.

அடிகள் ஒருகால், தமது இளமைக் காலத்தைப் பற்றி எம்மிடம் பேசிக்கொண்டிருந்தபோது, ‘எதற்கெடுத்தாலும் அப் போதெல்லாம் என் கருத்துக்களுக்கு மறுப்புக்களும் கேள்விகளும் வந்தபடியே இருக்கும்; அவைகளிற் புறங்கூற்று மொழிகளாய் உள்ளவற்றைப் பொருள் செய்யாவிட்டாலும், அறியாமையால் மறுத்தவர்களுக்கு அறிவு தெருட்டவேண்டியும், அறியாத பலர், ஆராய்ச்சி முடிபுகளில் தெளிவு பெறவேண்டியும், தெளிவுக்காக விடைசொல்லவும் மறுப்புக்கள் எழுதவும் நேர்ந்தது; இப்பொழு தெல்லாம் பெரும்பாலும் அப்படி நேர்வதில்லை. என் காலம் போன்றதன்று உன் காலம்; என் காலத்தில் சமயப்போரும் இலக் கியப் போரும் மிகுதி. தமிழகம் முன்போலில்லை; அரசியல் நிலைகள் மேலிட்டுவிட்டன; புலமை நிலையில் ஏனோ தானோ என்று இருந்து விடுகிறது’ என்று தெரிவித்தார்கள்.

புறங்கூற்று மொழிகளை நாமும் பொருள் செய்வதில்லை. புறங் கூறுவோரையும் சிந்தையிற் கொள்வதில்லை, கேள்விப்பட்ட வரை யிற்கூட அவற்றையெல்லாம், பொருள் செய்து இந் நூலிற் குறிக்க வில்லை.

அடிகளார் எழுத்துக்களில் தமிழ் நெறிக்கு மாருயுள்ள பிற்கால நூல்களைப் பற்றி அவ்வளவாக வரவில்லை. இதைப்பற்றித் திரு வி. க. அவர்களும் ஒரு முறை எம்மிடம் கூறியதுண்டு. தமிழ் மொழியில் அன்பில்லாத மக்களை நெடுக எதிர்த்தெழுதுவது அடிகள் வழக்கம். தமிழ் நலம் அவர்கள் எழுத்துக்களில் பெருகக் காணப்படும். வேறுபாடுகள் நன்கு விளக்கப்படும். அடிகளார் எழுத்து அவ்வகைகளிலெல்லாம் அனல் பறக்கும். அவை யெல்லாமும் விளக்கமாக இந் நூலில் வெளிப்படுத்தவில்லை.

இந் நூலின் நோக்கம் வேறு; அவற்றையெல்லாம் வெளிப்படுத்திக்கொண்டிருப்பதன்று; அடிகளின் தனிச் சிறப்புண்மைகள்மட்டும் இதிற் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

உலகப் பெரியோர் வரலாறுகள், பல உண்டு. அவற்றுள், நமது உயிர்த்திலும் புறத்திலும் 'அருள் நலம்' வளர்த்த வரலாறுகள் குறைவு. அடிகளாரிடத்தில் அத் தனிச்சிறப்புப் பெருக விளங்கியது. ஐம்பெரும் பாவங்கள் பலர் வரலாறுகளில் வரும். திருவள்ளுவர் நெறிப்படி வாழாத வரலாறுகள் உலகிற் பல; ஒவ்வொரு சிறப்புக் கருதி ஒவ்வொரு வரலாறு எழுதப் பட்டுள்ளது. மக்கள் மேற்கொள்ள வேண்டிய ஐவகை மாட்சிகளும் அடிகளாரிடம் உண்டு. பெரும்பாலார் அவர்கள் புலமைச் சிறப்பையே அறிவர்; அறிய வேண்டிய வாழ்க்கைச் சிறப்புகள் பல அடிகளார் வாழ்க்கை நெறிகளிற் காணலாம்.

உலகு நெடுக அடிகள் வரலாறு பரவுதல் நல்லது; பள்ளியிலும் கல்லூரியிலும் பயிலும் இளைஞர்களும் நங்கையர்களும் இதனைப் பெருகப் பயில்வார்களானல், தத்தம் உயிர்த்திறங்களை அவர்கள் மிகுதியாய் வளர்த்துக் கொள்ளலாம். எல்லா நூலகங்களும் இதனை எல்லாரும் விடாமற் பயிலுமாறு செய்து, எல்லாரும் மாட்சிமை எய்தலாம். வாழ்க்கைக்குத் தேவையானவை மட்டும் வாழ்க்கை நெறியாக இந் நூலில் வந்திருப்பதனால், எல்லா மக்களின் பயிற்சிக்கும் இது நலம் தரும்.

தெய்வப் புலவராகிய அடிகளார் திருவடி மலர்களுக்கே, இச் சிறு நூலைக் காணிக்கையாக்குகிறோம். எல்லாம் வல்ல முதல்வன் திருவருளால், 'மறைமலையடிகளாரின் வரலாற்று மாட்சி' எங்கும் ஒளிபரப்பி விளங்குவதாக!
